அரிச்சந்திர

விலாசம்

பொது விருத்தம்.

புவிதனிற்கீர்த்தியோங்கப் புண்ணியந்தனின்மிருந்தே
கவியுரைவாணர்மெச்சுங் கையனுமுனிவர்கட்கு
தவிழன்றியாகமேற்றத் தனமளித்திடுவோன்றிவ்விய
மவினர்கள்மகிழமந்த மதிதயன் கட்டியன்வாரான.

வசனம.

கேளுங்கள் சபையோர்களே கன்னமாபுரியை அரசாக்ஷிசெய்யு
மதிதயமகாராசன் ஆசாரவாசற்காக்கும் கட்டியக்காரன் வருகிறவிதங்
காண்பீர்கள் கனவான்களே.

கட்டியன்-தரு-இ-ம்-பந்துவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டியக்காரன் வந்தான் இதோ இதோபாரும்.

அநுபல்லவி.

மட்டில்லாமதிதயன் மகபதியடிநாளும்
வாழ்த்திப்புகழையென்று மேத்திப்படிக்கும்வீர (கட்டி)

சரணங்கள்.

நெத்தியில்பூத்திழைத்தசிகழ்குச்சுக் கொண்டைதேர்ட்டு
நேர்விழிபிரண்டிற்கும் மிகரிலாமையுமிட்டு
சுத்திக்கச்சையுடனே சொகுசாயங்கியுமிட்டு
சோகலொனுடால்விருது ஜொலிக்குங்கத்தியுந்தொட்டு (கட்)

சூரனெனவேவெகு வீரனெனவேபலர்
சொல்லப்பயந்தோதிங்கி செல்வரசன்புகழ்
மெல்லசர்வத்திலும் நல்லகுணமுடைய (கட்)

பொது விருத்தம்.

நீதியும்பொறுமைசத்யம் நிலைசனுப்பிசகாவண்ணம்
ஆதியைமனதில்நாளு மன்புடன்பணிந்தேயற்றி
வேதியர்பலவாய்வாழ்த்த வெண்குடைமறையும்வீசு
வோதிடுமதிதயேந்திர வுத்ரமனிதோவாருனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, கன்னமாபுரியையாளும் மதிதயமஹாராஜன் கொலுவிற்கு வருகிறவிதங் காண்பீர்கள் குணவான்களே.

மதிதயன்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சூரன் அதியுலாச வீரன் மதிதயேந்திர
திரனிதோவந்தான் கொலுவிருக்க
திரனிதோவந்தான்.

அநுபல்லவி.

மாரனிவனைக்கண்டால் வணங்கியோடுமழகன்
மானபூஷணன்சாவு கியானமுள்ளவாசவன்
மன்னிய நீதியுளோன்
தன்னிய நெறியுளோன்
பன்னவர் புகழுளோன்
இன்னகர் மகிழ்கொளுஞ் (சூரன்)

சரணங்கள்.

சுந்தரவஞ்சியர்க ளாடப்பதமும்பாடச்
சொல்லிமறைமொழியைத் தூயவேதியர்நாட
மந்திரிபிரதானிகள் வளர்ந்திருபுறங்கூட
வாய்கூசாக்கட்டியனுரைவாக்கால் ஜனங்களோட
தந்தமிபேரிகை சொல்லுஞ்சல்லரிதாளந்
தொந்தோந்தோமெனத் துவனிக்கக்கொம்புகளூத
ஜொலிக்க நவமணி
பரிக்க முடிதனிற்
களிக்கப் பலர்மனம்
நெளிக்கப் பகைவருந்
தொண்டரெனவே யெதிற்
கொண்டே வணங்கிவர
அண்டமெல்லாம் புகழும்
தண்டலாதிப குண

மதிதயன் போற்றி விருத்தம்.

என்னெறி யோங்கிவாழ்க இனியதோர் மறைகள்வாழ்க
நன்னெறி குடிகள்வாழ்க நாட்டினில் முனிவர்வாழ்க
இன்னகர் செழித்துவாழ்க எங்குமென் புகழ்விளங்கத்
துன்னுவா னுகலைவாழுந் தூயனேயருள்வாய்போற்றி.

மந்திரிபோற்றி விருத்தம்.

மன்னர்கள் மன்னர்மற்று மண்டலாதிபர்கள் யோகர்
துன்னவ ரிஷிகள்சித்தர் தூயநன் னெறியோவீரர்
பன்னவர் வசுக்களெல்லாம் பரவியே புகழக்கீர்த்தி
சன்னமா புரியையாளுங் கர்த்தனே நின்றாள்போற்றி.

மதிதயன் தேசவிசாரணை.

மந்திரியென்னாட்டில் மகிழ்வுடன் — மாசமும் மாரிதான் பொழிகின்றதா

மந்திரி.

மதிபனே தடையின்றி மாறாதுபொழி — காலத்தில் வருஷிக்கின்றதே

மதிதயன்.

என்றதுநாட்டினி லினிவாய்நடக் — லாலயப்பூஜைகள் கின்றதா

மந்திரி.

எந்தையே தடையின்றி யெங்கணும்நடக் — பூசைகள்விதிப்படி கின்றதே

மதிதயன்.

வந்திடும்பகுதிகள் வணங்கியேகொடுக் — பாளையக்காரர்தான் கிறாரா

மந்திரி.

மனனனேயவரவர்கள் மகிழ்வுடன்கட்டு — தடையின்றிகப்பங்கள் றார்கள்

மதிதயன்.

நந்திதான்வேங்கையின் நாட்டினில்வாழ் — றுபயறின்றிக்ஷேமமாய்க் கின்றதா

மந்திரி,

நாதனேகோவின மியாதுமொருதுயரின்றி
நலமுடன்வாழ் கின்றதே

கட்டியன் கட்டியம்.

சூரனேசகலகுண வீரனேயெனையாளுந்
தூயனே வெகுபராக்கு
சொல்லொணாநீதியை வழுத்துவோய்சத்யநெறி
தோன்றலே வெகுபராக்கு
நிரனேபகைஞர்மனம் வாடவேயம்புதொடு
செய்யனே வெகுபராக்கு
செப்பரியவோமங்க ளெக்கிடம்வளர்ந்தோங்க
செயுமரசே வெகுபராக்கு.

மதிதயன்விருத்தம்.

புத்தியிலுயர்ந்தமந்திரி புவிதனையின்னாள்மட்டும்
வித்தியாசங்களின்றி வெகுநீதிசெலுத்தினாட்டில்
நத்தியேபெருங்கீர்த்தி நான்கொண்டுங்குலம்விளங்க
பத்தினியேகர்ப்பமோக்ஷிப் பாவமேனுரைசெய்வாயே.

வசனம்,

அப்பா மந்திரி, நான் என் தந்தையினுடைய செங்கோலைக் கையிற்றாங்கியது முதலிதுவரைக்கும் நீதிமானென்றுலகெங்கும் கீர்த்தி பெற்றேன், என் குலம்விளங்க புத்திரபாக்கியமில்லாமலிருக்க என்ன பாவஞ் செய்தேனோ தெரியாது இதற்கொரு யோசனைசொல்லுவாயப்பா மந்திரி.

மந்திரி வசனம்,

அப்படியேசொல்லுகிறேன் சுவாமி.

மந்திரி விருத்தம்.

அண்ணலேயரசேகேளீ ரவனியிலுள்ளதெல்லா
மண்ணலேயதற்கீடாமோ அரன்பதந்துதிப்பீராகி
லண்ணலேயருளளிப்பா ரம்மனிகெர்ப்பந்தன்னி
லண்ணலேகுலம்விளங்க அடைகுவீர்பலனைத்தானே.

வசனம்.

கேளும் ஆண்டவனே இப்போது நீரடைந்திருக்கும்படியான சகல சம்பத்தும் புத்திரசம்பத்திற் கீடான தல்ல நீர்ப்பரமசிவத்தைக் குறித்துத் தவஞ்செய்தால் சந்தானமடைவீர் வேந்தனே.

மதிதயன் வசனம்.

அப்படியே செய்கின்றேனப்பா, மதிமந்திரீ இந்தச்சங்கதி யென்னுடைய தேவிக்குத் தெரியப்படுத்தச் செய்வாயப்பா.

மந்திரி வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே தெரிவிக்கின்றேன் சுவாமீ.

மந்திரி-விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா வன்னையின்னென்பாற்சென்று
கூறடாவேந்தன்றானுங் குமாரனைப்பெறவேவேண்டிச்
சீரதாயடவிகிட்டிச் சிவன்பதந்துதிக்கஇன்று
போரதுதெரியச்சொல்லி பொட்டெனவழைத்துவாராய்.

வசனம்.

அடா கட்டியனே, நமதுராஜன் புத்திரபாக்கியம் பெறவேண்டி பரமனைக்குறித்து தத்தஞ்செய்யக் காட்டுக்குப்போகிறாரென்று தேவியாருக்குத் தெரிவித்து சாக்கிரதையுடனழைத்துக்கொண்டு வருவாயடா கட்டியனே.

கட்டியன்-வசனம்.

அப்படியே தெரிவித்து அழைத்துக் கொண்டு வருகின்றேன் சுவாமீ.

பொது விருத்தம்.

சொலுமுகத்தில் நடந்தவதை சூனைசனின்றிக்
கொப்பெனவே தேவியர்க்கு கூறவேண்டி
வலுமைபெறு கட்டியனும் ராணிமுன்னே
வாழ்த்துவான் மந்திரிமுறை செலுத்துவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மந்திரி சொன்னவாக்கின்படி கட்டியன் சந்திரமேகையம்மன் முன்தோன்றி நடந்தசங்கதி தெரிவிக்கிற விதம்பாருங்கள் கனவான்களே.

கட்டியன் விருத்தம்.

தோழிநீகேளாயின்று தோன்றலும்விடநான்வந்தேன்
தாளிணைகாணத்தேவி தன்பரமறிவிப்பாயே.

வசனம்.

கேளாய் தோழி மந்திரவாகையே கொலுமுகமிருந்து காணவே வேண்டி நான் வந்திருக்கிறேனென்று தேவியாருக்குத் தெரிவிப்பாயம்மா.

தோழி வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேனப்பா கட்டியனே.

தோழி விருத்தம்.

அன்னையேமந்திரயேந்திர னன்புறுதேவியம்மா
உன்னையேகாணவேண்டி யுத்தமன்விட்டதாக
மன்னவன்கொலுவைவிட்டே வந்துகட்டியனுந்தாயே
இன்னிமையறிவிக்கத்தா னியம்பினனருள்செய்வாயே.

வசனம்.

கேளாயம்மா, அரசன் யாதோ காரியமாய் விட்டதாகக் கட்டியக்காரன் வந்திருக்கின்றான் தாயே.

சந்திரரேகை-வசனம்.

வரச்சொல்லுவாயம்மா மந்திரவாகையே.

கட்டியன் விருத்தம்.

அன்னையேபோற்றி யரசியேபோற்றி
உன்னதகுணமுள வுத்தமியேபோற்றி
என்னையாள்தேவி யிறைவியேபோற்றி
மன்னவன்மருவே மலரடிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி யென்தாயே நின்னடிக்கேபோற்றி

சந்திரரேகை-விருத்தம்.

வாழிநீகட்டியனே வந்தவாறதனைத்
தாழ்வின்றியிங்ஙனே சாற்றிடுவாயே.

வசனம்.

வாழிவாழி நீ வந்தகாரியந்தெரியச் சொல்லுமப்பா கட்டியனே

சுந்தரரேகைகொலுவுக்குவருகிறபாகம்.



கட்டியன்-வசனம்

நல்லது அம்மணி மஹாபாக்கியம்

கட்டியன் அகவல்

அன்னையேதாயே அம்மணிகேளாய்
மன்னவன்புத்திர வாஞ்சையால்மீறி
சுரமதிற்கேகிச் சுந்தரனைப்பணிந்து
வரமதுபெற்று மைந்தனைப்பெறுக
எண்ணமுங்கொண்டா ரெக்தியுமின்று
வண்ணமாயுனைவர வழைக்கவேயென்னை
பொட்டெனவுரைக்கப் புனிதனும்மந்தரி
விட்டனர்வந்தேன் மெய்யடிபோற்றி.

சுந்தரரேகை-வசனம்.

மாஹா சந்தோஷம் அப்படியேவருகிறேன்ப்பா கட்டியனே.

சுந்தரரேகை-தரு இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி

பல்லவி.

மதிதயன்மாதுவந்தாள் சுந்தரரேகை
மதிதயன் மாதுவந்தாள்

அநுபல்லவி.

பதிமொழிமீறாத பண்புளோளறமெலாம்
பாரில்சரிநடத்தத் தேறிவிதிதெரிந்த (மதி)

சரணங்கள்.

அன்னப்பேடினைப்போல வஞ்சந்தநடைநடந்து
அரசன்கொலுவைநாடி யந்தப்பணியணிந்து
சின்னயிடையுமாடச் செருக்காய்மனைகடந்து
செப்பொணாவாசத்தேமல் திரேகமதிற்படர்ந்து
தன்னுளாந்திரியத்தின் தகைமைமுடியவென்று
எண்ணமனதில்நாட்டி யீசன்பதந்துதித்து
எற்றி கணவன்பதம்
போற்றி யருளாதய

ரோட்டி மாதர்களின்
வேட்டி யெனப்பிகழ்
யின்புறுகினேவுட னினிச்சுகம்பெருகவே
அன்புடனரசனு மறைத்ததைத்தெரிக்கவே (மதி)

சுந்தரரேகை விருத்தம்

இன்னிளம்புகழ்கொண்டோங்க யிமையவர்மகிழ்வுபெய்ய
உன்னதயாகமெக்கிய மோங்கிநிதியளித்து
கன்னமாபுரியையாளும் கர்த்தனேயுலகோரேற்ற
நன்னிலேபூண்டபிராண நாதனேநின்றாள்போற்றி.

மதிதயன்- விருத்தம்

என்னருங்கிளியேமானே யிச்சென்மக்குறையீடேற
அன்னருமபுத்ரபாக்கிய மடைந்திடவேண்டிநாம்தான்
சொன்னமாஞ்சுரத்திற்கேகிச் சுந்தரனேப்பணியவேண்டும்
அன்னமேயென்றன்கூட அடைவுடன்வருகுவாய்,

வசனம்,

சேளாய்பெண்ணே,நமதுகுலம்விளங்கச் சந்தானம் பெறுவதற்காகப்பரமசிவனேக்குறித்து தவஞ்சசெயுங்காட்டிற்குப்போகின்றேன் நீயுங் கூடவருவாயடி யென்கண்ணே.

சுந்தரரேகை-வசனம்

மஹாபாக்கிய மப்படியேவருன்றே னென்பிராணநாதா.

சுந்தரரேகை விருத்தம்.

கணவரேயிதுநாள்மட்டுங் கருதியவென்றனென்னைக்
கணவரேகூடுங்காலங் கைகலைவாழீசன்றானுங்
ணவரேபின்றேயும்முட் காட்டிறுன்றுயரம்விட்டேன்
கணவரேயுரியுடுத்திக் கடிகிநான்வருகுவேனே:

வசனம்

கேளுஞ்சுவாமீ,யிதுநாள்வரையி லடியாள்மனதிற்கொண்டிருந்த கவலைநீங்க இன்றுதான் பரமன் தங்கள்மனதிலுதித்தார் அடியாளும் மரவுரிதரித்துக்கொண்டு வருகின்றேன் பிராணநாதா.

மதிதயன் விருத்தம்.

அப்பனேநீதான்சொன்ன அருமையாமபாரத்தைக்கேட்டு
அப்பனேயடவிபுக்கி ஐந்தெழுத்துருவையோதி

அப்பனேபுத்ரனென்று மபகீர்த்திதன்னைநீக்கி
அப்பனேசடுதிவாறே னாசனைத்தக்காத்திடாயே.

வசனம்

கேளாயப்பாமந்திரி, நீசெகன்னவாறே நானுமென்பத்தினியுமரவுரியுடுத்தி காடுறைந்து பரமனைக்குறித்து தவஞ்செய்து மலடனெனும்பேரை மாற்றிக்கொண்டு வருகிறேன் நீஎன் செங்கோலைத்தாங்கி நீதியைத்குறைவின்றி நடத்திவருவாயப்பா மந்திரி.

மந்திரி - வசனம்

மஹாராபாக்கிய மப்படியேநடத்திவருகின்றேன் தாங்கள்நற்றவம்புரிந்து கோரிக்கையை யீடேற்றிக்கொண்டு வருவீரென்றாண்டவனே,

---

மதிதயன்-தரு-இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு

பல்லவி

வருவாயடிமனே வனத்திற்கேகி
வழுத்துவோம் பெருமானை

அநுபல்லவி

திருநீறணிவோன்றன் சேவடியைத்துதித்து
தருகபுத்திரபாக்கியம் பெருகவென்னுடன்கூட   (வரு)

சரணங்கள்,

மக்களில்லார்க்குமே   நற்பதவிவாழக்கிட்டாதாமே
இக்கணம்பழிதாமே   யுடைந்ததாலென்னபலனுமே
அக்காலனையுதைத்தோனடிவயப்பணிந்துநான்
சிவிகாப்பொருட்புத்ரன் சீராகப்பெறுவேன்,   (வரு)

சம்பத்திற்கெலாமேலாந்   தாலரியிற்றனையனேயுதிசீலாம்
உம்பனைலேயடையலாம்   எனமந்திரியரைத்தனன்போகலாஞ்
சம்போசிவமென்று சிதாசிவாவாவென்று
அன்பாய்தபசில்நின்று அடையமகனையின்று   (வரு)

என்றசெங்கோலைத்தாங்கி   யுலகின் லேற்றநீதியிலோங்கி
உன்றன்கெர்ப்பத்திற்பாங்கி   நற்குணபாலனுதிக்கவரம்வாங்கி
சந்ததம்புகழ்பெறத் தரணியோர்மகிழ்வுற
இந்தமலடனெனி மிழிவுநின்றோற   (வரு)

பொது விருத்தம்

முன்னவனு மங்கையரு மிவ்வாறாக
மனமொத்துவுரியுமித்தி மகிழ்வுகொண்டே
தன்னகரைக் கடந்தடவி சேர்ந்தங்கே
சாரவிறிநற்சாலை தானுங்கட்டி
உன்னதமாங்கம்பம்நட்டு சுவாலையேற்றி
யொருமனதாய்த்தானேறி மாலைதாங்கி
கொன்றைமலர்முடிப்பவனை மனதிலெண்ணிக்
கொடிட்டரன் கால்தூக்கி னினைமிட்டானே,

வசனம்.

சேனுங்கள் சபையோர்களே. இவ்விதமாக மதிதயராஜனுஞ் சந்தாரோமையு மரவுரித்து காடடைந்து பர்ணகசாலையியற்றி பஞ்சாக்கினிமத்தியில் ஸ்தம்பமநாட்டி யோகநிலையில் மனதைநிறுத்தி ருத்திராக்ஷமாலைதாங்கிப் பரமனைநினைத்துத் தவஞ்செய்கிற விதங்காண்பீர் நல் கடவான்களே.

மதிதடன் தபசுசெய்கிற அகவல்

ஓம்நமசிவாயமே உம்பர்கள்துதிக்கும்
வாநமசீயனே வருகுவீர்சரணம்
நித்தியநிராமய நிர்மலரூபா
சத்தியவேதஞ் சாற்றிடும்நாபா
அரியயன்களுக்கு அருமையாம்பாதா
கரிதனையுரித்த கபாலனேநாதா
நடலையிலாடிய சுந்தரமணியே
இடைபிங்கலைநடு விருந்திடுந்தவமணியே
அஞ்செழுத்தான் ஆதியேபரமே
வஞ்சகவியமனை வாட்டியதவமே
ஓங்காரரூபனே வொளியுளமதியே
றீங்காரநாட்டிய மியற்றியபதியே
முத்தியின்முதலே மூலத்தின்பொருளே
சத்திபார்வதியாள் தான்மகிழ்தருளே
மழுவதைத்தாங்கு மகரகுண்டலனே
பழுத்தனியாப் பாம்பிடலனே

உடுக்கையைத்தாங்கிய யுருத்ரனேவிண்ணோர்
நடுக்கத்தைக்கொய்த நாதமேமண்ணோர்
ஏற்றிடுங்கோவே யென்மனக்குறையை
ஒட்டிவாவே ஓம்நமசிவாயமே
நற்கதிசேர நாதனேவருவாய்
முற்பதிக்கரசே மோனனேவருவாய்
ஆதிசொரூபமே அன்பனேவருவாய்
ஜோதிசுடரே தூயனேவருவாய்
மூலமேமுதலேமு த்தனேவருவாய்
ஆலமதுண்ட ஐயனேவருவாய்
அமரரைக்காத்தவ அண்ணலேவருவாய்
சுடிறசம்போன்ற சம்புவேவருவாய்
சத்தினிறசித்தே தயாபராவருவாய்
வித்தினில்முததே மெய்யனேவருவால்
ஈசனேவருவாய் இறைவனேவருவாய்
நேசனேவருவாய் நித்தனேவருவாய்
தத்துவநிலையின் குணமேவருவாய்
முத்துசுவாமிப்பணி முதல்வனேவருவாய்
எற்றினே னுன்னை யிங்ஙனேவருவாய்
போற்றினேனுன்பதம் புனிதனேவருவாய்.

பரமன் விருத்தம்.

அன்பனேமதிகயேந்திரா அரசனேயெனைநீகோரி
யின்பமாயழைத்தவெண்ண மியம்புவாயியம்புவாயே.

வசனம்

அப்பனேமதிதயா நீஎனனை வருந்தியழைத்தகாரியந் தெரியுச்சொல்லுவா யரசனே.

மதிதயன் விருத்தம்

சம்புவேபோற்றி சங்கராபோற்றி
அம்புலிதரித்த அண்ணலேபோற்றி
நம்பினேனுன்பதம் நாயுனிவயிற்றில்
தெம்புடிபாக்கியஞ் சித்திக்கவருவாய்.

வசனம்.

ஆண்டவனே, என்குலம்விளங்க என்பத்தினிவயிற்றில் புத்திர சந்தானம் பாலிக்கவேண்டும் பரமசிவமே.

பரமன் - வெண்பா

உன்றுதிக்கேற்பான் மகிழ்ந்தே யுன்பத்தினி வயிற்றில்
மன்மதனுங்கண்டேங்க மாதொன்றுஜெனிப்பாள்
தாலியுடனேகண்டாய் சற்குணனேகண்டவர்க்கே
பாலிப்பாய் பெண்ணென்றேபார்

வசனம்.

அப்பா ராஜனே, உன்பத்தினிவயிற்றில் சூரியப்பிரகாசம் போன்ற ஒருபெண் தாலியுடன்பிறப்பாள் அதைக்கண்டு சொன்னவனுக்கு அந்தப்பெண்ணை விவாகஞ்செய்துகொடுப்பாய் இந்தவார்த்தையை ரகசியமாய் வைப்பாயப்பா மன்னனே;

மதிதயன் விருத்தம்

மான்மழுதரித்தோய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி
காமிகக்களித்தேனுன்ற
னல்லடிபோற்றிபோற்றி

வசனம்.

அடியேன்பாக்கியமே பாக்கியம் என்கோரிக்கை யீடேறிற்று தன்னிடஞனேன் பரயசிவமே;

பரமன் விருத்தம்

தொண்டனேவாழி
தோகையேவாழி
எண்டிசைபுகழ்
இருக்கநீவாழி.

வசனம்

வாழி வாழி மதிதயா நீ சுகமாயிருக்கவாழி,

மதிதயன் விருத்தம்

அன்னத்தைப்பழிக்குந்திவ்ய வழ்குறுமயிலேகேளாய்
பன்னகம்பூண்டஜோதிப் பரமனுமன்மகிழ்ந்தே
இன்னகருள்ளமற்று ரியம்பிடும்வகையைக்க
வன்னருங்கெர்ப்பமோங்க விரைத்தனன்பேரவோவர்ரரய்

வசனம்.

கேளாயடிபெண்ணே யுனதுகொப்பத்தில் பாக்கியமாகும்படி பரசிவனருள்செய்தா னினிமதுதேசம் வருவாயடி கண்ணே,

சுந்தரங்கை.வசனம்.

மஹாராசந்தோஷமென் பிராணநாதர்

மதித்தியன்-தரு.இ.ம்.சுருட்டி.தாளம்.சாப்பு

பல்லவி;

அடியென்மயிலே வாராய்நாட்டிற்கேபோவோம்
அடியென்மயிலே வாராய

அநுபல்லவி

புடவியிற்பழியின்றுபேர்க்கநாம்வரம்பெற்றோம் (அடி)

சரணங்கள்.

புத்திரபாக்கியமில்லார்க்கு புண்ணியங்கிட்டாதென்றிடுஞ்
சித்திரவாக்கமொழிச் செருகைத்தடைத்தோமின் (அடி)
ஆறுமெளிதிற்காணு அரனடிதெரிசித்தோஞ்
சீருமடைந்தோங்குணச் செல்விபெறுவோமினி (அடி)
கொண்டகருத்திடேறக் கோமன்தன்னருள்பெற்றோம்
அண்டமுமபுகழுமுன்ற னமரிக்கையோங்குமினி (அடி)

மதித்தியன் விருத்தம்

அடிமானேசுரங்கடந்தே யழகுறுநமதுநாட்டின்
அடிமானேயெல்லவந்தோ ம்மங்கரன்கோயிற்கண்டோம்
அடிமானேயுள்ளேபுக்கி ஆதிமூலந்தனைப்போற்றி
அடிமானேவிடுதிசேர்வோமன்வருகுவாயே.

வசனம்

கேளாயென்பிராணநாயகி, நாம்காட்டைவிட்டு நம்துநாட்டெல்லைக்குள் வந்தோமிதோதோன்றுங்கண்பதிவைய தெரிசிப்போம்வருவாயடி யென்கண்ணே,

சுந்தராரேங்க-வசனம்;

மஹாபாக்யம் அப்படியே வருகிறேனென் பிராணநாதா,

மதித்தியன் விருத்தம்

அந்தமுமாதியான ஐங்கரத்தோனேபோற்றி
சுந்தரமூர்த்தியின்ற தூயனேநின்றாள்போற்றி

கந்தவேள்முன்னுதித்த கஜமுகாபரனேபோற்றி
சந்ததமெனையாட்கொள்ளுந் தாணுவேபோற்றிபோற்றி.

பொது-விருத்தம்.

மன்னவனுந் தேவிபரும் மூலநாதன்
வளர்கோயிற்புகுந்தவுடன் கண்டநம்பி
நன்னகரையாள்வதேன் வரவைச்செப்ப
நாடியே தூதுவிட வமைச்சன்கேட்ட
அன்னகரை யலங்கரித்தே நால்பதாதி
யனுப்பியே ரதத்துடனே தானும்வந்தே
துன்னவன்ற னடிதொழுவே யரசன்றானுஞ்
சொல்லுவா னவன்சரிதை மெல்லுவரனே.

வசனம்,

கேளுங்கள் சபையோர்களே, மதிதயராஜனுந் தேவியுங்கோயிற்குள் வரக்கண்ட குருக்கள் தன்தூதனால் தெரிவிக்கக்கேட்ட மந்திரி ரதமுதல் நால்வகைச்சேனையுடன் வந்தரசனைக்கண்டு தொழுதிற்க அரசன் வனத்திலடைந்ததைச் சொல்லுகிற விதங் காண்பீர்கள் கனவான்களே.

மதிமந்திரி-விருத்தம்.

வேந்தனேநின்றாள்போற்றி மெல்லியன்றாயேபோற்றி
காந்தனே தவசின்னேர்மை கடையனுக்குரைப்பீர்போற்றி.

வசனம்.

ஆண்டவனே, தாங்களிபற்றிய தவத்தாலடைந்த பலத்தை யெனக்குத் தெரியச்சொல்லவேண்டுஞ் சுவாமி.

மதிதயன் வசனம்.

அப்படியே சொல்லுகிறேனப்பா மந்திரி.

மதிதயன் விருத்தம்.


மாதேநாமுடித்திலங்க மரவுரிநீக்கினாளு
மாதேநாந்தொடுஞ்சிங்கார மதிப்புளவாடைபூண்டு
மாதேநாம்ரதத்தின்மீது மகிழ்வுடனேறியின்று
மாதேநாம்மனைக்குச்செல்வோ மனக்களிப்புடனேவாராய்.

வசனம்.

கேளாய் பிராணநாயகி, நாமணிந்திருந்த மரவுரியை நீக்கி ராஜ பணிபூண்டு ரதமேறி நமதரண்மனை சேருவோம் வருவாய் கண்ணே.

மதிதயராஜனும் சுந்தரரேகையும்

ரதம்ஏறி வருகிறபாகம்.



சுந்தரரேகை-வசனம்.

அப்படியே நானுமுடுத்திக்கொண்டு வருகிறேனென் பிராண வல்லபா.

பொது-விருத்தம்.

அண்ணலெனு மன்னவனுந் தேவியாரு
மன்புடனே யிரதமேறி யமைச்சர்சூழ
விண்ணவரு மலர்பெய்ய சுரங்கள்மேளம்
வெகுவாகத் தானொலிக்க நடனமாதர்
எண்ணருமுத் தாலாத்தி பவளம்கும்ப
மெடுத்தேற்ற மறையவர்கள் வேதமோத
நண்ணவரா முனிவர்களு மாசிகூற
நாயகனு மரண்மனைகுள நாடினனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, மதிகயராஜனுந் தேவியும் ரதமேறிவர நாட்டியப்பெண்கள் முத்தாலாத்தி பவளாலாத்தியெடுக்க வேதமோத முனிவர்களாசிகூற அரண்மனை சேர்ந்தார்களென் றறிவீர்கள் கனவான்களே.

தோழி விருத்தம்.

ஓதுமறை நான்குபுக ழுருத்திரன்றனு
முரைத்தவண்ணக் கருதரித்தே வுமதுநல்ல
மாதுபத்தினிபடிப்படியாய் மாதம்பத்தும்
மகிழ்வுடனே தான்கழித்தே மண்ணின்மீது
நிகரொன்று மில்லாம லழகின்மிக்க
திவ்யமகள் தனைப்பெற்றா ளின்றுகானே
பாதுகாத்திடும்ராசே அடியாள்தானும்
பண்புடனே யிங்குவந்தேன் பகரத்தானே.

வசனம்.

கேளும்மஹாராஜனே, உமதுதேவி பத்துமாதமுஞ்சுமந்து திவ்யரூபம்போன்ற பெண்ணைப்பெற்றாளின்று அதுசேதியறிவிக்க வந்தேன் சுவாமி.

மதிதயன்-விருத்தம்.

மந்திரியெனக்கேயின்று மகள்தானாய்பிறந்ததாலே
மந்திரிமேனதெல்லா மகிழ்வுடன்தானமீவாய்

மந்திரிபுத்திரிக்கே வழக்கிடப்பேரைக்கேழ்க்க
மந்திரிசாஸ்திரிதன்னை வரச்செய்வாயின்னிவாய்த்தானே,

வசனம்.

அப்பா மந்திரி, பரமனளித்தவரத்தின்படி யெனக்கு மகள்பிறந்ததால் வேண்டியதானங்கள் கொடுப்பாய் நாமகரணஞ்செய்ய சாஸ்திரியை வரவழைப்பாய் மதிமந்திரி.

அப்படியே செய்விக்கிறேன் சுவாமி.

பொது-விருத்தம.

சாஸ்திரியை யழைக்கவென்று வேந்தன்றானுஞ்
சாத்திடவுமசரீரி தோன்றியங்கே
நேத்திபுள்ள மகள்தனக்கே பலருங்கேழ்க்க
நிகழ்வாள் போதனையைப் புகழுவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே ராஜன்றனக்குப் பிறந்த குழந்தைக்குப்பேரிட சாஸ்திரியை யழைக்கச்சொன்னவுடன் ஆகாயவாணிஅசரீரியாய்ச் சொல்லுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

ஆகாயவாணி-விருத்தம்.

அப்பனேமதிதயேந்திரா அன்பனேயுரைக்கக்கேளாய்
இப்போபேருன்பிலத்தா லின்றநற்புத்திரிக்கேதான்
செப்பவேயுலகோரெல்லாந் திகழ்பெறக்களிகொண்டோங்க
ஒப்பசந்திரவதியென் றுகந்துபேரிடுவாய்மன்னா.

வசனம்.

கேளாய்மதிதயனே, நான் ஆகாயவாணி யுன்மகளுக்கு உலகத்தாரெல்லாம் புகழும்படியாக சந்திரவதியென்று பேரிடடழைப்பாய் வேந்தனே,

மதிதயன்-வசனம்.

அம்மா ஆகாயவாணிதாயே மஹாபாக்கிய மப்படியே பேரிட்டழைக்கிறேன் போற்றிபோற்றி அம்மணி.

மதிதயன்-விருத்தம்,

மந்திரியாகாயவாணி வழுத்தியவாறுபோல
என்தனன்மகள்தனக்கே யிதுமுதலுரைக்கக்கேளாய்

சந்திரவதியாளென்று சாத்தியேயழைக்கவேண்டும்
இந்தநன்னாமதத்திற்கே யென்மனங்களித்தேனப்பா.

வசனம்.

அப்பாமந்திரி, யின்றுமுதலெனது புத்திரிக்கு சந்திரவதியம்மா ளென்று பெயரிட்டழைக்கச் செய்வாயப்பா மதிமந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் மஹாராஜனே.

பொதுவிருத்தம்.

இந்தவிதம்பெயரிட்டே யழைக்கமாது
இரவமதிபோற்ஜொலித்து நாட்குநாளாய்
சுந்தரத்திலதிகரித்தே யறிவிலோங்கச்
சொல்லொணுநீதிமுறை யனைத்துமோதி
மந்திரமாய்வேதநெறி தானும்பார்த்தே
வாழ்கையிலுள் நட்பமெலா மடங்கக்கற்று
சந்திரவதிபருவமது அடையக்காலந்
தான்கொண்டாளினிச்சரிதை நான்சொல்வேனே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, சந்திரவதிஅம்மன் நாளொருமேனி பொழுதொருவண்ணமாய் வளர்ந்து சகலநீதிநெறியொழுக்கமுங்கற்று பருவமடையுங்காலங் கொண்டாளென்றறிவீர்கள் கனவான்களே.

மதிதயன்-விருத்தம்.

என்னிடமகள்தானிப்போ பெய்திடப்பருவகாலம்
நன்மையாய்கிடைக்கும்போல நான்கண்டேனைதாலே
இன்னகர்சில்ப்பிமாரை இச்சணமழைப்பித்தேதான்
கன்னியமாடமொன்றைக் கடிகினிலமுடிப்பிப்பாயே.

வசனம்.

கேளாயப்பாமந்திரி யென்மகளாகிய சந்திரவதியம்மன் பருவமடையக்காலமானதால் சில்ப்பியையழைத்து ஒருதிவ்ய அங்கயனே முடிப்பிப்பாய் மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே செய்விக்கின்றேன் மகாராஜனே.

மந்திரி-விருத்தம்,

கட்டியக்காரரேநீதான் கடிகியேசென்றுமாடங்
கெட்டியாயிருக்கவிந்த கெடிதலமதனிலெங்குங்
கிட்டிடாதிருக்கும்வாறு கிரமமாய்முடிக்கவேண்டி
பொட்டெனசுப்பாசாரி புனிதனையழைத்துவாராய்

வசனம்.

அடாசட்டியனே, நமதுராஜாவின் குமாரத்தி வசிக்கவேண்டிக ன்னிகா மாடங்கட்ட சில்ப்பியாகிய சுப்பாசாரியை அழைத்துவருவா யடா கட்டியனே,

கட்டியன்-வசனம்,

அப்படியே யழைத்துக்கொண்டு வருகிறேன் சுவாமி.

கட்டியன்-விருத்தம்.

க்ஷேத்திரமியற்றுமார்க்கத்
திறமையிலுயர்ந்தசுப்பா
சாத்திரியாரேவேந்தன்
தானழைத்திட்டார்வாரீர்

வசனம்.

ஐயா சுப்பாசாரியரே, யும்மையெங்களரச னழைத்தனர் வருஞ் சில்ப்பியே.

சில்பி-வசனம்.

அப்படியே வருகிறேனப்பா கட்டியனே.

சில்ப்பி-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சுப்பாசாரிவந்தான்-சில்ப்பியெனுந்
சுப்பாசாரிவந்தான்

அநுபல்லவி,

இப்பாருலகினு லெனையொருவரெனக்கு
இல்லையெனவேசாத்திர சொல்லிவாயால்படிக்குஞ் (சுப்)

சரணங்கள்.

பீஜகணிதகறி வோன்-பாதாளமட்டும்
பெருகும்வஸ்துகள் தெரிவோன்

சாஜமென்பது மறிவோன்-சிருட்டிக்கயனை
தாழ்வுறுவிடமுர் தெரிவோன்

நேசமாய்க்குடிபோவார் நீடூழிகாலம்வர்ழ
நிகழ்கிரகநிலையோக நேர்மையைப்படியியற்றி
நித்தமுமானந்த மெத்தவுமோங்கிட
வுத்தமமனைவுடன் சுத்தமாமாளிகை

நீட்டி அக்கினிவ்வா
மோட்டி உதயபரவ்
காட்டி வடவளவை
வாட்டி கதிரோனோட்டம்

பெருகவே சுகமது
வருகவே சலமுந்
தருகவே பகைவரு
மரு வே மனைகோலுந் (சுப்)

சில்ப்பி-விருத்தம்,

கன்னமாபுரிவையாளுங் கைபனேயதியுல்லாச
வுன்னதத்துணவேதான முதவிடுப்பரனேயென்னை
மன்னனேயழைத்தவாறு வழுவறவுரைத்தால்நானே
யின்னகர்மதிக்கச்செய்வே னெனதையேபோற்றிபோற்றி.

வசனம்,

போற்றி போற்றி தேவனே, அடியேனை யழைத்தகாரியந்தெரிவி க்கவேண்டுஞ் சுவாமி,

மதிதயன்-விருத்தம்,

சன்மமுப்குதும்வாதுங் கமெனம்படைத்தோர்காணு
அன்பனும்விடைவிண்ணோர்கு மானருளதனுலவந்த
என்மகள்பருவங்கொள்ள இசைந்தனளவள்வசிக்க
நன்மையாமாடமொன்று நலமுடன்முடித்திடாயே,

வசனம,

கேளாயப்பாசில்ப்பாசாரி, யெனதருமைமக ளிருக்கவேண்டிய தொருதிவ்யமான கன்னிகாமாடங்கட்டி முடிப்பாயப்பா சில்ப்பி...,

சிலபி-வசனம்,

மஹாபாக்கியம் அப்படியே முடிப்பிக்கின்றேன்வோ...

சில்ப்பி-விருத்தம்,

அரசரே நீர் தான் சொன்ன ஆக்கினைப்படியேயானும்
அரசமேயுமதுபுத்திரி அன்புடன் வாழவேண்டி
அரசரே திவ்யமான அரண்மனை முடிநசெய்தேன்
அரசரே இனிமேலென்ன லாவதையுரைசெய்வீரே,

வசனம்,

கேளும் ராஜபரமேஸ்வரா உமதுமகள் வாசஞ்செய்ய திவ்வியஅரண்மனைகட்டி முடித்தேனினிமேலென்னாக வேண்டியதை அருள்செய்வீர் வேந்தனே,

மந்திரியன்-வசனம்;

மஹாசந்தோஷமப்பா சுப்பாச்சாரி, மந்திரிசில்ப்பி நமதுத்திரவின்படிகட்டிமுடித்த அரண்மனையைப் பார்த்துவருவோம் வருவாயப்பா,

சில்ப்பி-வசனம்,

அப்படியே வருகிறேன் சுவாமி,

மந்திரியன்-வசனம்,

அப்பா சில்ப்பியே நீகட்டியிருக்கு மரண்மனையினுடைய வளப்பத்தை விபரமாகச் சொல்லிககாட்டுவாயப்பா,

சில்ப்பி-வசனம்,

அப்படியேயென்னாண்டவனே

சில்ப்பி-தரு-ராகம்-இந்துஸ்தான்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி,

பல்லவி,

கட்டினேனே பாராய் மன்று மனை கட்டினேனை பாராய்,


அநுபல்லவி,

இட்டமுடனெனக்கு இயம்பியவாறு போல், (கட்டி)

சரணங்கள்,

குட்டிக்காரணையபோட்டுக் கொண்டாறுவேலைசெய்நுவர்
குணந்திறக்கமைபாதெரக் கொள்ளவரிமேபாய்வேந்தே(கட்)
சிங்காரவளைதந் சிரியசோபனைசையும
மங்கமாய்ச்... மபுக்தபிற்கடமுள்(கட்)

மதிதபராஜன் புதிய அரண்மனை காணுகிற பாகம்.



தாதிவளவுங்கன்னி தானருந்துமறையுஞ்
சோதிவொளியாய்மின்னுஞ் சொலவொணுசாரமும்(கட்)
வண்டகசாலையும் மலர்வாவிதோட்டமுங்
கண்டவர்கிணவாட கனத்தமேல்மாடமுங்(கட்)
காலையுபாதிபோக்கக் களும்புருச்சிற்றறையும்
வேலையொத்தவிழியாள் விளையாடநல்மனையுங்(கட்)
தந்தைதாய்வந்திடிற் றங்கிடமாளிகையுஞ்
கந்தகஸ்தூரிபூசக் கதம்பச்சாவடியிங்கே(கட்)

மதிதயன் விருத்தம்.

மந்திரிசில்ப்பிதானு மகிழ்பெறமசழ்வசிக்கச்
சுந்தரமனேதானென்று சொகுசுடனமைத்ததற்காய்ச்
சந்ததமனங்களிக்கச் சாற்றுறுப்பொன்பட்டாடை
தந்தனுப்பிடுவாய்நீயுந் தாமதமின்றியப்பா.

வசனம்.

அப்பாமந்திரி, யென்புத்திரிக்காக திவ்வியமான மாளிகைகட்டி முடித்த சுப்பாசாரிக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புவாயப்பா மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் சுவாமி.

சில்ப்பி விருத்தம்.

வேந்தனேமந்திரிதானு மிகவிலையுயர்ந்தவாடை
வேந்தனேபணியுமரத்ன மிகுதியாயளிக்கப்பெற்றேன்
வேந்தனேயுனைப்போல்தியாகி வேறுண்டோவுலகில்நாதா
வேந்தனேநீயுஞ்செங்கோல் விநோதமிச்சபையும்வாழி.

வசனம்.

செளுபஹாராசனே, மந்திரியடியேனுக்கு விலையுயர்ந்த பட்டாடைகள் பொன்மணிகள் நவரத்தினங்கள் கொடுக்கப் பெற்றுக்கொண்டேன் நீரும் உமது செங்கோலும் இந்த விநோதசபையுஞ் சதாவாழி வாழி தேவனே.

மதிதயன் விருத்தம்.

மதிதனிலுயர்ந்தவென்றன் மந்திரியுரைக்கக்கேளாய்
கதியணியுமையாள்பாகன் கன்னியைத்தாலபெற

விதிமுறையுணர்ந்தபுத்திரி வீற்றிடமனையுமாச்சிப்
பதியினிலாரோசொல்வாய்ப் பாங்கியர்யமைக்கத்தானே.

வசனம.

அப்பாமந்திரி, யெனதுபுத்திரிக்காக திவ்விய அரண்மனையுங்கட்டிமுடிவாச்சுது இனிசந்திரவதிக்கி யாரைத்தோழியாகநேமிப்பதுயோசித்துச சொலலுவாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் மஹாராஜனே

மந்திரி விருத்தம்.

அய்யனேயரசேயென்னை யாண்டிடுங்கோவேநீதி
மெய்யனேமந்திரவாகை மேவியீன்றெடுத்தமாது
துய்யநன்னடையொழுக்கஞ் சுருதிநேரறிவுபுத்தி
பொய்யதுமுறையாள்சந்திர பூவைக்கேதோழிசெய்வீர்.

வசனம்.

கேளும் மஹாராஜனே, தோழிமந்திரவாகையின் புத்திரியாகியசவுந்தரவல்லி மெத்தவும்புத்தியுடையவள் நல்ல நடக்கையாள் விவேகிநீதியறிந்தவள், ஆதலால் சந்திரவதி யம்மனுக்குத் தோழியாக அமைப்பது நலமென்றுண்டவனே.

மதிதயன்-விருத்தம்,

மந்திரிசுந்தரதேவி மகிழுறுதோழியான
மந்திரவாகைதன்னை வரச்செய்வாய்விரவிற்றுனே.

வசனம்.

அப்படியானல் எனதுதேவியின் தோழியாகிய மந்திரவாகையையிங்குவரவழைப்பாய் மதிமந்திரி.

மந்திரி வசனம்,


அப்படியே வரச்செய்கிறேன் வேந்தனே,

மந்திரி விருத்தம்,

கட்டியக்காரநீதான் கடிகிப்போய்தேவிதோழி
யிட்டிங்குவருவாயப்பா இறைவன்சொற்படிக்குத்தானே

வசனம்,

அடாகட்டியனே, விரைவாய்ச்சென்று நமதுராஜாத்தியின் தோழியாகிய மந்திரவாகையைக் கூட்டிக்கொண்டு வருவாயடாகட்டியனே



மந்திரவாதை மதிதயராஜனிடத்தில் வருகிறபாகம்.

கட்டியன் வசனம்,

அப்படியேயழைத்துக்கொண்டு வருகின்றேன்,

கட்டியன் விருத்தம்

மந்திரவாகையம்மா மன்னனுமுனையேயிப்போ
வந்திடவழைத்தார்நீயும் வருகுவாய்தடுக்கிற்றுனே,

வசனம்,

சேளாயம்மா மந்திரவாகையே, உன்னை அரசனழைத்துக் கொண்டுவரச்சொன்னார் வருவாயம்மா,

மந்திரவாகை-வசனம்,

அப்படியே வருகின்றேனப்பா கட்டியனே,

மந்திரவாகை-தரு-இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி,

பல்லவி,

மந்திரவாகைவந்தாள் மதியன்றேவியி னதிமகிழ்தங்கிய

அநுபல்லவி.

அந்தியிருளையெற்கு மகற்றுங்குணமுடைய
சந்திரனொளிபோலத் தான்முகக்காந்திகொண்ட. (மந்)

சரணங்கள்,

தேசங்களனைப்புற செங்கோல் காத்திற்றுங்கி
திவ்வியவோமயெக்கியந் திசைகளிற்வளாந்தோங்கி (மந்)

நேசனுப்பரமத்தி நெறியைமனதிலநாளும்
நினைந்தேநீதிசெலுத்தி நிகராய்புவியையாளும் (மந்)

கிருபனைழைத்தசேதி தெரியவணங்கிமனப்
பெருமையுடனேராஜன் பேணுஞ்சொலுவைநாட்டி (மந்)

மந்திரவாகை-விருத்தம்,

மன்னனேபோற்றி மகிபனேபோற்றி
யென்னையையழைத்தவா றியம்புவீர்போற்றி,

வசனம்,

போற்றி போற்றி மஹாராஜனே, யென்னையழைத்த காரியந் தெரியப்படுத்தவேண்டுஞ் சுவாமி,

மதிதயன் விருத்தம்,

பாக்கியேயுரைக்கக்கேளாய் பத்தினியீன்றபுத்திரி
பாக்கியேபருவகாலம் பண்புடனடைந்ததாலே
பாக்கியேயுனதுதிவ்விய பாவையைத்தோழியாகப்
பாக்கியேயமைக்கவேண்டி பற்றினானழைத்தேன்காண்பாய்,

வசனம்,

கேளாய் பெண்மணி மந்திரவாசை, யெனது புத்திரியாகிய சந்திரவதியம்மாள் பருவமடையுங்காலமானதால் அக்கன்னியாமாடத்திலிருக்கப்போகிறபடியால் உன்மகளைத் தோழியாகவமைக்கக்கருதியழைத்தேனறிவாய்மாதே.

மந்திரவாசை-வசனம்,

மஹாபாக்கியம், என்கோரிக்கையும் அதுதான்சுவாமி சித்தத்தின்படி நடத்த அடியாள் தடைசெய்வது முண்டோ யென்றாண்டவனே,

மதிதயன்-விருத்தம்,

தோழியுமிசைந்தாளின்று சுபதினமானதாலே
நாழிகைகடவாமுன்னம் நல்மனைபுகவேவேண்டும்
காழியோன்றனையளித்த சபிலைவாழ்கடவுட்பாதம்
வாழியென்றடுத்தேபெற்ற வரபுத்திரிவரச்செய்வாயே,

வசனம்,

கேளாயப்பா மந்திரி, இன்றையதினஞ் சுபதினமாகையால் புதிதாய்க்கட்டிய அரண்மனைக்கு பெண்மகளை யனுப்பித்துக்கொடுக்கவேண்டும் ஆகையால் காலம்போகாமுன்னஞ்சந்திரவதியைவரவழைப்பாயப்பா மந்திரி,

மந்திரி-வசனம்,

அப்படியே வரவழைக்கின்றேன் ஆண்டவனே,

பொது நிபதை,

மன்னவனும் வரவிட்டசேதிகேட்டு
யாதுசந்திர ரேகையருமகளைநல்ல
உன்னதமாய்த்தானுடுத்தி பணிகளிட்டு
உம்பர்களுமன்னர்களு மகிழ்வுகொள்ள

சின்னமுடன் பலமேள மொலிக்கமுத்துச்
சிவிகையினிற் றனேற்றிச் சிலவெமீயத்
துன்னவன்வாழ் நற்சபையிற் சந்திரவதி
சொகுசுடனே வந்திருகித் தோன்றுவாளே,

வசனம்,

சேனுங்கள் சபையோர்களே, இராஜனழைத்தசேதிகேட்டவுடன் தாயாருஞ் சந்திரவதியைச் சிங்காரித்து முத்துச்சிவிகையிலேற்றிய னுப்ப சகலவாத்தியத்தொனியுடன் ராஜசபைக்கு வருகிறவிதங்காணீர்கள் கனவான்களே.

பாலசந்திரவதி-தரு-இங்கிலீஷ்நோட்,

வாலைச்சந்திரவதியிதோ வந்தாள்நடியே
சாலமானமகிழ்வுடன் சாத்தீதடியே (வா)
முகடோசந்திரபிம்பந்தலை முடிக்குமேகம்
ஜகமயக்கும்விழிசயலபோற் றுவிடபோகம் (வா)
நாசிகுமிழ்மாற்றுங்கொங்கை நாடுமேநிர்பை
நாசிதுடையடிவாழை நாணுமேரம்பை (வா)
பூணும்பிறைபோலநெற்றி முத்தெனத்தந்தம்
காணுந்துயிலொளியுடன் காட்டுமேயந்தம் (வா)
மாதோவன்னப்பேடுநடை மயிலேயாட்டும்
யேதோவிவளெனப்பேச இந்நகைகள்காட்டும் (வா)
காயமயிர்வில்புரி சமுத்திமேலாங்க
வாயாம்பிதழ்கோவைமலர் வாசனையாங்க (வா)

சந்திரவதி விருத்தம்,

எந்தையேபோற்றிபோற்றி யீசனூர் தன்புதத்தை
விந்தையாய்ப்பணிந்தேயென்னை வேண்டியின்றெடுத்தநல்ல
தந்தையேயடிபாடன்னைத் தாவிக்குழைத்தவாறைச்
சிந்தைநீர்குளிர்ந்தெனக்கே செப்புவீரின்றன்போற்றி,

வசனம்,

அருந்தவஞ்செய்து என்னைப்பெற்ற தந்தையே, பெண்ணையழைத்த காரியந் தெரியச்சொல்லவேண்டும் பிதாவே,

சந்திரவதி மகிசயராஜன் அரண்மனைக்கு
போகிறபாகம்,



மதிதயன்-விருத்தம்.

அன்னமே யான்றவத்தாற் பெற்றெடுத்த
அற்புதமே செழுந்தேனே கதலிமாதே
சொன்னமே செண்பகமே மாக்கொழுந்தே
சொலலவொணுக் கற்பகமே சுகிர்தமான
நன்மையுள நீதிமொழி யறிந்தளந்த
ஞயகமே விலமதியா நாகரத்ன
என்மகளே திவ்வியமனையுனக் கிணைததே
னேதுவாய்த் தோழியுடன் வாழ்குவாயே.

வசனம்.

கேளாயம்மா வென்னருந்தவப்பொருளே யுனக்காகவொரு சொகுசுள்ள மாளிகை கட்டிமுடிந்தது இன்றுசுபதினமானதாற் றேழியுடன்சென்று சுகமாய் வசிப்பாயம்மா கண்மணியே

சந்திரமதி வசனம்.

அப்படியேபோய் வசிக்கின்றேனென்பிதாவே.

மதிதயன்-விருத்தம்.

மந்திரிபென்மகட்காய் மகாவிந்தையாய்முடித்த
சுந்தரமாளிகைக்கே சொகுசுறுகிள்ளைபோடு
பந்தவம்மானைரங்கம் பல்லைக்காயெலாமமைத்தே
யிந்தகற்கடிகைதோழி யிந்துமேவரச்செய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி யென்மகளுக் காகக்கட்டிய அரண்மனையில் கிளிபந்து அம்மானை சதுரங்கம் பள்ளாங்குழி மணிகாய்கள் முதலானதை அமைத்து சீக்கிரத்தில் மந்திரவாசகையின் மகளையு மழைப்பா யப்பா மதிமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே செல்கிறேன் மகாராஜனே.

மந்திரி-விருத்தம்.

சடடியக்கார பொட்டெடணமேவாடி
கிட்டிவேதோழியை விட்டிர்வருவாய்

வசனம்.

அடா கட்டியனே சீக்கிரம்போய் தோழி மந்திரவாகை மகளாகிய சவுந்தரவல்லியையழைத்து வருவாயப்பா வீரனே.

கட்டியன் வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் சுவாமி.

கட்டியன்விருத்தம்.

ராணியின்றோழியான நற்குணமந்திரவாகா
பூணியுன்மகளை ராஜன் பொட்டெனவழைத்ததாலே
வீணிலேகாலந்தன்னை மேவியேகழிக்கப்போகா
நீணிலம்புகழவென்பின் னினிவுடனனுப்புவாயே

வசனம்.

அம்மா மந்திரவாகை யுன்மகளை நமதுராஜன் சீக்கிரமழைத்துக்கொண்டு வரச்சொன்னா ரனுப்புவாயம்மா.

மந்திரவாகை வசனம்.

அப்படியே யனுப்பித்துக்கொடுக்கிறேனப்பா கட்டியனே.

மந்திரவாகையின் விருத்தம்.

என்னருமைமகளேயுன்னை யிறைவனுந்தன்மகட்கே
உன்னருந்தோழியாக வுகந்துமே அழைப்பதாலே
அன்னமேநீதான்சென்றே யசமதிற்புகழ்கொண்டாட
துன்னவன்சொற்படிக்கே சோர்வின்றிநடப்பாய்கண்ணே.

வசனம்.

அம்மா வென்னருமைமகளாகிய சவுந்தரவல்லிராஜன்மகள் சந்திரவதியம்மாளுக் குன்னைத்தோழியாகநேமிக்க நமது வேந்தனழைப்பதால் நீயிளைத்து அரசனுக்கின்னப்படி நடந்து கீர்த்திபெருவா யென்கண்மணியே.

சவுந்தரவல்லி-தரு-இராகம்-சாரங்கா-தாளம்-ஆதி.

பல்லவி.

தாதிசவுந்திரவல்லிவந்தாள் சந்திரவதி
சால்பமணிநடப்பேனென்றே.

அநுபல்லவி.

பேதியாமனத்துடனே வேதிடமொழிப்படிக்கே
பாதுகாத்தரசன்மகள் பணிவிடைசெய்வேனென்று. (தா)

சரணங்கள்.

கோதிமதிகள்கும்பாய்க் கூடிவந்தவாறுபோல்
குளிர்ந்தமுகமுமேனி கோரில்கிட்டாயழகுந்
தேடிவருந்திடினுஞ் சிக்காதசற்குணமுந்
தேஜசநடக்கையுந் திகழ்நீதிமுறையும்

பாடிப்பதிப்பிலும் பண்புறுகுணவந்தி
பத்தினிமார்க்கேற்ற பணிசெய்தவிதரணமு
நாடியரசன்கொளு நங்கைமந்திரவாணை
நலமுடனீன்றெடுத்த பலாகலையுணர்மாது

நண்புடன் நன்மனத்
தேன்புடன் வேந்தனுக்
கின்புட னடங்கிட
அன்புட னிதோயிதோ

நாயகிதன்னையே தாயகம்போலவே
காயந்தனில்வினை துபாயவழிதெரிந்த (தா)

சவுந்தரவல்லி-விருத்தம்.

வேந்தனே நின்ருள்போற்றி
விமலனேயெனை யழைத்த
சாந்தனே சேதிதன்னைச்
சாற்றுவீர் போற்றிபோற்றி

வசனம.

போற்றி போற்றி ஆண்டவனே யெனையழைத்தகாரியந் தெரியச் சொல்லவேண்டுஞ் சுவாமி.

மதிதயன்-விருத்தம்,

மந்திரமாகைபெற்ற மகிழுறுமாதேகேளாய்
எந்தனன் மகளுக்குன்னை யிதுமுதற்றோழியாக
சந்திரவதியாளோடு தான்சேர்ந்துமாளிகைக்கே
வந்திடாதேதுர்தோஷம் வரையுடன்காப்பாய்தானே,

வசனம்.

கேளாய் சவுந்தரவல்லி யென்னருமைமகளாகிய சந்திரவதியம்மாளுக்கு நீதோழியாகவிருந்து இப்போது கட்டிய புதிய அரண்மனை சேர்ந்து யாதொருதோஷம் நேரிடாமல் பாதுகாத்துவருவாய் சவுந்தரவல்லியே.

சவுந்தரவல்லி விருத்தம்.

எங்களாண்டவா நீர்தா னியம்பியவாக்குமீறேன்
எங்களாண்டவரேபாது மிமியின்றிகடந்துக்கொள்வேன்
எங்களாண்டவரேகாங்க ளின்றபுக்கிரிவைக்காப்பேன்
எங்களாண்டவரேதோகை யிணையடிபணிசெய்வேனே.

வசனம்.

சுவாமிதங்களாக்கினைமீறேன் சந்திரவதியம்மாளுக்கு யாதொரு குறைவுநேரிடாமல்பாதுகாத்து அந்தஅம்மாள் பணிவிடையைப் புரிந்துவருவேனாண்டவனே.

மதிதயன் வசனம்.

மெத்தசந்தோஷம் என்மகளை யழைத்துக்கொண்டுபுதிய அரண்மனைக்குப் போவாய்பெண்ணே சவுந்தரவல்லியே.

சவுந்தரவல்லி வசனம்.

அப்படியே யழைத்துக்கொண்டுபோகின்றேன் சுவாமி

சவுந்தரவல்லி-தரு-இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி,

போவோம்வருவா யம்மாமே அரண்மனைக்கே
புகழ்பெருந்தந் சொர்னமே-சந்திரவதியே

அநுபல்லவி.

காலன்தவஞ்செய்ய மைவிழியனருகா
கருவாயுதித்துவந்த மருமேனிக்கொழுந்தே (போ)

சரணங்கள்,

நற்குண வாவியே மாதர்களில்
சற்குணமுடையதேவியே
அற்புதவொளிவாங் கிளியே எளிதிற்கிட்டா
கற்பகன்மனையாழியே



சந்திலவதியும் சவுர்ணவல்லியும டநிய அரண்மனைக்குப்போகிறபாகம

சர்பசயனன்கண்ணு சுவாமிகொடுக்கவந்த
தாயேயென்னுடனிப்போவாயே நாம்வாழ்மனைக்கிச்

சார கலவுநடை
சேற நல்லொழுக்கத்தில்
மீற தேசத்தோருனைக்
கூற வுத்தமியென்று

செப்பருகலைவிதி தினந்தின்மோதுவோம்
ஒப்பனவேபலவகை யுவந்துநாமாடுவோம்

பொது-விருத்தம்.

வேந்தனுமுறைக்கக்கேட்டே விந்தையாய்சவுந்தரவல்லி
சாந்தமாங்குணத்தைப்பூண்ட சந்திரவதியாளோடே
காந்தமாநதோழியாகக் கடிகியேமாளிகைக்குள்
வாய்ந்தனளினிநடக்கும் வகையறிவீர்கள்தாமே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே சந்திரவதியுந் தோழி சவுந்தரவல்லியும் புதிய அரண்மனைசேர்ந்தார்கள் இனிநடக்கும் வாரறிவீர்கள் கனவான்களே.

சவுந்தரவல்லி-விருத்தம்,

கருமணற்குழலியான கண்மணியுமதுபுத்ரி
பருவமதானளின்று பாலைபோய்மங்கையென்றே
சருவநுமழைக்கலானள் சற்குணபதியேநாதா
தருமனேசடங்குசெய்யத் தானறிவிக்கவந்தேன்

வசனம்.

சேளுமஹாராஜனே யுமதுதிவ்விய புத்திரியின்று புஷ்பவதியானள் சடங்குகள் நடத்தவேண்டுமாதலால் தெரிவிக்கவந்தேனண்டவனே.

மதிதயன்-வசனம்

சந்தோஷந் சந்தோஷந் அப்படியேநடப்பிக்கிறேன்பாவாய்.

மதிதயன் விருத்தம்.

மந்திரிதோழிசொன்ன வாறுயேறிந்ததாலே
மந்திரிபக்ஷமொன்று மகாசடங்கதையியற்ற

மந்திரிவேணதெல்லா மட்டின்றியமைத்தேயப்பா
மந்திரியறைகொடிக்குள் மகிழுடனனுப்புவாயே.

வசனம்,

அப்பாமந்திரி என்னருமைமகள் புஷ்பவதியாதிற்காக சடங்குகள் நடத்தவேண்டியவைகளைச் சேகரித்தனுப்புவாயப்பா.

மந்திரி வசனம்,

அப்படியே சேகரித்தனுப்புகின்றேன் சுமாமி.

மந்திரி விருத்தம்.

கோவேநீருரைத்தவாறு கொப்பெனக்களபம்புஷ்பங்
கோவேகேளிலைபடைக்காய் குருமபைநீர்க்காயும்வாழை
கோவேசர்க்கரையுஞ்சீனி கூடமேமற்றதெல்லாங்
கோவேநான்சேகரித்தே கொப்பெனவனுப்பினேனே.

வசனம்.

சுவாமி சடங்கிற்காகவேண்டிய வஸ்துக்களை யெல்லாஞ் சேகரித்தனுப்பி வைத்தேனுண்டவனே.

சுந்தரரேகை வசனம்.

அடியம்மாசவுந்தரவல்லி என்மகளைச் சீராகச் சிங்காரித்தழைத்துவருவாயடிதோழி.

சவுந்தரவல்லி வசனம்,

அப்படியே சிங்காரித்தழைத்து வருகின்றேனென்தாயே

சவுந்தரவல்லி-தரு-இராகம்-எமுனாகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜோடினைசெய்குவேனே சுந்தரரேகையின் சந்திரவதிக்கே

அநுபல்லவி.

நாடதனிலேயுள்ள நாயகிமார்களும்
நாணவிவள்சிங்காரம் பூணப்புனிதமென (ஜோ)

சரணங்கள்.

கூந்தலிதோ வாரியே கோதிலே நீக்கிக்
கோணாச்சடையு பாவினேன்

காந்தலங்காரம் பூட்டினேன்குச்சுங்கொட்டு
கலவின்றுக்கடி சூட்டினேன்

சந்திரபிறைசூரியன் தன்பிறைநெத்திற்சுட்டி
சாத்தினேன்முராஜம்புல் தகதகவேயிதோ (ஜோ)

பிறைநுதல் நீறணிந்தேன்-குங்குமச்சாந்து
பேணிவிழிக் கணிந்தேன்
உறைமேற் புநவந்திட்டினேன் நாசிக்கிறதோ
வொளிபணி மூன்றுமாட்டினேன்

நிறைசெவிக்கிரண்டிற்கும் சிகழ்கம்மல்ஜிமிக்கியும்
நிலமதிமுருகுடன் சேர்ந்தகொங்சுமிட்டே (ஜோ)

முத்துமோகனம் பூட்டினேன்-கழுத்திற்கே
மொழிசந்திரஹாரஞ் சூட்டினேன்
பத்துமோதிரந் திட்டினேன்-விரல்களுக்கே
பணிகைக்கடகம் மாட்டினேன்

எத்துங்கரத்திற்கிதே இரத்தினவங்கியுமுரி
யெழிறுமுபாஜிபந்து இணைபுஜகிரிதிஇட்டே (ஜோ)

இடையிலொட்டியாணம் பூட்டி-ரத்தினமிழைத்த
இநகால்சிலம்புக் கிட்டி
நடைபொற்கொலுசு மாட்டி-சதங்கையுள
நல்லரசங்கள் நாட்டி

படைமுகம்புகழ்மன்னர் பார்த்துமயங்கநல்ல
பட்டுசரிகையாட பாங்காயிடையிற்கட்டி (ஜோ)

சவுந்தரவல்லி வசனம்.

தாயேபெண்ணைச்சிங்காரித்தாச்சுது அம்மணி.

சுந்தரரேகை வசனம்.

அடி பார்வதி என்மகளையழைத்துவந்து இந்தநவரத்தினமுக்காலி யின்பேரில் இருக்குமுகமா யுட்காரவைப்பாய் சவுந்தரவல்லியே.

சவுந்தரவல்லி வசனம்.

அப்படியேயழைத்துவருகின்றேனம்மணி.

சவுந்தரவல்லி வசனம்.

அம்மாசந்திரவதியே யிந்தமுக்காலியின்பேரில் கிழக்குமுகமாய்த் திருமபியுட்காருமம்மா.

பொது விருத்தம்.

புஷ்பவதி யானமகள் தனையிருத்திப்
பூவுடனே கஸ்தூரி புனுகணிந்து
நிஷ்கபட வேந்தர்களின் தேவிமார்கள்
நின்றாலஞ் சுற்றுவதை நீர்காண்பீரே.

வசனம்.

சேனுங்கள் சபையோர்களே சந்திரமதிக்கு ராஜர்களின் தேவிமார்கள் ஆலமெடுக்கும் வகை காண்பீர்கள் கனவான்களே.

லாலி-இ-ம்-நவரோஜ்-தாளம்-ஜம்பை.

வாலிசுந்தரமூர்த்தி	லாலிசுந்தரர்தேவி
லாலிமழுதரித்தவற்கு	லாலி-சுபலாலி (லாலி)
சுந்தரரேகையும்வேந்தன்	சுரத்திலருந்தவம்புரிய
வந்தவழகுருபாவை	வாழ்கசுபம்லாலி (லாலி)
ஆதிபரம்பொருளான	அண்ணலருளர்துதித்த
ஜோதிவடிவுளபாவை	சுபம்வாழ்கலாலி (லாலி)
திங்களணியெம்பெருமான்	சிந்தமகிழ்ந்தேகொடுத்த
மங்கைசந்திரமதியும்	வாழ்கசுபம்லாலி (லாலி)
சற்குணமும்பேரறிவுஞ்	சத்தியமும்நீதிநெறி
அற்புதமாய்ப்பூண்டவளை	அடையசுபம்லாலி (லாலி)
பதிவிரதம்பண்பொழுக்கம்	பாரிலுளதானமெலாம்
அதிகமுடன்றானடத்தி	வாழ்கசுபலாலி (லாலி)
சுகபாக்கியசம்பத்துஞ்	சோடசமுந்தானடைந்து
வதனவதிநற்கதியில்	வாழ்கசுபம்லாலி (லாலி)
ஐம்பத்தாறுதேசமன்னர்	ரணிபடியஇருந்துதினம்
இன்பமுடனரசியென	இருக்கசுபம்லாலி (லாலி)
சுழற்முருகனடிபணிந்து	கைகூப்புமன்பர்களாம்
அழகுளவிநோதசபை	அனுதினமும்வாழி (லாலி)

பொது விருத்தம்.

மன்னவனற் றவமிருந்த தாயீன்றவந்த
மகளான சந்திரமதி மங்கையாகி
தன்னுவமை யில்லாத பாக்கியான
சவுந்தரவல்லி தன்னுடனே சுகமாய்வாழு

சந்திரமதிக்கு தாதிகள் ஆலாத்தி யெடுத்தல்.



நன்னகராள் அயோத்திபனுந் திரிசங்கென்ற
நற்குணமுஞ்சத்யகிலே காணுமோங்கு
மன்னவனு மரிச்சந்திரன் கொலுமுகத்தே
வருகின்ற வீதியிலே தருகின்றானே.

வசனம்.

'கேளுங்கள் சபையோர்களே சந்திரமதியும், தோழிசவுந்தரவல்லியுந், கன்னியாமடத்தில் இவ்வாறு சுகமாயிருக்க அயோத்தியாபுரியையாளுகின்ற அரிச்சந்திரமகாராஜன் கொலுவிற்கு வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.'





அரிச்சந்திரமகாராஜன் சபை.

ஹரः

உ

கடவுள் துணை.

சத்தியபாஷ

அரிச்சந்திரபட்டலம்.

கட்டியன் விருத்தம்.

அட்டமாசித்தி யாலே அழலவன் குலம் விளங்க
இட்ட அந்தரசொர்க் கத்தி லிலங்கிய திரிசங் கீன்ற
திட்டிய வினைகளோந்த கிளரரிச்சந்திரன் வாசல்
கட்டியக் காரன் ருனுங் களிப்புடன் தோன்றினனே.

கட்டியன்-தரு-இராகம்-பந்துவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டியக்காரன் வந்தான் வந்தானிதோ
கட்டியக்காரன் வந்தான்

அநுபல்லவி.

கட்டியக்காரன்வந்தான் கைதனிற்பிரம்புகொண்டு
கனனரிச்சந்திரன் மனதுமகிழ்ந்திடும் (கட்டி)

சரணங்கள்.

எட்டுத்திசைகளெங்கும் இறைவன்புகழ்கொண்டோங்கி
மீட்டிவலயங்கத்தி மிடுக்கிக்கரத்திற்ருங்கி
கெட்டுப்பகைவரெலாம் கிலிபிடித்துப்பின்வாங்கி
கிளிமொழிமுவுக்கிழு திருவைபமனதை நீங்கி
திடுதிடுத்திட நடுநடுத்திட
வெடுவெடுத்திட படபடத்திட
கிட்டி ராஜன்வரவை
ஒட்டி ஜனத்திரளை
செட்டி சமர்த்ததனில்
தெட்டி. மிவனேயென

ஊறிடதுட்டர்கள் அலறிடவாயது
குளறிடமனமது தளறிடஇதோயிதோ (கட்டி)

கட்டியன் விருத்தம்.

ஜெகமதில் அறம்விளங்கத் திரிசங்கு ஈன்ற மைந்தன்
திகழ்பெறச் சத்யந் தன்னைத் தினையள வழுவா வேந்தன்
புகம்பல வேற்றி நீதியும்பரும்புகழப் பெய்வோன்
அகமதில் கீர்த்தி பூண்ட அரிச்சந்த்ர தீரன் வாரார்.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே புவனத்தில் யாவரும் புகழத்தக்க கீர்த்திபுனைந்த அயோத்தியில் நீதிவழுவாமல அரசுசெய்கின்ற ராஜாதிராஜனை அரிச்சந்திரமகாராஜன் கொலுவிற்கு வருகிறவிதங்காண்க

அரிச்சந்திரன்-வருகிற-தரு
இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தேசதேசங்களெல்லாம் திகள்கொண்ட அரிச்சந்திர
ஜெயவீராஜன் வந்தான்-கொலுவிருக்க

அநுபல்லவி.

வாசவன் அயன்காணு மலர்ப்பாதன் திருத்தாளை
வணங்கிமனதில்நாளும் இணங்கிருக்குந்திவ்விய
வாணிபுகழுந் தீரன் ராஜர்
பேணிப்பணியுஞ் சூரன் ஜெக
வல்லவர் நல்லவர் கல்லவர் சொல்லவர்

வாழ்த்தமுடியதனைத் தாழ்த்தவிருபுறமும்
ஏத்தருடிகள்தனைக் காத்தபுகழுடைய தேச

சரணங்கள்.

முத்துக்குடைநிகழ்த்த ரத்னமுடிகரித்து
மோகனமாலையுடைய வர்துசெஙகோல்பிடித்து
சுற்றும்அமைச்சர்வர சொர்குசாய்நாட்யநடத்தி
சொல்லொணுமறையொலி தாயர்மிகப்படித்து

சூழ பகைவரெல்லாம்
தாழ நீதியாய்லோகம
வாழ நாட்டினிற்கூழ
மகழ வெகுவிருைத

நாயகனுகவே தாயகம்போலவே
காயந்தனைமறந்த நேயர்கள்சூழ்ந்திட

ஈடி விருதுகட்டியம்
பாடி மிடியர்வரத்

தேடி. கலியைப்போக்கி
ஆடி தருமமாலதை

வேண்டிவளர்க்குந் தீரன் நவகண்டம்
தாண்டிப்புகழுஞ் சூரன் மெய்மை
பூண்டிலகிடு மாரன் அயோத்திநகர்
ஆண்டிடுமெந்தி பாரன் சுகம்

எச்சிடகண்டவா மெச்சிடமகிழ்வுடன்
இருந்தேசிம்மாசனத்தில் பரிந்தேகீர்த்திசெலுத்த (தே)

அரிச்சந்திரன் விருத்தம்.

சதுர்மறை விளங்கவென்றன் தனிச்செங்கோல் விதிகளோங்கக்
கதிர்குலந் தழைக்க நாளுங் கருதிய முனிவரோங்க
நிதியது பெருக நாட்டில் நீடித்தென் குடிகள்பொங்க
நதிபுனை கைலைவாசா நாட்டினின்னருளே போற்றி

சத்தியகீர்த்தி விருத்தம்.

விரிச்சிற கறுத்த கோனும் விண்சுரர் பன்னவாசர்
கரிச்சர மெடுத்தோன் மற்றோர்காவியர் முனிவர் யோகர்
சரிச்சொலா வும்பர் வேந்தன் தரையினோர் புகழப் பெய்யும்
அரிச்சந்த்ர மகிபா வுன்றனழகடி பணிந்தேன் போற்றி.

வசனம்.

மஹாராஜ ராஜபூஜித ராஜகெம்பீர ராஜமார்த்தாண்ட ராஜாதி ராஜராஜ அரிச்சந்திரமகாராஜனே ? போற்றி.

கட்டியன்-விருத்தம்.

தீரனே பகைவரை மீறு தொடுக்கிய செம்மலே வெகுபராக்கு
செப்பரிய நால்வேதம்ஒப்பிருபன்பாதனைத்தெனக்குரைப்போய்பராக்கு
வீரனே சத்யமும் தருமமும் நீதியும் விளக்குமவித்தகபராக்கு
வேந்தனே அண்டினோர்மகிழ்வுறச்செய்திடும்மெய்யனேவெகுபராக்கு

தேசவிசாரணை.

ராஜன்.

ஜெகமதிற்குறைவின்றி மாதமும்மா தான் செழிக்கவேபெய்கின்றதா

மந்திரி.

செம்மலே காலமுறைதவறாமல்வருஷங்கள்தேசத்திற்பொழிகின்றதே.

ராஜன்.

அகமதில்மன்னர்கள் கட்டிடும் கருநிதான் அன்பாயளிக்கிறார

மந்திரி.

அண்ணலேராஜர்கள்தடையின்றிப்பகுதியை அடங்கியேகட்டிவாரார்,

ராஜன்.

புகம்புகழுமாலயந் தனில்பூஜைபிசகாமல் ஒழுக்கமய் நடந்துவருதர்

மந்திரி.

உம்பனேதேவதா பூஜைகள்குறைவின்றியுலகினில் நடந்தேறுதே.

ராஜன்.

அக்கிலேக்காரர்கள் படிநிறைகுறையாமல் அன்புடன்அளக்கிறார.

மந்திரி.

ஐயனேவாணிபர்கள் நிறைகுறைக்காமலே அளவாயளக்கிறார்கள்.

கட்டியன் விருத்தம்

மன்னவன்கொலுமுன் உன்தநாட்டியம்
பன்னவேமாதும் உன்னிவந்தனனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே மஹாராஜாகொலுமுன் நாட்டிய ஞ்செய்ய நடனப்பெண்வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

நடனப்பெண்வருகிற-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வசீராளேவனிதையும் வானத்தின்ரதிபோல

அநுபல்லவி.

நேராய்விழிசுழற்றிக்காட்டி நிகர்த்தகுரங்கள் அசைய ஆட்டி
மாரனுடனேதேவர்களும் மனவாடிடவேமுன்னம் (வசீ)

சரணங்கள்.

மின்னற்கொடிபோலென வெண்ணிமனமுருக
சின்னஇடையுமேரு வென்னஇருஸ்தனமும
அன்னப்பேடையொத்த அசைந்தநடைநடித்து
அன்புடன்பாதத்தின் அம்சம்தனைப்பிடித்து

சாசநிதபமா கமகநிதநீ
காகதமரிகா கம்ம கநிசதபா
நீடிகிடதஜெனு தநிங்கிணத்தோமென
திம்கிடதஜெனு திந்தில்லாமென (வசீ)

நடனப்பெண் விருத்தம்.

அண்ணலேபோற்றி அயோத்திநாடாளும்
செம்மலேபுன்றன் திருவடிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மஹாராஜனே போற்றிபோற்றி.

நடனப்பெண்-தரு-இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இன்னமோடிசெய்வதேனையா அரிச்சந்திரராஜே.

அநுபல்லவி.

மன்னவர் என்றன் மையல்தீர்க்க
மனங்கனையோ தேதோகாணேன் (இன்ன)

சரணங்கள்.

தீரனை திவ்வியரூபனே இதோபிதோ
தேடிவந்தேன் பாருந்தாபனே
மாரன்பாவி கணையைத்தாக்கி
மடக்கிறான் இனித் தாளேன்வேந்தே (இன்ன)

சுந்தரமாலைபூண்டபெய்யனே எந்தன்மேரில்
இந்தகோபம ஏனோஐயனே
கந்தமாமலர் தாக்கதிரேகம்
கசிந்தகலோயு மீறுதையோமோகம (இன்ன)

பாதமும்பணி கின்றேன்சீலனே உமக்குயேது
பாதகஞ்செய்தேன் நாணுமலோலனே
மாதரசம் பெருகிமெத்த
மனமுஞ்சோப மாகுதையனே (இன்ன)

அரிச்சந்திரன்-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி அன்பனேகொலுவின்முன்னே
அப்பனே நடனஞ்செய்த ஆரிழைமனங்களிக்க
அப்பனேபொன்பட்டாடை அனைத்தையுமளித்தேதான்
அப்பனேவிடுதிட்டக அனுமதிபுரிகுவாயே,

வசனம்,

அப்பாசத்தியகீர்த்தி இந்த நாட்டியப்பெண்ணிற்குவேண்டியவெகுமதி கொடுத்தனுப்புவாய் மந்திரி,

கட்டியக்காரன்-விருத்தம்.

அயோத்திபன் மனைவிகாடி
அவனியில் மெய்திரத்தங்கள்
விசேஷத்திகளாய யாத்திரை
செய்கிறார் வருகின்றாரே,



அரிச்சந்திரமகாராஜனிடத்தில யாத்திரை பிராமணர் வருகிறபாகம்.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திரமஹாராஜனுடைய திருக்கொலுவிற்கு உத்தமயாத்திரைப் பிராமணன்வருகிற விதங்காண்க,

---

யாத்திரை பிராமணன்வருகிற-தரு-இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

யாத்திரைவேதியர் வந்தார் அயோத்தியைநாடி
யாத்திரைவேதியர் வந்தார்.

அநுபல்லவி.

மாத்திரைபொழுதாகிலும் வேறு நினைசெய்யாமல்மனம்
எத்தியேசிவஸ்தலங்கள் நேத்திபாய்த்தெரிசித்திடவே (யா)

சரணங்கள்.

உலகிலுள்ளபல உசித்தீர்த்தங்களாடி
உமபர்மகிழும்வெகு உன்னதக்ஷேத்திரந்தேடி
காலைக்கியானம் அருள்பாடி கருதிபிரமத்தைநாடி
காலனணுகாமலே சாலவேஅருள்பெற்ற (யா)

வேதமென்பதிலுள்ள மேன்மைதனைப்படித்து
விண்ணோர்க்கிழும் தீர்த்தங்களெதுவாய் ஆடிமுடித்து
காதகர்களானைதைக் கருதாமலேஅடித்து
காபவர்கள்நேசமதை கண்பாராமல்நடித்து (யா)

நேசதேசாதிமன்னர் திகழ்கொலுவாகக்கண்டே
திக்காபுராய்வாழச் செப்பி ஆசிகள்விண்டே
ஆரவிதிமுறை அனைத்தையுமகைக்கொண்டே
அயோத்திபன்மகிழுகிற அன்புடன்காணவென்றே (யா)

அரிச்சந்திரன் விருத்தம்

நதிபுனை நீலகண்டன் நாட்டினிலனைமத்தவேத
விதிமுறைபுணர்ந்தேதிவ்விய வேள்விசெய்பவரேபோற்றி
சதிசெயலக்களிக்காவேண்டி கருதியிக்குற்பிறந்தாள்
பதியேதோ அடியேன்காணப் பகருவீர்பாதம்போற்றி.

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே என்குலத்தெய்வ புண்ணியத்தினால் இங்குவந்தீர்கள் தாங்களிருக்கும் திவ்வியதேசமெதுவோ அருள்புரியவேண்டும் சுவாமிகளே.

யாத்திரைப்பிராமணன்-விருத்தம்.

பருதியின்மரபில்வந்த பண்பனே ஆசீர்வாதம்
தருமத்தைக்குறைவிலலாமல் தழைப்பிப்போய் ஆசீர்வாதம்

பெருமைபாய்லோகமன்னர் பேணிநம்பதிபேபுன்றன்
அருமைபாஞ்செயகோலோங்க அரிச்சந்திரா ஆசீர்வாதம்.

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம மஹாராஜனே,

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்,

அதிபதிஅயோத்தியாண்ட அன்பனாதிரிசங்கின்ற
மதிபுனஅரன்பதத்தை மறவாமல்செங்கோள்தாங்கி
கதிபெறபிதர்க்களெல்லாம் கனமுடன அரசுசெய்யப்
பதிஅரிச்சந்திரனை பண்பனே வாழிவாழி.

வசனம்.

வாழிவாழி அரிச்சந்திரமஹாராஜனே வாழி.

அரிச்சந்திரன் வசனம்.

இந்ததிவ்விய ஆசனங்களின்மேல் வீற்றிருக்கப்பிரார்த்திக்கின்றே ன்சுவாமிகளே,

யாத்திரைப்பிராமணாள் வசனம்.

சந்தோஷமப்பா அப்படியிருக்கின்றோம் மஹாராஜனே.

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்,

எந்தவூரென்றுகேட்ட இறைவனே அயோத்திமன்ன
சுந்தரமுடைய அந்த சொல்லுகாம்பிலிவாழ்வோர்
வச்சதோர்கருமநீங்க வகையுளபாத்திரைவந்தோம்
உந்தனற்கீர்த்திகேட்டே உனைக்காணவந்தோமவேந்தே,

வசனம்.

அரசனே நாமிருப்பது காம்பிலிதேசம் புண்ணியதீர்த்தங்களாட வந்தோம் உனதுபெருமையைக்கேட்டு கணடுபோகவந்தோம அரிச்சந்திரமஹாராஜனே,

அரிச்சந்திரன் விருத்தம்,

இன்னிலந்தனிலேயுள்ள எழிலுறுஸ்தலங்கள்தீர்த்தம்
வன்மையாயாடிதேச வளப்பமுமுணர்ந்தேவர்தீர்
என்னதோரதிசயங்கள் எங்கெங்குமேதுகண்டீர்
பன்னவேபடிபேன்கேழ்க்கப் பண்புடன்பகருவீரே.

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே நீங்கள் யாத்திரைசெய்த விடங்களில் யேதாகிலும்அதிசயங்கண்டிருந்தால்தெரிவிக்கவேண்டும்சுவாமிகளே

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்,

காசிபொட்டிதற்குத்தெற்கே கன்னியாகுமரிமட்டும்
பூசிததீர்த்தமாடிப் புகழ்பெறுஸ்தலஞ்சேவித்தோம்

மாசிலாமதிதயேந்திரன் மாதவஞ்செய்துபெற்ற
நேசியினழகைக்கண்டோமெ நிகழ்த்தவுமாகாதப்பா,

வசனம்.

கேளும் மஹாராஜனே காசிமுதல் கன்னியாகுமரி யளவுமுள்ள ஸ்தலதீர்த்தமெல்லாம் ஆடினோம் ஆனால் மதிதயன்பெற்ற மகளுடைய அழகைப்போல எங்குங்காணோமடியோம் வேந்தனே,

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதொன்றுகண்டோமென்றீர் மறையோரே அவள்பேரென்ன
மாதவின்ரூபமென்ன மணமுண்டோ இல்லையோ மற்றும்
மாதுவின்தந்தையாரோ வண்ணமாயெனக்குத்தோற்ற
மாதுவின்குணத்தையெல்லாம் வகையுடனுரைசெய்வீரே,

வசனம்,

சுவாமிகளே நீங்கள் சொன்னபெண்ணிற்கு மணமாய் விட்டதா அவளுடையபெயரும் ரூபமும்நடக்கையும் அவள்தந்தையின்பெயரும் விளங்கத்தெரிவிக்கவேண்டும் சுவாமிகளே,

யாத்திரைப்பிராமணர் வசனம்,

அப்படியானால் எங்களுக்குத்தோன்றியமட்டும் சொல்லுகிறோம் கேளும் ராஜனே,

யாத்திரைப்பிராமணர் அகவல்.

சொல்லுவோங்கேளாய் துரைமதிதயேந்திரன்
கல்லுருகிடவே கைலையன்பதத்தை
நாடியேபெருந்தவம் நலமுடனியற்ற
ஓடியேவந்தவன் உளமதுகளிக்க
மாததுபிறக்க வரமதுஅளித்தான்
ஓதவுமெங்களால் ஒக்குமோ அரசே
சந்திரனைப்பழிக்கும தனித்திருமுகமும்
தங்கமோசத்தைத் தான்ஒடுக்கிடுமே
கண்களோகெண்டையைக் கருதியேபழிக்கும்
விண்ணொளிவில்லென்ன விளங்கிடும்புருவமும
நாசியோகுமிழை நலமுடன்மாற்றும்
வாசனைமொழியோ வளர்குயிலோச்சும்
கூந்தலால்மேகங் குறைவெனக்காட்டும்
சாந்தமோகுணமோ சாற்றவும்போகா
கழுத்ததுவலம்புரி கைப்பிடியிடையினள்
அழுத்தவுமாமோ மதனுமயங்கிட
பொற்பினையொத்த பூவையின்குசங்கள்
விற்பனுகண்டவர் மெய்குலைவவரே
நடையதுஅன்னம் நாணிடக்கண்டால்

தடையடிவாழை சொலலுவோமன்று
வேதமுறைமையும வெகுவெகுநீதியும
ஓதநுபராணமும் உணர்ந்தவன்கண்டாய்
மன்னரிலவனை மணர்வனைசகல
புண்ணியவானாகும் புனிதனேவேந்தே
சந்திரவதியெனத் தனிப்பெய நடையவள
சந்தரா அவள்நில் சொல்லவும்போலோ
எங்களாலியலாதை யியம்பினோமன்றி
மங்களாவதியின் வடிவழைச்செப்ப
வல்லவா ஆயிரம் வளநாவுடையவன்
சொல்லவும் அரிதெனத் தோனுவாய்அரசே

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தணமாரேநீங்கள் அறிவித்தமாதின்பேரில்
அந்தணமாரேநானும் அளவிலாமோகங்கொண்டேன்
அந்தணமாரேதீர்க்க அடியனும்மாறுகாணேன்
அந்தணமாரேநெஞ்சம் அனல்மெழுகாவேன்கண்டீர்

வசனம்,

கேளுங்கள் ஐயமாரே அந்தசந்திரவதியின்பேரிலமெத்த ஆவலானேன் மனமுருகுகின்றது தீருமார்க்கமேதோ அறியேன்சுவாமிகளே.

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்,

மன்னனேநாங்கள்சொன்ன மாதினமேலுனக்கேகாதல்
மன்னனேபெருகுமாகில் வழுத்துவாய்சஞ்சையின்றி
மன்னனேநாங்கள்சென்றே மதிதயனுடனேபேசி
மன்னனேயுனக்கேசந்திரமதிமாலைசூட்டச்செய்வோம்.

வசனம்.

கேளுங்கள்ராஜனே உனக்கு அவ்வளவு ஆவல்பெருகுமாகில் நாங்கள்சென்று மதிதயனுக்குபோதித்து சந்திரமதி உன்னை விவாகஞ்செய்யும்படிக்கு முடிவுசெய்வோம் மஹாராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

செப்பவேசொன்னீரென்னை திகழ்பெறுஐயமாரே
எப்படிசகிப்பேன்மோகம் ஏந்திழைதன்னைப்பெற்ற
அப்பனைமதிதயேந்திர அரசன்பால்தாங்களசென்றே
இப்பவேஎனக்குமாலை இடந்திடச்செய்வீர்போற்றி

வசனம்,

சுவாமிகளே மோகமிறது தாங்களிப்பவே சென்று சந்திரமதியென்னை மாலையிடும்படிக்கி திட்டஞ்செய்து காப்பாற்றவேண்டும்ஐயமார்களே,

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்,

வேந்தனேயயோத்திராஜே விடுவிக்கிலேசந்தனை
வேந்தனே அவரைநொடிக்கும் வேண்டியவாறுபோல
வேந்தனே கன்னிதன்னை விரைவினி லுனக்கேமாலை
வேந்தனே சூட்டச்செய்வோம் விடைதாராய்வாழிவாழி.

வசனம்,

ராஜம ராஜனே அரிச்சந்திரமதி யுனக்கேபாரியாளாகச் செய்விப்போம் நாங்கள்போக விடைதாரும் வேந்தே நீவாழிவாழி

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரே தகைமையாய்த அறிவினி லுயர்ந்தன்றன்
ஐயரேஸ்நானஞ்சாந்தி அனுஷ்டிக்கும்பொருளே நீங்கள்
ஐயரே அங்குசென்றே அரசனைவிணங்கச்செய்தே
ஐயரே வருவீருங்கள் அடிபார்த்திருப்பேன் கண்டீர்

வசனம்,

சுவாமிகளே நீங்கள் மதிசயராஜனிடத்தில்பேசி தீர்மானித்து வருகிறவரையில் உங்கள்வழி யெதிர்பார்த்திருப்பேன் வேதியர்களே,

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

மன்னனேநாங்கள்சென்றே மதிதயன்மகள்தானுன்னை
மன்னனேமணஞ்செய்வோம் மகிழ்வுறுவேந்தேவாழி.

வசனம்.

அரிச்சந்திரமஹாராஜனே நாங்கள்போய் வருகிறோம் சந்தோஷமாயிரும உமதுகோரிக்கையை யீடேற்றுவோம் ஆசிர்வாதம்.

பொது விருத்தம்.

அந்தணர்கள் விடைபெற்றுவர மன்னன்
அரண்மருகுச்சேனைபாலநொந்தமெத்த
சந்திரமதிசந்திரமதி பெயரே சொல்லித்
தளருவான் விரகசிந்திக்கின்றானே.

வசனம்,

கேளுங்கள் சபையோர்களே யாத்திரைப்பிராமணாள் போனபின்பு அரிச்சந்திரமஹாராஜன் சந்திரமதியைப்பற்றி பெண்ணாசையினாலே விரகதாபப்படுகிற விதங்காண்க

அரிச்சந்திரன்-தரு-இராகம்-பைரவி-தாளம்-ஆதி,

பல்லவி.

மன்மதனேபொறுப்பாய் என்மீதிற்றனை
மாறித்துவமிருப்பாய்.

அநுபல்லவி.

உன்மகமுன்னொருநாள் ஒடுங்கிப்பரமசிவன்
என்மீதிலவன்மனம்வைத்தே யிப்படிசெய்யத்தகுமோ (ம)

சரணங்கள்.

வேதியனுரைக்கக்கேட்டே-மனதுருகி
விதவிதவுண்டியைவிட்டே
பாதிமதியோனையந்த பாவைசந்திரமதியாளை
பாரியாயெனக்களிக்க கோரியேபெருகுமவேளை (மன்)

இல்லறமுடையபேரை-அலவோ நீதான்
வல்லமைசெய்குவாய் போரை
நலதிதவுங்காலம் நாரிசந்திரமதிவாய்கில்
நாணங்கொள்ளவுன்னைஎங்கும வீணாகச்செய்வேனிப்போ (மன்)

காமமிதுவுனக்கன்றே யென்னைவருத்தும்
கோபமினியாகாதென்றே
சீலமுளயாது அந்த தேவிசந்திரமதிவரில்
செப்புவேன்உனக்கே ஒப்புவாயித்தருணத்தில் (மன்)

சத்தியக்கீர்த்தி விருத்தம்.

வேதத்தின்வாக்கியமென்ன விளங்குமெய்நாவைப்பூண்ட
போதத்திலுயர்ந்தவெங்கள் புனிதரேஅரசேகேளு
சீதளச்சந்திரமதிவீசத் தென்றலுஞ்சுடுமென்றீர்
மாதவமறையோர்சொன்ன வாக்கியமெய்யோசொல்வீர்.

வசனம்.

சேனும ராஜபரமேஸ்வரா வேதியர்கள்வந்துசொல்லிப்போனவார்த்தையை பொய்மெய்யென்று எப்படியறிந்தீர் என்னாண்டவனே,

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி அழகுநற்குணங்கள்பூண்ட
அப்பனேமதியன்தான் அப்பனேனக்குத்தானே
அப்பனைபாரியாக அமைவதுமன்றேயோகம்
அப்பனைமீறுதிங்கே அனைபுல்வார்தறிகிலேனே.

வசனம்.

அப்பா மந்திரி அந்தசந்திரமதி யெனக்குக்கிட்டுவாளா பேரமுமீறுது என்னசெய்வேனப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

மனதிற்குமனமேசாக்ஷி வண்ணமா[illegible]
மனமகிழ்ந்துவேதத்தின் மதியைபேர்[illegible]

மனமுடனவர்போயந்த மதிதயன்கொண்டதிவ்விய
மனமது அறிந்தேயிங்கே வரமட்டுமெபொறுப்பீர்வேந்தே
வசனம்,

சுவாமி, மனதிற்கு மனஞ்சாக்ஷி யென்பதுசரியே மதிகயராஜன் எண்ணத்தை அந்தவேதியர்கள் தெரிந்துவருகிறவரையில் பொறுப்பீர் ஆண்டவனே.

பொது-விருத்தம்.

அமைச்சனுமுறைக்கக்கேட்டு
அண்ணலுந்தணிவுகொண்டார்
அமைச்சருமதிதயேந்திரன்
அவரிகொலும்முகவாரமே.

வசனம்.

சேனுங்கள்சபையோர்களே, கன்னமாபுரியையாட் கின்றமதிதயமஹாராஜன்கொலுவிற்கு வருகிறவிதங்காண்பீர்கள்கனவான்களே,

———

மதிதயராஜன் தரு.

இ-ம் மோகனம் தாளம்-ஆதி.

பல்லவி.

பன்னர்மன்னர்கள்புகழ் மன்னன்மதிதயேந்திர
மகாராஜனிதோவந்தான் கொலுவிக்க
மதிதயராஜன் வந்தான்.


அநுபல்லவி.

நன்னகர்குடிவாழ நாட்டில்மும்மாரிவிழ
நமபனிருபதத்தை நாளும்பணியுந்திவ்விய
நாட்டோர்புகழுந் தீரன்-தவ
வீட்டோர்மகிழுஞ் சூரன்-குல
நயமுளவாசகன் ஜயமுளசேவன்
நாளும் மேலும் சாலும் வாழும் ஆளுலக. (மன்)

சரணங்கள்.

சித்திரதோ மொன்றாடும்
சிலாடி நாலூர்பாடும்
திவ்விய குணத்தில்மிக
ஒவ்விய வியுதித்தோன்
சத்திபுடனே செங்கோல்
காந்தி லேந்திமுடியில்
சதிரோ நெறியைபார்ப்பும்
சனக்தரிட்டர் தலங்க

?



மதிதயாராஜன் கொலுவிக்கு வருகிறபாகம்.

சயவர்கணடு	ஓட இருபுறம்
ஐயமாய்க்கட்டியம்	பாட வுசித
மயலார்நாட்டிய	மாட குடிகள்
பயத்தைவிட்டீட	நாட எங்கும்
கண்டவர்	நின்றவர்
சென்றவர்	மண்டலர்
காண	வாக்குமணம்
பூண	வேற்றரசர்
நாண	தன்மயமாய்த்
தோண	வுலகமெலாம்
தண்ணொளியாகவே	விண்ணவர்மகிழ்ந்திட
நண்ணொணுநீதியாய்	இன்றுலகாண்டிடும்(மன்)

மதியபராஜன்போற்றி-விருத்தம்.

வையகந்தனிலேநீதி வளர்ந்திடஅறவம்விளங்க
துய்யவேமண்ணின்மீது தொகுத்துமும்மாரிபெய்ய
நொய்புலகற்றிவேத நொடித்திடயெக்கியமோங்க
ஐயனேசைவாழ்வே அருள்செய்வாய்போற்றிபோற்றி

கட்டிக்காரன் விருத்தம்.

பார்புகழுமன்னவா புரியாளும்சங்கையே
பார்த்திபா வெகுபாராக்கு
பண்புபெறுகீர்த்திபுனே வேந்தனேநீதியுள
பாக்கியனே வெகுபாராக்கு
கார்முகில்விதிமுறைகள் பிசகாமல்பெய்விக்கும்
கர்த்தனே வெகுபாராக்கு
கண்டபகைவோர்களுங்கொண்டமதமவிட்டோட
சனைதொடபோய்பாராக்கு

மந்திரி-விருத்தம்.

மன்றுளோர்போற்றும்வேந்தே மகதநாடாளுங்கோவே
தின்னமாருனிவர்தாமுந்செயுந்தவஞ்செழிக்கநீதி
வண்ணமாம்சந்நிரவிநாக வளர்செகசோக்புரியுமோர்தன்
அன்னமேலமதியேந்திர அரசனேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றிமஹாராஜனேபோற்றி.

மதியராஜன் தேசவிசாரணை.

ராஜன்,

பொன்னுலகையாள்கின் மன்னவதுரைசேர்ந்தோரும்
பூமாய் நடக்கின்றதா

மந்திரி,

புனிதனேஇந்திரன் அனுகைக்குறைவின்றி
புகழாய் நடக்கின்றதே,

ராஜன்.

எண்ணரும்முனிவர்கள் செய்கின்றஹோமங்கள்
இனிதாய் நடந்தேறுதா

மந்திரி.

ஈசனேயோகிகள் நடத்திடும யெக்கியங்கள்
எதேஷ்ட்டமாய் நடந்தேறுதே,

ராஜன்.

வண்ணமுளதேசத்தில் மாதமும்மாரியும்
மாறுமல் பெய்கின்றதா

மந்திரி.

மாணிபுகழ்தீரனே காலமுறைதவறுமல்
மாரியும்பெய்கின்றதே

ராஜன்.

தண்ஞோதிவிளக்கவே தேவாலயத்தினில்
தான்பூஜைசெய்கிறுரா

மந்திரி.

தபாபராகுறைவின்றி ஆலயங்களில்பூஜை
தடையிலலாமற் செய்கிறுர்

மநிதயராஜன் விருத்தம்.

நன்னருமதிமிகுந்த நலமுளமந்திரிகேளாய்
என்னருமகள்தனக்கே எவ்வனகாலம்வாய்த்தும்
பன்னரும்விவாகஞ்செய்யும் பாங்கதையோசிக்காமல்
இன்னமுமிருப்பதாமோ யியம்புவாய்யியம்புவாயே.

வசனம்.

கேளுமப்பா மந்திரி, எனதுதவப்புத்திரி பருவமடைந்தெரிந்தும் விவாகத்திற்கு முயற்சிசெய்யாமலிருப்பது யேதுகாரணம் சொல்லுவாயப்பா மந்திரி.

மந்திரி-விருத்தம்

ஜெகம்புகழ்கன்னிநாட்டை சிருடனரசுசெய்வோ
அகமகிழ்ந்திடநீர்பெற்ற அழகுளபுத்திரிதானும
தகைமையுள்ளொவர்வகாலம் தானுற்றுளென்றேமெத்த
மகபதிதயாமாயோ மனஞ்செய்யயோசிப்பீரோ.

வசனம்.

கேளுமிராஜனே, உமதுபுத்திரி பருவமடைந்ததற்காக விசனப்படப்போமோ சீக்கிரத்தில்விவாக முடிக்கத்தகுந்த முயற்சி செய்வீர் அரசே.

மதிதயன் விருத்தம்

மந்திரியுன்றன்வார்த்தை மகிழ்வுடனேற்பலானேன்
மந்திரியெனதுபுத்ரி வடிவுள அழகுக்கேற்ற
மந்திரிபுருஷன்வேண்டும் வலித்திடச்சூக்கிரத்தை
மந்திரிஅறிந்தோனிந்த மண்ணின்மீதாரோகாணேன்

வசனம்,

அப்பாமந்திரி, என்மகள் அழகுக்கேற்றபுருஷனாகவும் அவளிடமிருக்குஞ் சிவரகசியத்தைதெரிந்து சொல்லத்தக்கவனாகவும்இருப்பனோ தெரியாமல்தயங்குகின்றேனப்பா மந்திரி.

மந்திரி-விருத்தம்.

சந்தேகங்கொள்ளப்போமோ தயாபரா நீர்தான்பெற்ற
சுந்தரமகள்தனக்கே சுருக்கினில்விவாகமாக
அந்தரங்கிதனை ஆண்டவனருளேசெய்வார்
இந்தயுன்துயரம்விட்டே ஏங்காமலிருப்பீர்வேந்தே,

வசனம்.

கேளுமென்னாண்டவனே நீர்பெற்றபுத்திரிக்குக் கலியாணமாகும்படி பரமசிவன் கடாக்ஷிப்பார் உமது துயரத்தைநீக்குவீரரசே,

பொது விருத்தம்.

வேந்தனுமகள்தனக்கே விவாகமுமில்லையேயென்று
சாந்தமுமபோக்கிருக்க சாசாமிருந்தவேளை
வேந்தனுமரிச்சந்திரன் தன்விடைபெற்றஐயமார்கள்
சாந்தமாய்மதிதயேந்திரன் தனிக்கொலுமுன்வந்தாரே,

வசனம்,

கேளுங்கள்சபையோரே, சந்திரவதியின் கலியாணத்தைமுடிக்கக் காலம்வருமோவென்று சிந்தித்துக் கொண்டிருக்கும் மதிதயராஜன் கொலுவைநாடியாத்திரைபிராமணர் வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே,

---

யாத்திரைப்பிராமணர்-கரு-இ-ம்-கலியாணி தாளம் சாப்பு

பல்லவி.

அந்தணர்வந்தாரே அயோத்திவிட்டே அந்தணர்வந்தாரே,

அநுபல்லவி.

இந்தலோகம்புகழ சந்திரவதிதனக்கே
சுந்தரமணமாய் கூட்டிச்செய்வதற்கே (அந்த)



மதிசயராஜனிடத்தில் யாத்திரைப்பிராமணாள் வருகிறபாகம்.

சரணங்கள்.

அண்டத் தலைப்பாடி-மதிதயன்
அமர்ந்து வளவைத்தேடி
கொண்ட எண்ணத்தைநாடி-அரிச்சந்திரன்
கொள்கை முடியவே

ஈர்ந்திட்ட கர்ச்சைதக்கே இறைவன்பெருமைசெப்பி
வணங்கச்செய்தேவிவாகம் இலக்ஷணம்முடித்திட (அந்த)

மதிதயராஜன் போற்றி விருத்தம்.

ஆதியாம்பரத்தைநாளும் அறிவுடன்உணர்ந்தசில
வேதியமாமேதங்கள் மெய்யடிபோற்றிபோற்றி,

வசனம்.

போற்றிபோற்றி வேதியர்களேபோற்றி

யாத்திரைப்பிராமணன் விருத்தம்,

கன்னமாபுரியையாளும் கனமுளோய்ஆசீர்வாதம்
உன்னதமகனைப்பெற்ற வம்பனே ஆசீர்வாதம்
நன்னிலைகருமமெல்லாம் நயமுடன்முடிப்பாயப்பன்
சென்னியாறவாத்திவ்ய தீரனே ஆசீர்வாதம்

வசனம்,

ஆசீர்வாதம் மதிதயராஜனே நீர்கோரிய கோரிக்கைகள் தடையின்றிநிறைவேறுமப்பா ராஜனே,

மதிதயராஜன் விருத்தம்.

அருமறைநாலுமேவுதம் அனைத்தையுஞ்சொலுவதாக
பெருமையாயுணர்ந்தயாரும் பேணிடக்கீர்த்திபூண்ட
தருமமோர்நீர்நல்லாசம் தங்கிடுங்காரியமேதோ
திருமஞ்செய்தநல்விசேஷன் நெஞ்சதுகுளிரத்தானே.

வசனம்.

சுவாமிகளே நீங்கள் வாசஞ்செய்யும்படியான நாடெதுவோவிபரமாய்ச்சொல்லவேண்டியது சுவாமிகளே,

யாத்திரைப்பிராமணன் விருத்தம்,

வெந்தவெண்ணீசன்காசிப்பதி வெளியேவாழ்வோர்நாங்கள்
சொந்தமோக்ஷத்தின்யாத்திரை விரும்பியேகுமரிமட்டும்
சொந்தமேவளசிவ்ய விநோதக்ஷேத்திரங்கள்பார்த்தே
வேந்தனேவதியுங்காண வேண்டியிங்குற்றோம்வாழி

வசனம்.

கேளும் மதிராஜனே, நாங்களிருப்பது காப்பிலிதேசம் யாத்திரைவந்தோம் கன்னியாகுமரிமட்டும் உள்ளதிரு க்ஷேத்திரங்க

னும் தரிசித்துவந்தோம் உம்மையுங்கண்டுபோகஇங்குவந்தோம்மஹா ராஜனே,

மதிதயராஜன் விருத்தம்.

வேதத்திஞனுக்ககண்டு வேள்விசெய்விப்போரான
நாதனேநீங்களென்றன் நாட்டில்வந்ததுவேபாக்யம
எந்தகருமமநாடி யிங்குநீருற்றிரிந்தப்
பாதகனறியவேண்டிப் பகருவீர்பணிவினோடே

வசனம்,

சுவாமிகளே, நீங்கள் என்னுட்டில் வந்ததுவேமஹாபாக்கியம்தா ங்கள் வந்தகருத்தை தெரிவிக்கவேண்டும் வேதியரே,

யாத்திரைப்பிராமணன் விருத்தம்,

உன்மனமகிழவின்னின் உம்பரும்புகழ்கொண்டாடும்
நன்மையைநாடிவந்தே நாங்களும்வந்தோம்காண்பீர்

வசனம்,

ஏனும் மஹாராஜனே தேவர்களும் மானிடர்களும் நீரும் மகிழு ம்படியான வொருசுபகாரியத்தை நாடிவந்தோம் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்,

அப்படியா வெகுசந்தோஷம் வேதியர்களே,

மதிதயராஜன் விருத்தம,

எங்கெங்குசென்றீர்ங்கள் எந்ததுகண்டீரையா
அங்குளஅதிசயத்தை அடியனுக்குரைசெய்வீரே

வசனம்.

சுவாமிகளே நீங்கள் எந்தெந்தேசங்கள் பார்த்தீர்கள் அங்கேயே தாகிலும் அதிசயங்களைக் கண்டிருந்தாலெனக்குச் சொல்லவேண்டும் வேதியர்களே,

யாத்திரைப்பிராமணன் விருத்தம்,

அதிசயமொன்றுகண்டோம அயோத்தியையாளுமந்த
மதிகுலமுடையவேந்தன மன்னவர்மன்னனான
விதிநெறியரிச்சந்த்ரன்றன் செறிபுளசத்யங்கண்டே
மதிதயாவுனக்கேசொல்லி மகிழவேசெய்யவந்தோம

வசனம்.

ஏனும மஹாராஜனே நாங்கள்கண்டதில் அயோத்தியையாளும் அரிச்சந்திரன் அருந்தும் சத்தியமும் நீதியும் நெறியும் கண்டோம அவ னையுனக்கே மகிமைதரச்செய்யவேண்டி வந்தோம் அரசே,

மதிதயராஜன் விருத்தம்.

நல்லறிவுடையவேத நான்மறைதெரிந்தோரான
வல்லவர்நீங்களென்றன் மகளிடமனதிற்கேற்ற
நல்லவனாரோவெந்த நாட்டுளோன்நடக்கையாதோ
வல்லவாவெனக்குத்தோற்ற வகையுடனுரைசெய்வீரே.

வசனம்.

ஐயமாரே என்மகள் குணத்திற்கேற்ற புருஷனைக் கண்டோமென்கிறீர் அவனுடைய குணநிசயங்களைத்தெரிய விபரமாய்ச் சொல்லவேண்டும சுவாமிகளே,

யாத்திரைப்பிராமணர் விருத்தம்.

தினமுந்தன் குருவின்வார்த்தை சிதறாமல்நடக்குந்தீரன்
தனவந்தன் ரவிகுலத்தோன் தாரணிவேந்தர்வேந்தன்
மனமகிழ்ந்தூதும்வாதும் மருவாமல்நீக்கிவாழ்வோன்
உனதருமகளுக்கேற்ற வுத்தமபுருஷன்காண்பாய்.

வசனம்.

கேளும் மஹாராஜனே உத்தமன்சத்தியவான் குருவிசுவாசன் சக்கிரேஸ்வரன் உன்மகளுக்கு அவனே தகுந்தபுருஷன்கண்டாய்வேந்தனே.

மதிதயராஜன் விருத்தம்.

பொங்கமாங்கீர்த்தியுள்ளோன் பொய்யுரையாதமெய்யன்
துங்கவனமுகில்மாரன் தூய்மைகொள்வீரன்சூரன்
மங்களமுடையவென்றன் மகளுக்கேதகுந்தோனென்றீர்
சங்கரனுடையசூக்ஷும் தானுணர்பவனோசொல்வீர்

வசனம்.

சுவாமிகளே, அழகன்சத்தியன்வீரன்என்றும்என்மகளுக்குத்தகுந்தவனென்றும் சொன்னீர்கள் சங்கரனைச்சந்திரவதியிடம் விளங்கும்ரகசியத்தைக்கண்டு சொல்லுவனோ ஐயமாரே,

யாத்திரைப்பிராமணர் விருத்தம்,

ஜெகமதுமதிக்கக்கீர்த்தி தான்பெற்றராஜேகேளாய்
அகமதுமகிழஐயன் அனுக்கிரகம்புரிவான்கண்டாய்
மகளையேவிவாகஞ்செய்ய மணவாளனவனேயாகும்
இகபரமகிழசூக்ஷும் இனிதுடனுரைப்பான்வேந்தே,

வசனம்.

கேளாய் அரசே, அந்த அரிச்சந்திரன் உனக்கே மருமகனாகும்படி பரமசிவன் நன்செய்வார். நீயொன்றுக்கும் யோசிக்காமலிருப்பாய் வேந்தனே.

மதிதயராஜன் விருத்தம்.

திடமுடசொன்னீர்ந்த திருசகைகுமைந்தன்தானும்
தி-முடமருமகனுகச் சிகருப்வாறெதுவோசுவாமி.

வசனம்,

சுவாமிகளே, அந்தஅரிச்சந்திரன்எனக்கு மருமகனுகும்படியான வகையறியேன் வேதியர்களே.

யாத்திரைப்பிராமணுள் விருத்தம்,

வேந்தனேயெங்கள்வார்த்தை வெகுவாகநம்பினீர்தான்
வேந்தனே அரசாக்கெலலாம் விரைவினில்மணத்தின்ஓலை
வேந்தனே யளிப்பாயந்த வீரனும்அயோத்திமன்னன்
வேந்தனேவருகநாங்கள் வேண்டியவாறுசெய்வோம்.

வசனம்.

கேளும்ராஜனே, சந்திரவதிக்கி சுயம்வரமென்றுராஜராஜ மக்களுக்கும் மணவோலையனுப்புவாய் அந்தஅரிச்சந்திரமஹாராஜன் இங்கே வரவேண்டிய முயற்சிசெய்ய நாஙகள் போய்வருகிறேம் வேந்தே.

மதிகயராஜன் விருத்தம்.

ஐயரேயுங்கள்வார்த்தை அடியேனுந்தடுக்கமாட்டேன்
ஐயரேசுயம்வரமென் றவனியில்முரசடிப்பேன்
ஐயரேஅரிச்சந்திரன்தான் அடியேன்தன்மருகனுக
ஐயரேசெய்வீருங்கள் அடிபணிந்திட்டேன்போற்றி

வசனம்,

சுவாமிகளே தங்கள்கருத்தின்படி சுயம்வரம்சாட்டு கின்றேன் அந்தே அரிச்சந்திரமஹாராஜன் எனக்கு மருமகனுகும்படிக்கி தாங்கள்வேண்டிய பிரயத்தனஞ்செயது காப்பாற்றுமபடி போற்றி செய்கின்றேன் போய்வருவீர் வேந்தர்களே.

யாத்திரைப்பிராமணுள் வசனம்,


அப்படியேசெய்விக்கின்றேம் போய்வருகின்றேம்சுபம்சுபம்வேந்தனே

பொது-விருத்தம்.

மதிதயன்சபையிற்கேட்ட வாரெலாமுரைக்கவேண்டி
அதிமகிழ்வுடனேதோழி அரசிமுன்போன் றவாளே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களேமதிதயராஜன்முன்னடந்த சங்கதிகளை சந்திரவதிக்கித்தெரிவிக்க தோழிகள் வருகிறவிதம் காண்பீர்களாக ஊாம்தமினை.



முன்நடந்த சங்கதிகளைத் தோழிகள்
சந்திரவதிக்குத்தெரிவிக்கிறபாகம.

தோழி விருத்தம்.

மங்கையர்க்கரசேபோற்றி மாமயிலொளியே போற்றி
சங்கையில்லாத்தவத்தால் தானுதித்தவளேபோற்றி
எங்களாண்டவன்மகிழுமாதே யின்றமேதார்மாதேபோற்றி
தங்கத்தைப்பழிக்குஞ்சோதி சந்திரவதியேபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி யெனதுராஜாத்தியாகிய சந்திரவதித்தாயேயின்னடிக்கே போற்றிபோற்றி.

சந்திரவதி-விருத்தம்.

களிப்புறவெனதுநெஞ்சங் கனிவுளவார்த்தைசொல்லும்
விளிப்பெருமுன்னையினுளே மெல்லிநீயெங்குசென்றுய
துளித்திடுமழகைப்போன்ற சவுந்தரவல்லியுன்றன்
சலிப்பென்னவெனக்குத்தோற்ற சாற்றுவாய்சாற்றுவாயே.

வசனம்.

அம்மாதோழி, நீ யெங்குபோயிருந்தாய் உனக்கென்ன மனக்குறை பயமின்றி சொல்லுவாயம்மா.

தோழி-விருத்தம்.

அம்மணிநீதான்கொண்ட அழகுநற்குணத்துக்கேற்ற
அம்மணிமன்னாமன்னர் அன்புடன்வந்தேவுன்னை
அம்மணிமாலைசூட்டும் அதிசயக்காலமிப்போ
அம்மணிவாய்க்கக்கேட்டேன் அறிவிக்கவந்தேன்தாயே.

வசனம்.

கேளாய் அம்மா சந்திரவதி மன்னர்க்கெல்லாம் மன்னவர்வந்து உன்னைக்கலியாணம் செய்யப்போகிற சங்கதிகேட்டுத் தெரிவிக்க வந்தேன் தாயே,

சந்திரவதி விருத்தம்.

என்னடிதோழிசொன்னுய் இன்னமோர்தரமுரைப்பாய்
மன்னவன்தனைத்தால்வந்து வாய்த்ததுபருவந்தானும்
இன்னகர்தனிலேவாழு மிளங்கையர்போலநானும்
நன்மைபாயிருக்கதெய்வ நாடுயோவுரைசெய்வாயே.

வசனம்,

அடி அம்மாதோழி நானும்நானுநாட்டுப்பெண்களைப்போல காப்பட்டகடவுளருளுண்டாகுமா சொல்லடிபாங்கி.

தோழி அகலவ்.

சந்தோஷமாகவே சாற்றுகேளரசியே
உந்தனற்றாயும் உசந்தமந்திரிகளும

சித்திரச்சாவடி செழுங்கொலுமண்டபம்
நத்தியேவிசாரணை நடாத்திடுமவேளையில
தேசசஞ்சாரத் தேசிகவேதியர்
வாசவன்கொலுமுன் வந்துமேகண்டனர்
அரசனுமவர்க்கே ஆசனமளித்து
பாமரமேயெங்கெங்கு பற்றினீரங்குள
அதிசயம்யாது அடியேனும்மகிழ்ப்பெற
பகிகளேயிக்கணம் பன்னுவீரெனவே
அந்தணர்மகிழ்ந்தே அறைந்தனரம்மா
சந்திரனைப்பழிக்குந் தனித்திருமுகமும்
மன்மதன்நாணும் வதனமும்அழகும்
சன்மார்க்கஒழுக்கமும் சத்தியநிலைமையும்
வேதவிளக்கமும் வெண்கிரியோன்மகிழ்
சாதனைநிஷ்டையும் தன்மொழிபிசகா
வீரமும்வெற்றியும் வேந்தருக்கடுத்த
சாரமாம்நீதியில் தனைவிடவேறு
மன்னரில்லையென வாழ்த்திடச்செங்கோல்
உன்னதமாகவே உயிர்களைக்காக்கும
அரசனுமயோத்தி ஆதித்தன்பரமன்
சரசவுல்லாசன் தாஷ்டீகசூரன்
திரிசங்களித்த செல்வனுமுணர்வாய்
அரிச்சந்திரனவன்பேர் அண்ணலேசண்டோம்
மனதுமகிழ்ந்தே மன்னவர்அங்ஙனே
நினைவதையுன்மேல் நிருத்தியேவந்நேரம்
உன்தவப்பத்திரி உயர்சந்திரவதிக்கே
நண்புளபக்குவம் நண்ணியத்தாலே
சந்திரவதியின் சற்குணஒழுக்கமும்
சுந்தரவடிவமும் சொரூபநடக்கையும்
கண்டவராதலால் கடிகியிங்குற்றோம்
மண்டலாதிபனை மருமகனாய்க்கொள்வாய்
என்னவேவேதியர் எந்தையுமகிழ்ந்தே
சொன்னதுசரியே சுந்தரமகளை
மணஞ்செய்து அவரும் வருவரோ அன்றி
இனம்வேறுண்டோ வெப்படியாகுமோ
என்மகள்கவலை என்றுமீடேறுமோ
நன்மையாம்வாக்கதை நல்குவீரென்றிட
ஒன்றுக்குநீர்தான் யோசிக்கப்போகா
நன்றுநீர்சுயம்வரம் நாட்டுவீர்நாங்களும்

அயோத்தியையடைந்தே அரசனையிங்கே
அயோத்தியாய்வருக தான்புரிவோமென
விந்தையாயுரைத்தே விரைவினில்வந்த
அந்தணர்சென்றனர் அமமணிபோற்றி.

சந்திரவதி-விருத்தம்

பாங்கியேநீதானிப்போ பகர்ந்தஓர்மன்னமன்னன்
பாங்கியேகுணவானென்ற பக்ஷமாய்மறையோர்வந்து.
பாங்கியேவுரைத்தாரென்றுப் பண்புளோன்மகிமைதன்னை
பாங்கியேயெனக்குத்தோற்ற பற்றவுரைசெய்வாயே

வசனம்,

அடிதோழி அந்தவேதியர் சொலலிப்போனதாக நீயிப்பொழுது செப்பியஅரிசரின அழகும் பெருமையும் எனக்குத் தெரியப்படச்சொல்வாய்பாங்கி.

தோழி-தரு-இ-ர்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அந்தஅரிச்சந்திரன் அழகைப்படித்துச்சொல்ல
ஆதிசேஷன்தான் வேண்டும் என்தாயே.

அநுபல்லவி.

கந்தமலரோன்என்ன கருதிப்படைத்தானோதான்
கதிர்குளம்விளங்கிட காவலனுயுதித்த (அந்)

சரணங்கள்.

கோடிமதிகளொளாருய்க் குவிந்தமலர்முகமும்
கோர்வைமுதவைதப்பழிக்கும் தந்தம்நாசியோவெங்கும்
தேடிக்குமிழைமாற்றும் திருநுதல்மூன்றுநாள்
திங்கள்வடிவைப்போக்கும் செல்விநீகூடம்போகும்(அந்)

இருபுஜகிரியென என்றுளோர்நடங்கிட
எடுத்தவில்மாறுமல் ஏவுநாசணையில்சூரன்
மருவவேமன்மதன்கெர்வம் மடங்கச்சல்லாபநாலே
வாசித்தோழினைக்கூடி மருவவேவருகின்ற(அந்)

வேதமறையுணர்ந்தோன் வித்தகன்திருத்தாளே
விளங்கிடஅநுதினம் உளமிருத்தய்யான்
பாதகமென்பதைப் பற்றறவிடுத்தவன்
பாவையேயுன்றனைத் தாவியணையவரும்(அந்)

சத்தியமென்பதைத் தாணியில்நிலையாக
சார்ந்திடதருமத்தை தானேயேற்றிடுஞ்சீலன்

நித்தியகருமத்தில் நிபுணனே சந்திரவதி
நீசெய்தபாக்கியம் நேர்மையாருக்குமுண்டோ (அக்)

சந்திரவதி-விருத்தம்.

கனிபலாவாழைதேனும் கற்கண்டிற்கதிகமான
இனிவுளவார்த்தைபேசும் என்னிடசகியேகேளாய்
தனிமையிலுயர்ந்தஅந்த தயாபரனரிச்சந்திரன் தான்
பனிபோலென்துயரமதீர்க்கப் பார்ப்பனோபன்னுவாயே,

வசனம்.

அடிஅம்மாதோழி, யென்னுடையகவலை சூரியனைக் கண்டபனி போல்நீக்க அந்த அரிச்சந்திமகாராஜன் வருவாரோ சொல்லுவாயடி பாக்கியே

தோழி விருத்தம்.

அந்தணருரைத்துப்போன அன்புள்ளமொழியினாளே
சந்திரவதியேயந்த தயாபரன்வருவரென்றே
உந்தனின்மனதிலமெத்த வுறுதியைநாட்டுந்தாயே
சுந்தரனருளினாலே சுகமது அடைவாய்அம்மா.

வசனம்,

கேளாய் அம்மா சந்திரவதி வேதியர்சொல்லிப்போனவுறுதிவாக்கிற்குப் பிசகுவராது உன்கோரிக்கை யீடேறும்படி சிவன் கிருபை செய்வான்தாயே.

சந்திரவதி-விருத்தம்.

தோழிநீசொல்லக்கேளாய் சுந்தரனருளினாலே
தோழிநான்பிறந்தேதிவ்ய சொகுசுறுமபருவங்கணடேன்
தோழிநான்வாடுமெண்ணம் துலைந்திடகைலைவாசன்
தோழிதானருள்செய்வானோ சொலனுவாய்தோன்றத்தானே.

வசனம்,

அடிதோழி, யெனக்குப்பருவம்வாய்த்து நான்படும்படியான துன்பம நீங்கக் கடவுளருள் வருமோ சொல்லடி அம்மா.

சந்திரவதி-தரு-இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஒருநொடியுகம்போல இருக்கையிதோதென்றல்
வருகுதென்னடி செய்குவேன்.

அநுபல்லவி.

அருமையென்துரைமான் அரிச்சந்திரன் இங்குவர
அன்னமேநான்கொண்ட வெண்ணமுடியுமட்டும் (ஒ)

சரணங்கள்.

மெய்யுஞ்சோருதலென்றன் கையும்இடை தளர்ந்து
அய்யம்போலென் குஜங்கள் நொய்யுதடி மாதே
செய்யும்வகைகளொன்றும் தெரியாமல்நானிருக்க
தையலேமதன்பாவி தான்புரிவகைக்காளாய் (௪)

அன்னம்அருந்தமனம் எண்ணமும்விட்டதாலே
சொன்னமபோலொத்தமேனி வண்ணங்குன்றிடலாகி
என்னென்னமோமனதில் எக்கங்களாதையோ
அன்னமேவிரகமீறி ஆளன்வரவைப்பார்த்தே (௫)

பாடுங்கிள்ளைமொழியும் ஆடும்அன்னநடையும்
நாடுங்கபைமலர் தேடிமெண்ணமுமவிட்டேன்
ஓடுதேயென்றன்மனம் ஓகோயெண்ணுதுமெண்ணி
வாடுதேஅரிச்சந்திரன் வருவானென்றேயோசித்து (௬)

மதிதயராஜன் விருத்தம்.

பழுதது அரியாதிவ்விய பண்புளமந்திரிகேளாய்
மழுவதைத்தரித்தோனீந்த மகள்சந்திரவதிக்கேஇங்கே
பொழுததுபோக்கிடாமல் பூமணவோலைதன்னை
யெழுதராயசனேநீயும் இக்ஷணம்வரச்செய்வாயே.

வசனம்.

அப்பா மந்திரி, சந்திரவதிக்குத் திருக்கலியாணமென்று ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் மணவோலையெழுத எடுதியில் ராயசனைவரவழைப்பாய் மந்திரி

மந்திரி வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் வேந்தனே.

மந்திரி-விருத்தம்.

ஆடகட்டியக்காரா அரைநொடிதனிலேசென்று
திறனுமதமதராஜன் திவ்வியமகள்தனக்கே
சிறதாய்மணம்நடத்தும் சேதியையறியமன்னர்
காரணமெழுதராயசக் காரனையழைப்பிப்பாயே.

வசனம்,

கேளுமபிள்ளாய் கட்டியனே நமதுராஜன்மகளாகிய சந்திரவதியம்மனுக்கு சுயம்வரமென்று மணஓலையெழுதராயசக்காரனையழைத்துவாராயப்பா.

கட்டியக்காரன் வசனம்.

ஐயா ராயசக்காரரே அரசன் உம்மை சீக்கிரத்தில் அழைத்துவரச்சொன்னாரையா.

இராயசக்காரன் வசனம்,

இதோ அப்படியே வருகின்றேன் அப்பாகட்டியனே.



மதிதயராஜனிடத்தில் இராயசக்காரன் வருகிறபாகம்.

இராயசக்காரன்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இராயசக்காரன்வந்தான் வந்தானிதோ ராயசக்காரன்வந்தான்

அநுபல்லவி.

நியாயமதைஅறிந்து உபாயமாய்மொழிசேர்த்து
நாடிநினைவதை ஏடதிலெழுதிடும்(இரா)

சரணங்கள்.

தலையில்பாகையுங் கட்டியே-அரைதனிலே
தனுச்சரிகையுள்ள வேட்டியே
சலையிலா அங்கியு மாட்டியே-கண்டவரோட
வேண்டிக்கைக்கோ நீட்டியே
கலைமகளருளினால் கணக்கில்நுணுக்கங்கற்றே
கருதிமதிதயேந்திரன் கனக்கொலுமுகமுற்றே (இ)

இராயசக்காரன் வசனம்.

ஜெகதலம்புகழ தேவரும்மகிழ
மகதலக்கன்னியை வளமிகுத்திடவே
யுகம்பலவுத்தி உரைத்திடச்செங்கோல்
அகத்துளேபுரியும அண்ணலேபோற்றி.

வசனம்,

போற்றிபோற்றி மகாராசனே போற்றி.

இராயசக்காரன் விருத்தம்.

மன்னனேஎன்னை வரவழைத்திட்ட
தென்னகாரணமோ இயம்புவீர்போற்றி.

வசனம்.

அடியேனைவரவழைத்தகாரியம் இன்னதென்று தெரியச்சொல்வீர்கள் மஹாராசனே.

மதிதயராஜன் விருத்தம்.

சீர்மைபெறுமைம்பத்தாறு தேசத்திலுள்ளஎன்றன்
பேர்பெறுமமைச்சார்ந்த பிரபலமன்னருக்கு
கார்முகில்குழலாளானகன்னிசந்திரவதிக்குத்
சோர்விலாச்சுயம்வரந்தான் சூட்டவென்றறிவிப்பாயே.

வசனம்.

அப்பாராயசனே எனது புத்திரியாகிய சந்திரவதிக்கு நாளைவரு மசித்திரைமாதம்பதினைந்தாயதேதிபுதவாரம் சுயம்வரஞ் சூட்டவென்

றறிய சகலதேச ராஜர்களுக்கு மணவோலை யெழுதும் பிள்ளாய் ராயசனே.

இராயசக்காரன் வசனம்.

மகாபாக்கியம் அப்படியேயெழுதுகின்றேன் ஆண்டவனே

இராயசக்காரன் வசனம்.

தாங்கள் ஆக்கியாபித்தபடிக்கே யெழுதினேன்மகாராஜனே.

மந்திரயராஜன் வசனம்.

எந்தெந்ததேசத்திற்கு எழுதினாய் சொல்லும்பிள்ளாய்

இராயசக்காரன் வசனம்,

மகாபாக்கியம் அப்படியேசொல்லுகிறேன் சுவாமி.

இராயசக்காரன் விருத்தம்

அங்கதுடகம்மச்ச காம்போஜஆந்திரம்
அயோத்மபாஞ்சால மகதம
வங்கம்வங்காளமா ளவகுருகுபல்லவம்
மலைபாளசூரசேனம்
கொங்கணம்கூர்ச்சயம் கேகயம்கேரளம்
கொல்லகோசலசாலவம்
தெங்கணம்பப்ரம் நேபாளம்குந்தளம்
சீனசவ்வீரகருசம்
சிங்களம்சோனகம் துறுவசிடதம்சிந்து
திராவிடம்போடஅருணம்
பொங்குபாண்டியசோழ காந்தாரகன்னட
புலிந்தமாராடகாசம்
துங்கமுறுகன்னடம் கிராடகாஸ்மீரகுரு
தேசரசரியாவருக்கும்
சங்கமகிழ்மணவோலை யெழுதினேனுத்தரவு
தந்திடிலனுப்புவேனே.

வசனம்.

இந்ததேசத்தின் ராஜாக்களுக்கெல்லாம் ஓலையெழுதினேன் உத்தரவானால் அனுப்புகிறேன்வேந்தே.

மந்திரயராஜன் விருத்தம்.

எழுதியவோலையைப் பழுதறவெண்ணியே
தொழுதிடும்ராயசா கழறுவாதெனக்கே.

வசனம்.

கேளாய்ராசனே, நீயெழுதியவோலையை நான்கேட்க வாசியும் பிள்ளாய்.

இராயசக்காரன் வசனம்.

அப்படியே வாசிக்கின்றேன் மகாராசனே.

இராயசக்காரன் விருத்தம்.

மகாராஜ கெம்பீர மகாராஜஸ்ரீ
மன்னாதிமன்னர் சமூகம்
வந்தனந்தந்தாயிக சிந்தைகள் கூர்ந்துநான்
வரவிப்பதியாதென்னிலோ
யுகமாதிதன்னிலே மனுவசதிமார்பினில்
உதித்தரவி மரபடைந்து
உளமதில்யாவரும் புகழ்தரச்செங்கோலை
யூர்ஜித்து கன்னிநாட்டை
அகமகிழ்ந்தாளுமதி தயனனைநான்னின்ற
அழகுபெறு சந்திரவதியை
அடுத்தமேஷம்நடுவில் புந்திவாரம்உச்சி
அதிர்ந்தபஞ்சமி நாளிலே
சகனமாளும்விருஷப லக்கினஞ்சுபபஞ்ச
கரணசுபயோகவனசி
காலத்தில்குருவோரை மணமாலைசூட்டவே
கரிதித்தில்முறை சாட்டினேன்
ஜெகம்புகழ்வீரியம் தேஜசும்உடையபார்
திரள்பர்ந்த தளசகிதராய்
திருஷ்டிக்கதென்சோரிக்கை யீடேற்றவிமெனச்
செய்யுமவிண்ணப்பமிதுவே.

மந்திரயராஜன் விருத்தம்.

மந்திரிகேளாயிந்த மணவோலைதன்னையெல்லாம்
சுந்தரமுடையராஜர் சமூகத்தாயறிவதாக
சந்தனுப்பிடவேவேண்டும் தாமதஞ்செய்யொண்ணாது
விந்தமாம்பகதனுந்தான் விரைவினிலமுடிப்பிப்பாயே.

வசனம்,

கேளாய்மந்திரி ராஜாக்கள்சந்திரவதியின் மணமாலை சூட்டலைதி வரத்தில் அறிந்துவரும்படிக்கி இந்தஓலைகளை அனுப்பிவிடுவாய் மணப்பந்தலும், சித்தஞ்செய்குவாய் மந்திரி.

மந்திரி விருத்தம்.

கேட்டீரோராஜராஜமாமே சித்தித்திடவேயுபூரி
நாட்டமுடனடைந்து நெடுநொடிக்கிலேசென்று

நாட்டமாயரசர்கட்கே நயப்புடன்வோலையிந்து
வாட்டமில்லாமலிக்கு வருகுவீர் வருகுவீரே.

வசனம்.

கேளுங்கள்தூதரே, தேசதேசராஜாக்களுக்கு இந்த மணவோலையைக்கொடுத்து சீக்கிரம் வருவீர்களப்பா தூதர்களே.

தூதர் வசனம்.

புத்தி அப்படியே கொடுத்துவருகிறோம் சுவாமி.

மந்திரி விருத்தம்.

ஜாலஞ்செய்யாமற்கட்டியா ஜகதலத்தள்ளசால
சிலமாம்வேலைசெய்யுஞ் சிற்பிகள்தனையழைத்தே
கோயிமாய்நமதுசந்திர குணவதிமணதிற்காக
சாலவேமண்டபத்தைச் சதிருடன்முடிப்பிப்பாயே,

வசனம்,

கேளு பிள்ளாய் கட்டியனே, நமதுநாட்டிலுள்ள சகலசிற்பிகளையும் அழைப்பித்து சந்திரவதிஅம்மன் கலியாணத்திற்காக ஒருதிவ்வியமண்டபம்முடிக்கச்செய்வாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியே செய்விக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன் விருத்தம்.

மன்னனின்னருள்படிக்கே உன்னதமாகநீங்கள்
சொன்னதோர்மண்டபந்தான் மன்னியேமுடிந்ததைபா

வசனம்.

கேளும் சுவாமிமந்திரியே, தாங்கள் உத்தரவுசெய்த பிரகாரம் கலியாணமண்டபம் முடிவுசெயதேன் ஐயா.

பொது விருத்தம்.

சன்னமாபுரியையாளுந் காவலன்மகிழ்ந்தேபெற்ற
வன்னமாமகள்தனக்கே மணமெனவோலையொன்று
சொன்னமாம்பசுமைகொண்டே ஜொலித்திட அரிச்சந்திரன்முன்
மன்னவன்விடுத்ததூதன் வணங்கியேயளித்திடானே.


வசனம்.

கேளுங்கள்சபையோர்களே, மதிதயராசன் விடுத்ததூதன்வணங்கிசந்திரவதி மணத்தின் ஓலை அரிச்சந்திரமகாராசன் சமுகங்கொடுத்தனனென்றறிவீர்கள கனவான்களே.

அரிச்சந்திரன் விருத்தம்.

பார்த்தையோமந்திரியென்றன் பாக்கியமேபாக்கியமாகும்
சாத்திரிமார்கள்வாக்கு சடுதியில்முடிவதாக

சந்திரவதிக்குகலியாணமண்டபம் முடிப்பிக்கிறபாகம்



நேர்த்தியாய்மனத்தின்ஓலை நெறியுடன்வந்ததாலே
சாத்தியமாய்ப்போகவேணும் தளமதைச்சேர்த்திடாயே.

வசனம்,

அப்பாமந்திரி, வேதியர்கள் சொல்லிப்போன காரியம் முடிவானதுபோலக் காணுகின்றது சந்திரவதிக்குசுபய்வமென்றுதிருமணப் பத்திரிகை மதிதயராசன் அனுப்பியிருக்கிறான் நான்போக வேண்டும் தள்முதலானவைகளை சித்தஞ்செய்விப்பாய் மந்திரி.

அரிச்சந்திரன் விருத்தம்.

என்மனக்கவலைநீங்கி யிருந்திடமதிதயன்தான்
நன்மையாயளித்ததிவ்ய நங்கைசந்திரவதிக்கே
இந்திலமதிக்கவேநீ ஈந்ததோர்ஓலைபார்த்தேன்
ஜென்மசாபல்லியமாச்சு செப்புவாயவர்க்குத்தானே.

வசனம்,

அப்பாதூதனே, நீகொண்டுவந்து கொடுத்த ஓலையை வாசித்து ஆனந்தபரவசனானேன் நீசுபம்வாழ்த்தி போய்வருவாய்தூதனே.

தூதர் வசனம்.

அப்படியே போய்வருகின்றோம் மஹாராசனே,

தூதன் விருத்தம்.

வேந்தனேபோற்றி விமலனேபோற்றி
சாந்தனேஉன்றன் தாளடிபோற்றி

வசனம்.

போற்றிபோற்றி மதிதயமஹாராசனே போற்றி.

மதிதயராஜன் விருத்தம்.

எங்கெங்குநீதான்சென்றாய் எவரெவர்க்கோலையீந்தாய்
அங்குள்ளமன்னர்சொன்ன அதிசயவார்த்தையாது
பொங்குளஅரிச்சந்திரன்பால் போனையோகண்டாயோதான்
இங்ஙனேமனங்களிக்க இயம்புவாயியம்புவாயே.

வசனம்,

அடா தூதனே, யெந்தெந்த இராஜாக்களுக்கு மணவோலைகள் கொடுத்தாய் அங்குநீகேட்ட அதிசயவார்த்தைகளென்ன அரிச்சந்திர மஹாராஜனிடம போயிருந்தையா எனக்குத் தெரியச்சொல்லும் பிள்ளாய் தூதனே.

தூதன் விருத்தம்.

தேசதேசாதிமன்னர் செங்கோல்முன்னாஞ்சென்று
தாசனுப்பின்றேஓலை சாதித்தேன்கைக்கொண்டார்கள்

வாசநல்மலரணிந்த மன்னவனயோத்திவேந்தன்
ஆசையாய்வாங்கிக்கொண்ட ஆனந்தமென்சொல்வேனே.

வசனம்.

கேளும் ஆண்டவனே, யெல்லாராஜாக்களும் நான்பணிந்து கொடுத்த ஓலையைவாங்கிக்கொண்டார்கள் ஆனால் அரிச்சந்திரமஹாராஜன் மாத்திரம் மணவோலையை வாங்கிப்பார்த்தவுடன் கொண்ட ஆனந்தத்தை சொல்ல என்னொரு நாவாலாகாது வேந்தனே,

மதிதயராஜன் விருத்தம.

மந்திரிதூதர்தாமும் மனமதுகளிக்கநீதான்
தந்துமேபொன்பட்டாடை சடுதியிலனுப்புவாயே.

வசனம்,

அப்பா மந்திரி. இந்ததூதர்களின் மனங்களிக்க நல்லவெகுமதி கொடுத்தனுப்புவாய் மந்திரி.

மந்திரி வசனம்,

அப்படியே யிதோ கொடுத்தனுப்புகிறேன் சுவாமி,

மந்திரி வசனம.

அடா தூதுவர்களோ இந்த பொன்பட்டாடை வாங்கிக் கொள்ளுங்களப்பா.

கட்டியக்காரன் விருத்தம்.

அரசன்முன்னடந்தசர்வ அனைத்தையுங்கேட்டதோழி
வரிசையாய்மாதுசந்திர வதிக்குரைசெய்குவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே. மதிதயராஜன் கொலுவில் நடந்த சங்கதிகளைக் கேட்டிருந்த தோழிஓடிவந்து சந்திரவதிக்குச் சொல்லுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தோழி-விருத்தம்.

கற்பினிலுநேர்ந்ததிவ்ய கனசந்திரவதியேபோற்றி
நற்குணமுடையமென்றன் நாயகியேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி யென்ராஜாத்தியே போற்றி.


சந்திரவதி விருத்தம.

ஏதடிமாதேநீதான் எங்குற்றுவந்தாயிப்போ
ஓதடிநானுங்கேட்க ஒளிக்காமல்நடந்தவாறு
வாதடிகாமன்செய்யு வாதையினுலுருகுகின்றேன்
போதடியென்றனெஞ்சம் புனிதமாவாறுசொல்வாய்,

மதிசயராஜன் கொலுவிலடங்க
சமர்ச்சாரங்களை



சந்திரவதிக்கு தோழிகள்
தெரிவிக்கிறபாகம்.



வசனம்.

அம்மாசவுந்தரவல்லி நீ யெங்குபோயிருந்தாய் என்ன விசேஷங் கேழ்விப்பட்டாய் தெரியப்படச் சொல்லடிபாங்கி.

தோழி விருத்தம்.

தாயேநீகேளாயுன்ற தந்தையுன்சுயம்வரத்தை
நேயமாய்முரசுசாட்டி நீணிலத்தரசர்க்கெல்லாம்
பாய்வேகதூதர்கையால் மணவோலையனுப்பக்கண்டு
காய்முங்களித்தயோத்தி காசிபன்மகிழ்ந்தான்கண்டாய்

வசனம்.

கேளும் அம்மா சந்திரவதியே உனக்குத் திருக்கல்யாணமென்று மணவோலை அரசனனுப்பக்கண்ட அரிச்சந்திரமகாராசன் மெத்த சந்தோஷப்பட்டாராங் தெரிகுவாயம்மணி.

சந்திரவதி அகவல்.

என்னடிதோழி யேதுநீபுகன்றாய்
அன்னமேஅயோத்தி அரசருமிங்கு
வருவரோஎன்னை மணர்வரோயின்பந்
தருவரோவுரைப்பாய் சத்தியமாய்நீ
சொல்லடிமகிழ்வறச் சொகுசுளமணியே
கில்லடியென்பரம் நினைவதுமுடிய
காலமும்வருமோ கருத்துக்கிசைந்த
லோலரும்வருவரோ நுகருவாய்பாங்கி
போவதுயேனைப் புத்தியில்மதித்தே
சாவதானமதாய்தடையதுபுரிந்திடில்
என்னடிசெய்குவேன் என்னுயிர்த்தோழி
பன்னடிதெரியப் பண்புடநீதான்
அரசருக்கென்போல ஆனவரெத்தனை
அரசிபாநண்டோ அருகிலேயொன்றன்
மோகம்பொல்லாது முடிவறியேன்மனத்
தாகம்நில்லாதே சகிப்பதெப்படியோ
கருத்துக்கிசைந்த கன்னிகையெனவே
உரைத்தனுனக்கே வுயிர்த்துணையானே

தோழி விருத்தம்.

சந்தேகம்விடுவாயென்றன் தாய்சந்திரவதிநீகொண்ட
விந்தையாங்கருத்திடேற வேண்டியவ்வரசனிங்கே
வந்திடுவார்நான்கண்ட வகையுளகனவிதுலே
உந்தனுக்குரைத்தேன்நீதான் உறுதியெனறுணர்வாயம்மா.

வசனம்,

கேளுமம்மா நான்கண்டகனவு பொய்க்காது நீ கோரிய புருஷனே உன்னைக்கூடிலார் தைரியத்துடனிருப்பாய் தாயே.

சுந்திரவதி-விருத்தம்.

நல்லதுகண்ணே சொல்லியவாறு
வல்லவன்வந்தால் அல்லவோமகிழ்வேன்,

வசனம்.

அடிதோழி, நீ சொல்லியபடி அவர் வந்தகாலத்தி லல்லவோ நான்மகிழ்வேன் சவுந்தரவல்லி,

தோழிவசனம்.

அகத்தியம் வருவாரம்மா நீ சந்தோஷமாயிருப்பாய்தாயே.

பொது விருத்தம்.

மதிதயனிடத்திற்சென்று மகிழ்வுடன்வார்த்தையாடி
கதிகொண்டகருத்தீடேற்றி கருதியேஅயோத்தியென்னும்
பதிதனையாளும்வேந்தன் பக்கலைநாடிதிவ்விய
நிதிதனைக்கண்டஅந்த நம்பிகளிதோவாராரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே மதிதயராஜனைக்கண்டு பேசிய சங்கதிகளை அரிச்சந்திரமஹாராஜனுக்குத் தெரிவிக்கவேண்டி யாத்திரைப்பிரமணுள் வருகின்றூர்கள் சபையோர்களே.

யாத்திரைப்பிராமணுள் விருத்தம்.

அண்ணலேஆசீர்வாதம் அரிச்சந்திரா ஆசீர்வாதம்
விண்ணவர்மதிக்கும்நீதி வேந்தனே ஆசிர்வாதம்

வசனம்,

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அரிச்சந்திர மஹாராஜனே ஆசீர்வாதம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அருமறைவேதம்நாலும் அங்கமாய்ப்பூண்டதிவ்விய
குருபரஜயமாரே கும்பிட்டேன்வருவீர்சுவாமி.

வசனம்.

வாரும் வாருஞ்சுவாமிகளே இந்த ஆசனத்தின்பேரில் எழுந்தருள்வீர்கள் ஐயமாரே.



அரிச்சந்திரமகாராஜனிடத்தில் யாத்திரைப்பிராமணன் வருகிறபாவம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மதிதயமகாராஜன் தன்னை வணங்கவே கண்டேனோ தான்
சதிபெண் கூடத்தக்க சம்பந்த முடித்திட்டேனோ
பரிகளே மணத்தின்மேலே பண்புடனனுப்பக்கொண்டேன்
கதிபெறு கன்னிதேசம் கடையின்பின் வருகுவீரே.

வசனம்.

சுவாமிகளே, தாங்கள் எனக்காக சம்பந்தம் பேசி முடித்தீர்களோ மதிதயராஜன் அனுப்பிய மணமாலை நான் கைக்கொண்டேன் என்னுடன் தாமகளும் கன்னமாபுரிக்கு வருகவேண்டும் வேதியர்களே.

யாத்திரைப்பிராமணர் விருத்தம்.

தருமமும்சத்தியமும் நீதி தண்மையும் நிறைந்தகல்வி
பொறுமையும் படைத்தயோக்கியர் பெற அரசுசெய்யும்
குருமொழி பிசகாமன்னு கொண்டவன் காதத்தீடேற
திருபனே சுயம்வரந்தான் நிகழ்த்தினன் மதிதயேந்திரன்.

வசனம்.

சேனும் அரிச்சந்திரமஹாராஜனே, நீ கொண்ட கருத்தீடேற சந்திரமதிக்கு சுயம்வரம் சாற்றினார் தெரிகுவாய் வேந்தனே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

அண்ணலே நீர் தான் சொன்ன ஆக்கினைப்படியே சேனை
வண்ணமாம் பரிகஜங்கள் வகையுள ரதமுஞ் சேர்த்தேன்
நண்ணியே கன்னிநாட்டை நாடியே யடைசசநேரம்
பண்ணுவதேதோ உன்றன் பாதமே போற்றி போற்றி.

வசனம்.

கேளும் மஹாராஜனே, தங்களுக்சாவின்படிக்கே ரதம் கஜம் பரி சேனைமுதல் சித்தஞ்செய்தேன் கன்னமாபுரிக்குப்போகத் தடைசெய்வதேதன் என் ஆண்டவனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே இப்போதே போகலாம் மந்திரி.

அரிச்சந்திரன் விருத்தம்.

அய்யனே அடியேன் கொண்ட ஆவலாய் நீங்கக்காலம்
வையமே வளர்ந்த சாலை பண்புடன் நீங்களெல்லாந்
துய்யமாங் கன்னிதேசந் தொடர் பொன் பின் ரதத்திலேறி
மெய்யரே வருவீர் போவேன் மெல்லியை மணாத்தானே,

வசனம்,

சுவாமிகளே, நான் சந்திரமதியைக் கலியாணஞ்செய்ய கன்னமாபுரிக்குப் போகின்றேன் தாங்களும் ரதத்தின்மேலேறி யென்கூட வருவீர்கள் சுவாமிகளே.



அரிச்சந்திரமகாராஜனும் யாத்திரைப்பிராமணனும் ரதம்ஏறிகன்னுமாபுரிக்குப்போகிறபாகம்.

யாத்திரைப்பிராமணாள் வசனம்

மஹாசந்தோஷம் அப்படியேவருகின்றோம் மஹாராஜனே.

அரிச்சந்திரன்-தரு-இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

போவோம்வருவீர் ஐயமாரே நாம் ஒருமையாய்ப்

அநுபல்லவி.

காவம்மதிதயன்றன் கன்னமாபுரிதேடி
கருதியவென்மனக் கவலைகள்நீங்க
பரிதியின்குலமது பண்புடனோங்க (போ)

சரணங்கள்.

இந்தவுடுப்பை அணிவீர் சுபங்கள்சொல்லி
யென்னுடன்ரதமேறுவீர்
கந்தமலரைத் தாவுவீர் வழியில்தோற்றும்
களைநீங்கச்சோலைபுகுவீர்
சந்ததம்புகழைப் பெறுவீர் என்னை
நன்னியனுக்கிய கன்னியவான்களே
உன்னியகருமத்தைபின்னிமைமுடித்திட. (போ)

அரிச்சந்திரன் விருத்தம்.

அண்ணலேயெனநதிவ்விய அந்தணமாரேயிந்த
நண்ணரும்பாலேதன்னில நான்கண்டேன்க்ஷேத்திரமொன்று
கண்ணதில்தோற்றதையா கண்டுநான்போற்றிவாரேன்
வண்ணமாம்ரதத்தின்மீதே மகிழ்வுடனிருந்திடீரே.

வசனம்.

ஐயமாரே, இந்தபாலேவனத்தில் யேதோவொரு திவ்விய சந்நிதா னந் தெரிகின்றது நான்போய் தரிசித்து வருகின்றேன, நீங்களிவ்விட மிருப்பீர்கள் வேதியர்களே.

பொர்து விருத்தம்.

அரசனுமறையோர்தன்பால் அனுமதிபெற்றேபாலே
சுரமதிலதோன்றுங்கிவ்விய சுந்தரிகோயில்புக்கி
காமதைக்குளித்தநின்றே கன்னியைவெகுவாறுக
சிரமதுவணங்கிப்போற்றி செய்துவான்செய்துவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, வருகிறவழியில் ஒரு திவ்விய கோ விலேக்கண்ட அரசன்பிராமணர்களை நிறுத்தி சந்நிதிக்கி தனியாய்வந்து அம்மனைப்பார்த்து துதிசெய்கிறவிதம் அறிவீர்கள் சபையோரே.

அரிச்சந்திரமகாராஜன் அம்மனைக்கண்டு தெரிசிக்கிற பாகம்.



அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தரிகபாலினீலி அபிராமசூரிவீரி
மந்தரிவாலைகௌரி மனோன்மணிமயிடன்றன்னை
சுந்தரிவதைத்ததேவி சொல்லொணுமுக்குணத்தி
இந்தநல்வனத்தில்தோன்றும் ஈஸ்வரியெனையாள்வாயே.

இதுவுமது.

காலனையுதைத்தோன்கூட கைலையில்வாழுந்தேவி
பாலனையளித்ததேவர் பட்டத்தைக்காத்தசூலி
சீலமாமதிநூலை செம்மலுக்களித்ததேவி
கோலம்நான்கொண்டவண்ணம் கூடிட அருள்வாய்போற்றி.

இதுவுமது.

சுடலையிற்சிலம்புபேச சுந்தரனுடனேயன்றி
படமுளநாகம்பாட பண்புடனடித்தசிலி
கடலுறுலோகம்வாழும் கனவுயிர்காக்கும்பாலி
சடலமுமுனதேயாகும் சாம்பவிஅருள்வாய்போற்றி.

பொதுவிருத்தம்.

தேவிமுன்னரசன்நின்று சிரசின்மேல்கரத்தைத்தூக்கி
ஆவியையுள்ளடக்கி அம்பிகைப்புகழைப்போற்றிக்
கூவியமுறையைக்கேட்டு கோமளிமனமகிழ்ந்தே
தாவியேஅரசன்முன்னே சாம்பவிதோன்றினளே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே, இந்தவிதமாக அரிச்சந்திர மஹாரா ஜன் வணங்கிநிற்க சாம்பவியும் பிரசன்னமாக வருகிறதிங்காணும் கள் கனவான்களே.

பராசக்தி-தரு-இ-ம-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

பராசத்திதோன்றினளே தானேதானய் பாலைவனந்தனிலே

அநுபல்லவி.

சராசரபுவனமும் தன்மயமாயிலங்க
சாம்பவிசிவரஞ்சக ளேத்தும்
பாம்பணி சூடாதரி (பரா

சரணங்கள்.

திருமுகம் சதுர்ப்புஜமும்அன்பர்கள்காண
திவ்வியசூலமுந் துலங்க

அரிச்சந்திரமகாராஜன் வணங்கிநிற்க சாம்பவி பிரசன்னமாகுதல்.



மந்திரி. அரிச்சந்திரமகாராஜன். கெந்திருவர். பராசத்தி.

ஜெகத்துள மற்றுதெய்வமும் அம்மைகையில்
சிக்கினல்மனங் கலங்க
அருண கிரணமணி
அணியம்பரி பூரணி
அம்பரி மனோன்மணி
அருளளிக்குங் காரணி
ஆட பூதங்கள்சுத்தி
நாட வுடுக்கைபாலம்
பாட சிலம்பொலிகள்
கூட சாந்தமாக
அம்ரீசம்ஸ்ரீம் ஆனந்தசுகந்த
ஐயுங்கிளியும்ஓம் அருந்தயாபரி (பரா)

அரிச்சந்திரன் கலித்துறை.

மாதவிசாமளே வாலையானத்தி வராகிபொல்லாக்
காதகவேமன் றனையுதைத்தோன்மகிழ் கௌரிசூரி
சாதகிகாடதில் வாழ்ருத்திரிசங்கரி தாங்கியெனே
ஆதரிதேவி தயாபரிதிரிபுரை யம்மணியே.

பராசத்தி விருத்தம்.

புகழ்பெறுஅயோத்திநாட்டை பொங்குடன்அரசுசெய்த
மகிழ்வுறுதிரிச்சங்கன்ற மைந்தனேசதா நீவாழி
திகழ்பெறமுனிவர்யோகர் செயும்பரந்தவங்களோங்க
நிகழ்நிதியளிக்குந்திவ்விய நெறியரிச்சந்திராவாழி.

பராசத்தி விருத்தம்.

அந்தமாம்ரவிகுலத்தில் அவதரிந்திட்டபாலா
உந்தறற்றிறந்திரத்தால் உருகியமனமகிழ்ந்தேன்
இந்தநல்வேளைதன்னில் எங்குநீபோகுற்றாய்
வந்தகாரணத்தையென்ன வழுவறவுரைசெய்வாயே.

வசனம்.

அப்பாரவிகுலம் கீர்த்திபெற அவதரிந்தபாலனே, நீஇரதாரூடனாய் எங்குபோகின்றாய் என்னைக்காணவந்த வுன்கோரிக்கையென்ன தெரியச்சொல்லுவாய் ராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சாம்பவிவினவிப்போனன் சந்திரவதிதனக்கே
சாம்பவிசுயம்வரந்தான் சாற்றினன்மதிதயேந்திரன்
சாம்பவிஅவள்மேற்சேயன் தனிமனமுருகிக்கூட
சாம்பவிபோகலானேன் தாயேநீவரமீவாயே.

வசனம்.

அம்மா சந்திரவதிக்கு சுயம்வரமானதால் அவளை மாலையிட்டுச் சுகமடையக்கருதி புறப்பட்டு வரும்வழியில் உன்னுடைய தரிசனஞ் செய்துஎன்கோரிக்கை யிட்டறம்படியான வரம்பெறவாகேன் தாயே.

பராசக்தி விருத்தம்.

பாலனேஅரசே அந்தப் பாவையாம்ம திதயேந்திரன்
சாலவேவரத்தாற்பெற்ற சந்திரவதியாம்மாது
நீலவேல்விழியாள்தன்னை நீமணஞ்செய்வாய்நித்தியம்
கோலமாயிருவரொத்து குவலயமாள்வீரப்பா.

வசனம்.

அப்பாபாலகா, அந்தச்சந்திரவதியுனக்கேபாரியாவாள்நம்புவாய் நீங்களிருவரும் மனமொத்து சகல சாம்பிராஜ்ஜியத்துடன் அரசாண்டிருப்பீர்களப்பா வேந்தே.

அரிச்சந்திரன் விருத்தம்.

தாயேயீதென்னகோலய சற்றுமுன்னெனக்கீதெல்லாம்
தாயேகேள்கருங் கல்லாகத் தான்தோற்றக்கண்டேனிப்போ
தாயேபார்பசும்பொன்னாக தளுக்குதேபுதுமையாதோ
தாயேநான் அறியநீதான் தயைபுரிந்துரைசெய்வாயே.

வசனம்.

அம்மணி நானிந்த வரும்போது இவைகள்கல்லாகக்காணப்பட்டன இப்போதும்பொன்னாகக் காணுகின்றது புதுமைதெரியச்சொல்ல வேண்டும் சங்கரி.

பராசக்தி விருத்தம்.

வருணனும்உலகையாண்டு வானிற்குப்போகுங்காலே
உருவுளதேர்வில்லம்பை உறிக்கக்கல்லாகச்செய்தே
இருந்தினன்வசத்தில்யார்க்குஇதுபொன்னாய்த்தோன்றுங்காலே
கருதிநீகொடுப்பாயென்றான் கைக்கொள்வாய்வேந்தேநீயே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா வருணன் இந்த தேர் வில் முதலானவைகளைக் கல்லாக்கி என்வசம் வைத்தான் இவைகள்யாருடைய கண்களுக்குப் பசுமையாய்த் தோன்றுமோ அவனுக்குக் கொடுக்கச்சொன்னான் நீ ஒப்புக்கொள்ளுவாய் வேந்தே.

அரிச்சந்திரன் விருத்தம்.

எனையீன்றமாதே அம்மா என்குலதேவிநீதான்
தனயனைவிரும்பியிந்த தனுசம்பரதமுங்கொண்டேன்

முனெயெனை நாளுங்காக்கும் மூதன்டி அடியேன்சொல்ல
துணையருள்தருகவேண்டும் சுந்தரிநின்றாள்போற்றி

வசனம்.

அம்மணி யெனக்காக வைத்திருந்து கொடுத்த ரதம்வில் அம்பு முதலானதும் கைக் கொண்டேன் எனக்குத் துணையா யிருக்கும்படி வேண்டினேன் அருள்வா நான்போக சிலைவுகொடுத்தாயே.

பராசக்தி விருத்தம்.

மைந்தாயித்தேர்மேலேறி வளர்கையில்வில்லைத்தாங்கி
மைந்தாநீபரியைப்பூட்டி வாழ்மன்னிநாடடைந்து
மைந்தாநீகருதுமாதின் மாயசூத்திரமுங்கண்டேன்
மைந்தாநீஅவளைமேவி மண்மீதில்வாழ்வாய்வாழி.

வசனம்.

அப்பாராஜனே நீசந்திரமதி சுயம்வரத்தில் அவளிடமிருக்கும் பரமசூத்திரத்தைக்கண்டு சொல்லவே அவளுனக்கு மாலையிடுவாள் நீசுகமாய் வாழ்வாய் வரந்தந்தேன் போய்வருவாய் வேந்தே.

யாத்திரைப்பிராமணாள் விருத்தம்.

சென்றதோரிடத்தில்நீதான் தரிசித்தஷேத்திரம்யாது
கண்டதோர்புதுமையேதோ கழறுவீர் அரியத்தானே.

வசனம்

கேளும்ராஜனே நீ சென்று தரிசித்த கோயிலும் அங்குநடந்த வரலாறும் இந்தவோர்முதலானவை கிடைத்தவகைபுந்தெரியச்சொல்லவேணும் மஹாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே தெரியச் சொல்லுகிறேன் சுவாமிகளே.

அரிச்சந்திரன் அகவல்.

அய்யனேகேளீர் அடியனுந்தங்களை
பையவேபிரிந்து பற்றியேதனிவழி
சென்றனனங்கே செழும்பொன்னிறமாய்க்
கண்டனேர்ஷேத்திரங் கானகந்தனிலே
என்னநானுரைப்பேன் எதெனப்புகல்வேன்
மன்னவர்மதிலும் வளர்ந்தகோபுரமும்
பட்டகட்டழகும் பகரொணாஸ்தம்பமும்
அடையிடைசங்கரி ஜொலித்திடுமனையும்
மூலஸ்தானமும் முன்னடிபீடமும்
வேலவேயின்ற விடலைநன்னுருவை
கண்ணினாற்கண்டேன் கழறுவேன்கேளீர்
விண்ணினிற்கி டா விருசனுநாசி
நேர்மையுஞ்சுதாப் ஜம் நிகழ்ந்நெநாணுந்நாலமும்
கூர்மையு[illegible]ழுக் குறிபிடிகுமும்

பிண்டியுமுடிக்கையும் பெரும்பூதப்படையும்
சண்டிகையேறும் தனிச்சிடமோதனமும்
கபாலபாத்திரமும் கண்டிகைகட்டியே
துவாரபாலகன்போல் தொழுதெதிர்நின்றே
அந்தரிகௌரி அமுதுளவிமலி
விந்தரிநீலி வெற்றிகொள்சூலி
பாசாங்குசத்தி பகரொணாச்சத்தி
ஆசாரவிரகத்தி அளிங்காப்பிடாரி
தேவிமனோன்மணி திரிபுரைமாதவி
தாவிடுபார்வதி சங்கரிகமலி
ஆக்ஷிகிழத்தி ஆனந்தபைரவி
தாக்ஷிணையில்லா தயாபரிசாம்பவி
என்றுதான்படித்தே யேத்திப்பொதொழவே
நன்றுளமகிழ்ந்தே நாயகியென்முன்
ஜலஜலவெனுமோர் சப்தந்துடனே
கலகலநகைப்புடன் கண்முனேதோன்றவே
தாயேநீயென தற்காரெனவே
செயேயெங்கனம் செல்கிறாயென்றனன்
கன்னமாபுரியின் கன்னிகைக்காக
அன்னையேபோகிறேன் அளித்திடுவரமே
அம்மணியென்றே அடிபணிந்தேத்த
செம்மணிமகிழ்ந்தே ஜெயம்ஜெயமென்றனன்
பாலகாவோர்குறி பார்க்கிற்குமுண்டு
சாலவேயிவனக்குத் தானதோற்றமம்
நுரைக்கவேமகிழ்ந்தயுனையவள்கிட்டியே
விரைவினில்மாலையை விளங்கவுன்கழுத்தில்
சூட்டுவன்நீயுஞ் சுகமடைவாயென
காட்டுமென்னெறிக்கிவை கல்லதால்நின்றதும்
பசும்பொன்னிரமாய்ப் பகரொணாவொளியாய்
விசும்புவரிதனை வினவினேன்தேவி
ஆதியில்வருநாளும் அன்புடனீந்த
ஜோதியுள்ளதமும் சொருகசம்புவில்லும்
இங்கீனைவைத்தே ஏகிடுங்காலே
தங்கமார்த்தது தாநெறிகாட்டுமோ
அவற்றினதயளிப்பாய் அன்றிபெமற்ற
எவர்க்குமீபாதனை யியம்பியவாறு
கண்டுநீசத்தியவான் களிப்புடனிவைகளைக்
கொண்டுமேசெல்லென கொடுத்தனளடைந்தே
ஐயநான்வந்தேன் அனைவரும்அதன்மேல
பையவேவருவீர் பற்றுவோம்வழியை

அரிச்சந்திரமகாராஜனோடு தேசாதிகள் வருகிற பாகம்.



கட்டியன். அரிச்சந்திரமகாராஜன். மந்திரி. தேசாதிகள்.

பொது விருத்தம்.

தேசதேசாதிமன்னர் சேர்ந்தெதிர்சொல்லக்கண்டு
பாசமாமயோத்திமன்னன் பதிந்தவர்தமைக்கலந்தே
நேசமாய்வார்த்தையாடி நிகழ்மனச்சாலைநோக்கி
வாசமாய்வருதும்வேந்தர் வகையினிஅறிகுவீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே அரிச்சந்திரமஹாராஜன் வருகின்றவழியில் மற்றதேச ஆரசரைக்கண்டு அவர்களுடன்தானுங்கலந்துசந்திரவதி சுயம்வரச்சாலைக்கு வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேசாதிபதிகள்-தரு-இ ம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

அகிலபுவனத்துள்ள ஐம்பத்தாறுதேசத்தின்
அரசர்களிதோவந்தார் மணத்திற்காக

அநுபல்லவி.

சகலவாத்தியமுடன் சங்கொலிஓங்கிட
சதுர்விததளங்களும் தான்திரளாய்வந்திட
மகபதியின்தவத்தால் வந்தசந்திரவதியாள்
மணத்தைக்கோரியேமண மண்டபந்தனைநாடி (அ)

ஆலவட்டஞ்சாமரம் அழகுகொடிகள்ஓங்க
அணியணியாய்ரதம் அஸ்வக்கூட்டந்துலங்க
காலவேகஜவர்க்கம் சம்பிரமமாயிலங்க
தூகமைதாய்வரவா தானிஆனந்தம்பொங்க
நீலவிழியாளான நேர்சக்ரவர்த்திதனை
நீதான்மணர் வேனென்று
தானேதானும் மகிழ்ந்து (அ)

மதியராசன்விருத்தம்.

இத்தலந்தனிலேயுள்ள இனியதேசங்களாளும்
உத்தமவரசரான வுசிதரேசராணம்வாரீர்

வசனம்.

வருவீர்கள் வருவீர்கள் மன்னாதி மன்னர்களே சரணம், இந்த திவ்விய ஆசனங்களின் மீதிருப்பீர்கள் வேந்தர்களே.

பொது விருத்தம்.

சந்திரவதிமணத்தைத் தான்பார்க்கவேண்டி திவ்விய
விநதமாய்மருவிட்டு விஸ்வாமித்திரர்வாராரே.

மநிதயராஜன் கொலுவுக்கு விஸ்வாமித்திரர் வருகிறபாகம்.



வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, சந்திரவதி அம்மன் திருக்கல்யாணத்தின் மகிமையைப் பார்க்கவேண்டி விஸ்வாமித்திரமுனி வருகிறவிதங் காணுங்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-இராகம்-தோடி-தாளம்ஆதி.

பல்லவி.

ராஜராஜனுக நவிலுகாண்ட திவ்விய
ராஜரிஷிபும்வந்தார-விஸ்வாமித்திர
ராஜமுனிவர்வந்தார்.

அநுபல்லவி.

தேசதேசங்களெல்லாம் திசழ்வுடன்தனைப்போற்ற
திரிசங்குக்கும்அன்னாளில் திகழ்ந்தாம்படைத்த. (ரா)

சரணங்கள்.

உத்தமன்குருமொழி யுணர்ந்தேநடப்போனிந்த
உலகரில்கீர்த்தி ஓங்கும்அரிச்சந்திரன்தன்
அத்தன்மேல் வைத்திட
அபிமானங் தனையெண்ணி
அயோத்திபன் மணக்கோலம்
அடைந்தேகளிக்க நண்ணி (ரா)

மதிதயராஜன்-விருத்தம்.

அத்தனையகத்துள்ளாட்டி அன்புடனேத்தந்திவ்விய
வித்தகவிஸ்வாமித்திர எந்தையேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றி போற்றி விஸ்வாமித்திர மஹாமுனியேபோற்றி.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

மகதநாடாளுகின்ற மன்னவேவாழிவாழி
ஜெகதலந்தனிலேயுன்றன செங்கோலுநீதிவாழி.

வசனம்.

வாழிவாழி மதிதயராஜனே வாழி.

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தரமென்றன்தந்தை அன்னாலின் துயர்க்கிரங்கி
விந்தமாயந்தரத்தில் மேவிநற்சுவர்க்கந்தன்னை
சுந்தராஅமைத்தேயங்கே சுகமுடனிருக்கச்செய்தே
எந்தனை அடிமைகொண்ட இறைவனேபோற்றிபோற்றி.

வசனம்,

எனதுதந்தைக்கு அந்தரசுவர்க்கமளித்த தேவனே நின்றருள்போற்றிபோற்றி.

விஸ்வாமித்திரன்-விருததம்.

திரிசங்கின்மைந்தர்வாழி ஜெயவரிச்சந்திராவாழி
பெருநிதிகுணமும்யோக்கியம பெற்றவாவாழிவாழி.

விஸ்வாமித்திரன்-வசனம்.

வாழிவாழி அரிச்சந்திரமகாராசனேவாழிவாழி.

மதிதயராஜன் வசனம்.

இந்தரத்தினபீடத்தின் மீது வீற்றருளவேண்டுமுனிநாதா.

விஸ்வாமித்திரன் வசனம்,

மஹாசந்தோஷமப்படியே மதிதயராஜனே.

போது-விருத்தம்.

சீடன்மணத்தைப்பார்க்க திவ்வியவசிஷ்டமூர்த்தி
நாடதையடையவேண்டி நடந்திதோவருகின்றாரே.

போது-வசனம்.

கேளுங்கள் சபையோரே தனதுசீஷனாகிய அரிச்சந்திரமஹாராசன்தன் விவாகத்தைப் பார்க்கவேண்டி வசிஷ்ட மகாமுனிவர் வருகிறபடியினால் தங்களணியுங்கள் கனவான்களே.

வசிஷ்டர்-தரு-இ-ம்-சஹானா-தாளம்ஆதி.

பல்லவி.

ஞானவசிஷ்டர்வந்தார் பிரம்மஞானவசிஷ்டர்வந்தார்

அநுபல்லவி.

ஞானவழிதெரிந்து மோனநிலையில்நிற்கும்
தீனதயாளனும்தன் சீடன்மணத்தைப்பார்க்க. (ஞா)

சரணங்கள்.

உத்தமன்முனிவரில் ஓகோவுயர்ந்தோனந்த
சத்தமிலாதெழுந்தைத் தானனுஷ்டிக்கும்திவ்விய (ஞா)

அஞ்சடக்கியிருபக் தஞ்சையுந்தான்பாழாக்கி
நெஞ்சைசதுலக்கிசிவ நேசவானவர்புகழ் (ஞா)

கன்னமாபுரிராடி கன்னாரிச்சந்திரனிட
தனமாநுமணந்தனைத் தானேமுடிப்பேனென்று (ஞா)

மந்திரயாராஜன் கொலுவுக்கு நாரதர் வருகிறபாகம்.



மதிதயராஜன் விருத்தம்,
கீர்த்தொரந்தரகிதனை கிமலனைப்போற்றுகின்ற
உத்தமவசிஷ்டமூர்த்தி உமதடிசரணம்போற்றி.

வசனம்.
போற்றிபோற்றி வசிஷ்டமகாமுனியேபோற்றி.

வசிஷ்டர் விருத்தம்,
மதிதயராஜேவாழி மன்னரில்கீர்த்திதனை
நதியதில்அடைந்தநல்ல தயாபராவாழிவாழி.

வசனம்.
வாழிவாழி மதிதயமகாராஜனே வாழி வாழி.

அரிச்சந்திரன் விருத்தம.
என்குருபரனேபோற்றி யென்றனை அடிமைகொண்ட
மின்திருப்பாதம்போற்றி நிருபனேபோற்றிபோற்றி.

வசனம்.
போற்றிபோற்றி யென்குருவேபோற்றி

வசிஷ்டர் விருத்தம்.
அப்பனேசிஷாவாழி அயோத்தியாள்வேந்தேவாழி
இப்பரிகொண்டவெண்ணம் ஈடேறும்வாழிவாழி.

வசனம்,
வாழிவாழி அரிச்சந்திர மகாராஜனே வாழி.

மதிதயன் வசனம்,
இந்த திவ்யஆசனத்தில் எழுந்தருளவேண்டுஞ்சுவாமி.

வசிஷ்டர்-விருத்தம்.
அப்படியே சந்தோஷம் சந்தோஷம் ராஜனே.

பொது விருத்தம்.
மதிதயன்மகளுக்கின்று மணமென்றசேதிகேட்டேன்
நதியில்நாரதருமிங்கே தான்வந்து தோன்றினாரே

வசனம்.
கேளுங்கள் சபையோர்களே, சந்திரவதியின் கலியாண மகிமை யைப்பார்க்க நாரதமகாமுனி வருகிறவிதங்காணுங்கள் கனவான்களே.

—(※)—

நாரதர்-தரு-இ-ம்-மத்தியமாவதி-தாளம் ஆதி.

பல்லவி.
நாரதமுனிவர்வந்தார் சுக்ஞான நாரதரிதோவந்தார்.

அநுபல்லவி.
தாரகமந்திரத்தை தானுணர்ந்தேஅந்த
சத்தியமில்லைப்பிரம்ம ஸ்தானமறிந்தருளை (நாரத)



மதிதயராஜன் கொலுவுக்கு வதிஷ்டர் வருகிறபாகம்.

சரணங்கள்,

பூரணத்தில்கினைவைப் பூட்டித்தினமகிழ்ந்து
பொறிபுலன்களைவெல்லாம் போக்காகவேகழித்து
நாரணனெட்டெழுத்தை நாட்டிபவனமெகெங்கும்
நண்ணியிந்திரனுலகும் நலமுடனுலாவிடும் (நா)
காமகுணமொழித்து கன்மமயிடறழித்து
காயமழியாவண்ணமே கருதிகிலேபிடித்து
அசடு அழுக்காரவா அகத்தைவிட்டேபோக்கி
ஆனந்தக்கூத்தாடி அருளோங்கித்தானுலவும் (நா)
எட்டுதிசைகளையும் எண்ணில்ஒருநொடியில்
ஏகியங்குற்றதொரு இயற்கை அடிமுடியில்
சுற்றுஞ்சடைவளர்த்து சொகுசாய்மணிதரித்து
சூக்ஷும்மறியும்வீணை தோளறைகரத்தில்தாங்கி. (நா)

மதிதயராஜன் விருத்தம்.

வரதனின்னருளையோங்கி வானவர்போற்றுந்திவ்விய
பரதநாரதரேவுன்றன் பாதமேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி நாரதமுனிவரேபோற்றி

நாரதர் விருத்தம்,

சந்திரவதியைப்பெற்ற தன்னியனேவாழிவாழி
உந்திருநாடுங்கோனும் ஓங்கயெந்நாளும்வாழி.

வசிஷ்டர்-விருத்தம்.

தவத்தினிலுயர்ந்ததிவ்விய தானுவேநாரதாதி
டவத்தினையொழித்தநல்ல பண்பனேவாரும்வாரும்

வசனம்,

வாரும்வாரும் நாரதமகாமுனியேவாரும்

நாரதர்-வசனம்.

வந்தேன் வந்தேன் தவசிரேஷ்டர்களே

நாரதர் விருத்தம்

மன்னுதிமன்னருந்தான் மகள்மணமாலைக்காக
மன்னுதிமன்னர்வந்தும் மதிதயர்தருணம்வாய்த்தும்
நன்னுதிருணத்தையுற்ற நங்கையைச்சிங்காரித்தே
இன்னுதிசாலைபுக்க இனித்தடைசெய்வதேனோ.

வசனம்.

கேளும் மதிதயராஜனே உனது மகளுடைய மணத்தைக் கோரி தேசதேசாதிபர்வந்தும் லக்கின நேரங்கிட்டியும் சந்திரவதியைச் சுயவரச்சாலைக்கு அழைப்பிக்கத்தடையாமோவேந்தனே,

மதிதயராசன் வசனம்.

இதோ அழைப்பிக்கிறேன் நாரதமகாமுனிவரே.

மதிதயன் விருத்தம்.

அப்பனேமந்திரிஐம்பத் தாறுதேசாதிமன்னர்
ஒப்பவேவந்தாரென்றன் ஒருமகள்மணத்தைநாடி
செப்பருமணிக்குடைக்கீழ் செல்வியைச்சிங்காரித்தே
இப்பவேவருகஇங்கே இயம்புவாய்பாங்கிமார்க்கே.

வசனம்.

அப்பாமந்திரி, ராஜாதிராஜர்கள்வந்து வீற்றிருக்கும்சுயம்வரச்சாலைக்கு என் தனைப்புத்திரியைச் சிங்காரித்து அழைத்து வரும்படி தோழிகளுக்கு உத்தரவு செய்வாய் அப்பாமந்திரி.

மந்திரி விருத்தம.

சந்திரவதியைநாளும் தயவுடன்பாதுகாக்கும்
சுந்தரமொழியாளான தோழியேசொல்லக்கேளாய்
இந்தநற்சமூகந்தன்னில் ஏந்திழைதனையேநீதான்
வந்திடமணிக்குடைக்கீழ் மகிழ்வுடனழைத்துவாராய்

வசனம்.

கேளாய்பெண்ணே தோழி, இந்தக்ஷணத்திலேபோய்ச்சந்திரவதியம்மனைசிங்காரித்து முத்துக்குடையின்கீழ்நடத்தி இந்த மணவறைப்பந்தலுக்கு அழைத்துவருவாய்பாங்கி,

தோழி வசனம்,

சந்தோஷம்அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறேனையா மந்திரியே,

தோழி விருத்தம்.

மதிதனைப்பழிக்குந்திவ்ய மலர்முகமுடையசந்திர
வதியெனுந்தாயேவுன்னை மன்னனுமணச்சாலைக்கே
நிதிபெறும்வேந்தர்தம்மை நீகண்டேமாலைசூட்ட
அதிவிரைவினிலேஅம்மா அழைத்தனர்வருகுவாயே.

வசனம்,

கேளும்அம்மாசந்திரவதி உனதுமணச்சாலையில் அனேக ராஜாதிராஜாக்கள வந்திருக்கிறார்கள் நீகண்டு உன்மனதுக்கேற்றபுருஷனை விவாகஞ் செய்துக்கொள்ளும்பொருட்டு உன்னை அழைத்துவரச்சொன்னார் அரசன் வருவாய் அம்மணி.

சந்திரவதி-விருத்தம்.

சகியேநீ அன்றுவந்தே சாற்றியநாள்துவக்கி
சகியேநான் அயோத்திமன்னர் தாங்கிட்டவேண்டுமென்றே
சகியேநான்பரத்தைக்கோரி தனியுருஜெபித்தேனிப்போ
சகியேயென்விதிதானென்ன சர்ப்பனைசெய்யுமோவாராய்,

திருக்கலியாணமண்டபத்திற்குசந்திரவதிவருகிறபாகம்.



வசனம்.

அடி தோழி நீசொன்னநாள்முதல் அரிச்சந்திர மகாராஜனென்ன க்குக் கணவனாகவேண்டுமென்று ஆண்டவனைத் துதித்துக் கொண்டிருந்தேன் என்விதியேதேது செய்யுமோதெரியேன் வாராய் போவோம் சவுந்திர வல்லி,

பொது விருத்தம்

தவத்தினலரசன்பெற்ற சந்திரவதியாளிதோ
மகத்துவமன்னர்சூழும் மாகாசபைவருகின்றாளே,

வசனம்

கேளுங்கள் சபையோரே கலியாணமண்டபச்சாலைக்கு சந்திரவதியம்மன் வருகிறவிதங்காணுங்கள் கனவான்களே,

சந்தரவதி-தரு-இராகம்-பந்துவாரளி-தாளம்

பல்லவி,

மாதுசந்திரவதனல் வந்தாள்
மாசிலாதகுண பூஜித்மெனுமணி

அநுபல்லவி

ஏதுஇவள்போற்பாவை யெங்குங்கிட்டாதெனவே
இனிஉடன்கண்டவர் மனமதுஉருகிட மாது

சரணங்கள்.

காரியமுகிலைப்போன்ற கனத்தகூந்தல்முடித்தே
கையில்வெகுஉன்னதா காரதலர்பிடித்தே
திருநீறணிநுதலால் திங்கள்தனைப்பழித்தே
திவ்யநாயகியும்விழி திரள்கயலையழித்தே
பரிவுளவேந்தர்கள் சீரழிந்தலைந்திட
பணிந்துமதனார்நூரம் பாரமல்ஒடிட மாது
இரத்தினத்தில் முத்திழைத்த வெழில்போல்தந்தந்துலங்க
இமையவர்முதலோரும் இவளழகால்வலங்க
விரதத்திநுயர்ந்தோரும் வேண்டியநாடித்தியங்க
மேவிபொற்கின்னமென விளங்குமஸ்தனங்குலுங்க
கரத்தின்விரல்பயற்று காய்களைமாற்றிட
கைபிடியிடையுள காமரதியென்றிட மாது
தவளச்சங்கதைமாற்றும் தனிக்கழுத்ததுஒங்க
தவடைமாந்தோவடயென தாலிவண்டுகள்தாங்க
இதழமுகைக்கண்டுமே இந்திராணிபின்வாங்க
ஈசன்படைக்கமனம் என்கொண்டானென்னங்க
பாவமதைநன்னிடாப் பண்பர்கள்தனக்குமே
பாரியாளென்றெண்ணப் பதறுமல்நடந்துமே மாதும

சந்திரவதி விருத்தம்.

விண்ணவர்காமனனைய வெண்கிரிபரத்னைநாடி
நண்ணருந்தவமியற்றி நாதன்றன்னருளாலென்னை
வண்ணமாயீன்றெடுத்த மகிழ்வுடன்வளர்த்ததாய
அண்ணலே அழைத்தவாறு அன்புடனருள்செய்வீரே.

வசனம்

என்னை அருந்தவம்செய்து பெற்றுவளர்த்ததந்தையே அழைத்தகாரணந்தெரியச்சொல்லவேணும் என்பிதாவே.

மதிதயாராஜன் விருத்தம்.

என்னருந்தவத்தால்வந்த இனியவென்கண்ணே அம்மா
மன்னவர்மன்னருந்தன் மனமதுநாடிவந்தார்
உன்னதமாலைதாங்கி ஒளிபவர்கீர்த்திகேட்டே
அன்னமேவுனக்கிசைந்த அரசன்மேற்சூட்டுவாய்.

வசனம்.

அம்மா உன்கல்யாணததிற்காக ராஜாதிராஜர்களும் வந்திருக்கிறார்கள் இந்தபுஷ்பமாலையைகையில்தாங்கிஅவாளவாள்பெருமையுங்கீர்த்திப்பிரதாபகுணத்தையுங்கேட்டுஉனக்குஇஷ்டமான அரசன்கழுத்தில் சூட்டிவாய் நான்பெற்றசெல்வமே

சந்தரவதி வசனம்

அப்படியே செய்கிறேன் என்பிதாவே.

சந்திரவதி விருத்தம்,

பாங்கியேயெனதுதந்தை பகன்றதால்சுயம்வரத்தில்
ஓங்கியேபிரபலமன்னர் ஒளிசபைதனில்நான்சென்றே
நீங்கிடமதன்செய்வாது திகழ்மணமாலைசூட்ட
தாங்கியமன்னர்பேரும் சௌக்கியமுமுரைப்பாயம்மா,

வசனம்,

அடி தோழி யென்தந்தைவாக்கின்படி நான்செய்யப்போகிறேன் நீயிவிடம் வீற்றிருக்கும்ராஜர்களின் பெயரும்பெருமையும் எனக்குத்தெரியச்சொல்லுவாய் அம்மா,

மதிதயாராஜன் விருத்தம்,

மன்னரின்மன்னரான மகிபரேவுரைக்கக்கேளீர்
அன்னவனருளினாலே அருந்தவப்புத்ரியான
கன்னிகைகிலந்துஞ்சூழமங்கண்டுரைத்தர்க்கிம்மாறு
உன்னதமாலைவிபாவாள்உரைத்திட்டேனறிகுவீரே,

வசனம்.

கேளுங்கள் ராஜாதி ராஜர்களேஎன்மகளிடத்தில் தோன்றும்படியான பராமாகசியத்தைக்கண்டு சொன்னவர்க்கு அவள்மாலையிடுவாளென்று அறிவீர்கள் வேந்தர்களே.

ராஜாக்களுடையபெருமையைதோழிகள் சந்திரவதிக்கு தெரிவிக்கிறாள்,



தோழி வசனம்

அம்மா ராஜர்களின் ஊரும்பெருமையுஞ் சொல்லுகிறேன் கேளாய்தாயே

வசனம்

அப்படியே சொல்லுவாயடி பாங்கியே

தோழி தரு இராகம் நாதநாமக்கிரியை தாளம் சாப்பு

பல்லவி.

சொல்லுவேன்கேளம்மா மன்னர்பெருமை
சொல்லுவேன் கேளம்மா.

அநுபல்லவி

அல்லும்பகலுலாவும் ஆதித்தபதின்குலம்
அடைந்தஅரசர்புகழ அரிவையேநீதெரியச் (சொ)

சரணங்கள்.

அங்கதேசாதிபதி அழகிற்சிறந்தோரிலர்
அரிவையேகாம்போம்ஜன ஆளும்புனிதரிவர்
கொங்கணம்ஆள்பவர் கூர்ஜஜரர்அதிவீரர்
கோதையேநேபாளர் கொடுஞ்சூரரிவரினி (சொ)
பாண்டியநாடாள்வார் பலகலையுணர்ந்தவர்
பத்தினிவங்காளம் பணியும்மடத்தாரிவர்
ஆண்டவன்வளர்காசி ஆளுமகிபர்
அறந்தனைவிளக்கும் அன்னமெலன்றறியினி (சொ)
சிந்துதேசத்தையாளும் சிங்காரர்மலேயாள
தேசம்அரசுசெய்யும் தீரரிவரறிவாய்
தந்துபின்வாங்காத திராவிடர்கலிங்கத்தார்
தாழ்விலச்சேரசோழர் தானிவர்முன்னடப்பாய் (சொ)
அம்மா!அயோத்தியாளும் ஆதியின்மலபுற்ற
அன்னலிவரறிவாய் அழகிற்சிற
பெம்மானைப்பணிபவர் பெருமையிற்சிறந்தவர்
பேருலகம்மதிக்கும் பெண்ணேசந்திரவதியே (சொ)

சந்திரவதி விருத்தம்.

என்மனங்களிக்காநாளும் இசைபுரிதோழிகேளாய்
முன்னமநீவர்துரைத்த மொழிபெருதிரிசங்கின்ற
மன்னவரிவரோ அன்றிமற்றுவேறுண்டோயிங்கு
பன்னவேவேண்டும பிராணபதமானசகிதான்நீயே,

வசனம்.

அடி அம்மாதோழி முன்னெம்மிடம்வந்துசொன்னவரிவர்தானா அல்லதுவேறுண்டோசொல்லவேணும்பாங்கியே

தோழி விருத்தம்

அம்மாகேளிவரேயாகும் அயோத்திபன்றிரிசங்கின்ற
அம்மாகேளரசர்முன்னே அந்தணருரைத்துப்போன
அம்மாகேள்தருமநீதி அசத்தியந்தவிழ்த்திசெய்யும்
அம்மாகேள் முனம்நான்சொன்ன அரிச்சந்திரரிவர்தான்தாயே

வசனம்.

அம்மணி முன்பு நமதுராஜனிடம்வந்து உனக்குக் கலியாணத்தைநிர்ணயித்துப்போன வேதியர்களசொன்ன ராஜாதிராஜனிவர்தான்தெரிவாயம்மா.

அரிச்சந்திரன் விருத்தம்

என்னகாரணந்தான்சொல்வாய் ஏந்திழாய்நின்கழுத்தில்
மின்னல்போலேதுதாலி விளங்குதேயுனது தந்தை
முன்னபார்தனக்குஉன்னை முடித்தனன்விவாகஞ்சொல்வாய்
நன்னலங்கடந்தேசூது நடத்தாலுந்தகுமோமாதே.

வசனம்.

கேளும்பெண்ணே உன்கழுத்தில் தாலியேது முன்உன்னைமணஞ்செய்து மாங்கல்யஞ்சூட்டினவன் யார் உன்தந்தையிவ்விதமோசம் நடத்தக்கருதினதுஞ்சரியோசொல்லுவாய்மாதரசே.

சந்திரவதி விருத்தம்

அரசேநானுரைக்கக்கேளீர் அன்னையுங்குழந்தைவேண்டி
சுரர்பணிகங்கைபூண்ட சுந்தரனைத்தொழவேநானும்
வரவென்றனுடனித்தாலி வந்திடக்கண்டபேர்க்கே
தரவேனைப்பாரியென்றே சாற்றினாறிவீர்நாதா

வசனம்

கேளும் மகாராஜனே சந்ததிவேண்டி யென்தந்தை சங்கரனைக் குறித்துத்தவஞ்செய்யக் கடவுள்மகிழ்ந்து உனக்கு ஒருபெண்தாலியுடன்பிறப்பாள் அதைக்கண்டுசொன்னவருக்கு அவள்பாரியாவாளென்றனர் அப்படியே நான்பிறந்தனன் இதுதான்பரமரகசியமென்றுஎன்தந்தைசபையோருக்குஞ் சொன்னது பிராணநாதா.

சந்திரவதி விருத்தம்

வல்லவன்கிருபையாலே வந்தனரிவருமிங்கே.
நல்லதோர்காலமின்று நாதனும்மனக்களித்தார்.

சொல்லரும்வேந்தமன்னர் சூழுமிச்சபையிற்றோழி
அல்லல்பசற்றிலாமே அன்புடன்சூட்டிடேனோ.

வசனம்

அம்மாசுயம்வரவல்லி நான்முன்செய்தபூசாபலத்தினால் இவரவர்தார் குசுடமத்தைப்புன்சண்டுசொன்னார் இதோ யிந்தசபையிலுள்ளமுனிவர்களும்ராசர்களுமறிய அரிச்சந்திரமகாராஜன் சுழுத்தில் மலர்மாலைசூட்டினேன் அடியம்மாதோழி.

தோழி வசனம்

மகாசந்தோஷம் அம்மாசந்திரவதியே.

ரிஷிகள் வசனம்,

சகலைசுவர்க்கியசாம்பிராஜ்ய அபிவிர்த்திக்கவேண்டியது காம்சநதாஸ்று அப்பா அரிச்சந்திரமகாராஜனே அம்மாசந்திரவதியே நீங்களிருவரும் உடலும்உயிரும்போல்அரைநொடியாகிலும்இணைபிரியாமல் இருக்கக்கடவது வாழிவாழி

நாரதர் விருத்தம்

சந்திரவதியைப்பெற்ற தயாபராமதிதயேந்திரா
உந்தனர்பெருமைகீர்த்தி உலகில்வேறுளரார்க்குண்டோ
கந்தவிழ்மலர்ப்பூஞ்சோலை கன்னியாபுரிகளிக்க
வந்தவர்போகாமுன்னம் மணமதைநடப்பிப்பாயே,

வசனம்

கேளாய்மதிதயராசனே இந்தசபைசகலரற்குள்ளாக உன்னுடைய புத்திரியாகிய சந்திரவதியின் நற்குணத்திற்கேற்கேற்றசனாவாய்த் தான்சீக்கிரத்தில் கல்லியாணத்தை நடப்பிக்க தீவரப்படுவாய் மன்னவனே.

மதிதயராஜன் வசனம்

அப்படியேசெய்கின்றேன் முனிநாதரே.

மதிதயன் விருத்தம்.

ஐயரேவிஸ்வாமித்திர அன்னையேயென்றபுத்திரி
ஐயரேதிரிசங்கின்ற அன்புள்ளவேந்தனுக்கே
ஐயரேசுயம்வரத்தில் அணிந்தனள்மாலைதன்னை
ஐயரேவுமதுகையால் அணிமணம்நடப்பிப்பீரே

வசனம்

சுவாமிவிஸ்வாமித்திரரே என்புத்திரி அரிச்சந்திரமகாராஜனுக்கு மாலைசூட்டினாள் தாங்கள் தங்கள் திருக்கரங்களால் கல்லியாணத்தை நடப்பிக்கவேண்டும் முனிநாதரே.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மதிதயன்மணம்நடத்தும் வண்மையுங்கிச்சையெல்லாம்
சதியன்றியுணர்ந்த தன்னியலதிட்டாலே

விதிபிச்சாதவண்ணம் விரைவினில்முடிப்பிப்பாய்நற்
கதிபெறஉபபத்திராள்தங்கருத்தைநான்சொன்னேன்கண்டாய்

வசனம்

அப்பாராச்சனேகல்லியாணம்நடத்தும் சடங்குகளில்தெரிந்தவசி ஷ்டராலேசீக்கிரத்தில் லக்கினமீறாமல்நிறைவேற்றுவாய் வேந்தனே.

மந்திரி விருத்தம.

மண்ணுளோர்மதிக்குமன்னா மதிதயேந்திரனேகேளீர்
வண்ணமுன்மகள்தனக்கே மணஞ்சூட்டுங்காலமாசசே
திண்ணமாஞ்சடங்கையெல்லாம் திறமையாய்நடத்தவேண்டி
யெண்ணவேவதிஷ்டர் கையால்செய்விப்பீர்செய்விப்பீரே

வசனம்

சேளும்மகாராஜனே சந்திரவதி அம்மன்திருக்கலியாணச்சடங் கைவதிஷ்டரைக்கொண்டு நடப்பிப்பதேவெகுவுத்தமம்மகாராஜனே,

மதிதபராஜன் விருத்தம்.

அவமதியனைத்தும்போக்கி ஐம்புலன்றனையொடிங்கி
தவநிறைநிஷ்டைபுத்தி தானதாய்நின்றபிரமம
குவலயமெல்லாந்திக்கும் குருநாதவசிஷ்டமூர்த்தி
கவலைவிட்டெனதுபுத்திரி கல்யாணம்நடப்பிப்பீரே.

வசனம்

சுவாமி வசிஷ்டமகாமுனியே எனதுபுத்திரியாகியநம்துஅடியா ள் சந்திரவதியின் திருக்கலியாணத்தை தங்கள்கையினால் நடப்பிக்க் வேண்டுகின்றேன் தேவனே

வசிஷடர் வசனம்

அப்பாமதிதயராஜனே சந்தோஷம் அப்படியேநடப்பிக்கின்றே ன்சகலரும் கல்யாணமண்டபத்திற்கு வருவீர்களப்பா.

மதிதயராஜன் வசனம்

அப்படியேயெல்லோரும கல்யாணமண்டபத்திற்குவருகின்றோ ம்முனிநாதரே.

வசிஷ்டர் வசனம்,

கேளும் மதிதயராஜனே கலியாணத்திற்கு வேண்டிய சாமக்கிர யங்களை வரவழைக்கவேண்டும் வேந்தே

மதிதயராஜன் வசனம்

சுவாமி அப்படியேஓமத்திரவியங்களும்சமத்துகளும்சாமக்கி ரயங்களும் இதோவரவழைத்தேன் நடத்தவேண்டியதை நடப்பிப் பீர்முனிநாதரே.

வசிஷ்டர் வசனம்.

அப்பாராஜனே சந்திரவதியை ஆசனத்தில் அரிச்சந்திரன் முன் னிலேயி லிருக்கச்செய்வாய் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

சுவாமி உமதுஆக்கினையின்படி யெனதுபுத்திரியைச் சிங்காரித் து ஆசனத்திலிருக்கச்செய்தேன் முனிநாதரே.

வசிஷடர் வசனம்.

கேளுங்கள் வேதியர்களே ஆதிகணபதியின் பூஜைநடப்பிப்பீர் கள் சுவாமிகளே.

மதிதயராஜன் வசனம்.

கேளாய் பெண்ணே சுந்தரரேகையே நாம் மணவரைச்சாலேக் குப்போவோம் வாராய்.

சுந்தரரேகை விருத்தம்.

என்னுயிர்க்குயிரதான இறைவனேநின்றாள்போற்றி
மன்னரில்மகிமைபூண்ட மகதராட்டரசேபோற்றி
உன்னருமணச்சாலேக்கே உகந்தேனைநீரழைத்த
தென்னகாரணமோதென்ற இயம்புவீரெளியாளுக்கே.

வசனம்.

கேளும் பிராணநாதா என்னே மணவரைச்சாலேக்கு அழைக்கிற காரணந் தெரியச்சொல்லவேண்டும்.

மதிதயன் விருத்தம்.

அடிமானேநாம்தான்பெற்ற அருந்தவமதுஇன்று
யடிமிசைமிகழயோத்தி பதிதனை மாலேயிட்டாள்
கெடிதலம்நமதுநாட்டிற் கிளரொளுமன்னர்காண
கடுகினில்வாராய்சென்று கன்னியைத்தாரைசெய்வோம்.

வசனம்.

கேளாய் யென்பிராணநாயகி நமது தவப்புத்திரியாகிய சந்திர வதியம்மாளின்று சுயம்வரச்சாலேயில் அயோத்தியாபுரியையாளும் ஏகச்சக்ரேஸ்வரனுகிய அரிச்சந்திர மகாராஜனே மாலேசூட்டியதால் நாமிருவரும் மணவரையிற்சென்று சகலருமறிய கன்னியைத் தாரை யிட்டுவருவோம் வாராய்பெண்ணே.

சுந்தரரேகை வசனம்.

மகாபாக்கிய மப்படியேவருகின்றே னென்பிராணநாதா.

வசிஷடர் விருத்தம்.

அப்பனேமதிதயேந்திரா அன்பனேபலருங்காண
இப்பகின்மகளேயிங்கு இனிவுடன்தாரைவாரே

அரிச்சந்திரமகாராஜனுக்கும் சந்திரவதிக்கும் திருக்கல்யாணமுடிப்பிக்கிறபாகம்.,



கட்டியன். சந்திரவதி. அரிச்சந்திரன். வதிஷ்டர். மதிதயராஜன்.

வசனம்.

அப்பா மதிதயமகாராஜனே நீயுமுன்தேவியு மணவரையில் நின்று மருளங்கான சந்திரவதியை தாரைவார்ப்பாய் வேந்தனே.

மதிதயன் சுந்தரரேகை இருவருஞ்சொல் விருத்தம்.

அரியதவஞ்செய்தன்று சிவத்தால்நாங்க
ளடைந்தவழகுறு சந்திரவதியையின்று
பிரியமுடன் ரவிகுலத்து திரிச்சங்கின்ற
பேசூரிய வரிச்சந்திர மகிபனுக்கே
கரியுரித்தோன் ரவிமதியும் பூமிதேனும்
கங்ஜலமும் அஷடத்திக்கோர்
பரிவுடனே மணவரையிற் றாரைவார்த்தோம்
பலகோடிகாலமிவர் வாழ்கவாழி.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே நாங்களறிபதவம்செய்து பெற்ற சந்திரவதியம்மனே யின்று கயிலைவாசனுந் தேவியும் தேவர்களும் சூரியசந்திரனும் பூமிதேவியும் ஆகாயவாணியும் அஷடதிக்குப் பாலர்களும் தவமுனிவர்களும் மன்னுதிமன்னர்களுமறியக் கன்னியைத் தாரைவார்த்தோம் அவர் கற்பகோடிகாலஞ் சுகமாய் வாழக்கடவது வாழி வாழி.

வசிஷடர் விருத்தம்.

மன்னவர்மன்னனீதான் மகாகோடிகாலம்வாழி
இன்னிலமதனிலிந்த ஏந்திழைசற்பும்வாழி
பன்னரும்யோகரேந்த பரவுமின்சத்தியம்வாழி
என்னருஞ்சிஷாநீதா னிகபரசவுக்கியம்வாழி.

வசனம்.

அப்பா என்னருமைசிஷனுகிய அரிச்சந்திரா நீயுமுன்பத்தினியாகிய சந்திரவதியும் தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் வேந்தர்புகமுக் கீர்த்திபெற்று இகபரசவுக்கியபரியமடைவீர்கள் வாழி.

நாரதர் விருத்தம்.

சந்திரவதியும்வாழி சற்குணம்பெருகவாழி
சுந்தரவரிச்சந்திராநீ சுகமாகவாழிவாழி.

வசனம்.

அரிச்சந்திரமகாராஜனே நீயும் சந்திரவதியம்மனுஞ் சதாகம்ப வாழி வாழி.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

உன்னருங்குலத்தில்வந்த இறைவனுர்திரிசங்கீன்ற
மன்னனுந்தேவிநானும் மகிழுடன் வாழிவாழி.

வசனம்.

என்குலத்தில் வந்த திரிச்சங்கினித்த அரிச்சந்திரனும் அவன் தேவி சந்திரவதியுஞ் சதாசுபம் வாழிவாழி.

யாத்திரைப்பிராமணர் விருத்தம்.

எங்களையன்றுவேண்டி இசைத்ததைமுடியச்செய்த
மங்களவுமையாள்பாகா மன்னனும்திரிச்சங்கின்ற
திங்கள்நன்னழகன்தேவி செப்பொணப்பெருமைபூண்டே
சங்கராவுனைத்துதித்தே சதாசுபம்வாழிவாழி.

வசனம்.

எங்களையன்று கோரிக்கேட்ட மன்னவனிஷ்டப்படி சந்திரவதியம்மன் அவனைமணஞ்செய்யக் கட்டிவைத்த பரமசிவமே யிந்ததம்பதிகளிருவரும் மகாகோடிகாலம் கீர்த்தியடைவது சகலசம்பத்துடன் உனதுதிவ்விய நாமந்துதித்து சுகமாயிருக்க வாழிவாழி.

நாரதர் விருத்தம்.

மண்ணில்தேர்கன்னிநாட்டின் மகிபனேவுரைக்கக்கேளாய்
திண்ணமதாய்விவாகம் தேவரும்மகிழ்வதாக
வண்ணமாய்நடந்ததாலே வந்ததோர்மன்னர்கட்கே
அண்ணலேபோஜனந்தான் அன்புடனளிப்பாய்வேந்தே.

வசனம்.

கேளும் மதிதயராஜனே சந்திரவதியினுடைய விவாகம் தேவர்களும் மகிழத்தக்கதாக நடந்தேறிற்று இனிவந்திருக்கும் பந்து ஜனவர்க்கங்களுக்கு போஜனத்தைநடப்பிப்பாய் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

அப்படியே நடப்பிக்கிறேன் முனிநாதரே.

பொது விருத்தம்.

புளிப்புடனேகாரம்உப்பு துவர்ப்பினிப்பு
  புனிதமுடன் சயப்புடனருசிகளோடு
களிப்புறவே மன்னுதிமன்னரெல்லாம்
  கருதியதோர் புசிப்பதனை யுண்டுஅப்பா
நளிப்புரவேதாம்பூலம் கந்தம்புஷ்பம்
  நாடியேபன்னீருந் தாங்கியாவர்
வெளிப்பட்டே அவரவர்கள்தேசம்புக்க
  வேந்தனிடம் விடைபெற்றுமேவினரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே சந்திரவதியம்மன் திருக்கலியாணத்திற்காக வந்திருந்த பந்துவர்க்க சம்பந்த மன்னுதிமன்னர்களெல்லாரும் அறுசுவைபதார்த்தத்துடன் உண்டுபுசித்து கந்தபரிமள மணி

ந்து தாம்பூலந்தரித்து மதிதயராஜனிடத்தில் விடைபெற்று தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்களென் றறிவீர் சபையோர்களே.

விஸ்வாமித்திரன் வசனம்.

கேளும் மதிதயராஜனே உனதுபுத்திரியின்விவாகம் நடந்தவிஷயத்தில் மெத்தவும் களிப்புற்றேன் இனி நமது ஆசிரமம்போய் வருகின்றேன் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

மகாபாக்கியம் அடியேன்பேரில் சம்பூர்ணகடாக்ஷ மிருக்கவேண்டியது முனிநாதா.

வசிஷ்டர் வசனம்.

அப்பா மதிதயராஜனே கல்யாணம் வெகுநேர்த்தியாகவே நடப்பித்தாய் சந்தோஷம் சந்தோஷம் எனது ஆசிரமத்துக்குப்போய் வருகின்றேன் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

அடியேன்பேரில் என்னாளும்சம்பூர்ணகடாக்ஷம்வைத் தாளவேண்டியது வசிஷ்டமாமுனியே.

நாரதர் வசனம்.

கேளும் மதிதயராஜனே தேவாதிதேவர்களும்கண்டு மகிழத்தக்கதாக சந்திரவதி அம்மனுக்கு விவாகம் யாதொருகுறைவின்றி நடந்தேறியது உனதுபாக்கியமே பாக்கியம் நீமகளைத் தவஞ்செய்து பெற்றது பெரிதல்ல உன்கோரிக்கைப்படி நல்லயோக்கியனான மருமகன் கிடைத்ததற்காக நான்மெத்தவும் சந்தோஷப்பட்டேன் இனிநான் தேவலோகத்திற்குப் போய்வருகின்றேன் வேந்தனே.

மதிதயராஜன் வசனம்.

எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதம் அடியேன்பேரில் பூர்ணகடாக்ஷம் இருக்கவேண்டியது நாரதமகாமுனியே.

பொது விருத்தம்.

வனமிகுமணத்தைநாடி வருமன்னர்முனிவரெல்லாம்
கனமுடன்களித்துஉண்டு நன்றிபன்விடைபெற்றேக
மனமதுகளித்தேகூட மன்னனும்மாதுமொத்து
கனமுடன்பள்ளியுற்றார் கழறினேனறிவீர்தாமே.

வசனம்.

கேளுங்கள் கனவான்களே கல்யாணத்திற்காக வந்திருந்த முனிவர்களும் ரிஷிகளும் வேந்தர்களும் மதிதயராஜனிடம் விடைபெற்று அவரவ ரிருப்பிடஞ்சென்றனர் சந்திரவதியம்மனும் அரிச்சந்திரமகாராஜனும் உண்டுடுத்தி சயனிக்கப் பள்ளியறை அடைந்தனர்களென் றறிவீர்கள் சபையோர்களே.

அரிச்சந்திரனும் சந்திரவதியும் பள்ளியறைக்குப் போகிறபாகம்.



அரண்மனை. கட்டியன். சந்திரவதி. மந்ரி.

அரிச்சந்திரன்-தரு-இராகம்-சஹானு-தாளம் சாப்பு.

பல்லவி.

மயிலே யிதுகாலமே பாராய் கூட
வருவாய் முத்தந் தருவாய் மட.

அநுபல்லவி.

கையில்மான்மதன்வில்லைக் காட்டுகிறான்பாவி
கண்ணேயென்மேலருள் பண்ணேன் இனிசகிக்கேன். மயி

சரணங்கள்.

உன்னைச்சேரவேயானும் ஒகோகோவெகுநாளாய்
உம்பன்கயிலையனை யுருகிப்படுத்திருந்தேன்
தன்னையணையகாலந் தாக்குதலாகுமோ
தாளேனினி மீளேன்மயல்
சாலேன்தனி வாழேன்மட. மயி
வேண்டியேபோனதெய்வம் விளக்கமுடன்கண்டாப்போல்
வித்தகிநீயெனக்கே பத்தினியாகவாய்த்தாய்
தாண்டியெனையேவிட்டு சங்கரன்மருமகனும்
தலைதப்பியே நிலைவிட்டிட
குலைகெட்டுமே அலைவிற்றிட. மயி
சுரதநூலினிற்செப்பும் சூக்ஷமதெரிந்துநாமே
சோகுசுறுகேளிக்கை துணிவாய்நடத்தப்போமே
இரவியின்குலமோங்க ஈசனுமருள்செய்ய
எண்ணிமனம் நண்ணிவுடல்
பின்னிகயற் கண்ணிமட.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமேகிளியேமானே அயோத்தியைவிட்டேவந்து
அன்னமேநெடுநாளாச்சு அரசுஎவ்வாறுகாணேன்
அன்னமேநீதான்சென்று அன்னையின்விடைகைக்கொண்டால்
அன்னமேநமதுநாடு அடைகுவோமன்பாய்த்தானே.

வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரவதி நான் நமதுதேசம்விட்டுவந்துவெகுநாளாயிற்று நமதுராஜ்ஜியம் ஏதாயிறாறோ நீயுன்தந்தையிடஞ்சென்று விடைபெற்றுவந்தால் நமதுதேசத்திற்குப் போவோம்பெண்ணே.

சந்திரவதி வசனம்.

அப்படியேபோய் விடைபெற்று வருகிறேன் பிராணநாதா.

சந்திரவதி விருத்தம்.

தந்தையேவெகுநாளாகத் தவஞ்செய்துஎனையேபெற்று
விந்தையாயிதுவரைக்கு மேனியைவளர்த்தஐயா

மதிதயராஜனிடத்தில் சந்திரவதி புலம்புகிற பாகம்.



தோழி சந்திரவதி கட்டியன் மந்திரி மதிதயன்

உந்தனைப்பிரியநாளும் உற்றதேபெண்ணின்ஜென்மம்
வந்ததின்பயனைக்கண்டேன் மனமதுவாடுதையா.

வசனம்.

என்னை அருந்தவஞ்செய்துபெற்ற தந்தையே உன்னைப் பிரியுங் காலம் வந்துநேரிட்டது என்னசெய்வேன் என்பிதாவே.

சந்திரவதி தரு-இராகம் ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

ஆளன்வரவேசொல்லி அழைக்கிறுரெனைஐயா
அடியாளும்போய்வரவோ சொல்லையேயென்னையா
காலமிப்படியென்றென் கருத்திலெண்ணமற்போனேன்
கழலடிபிறந்திடக் காரம்வந்ததையா ஆள

பெண்ஜென்மமெடுத்தும் பெருந்துயருறவென்றே
பேதையிப்போதறிந்தேன் ஐயாவேயென்னையா
நன்மையாய்ப்பெற்றெடுத்த நாதாக்களைப்பிரிய
நாயகனுல்காலங்கண்டேன் ஐயாவேயென்னையா ஆள

பிறந்தவிடம்பிள்ளைக்கன்றி பெண்களுக்கில்லையெனும்
பேச்சின்றறியலானேன் ஐயாவேயென்னையா
வரந்தந்தசிவன்றன்னை மகளுகியெனைப்படைக்க
மன்றுடாதேனேநீர்தான் ஐயாவேயென்னையா ஆள

நானுஞ்சதமென்றெண்ணி நானுமிருந்தேனிங்கு
நகன்றிடக்காலமாச்சே ஐயாவேயென்னையா
வாழுமனைவேறென்று வருத்தும்மார்தர்மொழியின்
வண்மைக்குள்நானுமானேன் ஐயாவேயென்னையா ஆள

மதிதயராஜன் வசனம்.

அம்மா சந்திரவதி விசனத்தைவிடு இதுஎல்லோருக்கும் இயல் பேயாகும் என்கண்மணியே.

அரிச்சந்திரன் விருததம்.

மன்னனேமதிதயேந்திரா மாமாநானுரைக்கக்கேளாய்
என்னருஞ்செங்கோல்தன்னை யீந்துமேஅமைச்சன்பாகம்
வன்னமுன்மகளைநாடி வந்துதான்வெகுநாளாச்சே
சென்னலோங்கயோத்தியேகச் சிலவதுகொடுப்பீர்போற்றி

வசனம்.

கேளும் எனதுமாமாவே நான்வந்து நெடுநாளாச்சுது அயோத் திக்குப்போக விடைதரவேண்டும் மாமாவே.

மதிதயராஜனிடத்தில் அரிச்சந்திரமகாராஜன் போகவிடைபெற்றுக் கொள்ளுகிறபாகம்,



சுந்தரரேகை சந்திரவதி அரிச்சந்திரன் மதிதயராஜன்

அரிச்சந்திரன் தரு இராகம்-எமுனாகல்யாணி தாளம்-ரூபகம்.

பல்லவி.

விடைகொடுப்பீர் வேந்தேபோக விடைகொடுப்பீர்

அநுபல்லவி.

தடைகளின்றியே சந்தோஷமாகவே
தக்கவயோத்திக்குச் சந்திரவதியுடன் விடை

சரணங்கள்.

வீட்டைவிட்டேவந்து வெகுநாளாச்சுது
நாட்டையடைந்தினி நானரசுசெய்ய விடை

சத்தியமாகவே தான்வருந்தோதிட
பத்தியாய்க்குடிகளைப் பாலிக்கநான்போக விடை

உந்தன் திருவடி உள்ளத்தில்நாட்டுவேன்
சந்திரவதியுடன் தன்னுடநான்செல்ல விடை

மதிதயராஜன் தரு இராகம்-நாராயணி தாளம்-ஆதி.

பல்லவி.

சுகமாய்ப்போய்வாரும்
சூரனே சொல்லொணு வீரனே மருகனே

அநுபல்லவி.

மகளோசிறியவள் மன்னுவனுதினமு
மனமதுகளிப்புறும் இன்மதம்நடத்துவீர் சுக

சரணங்கள்.

சந்திரவதியாள்குற்றந் தனைப்பாராட்டாதேயா
வந்திடாக்கோபங்கொண்டால் வணங்கியடிபணிவாள்
வருத்தமதின்றியே கருத்துடனிருத்துவாய் சுக

நீதிநெறியுலக நேர்ப்புமுணர்ந்தவள்
ஜாதிமுறையுஞ்செங்கோல் தகமையுமறிந்தவள்
சார்ந்தேயென்மகளுடன் சேர்ந்துநீ மனமொத்து சுக

மாதர்நீதிகளெல்லாம் வழிவறத்தெரிந்தவள்
சாதனக்களபஞ்செய்யுஞ் சார்த்திலுமுயர்ந்தவள்
சாந்தகுணமுடைய சந்திரவதியாளுடன் சுக

சந்திரவதிவிருத்தம்.

அன்னாலேசொந்தவீடு அயோத்தியென்றறிந்தேனிப்போ
அன்னாலேகணவர்பின்னே அடியாளும்போய்நான்வாரேன்
அன்னாலேயென்மேல்வைத்த வாசைதானகன்றிடாதே
அன்னாலேவாழ்த்தியென்னை யன்புடனனுப்புவாயே.

கேளும் என்பிதாவே நான் என்புருஷன்கூட அயோத்திக்குப் போய்வருகின்றேன் என்மேல்வைத்த அன்பைமறவாமல் வாழ்த்தி விடைதாரும் தந்தையே.

மதிதயராஜன் தரு-இராகம்-துஜாவந்தி தாளம்-ஆதி.

பல்லவி

போய்வருவாய்மகளே உன்மாமிவீடு
போய்வருவாய்மகளே.

அநுபல்லவி.

நீயொன்றையும்மனதில் நினையாதேஅம்மா அம்மா
நினைக்கும்போதடிக்கடி நினைப்பார்க்கநான்வருவேன் போ

சரணங்கள்.

தாய்மனையாளும்வாழ்தல் தகாமைதையலர்க்கென்றே
சாற்றும்விதிமுறையைத் தானுணர்ந்திட்டகண்ணே போ
கணவன்மொழிக்கிடறு காட்டாதுகாட்டாதே
கட்டிக்கருப்பேதேனே கதலிகற்கண்டமுதே போ
ஆளன்சொற்படிநின்றால் அடைவாய்பெரும்பதவி
அன்னமேநான்செய்ததவச் சொன்னமேயென்சுந்தரமே போ
ஆடைபதினைபணி யடிக்கடியனுப்புவேன்
அன்பாகவாழ்ந்திருப்பாய் அன்னமேகண்மணியே போ
வேணும்புத்திமதியுன் வேந்தனுக்குமுரைத்தேன்
வேண்டாம்மகளேதுக்கம் விட்டுநீசிவிகையேறி போ

அரிச்சந்திரன் விருத்தம்.

மாமாநானெனதுதேசம் மகிழ்வுடன்சென்றுவாரேன்
மாமாநான்மகளுநானும் மனமொத்துசுகமாய்வாழ்ந்தே
மாமாவென்குலம்விளங்க மக்களும்பெருகவேண்டி
மாமாநீவாக்களிப்பீர் மலரடிபோற்றிபோற்றி.

வசனம்.

கேளும் எனது அருமைதங்கிய மாமாவே நானும் உமதுபுத்திரியாகிய சந்திரவதியும் மனமொத்து வாழ்ந்து சகலசம்பத்துடன் புத்திரசந்தானம் பெருகும்படிக்கி ஆசீர்வதித் தனுப்பவேண்டு மாமாவே.

மதிதயராஜன் விருத்தம்.

மருமகனேநீயுமென்றன் மகள்சந்திரவதியும்வாழி
மருமகனேயுனதுசெங்கோல் மண்ணின்மீதோங்கவாழி
மருமகனேசுகசம்பத்தும் மற்றதுமடைவாய்வாழி
மருமகனேயுனதுகீர்த்தி மகாகோடிகாலம்வாழி.

சுந்தரரேகையிடத்தில் சந்திரவதிபுலம்புகிறபாகம்.



தோழி சந்திரவதி மந்திரி சட்டியன் அரிச்சந்திரன்

வசனம்.

வாழிவாழி அஷ்ட ஐஸ்வரியமும் புத்திரசம்பத்தும் கீர்த்தியும் மென்மேலும் பெருகவும் வாழிவாழி மருமகனேவாழி.

சந்திரவதி வசனம்.

அம்மா என்னைப்பெற்றதாயே இதுவரையில் உங்களைவிட்டுப் பிரியாதிருந்தேன் இப்போது எப்படி என்மாமியார் வீட்டுக்குப்போய் தனியேயிருப்பேனம்மா இதைநினைக்குந்தோறும் துக்கம் மென்மேலும்பெருகுகின்றதே இதற்கென்னசெய்வேனம்மணி.

சுந்தரரேகை தரு-இராகம்-சாமா-தாளம்-ஆதி.

பல்லவி.

அழவேண்டாமம்மா ஆளன் மனைக்கேபோக

அநுபல்லவி.

மழுதரித்தோனளித்த மணியேமரகதமே — அழ

சரணங்கள்.

மண்ணில்மாதுபிறத்தல் வாழயல்மனைக்கன்றி
மாதாஇடத்திற்றங்க வசமோ உத்தமகண்ணே — அழ

உன்னைப்பெற்றதாலம்மா உலகினில்சத்தியமன்னன்
உற்றான் மருகனென்றே உம்பவர்புகழவாழ்வாய் — அழ

போபோகுமுன்னுன்றன் புகழயோத்திக்குப்போவாய்
எதுவேண்டிலுன்தந்தை இனிவாயனுப்புவாரே — அழ

கணவனடிபணிந்தால் காணும்பெரும்பதவி
கண்ணேஅயோத்திசென்று கருத்தாய்வாழ்வாய்நீதாயே — அழ

தந்தையாய்குருதெய்வம் தானறியிவரென்றே
தையலேவிண்ணவர்கள் சார்ந்துனைப்புகழ்வாரே. — அழ

சுந்தரரேகை விருத்தம்.

என்தங்கக்கொழுந்தேயம்மா ஈசனார்மகிழ்ந்தளித்த
நன்மையிலுயரயோத்தி நாடிநீகணவன்பாதம்
உன்மனந்தனிலேநாட்டி வுயர்பதிவிரதம்பூண்டு
மன்மதனழகைமாற்றும் மக்களைப்பெற்றுவாழ்வாய்.

வசனம்.

சேளாயம்மா என்னருமைக் குழந்தையாகிய சந்திரவதியே சுபம் நீயுன்கணவனையே தெய்வமென்று அனுதினமு மலரடியைத் துதித்து பதிவிரதாதருமம்பூண்டு மன்மதனைப்பழிக்கத்தக்க அழகையுடைய சற்குண புத்திரனைப்பெற்று சுகமாய் வாழ்வாயம்மா.

அரிச்சந்திரன் விருத்தம்.

என்னருங்கிளியேதேனே யிளங்குயிலொளியேமானே
நன்னிலைபாலேவந்தோன் நானென்றுசொல்வேனிங்கு
உன்னதமானகோவி லுண்டுநாம்சென்றேவாழும்
கன்னிசாம்பவியைக்கண்டு கழலடிபணிவோம்வாராய்.

வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரவதி இந்தப்பாலைவனத்தில் சிவசாம்பவிகோயிலிருக்கின்றது நாமிரண்டுபேரும் போய் தெரிசித்து அம்பாளின் சிலவுபெற்று முன்னுக்குச்செல்வோம் வாராய்கண்ணே.

அரிச்சந்திரன் விருத்தம்.

திரிபுரமெரித்தோன்பாகஞ் சேர்ந்திருப்பவளேயம்மா
அரியயன்தேடிக்காணு வண்ணலோடாடுந்தேவி
விரிசடைகங்கைநாதன் மேவிடுங்கனியேதாயே
தெரியேனுன்பணியவந்தேன் சேவடிகாட்டுவாயே.

வசனம்.

ஓ சங்கரி கொடுத்தவரத்தின் பலத்தால் என்கோரிக்கை யீடேறிவந்தேன் உமது திருப்பாதங்களைத் தரிசிக்கச்செய்வாய் சாம்பவி தாயே.

பராசத்தி விருத்தம்.

அப்பனேஅயோத்தியாளும் அரசனேநீதான்சென்ற
நன்மையெவ்வாறடைந்தாய் நவிலுவாய்தெரியத்தானே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரனே நீசென்றகாரியம் முடிந்த வகையைச் சொல்லுவாய் அரசனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

உனதருளாலேதேவி யற்றுமேகன்னிதேசம்
தனிமணச்சாலைபுக்கி தராதிபர்மகிழ்வதாக
கனமுளபரமகுட்சம் கண்டுநானுரைக்கவேந்தன்
இவைமாத்திம்மாதுதன்னை யீந்தனனெனக்கேதாயே.

வசனம்.

கேளும் அம்மா மகேஸ்வரி உன்னுடைய் வுத்திரவின்படி நான் கலியாணமண்டபஞ்சேர்ந்து இந்தகன்னியிடம் இருந்த பரமரகசியத்தை வெளிவிட்டேன் மதிதயமகாராஜன் மிகவும்சந்தோஷித்து தன் மகளாகிய இந்த சந்திரவதியை யெனக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்தார் அம்மா.

சந்திரவதி விருத்தம்.

அம்புவிதனிலெல்லோரும் அடிபணிந்தேத்துகின்ற
சம்புவினிடதுபாதந் தங்கியதாயேபோற்றி
தம்புருநாரதாதி சுரர்களும்பணியுஞ்சத்தி
தெய்யுவங்களுக்களித்தே சீருடன்காப்பாய்போற்றி.

பராசத்தி விருத்தம்.

தம்பதிமாரேநீங்கள் தரணியிலோங்கிவாழ்க
தம்பதிமாரேபுத்ர சம்பத்தும்பெருகிவாழ்க
தம்பதிமாரேயுங்கள் சத்தியநிலைத்துவாழ்க
தம்பதிமாரேநாடு தான்சேர்ந்தேவாழ்கவாழ்வீர்.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா அம்மா சந்திரவதி நீங்கள் சுகமாய் நாடு சேர்ந்து சகலசம்பத்தும் பெருகி புத்திரசந்தானம்பெற்று சத்திய மோங்க வாழ்வீர்கள் வாழிவாழி.

பொது - விருத்தம்.

மன்னவாமாதினோடு மஹேஸ்வரிதனைப்பணிந்து
மன்னனுவிடைகைக்கொண்டே மகிழ்வுடனிரதமேறி
மன்னனுவாத்யமேளம் வாசிக்கவயோத்திவந்தே
மன்னனங்குள்ளதெல்லா மங்கைக்குகாட்டுவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோரே அரிச்சந்திரமஹாராஜனும் சந்திரவதி யம்மனும் பராசத்தியிடம் விடைபெற்று சகல மேளவாத்தியங்களும் ஒலிக்க ரதாரூடராய் அயோத்தியடைந்து அங்குள்ள விநோதங்களை சந்திரவதியம்மனுக்குக் காட்டுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன் தரு-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னமேநீவாராய் அயோத்தியின் அதிசயந்தனைப்பாராய்


அநுபல்லவி.

அன்னமேநான்செய்த முறைதவப்பலத்தினால்
முத்தேநீகிட்டினாய் முனைந்துஎன்கைப்பற்றி அன்

சரணங்கள்.

வேதம்மறையோர்வாழும் வீதியிதுநிலாமும்
விங்கைகடனம்புரி வேசியர்ஸ்ரேணியது
பாதகம்புரியாமல் பணிமாறும்வணிபர்கள்
பசுமுடனேவாழும் பாவையேவீதிஎன்றேன் அன்

அரிச்சந்திரமகாராஜனும் சந்திரவதியும் அயோத்திக்கி வருகிறபாகம்.



வீராதிவீரரான வில்லாளர்வீதியிது
விதியறிந்துரைநீல வேணியமைச்சர்வீதி
காராளரிருப்பிடங் கண்ணேதருமவான்கள்
கருகிப்பலகுலத்தோர் களிக்கும்வீதிகள்பாராய் அன்
சித்திரக்காவடி செழுங்கொலுவாசலிது
தேசம்பரிகள்திரும் சீருறுமிடமிது
பத்தினிநீவாழும் பண்புளவரண்மனே
பாரேவுன்மனதை தேறுவாயடிஎன்றன் அன்

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்யகீர்த்தி யன்பனேநமதுநாட்டில்
இப்பவேதகுதியுள்ள இளைஞர்கள்தனைநீதேடி
கொப்பவேகளஞ்சியத்திற்கோரும்பொன்னெடுத்துக்கொண்டே
ஒப்பவேசஹஸ்திரத்தெட்டு ஒளிமணம்முடிப்பாய்மந்திரி.

வசனம்.

கேளுமப்பா சத்தியகீர்த்தி நமதுநாட்டிலுள்ள சதுர்வித ஜாதிகளில்தேடி ஆயிரத்தெட்டு விவாகங்கள்செய்விப்பாய் அப்பாமந்திரி.

சத்தியகீர்த்தி வசனம்.

மஹாசந்தோஷம் அப்படியே செய்விக்கின்றேன் சுவாமி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்பா கட்டியனே நமது நாட்டிலிருக்கும்படியான நாலுவகை ஜாதிகளில் கலியாணத்திற்குத் தகுதியான சிறுவர்களைக்கூட்டிவருவாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியே கூட்டிக்கொண்டுவருகிறேன் சுவாமி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

வேதியரி லிருநூறு முடிக்குகந்த
வேளாளர் நானூறு விஜயம்போன்ற
ஆதிபனே வைசியரி லிரண்டுநூறு
அன்பாகச் சூத்திரரி லிருநூற்றெட்டு
பாதிமதியோன்மகிழும் பந்தலிட்டுப்
பண்பாக வெடிகிளம்பி மணஞ்செய்வித்தேன்
ஏதுனைப்போல் மன்னருண்டோ வென்றுசெப்பி
யேத்தினர் குடிகளெல்லாம் வாழ்த்தினரே.

வசனம்.

கேளும் மஹாராஜனே! அந்தணரில் 200 வேளாளரில் 400 வைசியரில் 200 சூத்திரரில் 208 ஆக 1008 கலியாணம் வெகு ஆடம்பரத்துடனே நடத்தினேன் குடிகளெல்லாம் மகிழ்வடைந்து தங்கள் கீர்த்தியைக் கொண்டாடினார்கள் அரசனே.

அரிச்சந்திரன் வசனம்.

மஹாசந்தோஷம் மஹாசந்தோஷம் அப்பா சத்தியகீர்த்தி.

அரிச்சந்திரன் விருத்தம்.

பத்தியாய்சிவத்தைநாடி பாரநற்றவம்புரிந்து
நத்தியென்குலம்விளங்க நாயகிகெர்ப்பந்தன்னில்
புத்திரனடையவேண்டிப் போய்வாரேன்வருகுமட்டும்
உத்தியிலுயர்ந்தமந்திரி யுகந்தென்றனரசைக்காப்பாய்.

வசனம்.

கேளாய் அப்பா சத்தியகீர்த்தி யென்குலமனைக்கு தீபமில்லா திருப்பதால் நான் சரயுநதிச்சாரல்புக்கி பரமசிவத்தைக்குறித்து தவஞ்செய்து புத்திரனடைய வரம்பெற்று வருகின்றேன் நீ அரசாட்சியை கவனத்துடன் நடப்பித்துக்கொண்டிருப்பாயப்பா மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

உலகினிலடையும்பாக்கியம் உம்பனேதத்திரரன்றி
உலகினில்மற்றும்வேறு உரைக்கவுமுடிதாநாதா
நிலையதுவழுவிடாமல் நேர்மையாயரசைக்காப்பேன்
நிலையுடன்சிவத்தைநாடி நீர்வரம்பெறுவீர்வேந்தே.

வசனம்.

கேளும் சுவாமி உலகிலுள்ளவர்கள் அடையத்தக்கது புத்திர பாக்கியமன்றி வேறுண்டோ தாங்கள் ஆக்கியாபித்தபடிக்கே இந்த நாட்டைக்காத்திருப்பேன் தாங்கள் பரமசிவனருளைப்பெற்று வருவீர்கள் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்

மாதேகேள்உலகந்தன்னில் மக்களைப்பெற்றோர்மேலோர்
மாதேகேள்மைந்தரில்லார் மலடரென்றிசைக்குள்ளாவார்
மாதேநாமதைவிலக்க மயூரனையளித்தோன்பாதம்
மாதேநாம்பேணவேண்டி வனத்திற்கேவருகுவாயே.

வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரவதி! பிள்ளையில்லாதவர் மலடரென்று உலகத்தார் சொல்லுமொழி நம்மை அடையாதிருக்கும்படிக்கி நாம காட்டிற்குச்சென்று சிவத்தைதுதித்து புத்திரனளிக்கும் வரம்பெற்று வரலாம் வருவாயடி கண்ணே.

சந்திரவதி வசனம்.

கேளும் என்பிராணநாதா நீர் சொன்னதைக்கேட்டு நான் மெத்தவும் சந்தோஷமானேன் அடியாளுக்கும் அதே கியாபகமாயிருந்தது வாரும்போவோம் சுவாமி.

அரிச்சந்திரமகாராஜனும் சந்திரவதியும் ஈஸ்வரரைக்குறித்து தவஞ்செய்கிறபாகம்.



மந்திரி. சந்திரவதி · அரிச்சந்திரன் ஈஸ்பரர்.

பொது விருத்தம்.

வேந்தனும்புத்ரசோபம் மீறியேசிவத்தைநாடி
வேந்தனும்தபசுசெய்ய வேண்டியேசகியாளோடு
வேந்தனுமரசுதன்னை விதிதெரிமந்திரிபாகம்
வேந்தனும்லுப்பிவித்தே மேவியேசுரஞ்சென்றூரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே! அரிச்சந்திரமகாராஜன் புத்திர சோபம்நீங்க அரசைமந்திரிவசம் லுப்பிவித்து தானுடபத்தினியும்மர வுரிதரித்து சிவனைக்குறித்துத் தவஞ்செய்யப்போகின்றவிதங் காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன் தரு-இராகம்-சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வருவாயடிபெண்ணே தவஞ்செய்ய வருவாயடி என்கண்ணே

அநுபல்லவி.

பெருமானடியிணைப் பேணிமனதின்குறை
பேரதிவ்வியமகனைப் பெறவேயென்னுடன்கூட

சரணங்கள்.

பஞ்சாக்கினிவளர்த்தே நடுஸ்தம்ப்பம்
பற்றிநான் மேல்நடித்தே நடுஸ்தம்பம்
பற்றிநான் மேல்நடித்தே
அஞ்சாமல்காலெடுத்தே ஒன்றையூன்றி
அரனுமந்தனைப் படித்தே
நெஞ்சதையவன்பாதம் நிறுத்தியோர்நினைவாகி
நீலகண்டனருளால் நீபாலன்றன்னைப்பெற வரு

பூவுலகமுமேத்தும் அவனடியைப்
பொன்னுலகமும்போற்றும்
தாவுங்குறையையோட்டும் பணிபவர்முன்
தன்னருளொளிகாட்டும்
கோவும்வேங்கையிரண்டும் கூடிவாழ்ந்திடச்செய்யுங்
கொற்றவனருளினால் குமரனைப்பெற வரு

தேவர்களும்பணியுந் திருநாமந்
சித்தர்களுமணியும்
மூவர்களுங் கனியும் நமக்கொரு
மோசம்வாரா தினியும்
காவலனடியோரின் கர்த்தன் கயிலைவாசன்
கழலைத்துதித்துநீதான் காளைதனைப்பெற வரு

அரிச்சந்திரன் தரு-இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சம்போஹர சம்போஹர சம்போஹர வருவாய்
அம்புலியைச்சடையிலிட்ட அரனேவரந்தருவாய்சிவ சம்போ

மானும்மழுதாநோங்கிட வகுத்தபரமசிவமே எங்குந்
தானாய்நின்றபரனேயென்முன் தயவாய்வாருந்தவமேசிவ சம்போ

கொன்றைதும்பைமுடியுஞ்சுப குணனேயிதுகாலம் உனை
அன்றிவேறுகதிகாணேனே ஐய,வென்னஜாலம்சிவ சம்போ

காலன்றனையன்றுதைத்த கடலேயென்முன்தோன்றும் இந்த
ஞாலமீதிலுனைவிடயார் நாதவன்வரவேண்டும் சிவ சம்போ

சுரர்கள்தனைக்காகஅன்று சுரதறுண்டநாதா இப்போ
வரவென்றன்முன்தடைசெய்திடு மவன்மமவிடும்பாதா சிவ சம்போ

பாலனிலாப்பாவியெனும் பழிநீக்கிடத்தேவேசுவாமி
சாலவுன்றனடியேத்தினேன் சமயமெனக்காவேசிவ சம்போ

நத்தும்வினைபோக்கஎன்முன் நாடியிங்குவரவே சொல்லும்
முத்துசுவாமிகோரும்வரம் முன்னந்துதினந்தரவேசிவ சம்போ

பரமசிவன் விருததம்.

அரசனேயென்னைக்கோரி அனலின்மேற்கம்பம்நாட்டி
அரசனேயொருகால்தூக்கி அருந்தவம்புரிவதேது
அரசனேயுனக்கேநல்ல அம்மையும்பதியளித்தே
அரசனேயிருக்கச்செய்தும் அழைத்தவாறேதுசொல்வாய்.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா உனக்கு தனகனகவஸ்து வாகனமுங் கொடுத்திருக்க என்னையிப்போதழைத்தகாரியம் என்னசொல்லும் பிள்ளாய் ராஜனே.

அரிச்சந்திரன் தேவாரம்.

எங்களாண்டவனேபோற்றி யிறைவனேநின்றாள்போற்றி
துங்கவாமக்களின்றி துரைத்தனம்அருந்துமென்ன
மங்களகுணத்துளோனே மைந்தர்பாக்கியம்நான்கொள்ள
சங்கராதிவ்யவாக்கே தானளித்திடுவாய்போற்றி.

வசனம்.

ஆண்டவனே வமிசவுத்தாரஞ்செய்ய புத்திரபாக்கியந்தவிர 'மற்றபாக்கியமெல்லாமிருந்தும் பயனென்ன ஆனதால்அழைத்தேன் புத்திரபாக்கியமடைய அருள்செய்யவேண்டும் வேந்தனே.

பரமசிவன் வெண்பா.

உந்தன்முறைக்கெமகிழ்ந்தேன் உலகில்நல்லகீர்த்திவர
மைந்தனுனக்கேபிறப்பான் மங்கையினல்-சந்திரனைப்
பழிக்குமழகுடையான் பலகலைபுந்தானுணர்வான்
செழிக்குங்குணமவனல் தேர்.

வசனம்.

கேளாய் அப்பா ராஜனே! சகலகலைக்கியானமறியத்தக்கவனை ஒருவன் சந்திரவதிக்கெர்ப்பத்தில் பிறப்பான் அவனல் உன்குலமீடேறுமப்பா ராஜனே.

அரிச்சந்திரன் சந்திரவதி
போற்றி -விருத்தம்.

சம்புவேபோற்றி தயாபராபோற்றி
நம்புவோர்தமைக்கே நாடுவோர்போற்றி.

வசனம்.

மகாபாக்கியம் அடியாரைக்காக்கும் ஆண்டவனேபோற்றி.

பரமசிவன் விருத்தம்.

மன்னனேவாழி மாதுடன்வாழி
சின்னவன்பெருவாய் சொல்கிறேன்வாழி.

வசனம்.

அப்பாராஜனே! நாம் கயிலைக்கிப்போகின்றோம் வாழிவாழி.

பொது - விருத்தம்.

வேந்தனுந்தவசியற்றி விமலன்றன்னருளைப்பெற்று
சாந்தமாய்தனதுதேவி தரித்தகெர்ப்பமுமேயோங்கி
மாந்தளிர்மேனிகுன்றி மாதம்பத்தானதாலே
வாய்ந்ததோர்கெர்ப்பநோயின் வளர்ப்பினித்தெரிகுவீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே! அரிச்சந்திரமகாராஜன்பெற்ற பரமசிவனருளினல் சந்திரவதியம்மன் கெர்ப்பமாகி பத்துமாதமானதால் இனிகெர்ப்பவேதனைப் படுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

பல்லவி.

என்னமோயெனக்கொரு விதமாய்வருகுதடி
என்னென்றுசொல்வேனம்மா பாங்கியே இதை
யேதென்றுசொல்வேனடி தோழியே.

அரிச்சந்திரமகாராஜனிடத்தில் தோழியாகிய சவுந்தரவல்லி வருகிறபாகம்.



அநுபல்லவி.

தின்னமாய்வயிற்றினுள் திக்குத்திக்கெல்லாஞ்சுற்றித்
திரும்புதென்னமோகாணேன் பாங்கியே. என்ன

சரணங்கள்.

நெஞ்சில்படபடென்று நீள்மூச்சுவாங்குதடி
நிற்கவொட்டாமலிடை நெளிக்குதே தடையடி
கொஞ்சியாடியதெல்லாங் குறைசெப்ப இடமாச்சே
கூறவுமனம்வெட்கங் கொள்ளுதடிபாங்கி என்

விலாவிலென்னமோவந்து விரவாடிக்கிறுப்போல்
வெம்பிடநடுமுது விரியுதென்னடிசெய்வேன்
கலகலங்கியகீருங் கால்வாய்ப்பெருகுதடி
கண்ணேமணியேதோழி கருத்தென்னவுரைபாங்கி என்

தோழி வசனம்.

கொஞ்சம் பொறுத்திருப்பாய் அம்மணி யிந்ததேதி நான் ஓடி சூரியனுக்குத் தெரிவித்துவருகிறேன் தாயே.

அரிச்சந்திரன் தரு-இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னர்மன்னருக்கெல்லாம் மன்னரிச்சந்திரா
மஹாராஜனிதோவந்தான் கொலுவிருக்க
மகுடவர்த்தனன் வந்தான்.

அநுபல்லவி.

அன்னநடைவஞ்சிய ராடச் சவாரிபோட
அந்தணர்சித்தர்யோக ராசிகளோதிட
நன்னகர்மாந்தர்களும் நாடிப்பணிந்திட
நாலுத்திக்கிலுங்கீர்த்தி நாட்டினிலோங்கிட

நல்லுளந்தங்கியே நாவிலொணுமகிமையாய்
அல்லும்பகலும்சிவத்தை யறிவினில்நிறுத்திய மன்

சரணங்கள்.

இரத்தினமிழைத்தமுடி கெத்திப்பட்டமுந் துன்ன
நேராய்முத்துவடமும் நிகழ்வலயமு மின்ன
சத்தியகொடிதுலங்கச் சாமரைபேரி சொன்ன
சான்றோனிவனேயெனச் சகலருந்துதி சொன்ன
நித்தியகருமம்நெறி நிலைபிசகாத நேயன்
நிகருண்டெனவேவரும் நினைக்கப்போகா தூயன்
பத்தினிமாதுபாகம் பண்பித்திருந்திடும் மாயன்
பலகலைநீதிபத்தி பாரில்சத்திய வாயன்

பாம்பையின்னெலி பம்பம்பம்மென
ஜம்மையின்ஜனர் ஜம்ஜம்ஜம்மென
கொம்புகள்தொனி கும்கும்கும்மென
தும்புருஇசை தொம்தொம்தொம்மென

ஜொலிக்க பகைவரை கெலிக்கதவனிலே
பலிக்க சத்தியம் ஏலிக்க புகழுடன்
சொல்லொணுதகீர்த்தி தோய்ந்திடஎங்கணும்
மெல்லொணுதசித்தி மேன்மைகள்தங்கிய மன்

தோழி விருத்தம்.

அரசரேவுமதுதேவி அடைந்ததாபத்துமாதம்
அரசரேகெர்ப்பநோயின் அடையாளங்காட்டக்கண்டே
அரசரேயோடிவந்தேன் அனுப்பிகட்டியனையிப்போ
அரசரேமருத்வமாதை அழைத்திடச்சொல்குவீரே.

வசனம்.

கேளும் சுவாமி சந்திரவதி அம்மன் பத்துமாதமானதால் கெர்ப்பநோய்படுகின்றாள் சீக்கிரத்தில் மருத்துவச்சியை யழைப்பிக்கவேண்டும் மஹாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

புத்தியிலுயர்ந்தேலோகம் புகழ்ந்திடநெறியைப்போன்ற
சத்தியகீர்த்தியென்னுந் தனையனேமந்திரிகேளாய்
பத்தினிகெர்ப்பபாதை படுவதால்மருத்துவத்தில்
முத்தியேதெளிந்தமாதை முன்னுதாய்வரச்செய்வாயே.

வசனம்.

கேளாயப்பா சத்தியகீர்த்தி யென்தேவி கெர்ப்பநோய் படுவதால் வேகசாலியாகிய மருத்துவச்சியை சீக்கிரத்தில் வரச்செய்வாயே.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் மகாராஜனே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

அப்பனேகட்டியக்காரா அரசன்றன்தேவிதானும்
இப்பவேகெர்ப்பவேதை யெடுத்திடக்கண்டதாகச்
செப்பவுந்தோழிவந்தே செம்மலுமாக்கியாபித்தார்
ஒப்பவேமருத்துவமாதை யோடிநீயழைத்துவாராய்.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியனே நமதுராஜரின்தேவி கெர்ப்பநோய் படுவதால் மருத்துவச்சியை சீக்கிரம்போயழைத்துவருவாயப்பா கட்டியனே.

சந்திரவதிடத்தில் மருத்துவச்சி வருகிறபாகம்.



கட்டியன் வசனம்.

இதோ வொருநொடிக்குள் அழைத்துக்கொண்டு வருகிறேன்சுவாமி.

கட்டியன் விருத்தம்.

மருத்துவமாதே மன்னனுமுன்னே
கருத்துடனழைத்தார் கடுகியேவருவாய்.

வசனம்.

கேளாய் மருத்துவமாதே! அரசனழைப்பதால் சீக்கிரத்தில் வருவாயம்மா.

மருத்துவச்சி வசனம்.

அப்படியே வருகின்னேனப்பா கட்டியனே.

மருத்துவச்சி தரு-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

மருத்துவமாதுவந்தாள் கைவாசியுள்ள
மருத்துவமாதுவந்தாள்.

அநுபல்லவி.

வருத்தமுற்றேகலைக்கும் மங்கையாள் துயர்நீங்க
வாட்டமாகவேகுந்தி ஓட்டமும்நடையுமாய் மரு

சரணங்கள்.

சுக்குத்திப்பிலியுடன் சொல்லுமிளகுகோஷ்டஞ்
சொகுசதிமதுரமுஞ் சூரணித்தேயதில்
திக்குகளினிலுள்ள செடிமூலிகைகலந்தே
தேனுடன்பனம்பாகுஞ் சேர்த்தவுண்டைதாங்கியே மரு

மாதர்கள்பிரசவ மாகுங்காலேயிலவர்
மனந்தளராமல்நல்ல மார்க்கந்தனைப்படித்து
சீதளந்தாக்கிடாமல் சிசுவையளிக்கச்செய்துஞ்
செப்பெணுமிலையுடன் சிறலதறதனைக்காக்கும் மரு

என்னைப்போலிவ்வுலகி லிருப்பரோமருத்துவர்
என்றேகுலதெய்வத்தை யேத்திமனதில்நாட்டி
முன்னேயெனக்குக்கீர்த்தி மொழுதிரச்செய்வாயென்றே
மூர்க்கமாய்த்தன்பெருமை மோடியாய்பேசியிதோ மரு

மருத்துவச்சி விருத்தம்.

விண்ணவர்மகிழுங்கோவை வேந்தனேஅயோத்தியாளும்
அண்ணலேயழைத்தவாறு அடியாளுக்கருள்வீர்போற்றி.

வசனம்.

போற்றிபோற்றி அடியாளை அழைத்தகாரியந் தெரியப்படச் சொல்லவேணும் மகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மருத்துவப்பெண்ணே யென்றன்
மாதினைகெர்ப்ப நோய்தான்
வருத்துதாம் நீயுஞ்சென்றே
வகையேதோ புரிகுவாயே.

வசனம்.

கேளாய்பெண்ணே மருத்துவச்சி எனதுதேவிக்கு கெர்ப்பவேதனைகண்டிருக்கிறதாம் நீசென்று அதிஜாக்கிறதையுடன் வேண்டியவாறுசெய்வாம்.

மருத்துவச்சி வசனம்

மஹாபாக்கியமப்படியே செய்கிறேன் என் ஆண்டவனே.

மருத்துவச்சி விருத்தம்

என்னடியம்மாசந்திரவதி ஏந்திழாயுன்றன்னுயைப்
பன்னடியெனக்குத்தோற்றி பண்பினிலுயர்ந்ததாயே.

வசனம்.

அம்மா என் ராஜாத்தியே உனக்கு என்னமா யிருக்கின்றது தெரியச்சொல்லுவாயம்மா.

சந்திரவதி விருத்தம்.

மந்திரமுணர்ந்தநல்ல மருத்துவத்தாயேகேளாய்
வந்திட்டநோயின்கூறு வழுத்தவுமாகாதம்மா
மைந்தனைப்பெறவேவேண்டி மஹாதவம்புரிந்தோரிந்தச்
சிந்தனைப்படுவதுண்டோ செப்புவாயெனக்குத்தானே.

வசனம்.

அம்மா மருத்துவச்சி அந்தநோயின்கூறு என்சொல்வேனடி பிள்ளைக்காகத் தவமிருந்துபெறுவோர்க ளிந்ததுய ரடைந்ததுண்டா சொல்வாயடி தாயே.

மருத்துவச்சி வசனம்.

அம்மா எல்லோருக்குமுண்டு உனக்கு என்னவிசேஷமானநோ யெடுத்தது தெரியச்சொல்லுவாய் தாயே.

சந்திரவதிவிருத்தம்.

நாணமுமாகுதம்மா நவின்றிடப்போமோகேளாய்
சாண்வயிறதிலேதாயே தனியடிவாரந்தன்னில்
கோணமாயங்குமிங்கும் குடுகுடென்றுலாவுறுப்போல்
காணவுமானேன்பெண்பால் கடைப்பிறப்பறிகுவாயே.

வசனம்.

அடியம்மா அடிவயற்றில் யேதோ சங்கடமாகின்றது யேதோ முட்டுகின்றது பலவித ஆயாசமாகின்றது இந்தபெண்ஜென்மம் கடைப்பிறப்படி தாயே.

மருத்துவச்சி விருத்தம்.

ஆதிசத்தியுமையவளும் பெண்ணேயாகும்
அருந்ததியும் ஆகாயவாணிபெண்ணே
ஜோதியுளலட்சுமியும் பெண்ணேயந்த
சுருதிபுகழ்கலைமகளும் பெண்ணே அம்மா
எதிலுமிப்பெண்ணுருவே உயர்ந்ததென்று
எண்ணியல்லோமாலொருநா ளெடுத்துக்கொண்டார்
நீதிதனிலுயர்ந்தவன்பால் வந்ததேவி
நின்ஜென்மம்புநிதமென நினைப்பாயம்மா.

வசனம்.

அம்மா! பார்வதி, லட்சுமி, அருந்ததி, ஆகாயவாணி, சந்திரவதி யிவர்களெல்லாம் பெண்ணல்லவோ இதைச்சிறந்ததென்று மாயனும் பெண்ணுருவம் எடுக்கவில்லையா அதிலும் உன்ஜென்மம் மெத்தசிறந்ததே றறிவாயம்மா தாயே.

சந்திரவதி பிரசவ தரு-இராகம் கெண்டா-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னசெய்வேனடி அம்மா அம்மா ஐயோநான்
ஏதுசெய்வேனடி

அநுபல்லவி.

பெண்ஜென்மமறியடி பெருந்துன்பக்குகையடி
பேதையேயிதென்ன பிரளையஞ்சொல்லடி

வசனம்.

அடிமருத்துவச்சி இந்தஜென்மம்போதும் இந்தத்துயரமும்போதுமடி அம்மா.

மருத்துவச்சி வசனம்.

சகலமும் தெரிந்தவளாச்சுதே இப்படித் தியங்கலாமா கொஞ்சம்பொறுப்பாய் தாயே.

தரு.

சரணங்கள்.

கல்லுமண்ணுமாய்க் கருதிப்பிறத்தல்மேலு
காட்டில்மிருகமாகில் கனங்கனம்வெகுமேலு
தொல்லுலகினில்தாயே தோகைபிறத்தல்பாழு
துன்பத்திலிதுமெத்த துயரடிநீகேளு
துடிக்குதேவிலாவில் இடிக்குதேயிடை
கடுக்குதேதுடை நடுக்குதேஅடி.

லோகிதாஸன் ஜனனம்.



மருத்துவச்சி வசனம்.

மண்ணும்பெண்பால்தான் மிருகங்களிலு பெண்ணுண்டு இன்ன ங்கொஞ்சநேரம் பொருப்பாய்தாயே.

தரு.

மேல்நோக்கியேசுவாச மெடுக்குதடிதாயே
விதவிதநோய்வயிற்றில் விளங்கிக்காட்டுதுதாயே
கால்நிற்கச்சோருது கைலாகுதாநீயே
கமலவாசனிதற்கே கருதிப்பிடித்தான்சேயே
கசையுதே குடல் பிசையுதே வுடல்
அசையுதே மனம் இசையுதே குந்த

மருத்துவச்சி வசனம்.

இந்த ரத்தினகசித முக்காலியின்பேரில் உட்காருவாயம்மா சற்றுமேல்நோக்கிப் பார்ப்பாய்தாயே.

தரு.

அடிவயிற்றினிலேதோ அசையுதடியம்மா
ஆயாசம்மீறுது அழுகாதடிசும்மா
துடிதுடிக்குதே அரை தோகையேதுரிதமா
சொல்லடிநீர்பெருகும் சூக்ஷம்என்னடியம்மா
சோருதேயேதோ சோருதேகளை
மீறுதே மனங் கோருதே தாங்க

மருத்துவச்சி வசனம்.

கோடி சூரியப் பிரகாசம்போல் தேஜசு உடைய திவ்வியமகன் பிறந்தான் சந்திரவதியம்மா வுனது பாக்கியமே பாக்கியம் அம்மா தாயே.

மருத்துவச்சி வசனம்.

குழந்தைபிறந்தசங்கதியை அரசனுக்குத் தெரிவிப்பாயடியம்மா.

சவுந்தரவல்லி வசனம்.

அப்படியே யிதோபோய் தெரிவிக்கின்றேனம்மா.

தோழி விருத்தம்.

வேந்தனே மனைவியாக வேண்டியேமணம்புரிந்த
சாந்தமாங்குணத்திமிக்க சந்திரவதியுமிப்போ
தீர்ந்துமேகெர்ப்பவாதை திவ்வியமகனைப்பெற்றாள்
யீந்ததோர்தாயும்பிள்ளை யிருக்கிறூர்சுகமாய்வேந்தே.

வசனம்.

கேளும் மஹாராஜனே சந்திரவதிஅம்மன் கெர்ப்பநோய் நீங்கி திவ்வியமகனைப்பெற்றாள் தாயும்பிள்ளையுஞ் சுகமாகயிருக்கிறூர்கள் என் ஆண்டவனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியா மகாசந்தோஷம் எல்லாம் பரமசிவத்தினுடைய அருளாக்கும் உனது எஜமானிக்காகவேண்டிய சிதளவுபசாரத்தி லதிஜாக்கிரதையாயிருப்பாய் பெண்ணே சவுந்திரவல்லி.

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேமந்திரியென்றன் அரசத்தைத்தாங்கவேண்டி
அப்பனேதிவ்வியபுத்திரன் அவனியிற்பிறந்ததாலே
செப்பவேபலதேசங்கள் திகழ்பெறமனங்களிக்க
இப்பவேசுவர்னதானம் இடைவிடாதீகுவாயே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி சிவனருளால் என்குலம்விளங்கதிவ்விய புத்திரன் பிறந்ததால் வேண்டியதானங்கள் அபரிமிதமாகக்கொடுப் பாய் மந்திரி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் மகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியகீர்த்தியொன்று சாற்றுவேன் கேளாயப்பா
நித்தியவோமம்யெக்கியம் நிகழ்த்திடும்முனிவர்சித்தர்
பத்தியிலுயர்ந்ததிவ்விய பண்புளோர்மகிழவேண்டி
சத்தியேவிசிஷ்டதானம் நயமுடனளிப்பாய்மந்திரி.

வசனம்.

கேளாயப்பா மந்திரி வேதியர் முனிவர் யோகர் சித்தர்முதலா னவர்களுக்கும் அபரிமிதமாய் தானங்கொடுப்பாய் அப்பா சத்திய கீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

மகாபாக்கியம் அப்படியேகொடுக்கின்றேன் சுவாமி

சத்தியகீர்த்தி விருத்தம்.

ஐயனேநீர்தானிட்ட ஆக்கினைப்படியோநானும்
ஐயனேமுனிவர்யோகர் அருந்தவத்தோருமற்ற
ஐயனேபலகுலத்தோர் அதிகமாய்மகிழ்கொண்டோங்க
ஐயனேரத்னம்பொன்பட்டாடையுமளித்தேன்வேந்தே.

வசனம்.

கேளும் ஆண்டவனே தாங்களிட்ட கட்டளைப்படியே வேதியர் முனிவர்முதலான சகலருமகிழும்படி நவரத்தினம் பொன்பட்டா டை முதலான சகலமும் கொடுத்தனுப்பினேன் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி மகன்வந்துபிறந்தசேதி
வந்திதோதெரியச்சொன்ன மாதுவின்மனங்களிக்க
சுந்தரப்பொன்பட்டாடை சொகுசுறுபணிகள்மெத்த
தந்திடுவாய்நீயுன்றன் தாழ்வுறுக்கையாலப்பா.

வசனம்.

அப்பா மந்திரி இந்த தோழிக்குவேண்டிய வெகுமதிகள்கொடுத்தனுப்புவாய் அப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியேகொடுத்தனுப்புகின்றேன் வேந்தனே.

மந்திரி விருத்தம்.

பொன்னணிகள் பலவுடனே வயிரம்பச்சை
புகழோய்குமுத்துவடம் பட்டு ஆடை
நன்மொழியாள் தோழிமனங்களிக்கநானும்
நாடியேதானினைத்தேன் நாதாபோற்றி.

வசனம்.

கேளும் சுவாமி தோழிமனங்களிக்க வயிரம்பச்சைவடம் பட்டாடைமுதலானதும் கொடுத்தனுப்பினேன்வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

மெத்தசந்தோஷம் மெத்தசந்தோம்.

மருத்துவச்சி விருத்தம்.

பாங்கியேசொல்வேன்கேளாய் பற்றுற்றகலேகள்தன்னை
தாங்கிநீசென்றேவாறு தனியிடமிருத்தியிங்கு
ஓங்கியேசுத்திசெய்து ஓகோகோகாத்துங்கூச்சல்
நீங்கிடச்சாளரங்கள் நிகழாமல்மூடிக்காப்பாய்.

வசனம்.

அம்மாதோழி பற்றுனவஸ்திரங்களை அவ்விடமிருந்து நீக்கி இந்த யிடத்தை சுத்திசெய்து காத்தும் இரைச்சல் வாராமல் சாளரங்களைமூடி பத்திரமாகக்காப்பாய் அம்மாதாயே.

பொது-விருத்தம்.

பலபணியும்பொன்முத்து ரத்னமாடை
பசுவுடலேகிலம்பொசிப்பும் பண்பின்மிக்க
குலமறையோர் தவமுனிவர்யோகர்சித்தர்
கொடுக்கமனங்களித்திடவே சென்றபின்னர்
நலமுடனேபாலகனைத் திருநீருட்டி
நவரத்தினகசிதமுள தொட்டில்தன்னில்
[illegible]லமகனேதா[illegible]ல்புரிய சத்தியன்மார்து
[illegible]டும்வகைசபையோர் தான்காண்பீரே.

வசனம்.

கேளும் சபையோர்களே மகன்பிறந்தானென்று ராஜன்பல்தானங்கொடுக்க எல்லோரும் பெற்றுக்கொண்டுபோயினபின் சந்திரவதியம்மன் பாலகனைத்தொட்டிலிலிட்டு தாலாட்டும்விதம்காண்பீர்களவான்களே.

சந்திரவதிதாலாட்டு இ-ம்-நிலாம்புரி.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
பாரோர்புகழவந்த பரிதிகுலஒளிவிளக்கே ஆரா

அந்தரசுவர்க்கமுற்ற அண்ணல்மகன்கோல்தாங்க
வந்தவென்றனுருயிரே வள்ளலேகண்வளராய் ஆரா

கங்கைபுனைநாதன் கருணையினாலென்வயிற்றில்
மங்களமாய்வந்துதித்த மணியேநீகண்வளராய் ஆரா

பாலேபழரசமே பகரவொண்ணத்தெள்ளமுதே
மேலேவிண்ணோர்மகிழும் வித்தேநீகண்வளராய் ஆரா

வேதமுறைநால்மறையும் விளங்கவேயின்னாட்டில்
கீதமொழிகேழ்க்கவந்த கிளியேநீகண்வளராய். ஆரா

எக்கியஹோமங்களுமே பெத்திசையுந்தானோங்க
திக்கெல்லாங்கீர்த்திபெருந் திகழொளியேகண்வளராய் ஆரா

தருமமுடன்சத்தியமுந் தானோங்கவினோதமெனும்
பேருஞ்சபையைக்காக்கவந்த பேரணியேகண்வளராய். ஆரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி வழங்குமேகுடிகள்யாவும்
இந்தநல்வருஷந்தீர்வை யியம்புவாய்வேண்டாமென்றே
அந்தமாய்நாட்டிலுள்ள அனைவருங்களிக்கச்சீனி
சுந்தரன்பிறந்ததற்காய் சுழிக்கெனவழங்குவாயே.

வசனம்.

அப்பாமந்திரி மகன்பிறந்தபடியால் ஊரில்வாழும்சகலருக்கும் சர்க்கரைதாம்பூலமுதலானதும் வழங்குவாய் பின்னும் நமதுகுடிகளுக்கு இவ்வருஷத்தீர்வை வெகுமதியெனத் தெரியப்படுத்துவாய் சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

அடியேன் அப்படியே செய்விக்கிறேன் வேந்தே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

முற்றுமிந்த வரசாள புத்ரன்வந்த
மொழியறைந்து கட்டியனே குடிகட்கெல்லாம்
நற்றியிந்தவருஷத்தின் தீர்வைதன்னை
நாயகனுமன்னித்தா ரென்றேசொல்லி

எத்திசையும் புகழோங்கச்சகலருக்கும்
   எண்ணக்காய் சர்க்கரை வெற்றிலையும்பாக்கும்
வெற்றிலையுடன்சுவர்னப் பூநாலுமிட்டு
   விரைவுடனே.. பூனித்திங்கு வருகுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியனே நமது ராஜனுக்கு ஆண்பிள்ளைபிரந்ததாலே குடிகளுக்கெல்லாம் இந்தவருஷத்திய தீர்வைமன்னித்தோமென்று சொல்லுவாய் பின்னும் நாட்டிலுள்ள சகலருக்கும்சர்க்கரை எண்ணை சீக்காய் தாம்பூலம்நாறு பொன்பூவுங்கொடுத்து வருவாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியேசெய்கின்றேன் சுவாமி.

கட்டியன் விருத்தம்.

சொன்னதோர்முறைபோல
இன்னிலத்தேவர்க்கும்
வண்ணமாய் அளித்தேன்
அண்ணலேபோற்றி.

வசனம்.

சுவாமி தாங்கள் செப்பியவாறே செய்துவந்தேன்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

அண்ணலேநீர்தானிட்ட ஆக்கினைப்படியேசினி
அண்ணலேசுவர்னபுஷ்பம் அடுக்காய்தாம்பூலத்தோடும்
அண்ணலேயாவருக்கு அளித்துமேகுடிகட்கெல்லாம்
அண்ணலேவருஷத்தீர்வை அறிவித்தேன்வேண்டாமென்றே.

வசனம்.

ஆண்டவனே சகலருக்கும் சக்கரை சுவர்ன பூதாம்பூலமுதலானதும் அளிப்பித்தேன் குடிகளுக்கும் இந்தவருஷத்தீர்வை வெகுமதியென்றும் அறிவித்தேன் மகாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

வெகுசந்தோஷம் வெகுசந்தோஷமாகினேன்.

பொது விருத்தம்,

வேந்தனுமகன்பிறந்த விருப்பத்தால்சகலருக்கும்
ஈந்தபின்சினிபுஷ்பம் இளையவன்பிறந்தவாறும்
சாந்தமாய்முன்னடக்கும் தனிப்பலாபலனைக்கேழ்க்க
வாய்ந்தஜோதிடரைராஜன் வருவிக்கும்விதங்காண்பீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திரமகாராஜன் குழந்தை ப்பிறந்ததற்காகவேண்டிய வெகுமதிகளை நடத்தியினி குழந்தைக்கு வரும் ஜாதகப்பலனைத்தெரியவேண்டி ஜோதிடரை அழைப்பிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நலமையும்பெருமைநீதி ஞாயமுமொழுக்கந்தன்னை
நிலமையால் விளங்கசெய்யு நெறியுள்ளமந்திரிகேளாய்
குலமதுவிளங்க திவ்விய குமாரனும்பிறந்தாலே
வலதுளசாஸ்திரியாரை வரச்செய்வாய்வரச்செய்வாயே.

வசனம்.

அப்பா மந்திரி குழந்தை பிறந்தவகையால் இனி நடக்கப்போகிற பலாபலன்களைத் தெரியவேண்டியதால் ஜோதிடரை அழைப்பிப்பாய் மந்திரி,

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேன் வேந்தனே.

மந்திரி விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா அரைநொடி தனிலேசென்று
தீரமும்வலுமைசாஸ்திரத் திறமையுமுணர்ந்தேகால
நேரமுமறியச்சொல்லும் நிகழுஞ்சோதிடரைநீதான்
வீரமாயழைத்தேயிங்கு விரைவினில்வருகுவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய்கட்டியனே வேந்தனுக்குக் குழந்தை பிறந்த பலாபலத்தைத்தெரியவேண்டியதால்ஜோதிடத்தை அழைத்துவருவாயப்பா வீரனே.

கட்டியன் வசனம்.

அப்படியே அழைத்துவருகின்றேன் சுவாமி.

கட்டியன் விருத்தம்.

சத்தியமுணர்ந்த ஜோத்தியரேவும்மை
பார்த்திபன் அழைத்தனன் நேத்தியாய்வருவீர்

வசனம்.

ஐயா ஜோதிடரே உம்மை எங்களுடைய மகாராஜா அழைக்கச்சொன்னார் சுவாமி.

ஜோதிடர் விருத்தம்.

ஒருதடையின்றி அருமையாய்காணும்
வருகிறேனுன்பின் வருகிறேனப்பா.

வசனம்.

வருகிறேனப்பா வருகிறேன் கட்டியனே.

அரிச்சந்திரமகாராஜன் கொலுவுக்கு சோதிடர் வருகிறபாகம்.



அரிச்சந்திரமகாராஜன். மந்திரி. கட்டியன். ஜோதிடர்

ஜோதிடர்வருகிறதரு இராகம் தன்னியாசி நாளம் ஆதி.

பல்லவி,

ஜோதிடர்வந்தார் பலன்சொல்லும் ஜோதிடர்வந்தார்

அநுபல்லவி,

பாதிமதிசடையில் பரிவுடனே தரித்த
ஆதிசிவனடியை யனுதினமுந்துதிக்கும்

சரணங்கள்.

வேதமுறைபடித்தே நவக்கிரகங்கள் வதியைவாயால்மொடித்தே
குரோதமதைத்தடுத்தே பலபேரும் கொள்ளுங்கருத்தைவிடுத்தே.
மாநலத்தினிநரர்வகுத்தபாலர்களின்
வந்தகடிமைதன்னை வழுத்துமுடனேயவர்
வாழ்வையும் வரும்தாழ்வையும்
மட்டிலாமலே விட்டிடாமலே
தட்டிடாமலே கெட்டிடாமலேமனம்
வைத்துத்திசைபுத்தியுடன்
நத்தும்திரமமுத்துஞ்சொல்லும். ஜோ

ஜோதிடர் விருத்தம்

சத்தியம்வழுவில்லாமல் தனிச்செங்கோல் செலுத்திநாட்டில்
நித்தியம்தருமம்வேள்வி நேமமாநடக்கவாவி
சுத்திசோவும்வேங்கே சொல்பகைநீக்கிவாழ்க
வைத்திடும் அரசேயென்னை வரவிட்டதருள்வாய்பொற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மகாராஜனே அடியேனை அழைப்பித்த காரணந்தெரியப்படுத்தவேண்டியது.

அரிச்சந்திரன் விருத்தம்.

சாஸ்திரியாரே கேளீர்தருமபத்தினியுமென்றன்
கோத்திரம்விளங்கத்திவ்வியகுழந்தையீன் றெடுத்ததாலே
நேத்திபாய்ஜோதிடத்தால் நீருமேபலாபலத்தைச்
சாத்திடவேண்டியிங்கு தானழைப்பித்தேன்கண்டீர்.

வசனம்.

கேளும்ஜோதிடரே என்குலம் விளங்க மகன் பிறந்த படியால் ஜோதிடநூலைப்பார்த்து பலாபலன் தெரிந்துக்கொள்ள அழைப்பித்தேன் ஐயா.

ஜோதிடர் விருத்தம்.

அப்படியே நான் சொற்படிநூலை
ஒப்பிடபார்த்தேகொப்பெனவுரைப்பேன்

வசனம்.

சுவாமி தங்கள் உத்திரவின்படி நூல்களைச் சோதித்துச் சொல்லுகிறேன் வேந்தனே

ஜோதிடர் விருத்தம்.

வேந்தரேமதலைவந்த வேளையும்நாளும்நீரே
சாந்தமாயெனக்குரைப்பீர் தாளடிபோற்றிபோற்றி

வசனம்.

மஹாராஜனே குழந்தைபிறந்தநாளும்நேரமும் எனக்குத்தெரியச்சொல்லுஞ்சுவாமி

அரிச்சந்திரன்விருத்தம்.

அறிவினிலுயர்ந்தவென்றன் அன்புக்கோர்தாழ்வுமின்றி
நெறியுடனடக்குமந்திரி நிமைதனில்நீயே சென்று
விரிபுகழ்மைந்தன்வந்த விபரமுங்கடிகைதன்னை
சரிவரத்தெரிந்துவந்தே சாத்திரிக்குரைசெய்வாயே.

வசனம்.

அப்பாமந்திரி நீசென்று என்மகன் பிறந்தநாளையும் நேரத்தையுந்தெரிந்துவந்துசாஸ்திரிக்குச் சொல்லுவாய் அப்பாசத்தியகீர்த்தி

சத்தியகீர்த்தி விருத்தம்.

அத்தனே அரசேயெங்கள் அன்பனே அண்டினோரின்
கர்த்தனே தேவியின்ற கண்மணிதானும் இந்த
சித்திரையடுத்தபத்தாந் திங்களில்நவமியந்தி
உதித்தனனென்றேதாயாருரைசெய்ய அறிந்தேன்வேந்தே.

வசனம்.

ஆண்டவனே தைமாதம் பூர்வபக்ஷம்நவமி பகல் இருபத்திஆரை நாழிகைக்குமேல் ஜெனனமென்று தெரிந்தேன்சுவாமி.

அரிச்சந்திரன் வசனம்.

ஐயாஜோதிடரே இதேபிரகாரம் குறிப்பிட்டுக் கொள்ளும்சாஸ்த்திரியரே.


ஜோதிடர் வசனம்.

மகாபாக்கியம் அப்படியே குறிப்பிட்டுக்கொள்ளுகிறேன் மஹாராஜனே

ஜோதிடர்வெண்பா.

வாரமது திங்கள்வளர்நவமி பூர்வம்
தாரணியி லேபரணிதா னுதித்தான் விரமுளோல்
அவனிதனி லோர்குடையி லாள்வான் பனிரெண்டில்
கவனியினி குண்டமியால் காண்

அரிச்சந்திரமகாராஜன் சோதிடரிடத்தில் சோதிடம் பார்த்துக்கொள்ளுகிற பாகம்



மந்திரி. அரிச்சந்திரமகாராஜன். சக்கரம் சோதிடர்

கேளுஞ்சுவாமி மகரமாதம் பூர்வபட்சம் நவமிசோமவாரம்பகல்நாழிகை 26 அரைக்குமேல் கர்க்கடக லக்கினத்தில் மேஷராசியில் ஜெனனமானதாம் இதின் இராசியில் கிரகமநின்றநிலை தெரிவிக்கிறேன் மகாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே தெரிவியும் ஜோதிடரே.

ஜோதிடர் விருத்தம்.

ஆதித்தன் திருவோண மொன்றிற்செவ்வாய்
அதேரெண்டிற் சந்திரனே பரணியொன்றில்
போதிக்காச்செட்டியுமே சித்திரைரெண்டில்
பிராமணனும் பூசமுதற் காலில்நின்றான்
வேதமுற்றதேவர்க்கோன் முதல்மகத்தில்
வீரயமுளகாலனுமே சதயமூன்றில்
பாதகியாங்காளியுமே அனுஷமூன்றே
பார்கணக்கன்ரோகணிமுன் பகருவேனே.

வசனம்.

சுவாமி திருவோணம் ஒன்றில் சூரியன் பரணி ஒன்றில் சந்திரன் திருவோணம் இரண்டில் செவ்வாய் சித்திரை இரண்டில்புதன் பூசம் ஒன்றில் இராகு ரோகணி ஒன்றில்கேது இப்படியாக தற்காலத்தில் கிரகம் நின்றநிலைவேந்தனே.

ஜோதிடர் வசனம்.

சுவாமி இராசி குண்டலியில் கிரகம் நின்றவகையைச்சொல்லுகிறேன் மகாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

சந்தோஷம் அப்படியே தெரியப்படச்சொல்லும் ஐயாசோதிடரே.

ஜோதிடர் விருத்தம்.

சூரியனும் குஜனேழிற் குழிவுதானும்
சொகுசுற்றான் லக்கினமாங் கடகந்தன்னில்
வீரமுடன் ராகுஐந்தில் கேது ஏழில்
விளங்கினல் நட்புடனே புதனேவென்றால்
சாரமுள கன்னியிலு மேஷச்சந்திரன்
தனிச்சுக்கிரன் சிங்கத்தில் அச்சம்பெற்றான்
காரியுமே கும்பத்தில் ஆக்ஷியுற்றான்
கழறுவேனிதின் பலத்தைகாண்பீர்வேந்தே.

வசனம்.

கேளும் மகாராஜனே லக்கினமாகிய கடகத்தில் குருவும் இரண்டாமிடத்தில் சுக்கிரனும் மூன்றாமிடத்தில் புதன் உச்சனும் ஐந்தாமிடத்தில் இராகு ஆட்சியாயும் ஏழாமிடத்தில் சூரியபகைவ

ஞையும் செவ்வாய் உச்சனுயும் எட்டாமிடத்தில் சனி ஆட்சியாயும் பத்தாமிடத்தில் பகைவனுயும் பதினோராமிடத்தில் கேது நண்பனு யும் நின்றபடியா லினிநடக்கும் பலனைச்சொல்லுகின்றேன்வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே பலனைச்சொல்லும் சோதிடரே.

ஜோதிடர் அகவல்.

வேந்தனேகேளாய் விளம்புவேன்நீர்தான்
ஈந்ததோர்மைந்தனு லினிவரும்பலத்தை
மேஷயோராசி மேவினதாலே
தோஷங்கள்கொஞ்சம் சொல்லிவிடலானேன்
இலக்கணப்பலனே எழினலம்தீரன்
எக்கியவோமங்கள் இயற்றியேவாழ்வான்
உச்சத்தில்மூவ ருற்றதால்லோக
மெச்சவேகீர்த்தி விளங்கியேயிருப்பான்
காரியுமாட்சி கனமுடனுற்றதால்
வீரியம்பெருகி மேதினியாள்வான்
சூரியனொருவன் சொல்லுவேனரசே
காரியபங்கனுய்க் கயப்பிடமுற்றனன்
ஆதலானுரைப்பே னையனேகொஞ்சம்
வேதனைவிளேந்தே விரைவினில்நீங்கும்
மதியுமேஷத்தில் வாய்ந்ததால்சந்திர
வதியுமேகிலேசம் மனதில்அடைவாள்
ஆயுள்காரகன் ஆட்சிபெற்றதினுல்
காயத்திற்கொன்றுங் களங்பில்லைவேந்தே
கோசாரவிதியையும் கூறுவேன்கொஞ்சம்
நாசனும்முடவன் நகன்றிடில்மீனம்
ஏழரைஆண்டும் இமிசையுங்கலகமும்
தாழ்வுமச்செய்தவன் தன்னுளொழிந்திடில்
மேன்மேல்கீர்த்தியும் விளங்கவேதேச
தன்மையுஞ்செல்வமும் தான்கொடுத்திடுவான்
இதுமிதுனத்தில் ஏகியபின்னென்
பதுமனேநீதான் பண்புடனறிவாய்
ஞாலத்தில்ப்ரணியில் நற்சிசுவந்ததால்
சாவேலோக தாசனேபெயராம்
வியாழனும்லக்கினம் வீற்றதால்சிறுவன்
ஞானமேற்பலகலை நவிலுவேன்கோவே
நடப்பதுசுக்கிர நற்றிசைராகு
கடப்பதிபுத்தியாம் கண்டிடுமரசே
எந்தையேயெனக்கு இயன்றமட்டிலும்
வேந்தனேவுரைத்தேன் விமலனேசரணம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாய் வலுமைஜோதிடர்க்கே
தந்தினிவெகுமதி தான் அனுப்புவையே.

வசனம்.

அப்பா மந்திரி இந்த ஜோதிடர்க்குவெகுமதிகொடுத்து அனுப்பிவைப்பாய் சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் சுவாமி.

மந்திரி வசனம்.

இந்த விலையுயர்ந்த பட்டுமணி முதலானவைகளைப்பெற்றுக் கொள்ளுமையா ஜோதிடரே.

ஜோதிடர் விருத்தம்.

அனுசையாயெனக்கு அன்புடன்வெகுமதி
மனோதிக்கமாகவே மந்திரியளித்தனர்
குனோதியும்நீருமுன் குழந்தையுஞ்செங்கோல்
வினோதமாஞ்சபையும் மென்மேலும்வாழி

வசனம்.

வாழி வாழி மகாராசனே வாழி.

பொதுவிருத்தம்.

தேவர்களரக்கர்சித்தர் திகழ்புவிவேந்தர்மன்னர்
மூவர்கள்வசுக்கர்பாலர் முனிவர்கள்யோகவான்கள்
யாவருநடுங்கச் செய்தோ னணிநவக்கிரகத்தின்மேலோன்
காவலன்றன்னைக்காணக் காரியம்வருகின்றனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே மகாமகத்துவந்தங்கிய சனி பகவான் அரிச்சந்திர மகாராஜனை காணவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சனி-தரு, இராகம்-அடாணு தாளம் ஆதி.

பல்லவி.

தேவதேவர்களு நாதர்மூவரும்
திகைக்கச்செய்தசனியன் நானே-மனம்
பதைக்கச்செய்தபுனிதன் நானே.

அநுபல்லவி.

காலனேயாகிலும் எனக்கிணைசொல்லப்போமோ
கடந்தசுக்கியாளிகளும் கண்டால்நினைக்கலாமோ
பாவந்தனக்கு அஞ்சாப் பழியைசுமத்திமெத்த
தாபத்திரியத்துள்ளாக்கும் சயாவதியளித்த தேவ

அரிச்சந்திரமகாராஜனிடத்தில் சனிபகவான் வருகிற பாகம்.



சரணங்கள்.

ஆதிமூலப்பொருளை ஒருநொடிக்குள்ளாக
அடக்கிசர்ப்பந்தரிக்கச் செய்தேன் நல்ல
அழகுள்ளமாயனைக் கெர்வமொடிக்கிப்பன்றி
யாக்கிபூமியைக்கொல்ல வைத்தேன்
நீதிவழுவாக்காலன் கொண்டுமெதமிழக்க
நிலத்திலுருளவுதைப் பித்தேன்சர்வ
நிகரொடுங்கிடஅந்தப் பிரமன்சிரசுதனை
நிமையிற்கிள்ளிடச்செய்து வைத்தேன்
கோதிலாக்குணன் அந்த குமரன்பயமடைந்தே
கோணுமரமாய்நிற்கச் செய்தேன்சகல
கோடிராசிகளைக் காக்குமவளைநானே
குன்றில்தவம்புரிய வைத்தேன்
ஜோதிடச்சுடராம் வஜ்ராயுதனுடமெல்லாம்
தொண்டிகளாகக்காணச் செய்தேன்திகழ்
சூரனெனவேவெகு வீரியம்பெற்றவனைத்
துண்டுரெண்டாக வெட்டுவித்தேன்
எதிலும்என்னைவிட ஒருவன்வலியனுண்டோ
எதிர்த்தேன்னுளன்சமர் புரியும்பெரியனுண்டோ
இல்லை இதுவேயென்றன் சொல்லை அமரில்வே
றல்லைகண்டேகாட்டப்பல்லை யின்னங்கேளீர்
திண்ணடங்காமலை இரண்டுதுண்டுபெற
அண்டரண்டபகி ரண்டமெண்டிசையும்
திகைக்கபிரமிக்க நடிக்க வெடிக்கவே
செய்வேன்மதங்கொண்டாரைக்கொய்வேன்பணிபவரை
உய்வேன்நிகர்ந்தவரை வைவேன்வித்
தேசம்புகழ்பெறவே வாசம்மருவவிடு
நேசன்பாபவி மோசனுனென. தே

சனி விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா அரைநொடிதனிலேநீதான்
தீரனுமரிச்சந்திரன் செங்கோலின்முனமேசென்று
வீரனுஞ்சனியன்காண வேண்டியேவந்தானென்றே
சூறடாவுத்தரவாகில் கொப்பெனவருகுவாயே.

வசனம்.

அடா கட்டியனே அரிச்சந்திரன் கொலுவின்முன்னே சென்றுகாண்பதற்காக சனியன் வந்திருக்கிறுனென்று தெரிவியும் பிள்ளாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

அப்படியே செல்லுக்கிறேன் பகவானே.

கட்டியன் விருத்தம்.

வேந்தனேகாணவேண்டி விரும்புமுர்சனியன் தானும்
சாந்தனேகொலுமுன்னுட சாற்றினுல்வறச்செய்வேனே.

வசனம்,

ஆண்டவனே தங்களைக்காணவேண்டி சனிபகவான் வந்திருக்கிருர் உத்தரவானுல் வரச்சொல்லுகிறேன் வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே அழைத்துவாரும் பிள்ளாய்கட்டியனே.

கட்டியன் வசனம்.

அரசன்வரச்சொன்னுர் வாருஞ்சனிபகவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நீரினையுண்டெழுமேக முற்றவண்ணு
நெடுங்கரத்திற்சூலமதைத் தாங்குமன்னு
சூரியன்தன்தவப்பலத்தால் வந்தகண்ணு
சொல்லுநவக்கிரகத்திலு மேலானஅண்ணு
காரியெனும்பேர்படைத்த குருவேயிந்தக்
காசினியோ ரைக்காக்குங் கடலேநாதா
நீரிங்குவந்தவகை அடியனுக்கே
நிகழ்த்துவீர் நின்னடிக்கே போற்றிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி சனிபகவானே தாங்கள்வந்தகாரணந்தெரியப்படுத்தவேண்டும் முனிநாதா.

சனிவிருத்தம்.

சத்தியம்வழுவில்லாமல் தரணியையாளும்மன்னு
எத்திசையுள்ளோரெல்லாம் எனக்குடன்பட்டோர்கண்டாய்
நத்தினுனுன்னைக்காணநாட்டமுங் கொண்டுவந்தேன்
இத்தினம்நலமோஅன்றி யிளமைபோய்வரவோய்சொல்வாய்

வசனம்.

அப்பாராஜனே சகலரும் எனக்குடன்பட்டவர்களென்று உனக்குந்தெரியுமல்லாவா ஆதலால் உன்னிடஞ்சிலநாள்வாசஞ்செய்யவேண்டிவந்தேன் இதுகாலஞ்சரியோ அன்றியிந்த இளமைபோய்முதுமையில்வரவோ. சொல்வாய்வேந்தனே.

அரிச்சந்திரன்விருத்தம்.

எதுகாலமென்றேயென்னை பின்பமாய்க் கேட்டநாதா
இதுகாலமதுவேநன்று இளமைபோய்முதுமையுற்ருல்

நதும்புமுன்னருளைத்தாங்க சகிக்குமோயென்னுல்சுவாமி
உதும்பிலாமனத்தோயீதேவுத்தமன் உணருவாயே.

வசனம்.

சுவாமிமுதுமைதுங்கிய காலத்திலும்முடைய கருணையால்வரு
ங்காரியங்களைச் சகிக்கப்போமோ இந்தஇளமையே துய்கள்இஷ்ருடி
க்கத்தகுந்தகாலம் ஆண்டவனே.

சனிவிருத்தம்.

நல்லதுமன்னு சொல்லியவாறே
வெள்ளியோய்உன்பால் வள்ளலே வருவேன்

வசனம்.

கேளும் மஹாராஜனே நீசொன்னபடியேவருகிறேன் வாழிவாழி

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமிவந்தாலும் அடியேன்பேரில் பூர்ணகடாக்ஷம்வைக்கவே
ண்டியது.

பொது விருத்தம்.

காரியுமேஅரசனுடன் வினவிச்சென்றான்
கதிர்குலத்தோன் பாலகனும் வயதும்ஐந்தை
மீறிடுமுன்சகலகலை யுணர்த்தவேண்டி
மேவியினைபள்ளிவைக்கும் விதங்காண்பிரே

வசனம்.

கேளுங்கள் சபையோரே அரிச்சந்திரமஹாராஜன் தன்மகனாகி
யலோகிதாசனைப்பள்ளிவைக்கும் விதங்காண்பிர்கள்கனவான்களே.

அரிச்சந்திரன் விருத்தம்.

பத்தியில்மிகுந்தவென்றன் பாங்குளவமைச்சனான
சத்தியகீர்த்தியொன்று சாற்றுவேன்கேளாயப்பா
புத்திரன்லோகிதாசன் பொருந்தினன்வயதோஐந்து
வித்தியாப்பியாசஞ்செய்ய வேதியன்வரச்செய்வாயே.

வசனம்.

அப்பா மந்திரி லோகிதாசனுக்கு ஐந்துவயதானதால் வித்தி
யாப்பியாசஞ்செய்யவேண்டும் உபாத்தியாயரை அழைப்பிப்பாய்சத்
தியகீர்த்தி.

மந்திரி விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா அரைநொடிதனிலே
நீரசாத்திரங்களோதி சேய்களைவிருத்திசெய்யும்
சீரரும்குமரவேலு சிறப்புள்ள உபாத்தியாயரை
வீரமாயென்றன்முன்னே விரைவினில்வரச்செய்வாயே.

அரிச்சந்திரமகாராஜனிடத்தில், உபர்த்தியாயர் வருகிறபாகம்.



அரிச்சந்திரமகாராஜன். மந்திரி. உபாத்தியாயர். கட்டியக்காரன்.

வசனம்.

அடாகட்டியனே, வித்தையில் மஹாவல்லவனாகிய குமாரவேலு உபாத்தியாயரைச் சீக்கிரம் அழைத்து வாரும்பிள்ளாய்.

கட்டியன் வசனம்.

இதோ ஓடி அழைத்து வருகின்றேன் சுவாமி.

கட்டியன் விருத்தம்.

பிள்ளைகள் தங்களுக்கே பேரறிவிளங்குஞானம்
உள்ளமுங்களிக்கவேதம் உணர்ப்பிக்குமையாகேளாய்
கள்ளமுங்கபடுசூதுங் கனவிலும்கருதாவெங்கள்
வள்ளலுமும்மையழைத்தே வரவெனவிட்டார்சுவாமி.

வசனம்.

கேளும் உபாத்தியாயரே எங்களரசன் தங்களை அதிசீக்கிரம்அழைத்துவரச்சொன்னார் வாருஞ்சுவாமி.

வசனம்.

அப்படியே வருகின்றேனப்பா வீரகட்டியனே.

உபாத்தியாயர்-தரு-இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

வாத்தியார்வந்தார் அயோத்உவாழ்
வாத்தியார் வந்தார்,

அநுபல்லவி.

நேத்தியதாகவெண்ணீறுநுதலிற்பூசி
சாத்தியமுறையினில் தர்க்கமிகவேபேசி (வா)

சரணங்கள்.

அரையில்பட்டுமடி அன்பாகவேகட்டி
அங்கவஸ்திரம்மேலுஞ்சும் அழகாய்த்தொங்கலேபூட்டி
சிரமேல்மடியொன்றைச் சிங்காரமாய்கட்டி
சீமைவாத்திகளெல்லாம் திகைத்திடவேகட்டி (வா)

வேதசாஸ்திரமதை விதிமுறைப்படிஅந்த
வேணுஞ்சிறுவர்க்கெல்லாம் விறைவிலுரைப்போன்பந்த
பாதகம்போக்கவே பரிவாய்உரைசாந்த
பஞ்சாக்ஷரநிட்டை பண்புடன்சொல்வேனென்று (வா)

சொல்வித்தைவில்வித்தை சுருக்காய்ப்பாடிப்பிப்பேன்
சோதிடவாகடத் துண்மையுங்கற்பிப்பேன்
மல்யுத்தம்வாள்யுத்தம் வகையுடனுணர்ப்பிப்பேன்
மந்த்ரசாஸ்திரபரீக்ஷைம் வரிசையுஞ்சொல்வேனென்று (வா)

நித்தியகருமவிதி நிலைதனிலோடி
நீடுலகில்தனக்கு நிகரில்லையெனப்பாடி
சத்தியபாஷா அரிச்சந்திரன் கொலுவதைநாடி
சந்தோஷமேலிட்டு தாண்டித்தாண்டிஓடி (வா)

வாத்தியார் விருத்தம்.

உன்னைகட்டியரே என்வரவையேநீ
மன்னவன்றனக்கேபன்னியேவருவாய்

வசனம்.

வாத்தியார் வந்தாரென்று இராஜனுக்குத் தெரிவிப்பாய் கட்டியனே.

கட்டியராஜன் வசனம்.

மகாராஜனே உபாத்தியாயர் வந்திருக்கிறார் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

வரச்சொல்லும் பிள்ளாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

எங்கள் ஆண்டவன் உத்தரவு செய்தார் வாரும் வாத்தியாரே.

வாத்தியார் விருத்தம்

மாரனைப்பழிக்குந்திவ்விய மதிமுகமுடையோய்போற்றி
வீரனேபகைத்தபேரை வெற்றிகொள்சூராபோற்றி
நாரணனயனுங்காணு நம்பனைத்துதிப்பாய்போற்றி
காரணமெனையழைத்த கருத்துரைசெய்வாய்போற்றி.

வசனம்.

போற்றிபோற்றி மகாராஜனே என்னை அழைத்தகாரியந்தெரியப்பட அருள்புரிய வேண்டும் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரேஎனதுபாலன் ஐந்தாண்டுசிறுவனானன்
செய்யவேவித்தியாப்பியாசம் சீருடனழைத்தேன்காண்பாய்.

வசனம்.

கேளும்உபாத்தியாயரே என்குமாரனுக்குஐந்துவயதானதால்வித்தியாப்பியாசம் உம்மிடத்தில் செய்விக்க அழைப்பித்தேன் ஐயரே

வாத்தியார் வசனம்.

மகாசந்தோஷம் அப்படியே செய்விக்கலாம் சுவாமி.

அரிச்சந்திரன் விருத்தம்.

செப்புவேனுபாத்தியாரே தீவரந்தனிலேநீரும்
ஒப்புடன்பஞ்சாங்கத்தை யுற்றுமேநோக்கிநாளை
கொப்பெனவுரைப்பீராகில் குழந்தையைவரனைழைத்தே
அப்பவேஅக்ஷரத்தை யனுஷ்டிக்கவிடைமீவனே.

வசனம்.

உபாத்தியாயரே நீர்பஞ்சாங்கத்தைப் பார்த்து நல்லநாள்வேளை யைச்சொல்வாயாகில்லோகிதாசனை வரவழைத்து அக்ஷராப்பியாசம் செய்யவிடை கொடுக்கின்றேன் உபாத்தியாரே.

வாத்தியார் விருத்தம்.

இன்றுநற்றினம்மவித்தியாசப் பியாசமேதான்செய்விக்க
நன்றிநன்றிதுவேகண்டீர் நடப்பிக்கவிடையீவேந்தே.

வசனம்.

மகாராஜனே வித்தை ஆரம்பஞ் செய்வதற்குஇன்றையதினமே சுகமாயிருக்கின்றது வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

வித்தியாப்பியாசத்திற்கே வேண்டியவகைகளெல்லாம்
சித்தஞ்செய்திடலேநீதான் சீக்கிரப்படுவாய்மந்திரி.

வசனம்.

அப்பாமந்திரி லோகிதாசனைப் படிப்பிக்கவேண்டியதால் வேண் டியதினுசுகளையெல்லாம் சீக்கிரத்தில் சேகரிப்பாய்சத்தியகீர்த்தி.

மந்திரி விருத்தம்.

சுடலைபொரிகாய்பழமுஞ் சீனிதேனும்
கரும்படைக்காய்வெற்றிலையுங் கருப்புட்டியும்
திடமுடனே தூபதீப நெய்யுமேக்கிய
திரவியங்களுமபட்டுநூ லோலையோடும்
படருமலராறுகுடனே யெள்ளுந்தான்னியம்
படியொன்றமெழுந்தாணி பண்மின்மிக்க
நடனகிளிமொழியையிட இனிப்பதான

வசனம்.

கேளும் மகாராஜனே வித்தியாப்பியாசத்திற்கு ஆகவேண்டிய சகலசசமுத்துகள் எல்லாஞ் சித்தப்படுத்தினேன் ஆண்டவனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாய்நீதான் மதிமுகப்போன்றவென்றன்
சந்திரவதியாளீன்ற சற்குணபாலன்றன்னை
சுந்தரப்பொட்டுமிட்டு சொகுசுறவுடுத்திஇங்கு
வந்திடச்செய்வாய்பள்ளி வைத்திடக்காலமாச்சே.

வசனம்.

கேளாய் மந்திரி நீசென்று லோகிதாசனை ஸ்நானஞ்செய்வித்து நல்ல ஆடையுமுடுத்தி, அதிசீக்கிரமாய் அழைத்துவருவாய் அப்பா சத்தியகீர்த்தி.

மந்திரி விருத்தம்.

அன்னையேகேளாயுன்ற னருமையாம்பாலன்றன்னை
இன்றையதினத்தில்வித்தை யியற்றிடவேணதெல்லாம்
முன்னமேசேகரித்தோ முமதிடஞ்சென்றுபாலன்
றன்னையேயழைக்கவேந்தன் றான்வரவிட்டார்தாயே.

வசனம்.

கேளும் என்னை அடிமைகொண்டதாயே இன்றையதினம்வித்தியாப்பியாசஞ் செய்யவேண்டிலோகிதாசனைச் சிங்காரித்து அழைத்துவரும்படி ஆண்டவன் ஆக்கியாபித்தார் அம்மணி.

சந்திரவதி விருத்தம்.

கேளடிதோழி. பாலனைநன்றாய்
மேலெனவுடுத்தி சாலவேகொணர்வாய்.

சந்திரவதி வசனம்.

மகாசந்தோஷம் அப்படியே அழைத்துக்கொண்டுபோவாய் அப்பாமந்திரி.

வசனம்.

அம்மாசவுந்தரவல்லி பாலனைக்குளிப்பாட்டி திலதமிட்டுஆடையாபரணம்பூட்டி சிக்கிரத்தில் அழைக்து வருவாய் தோழி.

தோழி வசனம்.

அப்படியே தீவரத்தில் செய்விக்கின்றேன் தாயே.

தோழி விருத்தம்.

அம்மணியெனக்குநீதான் ஆக்கினையிட்டவாறு
அம்மணிபாலன்றன்னை அழகுநற்தீர்த்தமாட்டி
அம்மணிநீறுபூசி அதின்பேரில்திலதமிட்டு
அம்மணியீடுத்தியாக்க அறிகுவாய்தாயேபோற்றி.

வசனம்.

கேளாயம்மா தாங்கள் உத்தரவு செய்தபடியே கண்மணியாகிய லோகிதாசனைச் சிங்காரித்தேன் தாயே.

சந்திரவதி வசனம்.

கேளாயப்பா என்குலம் விளங்கவந்த லோகிதாசா

லோகிதாசன் வசனம்.

சொல்லுவாயம்மா என்னைப்பெற்றதாயே.

சந்திரமதி விருத்தம்.

அப்பனேமகனேஎன்ற னருந்தவப்பாலனேகேளாய்
செப்பவுமாமோகல்விச் சிறப்பிற்குமிணையாவேறு
இப்பதிசுவர்னம்ரத்னம் இன்னதைவிடவுமேலாம்
துப்பமெவுறுதிக்கவுன்தந்தை யழைந்தார்போவாய்.

வசனம்.

அப்பா என்கட்டிக்கரும்பே செல்வப்பொருளெல்லாம் கல்விப் பொருளுக்கீடல்ல ஆனதால், உனக்குக் கல்விகற்பிக்க வேண்டி உன் தந்தையழைத்தாராம் போய்வருவாய் மகனே.

லோகிதாசன் விருத்தம்.

அம்மணிகல்விகற்க அடியனும்போவேன்தாயே
அம்மணியுனதுதிவ்விய அருள்வாக்குக்கொடுப்பாயே.

வசனம்.

அம்மா என்னைப்பெற்றதாயே எனக்குச்சகலகலையும்தீவரத்தில் சித்திக்கும்படிக்கி ஆசீர்வாதஞ் செய்குவாய் தாயே.

சந்திரவதி விருத்தம்.

பாலனேயுனக்கேகல்வி பலித்திடஆசீர்வாதம்
பாலனேபரிபேற்றம் பலித்திடஆசீர்வாதம்
பாலனேவில்லுமேலும் பலித்திடஆசீர்வாதம்
பாலனேபோகம்ஞானம் பலித்திடும்போவாய்கண்ணே.

வசனம்.

அப்பாமகனே உனக்குக்கல்வி யோகம் ஞானம் ஆனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை முதலானது இனி சிவன் அருள் செய் வார் போய் வருவாய் கண்மணியே.

சந்திரவதி வசனம்.

அப்பாமந்திரி லோகிதாசனை அழைத்துக்கொண்டுபோவாய்சத் தியகீர்த்தி.

மந்திரி வசனம்.

மகாபாக்கியம் அப்படியே அழைத்துக்கொண்டு போகிறேன் தாயே.

லோகிதாசன் விருத்தம்.

அன்னையேபோற்றி அனைவரும்பணிய
மன்னியவுமது மலரடிபோற்றி.

வசனம்.

என்னையீன்ற தந்தையே போற்றிபோற்றி.

அரிச்சந்திரன் வசனம்.

கேளும் உபாத்தியாயரே இதோ குழந்தையும் வந்துவிட்டான் இனிவித்தியாரம்பஞ் செய்யத்துவக்கும் ஐயரே.

வாத்தியார் வசனம்.

சுவாமி அப்படியே ஆரம்பிக்கின்றேன் மகாராஜனே.

அரிச்சந்திரமகாராஜன் லோகிதாசனைப் பள்ளிக்கூடத்தில் வைக்கிற பாகம்.



மந்திரி. அரிச்சந்திரமகாராஜன். லோகிதாசன் .உபாத்தியாயர். சந்திரவதி.

வாத்தியார் வசனம்.

அப்பாலோகிதாசா, என்வலதுபக்கத்தில் சப்பாணிபோட்டுகிழக்குமுகமாய்த்திரும்பி உட்காருவாய் அப்பா நான் சொல்லுகின்றபடிக்கி உன்வாயினால் சொல்ல ஆதிகணபதியை தொழுவாயப்பா கண்மணியே.

லோகிதாசன் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் ஐயா.

வாத்தியார் விருத்தம்.

ஓங்காரிமுகனே	போற்றி உயர்கணபதியே	போற்றி
நேங்கவிவாயா	போற்றி திருநேத்திரமுடையாய்	போற்றி
தாங்குமைங்கரத்தோய்	போற்றி சத்திவல்லபையாய்	போற்றி
மூங்கிசர்பாலா	போற்றி மூழிகாபதியே	போற்றி

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா நான்சொல்லும் வாக்கியத்தை நீயுஞ்சொல்வாய் அப்பா கண்மணியே.

வாக்கியம்.

பஜே பிர்ம்ம பஜே விஷ்ணு பஜே ருத்தியமகேஸ்வர
பஜேசாசுதரப் பரப்பிரம்ம சாதுமனம் ஷண்முகா

வாத்தியார் வசனம்.

அப்பாலோகிதாசா இம்மலர்த்தட்டைத் தாங்கி நான் சொல்லுகிறபடியே நயுஞ்சொல்லி மூலகணபதிக்கி அர்ச்சனைசெய்குவாயப்பா பாலகா.

அர்ச்சனை.

ஒன்றைக்கொம்பாய நம.	ஓம்கணபதியே நம.
சித்திபுருஷாய நம.	தேவிவல்லபாய நம.
திவ்வியரூபாய நம.	விக்னேஸ்வராய நம.
வித்தைக்கரசேய நம.	தேஜோன்மயா நம.
சித்திமூலாய நம.	சின்மயரூபாய நம.
ஆதிகாரணாய நம.	அறுதிபொருளே நம.
சோதிச்சுடரேய நம.	சூர்ப்பகர்ணாய நம.
அகண்டபரிபூரணாய நம.	அரிவோம் நம.

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா இந்த ஏட்டைக்கையில் தாங்கி நான்சொல்லும்படி உன்வாயால் ஒளிப்பாய் மைந்தனே.

லோகிதாசன் வசனம்.

அப்படியே ஒலிக்கின்றேன் ஐயா.

வாத்தியார் வசனம்,

ஹரி-ஓம் நன்றாய்க குருவாழ்க குருவே துணை.

லோகிதாசன் வசனம்.

ஐயா இதின் பலன்களை யெனக்குத் தெரியச்சொல்லும் சுவாமி

வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் அறிந்து கொள்ளுவாய் பாலகா.

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா நீ நலப்படவுனக்கு போதிக்கும் குருவான வன்மொழிந்து அவன்மொழியுனக்கு முன்துணையாகி ஓம்என்னும்பீஜத்தை அறிந்து தெளிவுறுவதே யிதின் கருத்தென் றுணர்வதாய் கண்மணியே.

லோகிதாசன் விருத்தம்.

ஓமெனச்சொல்வதென்ன வுணர்வதால்வருவதென்ன
நான்மனங்களிக்கஐயா நலமுடன்தெரிவிப்பாயே.

வசனம்.

ஐயா உபாத்தியாயரே ஓம் என்று சொல்வதின் பயனென்ன அதையுணர்வதால் வரும்பலனென்ன எனக்குத் தெரியப்படச் சொல்லவேண்டும் சுவாமி.

வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் தெரிந்துக் கொள்வாய் அப்பா லோகிதாசா.

வாத்தியார் விருத்தம்.

ஓதுவாய்முதலெழுத்தே அகரமாகும்
உணர்த்திடுவாய் உகாரமதே நடுவதாகும்
பேதபதிநுனியெழுத்தைச்சொல்வேனப்பா
பிரியமுடன்தெரிந்து கொள்மகாரந்தானே
சாதனையாவிதைக்கூட்டி ஓமென்றேதான்
சாற்றிடுவாய் பரஞ்சோதிதன்னுட்டோன்றும்
வாதுகளும்வேதனையுங் காலனாலே
வாராதுபேரின்பம் வாய்க்குந்தானே.

வசனம்.

அப்பாலோகிதாசா அகார உகார மகாரமாகிய மூன்றையுமிணைத்து ஓமென்று மனதைநிறுத்தி உச்சரித்தால் இயமபாதை நீக்கி பேரின்பவாரியில் குளிக்கலாகும் இதுதான் சகலத்திற்கு மூலமந்திரமென்று தெரிந்துகொள்வாய் கண்மணியே.

லோகிதாசன் வசனம்.

இது மூலமானவகை தெரியச்சொல்லவேணும் ஐயா

வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன்

வாத்தியார் விருத்தம்.

அண்டபிண்டமில்லாத ஆதிகாலே
அரூபியாய் குருதானும் சண்டேநிற்க
தெண்டிறலவ் வரூபத்தில் ஓமென்றேதான்
திகழொளியொனறேபிதக்க வாயுவோங்கி
கொண்டபரஞ் சுடரொளியும் வேரதாகக்
கோமளனே அகலனுற்றான் சிவமாய்த்தானே
விண்டறிநீ பவன்ஜலமும் வேறதாச்சு
வித்தகனே குயவன்வந்தான் விளம்புவேனே.

வசனம்.

ஒன்னந்தெளிவாகக் கேளாய் அப்பா பாலகா.

வாத்தியார் விருத்தம்.

விளம்புவேன் இவ்வகையாய்ப் பஞ்சகர்த்தா
வெளியாகிப் பலவுருவாய் வீற்றுநின்றார்
இளம்புவேன் பிரிதிவப்பு தேயுவென்றும்
கிட்டாத வாய்வு ஆகாயமென்றும்
தலந்தனிலே பிர்மவிஷ்ணு ருத்ரனென்றே
சாற்றியேசுரூபங்கள் தானமைத்தார்
நலன்தெரிவாய்மற்றிரண்டின் ரூபங்காணார்
நற்பாலா இனிபாடம் படிப்பாய்நாதா.

வசனம்.

அண்டபிண்ட சராசரமில்லாத காலேயில கடவுள் அரூபியாய்த் தானே தானுயெங்கும்பரவி நிற்க அவ்வரூபத்திலிருந்து ஓம் என்று ஒருசப்தம்பிறந்தது அந்தசப்தத்தில் வாய்வுசேர ஒளிவுண்டாயிற்று அந்த ஒளியிலிருந்து விராட்டு உதிக்க அதலால்சிவன்பிறந்துசிவத்திருந்து ஜலம்காற்று மண் அக்கினி ஒளி இவைகள் தனித்தனியாகி ஒளியால் சதாசிவமும் காற்றால் மகேஸ்வரனும்அக்கினியால்ருத்திரனும்ஜலத்தால் மாயவனும் ஜலந்தங்கிய மண்ணால் பிரமனும் வெளியாக இதில் கண்ணுக்குத்தோற்றும்படியான மூன்றை மாத்திரம் உருவாய் அமைத்து அவைகளுக்கு பிரம்மா விஷ்ணு உருத்திரனென்று பெயரிட்டு காரணதேவதைகளாக பூசித்து வருகிறார்கள் மற்ற யிரண்டும் கண்ணிற்குத் தோற்றாதானதால் உருவு அமைக்கத் தெரியாமல்விடப்பெற்றிருக்கு தென்றறிவாய் கண்மணியே.

லோகிதாசன் வசனம்.

மஹாபாக்கிய மஹாபாக்கியம் சற்குருவே.

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா இனி அக்ஷரத்தை வாசிப்பாய் பாலகா

லோகிதாசன் வசனம்.

அப்படியே வாசிக்கின்றேன் குருவே

வாத்தியார்-தரு-இராகம்-பிலஹரி-தாளம்-ஆதி.

ஓம்நம வென்றுரைப்பாய் நீ கண்மணியே
லோகிதாசன்.
ஓம்நம வென்றுரைத்திட்டேன் என்குருவே
வாத்தியார்.
சிவய வெனச்செப்புவாய் நீ கண்மணியே
லோகிதாசன்.
சிவய வெனச்செப்பினேன் என்குருவே
வாத்தியார்.
அ ஆ இ ஈ யென்றறைவாய்நீ கண்மணியே
லோகிதாசன்.
அ ஆ இ ஈ யென்றறைந் திட்டேன் என்குருவே
வாத்தியார்.
உ ஊ ரு ரூ வென்றோதுவாய் நீ கண்மணியே
லோகிதாசன்.
உ ஊ ரு ரூ வென்றோதினேன் என்குருவே
வாத்தியார்.
லு லூ எ ஏ யென்றுரை செப்வாய் நீ கண்மணியே
லோகிதாசன்.
லு லூ எ ஏ யென்றுரை செய்தே னென்குருவே
வாத்தியார்.
ஐ ஒ ஓ வென்றறைந்திடு நீ கண்மணியே
லோகிதாசன்.
ஐ ஒ ஓ வென்றறைந்திட்டேன் என்குருவே
வாத்தியார்.
ஔ உடனிவை உயிர் அறிந்துக்கொள் நீ கண்மணியே
லோகிதாசன்.
ஔ உடனிவை உயிர் அறிந்திட்டேன் என்குருவே
வாத்தியார்.
க க க க வைகருது நீ கண்மணியே
லோகிதாசன்.
க க க க வைகருதினேன் என்குருவே
வாத்தியார்.
ச ச ச ச வைசாற்றுவாய் நீ கண்மணியே
லோகிதாசன்.
ச ச ச ச வைசாற்றினேன் என்குருவே

வாத்தியார்.

டடடட நீகாறைது கண்மணியே

லோகிதாசன்.

டடடட நான்தான் கொண்டேன் என்குருவே

வாத்தியார்.

தததத வைதான் சொல்லுநீ கண்மணியே

லோகிதாசன்.

தததத நான்தான்சொன்னேன் என்குருவே

வாத்தியார்.

பபபப நீ படித்திடு கண்மணியே

லோகிதாசன்.

பபபப நான்படித்திட்டேன் என்குருவே

வாத்தியார்.

ண ன ங ஞ வைநாட்டிக்கொள்நீ கண்மணியே

லோகிதாசன்.

ண ன ங ஞ நான் நாட்டினேன் என்குருவே

வாத்தியார்.

ய ர ல வ நீ அறிந்துக்கொள் கண்மணியே

லோகிதாசன்.

ய ர ல வ நான் அறிந்திட்டேன் என்குருவே

வாத்தியார்.

ஜ ஷ ஸ ஹ நீ சாற்றிடு கண்மணியே

லோகிதாசன்.

ஜ ஷ ஸ ஹ நான் சாற்றினேன் என்குருவே

வாத்தியார்.

ள ழ க்ஷ மெய்நாட்டிக்கொள் கண்மணியே

லோகிதாசன்.

ள ழ க்ஷ மெய்நாட்டினேன் என்குருவே

வாத்தியார்வசனம்.

கேளும் அப்பா லோகிதாசா

லோகிதாசன் வசனம்.

சொல்லும் ஐயா உபாத்தியாயரே

வாத்தியார் விருத்தம்.

மெய்யினிலுயிரைப்பூட்டில் வேறும்வார்நீண்டொலிக்கும்
ஐயனேஅசைகள்சேர்ப்பாய் அதன்பின்புபதமும்வாக்கியம்

வையகந்தனிலேயாரும் வகுத்திடாரிந்தசூட்சம்
பையலேயுணர்வாய்கல்விப் பயிற்சியின்மூலந்தானே.

வசனம்.

அப்பாலோகிதாசா மெய்யெழுத்துடன் உயிரெழுத்தை யிணைத்தால் நீண்டொளிக்கும் ஒளியறிந்து அதைசேர்ப்பாய் அதின்மேல்பதம்வாக்கியமுதலானதுஞ் சேர்க்க அறிவாய் இதுதான் வித்தைகற்றசூக்ஷவழியென்றறிவாய் பாலகா.

லோகிதாசன் விருத்தம்.

தெரிந்திட்டேன்படிப்பின்சூக்ஷம் செப்பும்வேதம்படிப்பேன்
பரிந்துநீருரைத்தமார்க்கம் பலாபலாமிகவும் நன்றே.

வசனம்.

ஐயா நீர்சொன்னமார்க்கம் மிகவும்நன்றாவித்தையின் சூக்ஷம்தெரிந்தேன் இனி தடையின்றி வேதமுதலானதும் வாசிப்பேன் சுவாமி

லோகிதாசன் விருத்தம்.

இப்படிக்கிருக்கமார்க்கம் ஏனிந்தச்சிறுவர்தானும்
வெப்பிவெவெகுநாளாக வேதனைப்படுகிறார்கள்
கைப்பணியிவரிரண்டு கண்ணிற்குத்தோற்றிடாமல்
வைப்பமீதனையாநீதான் வகையெனக்குரைசெய்வீரே.

வசனம்.

ஐயா வித்தையின்சூஷம் இப்படியிருக்க இவர்களுக்குத்தெரியவிக்காதிருப்பது யேனோசொல்லுஞ் சுவாமி.

வாத்தியார் விருத்தம்.

அவரவரன்னைதந்தை அமைத்தகர்மத்தின்வாரே
வருவார்கள்சுதாகள்சண்டாய் வகைபுரிபுந்நியோசம்
திறமையும்பெறுதல்மெத்த சிறுமையென்றுணர்வாய்நீதான்
அருந்தவச்சத்தியபாஷா அரிச்சந்திரனளிந்தபாலா.

வசனம்.

கேளாய் பாலகா மாதா பிதாக்கள் செய்த கருமத்தை அனுசரித்தே புத்திரர்கள் பிறப்பது அறிவிலுட்பட்டுதெரிவது அல்லாமல் நீசத்தியவாக்கரிச்சந்திரன் பெற்ற பாலனென்றறிவாய் கண்மணியே.

லோகிதாசன் விருத்தம்.

இப்படிக்கிவர்பிறக்க யேதுகாரணமோஐயோ
கொப்பெனவெனக்குத்தோற்ற குறையின்றியுரைசெய்வாயோ.

வசனம்.

ஐயா இவர்களிப்படி பிறப்பதற்குக் காரணஞ் சொல்லவேணுஞ்சுவாமி.

வாத்தியார் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் அறிவுடைய பாலகனே,

வாத்தியார் விருத்தம்.

சத்தியந்தனைமறந்தே தனைபடைத்தோனைவிட்டு
நித்தியகருமம்போக்கி நீள்கிரகநிலைமறந்தும்
முத்தியேமூர்க்கமோகம் முனைந்துமேநிலைமையில்லா
பத்தினிதனையணைந்த பாவத்தால்வந்தோர்கண்டாய்.

வசனம்.

கேளாயப்பா அசத்தியனுய் கடவுளைமறந்து நித்திய கர்மானுஷ்டானங்களை மூர்க்கமோகங்கொண்டு நக்ஷத்திராதியோசம் அறியாமல் புருஷன் பணிவிடையில் குறைவாகிய மாதரைப் புணர்ந்தால் வருபவர்களென்றறிவாய் கண்மணியே.

லோகிநாசன் விருத்தம்.

அறிந்திட்டேன்நீர்தான்சொன்ன அரும்பொருள்விதியைநானே
திறமுடன்முன்பாடத்தில் செப்பியஐந்தெழுத்தும்
பிறந்ததோஉயிர்மெய்தன்னில் பேதத்தையானுநன்ருய்
அறிந்திடவுரைப்பீரென்றன் அன்னைலேவுபாத்தியாயரே.

வசனம்.

ஐயா நீரெனக்குச் சொல்லிவைத்த அக்ஷரத்தில் முன்செப்பிய ரகசியவவென்பவைகள் ஐம்பத்தோரெழுத்தில் சேர்ந்ததாவேருஅதின்விபரமும் நட்பமுந்தெரியநன்ருய் சொல்லவேண்டுஞ்சுவாமி.

வாத்தியார்விருத்தம்.

சொல்லுவேனப்பாநல்லறிவற்ற
வள்ளலேகவனம் வைத்துநீகேட்பாய்.

வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் கவனத்துடன்கேட்டுத்தெரிந்து கொள்ளுவாய் பாலகா.

வாத்தியார் விருத்தம்.

அஞ்செழுத்தே ஆதிபரன்நாமமப்பா
அதையுரைத்தால் அந்திசந்திபுசிதன்னில்
கெஞ்சமதில்குடிகொள்வான் கவலைநீக்கும்
நீதெரிவாய்கண்மணியே நிகழும்வேதா

வசனம்.

கேளுமப்பா ராஜகுமாரா அந்தஅஞ்செழுத்தாகிய நமசிவயவென்பதே பிரமவிருஷ்ணு விஷ்ணுருத்திரமஹேஸ்வர சதாசிவமென்னும் பஞ்சகர்த்தாவாகிய திதி [illegible] திரோபம் அநுக்கிரகமெனும் ஐந்தொ

மில்புரிந்து பிரிதிவுஅப்புதேயுவாயுஆகாயமென்னும் பஞ்சபூதங்களாகியஆன்மாக்களுடன்பிரவேசித்து நடத்தல்இருத்தல்அறிதல்உணர்தல்தெளிதல் என்னும் பஞ்ச அறிவைப் புகட்டி நன்மைதிமைகளைப்பகுத்தறியச்செய்யாநின்றவைகளாகும் பாலகா துவக்கத்தில்இதில்மூன்றுகண்ணிற்குந்தோற்றுபவைகளாதலால் விக்கிரகரூபமாகநிறுத்தி இதல்நாமம் தாளிதமெனும் மூலைக்குறியிட்டு நாலுஐந்து எட்டெழுத்தில்மூலமந்திரத்தைநினைத்து திவ்வியபுஷ்பங்களால் நாமாவளிசெய்தி அர்ச்சனை புரிந்த புலையன் கொலைதவிர்த்துபக்தியாய் தூபதீபநைவேத்தியமீந்து பணியவேண்டியதுபாலகாநடுவில்தரோபவம்பெற்றால்இந்தவுருவுகளைத்திறந்து ஆராதனை விட்டு மந்திரத்தையே மனமலரால் அர்ச்சிக்கவேண்டியதுபாலகா முடிவில்அநுக்கிரகம்பெற்றால்மனவாக்கும் ஒன்றாக்கி ஞான நேத்திரந்திறந்து பேரானந்தத்தில் மூழ்கிகாலன் உபாதையைத் தள்ளக்கருதவேண்டியது பாலகா அதின்பேரில் அரும்பெரும்பொருளாய் இவ்வைந்திற்கும் மேலாய்நிற்கும்அரூபியாகிய பிர்ம்மத்தைத் அநுசரிப்பது முறை இம்முறையில் ஒன்றைவிட்டு ஒன்றில் பிரவேசித்தல் வழி அறியாக்குருடனுய்வாசாஞானம்பேசிபலபேரும்நகைக்கஉடல்வெட்கி எமனுக்கினைக்குள்ளாகிஆவியானது ஸ்தூலத்தை விடுங்காலையில் நீலிகைவிட்டு வெளிப்படஅசக்தியாய் மனக்கண்ணிற்கும் ஞானக்கண்ணிற்கும் மத்தியில் சிலேஷமக்கபங்கட்டி நாய்போல்மொறுசி குலைக்கநாவெழாமல் பார்த்தவர் இவன்மஹாபாவியெனவுயிர்நீக்குமென்றறிவாய் அறிவிலுயர்ந்தபாலகா.

லோகிதாசன் விருத்தம்.

ஐயனேஎனக்கேஅந்த அரும்பொருள்மந்திரத்தை
உய்யவேதயைபுரிந்தே உபதேசித்தாட்கொள்வீரே.

வசனம்.

சுவாமி அடியேனுக்கு அந்த பஞ்சாக்ஷரமந்திரத்தைஉபதேசஞ்செய்யவேணுங்குருவே.

வாத்தியார் வசனம்.

அப்படியே உபதேசிக்கின்றேன் அறிவையோர்நிலையில்நிறுத்திதெரிந்துகொள்ளுவாயப்பா சிஷனே.

லோகிதாசன் வசனம்.

புத்தி அப்படியே நிறுத்திக் கொண்டேன் குருவே.

வாத்தியார்உபதேசம்-தரு-இ-ம்-ஆரபி-தாளம்.

பல்லவி.

ஓம்நமசிவாயமென்றோதுபாலா ஓதுபாலா
இதேபோதும் சீலா

அநுபல்லவி.

ஓம்நமசிவாயமென வா நமசியாவென
நமசிவாயவென வாழ்த்துபாலா உரு
வேற்றுஞ் சீலா

சரணங்கள்.

ஜனனமரணதுன்பஞ் சிக்கறுத்திடும்பிர்ம்ம
கவன நிலையன்னுள் காட்டும்பாலா சுழிமேல்
ஏற்றுஞ் சீலா (ஓம்)

இருக்கினும் ஏகினும் எத்தொழில்புரிகினும்
திருமூந்துசாமிபோலச் செப்புபாலா மனம்
ஒப்புஞ் சீலா (ஓம்)

லோகிதாசன் வசனம்.

புத்தி புத்தி அப்படியே என்குருநாதனே.

வாத்தியார் வசனம்.

அப்பா லோகிதாசா இன்னமொருகிரந்தமிருக்கின்றன அதையும் படித்துத் தெரிந்துகொள்ளுவாய் அப்பா ராஜகுமாரா.

லோகிதாசன் வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே தங்களுடையதிருவாக்கின்படிக்கே வாசிக்கிறேன் என்குருநாதனே.

வாத்தியார் விருத்தம்.

கரிபரிபிடித்தல்தாண்டல் கனத்திலுலாவுமம்பு
வரிசையாய்த்தொடுத்தல் வாளால்வருத்திடுங்கதையின்மல்லும்
சரிச்சொலப்பிண்டிபாலம் சஸ்திர அஸ்தலாகம்
தெரியுதுநூலிதுவேஅப்பா சிருடன்வாசிப்பாயே.

வசனம்.

அப்பாலோகிதாசா ஆனையேற்றங் குதிரையேற்றம்வில்வித்தை மல்யுத்தம் முதலானவைகளைத் தெரிவிக்கும் நூலிதுவானதால்நன்றுய்க் கவனித்து பழகுவாய் வேந்தனே.

லோகிதாசன் வசனம்.

அப்படியே செய்கின்றேன் சுவாமி.

லோகிதாசன்விருத்தம்.

ஓதியேநீர்தானென்று உரைத்தவப்படிபின்னாலே
சாதனைபுரிந்துணர்ந்தேன் சாஸ்திர அஸ்தலாகம்
நீதியாய்க்கரிமேலேறும் நேமையும்பரிபிடித்தல்
பேதியாமல்லும் பிரியமாயறிந்திட்டேனே.

வசனம்.

சுவாமி நீர் அடியேனுக்குச்சொல்லிடவாறே இந்தநூலைவாசித்து சாதனையும்புரிந்து ஆனையேற்றமுதலானசகலமுந்தெரிந்துகொண்டேனையா நாதனே.

லோகிதாசன் வசனம்.

கேளுஞ்சுவாமி யென் குருநாதா.

வாத்தியார் வசனம்.

சொல்லுவாயப்பா ராஜகுமாரா.

லோகிதாசன் விருத்தம்.

ஐயனேகுருவேபிரம்மம் அநுஷ்டிக்கவெனக்கேநீருங்
கையனேஅருள்தான்செய்வீர் பாதமேபோற்றிநாதா.

வசனம்.

சுவாமி அடியேன் பிரமத்தை அநுஷ்டிப்பதற்காக முறைதெரியச் சொல்லவேண்டும் குருநாதனே.

வாத்தியார் வசனம்.

அப்பா பிரமத்தை அநுஷ்டிக்க காலமல்ல அதற்குத் தகுந்தகாலத்தில் முறைசொல்கின்றேன் கேளாய் பாலகா.

வாத்தியார் இரட்டை ஆசிரிய விருத்தம்.

வாக்குமன மொன்றாய்ப்பொய்த் தூக்கம்விட்டே
மண்ணாசைபொருளாசை மங்கையாசை
நீக்கிநிஜமடைந்தேபோய் கொலையும்போக்கி
நிகழ்மூலவடனெட்டுஞ் சாம்பலாக்கி
தாக்கிரவி மதியையுமே யிணைத்துப்பூட்டி
தாமரையின் நடுவிருத்தி ஓட்டைமூடி
ஆக்கியே உன்னுணர்வு நீருநதள்ளி
அணுகாமல் மலசலத்தை யகற்றியப்பா
தூக்கியே யீரிரண்டு மூன்றுமாதம்
சொல்லுவேன்பதியிருக்கு மிடத்திலேதான்
ஜாக்கிரதையாய்க் காவல்புரி நீலிமாயம்
நனையுறுத்தே கும்பகதி லோசைகாட்டி
போக்கியமா யிருப்பவர்கள் பிரம்மத்தன்னை
உணர்வார்கண்டாய் பக்குவமின்றி ஒலிப்பதெல்லாம்
நாய்க்குலையாம் நரகில்வருந் குலமுநாசம்
நாடாதே வணக்கிறதான் காலமன்றே.

வசனம்.

கேளும் அப்பா உன்னுடைய சிஷனேசபாலசிந்தியிருக்கிறைத அகற்றி யேகசித்தனாக மனம்வாக்கொன்றாக வமைத்துமுவாசையெனும்முனையின் அடியேவர்களைக்களைந்து புலை, புன்கொலைதவிர்த்துவிருத்

திக்காமல் ஷட்வர்க்கங்களையும் அஷ்டமதங்களையுங்கருக்கியிருகலைக ளையுமிணைத்து ஒருமொக்காகிய பலாபிதழுடைய கமலத்துள்ளிருத்தி மூலக்கனலெழுப்பி வாசல்களையடைத்து உபாதைகளணுகாமல் நீரு ணவையும்போக்கி மூன்றுநான்கு ஆறு கோணங்களுள்ள சொத்தள ங்களின்பேரில் ஏகோபாவனைய் உலவுபவனுகியும் ஒருகொத்தளமு ள் ஒப்பில்லாக்கோட்டையுள் தங்கியுந் தங்காமற் சஞ்சரிக்குங் கள்ள னை காப்பவனாகிய கபாலியில் மாய்கைகளையெல்லாம்பற்றறவறுத்து பிரம்மாந்திர வழிவிடாமல் மூலத்தை நிறுத்தி பேசும் பேசாத யேகா க்ஷரபடனத்தால் பூரகத்தைக்கட்டி ஆட்டிக்கும்பஸ்தனத்தில்பேரா னந்தஇசைபாடி இருவினைகளையும் நீக்கத் தகுந்தவருஞ் சுழித்தியில் மெய்த்தூக்கம் புரிவர்களாகிய யோக்கியவான்களல்லவோ அந்த சத் துசித்து ஆனந்தநித்திய நிராமய நிரத்தொந்த நிர்மலநிராங்கார நிரூப சுத்த சுயம்பொருளான பிரமந்தனை யிருக்கு மிடந் தெரிந்து உனக்கு மிடந்தெரிந்து உரைத்தக்க மறாளுபாவர்கள் அப்பா பாலகா அ வைகளையறியாமல் வாய் ஒலியினுல் பிர்ம்மமென்ப தெல்லாம் வெகு நாய்கள் புரியுங் குலைச்சல்களானதால் பாலகா இது உமக்குத் தகுதி யான காலமல்லவென்று அறிந்துகொள்வாய் சீடனே.

லோகிதாசன் வசனம்.

புத்தி புத்தி புத்தி அபசாரம் பொருந்தருள வேண்டியது ஆண் டவனே.

வாத்தியார் வசனம்.

அடாபிள்ளாய் சிங்காரம் உன்பாடத்தை யொப்பியும் பிள்ளாய்.

சிங்காரம்-தரு-இராகம்-நாதநாமக்கிரியை தாளம்-ஆதி.

அறஞ்செயவே விரும்புமனதேநாளும்
அறஞ்செயவே விரும்பு
பரமன்சோதிக்கவேண்டி பணமுனக்கேகொடுப்பேன்
பாசவலைக்குள்ளாக மோசம்போகாமல் தினம் (அற)
வரும்விருந்தைதை நாடு-நாளுந்தானம்
வந்திறந்தவிர்க் கிடு
கருமாந்திற்குள்ளாகிய கள்ளைச்குடிக்காமலும்
சயவனுவியளியோமரக் கண்டித்துரைக்காமலும் (அற)
கோவத்துடனை விடு-கவிஞர்கள்
குறைதவிர்த்திடத் தேடு
பாவிபோலடித்தோரைப் பழுக்கவதையாதோ
பண்புளோர்வரிலன்னம் பசராமற்புசியாதே (அற)
தாயற்றபிள்ளை கட்டேவேணவுதவி
காப்பார் பலனுவக்கே
நாயைப்போல்வந்தவரை நயாரின்றிபேசாதே
நமனிடஞ்சேவந்தால் நடாதேதுயிப்போதே (அற)

வாத்தியார் வசனம்.

சட்டாம்பிள்ளை இவனுக்கு நாளையபாடத்தைச் சொல்லிக் கொடும் அப்பா.

வாத்தியார் வசனம்.

அடாசுந்தரம் உன்பாடத்தை ஒப்பியும் பிள்ளாய்.

சுந்தரம் வசனம்.

அப்படியே ஒப்பிக்கின்றேன் ஐயா

சுந்தரம்-தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

படைத்தகுருவின் பாதம் மறவாதே-உன்னை
அடுத்தசேட்டைகள் மறவாதே

அநுபல்லவி.

துடைத்திடுநாளுந்தேவ தூஷணைநீசெய்தாயே
துன்பந்தனைய றுக்க இன்பந்தனையடைய
வன்மமதுகளைந்தே கன்மமதைத்தொலைப்பாய் (ப)

சரணங்கள்.

ஒருவர்கொள்கையைப்பற்றி யிகழாதே-வீணாய்
கருமத்திற்குள்ளாய்நாய்போ லலையாதே
திருநீறென்பதைகண்டால் குலையாதே-நாளும்
வருந துன்பமதங்காம் நிலையாதே
சருவுமாதருஞ் சத்தந் தழைக்காதே-யென்றும்
தங்குமருளைநாடி யெங்குமவனைப்பாடி
பொங்கும்படிக்கேஅடி அங்கதன் தனிலேதேடி (ப)
மாயனடியரைநீ தூராதே-யிந்த
காரியநிலைக்கவருள் வாராதே
நேயங்கொடுப்பாரைவேறு பாராதே-கோல
தூயனன்றிவேறுந் தேறாதே
சேயன்றிமுறையிடில் ஏறாதே-நான்
செப்புமொழியைக்கேட்டு ஒப்பிமனதிலிட்டு
கப்புடம்பத்தைவிட்டு அப்பனடியைத்தொட்டு (ப)
யெல்லாமொருதெய்வமே அறிவாயே-அவன்
அல்லாலென்பதையாது தெரிவாயே
கல்லாகிலுமுன்மையசயப் பணிவாயே-பத்தி
நல்லாயியற்றியருள் பெறுவாயே
சொல்லாராருமுனக்குச் சரிவாயே-யிதைச்
சூட்டினேனுனக்குமே காட்டினேன்விளக்குமே
நாட்பலிலெவர்க்குமே மேட்டியாய்க்காய்க்குமே (ப)

வாத்தியார் வசனம்.

அடாமாணிக்கம் உன்பாடத்தை சொல்லும் பிள்ளாய்.

மாணிக்கம் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் ஐயா.

மாணிக்கம்-தரு-இ-ம் இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

புத்திகேழ்ப்பாயே நான்சொல்லும்புத்திகேழ்ப்பாயே

அநுபல்லவி.

சத்தியந்தன்னையே தள்ளிச்சொல்லாதே
தரணியில்டம்பனாய்த் தான் திரியாதே-என் (புத்)

சரணங்கள்.

உத்தமரை யிகழாதே-ஞாயம்
ஓதிடாச்சபை நீசாராதே
பத்தினிதன்னை நோக்காதே-பாவம்
பலித்திடுநரகில் மூழ்காதே-என்(புத்தி)
கெட்டவார்த்தை புகலாதே-நீதி
கிட்டாதமார்க்கத்தில் நீநுழையாதே
பட்டகுடி யடுக்காதே-நாளும்
பாரில்கொலைசெய்துதான் துடிக்காதே-என்(புத்தி)
புத்திகெடக் குடியோடுபலர்
புகலாவார்த்தைகளை நீவிடியாதே
சுத்தியில்லா திருக்காதே-தேவ
தூஷணைமார்க்கத்தை நீபடியாதே-என்(புத்தி)
ஜீவன்கோவப் புரியாதே-உன்
சிக்கிப்போம் சொன்னேனதை அறியாதை
கோபத்தால் வசைஉரையாதே
கொள்ளும் என்னமுனக்குத் தெரியாதே-என்(புத்தி)

வாத்தியார் வசனம்.

அடா இரத்தினம் உன்பாடத்தைச் சொல்லும்பிள்ளாய்.

இரத்தினம் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் ஐயா

இரத்தினம் விருத்தம்.

ஒருவனே யாருக்கும் தேவனாகும்
ஒருபலபேரிலுறு மவனேயாகும்
அருமைவிதி நடத்துபவ னவனேயாகும்
கனிந்தவர்க்கே வரமளிக்குங் கடவுளாகும்
தருமகுணம் படைத்தவனு மவனேயாகும்
சரவணமூர்த்தி யுமென்றன் தந்தையாகும்
முருகனே விநோதசபை காப்போனாகும்
முகிழ்ந்துபணி வோமவனை நாளுநாமே.

வாத்தியார் வசனம்.

கேளாயப்பா சட்டாம்பிள்ளை.

சட்டாம்பிள்ளை-வசனம்.

சொல்லுஞ்சுவாமி குருநாதனே.

வாத்தியார் விருத்தம்.

அரசன்றன்மகனுமிந்த அன்புள்ளலோகிதாசன்
வரபுத்திரனனதாலே வகையுடன்மூலரதார
சரவிதிநீதியெல்லாஞ் சார்வறத்தெரிந்தான்வேந்தன்
பரன்சென்றுவருவேன்பள்ளி பத்திரம்சட்டாம்பிள்ளை.

வசனம்.

அப்பா சட்டாம்பிள்ளை இந்த லோகிதாசன் நாலுவேதம் ஆறு சாஸ்திரம் மனுவிக்கியானம் நீதிநெறி இராஜாங்கத்தைச்சார்ந்த சகலவித்தைகளிலும் தெளிவுற்றான் ஆதலால்மகாராஜனிடம்போய் வருகின்றேன் பள்ளிகூடம் பத்திரமப்பா.

சட்டாம்பிள்ளை விருத்தம்.

நீர்வருங்கடிகைமட்டும் நிமைப்பொழுதிடர்செய்யாமல்
சார்வின்றிசிறுவர்பாடஞ் சட்டமுந்திட்டமாக
பார்வைநான்சொல்வேனையா பதிவரநேரமாகில்
மார்பொழுதிருக்கமைந்தர் மனைக்கேகவிடையீவேனே.

வசனம்.

அப்படியேகாத்துக்கொள்ளுகிறேன் தாங்கள்வரத் தடையாகில் ஒருமார்பொழுதிருக்கச்சே சிறுவர் வீட்டிற்குப் போக விருக்கின்றேன் ஐயா.

வாத்தியார் வசனம்.

அப்படியே செய்வாயப்பா சட்டாம் பிள்ளாய்.

வாத்தியார் விருத்தம்.

கட்டியக்காரகேளாய் கனமுடன்சென்றுபார்த்தி
கிட்டினரென்றுவேந்தன் கிமியுறச்செப்புவாயே.

வசனம்.

அப்பா கட்டியனே உபாத்தியாயர் லோகிதாசனை அழைத்துக்கொண்டு காணவேண்டி வந்திருக்கிறாரென்று அரிச்சந்திர மகாராஜனுக்குத் தெரிவியும் பிள்ளாய் விரைவே.

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே போய்த் தெரிவிக்கின்றேனையா வாத்தியாரே.

கட்டியக்காரன் விருத்தம்.

ஐயனேவாத்தியாரும் அலகுநின்பாலனோடு
ஐயனேயிங்குற்றேதான் அறிவிக்கச்சொன்னார்வேந்தே.

வசன்ம்.

ஆண்டவனே குமரவேல்வாத்தியார் லோகிதாசனை அழைத்துக்கொண்டு கொலுவாசல்முன் வந்திருக்கிறார் சுவாமி.

அரிச்சந்திரன் வசனம்.

அடா கட்டியனே ஜாக்கிரதையாய் அழைத்துக்கொண்டு வாரும்பிள்ளாய்.

கட்டியன் வசனம்.

ஐயா உபாத்தியாயரே அரசன்வரச்சொன்னார்போகலாமையரே

வாத்தியார் விருத்தம.

வேந்தனேபோற்றி விமலனேபோற்றி
சாந்தனேபோற்றி தாளடிபோற்றி.
(வ-ம்.) போற்றி போற்றி மகாராஜனேபோற்றி.
வ-ம். உபாத்தியாயரே நீவந்தகாரியஞ் சொல்லும் ஐயரே.

வாத்தியார் விருத்தம்

சத்தியனேஉமதுபாலன் சாஸ்திரமெல்லாங்கண்டாய்
சத்தியனேஆஸ்தலாகம் சார்வறக்கற்றானம்பு
சத்தியனேவிடவும்ஞானம் சாரவேவழியுங்கொண்டேன்
சத்தியனேஇவனைத் தேவதாசனென்றழிகுவீரே.

வசனம்.

கேளும்மகாராஜனே உமதுகுமாரனை லோகிதாசன் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அரசுக்குரிய வில்யுத்தம் மல்யுத்தம் ஆனையேற்றங்குதிரையேற்றம் நீதிநெறிஒழுக்கலானதுங் கற்றதுடன்கூட பரமன்மகிழும் ஞானத்தைச்சார நேர்வழியுந் தெரிந்திட பஞ்சாக்ஷர மகிமையையும் அறிந்தானு லாதலால் இதுமுதலியவனைத் தேவதாசனென்று அழைக்கத்தகும் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

ஆ அப்படியா வெகுசந்தோஷம் இன்றுமுதல் நீருரைத்தபடியே தேவதாசனென்றழைக்கச் செய்வேன் உபாத்தியாயரே.

தேவதாசன் விருத்தம்.

என்னையின்றெடுத்தஐயா இணையடிபணிந்தேனந்த
சொன்னமாமலர்முடிப்பேன் கிருபையினுபாத்தியாயர்
தன்னையேபணிந்தேவேத சாரமுந்த நமதீதி
மன்னவேமற்றதெல்லாம் பழுதறக்கற்றேன்போற்றி.

வசனம்.

கேளும் எனையீன்றபிதாவே உபாத்தியாயர் பாதம்பணிந்து சகலகளையுங் கற்று அரசுக்குரிய விசிஷ்டமும் அறிந்தேன் இன்றுபஞ்சாக்ஷர வுபதேசமும் பெற்றேன் தந்தையே.

அரிச்சந்திரன் விருத்தம்.

கண்ணின்மணியே யென்குலத்தைக் காக்கவந்தகதிரொளியே
விண்ணின்மதிப்ப ிபேறுத்த வித் தகபென் னவிளம்புயபே.

வசனம்.

அப்பா பாலகா நீ வாசித்த வித்தையை விபரமாய்ச்சொல்வாய் என்கண்மணியே

தேவதாசன் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் என்பிதாவே.

தேவதாசன் அகவல்.

சீர்பெறுமயோத்தி செங்கோல்நடாத்தும்
பார்புகழ்தந்தையே பகருவேன்கேளீர்
ஓரெழுத்தி லுருதியுமோன
நேமமுமட்சர நிலைமையுமுணர்ந்தேன்
முதல்அட்சரம் ஐம்பத்தோரட்சரம்
நம்மையாயுரைத்தநி னயப்பையுங்கண்டேன்
அதைமொழிவாக்கிய மமைதநிடுகையையும்
இசைதனைதொங்க விலக்கணமறிந்தேன்
அஞ்செழுந்தாகி அடியிடைமுடியாய்
நெஞ்சநிலமர்ந்த நிலையதுமறிந்தேன்
கரிபரிவிடுக்குங் கவனமுமம்புகள்
அறிவுடன்தனுசா வனுப்பவுங்கற்றே
மல்லுடன் வாளும் வளைதடிபாலமும்
சொல்லிடுங்கதையின் சூட்சமுந்தெரிந்தேன்
செங்கோன்முறைமையும் தேசவழக்குமுந்
தங்கள்சொல்மீறுத தன்மையுமுணர்ந்தேன்
ஆசனவிதியும் அரும்பொருளதுவும்
தேசமும்பெற்றேன் தேவனேபோற்றி.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாயென்றன் மகனுமேவித்தைகளெல்லாம்
சுந்தரமாகக்கற்றான் சுறுக்கெனநீதானிங்கு
வந்திட்டஉபாத்தியாயர் மனங்களித்திடவேசென்று
உந்திருக்கையால்நல்ல வுடுப்புதந்தனுப்புவாயே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி நமது தேவதாசனுக்கு வித்தை கற்பித்த வுபாத்தியாயர் மனங்களிக்க வேண்டிய வெகுமதிகள் கொடுத்தனுப்புவாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகின்றேன் மகாராஜனே.

மந்திரி விருத்தம்.

வாத்தியார்தனக்கே நேத்தியாய்வெகுமதி
பார்த்திபா அளித்தேன் சாத்தியபடியே.

வசனம்.

மகாராஜனே உமது உத்திரவின்படியே வாத்தியாருக்கு வெகுமதி கொடுத்தேன் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

மெத்த சந்தோஷம் மெத்த சந்தோஷம் அப்பா மந்திரி.

வாத்தியார் விருத்தம்.

வெகுமதி தோனப்பெற்றேன்
  வேண்டினேன் வேறுராஜே
ஜெகதலர் வும்மைப்போலச்
  செய்தல ரெங்குங்காணேன்
மகிழுட னிருந்தேவி
  மட்டிலாத் தேவதாசன்
திகழ்சபை விநோதமுன்றன்
  செங்கோலும் வாழிவாழி.

வசனம்.

மகாராஜனே வெகுமதி பெற்றுக்கொண்டேன் போய் வருகின்றேன் வாழி வாழி மகாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே போய்வாரும் உபாத்தியாயரே.

தேவதாசன் விருத்தம்.

அம்மணிஉபாத்தியாய ரடிபணிந்தடியேன்முனும்
அம்மணிசகலவித்தை யடியேனுங்கற்றேனம்மா
அம்மணிஅஞ்செழுத்தி னடிநனி அறிந்ததற்காய்
அம்மணிதேவதாச னென்றனையழைத்தார்தாயே

வசனம்.

கேளும் என்னைப்பெற்ற தாயே உனது ஆசிர்வாத பலத்தினால் சகலவித்தையுங்கற்று பஞ்சாட்சரவுண்மையும் தெரிந்துக்கொண்டேன் அதனால்எனக்குதந்தைமுன்னிலையில் தான்குருவானவர் தேவதாசனென் றழைக்கச்சொல்ல தந்தை மகிழ்ந்து அப்படியே அழைத்தனர் அம்மா.

சந்திரவதி விருத்தம்.

என்தவமுதலே வாழி
  எனகண்ணின் மணியேவாழி
முன்செய்த பலனால்வந்த
  முத்திரைழில்விளக்கேவாழி.

வசனம்.

வாழி வாழி என்தவப்புத்திரனாகிய தேவதாசனே.

விவாககாண்டமும் புத்திரோற்சவகாண்டமும்

முற்றிற்று.

முருகன் துணை.

சத்தியபாஷை அரிச்சந்திரவிலாசம்

இந்திரகாண்டம்.

விநாயகர் துதி.

வெண்பாசங்கராபரணம்.

சீராரவிகுலத்துச் செம்மலரிச்சந்திரன்றன்
பேரார்சரித்திரத்தைப் பேசுதற்கே ஏரார
செஞ்சடையிற்கங்கையுடன் றிங்களணியெம்பெருமான்
கொஞ்சிமகிழைங்கரனைக்கோரு.

தரு இம் சுருட்டி தாளம் ஆதி

பல்லவி.

ஓமகணபதிசரணம் வரத்தருளாம் ஓம்

அநுபல்லவி

மாங்குயிலொலியுமை ஓங்கவளித்தவுனை
மனதுநாடினேன் சுகமுடனுறங்கியே
தினமுமென்வாய்மொழி ஆனந்தமபுகழ்பெற ஓம்

சரணங்கள்,

அஞ்செழுத்தன்பரமே யுனைப்பணிவோர்
நெஞ்சகத்துலக்குங் கரமே
குஞ்சரவேண்முகா வஞ்சகரத்திலகர்
கோடியினைனுந்தனைப் பாரிலன்றுவினிற்
பேரிடிபோற்கவி தாவிசொரியவருட்
கொற்றவர் எந்தனைப்
பெற்றவர் சதிபிது
மற்றவர் மகிமைதர
நற்றவர் யோடியெ ஓம்

அங்குசபாசம்பிடித்தாய் கரந்தனிலே
எங்குங்களிக்க நடித்தாய்
பொங்கரவப்பணி கங்கைசடையிலணி
பொன்னம்பலவனும் அன்னனன் தடையாரும்
நன்மையமாகி முன்னதவருட்செய

போற்றினேன் மனமது
தேற்றினே நின்கே
மேற்றினேன் முறையிதோ
சாற்றினேன் வருடா ஓம்

மூலாதாரத்தினுறுவே பத்தாறு
கூலாவேதத்தின் மருவே
சீராவல்லபைமகிழ் லோலாசுரரும்புகழ்
சீருளமுனிவரும் பாருளோவந்தருந்
காருண்யனென்னவே மேவினற்கதை
செப்பிட மாயவ
ஒப்பிட குணமது
உப்பிட வாயுபோல
வெப்புட னொழிந்திய

அரிமகிழாசைமருகா-கைலையென்னுங்
கிரிவிட்டிங்ஙனம் வருகா
தரிசியனேமுத்தசாமி சிறியேனுனக்குக்காமி
தாவிடப்புகழுதா மேவிடத்திசைகளுங்
கூவிடநன்னருள் மாவிடயுங்வாடி
தேடவு முளமது
நாடவு மெங்கணும்
பாடவு செய்திட ஓம்

பரமன்துதி.

ஆசிரியவிருத்தம்-இ-ம்-தோடி

அம்புலிவருந்தியேயழிந்திடும்வேளையி
னாயனேயுளங்களித்து
யாதரித்தவனுடையரியசாபம்போக்
கடிந்தவாயந்தகாரிச்
சம்புவேசங்கார சடைமுடிதரித்திடுஞ்
சதாசிவாசர்வபௌமா
சாயுஜ்யசாரியே சண்டனையுதைத்தவா
சகலருக்குகந்தநாமா
வம்பனையுணர்ந்தமவ் வரிவதிரிபுரமதை
வதைத்திட வெறித்தநாயா
வாமதேவாசுரர் வாழ்ந்திடக்கரளமத
வாரியுட் கொண்டநேயா
நம்புவோர்க்கதிகவரு ளளித்திடுஞ்ஜோதியே
நாதனேநந்திகேசா
நானுனைபோற்றினே வல்லிடும்வினைதனை
நசிக்கவேயருளிவையே

பார்வதிதுதி

விருத்தம்பியாக்

அந்தரியே யபிராமியிமையவல்லி
யரனிடத்தினமர்ந்தவளே ஐயைசத்திச்
சுந்தரியேபிராணி உருத்திராளகரி
குக்ஷாதிகுக்ஷத்தி வாடுஞ்சூலி
மந்திரியே மலைமடந்தா மயானருத்திரி
மகிடாசுரனைவதைத்த மரகதாம்பா
விந்தரியேவிரிசடைச்சி வெளியன்றுஞ்சம்பம்
விட்டகலவருளவிதோ வேண்டினேனே

திருமால்துதி

ஆசிரியவிருத்தம் கமாஸ்

அரிபரந்தாமனே யனந்தசயனாவன்று
யலைகடலுள்மச்சமாகி
யரக்கனைவதைத்துவேத மருமறைகள் கைக்கொண்ட
வண்ணலேயுவணகேதா
கிரிதனைற்றாங்கிடக் கூர்மமாய்நின்றுமண்
கிளரிடவராகமாகிக்
கேசவாயுத்தம னென்னஉம்பாய்பொருள்
கிழித்திடவாகனெஞ்சை
துரிதமாய்த்தூணதிலுதித்தவாவாமனு
ருமாய்மௌலிபீதாம்பரா
தாண்டித்தரவிமாபுற்றவ வேந்தனைத்
தொழச்செய்தபரசுராமா
சரியிலாவாண்மைகொண்டசுரருந்தமுகல்
சாகவேவெய்தராமா
சபபுபலபத்திரா கமசனைவதைத்தவா
சரணிதோவாட்கொள்வையே.

இலக்குமி துதி.

விருத்தம் ஆந்தபைரவி.

இந்திரையேயிளையவளே செல்வியம்பர
விவ்வுலகமெவ்வுலகமேற்றுந்தேவி
நத்திமகிழ்சோதரியே விமலையாக்கம்
நற்குமரியேநவநிதிக்கு மேட்டி யாளே
முந்தியடியேனைநத்த பொல்லாங்கெல்லா
மோட்டியேயாசுபதவி முனையவென்னை
அந்தமதுகடலுதித்த வாசியாளே
யடியனிடமுறைக்கிரங்கி யருளுவாயே.

முருகன் துதி.

விருத்தம் காம்போதி

கன்னிபுனை யுளங்களிக்க வன்றுதிக்க
கடம்பனென்காங்கேயே கங்கைமைந்தா
வள்ளிவளர் வனம்புகுந்தகாலையங்கு
வந்தவற்கேதோற்றமன் மறைந்ததூயா
தெள்ளிரவி மகிழுதலாங் கீதவேரேற்றத்
தெய்வானைமானைமணர்ந்த திவ்யரூபா
துள்ளிபயிலெறிலங்கென் றுயரையெல்லாந்
துண்டிப்பாயிதசமயந் துதித்திட்டேனே.

சரஸ்வதி துதி

விருத்தம் கல்யாணி

கலைமகளேபுலகத்திற் காகிமாதா
காயத்ரி சாவித்ரி கமலவாசி
விலமதியாசற்குணியேவிபரன்றேவி
விசைமடைந்தவெண்கலக்கிவெள்ளைமேனி
புலவொலியுந் தானகற்றிப்பூரவாகி
பொய்பறித்தென் புத்திதனிற் பூர்த்தியாக
நிலைபெருகவிலங்கவென்றே நினைத்தேனப்பா
நீதயவா யென்னிதத்தி னிற்பாய்போற்றி.

வசிஷ்டர் துதி

விருத்தம் பியாகடை.

அட்டதிக்குப் பாலகரை யடக்கிச்சென்ம
கடையவைத்தசம்பரனு மபாருங்காணு
கிட்டைதனிலுயர்ந்ததனைம் திருபிதன்னை
நிலைபதிந்த முன்னூ றத்த நேமன்மற்றும்
வட்டமுலகத்திறுமேற் புவனமேற்ற
வரிச்சந்தனிலையதனை யறியச்செய்தோன்
விட்டமதுபொருகவென்றே யடிபேன்றுனை
மிகுமுறைகேட்டருள்புரிய வேற்றினேனே.

விஸ்வாமித்திரர் துதி,

கலித்துறைபைரவி

கன்னேடளந்த திரிசங்குமன்னு நயத்தடனே
விண்ணுறுடைய விமானத்திலேறி விரைந்துசெல்ல
மண்ணுறுராசே புகவொனக்கேவர்மறுத்துத்தள்ள
அன்றுணைபய மெனக்காத்தகௌசிக னடிவணங்கே,

குருவணக்கம்,

ஆசிரியவிருத்தம் ஆமடி.

நல்லறிவுபோதிக்க வேண்டியே நன்னியல்
றெட்டினைக் கைப்பிடித்தே
காட்டினிற்பலதொழிற்புரிவதுமுலைக்குமே
டைதைக்கொடா தென்னவென்
புல்லறிவைசுற்றியே வாறெழுச்சோதனைப்
புகட்டியும்பலநான்முறை
போதித்துநற்சனையாவிகியுடன் குருவடி
போற்றென வருளளித்துச்
செல்லுமறித்திட விதம்பிறப்பாயெனச்
செப்பியப்பாட்டைகொண்டு
சேட்டைகளகற்றிட நிலையதுமுணத்தியே
சீர்பெறச் செய்தவாயாற்
சொல்லரியமதுவாரியுண்ணவும் பூண்கவுஞ்
சூக்குமத்துரியவருளை
சுகூஷக்கினைய்திடக் காட்டியசரவணச்
சுவாமிபதம்பணிநெஞ்சமே.

அவை யடக்கம்,

ஆசிரியவிருத்தம் கேதாரகவளம்.

நீரதுபாலினிற்சேரினுமருந்துவார்
நீக்காமலுலகின் மாந்தர்
சேர்ப்புடனின்றிடுமைந்தரின்முடமாயி
னீந்திலார் மதலைமாயை
காரதுபூவுட னிணையுமசற்றும
டொளுமன்ன ரணிவார்
நற்றந்தமதிற்கெட்ட கந்தமதுவிளையினும்
நயந்தேதுலக்கி மகிழ்வார்
சீர்பெறப்பைங்கூட னக்கிறைக்கும்புனற்
சிற்றுறுப் புல்லசற்றுச்
செல்லும்வாறதுபெருகு மேன்மையையடினுஞ்
சித்தத்திலாஞ்சுமிக்கான்
பார்புகழுமகிவீரகவிவாணர்முன்னிதைப்
பன்னினேன் சிற்றறிவுளோன்
பார்த்திடாருத்தமரென்சொல்லைப்புன்மையென
பண்புடன் களிப்பானரோ.

தோடையம்,

தரு-இ-ம், நாட்டை-தாளம், திருபுடை.

சகலலோகமுங்கீர்த்தியோங்கிய தனியரிச்சந்திரன்சரிதையை
தரும்விலாசமதாகநானுமே தமிழிசைபண்ணவே ஆ-ஆ
அகிலபுவனத்துளமாமுனிவர்க ளனைவருமடிபணிந்திடு
மகரகுண்டலவைங்கரனருள்வைத்துமென்றனைகாக்கவே (ஜெய)
பெருமையுற்றிடவறுமையுற்றதோர் தருமனரிச்சந்திரன்காதையை
அருமைதங்கியேபொருளமைத்துமேயான்விலாசமாய்ப்பாடவே ஆ-ஆ
வருந்தாந்தேவர்கள்சிறைபறுக்கிட வந்தசூரனைவாட்டிய
முருகவேலவன்கருணையென்னுளமோங்கிநாளுமேகாக்கவே (ஜெய)
சுந்தரமுளசந்திரவதி சொல்லும்பத்தினிசரிதையை
இந்தநாட்டுளோர்வந்துபார்க்கவே யிவ்விலாசநான்பாடவே ஆ-ஆ
கந்தவேளினையந்தநாளினிற் கரிமுகன்பின்னளித்ததோர்
பந்தபாசத்தைவிலக்கியாளுமென் பரமனாருள்காக்கவே (ஜெய)
தந்தைவாக்கியம்பிசகிடாமலே வந்தலோகிதன்காதையை
விந்தையாங்கவிவாணர்பாதம் வேண்டிநான்தமிழ்பாடவே ஆ-ஆ
கந்தைபோற்றியசோழனையன்று காத்தியாண்டவென்கண்ணனை
எந்தைபின்னருளென்றுமோங்கியேமிடியகன்றிடக்காக்கவே (ஜெய)
நிலைபுனைபுகழ்கலைபுனைநன் னெறியுளமந்திரகாதையைப்
புலவிலாதுளஞ்சலிக்கவேநான் புகழ்விலாசமாய்ப்பேசவே ஆ-ஆ
தலைமைதக்கியேதானிபம்புள சகலநூல்களுக்காதியாய்
கலைமகளருளென்றுமோங்கியக் காலமுமென்னைக்காக்கவே (ஜெய)
கள்ளமுந்துறுங்கபடுநீக்கியதன்னரிச்சந்திரன்காதையை
வள்ளலென்குருபாதம்போற்றியே வாயினூற்றமிழ்பாடவே ஆ-ஆ
வெள்ளைக்காளையன்வேலுநாயகன் விமலகணபதிமுருகனு
முள்ளம்வைத்துவினோதசபையோ ரோங்கிவாழ்ந்திடவருளவே ()

பொது கலித்துறை

அக்நிக்கணபதி ஆதிக்கணபதி அன்பர்துதி
சித்திக்கணபதி செல்வக்கணபதி சிறப்புறதாய்
பக்திக்கணபதி பாலக்கணபதிபாக்கியமருள
வெத்திக்கணபதி வினோதசபையில் விளங்கினனே

விநாயகர் தரு இராகம் மோகனம் தாளம் ரூபகம்

பல்லவி

சித்திவிநாயகன் ருனிதோயந்தான் வெற்றியளிக்க
சித்திவிநாயகன் ருனிதோயந்தான்

அநுபல்லவி

எத்திசைபுகழும் சல்யாணபுரியி
லுத்தமவேளாளர்கருதும் நெறியில்
திக்கித்தோமென்று திக்கித்தோமென்று
தேசங்கள்கொண்டாட வாசங்கள்பாடசி (சித்தி)

சரணங்கள்

அன்னையுமையருளங்குச பாசன்-கருணாகரன்
ஆதிமூலமாய்வரும் விசுவாசன்
என்னையடிமைகொண்டிட்ட நேசன்தொழுபவர்க
ளிடுக்கிடும்போக்கி யாண்டிடுமீசன்
முன்னைவினையைக் களையும்நாதன்
மோனநிலையைத் தரும்விநோதன்
தனையண்டினோர்க் கருளும்பாதன்
சாயுஜ்பமடையச் சாற்றிம்பாதன்
சற்குணபூரன் வல்லபை
நற்குணமாரன் பலகலை
அற்புதவீரன் தேவர்க
ளொப்பியரூபன் நாட்டில்
சாற்றிடும் நல்வகை
ஏற்றிடும் பலதுகை
ஓட்டிடுந் துயரதை
வீற்றிடும் பரமதை
தாங்கிஜங்கரத்துட னேந்தி
சரவிணைவென்னிரு கரபதைத்தூக்கிட
வரமதுபளித்துமேயிரபதஞ் செய்திடும் (சித்தி)

பொருவிருத்தம்.

கிட்டையிலுயர்ந்தசித்தர் கிசமுத்திடதேவர்பெற்ற
துட்டராக்கதர்நடுங்கத் தூரவிசன்பலிக்குமேபோற்ற
அட்டதிக்கெலாமோங்க ஆசுசெய்தேவராஜன்
இட்டமேமகிழுங்கட்டியனிதோவந்து தோன்றினானே.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரமகாராஜன் கொலுவாச
ல்காக்குங்கட்டியன்சபைக்குவருகிறவிதங்காண்பீர்களாகனவான்களே

கட்டியன் தரு-மோகனம்-ஆதி

பல்லவி

கட்டியக்காரன்வந்தான்-இதோ
கனமுளயிந்திரன்-மனமதுமகிழ்ந்திடுங் (கட்டி)

அநுபல்லவி.

ஒட்டிக்குட்டர்கள்பல்லைத் தட்டிமதமொடுங்க
கெட்டிமனத்தோன்கும்பை நெட்டிக்குலைநடுங்க

சரணங்கள்.

விண்ணுலகோரெல்லாம் வேந்தனெனப்பணிய
விமலநடியறவா வாயன்சர்வ
தேவசாஸ்திரமுறை விதிதெரிவேதியரின்
வெற்றியாசிகள்பெறு நேயன்
மண்ணில்முதல்யாரு மகிழ்ந்திடச்சொர்க்கத்தை
மதாநெறியுடனாளுங் காயன்வந்த
மல்லரக்கர்படையை மாய்க்கவேதானவேண்டி
மாறுயூதங்கள்செய்யு பாயன
எண்ணுந்தனக்கெதிரி யில்லையுலகிலென
எண்ணவெவருமடி யேற்றமேவவாழுங்கன (கட்)

கட்டியன் வசனம்.

கேளுங்கள்சபையோர்களேசொர்க்கத்தையாளுகின்றஜெயவீரதீரியானகிய தேவேந்திர மகாராஜன் வருகிறார் எச்சரிக்கை எச்சரிக்கை கனவான்களே.

பொது-தரு-கிலால்-ஏகதாளம்

வராரிதோவஜ்ர பாணி வளர்சபைநாடி
சிராய்நாரி யருமடச் சேர்ந்துமேகூடி (க)
தேவர் மூவர் மனம் நாடத்திகழோவி பேச
பாவலருஞ்சரா மறைபண்புளோர்வீச (உ)
கோவா கல மூடி புடன் கோஷமும்பாட
சிலா வென அசுர ரஞ்சி சேவடி நாட (ங)

தேவேந்திரன் தரு-தோடி-ஆதி

பல்லவி

தேவாதிதேவன்திகழ்விண்ணுலகையாளுந்
தேவேந்திராஜ கொலுவிருக்க
தேவேந்திராஜன் வந்தான்

அநுபல்லவி

மூவர்மனமகிழ தேவர்களும்புகழ
முனிவராகிகள்கூற கவிபிந்திரானிசேர
முத்துமாலைதலைசக-நவ
ரத்னமகுடமிலங்க
மோகனமாலையும வாகுவலயமும்
பாகுபுஜகிருதம போகவினையணிதும்



சாணங்கள்.

வெண்கரியீதினிற் திண்மையுடனேவேப்பீர்
வீறர்கட்டிபக்கூறயிருபுரம
வெண்சாமரைகளாற

நன்மைபுறவேதேவர் துன்பம்புரிராக்கதர்
நாயகனென்க்கோரப் பாரம்கென
நாவலர்பேசித்தேற

நயமுடன்வலம்புரிச் சங்குசளுத
ஜெயஜெயவெனவே தங்களுமேதே

நாட்டியம்மாதராடவீணை
மீட்டிப்பதங்கள்பாட வெகு

நளமுகதலசிக ளாசிரிசர்ந்திட
பலமுலகவசிக ளாசிவருந்திட

நாடி தனிக்கொலுவைத்
தேடி விநோதமுடன
நடித்து நீதிகை
பிடித்து கிளைவதை
முடித்துப் பகைவனை
இடித்துப் புகழ்பெற

நாட்டிக்கூரர்களிலே மேட்டிக்கிலியதனை
ஓடித்தனக்குவேறு போட்டித்தன்னகரினில்

நாடாமல் தேவர்மனம
வாடாமல் மெத்த
களிப்புடன்மனக்களிப்புட னிதோ

நாளைதவாத்தியங்கள் தாடேறயொலிக்கவெகு
நீறுதேவர்கள்கோன் நானுமேனபிரு (தே)

தேவேந்திரன்போற்றிவிருத்தம்.

அருமறைவேதநான்கு அறிந்திடுமறிவேஞான
கருணைசெய்பொருளேதிவ்வியக் கதிரொளிச்சுடரேமுத்தி
தருநிலைக்குறியேபாய்நிலதயாபராயெனதுசெங்கோல்
பெருமைபாய்வாழ்கப்பாரும் பிஞ்ஞகாகைலைவாழ்வே

மந்திரி போற்றி விருத்தம்

தன்னிகரிலாதாத்ப தருமமும்நிலைபுமோங்க
பன்னருஞ்சாரும்வாழ்கப் பாரெலாந்தழைக்கநீதி
அன்னவாகனனேதெய்வர் அகமதுகளிக்கப்பொய்யும்
மன்னவாபுமதிவ்வய மலரடிக்கடியேன்போற்றி

கட்டியன் கட்டியம்

விண்ணுலகையாள்கின்றதேவனே முனிவர்புகழ்வேந்தனேவெகுபராக்
வித்தகாராக்கதரைப் பற்றற்வொடிக்கியே வீரனேவெகுபராக்
அண்ணகங்கொண்டமலைச்சிரகதையறுத்தவெள்ஐயனேவெகுபராக்
அருந்ததிக்கொப்பான யிந்திராணிமனமகிழ் ஆளனே வெகுபராக்கு
பண்ணுலகின்வேந்தர்க ணின்புகழ்கொண் டாடும்கிபனேவெகுபராக்
மாசிலாமுப்பத்துமுக்கோடி தேவர்க்குமதிபனே வெகுபராக்கு
கண்ணின் மணிநோக்கொணு ரத்னமுடிதாங்கியகர்த்தனேவெகுபராக்
கருதறியவிநோதசபை யோங்கவேயுந்தன் கழலடிக்கேபராக்கு

தேவேந்திரன் தேசவிசாரணை.

தேவாதிதேவர்கள் யாதுமொருதுயரின்றி திகழ்வுள னிருக்கிறாரா

மந்திரி

தீரனேவச்சிரந்தாங்கியகையனே தெளிவிட னிருக்கிறார்கள்

தேவேந்திரன்

தவயோகமுனிவர்கள் செய்திடுங்கருமங்கள் தடையின்றிநடந்தேறுதா

மந்திரி

தானுவேமுனிவரபுரி யாகாதிகருமங்கள் தழைத்துமேநடந்துவருதே

தேவேந்திரன்

அஷ்டதிசைபாலகர் செயத்தகுங்காரியம்அன்பாய் நடத்துறாரா

மந்திரி

ஐயனேதடையின்றிமுறைப்படி வேலைகள் அழகாய நடத்திவாரார்

தேவேந்திரன்

அசுரர்கள்தேவர்க்கு பணிந்துமேயேவல்கள் அடங்யே புரிகிறார்

மந்திரி

ஆண்டவாராக்கதர்சுரர்மொழிகட்வாமல் அன்பாய் நடிக்கிறார்கள்

தேவேந்திரன்

விருசவாங்கற்பத மதனதுயிடத்திலேவிளங்கியே நிற்கின்றதா
வேந்தனேகற்பகந் தனதுநிலைதன்னிலேவெற்றியாய் நிற்குதையா

தேவேந்திரன் வசனம்

வெகுசந்தோஷம் மந்திரி

தேவேந்திரன் விருத்தம்

என்னருங்கொறுமுன்னித்த மிகுந்துலைகைகூப்பிநிற்கும்
உன்னிதவமைச்சனை உயர்குணமந்திரிகேளாய்

நன்னெறியுடையதூய நாரதமுனிதானிங்கே
இன்னமும்வாராதேசீறு மினிபுடனழைப்பிப்பாயே

வசனம்

அப்பாமந்திரி நாரதமுனியை நமதுசபைக்கு சீக்கிரத்தில் வரவழைப்பாய் மந்திரி

மந்திரி வசனம்

அப்படியே வரவழைக்கிறேன் ஆண்டவனே

மந்திரி விருத்தம்

வையகமதிக்கு மித்திரன் வாசலிற்காத்திருந்தேன்
செய்யவேவாள்கைக்கொண்டு நிற்குங்கட்டியனேகேளாய்
துய்யநாரதனிடம்போய்த் தொழுதுநற்சபைக்கிப்போதே
பையவேயழைத்துக்கொண்டே பண்புடன்வருகுவாயே

வசனம்

அப்பாகட்டியனே நமது ஆண்டவன் வீற்றிருக்கும்படியான சபைக்கு நாரதமகாமுனியைச்சீக்கிரமழைத்துவருகுவாயேகட்டியனே

கட்டியன் வசனம்

அப்படியே யழைத்துவருகின்றேன்சுவாமி

கட்டியக்காரன் வசனம்

சுவாமி நாரதமகாமுனியரேதேவேந்திரமகாராசன்சபைக்குவரும்படி தெரிவிக்கச்சொன்னார் முனிநாதா.

அப்படியே வருகின்றேனப்பா கட்டியனே.

பொதுவிருத்தம்

பவக்கடும்பகைதன்னைப்பற்றறவொழித்துவிட்டே
தவந்தனின்மிகுந்தேமுத்தர் தன்னெறிபொண்டநல்லோன்
சிவந்தனையிடைவிடாமற் சிந்தையினட்டுமிக்க
நலம்பெறும்புகழ்கொண்டேற்றும் நாரதர்வருகின்றாரே

வசனம்

கேளுங்கள் சபையோர்களே சகத்திரயபாந்தநாரதமகாமுனிதேவேந்திரமகாராசன் சபைக்குவருகிற விதவிதங்காண்பீர்கள்கனவான்களே

நாரதர் தரு மத்தியமாவதி ஆதிதாளம்

பல்லவி

நாரதமாமுனிவந்தார் வந்தாரிதோ நாரதமுனிவர்வந்தார்



அநுபல்லவி

தாமோதரனைப்போல் தாங்கும்வீணையுமேந்தி
தன்சதிரம்போல்பேசி சழக்கிடயதிசாந்தி
வீரமுடையதேவர் விருமபப்புகழைப்பேச
வெற்றிபுனைந்தகுரு விரதமுடையதாச(நார)

சரணங்கள்.

மன்னும்பெண்ணாசையெனு மயக்கமதையொடித்தே
மயக்கிடும்பொன்னாசையை மாறியோடவறுத்தே
என்னுஞ்சிலமதனில் ஏகோபித்தேபுகழ்ந்தே
ஏகாட்சரநிலையை யிருத்திமனமகிழ்ந்தே

எந்துஞ்சிவத்தைநாடி மனம்
பொங்குமொழித்தைப்பாடி திவ்ய
கங்கைதனிலேயாடி அருள்
தங்கமனதிற்கோடி தினம்

ஏற்றி பிறவித்துயர்
ஓட்டி பரப்பிரமத்தைப்
போற்றி தவசிகளின்
மேட்டி. எனவேசொல்

இருவினையெனுமந்தக கருவையழித்தேசந்த
பெருமைபடைத்துகந்தக் குருவைப்பணியுமிந்த(நார)

தேவேந்திரன் வசனம்

போற்றிபோற்றிநாரதமகாமுனியேபோற்றி
வாழிவாழிதேவேந்திரமகாராஜனேவாழி

தேவேந்திரன்-வசனம்

இந்ததிவ்ய ஆசனைதின்பேரி லெழுந்தருளுஞ் சுவாமி

நாரதர்-வசனம்


சந்தோஷம் சந்தோஷ இந்திரதேவே


கட்டியன்-வசனம்

சேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன்சபைக்குச் சுப்பிரமணியர் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே

தேவேந்திரன்-விருத்தம்

எங்கடன்விடுக்கத்தீர வெழிலுறுவேலைத்தாங்கிப்
பொங்குசூரனைவி போக்கியே அமரர்கொண்ட
சங்கடமனைத்துமோட்டி சங்கராயிருக்கச்செய்த
மங்கைவள்ளிலோலா மயூரனே நின்றாள்போற்றி





வசனம்.

கொடும்பாவியாகிய சூரனைவதைத் தெங்களைக் காத்தாடிவேல னே போற்றி போற்றி இந்ததிவ்ய ஆசனத்திலெழுந்தருளுந்தேவே.

சுப்பிரமணியர் வசனம்.

வாழிவாழி தேவேந்திரனே வாழி.

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்கு அக்கினிபகவான் வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் வசனம்.

எனதன்புக்குரிய அக்கினிபகவானே வாரும் வாருமிந்த ஆசன த்திலெழுந்தருளுமையா.

அக்கினிபகவான் வசனம்

சந்தோஷம் வாழிவாழி இந்திரனே வாழி.

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்கு சுக்கிரபகவான் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் வசனம்.

நவக்கிரகத்திற் பெருமைபொருந்திய சுக்கிரபகவானே சரணஞ் சரணஞ் சுவாமி இந்த ஆசனத்திலெழுந்தருளும் பகவானே.

சுக்கிரபகவான் வசனம்.

வாழி வாழி தேவர்கோனே வாழி.

கட்டியன்வசனம்.

கேளுகள் சபையோர்சளே தேவேந்திர மகாராஜன் சபைக்கு எமதருமராஜன் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் வசனம்.

சரணஞ் சரணம் எமதருராஜனே சரணம் இந்த ஆசனத்திலிரு ந்தருளுமையா.

எமதருமர் வசலம்.

வாழி வாழி தேவேந்திர மகாராசனேவாழி.

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரமகாராசன் சபைக்கு மகாவிஷ்ணு வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் வசனம்.

போற்றி போற்றி கபடநாடகசூத்திர தாரனேபோற்றி இந்த ஆசனத்திலெழுந்தருளுஞ் சுவாமி.

மகாவிஷ்ணு வசனம்.

வாழி வாழி தேவேந்திரன் வாழி.

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராசன் சபைக்கு வருணபகவான் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் வசனம்.

வாரும்வாரும் வருணபகவானே வாரும் இந்தஆசனத்திலெழுந்தருளுமையா.

வருணபகவான் வசனம்.

வாழி வாழி தேவேந்திர மகாராஜனேவாழி.

கட்டின் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராசன் சபைக்கு வதிஷ்டர் வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

வதிஷ்டர்-தரு-இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வதிஷ்டமுனிவந்தேன்-சகலரிலு-வதிஷ்டமுனி வந்தேன்.

அனுபல்லவி.

விதித்தவிதிகடக்கும் வேணுநிலையுரைக்குஞ்
சதுத்திசைகளும்போற்றுஞ் சகலரும்பணுந்தேற்றும் (வதி)

சரணங்கள்.

அவதியாற்பாலகரை-யன்றுகாமதேனுக்கா
யவர்கள்பிறவிபெறச் செய்தேன் அந்த
அரியயனுதிகாணு-யரும்பொருளதையென்ற
னறிவிலடக்கிவாய்கை கொய்தேன் நல்ல
தவநிலைபெற்றேயிந்த-தரணிவாழ்வேந்தர்களுந்
தழைக்கச்சாத்திரமுணர்ப்பித்தேன் அன்றித்
தபதியை சூரினுற் றூழ்ந்துவாரணனுக்கே
தானேகொடுத்திடவே வைத்தேன்
இனித்தேறும்-இன்ன பாருங்.

கவுசிகள்பிள்ளைகளுங்-கெருவம்படைத்ததாலே
கருக்கிச்சாம்பலாக கெடுத்தேன் எந்தன்
காமதேனுக்காய்வந்த-கரதிமகன்படையைக்
கலங்கிமறித்திடவே விடுத்தேன் சர்வ
புவனமதில்விளங்கும்-புனிதமுனிவர்களிற்
புகழுங்கனமதைநா னெடுத்தேன் எங்கும்
போற்றிசெய்யவேப்ரமம்-புகட்டும்பரஞ்சோதியை
புக்குநிலைதெரிந்தே யடுத்தேன் என்னைப்
போற்ற-யாவர்களு-மேற்ற.

எவர்களாயினுமிவ்வா றென்னைப்போலறியாரா
னிருக்குமிடத்தைக்கண்டே பிடித்தேன் இன்ன
மெழிலுறுமருள்ஞானத் தின்பத்தினுணுக்கத்தை
யிச்சித்தவர்களுக்குப் படித்தேன் சர்வ
பவமதுமறிந்திடப் பார்வதியானூலைப்
படித்தின்ப சாரத்தைக் குடித்தேன் எந்தப்
பாவையாகினுமோகம் பற்றமயக்கிடினும்
பாதராதிருக்கமன முடித்தேன் ஆ-ஆ

கேளுஞ் சதாநாளும்வெகு
கொர்வக்குணங்கள் போக்கி கிட்டிடுஞ் சீடருக்கே
கீர்த்திவாங்கிடநோக்கி கிளம்பிடும் நாடருக்கே (வதி)

தேவேந்திரன் விருத்தம்.

பந்தமென்பகையொழித்த பண்பனேயுன்றாள்போற்றி
சிந்தையைச்சிவத்தில்வைத்த சிறப்புள்ளநாதாபோற்றி
விந்தையாங்காமதேனே விளைவித்தபொருளேபோற்றி
எந்தைசென்னைகாக்கு மிறைவனேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றி போற்றி வதிஷ்டமகா முனியேபோற்றி.

வதிஷ்டர் விருத்தம்.

விற்பனேவேந்தேவாழி வெற்றிகோன்படையாவாழி
பொற்புறுகுணனேவாழி புகழுமிந்திராணிவாழி
கற்பகத்தருவும்வாழி ககனவஜ்ராயுதமும்வாழி
தற்பராதேவர்தேவே தயாநிதிவாழிவாழி.

வசனம்.

வாழி வாழி தேவேந்திரமகாராஜனே வாழி.

கட்டியன்வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தவத்திலுயர்ந்த விஸ்வாமித்திர முனி தேவேந்திர மகாராஜன் சபைக்கு வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கதிக்குஞ் சதுர்மறைநெறியினைமதிக்கும்
பெருமையிலுயர்தவ கவுசிகமுனிநானே நவ
கண்டம்பொற்றுங் கவுசிகமுனிநானே.

அநுபல்லவி

எத்திசைபுவனங்க ளினிலெனைப்போலொருவ
ரெற்றவருண்டோ ஆ ஆ மற்றவருண்டோ யார்
யீண்டோ கரம் விண்டோ துவ
ருண்டோ வருள் கொண்டோ ரதி
எழிலுறுமுனிவர்கள் கழலடிகாணுறைப்
பழியையறுத்திடு மழிவிலானடி கொளுங் (கதி)

சரணங்கள்.

இருசியில் மாயாயென்னை யேரிடிற்பயங்கோடா
எண்ணொருஞானநிலை காட்டுவேன் தபம்
ஏற்றுந்திறமையினு னெவ்வுலகங்களுநா
னெண்ணுநிமையிலாட வாட்டுவேன்
சரிகைமுதலாய்நாலுஞ் சாற்றும்பெருங்கதியைச்
சார்ந்துவினைகடனை யோட்டுவேன் மற்றுஞ்
சாரொணுவைகுந்தத்தைச் சாவருளமகிழ்ச்
சட்டமாயுள்ளங்கையுற் காட்டுவேன் நல்லோர்
அரிகிற்பணியப் பேரானந்தமூட்டுவேன்
அண்யவல்வினைக ளசன்றிடமாட்டுவேன்
கிரிகளுமெரிந்திடக் கிளரனல்மூட்டுவேன்
கீழ்மேலுலகமெல்லாங் கீர்த்தியைநாட்டுவேன்
அரியயன்மூவர்களு மறியொணாமூலத்தை
யகத்திலடக்கநிலை யேற்றுவேன் சர்வ
வாத்மகோடிகளெலா மறையுமொழிப்படிக்கே
யடங்கிப்பணியமதி தேற்றுவேன்
கரியுரித்தோனுமெனைக் கண்டால்மனமகிழக்
கனிவுபிரமத்தினடி போற்றுவேன்
காமதேனுவுமென்றன் கைக்குளடங்கிடவே
காக்ஷியெழுத்தையென்னுள் சாற்றுவேன்
விரிவுலகதனையும் வேண்டிடின்மாற்றுவேன்
வேதமொலிக்கும்பல் வேள்வியுமேற்வேன்
பரிசரிநூலினும் பண்புறத்தேற்றுவேன்
பகரொணுமூடரைப் பணிந்திடநீற்றுவேன்
பற்றித்துயர்கடனை ஏற்றிபதவியதை
நற்றியுலகதனில் வெற்றிபெருவி எங்கும்
பாவித்தவந்திர மேவித்த திரிசங்கை
கோவித்ததேவருந் தாவித் தனியச்செய்த

பட்சன் முனிவர்களின் மெச்சன் கனிவுபெறு
மிச்சன் சகலரினு முச்சனெனவேதொழ
பாடியதிநடையா யோடியிந்திரன்சபை
நாடியாவரினு மோடி மோடியெனவே (கதி)

தேவேந்திரன் வசனம்.

போற்றி போற்றி விஸ்வாமித்திர முனியேபோற்றி.

விஸ்வாமித்திரர் வசனம்.

வாழி வாழி தேவேந்திரன் மகாராஜனே வாழி.

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களேதேவேந்திர மகாராசன்சபைக்குத் தேவதேவர்கள் முனிவர்கள் அட்டவசுக்கள் சித்திரர்கள் முதலான சகலரும் வந்து சேர்ந்தனர்களென்றறிவீர்கள் கனவான்களே.

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகராசன் வீற்றிருக்குஞ் சபையில் நாடியஞ்செய்ய அரம்பை வருகிறாளென்றறிவீர்கள் கனவான்களே.

அரம்பை வருகிற-தரு-இ-ம்-கியால்-ஏகதளம்.

அண்டர்புகழ்தேவராஜன் அருளைநாடியே
அழகினுயர்மாதரம்பை அனையத்தேடியே (1)
முகத்தான்மதிநாணவிண்ணோர் முகமும்வாடவே
முத்தோவெனதந்தம்நாசி மோகங்கூடவே (2)
தங்கநிறமேனிமாரன் தானும்நாணவே
தாவவண்டுகிள்ளைமொழி தனியாய்ப்பூணவே. (3)

அரம்பை-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடனமாதுவந்தாள் அரம்பையெனும்
நடனமாதுவந்தாள்

அனுபல்லவி.

கடினமனத்துடையோர் கருதக்காலனைவென்ற
காலன்பூஜையும்போக்கி கலங்கமாரனைப்போன்ற
கண்டவராசை கொண்டிடமேவாட
எண்டிசையோரிவள் அண்டையோடாட (நட)

சரணங்கள்

மூன்றாம்பிறையைப்போல் முதிராய்நுதல்துலங்க
முகத்தைபழிக்கும்ரத்ன மொவ்வாற்றந்தமிலங்க

வானத்திவில்லோவென வண்புருவங்களோங்க
வளர்குமிழைப்போலநாசி வானவர்களுமோங்க
வண்டினைவிநாண கயல்
கெண்டைவெட்கம்பூண அவள்
வாயினிதழ்கோவை மாங்
காயினிதழோபாவை சொல்
வலம்புரியத்தோர் வழிகழுத்தோங்க
வானத்தின்மீன்களின் வளரொளிவாங்க
வண்டுமொய்க்குங்கண்கள் கிரிகள்
கண்டொடுங்குந்தனங்கள்பிடி
உற்றிடு சிற்றிடை பெற்றுடை சுற்றிய
பெரும்கைக்க சர்வ
நாரிபகைக்க முத்
தேவர்நகைக்க ரதி
பாவைபதைக்க மால்
மகனுமிவள்முகங்கண்டுமே லோட
ககனம்விடச்சகுனம்யென நாட
வஜ்ராயுதனே நாடி
சர்வஜனசபையை தேடி
கைச்சிலம்போலி கூடி
மெச்சத்தோடியிற் பாடி(நட)

அரம்பை-வசனம்.

போற்றி போற்றி உமது திருப்பாதாரவிந்தங்களுக்குப்போற்றி.

தேவேந்திரன் வசனம்.

நல்லயிசைக்கூட்டி ஒருபதம்பாடி நாட்டியம்புரிவாய் அரம்பா.

அரம்பை வசனம்.

மகாபாக்கியமப்படியே நடிக்கிறேன் தேவர்க்கோனே.

அரம்பை-தரு-இ-ம-கமாஸ்-தாளம்-ஆதி.

மோடிசெய்குவதேதுகாரணமே-ஐயோ
மோகம்பொல்லாதுசுவாமி (மோ)
நாடியுன்றன்பாதம் தேடி யென்றன் மனம்
வாடியிங்கிதச்சொல்பாடி நின்றுனுமென்மேல் (மோ)
பார னுன்றனைவிட கூற காணேனேயெனச்
சேர யுனக்கேயிது பாரமென்றுனுமென்மேல் (மோ)
சங்கை யேனோயென்றன் கொங்கை விம்முதேயிதோ
மங்கை வாடுறேனுன் செங்கைதாங்கிடயென்மேல்(மோ)
வாசா மலர்கள்புனை யீசா தேவர்கள்பணி
நேசா யரக்கர்படை நாசா யிதுவேகாலம்(மோ)

தேவேந்திரன் வசனம்.

இன்னமொருபதம் பாடுவாய் மாதே.

பதம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபம்.

பல்லவி.

நான்கொண்டமோகஞ் சகிக்கவென்னாற் கூடிமோசுவாமி.

அநுபல்லவி.

அண்டர்கோனே அடிபணிந்திட்டேன்
ஆரைக்கண்டாலுநான் அனையவழைப்பேனோ (கொ)

சரணங்கள்:

தென்றற்காற்றும் வீசுதே என்றன்
திரேகமெங்குங் கூசுதே
கொண்டற்குயிலுங் கூவுதே இரு
கொங்கைவிம்மி நோகுதே
தென்டனிட்டுன் தாள்பணிந்திட்டேன்
நீரயென்னுவலே தாரயொருவிலே (கொ)
சந்திரனொளியுந் தாங்குதே காமச்
சாமமிகவு மோங்குதே
எந்தனுடலுஞ் சோங்குதே மனம்
இனிநிலைக்கப்பின் வாங்குதே
சந்திரவாகாவுஞ் சொகுசைகண்டுநான்
சொக்கலானேநாதா இக்கணமும்வாதா (கொ)

காமநீரு மோடுதே உன்றன்
கனியிதழினைத் தேடுதே
ஜாமமத்திரை கூடுதே மனஞ்
சஞ்சலத்தினின் றுடுதே
நேமமாகவே நின்றடியேற்றினேன்
நித்தனேவந்திடும் முத்தமேதந்திடும் (கொ)

தேவேந்திரன் வசனம்.

இன்னமொரு பதமபாடுவாய் அரம்பையே.

அரம்பை வசனம்.

மகாபாக்கியஞ்சுவாமி.

ஜாவளி-இ-ம்-காபிதாளம்-ரூபகம்.

இனி அவனோடுகூடி ஆடுமிச்சை போதுமே.
ஆடுமிச்சைபோதுமே அபனோ டாடுமிச்சைபோதுமே (இ)
நின்றவிடத்தில் அன்றிலாடா நினைவுமவன்மேல்நாடுதே
நினைவுமவன்மேல்நாடுதேஎன் வினையெனமனம்வாடுதே (இ)

இருந்திடாலொருவெழுத்தை எழுதிளவனுதுனே
எழுதிலவனுதுதே மதம் வழிந்துவிணைப்போகுதே (இ)
கினவிலவன்வந்தென்னைக் கிட்டினாற்போல்காட்டவே
கிட்டினாற்போல்காட்டவே அவன் தட்டியெனைவாட்டவே (இ)

ஜாவளி-பியாக்-ரூபகம்.

ஓ மங்கையரே தேவராஜன் மருவநாடானோ கொங்கை
சருவத்தேடானோ
தவந்த யெந்தன் மனம் நோவலாச்சுதே அடி
தங்கையே நாமிங்கிருதால் தாங்களல்லவோ மனம்
வாங்கலல்லவோ
நெஞ்சமிலா வஞ்சகரைக் கெஞ்சலாகுமோ அடி
வாசமலர்பன்னீரிங்கு வாங்கிப்போடடி நீயு
மேங்கிவாடடி (ஓ)
காமமீறுங் சாலங்கூடாக் கணவனேனடி அடி
களைக்குதெந்தன் நெஞ்சையிதோ துளைக்குதையோ உடல்
யிளைக்குதையையோ (ஓ)

தேவேந்திரன் வசனம்.

அப்பா மந்திரி நேர்த்தியான நாட்டியஞ்செய்த அரம்பைக்கு விலையுயர்ந்த வெகுமதிகொடுப்பா யப்பா.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுக்கின்றேன் மகாரசனே.

அரம்பை வசனம்.

மெத்த சந்தோஷம் பிறக்க வெகுமதிபெற்றேன் வாழி வாழி இந்திரராஜெவாழி.

கட்டியன் வசனம்.

கேளுங்கள்சபையோர்களே பரமசிவத்தை யிடைவிடாமல் மன திற்றியானஞ்செய்து கொலுவீற்றிருக்குந் தேவேந்திரன் மகாராஜன் சபைக்கு ஊர்வசிவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

ஊர்வசி-கண்ணி-கியால்-ஏகதாளம்.

இராசதேவராசவீந்திர ராச பூபனே
ஆசையுடனூர்வசியுனை நாடிநாபனே (1)
கண்டதே வசுரர்மையாற் கொண்டுகேடவே
மண்டலத்திலுள்ளோரெலா மயங்கிவாடவே (2)
ஆதிசிவம்பூசைசெயு மறிஞர்தானுமே
சோதிதனைவிட்டேயென்னைத் தொடரவேணுமே (3)
மாரனெறிஎன்னைப்பார்க்கிற் றாரமோடுமே
நீரெனைக்காணிலுடற் சோரவாடுமே (4)

தேவேந்திரனிடத்தில் நடனப்பெண்கள் நடனம் புரிகிறபாகம்.



ஊர்வசிவசனம்.

போற்றி போற்றி தேவர்கோனேபோற்றி.

தேவேந்திரன் வசனம்.

இந்த சபைகளிக்க ஒரு நல்ல பதம்பாடி நடிப்பாயடி அப்சரசே.

ஊர்வசி வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி அப்படியேபாடி நடக்கின்றேன் மகாராஜனே.

ஊர்வசி ஜாவளி.

கூடவாருமே சலந்தாடவாருமே
வாடமன்மதனிதோ வாளிதூவுறானேராசா கூட

ஆசைமீறுதே புணர் ஒசைகோறுதே
மாசைவேண்டும் வேசையல்லேன்
கூட மருவவாருமே ராஜே கூட

நாணம்போக்குதே மலர்ப்பாணந்தாக்குதே
சேணமீதிற் பேணவெனைச்
செல்லுங்கூடவே ராஜே கூட

நானேவந்தேன் வேண்டிக் கோனேகொந்தேனே
தானேகோற லானேன் நீக்கத்
தகுதியல்லவே ராஜே கூட

என்னபாவமோ யுமக்கின்னக்கோபமோ
மன்னவனே உன்னிதயம்
மலையின்மிஞ்சதோ ராஜே கூட

தேவேந்திரன் வசனம்.

இன்னமொருபதம் பாடுவாய் பெண்ணே ஊர்வசி.

ஜாவளி இராகம் காப்பி தாளம் ரூபகம்.

ஒ அரசே ஏதுசெய்தேன் அணையவாருமே.

வாதுசெய்யில் மதன்வாளி வருத்தும்பாருமே ஒ
ஜாலஞ்செய்யக் காலமல்ல சரணங்காருமே ஒ
கொங்கைவிம்மு திங்கேயெனைக் கூடித்தீருமே ஒ
அஞ்சலென்று அடிபணிந்தேன் அருளைத்தாருமே ஒ
காமரசங் கக்கவென்னைக் கட்டிச்சேருமே ஒ

இராகம் கமாஸ் அடதாளம்.

பல்லவி.

ஒ துரையே மனம் நாடுதுவாவே ஒ துரை.

அநுபல்லவி

நாடுதுவாவேதேடுதுவாவே ஒதரை

சரணங்கள்.

அந்தத்தில்மாரனே சுந்தரத்தாரனே
சொந்தமாய் எந்தனை சிந்தித்தே பந்தனசுகர் ஓ

வாடினேனுனுமே பாடினேன்காணுமே
நாடிடக் கூடிட ஆடிடத் தேடிடச்சுகர் ஓ

தேகமுஞ்சோறுதே மோகமுமீறுதே
தாகமாய் வேகமாப் போகமாய் ஏகமாய்ச்சுகர் ஓ

மாரனும்பாவியே சாரங்கள் தூவியே
கோரமாய் வீரமாய் வாரதைத் தீரவேசுகர் ஓ

தேவேந்திரன் வசனம்.

இன்னமொருபதம்பாடி நடிப்பாய்பெண்ணே.

ஊர்வசி வசனம்.

மகாபாக்கியஞ் சுவாமி

ஜாவளி இராகம் காப்பிதாளம் ரூபகம்.

இதுவேளையே என்னைக்கூடும் இஷ்டமாய்த்தாவி
பொதுவாகமதன்வாளிதீட்டிப் பொருமுறான்பாவி இ

உன்னைக்கண்டு உருகிவாடிவாடி உளங்கரைந்துமே
உகந்துமெனைக்கலந்தணையும் ஓடிவந்துமே இ

காமமீறிஜலமோடஓட கடுக்கமாருமே
காதலாகிவந்தேனெனைக் கட்டிச்சேருமே இ

அரையின்சேலை அவிழ்தையோ ஐயோ அரசனேபாரும்
அனங்கன்செய்யுங்கோரம்நீக்க அன்புடன்வாரும் இ

முத்தமிட்டுனிதழ்கடித்துக்கடித்துமுகத்துடன்சேர்த்து
மோகந்திரவிருவராட முறையதுபார்த்து இ

தேவேந்திரன் வசனம்.

அப்பாமந்திரி நமது சபையின்முன்வுன்னத ஆடல்பாடல்செய்த ஊர்வசிமனங்களிக்க விலையுயர்ந்தவெகுமதி கொடுப்பாயப்பா.

அப்படியே கொடுக்கின்றேன் மகாராஜனே.

ஊர்வசி வசனம்.

சுவாமி வெகுமதி தோணப்பெற்றேன் வாழிவாழி தேவர்கோனேவாழி.

கட்டியன் வசனம்,

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரமகாராஜன் சபைக்கு காட்டியஞ்செய்ய மேனகை வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

மேனகை-இராகம்-கியால்-ஏகதாளம்

வாராளிதோமேனகையும் வாடவின்னவர்
வாடிடவும்நெஞ்சமது வதங்கிமன்னவர் 1
கண்டமாந்தர்கருத்தழிந்து காணவேயவர்
தாமாதியெனமனங் காட்டதேவர் 2
மோகமூட்டும்பதுமையென மோடியாகவே
முனிவர்சித்தர்யோகர்மனம் முழுதும்போகவே 3
தேவராசன்சபைநாடி திங்கள்போலவே
பாவையிவளழகால்மனம் பதரச்சாலவே 4

மேனகை-தரு-இ-ம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மேனகைவந்தாள் வெகுவுச்சித சுரமெச்சித மேனகை.

அநுபல்லவி.

வானவர்பணி வஜ்ஜிரபாணி
மகிழிந்திராணி மருவுநல்மணி
வாடும்பசை கூடுமிசை
நாடுமசை பாடும்விசை மேன

சரணம்.

முகத்தால்மதியை யோட்டசண்டவங்
மோகத்தாற்புத்தியை நாட்ட
குசத்தாற்கிரியை வாட்டவிழிகள்
குண்டுபோற்கொண்டையாய் காட்டமிகு
மத்தகரிநடப்பதைப் போல
மட்டில்லாதவிடையாடவே போல
விதித்தநான்முகன் கண்டானுமேசால
வெட்கித்துத்துக்கித்து ஓடிடவேஜால
விண்ணி லொளி
மண்ணிற் கிளி
உண்ணிற் றெளி
நண்ணு வெளி
விண்ணவர் பன்னவர் மன்னவர் கின்னரர்
வேட நாட பாட ஆடமேன

மேனகை வசனம்.

போற்றி போற்றி தேவேந்திரமகாராஜனேபோற்றி.

தேவேந்திரன் வசனம்.

பெண்ணேயாவருமகிழ வொருபதம்பாடி நடிப்பாயடி.

மேனகை வசனம்.

மகாபாக்கியஞ்சுவாமி

மேனகை-இ-ம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாரும்வாருங் காலமென்னைச் சேருமையல்திரும்ராஜே

அநுபல்லவி.

பாருங்கண்ணாலே பாவிமதனோட
பதைக்குதேயுடல் பதறுதேயோடி வாரு

சரணம்.

நல்லவாசம் வெறுக்குதேஇதோ
கல்லாய்கொங்கை பெறுக்குதே
அல்லற்செய்வது மாகுமோவெந்தனை
வல்லவாயென்னுள்ளம் வாடுதையோவோடி வாரு
பனிநீரும்வெப்பங் காட்டுதேஉன்
கனியிதழ்மேலே நாட்டுதே
வனிதைமேலிந்த வன்மமாகுமோ
இனிச்சகித்திடே னேந்தலேயோடி. வாரு
திரேகமெத்த சொக்குதே ஐயோ
விரகநீருங் கக்குதே
சரசனென்றுமே சார்ந்தேனிந்திரா
கரந்தொட்டுக்கொங்கை கட்டியணைந்திட வாரு

ஜாவளி-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கோறினேனெனைக்கூடுமே சாமிநான்

தென்றலும்வீசுதே திரேகமுங்கூசுதே
பன்றலிதோபூசுதே மலர்வாளி
மன்றலிதோபூசுதே மையல்மீர
மன்றலிதோபூசுதே யிதுவேளை கோ
உன்சுகந்தேடுதே உளமதுநாடுதே
என்மனமும்வாடுதே யிதோபாரும்
என்மனமும்வாடுதே பாணர்தைக்க
என்மனமும்வாடுதே யிதுவேளை கோ

துயிலிதோசோறுதே துடைகளைச்சாறுதே
குயிலினமுங்கூறுதே மதனுக்காய்
குயிலினமுங்கூறுதே எனைவருத்த
குயிலினமுங்கூறுதே யிதுவேனே கோச

இராகம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

அணைவானோநங்கை அமரராஜன் அணைவானோகங்கை
இணையாவானென்றமே யேங்கினானின்றமே
கணையால்நொந்துமெத்தக் களைத்தேனேமங்கை
வரக்கருதானேதங்கை
நானிங்கே அவனெங்கே இனியெங்கே அணை
உபரதிசமாதி ஊட்டுவெனைத்தநி
தவரிலெனக்கினித் தகுதியார்மங்கை
பினித்தாளேனேதங்கை
நானிங்கே அவனெங்கே இனியேங்கே அணை

ஜாவளி-இ-ம்-கமாசு-சின்னதாளம்-ஆதி.

மையலிலேசொக்கி மனம்வாடினேண்டாசாமி
தயவுடன் ஒருமுத்தந் தருகதருகவேளை மை
கனவினிலுன்னையே கண்டவாறெழுந்து
நினைவதுமாறியே நின்றிடவே
தனமதுவிம்முதே தழுவுதழுவுமுந்தன் மை
ஆருடனுனுமே அன்புடன்பேசிலுன்
பேரதுவருகுது பிசகலவே
தீருமென்னுவலே தேவர்தேவனேயுந்தன் மை
வஞ்சிநானிங்கே வாடியேநிற்கநீ
நெஞ்சிரங்காதது நீதியதோ
கொஞ்சியேவந்தெனைக் கூடுங்கூடிடுமுந்தன் மை

கட்டியன் வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திர மகாராஜன் சபைக்குத் திலோர்த்தமை வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

திலோர்த்தமை கண்ணி இ-ம்-கியால்-ஏகதாளம்.

தேவயிந்திரன்சபைதிலோர்த் தமைமாதுமே
தேடிவாராளடையவிங்கு தெரியப்போமே. 1
இந்திராணிமுதல்யாரு மிவளைக்கண்டுமே
ஏங்கிமனம்வாங்கவெட்க மேந்திக்கொண்டுமே 2
மூவர்முதற்றேவர்களும் மோகக்கொள்ளவே
முகத்தின்காந்திமதியொளியை மொதுங்கத்தள்ளவே 3

திலோர்த்தமை தரு-இம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவேந்திரன்சபையைநாடி நடனமாது
திலோர்த்தமைவந்தாள்தேடியே

அநுபல்லவி.

பாவலர்களும் நாவலர்களும்
பட்சமுடனோதி அட்சதைதூவிட
பதியாய்விண்ணின் மதியாய்த்தேவர்
பார்க்கத்துயர்தீக்க மனமூர்க்க வெளிதாக்க விதோ தே

சரணம்.

மூன்றும்பிறைபோலவே நுதலும் ஆடவர்மகிழ
மொழிக்கிளிக்கோவைக்கனிபோல விதழும்
கெண்டைபோல நீண்டவிழியுங்
கிளரும்பேடைப் பழிக்கும்நடையுங்
கிட்டவேமோகம் மூட்டவேமையற்
கிஞ்சித்திட நெஞ்சுற்றிட அஞ்சுற்றிடவஞ்சுற்றிட தே
பொற்கிண்ணம்போலோத்தஸ்தனமும் இடைசிறுத்து
புதுமையோவெனப்பார்க்கவேமனமும்
அற்பமல்ல இவளிறுதுடை
அடிவாழைமரங் கனிபோலதாடை
ஆற்றவேகாமமேற்றவோயிதோ
அன்புற்றுமே தென்பற்றுமே இன்புற்றுமே நன்பற்றுமே தே
கருட்டிராவப்பதமும்நாடியே அபிநயத்தாற்
சோரத்தேவர்மனங்கள்வாடியே
மருவுமுல்லை வாட்சிமல்லிகை
வாசனைமிக வீசிடவேமேனி
வஞ்சியே மோகமிஞ்சியேகிட்ட
வந்திடவும்தந்திடவும் நொந்திடவும் தே

திலோர்த்தமை வசனம்.

போற்றி போற்றி தேவர்கோனே போற்றி

தேவேந்திரன் வசனம்.

பெண்ணே திலோர்த்தமை நல்லபதம்பாடுவாயடி

திலோர்த்தமை வசனம்.

மகாபாக்கியஞ்சுவாமி.

இ-ம்-பிலஹரி- தாளம்-ரூபகம்

இந்திரனேயுன்னைவிட யெவர்மேல்மனம்நாடுவேன்
சுந்தராங்காயுன்வடிவாற் சொக்கினேனுனைக்கூடுவேன் இ
பொறுக்கிலனேபொங்கிக்காமம் போகுதேதாபமீறுதே
தரிக்கிலனேயோரிடத்திற் றதியிதுவென்னுடல்சோறுதே இ
மதியைமாற்றுமதிகமாகின் மலர்முகத்தைக்கண்டபோதே
சந்திரனும்மாரன்மலர்ச் சரங்கொடுக்கிறானேவாதே இ
கொங்கைபடும்கோரம்போக்கக் கூடியென்னைச்சேராயோ
அங்கமெலாம்வெப்பமாகி யடியாள்படுந்துயர்தீராயோ இ
உன்னைப்பார்த்தகண்கள்வே றொருவரைக்கண்டாற்கூசுதே
என்னைமிரட்டமதனும்பாணி ஏவுறான்தென்றலிதோவீசுதே இ

தேவேந்திரன் வசனம்.

இன்னமொருபதம் பாடுவாய்பெண்ணே

ஜாவளி-இ-ட-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி

ஆ-ஆ-ஆதி அன்பனே ஆசையானவனே

அநுபல்லவி.

சகித்தேனினிமிக சரணஞ்செய்கிறேனிதோ ஆ

சரணம்

மனதுந்தன்மேலிட்டு மகிழ்ந்திட்டநானே
கனமிலாமற்றவரைக் கருதேன்கருதேனினி ஆ
கொங்கைகள்விம்முதே கூடிடவாவே
சங்கைதனைநீக்கியே சாமிசாமிநீயினி ஆ
படியிதோதுடிக்குது காவைக்குத்தானே
கொங்கையாலணைத்துமே கூடுங்கூடுமினி ஆ

ஜாவளி-உம்-காப்பி-தாளம் சாப்பு.

பல்லவி.

கூடவும்நானே கோரியகாலமே

அநுபல்லவி.

பாடலைப்பாடியும் பாவியானேனே உனை கூட

சரணம்.

காமனுமென்னையே கணைகணைத்தூவியே
சாமமோராண்டதாய் சாடுறானேஉனை கூட

கொங்கைகளுறுதே கோரமுமீறுந்தே
சங்கையாயெந்தனை சாரவுங்காணேனே உனை கூட
தேசமும்வாடுதே தீரமுமோடுதே
போகனேயுன்னடி போற்றினேனேடனே கூட

ஜாவளி இ-ம் பியாக்தாளம் ருபகம்.

பலலவி.

ராமியாய் நான்வந்தேன் காலமேகூடவாவே.

அநுபல்லவி

ஜாமமோரிரவாகுதே.

சரணங்கள்.

வந்துவெகுநேரமாச்சு வாருஞ்சேரவே
மையல் பாருந்தீரவே
சுந்தரனேயிதுவேளை சுகந்தாருமே
அதிமதந்தீருமே
தேவர்கோனேயிடதுமுலை தீண்டவாருமே
மதன் வேண்டப்பாருமே.

தேவேந்திரன் வசனம்.

அப்பா மந்திரி இந்த திலோர்தமைக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புவாயப்பா.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் மகாராசனே.

திலோர்த்தமை வசனம்

மெத்தசந்தோஷம் வெகுமதி பெற்றேன் வாழிவாழி இந்திர ராஜேவாழி.

தேவேந்திரன் விருத்தம்.

எண்ணருஞ்சபையுளோரே யின்றுநானியம்பக்கேளீர்
வண்ணமாமுலகிற்சத்யம் வழுவாமனிதியேற்றித்
திண்ணமாம்பெருமையோடு திண்மையுங்கீர்த்திகொண்டோன்
மண்ணினிலுண்டோநீங்கள் மகிழ்வுடனுரைசெய்வீரே.

வசனம்.

சபையோர்களே பூலோகத்தில் சத்தியம் வழுவாமல் பூததயவு பட்சாதாப மடைந்து செங்கோற்செலுத்து மன்னர்களுண்டோ தெரியச்சொல்லுவீர்கள் கனவான்களே.

தேவேந்திரமகாராஜன் கொலுவுக்கு நாரதர் விஸ்வாமித்திரர் வசிஷ்டர்வருகிறபாகம்



நாரதர்



வசிஷ்டர்



விஸ்வாமித்திரர்



தேவேந்திரமகாராஜன்

நாரதர்வசனம்.

தேவேந்திரமகாராஜனே! நீர் கேட்ட சங்கதி வசிஷ்டராற்தெரிந்துக்கொள்ளக்கூடும் மகாராஜனே.

தேவேந்திரன் வசனம்.

அப்படியே செய்வதெனக்குச் சரியாய்த் தோற்றுகின்றது நாரதமகாமுனியே சபையோரெல்லாம் வசிஷ்டருக்கு வந்தனந்தாருங் கனவான்களே.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

வசிஷ்டனும்வாய்க்குவந்த வாறுபோலுளறித்தீர்த்தான்
வசிஷ்டனேசத்தியமூட்டை வாய்த்தசீஷனொன்றால்
வசிஷ்டனைவிடமேலானேன் வளர்சபைதனின்மேலீரும்
வசிஷ்டனைவணங்கச்சொன்ன வாறதுதப்பிதேவேந்தே.

வசனம்.

கேளுந்தேவேந்திர மகாராஜனே வசிஷ்டனே சத்தியமூட்டை அவனுடைய சீஷனே யவனைவிடப் பெரியமூட்டை அப்படிக்கிருக்க யவனுளறியதைக்கேட்டு மகா சபையிலுள்ளோரை வந்தனஞ் செய்யச்சொல்வது தகாதகாரியம் வேந்தே.

நாரதர் விருத்தம்.

கவுசிகமுனிநீசொன்ன காரியமொப்பப்போகா
தவசினிலுயர்ந்தோன்வாக்கு தாழ்வுண்டோவுனக்குப்பேச
அவசியக்காரணங்க ளகப்படுமோகிலிங்கே
நவசிகாமணிமுன்பாக நயம்பெறநவிலுவாயே.

வசனம்.

விஸ்வாமித்திரமுனியே வசிஷ்டர்வாக்கு பிசகிராது உனக்கேதாகிலுங் காரணமிருந்தால் வெளியிடுவாய் ரிஷியே.

விஸ்வாமித்திரர் வசனம்.

அப்படியே வெளியிடுகிறேன் பாரும்நாரதரே.

விஸ்வாமித்திரர் வசனம்.

ஓய் வசிஷ்டமாமுனியே நீர்சொன்ன குணங்களந்த அரிச்சந்திரனிடமிருப்பது மெய்தானாமுனியே.

வசிஷ்டர் வசனம்

நான் சொன்ன குணங்களைவிட யின்னமதிக முண்டென்றறிவீர் விஸ்வாமித்திரமுனியே.

விஸ்வாமித்திரன் சந்தவிருத்தம்

வேங்கையிலாக்காட்டி னரிவேந்தனென் னுங்கதையுன்னால்
விளங்கக்கண்டேன்
சாங்கமிலானருளில்லான் மாபாவிபொய்வாயன்
சருவவேரு
பாங்கியரைப்பிடித்திழுப்போன் சத்யமிலானெக்கியரைப்
பதைக்கக்கொல்வோன்
தெங்கைபோரீயயோத்தியனே மேலோனென்றுயிதைமதிக்க
போமோதானியம்புவாயே. [ப்

வசனம்-

ஆ ஆ ஆ வெகுநேர்த்திபுலியில்லாதகாட்டில் நரியேதுரையெனுங் கதைபோலாச்சுது அந்த அரிச்சந்திரன் அதிக பொய்யன் அசத்யன் அன்னியமாதரை பலவந்தமாய்ப் புணர்வோன் இரப்பவற் கீயாலோபி கொடியன் கோபி நிர்மூடன் தேவதாபக்தி யில்லாதவன் அப்படிப்பட்ட வீணனையிந்ததேவசபையில் மேலோனென்றுயிதை யார்தான் மெச்சுவார் போதும்போதும் வசிஷ்டமாமுனியே.

வசிஷ்டர் சந்தவிருத்தம்.

நீதிநெறியுள்ளோனை யிச்சபையில் நீதானும்
நினைவஞ்சாமல்
ஓதினாய்பொய்யென்றுஞ் சாரனென்றும்
லோபியென்று மொடுக்கம்விட்டே
தேவனையாங்தோஷம்வருந் தெய்வஞ்சீறும்
விண்ணுமண்ணுமூன்றனையேவிரும்பாதையோ
சாதனைகள்பேசாதே பாவஞ்சேறுஞ்
சாற்றுவேனவன்மெய்பன் சரிதான்பாரே.

வசனம்,

கேளுங்கவுசிகமுனியே அரிச்சந்திரனைபொய்யன் லோபி சாரனென்று பலவாறிகழ்ந்தாயிது தெய்வத்திற்கேற்காது பாவஞ்சம்பவிக்குமவனே சத்தியனென்று நம்புவாய் ரிஷியே.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மெய்யனைபொய்யனென்றால் மிகுத்திவதாகுமன்றி [ம்.
பொய்மொழிசொல்லாதாலே பொருந்துமோவெனக்குத்தோஷ

தேவேந்திரன் விருத்தம்.

ஐயனேவசிஷ்டமூர்த்தி யரும்பொருளுணர்ந்தநாதா
ஐயனேயுலகில்வாஷி மரசரின்மெய்மைபூண்டோன்
ஐயனேசத்யனாரோ வடியனூர்தெரியவேண்டி
ஐயனேபணிந்தேனீரு மன்புடனுரைசெய்வீரே.

வசனம்.

சுவாமி வசிஷ்டமாமுனியே பூலோகத்தரசர்களிற் சத்தியனும் மெய்யனுமிருப்பவன்யாரோ தெரியச்சொல்லவேண்டும்முனிநாதா.

வசிஷ்டர் விருத்தம்.

இந்திரரே நீர்வினவு நெறிக்குறியோ னுலகதனி
வியப்பக்கேளும்
அந்தரமாஞ் சொற்சமுற்ற திரிசங்கின்ற
யயோத்தி நாடாளபவனே
சுந்தரரே நானறிவே நீதிகள்மூன்றுஞ்
சேராமற்சத்தியததை யுடையோன் கண்டீர்
மந்திரமாமஞ் செழுதனை மனதிலெண்ணி
மகிழ்வுடனே வாழ்கின்றான் மண்ணிற்றானே.

வசனம்.

கேளுந்தேவேந்திர மகாராசனே உலகத்தில் நீகேட்டவாறு போல் நீதிசெலுத்து பவனயோத்தியை யாளுகின்ற அரிச்சந்திரனென்றறிவீர் மகாராசனே.

வசிஷ்டர் விருத்தம்.

திங்களைச்சடையில்வைத்த தேவனேயடியைப்போற்றி
பங்கமதன்றிக்கருமம் பலபட்டவியற்றவேண்டிப்
பொங்கமாய்முனிவருக்கே பொருள்கொடுத்துதவிசெய்வோன்
எங்களாண்டவரேகேட்பீர் யெனக்கவன்சீடனுமே.

வசனம்.

கேளுமிந்திரதேவனே எக்கிய ஓமங்கள் செய்ய நிதிகள்கொடுத்து தபோகிஷ்டர்களைக் காக்கத்தக்கவெனக்கு நல்லசீடன் தெரிவீர் மகாராசனே.

தேவேந்திரன் விருத்தம்.

சுவாமி அந்த வரிச்சந்திர னப்படிக்கொத்தவனு அவனுடைய குணதிசயங்களை விபரமாயின்னந் தெரியச்சொல்லு முனிநாதரே.

வசிஷ்டர் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன்கேளும் ராசபூபனே.

வசிஷ்டர் சந்தவிருத்தம்.

பராசரிசகோதரனுங் குருமொழியைக்கடவாத
பண்பனுகுந்
திரமானவாக்குள்ளான் பொய்பேசான் நிலைதவறான்
திசழ்பெருந்து

வரமுடையமனைவியுளான் றனக்குகந்தவமைச்சனையும்
வகுத்தோன் கண்டீர்
நரர்வாழுமுலகில்வெகு கீர்த்தியுளோன் நற்புதல்வ
னடைந்தோன்வேந்தே.

வசனம்.

பலதாரம் விரும்பாதவன் பொய் சொல்லாதவன் பதிவிரதை யை மணந்தவன் சற்குணமுடைய மகனைப்பெற்றவன் தனக்குரிமை யான மந்திரியையு முடையனென் றறிவீர்தேவேந்திரனே

தேவேந்திரன் வசனம்.

சுவாமி வசிஷ்டரே உலகில் மெய்மை பூண்ட ராஜாக்களிருக் கிறார்களென்றறியாமல் வினவினேன் மன்னிப்பீர் முனிநாதரே

நாரதர் விருத்தம்.

மன்னரேவசிஷ்டர்தானு மறைவதாலவனேசத்தியன்
மன்னரேசபையில்வேறு மறுப்பவர்காணேனசண்டீர்
மன்னரேவந்தனந்தான் மகிழ்வுடனவருக்கீந்து
மன்னரேவிடைதானேக மகாசபைக்கருள்செய்வீரே.

வசனம்.

கேளுந்தேவேந்திர மகாராசனே இந்த சபையோரை நோக்கி நீர் பிரேரேபித்த பிரசனை வசிஷ்டராற் பூர்த்திசெய்யப்பட்டபடியா லவருக்குயாவரும் வந்தனஞ்செய்து அவாளவாளிருப்பிடம் போக விடைதாரு மிந்திரலோகாதிபரே.

தேவேந்திரன் விருத்தம்.

வையகந்தனிலேநீதான் வகுத்தவன்கொடியன்கண்டாய்
பையவேவசிஷ்டாயிந்தப் பதிவிட்டுயேகுவாயே.

வசனம்.

ஓய் வசிஷ்ட மாமுனியே மெய்யனைப் பொய்யனென்றால் பழி, பொய்யனைச் சொல்வதால் குற்றமில்லை அந்த அரிச்சந்திரனோ மகா கொடியவன் நீ புகழ்ந்தாயிந்த சபையைவிட்டலகப் போவாய் ரிஷி யே.

வசிஷ்டர் விருத்தம்.

அலைகடல்பொங்கினாலு மவனியுமழிந்திட்டாலும்
நிலைதப்பிரவியுந்திங்கள் நீள்கிரகம்பிசகிட்டாலுங்
கலைநான்குபொய்த்திட்டாலுங் கயிலையன்வருந்தினாலும்
புலையிலாவரிச்சந்திரன்றான் பொய்சொல்லாபுனிதன்காணே.

வசனம்.

கேளாய்கவுசிகமுனியே வேதம்பொய்த்தாலுஞ் சூரியசந்திராதி நவக்கிரகங்கள் கதிதப்பினாலும் மீசனொருவேளை விரும்பினாலும் மெ ன்சிஷனாகிய அரிச்சந்திரன் பொய்யனல்லனென்றறிவாய் ரிஷியே.

விஸ்வாமித்திரன்-கண்ணி-இ-ம்மோகனம்-தாளம்-சாப்பு.

பொய்சொல்லனென்றமே தெய்வச்சபையில்
புகழொணாப்பேச்சுகள் பேசுறாய்மெத்த
யிகழானவீச்சுகள் வீச்சுறாய்உன்றன்
புத்தியுமவனுட சத்தியதருமமும்

போதும் போதறிகுவேன் வசிஷ்டா

வசிஷ்டர்-கண்ணி இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

சத்தியத்தருமமுக் தண்மையுமறியாமல்
சாதனைப்பொய்களை பேசுறாய் சர்வ
காதகனைப்போலேன் வீசுறாய் இந்த
சாருமண்ணினில்நிகர் வேறொருவரையில்
சாற்றப்போகாதறி கௌசிகா.

விஸ்வாமித்திரன்.

அறியாமற்சொல்வேனோ யன்பில்லாதவனென
றகமதிலுணராமற்கொள்ளுறாய் வேறு
ஜகமதிலில்லையென்று தள்ளுகிறாய் அடா
ஆ-ஆ-ஆ-ஆச்சர்ய மவனுக்கு நிலையேது
அறமேது தவமேது வசிஷ்டா

வசிஷ்டர்.

அறமில்லானென்றுமே யறைச்சூதுவாது
யளவில்லாப்பொய்கற்றாய் முனியே அவன்
உளந்தெரியாமலே தனியே ஆ-ஆ
ஆடடாயுன்னால் காட்டாதேகௌசிக
மவனைப்போனீ ஆகாய்கௌசிகா.

விஸ்வாமித்திரன்.

காட்டாதேநீயென்றாய் காட்டில்வாழ்மிருகத்தை
கருதிக்கொலைபுரியும் நேமி சத்தி
சுருதியுணராத காமி அவனை
கம்பீரனென்றமே வம்பிக்குவளர்க்குறாய்
கட்டுவுன்மூட்டையை வசிஷ்டர்.

வசிஷ்டர்.

வம்போவவனுட்டில் வாழுங்குடிகளெல்லாம்
வண்ணனமுத்திய வான்கள் தர்ம
எண்ணமிடும்புத்தி மான்கள் மன்னன்
வாய்பிசகாதவன் நீயதையுணர்ந்துமே
வணக்கமாயொடுங்கிப்போ கௌசிகா.

தேவேந்திரன்சபையில் வசிஷ்டரும் விஸ்வாமித்திரரும் தர்க்கமாடுகிறபாகம்.



வசிஷ்டர் விஸ்வாமித்திரர் கட்டியன் மந்திரி தேவேந்திரமகாராஜன்

விஸ்வாமித்திரன்,

ஒடுங்கச்சொன்னாய்நீதி யுடன்புன்கோபிமெய்யை
யுணராதவெகுதுஷ்டப் பாவியை பலர்
வணங்கப்பேசுக்கேட்ட நாவியை ஓகோ
ஓதிடயிங்குமே கோதிலாதவனென்று
உன்குருசொன்னதோவதிஷ்டா

வதிஷ்டர்

குருமொழியென்றுயுன் அரசுமைந்தர்கணீதி
கோலமென்னலலலோ போச்சி இப்போ
ஜாலங்கற்றுயிது எச்சு அடா
கோபிக்காமன்னனைப் பாவியென்றுபுன்
கொள்கையுந்தெரிந்திட்டேன் கௌசிகா

விஸ்வாமித்திரன்.

தெரிந்திட்டேன்நீதேவ தாசிமைந்தனென்றுந்
தேடிச்செம்மாரியைப் புணர்ந்தாய் மனம
வாடிநின்றுமிதை யுணர்ந்தாய் அடா
தேசமிகழவுன்றன் பாசமக்களைநீருய்
தீய்த்தவனல்லவோவதிஷ்டா

வதிஷ்டர்.

தானுய்சிவம்நின்ற ஸ்தானமறிந்திடுந்
தங்கமையுனக்குண்டோ நாயே தேவர்
நகைக்கிருர்மூடவுன் வாயை அவன்
தன்மையையுணராமல் புன்மையாயற்றுதே
தாழ்ந்ததுன்பொளகபோங் கௌசிகா

விஸ்வாமித்திரன்.

போமெனறுரைத்திட்ட தாமதம்போக்கதா
பொய்யனேயுன்வாயை மூடடா
உயயுமிடமெல்லாங் காடடா அவனை
பொய்பேசச்செய்துநான் வையகமிகழ்ந்திடப்
புரிகுவேனுன்னையேவதிஷ்டா

வதிஷ்டர்.

புரிகுவேனெனறென்முன் சரியாகநின்றுமே
பூச்சிகாட்டாதேடா நீயே அடா
சிச்சியோடிப்போடா பேயே துஷ்டா
போக்குநீக்கறியாதா காக்கைப்பிறவியுற்ற
புதறியினனுன கௌசிகா

வஷிஷடர் வசனம்.

வார்த்தைகெதிர்வார்த்தைகள் பேசுமுனியே இச்சபையைவிட்டப்புறம் போவதிலுனக்குமெத்தருணமென்றறிவாய் விஸ்வாமுத்திர முனியே.

விஸ்வாமித்திரன-விருத்தம்.

போவெனச்சொன்னாய்நலல புத்தியிலலாபேயர்
சாவிஙானவன்பாற்சென்று சமூகியேயனேகபொய்யைக்
கூவவேசெய்வேனமெத்த கொலைகளும்புரியச்சொலவேன
பாவனேயுனக்கேவெட்கம் பலிக்கவுஞ்செய்வேன்காண்பாய்

வசனம்.

ஓ முனியே சான்றோயத் அரிச்சந்திரன்வாயிலனேகம்பொய்களைவரச்செய்வதுடன்கூடவனேகத் துஷடகிரிதயங்களுஞ்செய்வித்து தேவர் முன்னிலையிலுன் மானங்கெடுப்பேன் தெரிகுவாயவஷிஷடா

பொது-விருத்தம்.

வஷிஷடனும்விஸ்வாமித்திரன் வழக்கிட்டுசினமேற்கொண்டு
அதட்டியேபேசியேசி யறைவதைக்கண்டயிந்திரன
பதட்டமாயாடிவந்தியோடு பண்புடனிவர்கள்தம்மை
உதட்டையுமூடியக்கே வோதுவான்நீதிதானே,

வசனம்,

கேளுமகள்சபையோர்களே வஷிஷடனும் விஸ்வாமித்திரனும்வழக்காடககண்ட தேவேந்திரனோடிப்போய் சமாதானஞ்செய்கிறவிதமகாணீர்கள் கனவான்களே.

தேவேந்திரன்-ராக-இ-ம்-அடாணதாளம்-ஆதி.

பலலவி.

போதும்போதும பொருக்கள் முனிவர்களே
பேர்புரிடாதிருக்கள்.

அநுபல்லவி

வாதுபுரிவதுங்கள் வண்மைக்கடுக்குமோதான்
ஏதுமித்தனைகோப மிருவருக்கண்டி (போ)

சரணம்.

பஞ்சேகதிரியங்கடனைப் பழுதாகவேபொடிகசிப்
பாசமதனைனெல்லாம் பரக்கோடவேமுடிகசி
நெஞ்சிற்சிவனடியை நிறுத்திதவம்புரிவோர்
நீர்ததொழுவினைர்போல் நின்றெதிரிட்டபோடே (போ)

மூவாசையெனுமரம் பூலைக்காமலடிகிள்ளி
மோடிவிரிபுலப்பும் முதலூறுமலேகள்ளி

வசிஷ்டரும் விசுவாமித்திரரும் தர்க்கமாடிக்கொண்டிருக்கையில்

தேவேந்திரன் சமாதானப்படுத்துகிறபாகம்.



ஆவாகனமாக யனுதினம்பிரமத்தை
அடுத்துப்பணிந்திட்ட யருமையுமிதுதானோ (போ)
ஒருவற்கொருவர்மேலா யுணர்ந்தவாமூலத்தை
ஓங்கோவினிநீங்க ளூதறுவீர்கோலத்தை
தருமதேவதைகூட தழைப்பதுமுநிகளாலே
தாபந்தவிர்த்திசுபந் தாவுவீர்வாக்காலே (போ)
அண்டமெல்லாம்நடுங்க யதிர்சசியாய்பேசுரீர்
ஆஆஆகோபத்தா லாக்ரஷம்வீசுரீர்
தெண்டம்புரிவேனீங்கள் தீரத்திடுவீர்வாதை
தேர்வர்களமதியாரே திகழடிக்கேபணிந்தேன் (போ)

தேவேந்திரன்-வசனம்.

கேளுங்கள் முனிவர்களே உங்கள்கோபத்தைத்தணித்திந்த ஆசனங்களிலிருப்பீர்கள் ரிஷிகளே.

வதிஷ்டர்-வசனம்.

அப்படியேயிருக்கிறேன்; தேவேந்திரமகாராசனே

நாரதர் விருத்தம்.

தத்துவத்தின் துற்குணத்தை நீக்கியேமெய்ஞ்ஞானத்
தன்னைச்சேருஞ்
சித்தருக்குள்சிறந்தவரே யிவ்விதமாய்ச்சினங்கொண்டு
சீறலாமோ
உத்தமனோவரிச்சந்திரன் மத்திபனோவிங்குள்ள
வும்பர்கேட்க
இத்தலத்திலிந்தபடி யியார்நிலைமைகுறிப்பாக
யியம்புவீரே

வசனம்.

தோளாய்வதிஷ்டரே விஸ்வாமித்திரரே அந்தவரிச்சந்தின்பொய்யனா, அல்லது மெய்யனா யாரெதைத தீர்மானிக்கிரீரோ யதற்காக ஓர் நிலையானவர்க்கு சொல்வீர்முனிநாதரே.

தேவேந்திரன்-வசனம்.

கேட்டீர்களா சபையோர்களேநாரதர்சொன்னதேசரியானதாகத் தோற்றுகின்றது உங்களுக்கு தோன்றுங்கருத்தைவெளியிடுவீர்கள் கனவான்களே.

சபையோர்கள்-வசனம்.

தேவேந்திரமகாராசனே; நாரதர்சொன்னதேயெங்களுக்கும் யுத்தமாகத்தெரிகின்றது ராசனே.

தேவேந்திரன் விருத்தம்.

ஐயரேவதிஷ்டமூர்த்தி யரிச்சந்திரன்மெய்யனென்றே
ஐயரேயுரைத்தீர்பொயனென்றுறைந்தனர்விஸ்வாமித்திரர்

ஐயரேயுமதசிட னருமையாம்பொய்யுரைக்கில்
ஐயரேசொன்னவாகருங்மழியுமோவிலேயோர்சொலவீர்

வசனம்.

சுவாமி வசிஷ்டரே உமசிஷ்ஷனுகியவரிச்சந்திரனொருவன்தான் பூலோகத்தில் மெய்யென்றிந்த தேவசபையின்முன்சொன்னீர் அவனை ப்பொய்யனென்று விஸ்வாமித்திரரிஷிவெளியிட்டார் அப்படிககவன் பொய்சொல்வானுகிலுமதுவரகருபிசகோயல்லோ சொல்விர்சுவாமி.

வசிஸ்டர் விருத்தம்.

தண்ணொளிகொள்ளரிச்சந்திர மகாராசன் றன்குணத்தை தடைகளின்றிக்
கண்ணொளியாயிரமுங்கொண்டோய்கௌசிகனுஞ்சோதிக்கக் கனிவுகூர்வாய்
திண்ணொளியேபொய்யுரைக்கிற் றலங்குலேந்து முடிகளைந்தென் சிரசிலமீதின்
எண்ணெணமதுக்குடத்தை யேந்திபலர்நகைக்கத்தெற் கேகுவேனே

வசனம்.

கேளுந் தேவேந்திரமகாராசனே அவ்வரிச்சந்திரன்வாயால்விஸ்வாமித்திரனொரு பொய்வரச்செய்வானுகில் நானென் தவவேடத்தைவிட்டு முடியைச்சிரைத்தெரிந்துங்கள்சிரப்பியபாண்டத்தைத்தாங்கிபலரும்நகைக்கத்தென்றிசைநோக்கிச்செல்லுவேனறிவீரிதுசத்தியம் மகாராசனே.

சபையோர் வசனம்.

கேளுந்தேவர்கோனே வசிஷ்டர் பெருஞ்சத்தியஞ் சொன்னுர் கேட்டேகைள் மனமெல்லாம்நிலேகுலேந்தது இனிவிஸ்வாமித்திரருடையகருத்தைவெளியிடச்செய்குவீர்மகாராசனே.

தேவேந்திரன்-வசனம்.

அப்படியேவெளிடச்செய்கிறேன சபையோர்களே

தேவேந்திரன்-விருத்தம.

அணணலேவிஸ்வாமித்திர அன்பரேவசிஸ்டர்தானுஞ்
சொன்னதைக்கேட்டீர்யாருஞ் சொல்லொணுச்சபதங்கொண்டார்
விண்ணருந்திகைத்தாரந்த வேந்தனுமரையாற்பொய்யை
பன்னவேதவர்வானுகிற் பசருவதெதுவோவாகானேன்.

வசனம்.

கேளும்விஸ்வாமித்திரரே தேவசபை நடுங்கிட வசிஷ்டர்சொன்னசபதங்கேட்டுதா நீர்தவறிப்போகாமல் அரிச்சந்திரனைப்பொய்பேசச்செய்புவீரோசொல்லுவீர்முனியே

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மன்னனரிச்சந்திரனைமடக்கிவெகு பொய்யுரைக்கமகிடாசெய்வேன்
மன்னவனுமெனைக்கெலித்தானுனிந்நாட் புரிந்ததொருமகாதலத்தில்
மன்னவனுக்கதிர்பாதிதாரைசெய்வேன் வதிஷடனுக்குமடங்கிறபே
மன்னவனேயிச்சேதிநரபதிககே கிட்டாதமார்க்கஞ்செய்வீர் . (ன்

வசனம்,

கேளுந்தேவர்கோனே அரிச்சந்திரனை அனேகம்பொய்பேசச் செய்வேன் தவருலேனுகி லென்றபோபலத்தில்பேர்பாதி யவனுககுத் தாரைவார்த்துவதிஷடனுக்குப்போற்றிசெய்வேன் ஆனுலிவ்குநடகத சக்கதிபவனுக்கெட்டாதவாறு செய்யகோறுகிறேன் மகாராசனே.

தேவேந்திரன் வசனம.

அப்படியே கிட்டாதபடிக்கு வேண்டியமுயற்சிசெய்கிறேன்விஸ்வாமித்திரமுனியே.

தேவேந்திரன விருத்தம்

தேவரேகேளிர்சிததம் தெளிவுளமுனிவரேநீர்
ஏவுமோர்விடமிச்சேதி யியம்பிடிற்குரூஷம்சுற்றும்
மேவியநேசத்துரோக மிழைத்தவனபுகுங்கெதிக்கே
தாவியேவாழ்விரெந்தன் தன்னியரேசததியந்தானே

வசனம.

கேளுங்கள் சபையிலுள்ளோரே இந்த தேவரகசியத்தை வெளியிட்டவர்களுக்குத்தோஷஞ்சமபவிக்கும தவிரசினேகத்துரோகஞ்செய்தபாதகன போகும்படியான கதிபடைவார் கனவான்களே.

சபையோர்-வசனம்.

தேவராசனே சிலசிவா நாங்களுமது ஆக்கினைக்கும் சத்தியத்திற்குமுள்ளானோம்வெளியிடகவனுக்கோம் வேந்தனே.

வதிஷடர் விருத்தம்

வல்லபமுபாந்தவிண்ணோர் வாதியேயுரைக்கக்கேளீர்
பல்லறிவுளோனிவன்றான பொருந்தினுன்வெளியேசென்றால்
சொலலருஞ்சேதிதன்னைச் சொன்னதாய்ப்பழிபுரைப்பான்
கல்லதைக்கொய்தோமதேவர் காவலிலெனைவைப்பாயே.

வசனம்,

கேளுந்தேவர்கோனே நான்வெளி சென்றால்நானே சொன்னதாகப்பழிபேசுவான் விஸ்வாமித்திரனுனதால் லெனைதேவர்கள் காவலில் வைத்திடுவீர் வேந்தனே.

சபையோர் வசனம.

தேவேந்திரமகாராசனே அந்தப்படிசெய்வது மிகநலமாய்த்தெரிகின்றது அதின்பேரிற்றநன்சித்தம் மகாராசனே.

தேவேந்திரமகாராஜன் வதிஷடரை சிறையிலடைக்கிறபாகம்.



தேவேந்திரன்-வசனம்,

சபையோர்களேநானப்படி செய்விக்கின்றேன் கனவான்களே

தேவேந்திரன்-விருத்தம்.

ஆடாகட்டியக்காரா அரன்றவந்தனிலுயர்ந்த
தீரதாமவிதிஷடர்தமமை தெரிவாயென்விடையிலாமல்
வேறொருவிடத்திற்கேகி யிக்குற்றமொழிபேசாமல்
வீறமாய்க்காவற்காக்கஃவிதித்தனுககினைககாண்பாயே,

வ ச ன ம்,

அடாகட்டியனே யிந்தவதிஷட மகாமுனியை யென்னுடையவுத்திரவன்றியொருவருடன் பேசாமலும் வெளியேபுறப்படாமலுஞ்சிறையில்வைத்துக்கடினமான காவல் புரிவாயடாவீரனே.

கட்டியன்-வசனம்.

அப்படியே அதிஜாக்கிரதையாய்க் காக்கிறேனை தேவேந்திரமகாராசனே.

கட்டியன் வசனம்.

சுவாமிவாரும் வதிஷடமூர்த்தியே

வதிஷடர் வசனம்

அப்படியேவருகினேப்பாகட்டியனே

கட்டியன் வசனம்.

கேளுஞ்சுவாமியிந்த அரையிலிருக்கவேண்டும் யாருடனும் பேசப்போகாது தேவர்கோனுக்கினைப்படிநானுங் காவல் காக்கிறேன்போற்றிபோற்றிமுனிநாதா,

வதிஷடர் வசனம்.

அப்படியே யிருக்கிறேனப்பா கட்டியனே

விஸ்வாமித்திரர்விருத்தம்

சேனாதிபதியேபோற்றி செங்கண்மால்வருணாபோற்றி
வானாதிலவக்கிரகத்துக்குள் வலுமைககிரனேபோற்றி
தானாகநீதிகண்ட தருமனேதேவேபோற்றி
நானுமெக்காலம்வந்தா லலந்தரவதமீவீரே.

வ ச ன ம்.

சுவாமி சுப்பிரமணியரே திருமாலே வருணரே சுக்கிரரே அக்கினிதேவரே எமதர்மரே நானொருவேளை தங்களைக்கவனித்தாலடியேன் முன்தோன்றியென்கோறிகைகை யிடேற்றுகிரதாகஅபயாஸ்தங்கொடுக்கவேண்டுந்தேவர்களே,

தேவர்கள் விருத்தம்.

மிக்கநற்றவங்கள்செய்யு மித்திரமுனியேவாழி
எக்கணந்தனிலேநீர் நா மெங்களைநினைப்பீராகில்
முக்யமாய்வருவோம் நீரு முரைத்திடுங்காரியத்தின்
பக்குவமறிந்தேசெய்வோம் பணிந்தசொற்பாதுகாப்பீர்.

வசனம்.

கேளும்விஸ்வாமித்திரமுனியே யெங்களில்நீர்யாரைக் கோரிறு ஹுந்தடையினறிலந்துமது மனக்கோரிக்கையை யீடேற்றுவோமிதை நம்புவீர்முனியே.

விஸ்வாமித்திரன் வசனம்.

சுவாமிகளே மெத்தசந்தோஷமினிவதிஷ்டனைவெகுதீவரத்திலவமானப்படுத்திவிடுகிறேனீங்களேபார்க்கப்போகுரீர்கள்தேவர்களே

விஸ்வாமித்திரன்-விருத்தம்,

மங்கைஇந்திராணிபாகா மன்னவவருவாயிலுலே
சங்கையில்லாமற்பொய்யைச் சாற்றிடசெய்வேனின்னம்
இங்கிதக்கொலைசெய்விப்பே னிபயமிபபங்கயத்தை
பொங்கமாய்க்கெலிப்பேன் போகப்பணிதனைவிடையீவாயே.

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராஜனேநான் அரிச்சந்திரனைபடாதபாடுபடுத்தி பொய்யுடன்கொலைஜாரத்வமும் புரியச்செய்துவதிஷ்டனையவமானப்படுத்துகின்றேனெனக்குப்போகவிடைதாரும் ராசாவே.

தேவேந்திரன் வசனம்.

அப்படியேபோய்வாரும் முனிநாதரே

விஸ்வாமித்திரன் வசனம்.

போய்வருகிறேன் வாழிவாழி

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரன் தேவேந்திரனிடம்விடைபெற்றுவருகிற வழியில் சனிபகவானைக்கண்டு தலமுநகெரியச்சொல்லி தனக்குத்துணையாக விருக்கும்படிகேட்டுக்கொள்ளுகிற விதங்காண்பீர்கள்,

விஸ்வாமித்திரன்-வசனம்.

போற்றிபோற்றி சனிபகவானேபோற்றி.

சனிபகவான்-விருத்தம்.

தேகத்தைநிலைநிறுத்த திவ்யரூபன்மங்கை
பாகத்தோனடியையாளும் பனிர்திடுமுனியேயேது
வகனுய்ச்சொல்லலானீ ரிணுமுகங்கருகலேனு
யோகவேயெனக்குத்தோன்ற வொளியாமலுரைசெய்வீரே.

வசனம்.

கேளும் விஸ்வாமித்திரமுனியே நீர்தனிவழியாய் முகம்வாடியே தோ யோசனையாய் நடப்பதைபோல காணுகின்றது ஒளியாமலெனக்குச்சொல்லும்ரிஷியே.

விஸ்வாமித்திரர் அகவல்.

சொல்லெனக்கேட்ட சூரியன்புதல்வா
வள்ளலாமித்திரன் வளர்சபைசென்றேன்
தேவருமுனிவர்கள் திரளுடன்வதிஷ்டன்
பாவலர்யாவரும் பண்புடன்வந்தனர்
நாட்டியமாதரும் நிதமுடன்நடித்தபின்
மேட்டிமுலகில் மெய்யனுண்டோவென
வதிஷ்டனுமயோத்தி வளர்பவனென்றான்
பதட்டமாயுரைப் பார்த்திபன்மகிழ்ந்தே
சற்குணமுள்ளோரை சற்குணமுனிக்கே
நிபம்பெறவந்தனம் நிகழ்ந்திடவரைத்தான்
நானதுபொறுமல் நாயகாவயோத்திபன்
றான்பொய்யனன்றேன் றவவதிஷ்டமே
அரிச்சந்திரனைப்பொய் யறைந்திடசெய்தாற்
றரித்தவிவ்வேடந் தள்ளிகள்ளேந்துவேன்
என்றனவென்னையேறிடவிந்திரன்
நன்றதுபொய்சொல் நான்செய்குவேன்
றவனுவேனுகிலென் றவத்தினிற்பாதி
நவகுணதிரிசங்கு நற்புதல்வனுக்கே
தருகுவேனென்றே தமயஞ்சாற்றியே
வரும்வழிதனிலுன் வளரடிகண்டேன்
எப்படியாமே வேந்தலோசத்யன்
அப்பனேயெனக்குமுன் னருளதையளிப்பீர்
அல்லையறுப்பீ ரடியனைகாப்பீர்
வள்ளலேயுன்றன்வரக்கருள்போற்றி

சனிபகவான் விருத்தம்.

முனியேநீவருந்திடாதே முன்னோக்கியவன்பாற்சொல்வாய்
முனியேயுன்றுணையாய்நிற்பேன் மூர்க்கனைவாட்டிவாயால்
முனியேபொய்சொல்லச்செய்வாய் முனையுமுன்காரியத்தால்
முனியேநீவிழைசகாயமுர்த்து நான்செய்வேனே

வசனம்.

கேளும் விஸ்வாமித்திரமுனியே அரிச்சந்திரன்நம்முடையகைக்குளானவன்றான் அவன்வாயிலொருபொய்வரவிப்பதொரு பெரிதாக நீசெய்யும்படியான பிரயத்தினத்திற்கெல்லாம் நானுஞ்சகாயமாயிருந்துனது மனம்மகிழ்ச்சிசெய்கின்றேன் அஞ்சாதேயும் வாழிவாழி முனியேவாழி.

விஸ்வாமித்திரர் வசனம்.

மகாசந்தோஷம் போய்வருகிறேன் சனிபகவானே.

இ ந் தி ர கா ண் ட ம்.

முற்றுப்பெற்றது.



உ

கடவுள் துணை.

அயோத்தியாகாண்டம்

பொது-விருத்தம்.

சுரபதியின்சபைவிடுத்துக் காசியோடு
சொல்லிமுறைகவுசிகனு மகிழ்ச்சிகொண்டே
சுரபதியாமரிச்சந்திரன் றன்னைநாட்டி
காசில்வெகுபொய்விளக்க கருதியங்கே
விரவுடனேயயோத்திதனை யடையவேண்டி
விப்பற்றுக்கானடக்கே நேமியமென்னும்
பருவத்தின்சாரலுற்று னயோத்திபாரும்
பருதிமன்னன் கொலுசீர்வைபவருமேயனே.

வசனம்.

பெருங்கள்சபையோர்களே யிவ்வாறுவிஸ்வாமித்திரன் சனிபக வானிடம்விடைபெற்று அரிச்சந்திரன்வாயால்பொய் வரவழைக்க என்றுநவெண்ணங்கொண்டவனு யிமயமலைச்சாரல் சேர்ந்தானினி யரிச்சந்திரன் கொலுச்சீர்மைபகருகின்றேன் கனவான்களே.

கட்டியன்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி,

கட்டியக்காரன்வந்தான் வெகுஉன்னத
அதிகன்னதமாகவே கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி.

எட்டுதிசைகளெல்லா மேகக்குடைக்குளாக்கும்
இறைவனரிசந்திர னெழில்கொலுவாயறக்காக்கும் (கட்

சரணங்கள்.

நீறுநுதலணிந்து நெடியவங்கியுந்தொட்டு
நிகரில்லாமதிப்புள்ள நோராபரணமிட்டு
குறும்பகைஞரெல்லா கொள்ளப்பயத்தைவிட்டு
கொடியவாயுகமீட்டி கூர்வாளுடனேபெட்டு
கோணக்கடுக்க அழிவிலா வீணைதொடுங்க
குதித்து அம்பரை
மிதித்து பிணரியச்

சதித்து தருப்பதாய்
மதித்து களிப்புடன்
கொக்கரித்தே அரசன் மிக்கபுகழைப்பாடி
தக்கவினோதசபை எக்காலம்வாழநாடி (கட்

கட்டியன் விருத்தம்.

திரிபுரத்தைஎரித்தவனாய் திகழ்ச்சடையிற்கங்கைமதி
முடியணிந்த
அரியயனுங்காணாத பெரும்பொருளாஞ்சிவமதனை
யகத்திற்கொண்டோன்
கரிமுகிலோனிடபாகம் வாழ்வதேவிமலங்களித்தே
கருதியாட
பரிதிகுலதிலகனெனுஞ்சத்தியபாஷவரிச்சந்திரன்
பாரீர் வாரார்

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே நீதிநெறிபிசகாமல்சகாகாலமும்கா
ணாதற்கரிதாகிய பரமசிவத்தை மனதினிடம் துதித்துசெங்கோல்செ
லுத்தாநின்ற வயோத்தியாபுரி ஏகசக்ரேஸ்வரனாகிய சத்தியபாஷஅரி
ச்சந்திர மகாராசன்சபைக்குவருகிறவிதங்காண்பீர்கள்கனவான்களே

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-கல்யாணிதாளம்-ஆதி.

பல்லவி.

இராஜாராஜனானாஜனமேயாக்தியாளும்,
ராஜாதிராஜன்வந்தான் கொலுவிருக்க
ராஜாதிராஜன்வந்தான்

அநுபல்லவி.

தேசாதிமன்னர் திருவடிபோற்றிசெய்ய
ஜெயஜெயவென்றுவிரர் செப்பமலர்கள்பெய்ய
வாசவரமரர்கள் வாழ்த்தியாசிகள்கூற
மந்திரிபிரதானிகள் மகிழ்ந்திருபுறஞ்சார
லஞ்சிய நாட தேவி
கொஞ்சிய காட பலகளுர்
அஞ்சிய ஓட வேத
மிஞ்சியே பாட திவ்விய
வாருவலயமுடன் பாகுபுஜகிருது
ஆருமனித்தையுந்தாங்கி வாருமன்னர்கைகொடுக்க (இராஜ

சரணங்கள்.

சத்தியமானனை சாரத்தைகொண்டருளான்
சாவதாஅரனடி சரணம்பணியுந்தாரன்

அரிச்சந்திரமகாராஜன் கொலுவுக்குவருகிறபாகம்.



நித்தியகருமத்தில் நிலைபிசகாச்சூரன்
நேமநிஷ்டைபுரிய நீளியளித்திடேந்திரன்
நீதியறிந்தமாரன் வேத
மோகித்தெரிந்தவீரன லோக
ஆதியுணர்ந்தசீரன் ஜீவ
ஜாதிமகிழ்ந்தசூரன் எங்கும்
நிலைக்க அமரரும்
மிக்க அறமெங்கும்
உலைக்க பவத்தொழில்
சிலைக்க சதுர்மறை
பத்தினிசந்திரவதி பாகமவாழுமெய்யாரன்
பாரிதனக்குநிகர் புகரக்கிட்டாதமாரன்

சிவ.

பாதங்கண்டநீதன் சகலநீதங்கொண்டசாதன்

வெகு.

நாதமுண்டபோசன் கீர்த்திகாதநின்றநேமதன்
பண்ணவர் மண்ணவர் பன்னவர் மன்னவர்
பணியப்புகழ் விடித்து
தணியமன முடித்து
இனியவிசை படித்து
தொனியதுவாய்நடித்து
புத்திபுனைந்தகீரத்தி பணிகுடைபிடிவீரன்
பலபலவெகுமதி பரவர்க்களிக்குத்தீரன்
பாட திசைகளெங்கும்
ஆட தருமமாது
நாட முனிவர்வந்து
கூட பார்கள்கொணு
பகுபகுவிடங்களில் பகுதிகளிலங்கிட
பரிதிவொளிபோலரத்ன மணிமுடிதுலங்கிட
பண்டு குடிகடனைக்
கண்டு சிவனருளை
கொண்டு சரிவருஷம்
விண்டு பெய்யுமெய்ச்செய்யும்

அரிச்சந்திரன போற்றிவிருத்தம்.

புவியெலாம்புகழ்ந்துவாழ்க பூச்சக்ரக்குடையும்வாழ்க
கவியுரைவாணர்வாழ்க களித்துமென்குடிகள்வாழ்க

தமிழினறிமுனிவர்வாழ்க தராமறைவேதம்வாழ்க
இரவிகுலமேமேங்கிவாழ்க ரட்சித்தேகயாள்வாய்-போற்றி
சத்தியகீர்த்தி போற்றிவிருத்தம்,
அந்தரசுவர்க்கமுற்ற வண்ணலாங்கிரிசங்கேன்ற
எந்தனுண்டவனேபோற்றி யியனுடனயோத்தியாளும்
மந்தரனுணனேபோற்றி சொல்லனுமெய்மைபூண்ட
கந்தனன்மலரைப்போன்ற கழலடிகடியேன்போற்றி
சர்க்குணமந்திரி போற்றிவிருத்தம்.
ஆதியைமனதிருட்டி அறநூவிளங்கவெங்கும்
நீதியைநிலைநிறுத்தி நிலமதில்மாரிகாலம்
போதியாபடிதான்செய்ய பிரியமாய்க்குடிகள்வேக
மோகியேவாழகாக்கு மும்பனேநின்றாள்போற்றி
சத்தியம்வழுவாம் லுலகதையாளுமென்
சாமியேவெகுபராக்கு
சாந்தமாயக்குரு மொழிதப்பாமலேயொழுகுஞ்
சார்பனேவெகுபராக்கு
நித்தியம்நிற்மலநிற்பனேயுளமதில்
நினைத்திடும்பதிராக்கு
நேருடன்மும்மாரிகோரியேயொழிந்திட
நிட்டைபுரிவரபராக்கு
வெற்றிகொடுகேட யங்கார்முகமணிந்ததோர்
விரனேவெகுபராக்கு
விளங்கவேகதிர்குலசமதினிழலேவந்த
வேந்தனே வெகுபராக்கு
நத்தியேவருகவிஞர் மகிள்பெறப்பெய்திடு
நாதனேவெதுபராகது
நாட்டினிற்பகைவர்களுடரமலரசுசெய்
நாயகாவெகுபராக்கு
அரிச்சந்திரன் தேசவிசாரணை.
மத்தியமாவதிதேசத்தில் ஆலயப்பூஜைகள் தடையின்றி
தினந்தினம்நடந்தேறுதா
1-மந்திரி.
செப்பரியமெய்பனே வொப்பவேபிரஜைகள்
செழிப்பாய்நடக்கின்றதே
அரிச்சந்திரன்.
தகாறு பாசந்தைநீக்கிய மாமுனிவரெக்கிய
பண்புடன்பார்க்கிறா

2-மந்திரி.

பரமனை தியானித்து பரிவுடனேமங்கள்
பண்பாகவேசெய்கிறார்.

அரிச்சந்திரன்.

தன்னியாசி வர்குடிகளைழத்திட மாதத்தில்மும்மாரி
யென்னுட்டிற்பெய்கிறதா.

1-மந்திரி.

எங்களாண்டவனேகேள் திங்களின்மும்மாரி
சீராகபெய்கின்றதே,

அரிச்சந்திரன்,

சமாகுபோர்மன்னர்தருகின்ற பகுதியதுதடையின்றி
பரிவாகவருகின்றதா.

2-மந்திரி.

பணிந்துமேபலமன்னர் அவரவர்-முறைப்படி
பகுதிகள்கட்டிவருவார்.

அரிச்சந்திரன்.

அடாணு-சதுர்வகை-வர்ணிகள்- அவரவர்விதியதைச்
சார்ந்தேநடக்கிறார.

1-மந்திரி.

தருமனே அவரவர்கள்தருமத்தின் மூறைப்படி
தானடக்கிறார்களையா.

அரிச்சந்திரன்.

மோகனம்-காட்டினில்தணர் வேதபாராயண
கண்பாய்புரிகிறார.

2-மந்திரி.

நாதனேவேதியர்சள் பாராயணமிக்க
நன்றாகவேசெய்கிறார்.

அரிச்சந்திரன்,

கேதாரகவுளம் அக்னிலேகாராக ணிறைந்துறைக்காமலே
யடவுடன்விடுகிறார.

1-மந்திரி,

ஐபனேதானியம் படிநிறைந்துறையாம
லன்பாயளக்கிறார்கள்,



அரிச்சந்திரனிடத்தில் நடனப்பெண்கள் நடம்புரிகிறபாகம்.

அரிச்சந்திரன்-வசனம்.

மந்திரி வெகுசந்தோஷப்பட்டேன் யெல்லாம்பரமசிவத்தினருளாகும்.

பொது-வசனம்.

கேளுங்கள்சபையோர்களே அரிச்சந்திரமகாராசன்சபைக்குநாட்டியம்பெண்வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

நாட்டியப்பெண்-தரு-நாதமக்கிரியை-ஆதி.

மங்கைவந்தனள் ஆடமங்கைவந்தனளே

அம்மையொத்தவிழியும் நிம்பைநிறத்துடனே
தம்பைநிறமாம்படடீக் கெம்புநகைகளிட்டு
ஜம்புதொங்கலுமாட்டி செம்பிரயாட்நடந்து மங்

கச்சைகட்டியுமே இதோ கச்சைகூட்டியுமே.

இச்சையுடனேமதன் மெச்சிநபந்துலாட
எச்சகத்துள்ளோரும் தச்செயலாய்நாட
கொச்சைபணிபூண்டு பச்சைகிளிபோல மங்

ஆடவந்தனளே இதோ ஆடவந்தனளே

வாடபலர்மனமும் தேடவிரகமீறி
பாடபலபதமும் நாடஅரசன்முதி
கூடமத்தளதாளமும் போடஒயிலாயிதோ

ஜாவளி இராகம்-செஞ்சுருட்டி- தாளம்-ஆதி.

தடையேதோ தழுவவே தருமோ வெலைசாமியே

இடையதுதுவளுது வக்கமுமாகுது
நடையதுமாறுது நாயகனே தடை
போகமுமீறுது மூர்ச்சையாய்தோணுது
சோகமுமாகுது சுந்தரனே தடை
காமமீறோடுது கண்ணொளிமாறுது
தாமசமேனோ சந்திரனே தடை

ஜாவளி- இராகம்-காபி தாளம்-ஆதி.

எதினிச்செய்குவேனிதனை

வாதிபாமதனிதோ வாட்டிரனென்தனை

நீதியெனக்கூடிட நினைக்கவுமாட்டையே
நயமேக விதுவயர்து கண்மேசோரியும்

பிரியமில்லாபேச்சானதே (துரை)

தென்றலினைவாதையை தெரிவித்துமென்மயல்
திரந்தருந்தரு கூறுசெய்யாவிடில்

கிருபையில்லாவாறுனதே (துரை)

இன்றுனைச்சேரவே என்னமாய்வாதமே
என்னிருவிசாங்கைகளையளர்து நீண்டாவகைநோக்கில்
இச்சையில்லை. பேராற்காணுதே துரை

ஜாவளி-இ-ப்-சுருட்டி தாளம்-ஆதி.

நயமாமோவிக்கோ நான்-ளும்வாடிப்போமோ
நயந்துகூடவாராதென்னமோர

காயமுவாடுது காமனும்பாவியே
கணையதுதாவியே சக்கிராள்தாவியே
வாய்த்திரவாததம் வகைபாவகைபாயிது நா
துவளுதமேனியுர் தேனுறுதோணுது
தூக்கமிரவினில் தூரமாயோடுது
தவமணிக்கூடிடின் ததுகிதகுகியிது நா
சித்தமுவாடுது சோரவுர்தேடுது
சிக்கிரந்தாவிட சிவனும்காடுது
சத்திபிமைந்தனே நலமேநலமேயிது நா

அரிச்சந்திரன்-வசனம்

அப்பா சத்தியகீர்த்தி இந்தகாட்டியப்பெண்ணுக்குவேண்டியவெகுமதிகொடுத்தனுப்புவாயப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்

அப்படியேகொடுத்தனுப்புகிறேன் மகாராஜனே

அரிச்சந்திரன்-விருத்தம்.

சத்தியகீர்த்திகேளாய் சற்குணதேவதாசன்
வித்தியாப்பியாசஞ்செய்தே வெகுநெறியறிந்ததற்காய்
எத்திசைதனிலுமுள்ள யினியவர்தலர்கடம்பை
சுத்தியிக்கழைப்பாய்தானஞ் சோர்வறக்கொடுக்கத்தானே.

வசனம்.

அப்பாமந்திரி தேவதாசன் வித்தைகளிக்றேர்ந்த சந்தோஷத்திற்காய் தானங்கொடுக்கவேண்டியிருப்பதால் யாசகர்களை வரச்செய்குவாய் சத்தியக்கீர்த்தி.

மந்திரி-விருத்தம்,

மகாபாக்கியமப்படியே வரச்செய்கிறேன்மகாராஜனே

மந்திரி-விருத்தம்.

ஆரடாராவற்காக்க மதிமீரக்கட்டியக்காரா
திராணமதுராஜன் நின்மின்றேயாசகர்க்கு
பேர்பெறதானம்புரி பெய்கவேபோவதாலே
வாதிலுள்ளோரெல்லாம் மொக்கவேவரச்செய்வாயே,

அரிச்சந்திரமகாராஜன் கொலுவுக்கு தோட்டிவருகிறபாகம்.



வசனம்.

அடா கட்டியனே நமது ராசன் இன்றையதினந் தானங்கொடுக்கப் போகிறபடியால் ஞானிகளுள்ளார் யாசகர்களையெல்லாந் தோட்டிமூலமாய்ப் பறைசாட்டிவரச்செய்குவாயப்பா கட்டியனே.

கட்டியன் வசனம்.

கேளடா தோட்டி நமது ராஜன் வெகுதானங்கொடுக்கப்போகிறபடியால் பறைசாட்டி யாசகர்களை வரச்செய்யடா.

தோட்டி வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி

தோட்டி - தரு - இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி

பல்லவி-

தோட்டி நான்றானே பறையடிக்குந் தோட்டி நான்றானே

அநுபல்லவி.

செட்டியா மரிச்சந்திர னிட்டிலை காத்திடும் தோட்

சரணம்

சிசுவதைசெய் தோரும் மற்றும்
பசுவதைபுரிந் தோரும்
குசிகுசிவென் போரும் என்றன்
கூறறைப் பழிக்தோரும்
அசுபநயனனுஞ் மாக்கினை பிட்டிட
கொக்கவாய்க் கதாங்கிய குறவனை வெட்டிடும் தோ
பின்மொழிசொல் வோரும் ஒருவர்
தனமனையை இகழ்ந் தோரும்
நன்மையைவிடுக் தோரும் குலத்
திலைமையைப் பகைதொடுத்தோரும்
தனைமை செப்பெனவே வந்தவ தொனியிடுமென்னமே
எனுமகனைக் குத்தி விரத்தம்வடித்திடும் தோ
வழிகட்டிப்பறிப் போரும் கெட்ட
விழிபடமேகைப் போரும்
பழிக்கச்சொல் வோரும் கேளா
மொழிகளைப்புகல் வோரும்
அழிவுறவாணடவனை அமைக்கவேதெண்டனை
குழியுறமுள்ளினுற் கொதித்தசைபறிக்கும் தோ

தோட்டி வசனம்

அப்பா பிச்சைக்காரவாண்டமாரே ராசாதானங் கொடுக்கிறுங்கோ ஓடிவாங்கோ ஓடிவாங்கோ தேடிவாங்கோ தேடிவாங்கோ தேடிவாங்கோ கூடிவாங்கோ கூடிவாங்கோ டேயேயென் கூத்திமகனே

கட்டியன் வசனம்

தானம் வாங்குவதற்காக யாசகர்கள் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

பாம்பாட்டி கண்ணிகள் புன்னாகதோடி ஆதி

ஆடுபாம்பே தேடுபாம்பே யிங்க
அரிச்சந்திரன் சபைவாழ்ப்பாடுபாம்பே — நீ ஆடு
ஒருவர்நிலைதனை யுணராமலே தூஷணை
வருளருமனையைக்கடிக்கத்தேடு பாம்பே — நீ ஆடு
தருமனைக்கையிலுள் கணைமைபறியாமலே
தனடுக்குக்கொண்டே னெப்போய்ஞ பாம்பே — நீ ஆடு
அரசனுக்கினைபாய மயியாமற்றிருந்திடும்
ஆங்காரிகளைக்கொத்த ஒக்குபாம்பே — நீ ஆடு
சரசமாய் முன்பேசி சர்க்குபின் தூஷிக்கும்
சண்டாளரைக்கடிக்கத்தாவுபாம்பே — நீ ஆடு
தெய்வதூஷணை செய்து தெருவீதிகளில்வாழும்
தீயரையோடியோடித்தீண்டுபாம்பே — நீ ஆடு
கைப்பொருட்கொருவத்தாற் கவிஞரைமதிக்காத
கருமிகளையே நாடிக்கடிபாம்பே — நீ ஆடு
நீதிநெறியுணர்ந்தே நேயமுறைதெரிந்த
நேமிகள் பாதந்தினம் நினைபாம்பே — நீ ஆடு
தீரனரிச்சந்திரனை செய்யுளிதைப்பாடியே
தினபுயன்பேரைச்செப்புதினம்பாம்பே — நீ ஆடு
வீரமோகஞ்சிவனாரும் வித்தசபையார்வாழ்க
வேண்டியாணைகோடிபாடுபாம்பே — நீ ஆடு

பண்டாரம் கண்ணிகள் ஆனந்தக்களிப்பு சாப்பு.

பாவஞ்செய்யாதிருநெஞ்சமே குல
நேமம்விட்டாற் றுயர் தாலவரும்மனமே
குருமொழிதனைமறவாதே பண
கூசாமலேபொய்யை லேசாய்ச்சொல்லாதே
பெருமைபடைத்திருக்காதே தனமும்
பேசாமற்போய்விடும் விசெல்லாதே — பாவ
மதங்களையிகழ்ந்து பேசாதே
மாயப்பிரபஞ்சம்மயங்கித்துள்ளாதே
சதமென்றுவாழ்வைச்சம்பாதே லோகச்
சாவித்திக்கோதடுத்துச்செல்லாதே — பாவ

திருநீற்றையிகழ்ந்துபேசாதே
நீராகக்கொடும்பாவந்தீண்டுஞ்சிக்காதே
திருமணிதனைப்பழியாதே வெகு
தீமைகள்சூழ்ந்திடுந் தெளிவுமில்லாதே பாவ
மூத்தோர்சொல்வார்த்தைதட்டாதேநீ
முறைதப்பிமாதரைக்கருதிப்பாராதே
பார்த்தோர்நகைக்கத்திரியாதேஅந்த
பதிவிரதாசொல்வாக்குப்பலிக்கும்பொய்யாதே பாவ
நீர்குளத்தருகினில்லாதேதுயி
னீக்கிநிம்மாதர்பேணி கண்வையாதேசன்
மார்க்கத்திற்கிதவும்பொல்லாதே திரேக
மடிந்தாலுங்காரத்தி லழுந்திப்போகாதே பாவ
பெண்சாதிவார்த்தைகேளாத அதில்
பெரியசிறுமைகள் வருதற்பொய்யாதே
தன்குலவிதியை விடாதபிறர்
தாக்கும்பொய்மார்க்கத்திருளுழைபாதே. பாவ
பணங்கண்டுகனம்படையாதே அது
பலித்திடும்பாவிக்கே பார்மகிழாத
குணங்கெடமதுக்குடியாதேநாளுங்
கோட்சொல்லும்மாதரை கோதிச்சேராதே பாவ
மதிகெட்டுநேர்வப்படியாதேநாளு
மனோதுக்கங்கொண்டுமே மடிந்துபோகாதே
விதித்தமொழியைமறவாதேநாளும்
வினோதசபைவாழ வேண்டிகொள்கோதே பாவ

நாசிரிபுன்னாகவராளிரூபகம்.

ராராபோதாமூ அரிச்சந்திர
ராஜவாஞ்சமுக்கமுனக்கு

இக்கவேண்டேதியாலரா	யிந்துசளுருட்டேமிரா	
சக்கத்தனமூகலுருவாடு	மிக்கிலிமனக்கிவ்வகலடு	ரா
சாசுடவுகனதரிஸங்குனி	வாதுதுடவுவாடுகானி	
அரிச்சந்துருடநியாகபூப	அந்தாசனிசாயச்சாய	ரா
நவமனுவலனுகுலத்தெகலு	நானைவிதமட்டமனுலு	
அலஸ்யமிச்சுமனக்குவடு	அந்தடிகனுடெவடுலேடு	ரா

ராகத்தாளஞானசுருதிரகித் துடைத்தாகொலுவையுண்டு
போகவரோதசபனுமனமே பொடிகடிச்சாலகடிஞ்சுதாமே ரா

சரணங்கள்.

பஞ்சேந்திரியங்கடனைப் பழுதாகவேயொடுக்கிப்
பரமதங்களெல்லாம் பறந்தோடவேமுடிக்கி
நெஞ்சிற்சிவனடியை நிறுத்தித்தவம்புரியோர்
நிகழ்த்தொணுவினர்போல் நின்றெதிரிடப்போமோ போ

மூவாசையெனுமரம் முளைக்காமலடிகிள்ளி
மோடிவிம்புவம்டும் முதலுருமலேதள்ளி
ஆவாகனமாக அனுதினம்பிரமத்தை
அடுத்துப்பணிந்திட்ட அருமையுமிதுதானோ போ

ஒருவர்கொருவர்மேலா யுணர்ந்தவர்மூலத்தை
ஓகோவினிநீங்க ளூதறுவீர்கோலத்தை
தருமதேவதைகூட தழைப்பதுமுங்களாலே
தாபந்தவிர்த்துசுபந் தாவுவீர்வாக்காலே போ

அண்டமெல்லாம்நடுங்க அதிர்ச்சியாய்ப்பேசுறீர்
ஆஆஆகோபத்தா லாக்ரஷம்வீசுறீர்
தெண்டம்புரிவேநீங்கள் தீர்த்திடுவீர்வாதை
தேவர்கள்மதிபரே சிரமுடிக்கேபணிந்தேன் போ

தேவேந்திரன்-வசனம்.

கேளுங்கள் முனிவர்களே, உங்கள் கோபத்தைத் தணித்திந்த ஆசனங்களி லிருப்பீர்கள் ரிஷிகளே.

வதிஷ்டர்-வசனம்

அப்படியே யிருக்கிறேன் தேவேந்திரமகாராஜனே.

நாரதர்-விருத்தம்,

தத்துவத்தின் றுற்குணத்தை நீக்கியே மெய்ஞ்ஞானந்
தன்னைச் சேருஞ்
சித்தருக்குட் சிறந்தவரே யிவ்விதமாய்ச் சினங்கொண்டு
சீற லாமோ
உத்தமனே அரிச்சந்திரன்மந்திபனே விங்குள்ள
வும்பர் கேட்க
இந்நலத்தி லின்னபடி யோர்நிலைமை குறிப்பாக
வியம்புவீரே,



வசனம்.

கேளும் வசிஷ்டரே, விஸ்வாமித்திரரே, அந்த அரிச்சந்திரன் பொய்யனே, அல்லது மெய்யனே, யாரெதைத் தீர்மானிக்கிறீரோ, அதற்காக ஓர்நிலையான வாக்குச்சொல்வீர்கள் முனிநாதரே,

தேவேந்திரன்-வசனம்

கேட்டீர்களா சபையோர்களே, நாரதர்சொன்னதே சரியானதாகத் தோற்றுகின்றது, உங்களுக்குத் தோற்றும் கருத்தை வெளியிடுவீர்கள் கனவான்களே.

சபையோர்-வசனம்.

தேவேந்திர மகாராஜனே, நாரதர் சொன்னதே எங்களுக்கும் உத்தமாகத்தெரிகின்றது ராஜனே,

தேதேந்திரன்-விருத்தம்.

ஐயரே வசிஷ்ட மூர்த்தி யரிச்சந்திரன் மெய்யனென்றே
ஐயரே யுரைத்தீர் பொய்யென் றறைந்தனர் விஸ்வா மித்ரர்
ஐயரே யுமது சீட னருமையாம் பொய்யு ரைக்கில்
ஐயரே சொன்ன வாக்கு மழியுமோ வில்லையோ சொல்வீர்,

வசனம்.

சுவாமி வசிஷ்டரே, உமது சீஷனுகிய அரிச்சந்திர னொருவன் தான் பூலோகத்தில் மெய்யனென்றறிந்த தேவசபையின் முன்சொன்னீர், அவனைப் பொய்யனென்று விஸ்வாமித்திரரிஷி வெளியிட்டார் அப்படிக்கவன் பொய்சொல்வானுகில் உமது வாக்கு பிசகோ, அல்லவோ சோல்வீர் சுவாமி.

வசிஷ்டர்-விருத்தம்

தண்ணொளிகொள் ளரிச்சந்திர மகராஜன் றன்குணத்தைத்
தடைக ளின்றிக்
கண்ணொளியா யிரங்கொண்டோய் கௌசிகனுஞ் சோதிக்கக்
கனிவு கூர்வாய்
திண்ணொளியே பொய்யுரைக்கிற் றவங்குலைந்துமுடிகளைந்தென்
சிரசின் மீதில்
எண்ணொணு மதுக்குடத்தை யேந்திபலர் நகைக்கத்தெற்
கேகு வேனே.

வசனம்.

கேளுந் தேவேந்திரமகாராஜனே, அந்த அரிச்சந்திரன் வாயால் விஸ்வாமித்திரன் ஒரு பொய்வரச் செய்வானாகில் நானென் தவவேடத்தைவிட்டு முடியைச் சிரைத்தெரிந்து கள் நிரப்பிய பாண்டத்தைத் தாங்கிப் பலரும் நகைக்கத் தென்றிசை நோக்கிச் சொலலுவேன் இது சத்தியம்மகாராஜனே.

சபையோர்-வசனம

கேளுந் தேவர்கோனே வதிஷ்டர் பெருஞ் சத்தியஞ்சொன்னாற் கேட்டேங்கள் மனமெல்லாம நிலைகுலைந்தது இனி விஸ்வாமித்திருடைய கருத்தை வெளியிடச்செய்குவீர் மகாராஜனே

தேவேந்திரன்-வசனம்

அப்படியே வெளியிடச்செய்கிறேன் சபையோர்களே,

தேவேந்திரன்-விருத்தம்

அண்ணலே விஸ்வா மித்ர அன்பரே வதிஷ்டர் தாமுஞ்
சொன்னதைக் கேட்டீர் யாருஞ் சொல்லொணுச்சபதங் கொண்டார்
விண்ணாருந்திகைத்தா ரந்த வேந்தனும் வாயாற் பொய்யைப்
பண்ணவே தவிர்வா னாகிற் பகருவ தெதுவோ காணேன்

வசனம்

கேளும் விஸ்வாமித்திரரே தேவசபை நடுங்கிட வதிஷ்டர்சொன்ன சபதங்கேட்டுதா நீர் தவறிப்போகாமல் அரிச்சந்திரனைப் பொய் பேசச் செய்வீரோ சொல்லுவீா முனியே

விஷ்வாமித்திரன்-விருத்தம

மன்னனரிச்சந்திரனை மடக்கிவெகுபொய்யுரைக்கமகிபா செய்வேன்
மன்னவனுமெனைக கெலித்தாலகாவிங்நாட்புரிந்தவொருமகாதவத்தில்
மன்னவனுக்கதிற்பாதிதாரைசெய்வேன் வதிஷ்டனுக்குமடங்கிநிற்பே
மன்னவனே யிச்சேதிரபதிக்கே யிட்டமார்க்கஞ்செய்வீர் (ன்

வசனம,

கேளும் தேவர்கோனே, அரிச்சந்திரனை அனேகம்பொய்பேசச் செய்வேன். தவறுவேனாகிலெனது தோடைத்திலேபாதியவனுக்குத் தாரைவார்த்து வதிஷ்டனைப்போற்றி செய்வேன் ஆனாலிங்குநடந்த சங்கதியவனுக் கெட்டாதவாறு செய்யக்கோருகிறேன் மகாராஜனே.

தேவேந்திரன் வசனம்.

அப்படியே கிட்டாதபடிக்கு வேண்டியமுயற்சிசெய்கிறேன்விஸ்வாமித்திரமுனியே.

தேவேந்திரன் விருத்தம்.

தேவரே கேளீர் சித்தில் தெளிவுள முனிவரேநீர்
ஏவுமோர், விடமிச் சேதியிம்மிடிற் றேஷம் சுற்றும்
மேவியநேசத்ரோக மிழைத்தவன் புகுக்க திக்கே
தாவியே வாழ்வீ ரெந்தன் தன்யரே சத்யந் தானே.

வசனம்.

கேளுங்கள்சபையிலுள்ளோரே, இந்தத்தேவரகசியத்தைவெளியிட்டவர்களுக்குத்தோஷஞ் சம்பவிக்குமே தவிரசினேகத்துரோகஞ் செய்தபாதகன் போகும்படியான கதியடைவார் கனவான்களே.

சபையோர்வசனம்.

தேவராஜனே சிவசிவா நாங்களுமது ஆக்கினைக்கும் சத்தியத்திற்குமுள்ளானோம் வெளியிடக்கவனிக்கோம் வேந்தனே.

வசிஷ்டர்விருத்தம்.

வல்லபமுயர்ந்த விண்ணோர் வாதியேயுரைக்கக் கேளீர்
புல்லறிவுளோ னிவன்றான் பொருந்தினன் வெளியேசென்றால்
சொல்லருஞ்சேதி தன்னைச் சொன்னதாய்ப் பழியு ரைப்பான்
கல்லதைக் கொய்தோய் தேவர்காவலி லென்னைவைப்பாயே.

வசனம்.

கேளுந்தேவர்கோனே, நான்வெளிசென்றால் நானேசொன்னதாகப்பழிபேசுவான் விஸ்வாமித்திர னானதா லென்னைத்தேவர்கள் காவலில் வைத்திடுவீர் வேந்தனே.

சபையோர்வசனம்.

தேவேந்திர மகாராஜனே, அந்தப்படிசெய்வது மிகநலமாய்த் தெரிகின்றது அதின்பேரிற் றங்கள்சித்தம்மகாராஜனே.

தேவேந்திரன்-வசனம்

சபையோர்களே, நானப்படிசெய்விக்கிறேன் கனவான்களே.

தேவேந்திரன் விருத்தம்,

ஆரடாகட்டியக் காரா அரன்றவந் தனிலுயர்ந்த
தீரராம்வதிஷ்டர் தம்மைத் தெரிவாயென் விடையிலாமல்
வேறொரு விடததிற் கேகி யிக்குற்ற மொழிபேசாமல்
வீரதாய்க்காவற் காக்க விதித்தனுக் கினைக்காண்பாயே.

வசனம்.

அடாகட்டியனே, இந்தவதிஷ்டமகாமுனிவரையென்னுடையவுத்திரவன்றி யொருவருடன் பேசாமலும் வெளியேபுறப்படாமலுஞ்சிறையில்வைத்துக் கடினமானகாவல் புரிவாயடா வீரனே.

கட்டியன்வசம்.

அப்படியே அதிஜாக்கிரதையாய்க்காக்கிறேன் தேவேந்திரமகாராஜனே.

கட்டியன்-வசனம்.

சுவாமிவாரும் வதிஷ்டமூர்த்தியே.

வதிஷடர்வசனம்.

அப்படியேவருகின்றேனப்பா கட்டியனே.

கட்டியன்வசனம.

கேளுஞ்சுவாமி, இந்த அரையிலிருக்கவேணடும் யாருடனும்பேசப்போகாதுதேவர்கோ னுக்கினைப்படி நானுங்காவல்காக்கிறேன்போற்றிபோற்றிமுனிநாதா.

வதிஷ்டர்வசனம்.

அப்படியே யிருக்கிறேனப்பா கட்டியனே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

சேனைதிபதியே போற்றி செங்கண்மால் வருண போற்றி
வானைதி நவக்ர கத்துள்வலுமைசுக் கிரனேபோற்றி
தானைகநீதி கண்டதருமனே தெய்வே போற்றி
நானுடுங்காலம் வந்தால் நலந்தரவரமீ விரே

வசனம்.

சுவாமிசுப்பிரமணியரே, திருமாலே, வருணரே, சுக்கிரரே, அக்கினிதேவரே, காஞெருவேளை தங்களைக் கவனித்தாலடியேன்முன்தோன்றியென் கோரிக்கையிடேற்றுகிறதாக அபயஸ்தங்கொடுக்கவேண்டுந்தேவர்களே.

தேவர்கள்-விருத்தம்.

மிக்காற் றவங்கள்செய்யு மித்திரமுனியேவாழி
எக்கணந் தனிலேநீர்தா மெங்களை நினைப்பீராகில்
முக்யமாய் வருவோ முன்றன்மொழிப்படிகாரி யத்தின்
பக்குவமறிந்தே செய்வோம பணித்தசொற் பாதுகாப்பீர்,

வசனம்

கேளும்விஸ்வாமித்திரரே, எங்களில் நீர் யாரைக் கோரினாலுந் தடையின்றி வந்துமதுமனக் கோரிகையை யீடேற்றுவோம் இதை நம்புவீர்முனியே,

விஸ்வாமித்திரன்வசனம்.

சுவாமிகளே மெத்தசந்தோஷம். இனிவதிஷ்டனை வெகுதீவிரத்தில் அவமானப் படுத்திவிடுகிறேன் நீங்களே பார்க்கப்போகிறீர்கள் தேவர்களே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

மங்கையிந்த் ராணிபாகாமன்னவன் வாயினாலே
சங்கையில்லாமற் பொய்யைச் சாற்றிடச்செய்வேனின்னம்
இங்கிதக்கொலைசெய் விப்பேனியம்பியபந்த யத்தைப்
பொங்கமாய்க் கெலிப்பேன் போகப்புனிதனே விடையீவாயே.

வசனம.

கேளும்தேவேந்திரமகாராஜனே, நான் அரிச்சந்திரனைப் படாதபாடுபடுத்திப் பொய்யுடன் கொலை சோரத்துவம் புரியச்செய்து வதிஷ்டனை யவமானப்படுத்துகிறேன் எனக்குப் போக விடைதாரும் ராஜனே

தேவேந்திரன்-வசனம்


அப்படியே போய்வாரும் முனிநாதரே

விஸ்வாமித்திரன்-வசனம்

போய் வருகிறேன் வாழிவாழி.

பொது-வசனம்

கேளுங்கள் சபையோர்களே, விஸ்வாமித்திரன் தேவேந்திரனிடம் விடைபெற்று வருகிற வழியில்சனிபகவானைக் கண்டுசகலமுந்தெரியச்சொல்லித்தனக்குத் துணையாக விருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறதவி காண்பீர்கள் கனவான்களே,



நல்லதுபொன்றுன்மெத்த நாயகாபின்னிடாமல்
நல்லவரறியத்தாரை நாட்டிடினம்புவேனே.

வசனம்.

சேளாயப்பா நான்வந்துகேட்கும்போது கொடுப்பேனென்றது சரியேமொத்தம் பெரிதானதானல்லோர்களறியக் கொடுப்பதாய்தாரைவார்த்தா லொப்பிடைப்பேன் மகாராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

முனிவரேகிலேசம்வேண்டா மூமதுபொன்னெடுக்கமாட்டேன
முனிவரேவேண்டும்போது மொழிப்படித்தருவேன்கண்டீர்
முனிவரேயிதற்குச்சாட்சி முதல்ரவிவிண்ணுமண்ணு
முனிவரேதாரைவார்த்தேன் முகந்துநீரேற்றுக்கொள்வீர்

வசனம்.

கேளுஞ்சுவாமிசஞ்சலத்தைவிடும் இதோ ஆகாயவாணி பூமிதேவிசூரியசந்திராளறியதாரைவார்த்தேனேற்றுக்கொள்ளும்முனிநாதா

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

சத்தியமன்னனென்றால் சாந்தனேநீயேயன்றி
சத்தியமன்னரிந்தச் சாரலிற்கண்டதில்லை
சத்தியநீயேயாகுஞ் சதியிவள்பத்னியாமே
சத்தியனேவேண்டுங்காலை சாய்ந்துமேகொள்வேன்வாழி.

வசனம்.

கேளும்மகாராசனே நீயேசத்தியன்சந்திரவதியேபதிவிரதையுங்களைவிட வேறுகண்டதில்லையெனக்கு வேண்டும்போது வந்து வாங்கிக்கொண்டுபோகின்றேன் அரிச்சந்திரமகாராஜனே.

அரிச்சந்திரன்-வசனம்

அடியேன்செய்தகுற்றங்களை தயைகூர்ந்துமன்னித்து ஆட்கொள்ளவேண்டியது முனிநாதா.

விஸ்வாமித்திரன்-தரு-கௌளம்-ரூபகதாளம்.

மாட்டிக்கொண்டானே அரிச்சந்திரன்
மாட்டிக்கொண்டானே என்மாயவலைக்குள் மாட்
காட்டினிறபசியாய்க் களைத்தவேங்கைபால்
தாவுடகமாய்வேஷர் தான்வந்துபட்டாப்போல் மாட்
பிலவின்பிசினாலே பேரிக்கூட்டம்தூய
தலமெனமேவிக்கால் தான்படும்வாறதாய் மாட்
தீபவொளிவைத் தென்றறியாமலே
தாபமாய்வந்தீசற் றுன்படுவதுபோலே மாட

ஆனதன் மதத்தை யணைக்கத்தெரியாமல்
தானேயணைசிட்டுத் தவிர்க்குமாறுபோல் மாட்

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரமுனியானவர்யே தோ ஒருகுறைதைக்கருதி தான்வாங்கினபொன்னை யாசனிடத்திற்று னேயிருத்தி காட்டிற்குச்சென்றங்குள்ள மிருகங்களைவருவிக்கிற வி தங்காண்பீர்கள்கனவான்களே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

காட்டினில்வாழுஞ்சிங்கம் கரிபரியாளிசென்னாய்
தாட்டிகயானைகோனான் றுரைபெலிகுயிலுங்காடை
மேட்டியாமெருவைபன்றி மிகத்துடிகோழிமான்கள்
நீட்டியேயோராயிங்கே நிமைதனில்வருகுவீரே.

வசனம்.

இந்தக்காட்டினில் வாசஞ்செய்கின்ற யானை குதிரை சிங்கம் நரி கோனான் எருமை புலி கழுதை காடைமுதலாகிய மிருகங்களே யிங் கோடி வாருங்கள்.

மிருகங்கள்-வசனம்.

சுவாமியெங்களை யழைத்தகாரியந்தெரியச்சொன்னாற்றடையின் றிசெய்கிறோம் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

கேளுங்கள் மிருகங்களே நீங்கள்கூட்டமாக வயோத்திநாட்டை யடைந்து குடிகளிட்டிருக்கும்படியான பிரபலமாகும் பயிர்களையழி த்திங்குவந்தெனக்குத் தெரிவிப்பீர்கள்மிருகங்களே.

மிருகங்கள்-வசனம்.

அப்படியேயிதோநாங்கள் சென்று பயிர்களையெல்லாந் துஞ்சம் செய்துயிங்குவந்து தெரிவிக்கின்றோம்.

பொது-தரு-தர்பார்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்ததுபார்-மிருகங்கள்-வந்ததுபார்

அநுபல்லவி.

அந்தமன்செப்பிய வனியாயஞ்செய்திட
இந்திரனுலகைப்போ லிருக்குமயோத்திகெட வந்

சரணங்கள்.

கூட்டமாய்க்கூடியே யொன்றோடொன்று
நாட்டமாயாடியே
காட்டகம்விட்டுமே கௌசிகன்மொழிப்படி
ஓட்டமாயோடியே ஒருநொடிக்குளப்படி வந்



விஸ்வாமித்திரரிடத்தில் மிருகங்கள் வருகிறபாகம்.

வாலை தூக்கியேசெவிநீட்டி
காலைத்தாக்கியே
சாலைவழியெல்லாம் சார்ந்தேபொடியாக்கி
ஓலைகிழிவதை உணருமதிபோக்கி வர்

நன்சையிற்றுவிபேயழித்துமே
புன்சையின்மேவியே
நெஞ்சைபொடித்திட்ட நீள்விளைவைபோக்க
பஞ்சைகாற்றிவிட்ட பாவனையாயாக்க
கொத்துதுபார் தரைதனை கொந்துதுபார்
குடிமனம் நொந்துதுபார் இதோவிதோ
வந்துதுபார் மிருகங்கள் வந்ததுபார்

பொது-விருத்ததம்.

மிருகத்தின்கூட்டம்வந்தே மேவியபயிரையெல்லாங்
கருவழித்திடவேகண்ட கடிவுளகுடிகள்தாமுங்
கிருகிருவென்றேநல்லை கிடாசியிமுறும்பக்கண்டு
வருமையுட்கொண்டேவேந்தன் வளாசபைவருகின்றாரே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே விஸ்வாமித்திரனேவிய மிருகங்கள் பயிர்களை நாசஞ்செப்யக்கண்ட குடிகள்கல்லுகளை விட்டெறிந்தும் போகாமல் முன்வருவதைகுடிகள்கண்டு வருத்தங்கொண்டு அரசனிடத்தில் தெரிவிக்க வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

குடிகள்-வருகிற-தரு-கல்யாணிரூபகம்.

பல்லவி,

குடிகள்நாங்களே பயிரிடும் குடிகள்நாங்களே

அநுபல்லவி.

படிமிசைநாளுமே பரப்பவர்கறபிய
பாக்கியம்பெற்றதோர் பண்புளோராகிய குடி

சரணங்கள்.

அந்தணர்வேந்தர்க ளெந்தவர்வந்தாலும்
ஆதரணைசெய்தே காப்போம்யார்
அண்டிகேட்டாலுமே இல்லையென்னாமலும்
யன்பாயவர்பசி தீர்ப்போம்
சுந்தரமூர்த்தியின் சுவாசனமாகிய
நந்தியைநாளுமே நாடுவோராகிய குடி
காலையிலெழுந்து ஸ்தானபானஞ்செய்தே
நைலையனுத்தினம் வாழ்ந்துவோம் ஒரு
காரணமில்லாமல் காலத்தைவீணாக

அரிச்சந்திரமகாராஜன் கொலுவுக்கு குடிகள் வருகிறபாகம்.



கழிக்காயல்பத்தி யேத்தவோம்
வேலைசெய்தானபின் விசித்திரச்சாலையும்
நூலைப்படித்தமே நுண்ணிதத்தைமேவும் குடி
சிவகருண்யத்தை கைக்கொண்டோங்களுஞ்
சிவமதிற்கிட்டிட நாடுவோம்இந்த
ஜெகத்திற்றுஷ்கருத்யஞ் செய்திடுமோர்தமை
சோரபலரைச் சாடுவோம்
பாவத்தொழில்களைப் பற்றிபுரிந்திடோம்
காவலன்க்ஷேமத்தை கருதாதிருந்திடோம் குடி

குடிகள்-வசனம்.

கேளுமையாகட்டியனே யெங்கள்வரவை அரசருக்குத்தெரிவித்து காணக்கூடுமோவென்று தெரிந்துவந்துரைசெய்வாயப்பா,

கட்டியன் வசனம்

கேளுஞ்சுவாமி நமதுநாட்டின் குடிகளெல்லோருந்தங்களைக்காணவேண்டி வந்திருக்கிறார்கள்சுவாமி,

அரிச்சந்திரன்-வசனம்.

சீக்கிரம்வரச்சொல்லும் பிள்ளாய்கட்டியனே

குடிகள்-வசனம்.

போற்றிபோற்றி மகாராஜனே போற்றி

அரிச்சந்திரன்-வசனம்.

மருதம் முல்லைநெய்தல் குருஞ்சிபாலை யெனுஞ்க்ஷேத்திரங்களங்களை யுணர்ந்தே மேன்மைத்தொழில் புரியாநின்றகுடிகளேநீங்கள்வந்தவகைதெரியச்சொல்லுங்களப்பா.

குடிகள்-விருத்தம்.

ஏதெனச்சொல்வோமையா வெங்களாவி-வேபெற்ற
நீதிலாபயிரைபெல்லாந் திண்ணியமிருகம்வந்தே
போதரவழிக்கண்டே புண்ணியமனமாறவேண்டி
ஓதிடவந்தோஞ்சுவாமி யுகந்துமேகாப்பீர்கோவே.

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா நாங்கள் வருத்தப்பட்டு யிட்டபயிரையெல்லாங் காட்டிலிருக்கும்மிருகங்கள் கூட்டமாகவந்தழிப்பதால் இவ்வாதையைப்போக்கி யெங்களைக்காக்கவேண்டும்நாதனே.

குடிகள்-விருத்தம்.

என்னபோகாலங்காணே மேந்தகைசத்தியநாட்டில்
வன்னமாம்வனத்தில்வாழும் வனமிருகங்கள்மேவி

நன்னகர்ப்பயிரையெல்லாம் நாசமேசெய்யலாச்சு
மன்னவாவிலங்கையோட்டி மகிழ்வுறகாப்பீர்போற்றி

வசனம்.

கேளுஞ்சுவாமி யுமதுசத்தியம்பெருகியநாட்டுக்குள் காட்டுமிருகங்கள்மேவி பயிரையழிப்பதேதோவிபரீதகாலமாகத் தெரிகின்றதெங்களைரக்ஷியு மபயம்வேந்தனே

அரிச்சந்திரன்-விருத்தம்.

குடிகளேநீங்கள்சொன்னகொடியதோர்வார்த்தைகேட்டேன்
குடிகளேயிதோநாம்வந்தக் கோரஞ்செய்மிருகந்தன்னை
குடிகளேவேட்டையாடி கொப்பெனமடிப்பேனீங்கள்
குடிகளேதுயரம்விட்டே கொள்ளுமும்மிடமபோவீரே.

வசனம்.

கேளுங்கள்குடிகளே யிதோநான்மிருகங்களைவதைக்கவருகிறேன்னீங்களிருப்பிடம்போய்சேருங்கள் குடிகளே.

அரிச்சந்திரன்-வசனம்.

கேளுங்கள்குடிகளே நீங்களிட்டபயிரைமிருகங்கள் மிதித்ததாலேவருகிற விரண்டுவருஷத்திய வரியைநீங்கள கொடுக்கவேண்டியதில்லைசந்தோஷமாயுங்கள் விடுதிக்குப்போவீர்களப்பா.



உ

முருகன் துணை.

வேட்டஞ்செய்காண்டம்.

அரிச்சந்திரன் விருத்தம்

சத்தியகீர்த்தியென்ன சகிக்கொணாகாலங்கண்டோம்
நத்தியகுடிகள்ளோவ நம்பனென்னருளோகாணும்
வெத்தியாய்வேட்டையாட வேண்டியதாலேயப்பா
சத்தியவேடர்தம்மைச் சுருக்கினில்வரச்செய்வாயே.

வசனம்.

கேளும்மந்திரி குடிகள் மனக்குறைநீங்கநாம்வேட்டைக்குப்போகவேண்டும் சீக்கிரத்தில்வேட்டைகாரர்களை வரச்செய்வாய் சத்தியகீர்த்தி.

மந்திரி-வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி.

மந்திரி-வசனம்.

அப்பா கட்டியனே குடிகளிட்டபயிரையழிக்காநின்ற மிருகங்களைவோட்டுவதற்காக நமதுராஜன் வேட்டைக்கு போகிறபடியால் சீக்கிரத்தில் வேடர்களை வரச்செய்வாய்கட்டியனே.

கட்டியன்-வசனம்.

அப்படியேயழைக்கிறேன்-சுவாமி.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரனேவியமிருகங்களை அதஞ்செய்து வெகுமதிபெறவேண்டி வேடர்களரசனிடத்திற்கு வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

வேடர்-தரு-தன்னியாசி-ரூபகம்.

பல்லவி.

வேடர்காங்களே ஐயேயஙேவேடர்காங்களே

அநுபல்லவி.

தேடரும்விநோத சபையோரின்புகழ்
பாடுவோம்யாவருங்களிக்கவே,

திணைகுத்தியே	நனைவிட்டதில்	
மதுவிட்டுமே	அதுவெட்டிடும்	வே

சரணங்கள்.

ஆனைபுலிசிங்கம் யாளிகூட்டத்திலே
அஞ்சாமலே பாய்ந்து குதிப்போம் அதை
பூனைகள்போலெண்ணி யிட்டியால்சதையைப்
புட்டுபுட்டெறிந்தே மிதிப்போம்
சாணைபிடித்திட்ட கத்தியைந் தாங்கியே
சண்டாளச்சென்னாயைத் துண்டாகவோங்கியே
சாய்த்துகாய்ந்து மாய்த்திடும் வேட

காட்டெருமைக ளோட்டமாய் வந்திடில்
கைக்கோலினாலதை வோட்டுவோம்ஐயே
கரடிகலைமான்கள் முள்ளம்பன்றிவந்தால்
காலினாலெத்தியே மாட்டுவோம்
விட்டோயைப்போல வெண்ணிக்கடம்பையை
விரல்களாற்றூக்கியே உயிருடன்தசையை
வெட்டியேகடியே சுட்டியே நெட்டிடும்வேட

கொக்குகுயில்காக்கை பக்ஷிகளைக்கண்டால்
ரெக்கைகளைப்பற்றி நெளிப்போம் ஐயே
குருவைப்பணிந்துமே யிச்சபையோங்கிட
குமபிட்டுடன்மனந் களிப்போம
திக்குதிக்கெல்லாம் புகழ்பெறப்பாடியே
தீவினையெண்ணிடும் பாவியைச்சாடியே
தேய்த்திடும்தீய்த்திடும் மாய்த்திடும்காய்த்திடும வேட

தலைவேடன் வசனம்.

சரணம சரணம் ஆண்டவனே எம்மை அழைப்பித்த காரியம் தெரியச்சொல்லவேண்டும் மகாராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

வேடனே அடவிவாழும் விலங்குகளுட்டிற்பாய்ந்தே
வேடனேகுடிகளிட்டவிலைகொளும் பயிரையெல்லாம்
வேடனேயழிப்பதாலே விரைவினில்வேட்டையாடி
வேடனேவிரட்டயானும் வேண்டியேயழைத்தேன்காண்பாய்

வசனம்.

கேளுமப்பா தலைவேடனே காட்டுமிருகங்கள் நாட்டில் தலைப்பட்டு பயிர்களை யதஞ்செய்வதால் வேட்டையாடவேண்டி யழைத்தேன் தெரிகுவாயப்பா

தலைவேடன் வசனம்.

மகாசந்தோஷ மப்படியே வருகிறேன் சுவாமி

அரிச்சந்திரன் வெண்பா

மந்திரியேவனமதனில் வனவேட்டையாடுதற்கே
முந்திநீதானுடுத்தி முனைவாக சுந்தரமாய்
சேனைதளவாரந் திசைகளெட்டுந்தான்நடுங்க
ஆனைபரிமற்றதுமே யமை

வசனம்.

கேளுமப்பா மந்திரி நாம் வேட்டைக்குப் போகவேண்டும் நீ ஜாக்கிரதையா யுடுத்திக்கொண்டு யானை குதிரை தள முதலானதை யுஞ்சேகரிப்பாயப்பா சத்தியகீர்த்தி

மந்திரி வசனம்.

மகாராஜனே தங்களுத்திரவின்படிக்கெல்லாஞ் சேகரிக்கின்றே ன்சுவாமி

அரிச்சந்திரன் விருத்தம்.

தேன்மொழிமாதேகேளாய் திகழிலாமிருகக்கூட்டம்
மான்விழியாளேவந்து அழிக்குதாம்பயிரைநாட்டில்
தேன்பொழிபெண்ணேசென்று தெரிவிக்கவேவேட்டையாட
மான்விழிகண்ணேபோரேன் மகிழ்வுடநீயும்வாராய்

வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரவதி காட்டு மிருகங்கள் பயிரைய. ப்பதால் வேட்டையாடப்போகிறேன் நீயும்வருவாய்கண்ணே

சந்திரமதி விருத்தம்

கானகந்தனிலேசென்று கருக்கவேமிருகந்தன்னை
தானரேயோட்டவேண்டி தாம்புரிவேட்டைமற்றும்
பானரேயங்கேதோன்றும் பலமலைவிருட்சமுந்தான்
மானரேயடியாள்காண மகிழ்வுடன்வருகுவேனே

வசனம்.

கேளுமென்பிராணநாதா தாங்கள் வேட்டையாடுகிற நேர்மை யும் வனத்திலுள்ள வுன்னதங்களையுங் காணவேண்டி நானும் வருகி றேன்சுவாமி.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாட்டினிற்குடிகளிட்டநல்லதோர் பயிரையெல்லாம்
காட்டினில்வாழ் மிருகம்வந்தே கலக்கியதாகக்கேட்டே
வீட்டினிலிருக்கப்போகா வீரரேவேடமாரே
தாட்டிகமாயென்கூட தாவியே வருகுவீரே

வசனம்.

கேளுங்கள் வேடரே பயிரை யழிக்கும்படியான மிருகங்களை விரட்டவேண்டியதால ஜாக்கிரதையாய் வாருங்கள் போவோம

வேடர் வசனம்.

புத்தி அப்படியேவருகின்றோ மகாராஜனே,



அரிச்சந்திரன். சத்தியகீர்த்தி சந்திரவதி

அரிச்சந்திரன்வேட்டை-இ-ம்-தரு-அடாணு,திரிபுடை

பல்லவி.

வேட்டையாடுவோம்வாரீர் ஓவில்லியரே சல்லியரேநாம்
வேட்டையாடலாம் வாரீர்

அநுபல்லவி,

காட்டைவிட்டேமிருகம் நாட்டினிலுமிதோ
காரராய் பாராய்க்கீ சேரராய்நேரா யிதோ வேட்

சரணங்கள்.

அம்பெடுத்தே யிதோ விடுத்தேன் அந்த
யானைக்கூட்டமதை கெடுத்தேன்
கொம்புமுறிந்திட வடித்தேன் பன்றிக்
கூட்டத்தையுமிதோ விடுத்தேன்
தும்புவலைகளா லோடுமிருகத்தை
சுத்திவங்கே யப்பா நத்திமடக்குங்கள்
வெம்புலிசென்னாய்கள் மின்னுங்கூட்டத்தை
வேடாவாடாநாயைச் சூடாபோடா வன வேட்

கோரைப்பன்றிகளைக் கண்டேநான்
கோணமற்கத்தியைக் கொண்டே
வேறேயெண்ணமதை வின்டோயிதோ
விட்டேனம்பு பன்னிரண்டே
நாரைகொக்கு பக்ஷி பயிர்மேற்றாவுதே
நாட்டமாயுண்டுவில் போக்குங்கள்வலையை
தேரைத்திருப்புகிறேன் சிங்கங்கள்போகுதே
சேராய்பாராய்சுற்றி காராய்நேராய்வன வேட்

எருமைக்கூட்டத்தை மாட்டினேன் அதோ
எதிரிற்கலைகளை யோட்டினேன்
பெருமையுடனம்பை மீட்டினேன்பொல்லா
பெரியகாண்டாவிழ நாட்டினேன்
அருமைதெரியாமல் யிச்சபைதன்னையே
அகஸ்பஞ்செய்யும்பர தோஷிகளைத்தினம்
முருகனருளதை மனதினிலெண்ணியே
முட்டுதிட்டுபலலே தட்டுக்கொடடுவன வேட்

அரிச்சந்திரன் வசனம்,

கேளுங்கள் வேடர்களே என் அம்பினால் னொந்து பின்னிட்
... படியான மிருகங்களைப்பின்பற்றி வதைத்து வருவீர்களப்பா
வேடர்களே.

வேடர் வசனம்.

மகாசந்தோஷ மப்படியே பின்பற்றிச்சென்று மனங்களிக்கும் படி மிருகங்களையொடுக்கி இதோ வருகிறோமெங்கள் திராணியைப் பாரும் மகாராஜனே.

வேடர்-தரு-நாதநாமக்கிரியை-ரூபகம்.

பேசாரடையே பருங்கிவா பேசாரடையே
வேசாரிபட்சி போகுதே போகுதே பே
நாயைக்கூரையேவாய்முரி நடந்துவாரையே
டாயைச்சேருதுபுயி ராக்குடா அடமித்தே பே
க்ரடியையனோரே ராக்கியே காளையைச்சேரே
விரட்டியோமஞ்சதை வியவே ராக்குடா பே
வலையீசுடைய்யே விசைகநீ வருகூராரொய்யே
கொலைசெய்யேமையை குட்பத்தே ராக்குடா பே

அரிச்சந்திரன் விருத்தம்.

வேடரின்முனதாய்மந்திரி விரைவினிற்றளங்களோடே
காடதைப்பற்றிச்சென்றே களிப்புறநீங்கள்தானும
நாடதையழிக்கவந்த நமதுயர்களை கடந்த
கூடமாமிருகமெல்லாங் கொப்பெனவதைசெய்வீரே

வசனம்.

கேளுங்கள் சேனுதிபதிகளே மந்திரிகளே வேடர்கள் முன்னே நீங்களுஞ்சென்று நமதுபாக்கினசக்கரமீறி நடந்த மிருகங்களை வதை செய்வீர்களப்பா வில்லாளிகளே.

மந்திரி விருத்தம்.

அயவலையிட்டியம்ப ருக்கள்ளியுண்டைவில்லு
நயமுடன்றுங்கிநிற்கும் நல்வேட்டைக்காரரோநாம்
பயமின்றிமிருகந்தன்னைப் பற்றிப்பின்செலறேமாய்த்தால்
ஜெபமுளவரசன்கண்டே செப்பொனுமகிழ்கொல்வாரே

வசனம்.

கேளுங்களப்பா நாமும் பின்பற்றி மிருகங்கள் திரும்பாதபடிக்கி வதைப்போமாகி லரசன்கண்டு மிகவுந்சந்தோஷமடைவார் வாருங்கள் வாருங்கள்.

மந்திரி-தரு-நாதநாமக்கிரியை-ரூ கம்.

பல்லவி.

ஓடிவாருங்கள் ஐயே ஐயே ஐயே
ஐயே பைய ஓடிவாருங்கள்

அநுபல்லவி.

ஓடியிருடக்கம் நாடிவலைவீசி
தேடிமிருகங்க கூடிடவுமேசி ஓடி

சரணங்கள்.

எதிரேநேருங்கள் அப்பா அப்பா அப்பா அப்பா
அந்தயிடிக்கில் பாருங்கள்
சதிராக வாருங்கள் அப்பாமிருக
ஜாடையைக் காருங்கள்
விதிகிழிந்தது மானுக்கே பத்துங்கள்
வீரிட்டோடுகிற யானையைக் குத்துங்கள்
வேகமாய்நோக்கிடும் புலிகளைப்பாரீர
வெட்டினேன் தட்டினேன் குட்டிச்செந்நாய்களை ஓடி

சுத்திக்கூவுங்கள் அப்பாநாயைச்
சுறுக்கா யேவுங்கள்
கத்தியைப் பாவுங்கள் கடப்பையை
கரடியைத் தாவுங்கள்
எத்திசையும்நோக்கும் எருமையைச்சுத்துங்கள்
யிட்டிகளினாலே யூட்டியிற்குத்துங்கள்
இறுமாப்புடன்வரும் பெரியசிவிங்கியை
ஏற்றுங்கள்தொத்துங்கள் பத்துஙகள்ஓடாமல ஓடி

வலையைப்போடுங்கள் அப்பாபறவை
வாட ஜாடுங்கள்
குலையைநாடுங்கள் அப்பாதுட்டர்மனங்
கொல்லத் தேடுங்கள்
விலைமதியாத விநோதசபைதனை
வெற்றியாயோங்கிட வேண்டுவீர்வேலனை
வித்தைபிகழ்ந்திடும் லுத்தப்பிணாந்தனை
வோடாமல் நாடாமல் மேடாமல்நீஙகளும் ஓடி

மந்திரி விருத்தம்.

வேந்தனேமிருகந்தானும் வெகுவாக மாண்டுபோச்சு
வேந்தனேமிகுந்ததெல்லாம் வெருண்டுகண்காணாத்தூரம்
வேந்தனேமறைந்ததாலே வில்லியன்றனைநிறுத்தி
வேந்தனேபந்தத்திற்கே விளம்பிடவந்தேன்போற்றி.

வசனம்.

மகாராஜனே மிருகங்களனேகமாக மாண்டுபோச்சுது தப்பினதுகள் மலைச்சாரலுக்கு ளோடிப்போய்விட்டது சங்கதிதங்களுக்குத் தெரிவிக்கவந்தேன் சுவாமி,

அரிச்சந்திரன் வசனம்.

அப்பாமந்திரி வேட்டையாடி மிருகக்கூட்டத்தை யதஞ்செய்து விட்டோமானதாலினி சேனைகள் நாடு சேர்வதற்காக ஒன்றாகச் சேர்ப்பிப்பாய் சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்

அப்படியே சேர்ப்பிக்கின்றேன் மகாராஜனே

மந்திரி விருத்தம்

தலைவேடா சொல்லக்கேளாய் தகைமையாய் நீநாடோடி
தலைவேடாசேனைதன்னை தடையின்றியொன்றாய்க்கூட்டி
தலைவேடாயிங்கேதோன்றுந் தண்மையுஞ்சோலைக்கேதான்
தலைவேடாயழைத்துநீயுந் தாவியே வருகுவாயப்பா.

வசன.

கேளுமப்பா தலைவேடனே நீஜாக்கிரதையாய்ச் சென்று சேனைகளையெல்லா மொன்றாகக்கூண்டி இந்த பூஞ்சோலைக்கி யழைத்துக் கொண்டு வருகுவாயப்பா.

பொதுவிருத்தம்,

மன்னரரிச்சந்திரனும் வேருடன்காடுரைந்து —
வனவிலங்கையெல்லாம்
சின்னபின்னமாய்வதைரக நிலைகெட்டேவந்தவழி
சார்ந்தேயோட
என்னருமபேர்தவமுனியும் யிதையறிந்தேயேனமொன்றை
யேவிட்டான்
தின்னமுடன்கருதுபடைமேல்விழுந்தேபலபேரைச்
சிதைத்தன்றே

வசன்ம்

கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திரமகாராஜன் வேட்டையாடி மிருகங்களை வதைக்கத் தரிக்கவிலையில்லாம லோடிவந்ததை விஸ்வாமித்திரன்கண்டு ஒரு பன்றியை உண்டுசெய்து அனுப்ப அதுவந்து படைகளை வதைசெய்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே

பொது-தர்பார் ரூபகம்

பல்லவி

வந்ததுபார் பன்றிதோ வந்ததுபார்

அநுபல்லவி

இந்தச்சபைதனை நிந்தையாய்ப்பேசிடும்
மந்திகளின்சதை கொந்தியேயேசிடும் வந்

சரணங்கள்

இமயமிதோவென்று எண்ணித்துணித்திட
சமயம்பார்த்தேபடை சாகமடித்திட வந்
கோரையைத்தீட்டியே கோபத்தீமூட்டியெ
தாரையாயுதிரந் தாவிடமாட்டியே வந்
வேடர்கள் பாளையர் வெட்டதையெண்ணாமல்
சாடைப்படைகளுஞ் சார்ந்திடநண்ணாமல் வந்

முனிவன்போதித்த மோனத்தைவாய்ந்தோமே
தனிமையில்லாமற் றுண்டியும்பாய்ந்துமே

பொதுவசனம்

கேளுங்கள்சபையோர்களே பன்றியொன்றுசேனைகள் சின்னாபின்னமாவதைக்கண்டுதலைவெட்டனரசனுக்குத்தெரிவிக்க வருகிறவிதக்காண்பிர்கள் கனவான்களே

தலைவெட்டன்விருத்தம்

அரசரே சேனைதன்னை யமரிக்கையெய்தேனாலும்
அரசரே யழைப்பதற்குள்கோரமாய்பன்றியொன்று
அரசரேவந்தேதாக்கி யனேகமாஞ்சனத்தைக்கொன்றெ
அரசரேநொருநோக்கி யடியேனைத்துரத்திற்றையா

வசனம்

கேளுங்கள்சுவாமி நான் சேனைகளைக்கூட்டிக்கொண்டிருக்கும்நேரத்திலொரு பன்றி மலையைப்போல்வந்து சேனையின்மேரிலபாய்ந்து அனேகரை மடித்தும் என்மேரில்பாய நான் தப்பிகேள்பாதத்தி லறிக்கை செய்யவந்தேன் சுவாமி

அரிச்சந்திரன் விருத்தம்

தலைவெட்டா உந்தன்வார்த்தைதைத்துநெஞ்சிலப்பா
தலைவேட்டாமாண்டோர்போகத்தனித்தவருகையிலைகாக்கத்
தலைவெட்டாநானேவந்துக் காதகப்பன்றி தன்னைத்
தலைவெட்டாவதைப்பேன்தேரைத் தறியினில்வர்ச்செய்வாயே

வசனம்

கேளாயப்பா தலைவெட்டா இறந்தவர்போக இருப்பவரைக்காக்க அந்தப்பன்றியைக் கொல்ல நானே வருகின்றேன் என் இரதத்தைசீக்கிரே கொண்டுவரச்செய்வாயப்பா

அரிச்சந்திரன் விருத்தம்

மந்திரிபன்றியொன்று மடித்ததாம்வெகுசனத்தை
மந்திரிநாமெசென்று மடக்கியேயதையொடுக்கி
மந்திரிசேனைதன்னை மகிழ்வுறக்காக்கவேண்டுமே
மந்திரிவாராய்போவோம் மனமினிதரிக்கிலேனே

வசனம்

அப்பா சத்தியகீர்த்தி ஒருபன்றிவந்துநமது சேனைகள்பேரில்விழுந்து கொல்லுகிறதோ நாமதை யொடுக்கி பாளயங்களை ரட்சிக்கவேண்டுமாதலால் நீயும் வருவாயப்பா

மந்திரி வசனம்

அப்படியே வருகிறேன்சுவாமி

மந்திரி வசனம்.

சேளுமப்பா தலைவேடனே நீசொன்னபன்றியின் ரூபமெப்படிக் கொத்ததோ தெரியப்படச்சொல்லுவாய்வேடா

தலைவேடன் விருத்தம்,

நாலுகால்களுமேவெள்ளை நவிலுவேன்சிரசேரபச்சை
கோலமாய்விழிகளிரண்டுங் கூரொணுவுதிரத்தொக்குஞ்
சாலவேதிரேகமானுஞ் சரியிலாப்பொன்னுய்க்காட்டுந்
தூலமேமாவிமயமொக்குங் கொடுகொம்புவயிரமாமே.

வசனம்.

கேளுமையா மந்திரி காலுகாலும் வெள்ளை தலைபச்சை கண்களு திரநிறம திரேகமபொன்மயம் கொம்புகள் வயிரம்போலிருக்கும் காத்திரமோவிமயமலைக்கொப்பான தென்றறிவீரசுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

என்னநங்காலங்காணே னிவ்விதக்கோரமாக
உன்னதமானபன்றி யுற்பித்ததேனோபிரமன்
தன்னதுநினைவுயாதோ தயாபராகைலைவாசா
பன்னவரேற்றுங்கோவே பயந்திரவருள்வாய்போற்றி,

வசனம்.

ஓ ஆண்டவனே கைலைவாசா இவ்விதமான விகார ரூபமுடைய பன்றியை பிரமன் யேன்படைத்தானோ வறியே னெனக்கு மென்சேனைகளுக்கும் யாதொரு துயரமன்றிக் காப்பாய் கைலைவாசா.

பொது வசனம்.

கேளுங்கள்சபையோர்களே வேடன்சொன்ன பன்றியை யிதோ கண்டிக்கிறனென்று ராசன்காலருத்திரனைப்போல் தேரேறி தேரை யாகாயமார்க்கத்தில் நடத்திப் பன்றியிருக்கு மிடத்தை நாடிவருகிற விதங்காணபீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-தரு-தர்பார் ரூபகம்

பல்லவி.


எதோகாட்டடா வந்தபன்றி எதோகாட்டடா

அநுபல்லவி.

எதோநீசொன்ன வேனமதுவேடா
யிப்போதேவாட்டுவேன் தப்பாமலேவாடா எதோ

சரணங்கள்,

தூலமாபெரிதுதான் வுனக்கு
தோன்றினதுயிதுதான்
காலகெதியல்லோ காட்டினில்வந்து
கண்டபேயத்தை கொண்டிடத்தந்ததும் எதோ



கோரரூப மாய்-சேனைபின்பேரில
குரூரகோபமாய்
திரமுள்ளபடை திகைத்துவாடிட
தேசமாடுக்கிய தேவனோடிட (ஏதோ)
தனுசுங் தரவினேன்-மிகோர சரங்
தனையுந்தூவினேன்
அனுவனுவாக வதைத்தரைத்திட்டேன்
அப்பாடிப்புரத்தை யண்டாதுதைத்திட்டேன்
அதோபோச்சுதடா பன்றியோடி.

அரிசசந்திரன்-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யகோரமாய்ரூபத்தோடே
செப்பவேசத்யமின்றி சிறியபன்றிதன்னை
சப்பலோதாக்கியப்பால் சலக்ஷமிட்டோட்டசெய்தேன்
இப்படைதனையழைத்தே யென்பின்னேசேர்வாரும்.

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி அகோரமான பன்றியென் அம்படிக்குத் தாளாமலேயோடிவிட்டது நமதுசேனைகளை பூந்தோலைக்கழைத்துவரு வயப்பாமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் மகாராசனே,

மந்திரி விருத்தம்.

அரசரேநீர்தானிட்ட வாக்கினைப்படியேயநானும்
அரசரேசேனைதன்னை யழைத்தேபூந்சோலைவந்தேன்
அரசரேயினிநடத்து மருள்தனைப்பெறகவென்றே
அரசரேயுமதுதிவ்விய வடியினைப்பணிந்தேன்போற்றி.

வசனம்.

கேளும் ராஜராஜேஸ்வரா உமது ஆக்கினைப்படி சேனைகளை பூந் சோலைக்குக் கூட்டிவந்தேன் இனிநடத்தகாரியமருள் செய்யவேணு மேமகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யடவியில்வேட்டையாடி
கப்பியமிருகக்கூட்டம் காலகிடவதைத்ததாலே
இப்பவுமேமகோரமாய பசியினைப்பதுங்கோன்றுதப்பா
ஒப்பியச்சோலைதங்கி உதயத்திநகர்செல்வோமே.

வசனம்.

கேளாய்மந்திரிவேட்டையாடிய களைப்புத்தீர இந்தயிரவிலிந்த வுன்னதமான சோலையிற் றங்கியிருந்து உதயமேயோதித்திருப் போகலா ஞ்சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்,

மகாபாக்கியஞ்-சுவாமி

பொது வசனம.

கேளுஙகள் சபையோர்களே அரிச்சந்திரமகாராசனுஞ்சந்திரமதியம்மனும பூஞ்சோலையருகில் நித்திரை செய்யுமபோது அரிச்சந்திரமகாராசன் கினவுகண்டெழுந்து தன்தேவிக்குச சொலலுகிறவிதயகாண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அன்னமேகுயிலேயென்ன வகாதயோகாலங்காணேன்
அன்னமேநித்திரைதவனில் யானகண்ட கனவினலே
அன்னமேயேதுவாமே வழிகிலேன் றயரமீறி
அன்னமேநோகலானேன் அரனடிகதிநமககே.

வசனம்.

கேளாய்பெண்ணே சநதிரவதி நான் நிததிரையிற்கண்ட கினவினல்மெத்தமனம் வருந்துகின்ற தென்னநேரிடுமோ தெரியாது யேது கருமநமக்குத்துணே பரமசிவந்தான் யென்மாதே,

சந்திரவதி-விருத்தம்.

நேசரேயெனதுபிராண நாதரே துயிலிற்கண்ட
நேசரேகனவின்சேதி விசழ்த்துவீரெனககுத்தோற்ற
நேசரேயெதுவந்தாலும் நிலேபதுதவறப்போமோ
நேசரேவந்தாற்துன்பம் நிற்குமோர்வழியிற்றனே.

வசனம்,

கேளுமென் பிராணநாதா நீர்கண்டகனவின் சங்கதியெனக்குச் சொல்ல வேண்டியது வருமவிதிவழிதங்குமோ மகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆனல்சொல்லுகிறேன் கேளாய்பெண்ணே.

அரிச்சந்திரன்-அகவல்,

அன்னமேகேளாய் அறைகுவேநானும
என்னருந்தந்தையி னெழிலுறுதிரேசம்
சொர்ககமடைந்தபின் றேரைபரைவரை
மிககவேநானு மேவியேமணர்ந்தேதன்
ஐவரிலொருத்தியை யந்தணர்ககீந்தேன்
னெய்யமற்றொருவனும நோக்கியேசென்றனள்
மற்றொருநாரியோ மலரொளியிழந்தே
எற்றமேலார்திசைதான் போகிருள்கண்டாய்
ஒருத்தியாகாத் துணைவுடன்மற்றதும
வெறுத்துமேசென்றனள் மெல்லியற்கரசே
கடைப்படுமாதுமே கைதனைநற்றியே
விடைவிடாதிருந்தன ளென்னமோதெரியேன்

சந்திரமதி-விருத்தம்,

பன்னரே நீர்தான்கண்ட மகுத்துவக்கனவின் சங்கை
மன்னரே யானோமோது மறிந்திடவகையைக்காணேன்
மன்னரே எதுவந்தாலும் மங்கையோர்பாகன்காப்பான்
மன்னரேமதியுயர்ந்த மந்திரிக்குரைசெய்வீரே,

வசனம,

கேளுமென் பிராணநாதா நீர்கண்ட கினவின் சங்கை நான் பெண்பாற்றெரிந்து சொல்லக்கூடுமோ வருவதெல்லாமவரடமம வியேகத்திலுயர்ந்த மந்திரியை யழைத்துச்சொல்ல வேண்டுகிறேன்சுவாமி

அரிச்சந்திரன் வசனம

அப்பாகட்டியனே நமது புத்தியிலுயர்ந்த சத்தியகீர்த்தியை சீக்கிரமழைத்துக்கொண்டு வருவாயப்பா,

கட்டியன் வசனம.

இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன் சுவாமி

கட்டியன் வசனம,

சுவாமி மகாராஜருமமை அழைத்துக்கொண்டு வரச்சொன்னரையா,

மந்திரி வசனம்,

அப்படியே வருகிறேனப்பா கட்டியனே,

மந்திரி வசனம்,

ஆண்டவனே யென்னை வரவழைத்த சங்கதி தெரியச்சொல்ல வேணுமமகாராஜனே,

அரிச்சந்திரன்-விருத்தம்,

என்னுயிர்க்குயிரதான வின்பனே சத்தியகீர்த்தி
முன்செய்தபழியாலிங்கு முற்றநானித்திரைசெய்ய
பன்னுதற்கரியதான பலன்தராக்கனவுகண்டேன்
அன்னமுங்கேட்டயர்ந்தா ளறைகுவேன் கேட்டிடாயே

வசனம,

அப்பாமந்திரி நானிங்கே நித்திரை செய்யும்போது காணப்போகாத கனவுகண்டேன் அதைச்சொல்லுகிறேனறிந்து பலனைத்தெரியச்சொல்லுமையப்பா.

மந்திரி வசனம்,

அப்படியே சொல்லவேணுமெங்கிறேனென்றண்டவனே,

அரிச்சந்திரன்-கண்ணிகள்-பியாகடை சாப்பு,

என்னசொல்லுவேனம்மா என்னசொல்லுவேனையா
என்னசொல்வேனன்றான் மந்திரி-மந்திரி
வன்னமிச்சோலைதனில் மாதுடனானுநித்திரை
வருத்திட்டேன்கேளையப்பா மந்திரி-மந்திரி

என்தந்தைசொர்க்கமேவி யிருந்தவாறதுபோல —
விங்கென்முன் றோற்றக்கண்டேனே — மந்திரி-மந்திரி
கன்மத்த லிவ்வுலகில் கன்னிபரைவரைநான்
கலியாணஞ்செய்பக்கண்டேன் — மந்திரி-மந்திரி
ஐவரிலொருத்தியை யாதுலர் நீங்குபின்
அடுத்தொருத்தியும போனாள் — மந்திரி-மந்திரி
கையிலுற்றமூவரில் கண்கெட்டவொருமாது
காட்டினிடமோடினாள் — மந்திரி-மந்திரி
இருந்தவரிலொருமாள் ளினிபபொசிப்பைவிட்டே
யேக்கிப்பிரியக்கண்டேன் — மந்திரி-மந்திரி
பெருமையொருமாது பிணங்கியென்னுடனேனும்
பிரயா திருக்கண்டேன் — மந்திரி-மந்திரி
திக்கென்றெழுந்திருந்தே திகைதப்பிமனம்வாடி
தேகிக்குரைத்தேனப்பா — மந்திரி-மந்திரி
பக்குவமறிந்திருக்க பகரும் மந்திரிக்கென்றே
பன்னவுரைத்தேனப்பா — மந்திரி-மந்திரி

அரிச்சந்திரன் வசனம்,

அப்பாசத்தியகீர்த்தி இந்த இரவிலிப்படிக்கொத்த சொர்ப்பனங்கண்டேன், இதின் பலாபலத்தை எனக்குத்தெரிய தீவிரத்தில்சொல்வாயப்பா மந்திரி,

மந்திரி கண்ணிகள் முகாரி-சாப்பு,

ஆமன்னவா ஈதென்னகாலம் அமைந்ததேமன்னவா
பாவியாம்பிரமன் இவ்விதியிட பகைவைத்தனோ மன்னவா
தேவேயாதலன் கௌசிகனெனத் தெரிந்துகொள்வீர்மன்னவா
அளித்தமாதுமே நின்றாடென அறிந்திடுவீர்மன்னவா
கூடச்சென்றவளோ நின்னதியென குறிப்பறிவீர்மன்னவா
அன்னமவெறுத்தவளோ நிலமாதுதான் அகன்றிடுவாள்மன்னவா
கண்ணிழந்தவள்தானே நினபாலனும கைவிடுவான்மன்னவா
கூடவிருந்தவளோ சத்தியமென கொண்டிடுவீர்மன்னவா
ஆளாற்போனவை யெலாம பெருங்கீர்த்தி அடைந்திடுவீர்மன்னவா

சந்திரவதி-கண்ணிகள்-சஹானா-ஆதி

இந்த கெதியுமக்கே யெய்திடிலையோயோ
யென்னநான் செய்குவேனோ — சதியே-ஓகோ-பதியே
மந்திரிகனவாதின் வாறுகவிடுவித்த
வண்மைக்கெல்வி தஞ்செய்யேன் — விதியே-சிவ-கெதியே
நாடுநகரிழந்து நாயகன் தனியாகி
நன்றெனவே தவிப்பீரோ — நாதனே-பதி நீதனே
பாடுபடவேயும்மைப் பரமன்விடநட்டில்
படலர்க்குதைக்குவிப்பீரோ — பாதனே-மயிலே-போதனே

அடியானும் பிரிவேனோ ஈருமகன் றனிப்பானோ
அயனவிதியேதுவாமோ ஐயனே வாய்மெய்யனே
படிமிசை நானென்ன பழிபாவஞ்செய்தனோ
பத்தாவைத் தனிப்பேனோ பய்யவே மனம் நொய்யவே
நாட்டுமங்கையர்போலே நான்வாழுங்காலத்தில்
நாதாவுனைப்பிரிய நாடுமோ மனங்கூடுமோ
காட்டிலே கிடினுங் கருமமேயெய்திடினுங்
கைவிடலேனுரிய காடுமேமதி தேடுமே
பெருமைசிறுமையும் பெண்ணுறுஞ்சகானதாச்
பிரியாதிருப்பதேகெம பிரரே கண்ணவீரரே
வறுமைவந்தெய்தினும் வணக்கிடிற்கணவரை
வாய்க்கும்பரமெதிசம மாரரே யதிசூரரே

அரிச்சந்திரன் வசனம்,

சுகத்தைவிடதுக்கத்தை நலமயெண்ணி நடக்கவேண்டும் என்னகாலம நேரிட்டாலும உன்னையுமபாலனையும் சத்தியக்கீர்த்தியையும்மறக்கேன் நீ சந்தோஷமாய் அயோத்திக்கு வருவாயடி என் பிராணநாயகி,

சத்தியக்கீர்த்தி விருத்தம்,

பாதகனாலேயிந்தக் கலகமுந்துன்பமவந்தே
பாதகந்தான்றிப்பின்னும் பனிபோலநீங்கியார்க்குஞ்
சாதகமாவதற்கே சத்தியமில்லாக்கீர்த்தி
போதவேபெறுவீர்விண்ணோர் புரழ்ந்திடப்பதியாள்வீரே

வசனம்,

கேளும் அண்ணலே விஸ்மித்திரனு லெப்போர்க்கொத்த துன்பத்தையெல்லா மனுபவித்து பின்பு இந்த லோகத்தின்கண் யாவருக்குங்கிட்டாத பெருகீர்த்தியுமடைந்து திவ்ய பதவியிற் சேருவீர்மகாராஜனே,

சத்தியகீர்த்தி-கண்ணிகள்-ஏதுகுலகாம்போதி-ஆதி,

இந்தவிதிகாணலோ அடவியில்வந்திருந்தோம்
யென்னகெதிவருமோ ஓசிவமே சிவமே
சந்ததமகிழ்வதாய்த் தானிருந்தே ரைத்துயர்
சாரமதிவருமோ ஓசிவமேசிவமே
மன்னதியன்னர்சூழ மகுடராயவீற்றிருந்தோர்
வருந்தத்தகுமோ நீதி ஓசிவமேசிவமே
எவ்வுலிங்காவலேது இறைவன்வருந்தவும்
இருப்பேனோயுனேயாதி ஓசிவமேசிவமே
என்றுமமெய்வசனிக்க வேந்தனுந்துயருற
எளியேன்காணவுமாமே ஓசிவமேசிவமே

வென்றுவெற்றிபெருவேன் வேற்றரசனெதிர்த்தால்
வினைத்தொடர்க்கேதுவாமோ ஓசிவமேசிவமே
தருமதேவதைமெத்த தாஷ்டீகரமாகவே
தானெனக்கவைத்துமெய்யா ஓசிவமேசிவமே
வறுமையினிமேலென்ன வாய்க்குமே வேந்தனுக்கு
வஞ்சகனாலே ஐயா ஓசிவமேசிவமே
ஆதிசிவமேநீதான் அருள்புரிந்துமேயெம்மை
யன்புடன்காக்கவேணும் ஓசிவமேசிவமே
சோதித்தாலுங்கிருபை ஜோதிமனமகிழ்ந்தே
சுபப்பெறமனமபூணும் ஓசிவமேசிவமே

அரிச்சந்திரன்-விருத்தம்,

வரும்விதிவந்தேதீரும் வழிதனிற்றங்குமோதான்
தருமமேகாக்குமமை தனையனை துயரபடவேண்டாம்
கருக்கலும்நீக்கிப்போச்சு கடிதினாமநாடுசேர
விருப்பமாய்சேனையெல்லாம் வெளிப்படசெய்வாய்மந்திரி

வசனம்,

அப்பா மந்திரி வருவதெல்லா மனுபவிக்க வேண்டியல்லோ யிது தவுடலெடுத்திருக்கின்றோம் சந்தேகமகெ ளளாதே பொழுதுமவிடிந்ததானாலயோத்திக்குப் போகவேண்டி சேனைகளை சித்தப்படுத்துவாயப்பா,

மந்திரி வசனம்,

அப்படியே சித்தப்படுத்துகிறேன் சுவாமி

மந்திரி வசனம்,

ஆண்டவனேயுமது ஆக்கினைப்படி சேனையெல்லா மொன்றாய்ச் சேர்த்தேன் மகாராஜனே

அரிச்சந்திரன் விருத்தம்,

அப்பனேசத்தியக்கீர்த்தி அருமையாக்குடிகள்வந்து
செப்பவேவேட்டையாடி சிதைத்ததலவிலகைநாமே
இப்பவேநாடடிற்கேகு மெண்ணமும்வதைத்தவாறும்
ஒப்பவேயவர்கள்கேழ்க்க வொலிப்பிப்பாய்பேரிதானே

வசனம்,

அப்பாமந்திரி மிருகங்களால் வருந்திய குடிகள் கேட்டு சந்தோஷிக்கும்படிக்கிஜெயபேரிகைஅடிப்பிப்பாய் சத்தியகீர்த்தி

மந்திரி வசனம்,

அப்படியே யடிப்பிக்கிறேன் சுவாமி

அரிச்சந்திரன் விருத்தம்,

மந்திரிநாடுவந்தோம் மனக்குறைபகன்றோமப்பா
மந்திரிசேனையெல்லா மவரவர்விடுதிகேக்க

மந்திரிவிடைகீயிய்ந்ததே மகாபலவேடருக்கே
மந்திரிபொன்பட்டாண்ட மளிப்பாயப்பா

வசனம்.

கேளாயப்பாசத்தியகீர்த்திகாட்டுமிருகங்களை வென்றநாம்நாடுவந்து சேர்ந்தோம் சேனைகளை யவாளவாள் விடுதிபோகசசெய்து தேர்களுக்கு நல்லவெகுமதிகொடுத்தனுப்புவாயப்பா மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் மகாராசனே

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரன்விட்ட பன்றியானது அரிச்சந்திரமகாராசன் அம்பினு லடிப்பட்டு நொந்து கவுசிகனிடம முறையிடவருகிற விதங்காண்பீர் கனவான்களே.

பன்றி விருத்தம்.

அறமுனியேநீர்விடுத்தபடி யேகியருட்பலத்தா
லடவிதன்னில்
உறமானே பரிசேனைகளைக்கோட்டாலிடித்திடேட்
னுதிரமெங்குப்
பரவியகுவாரியைபபோற் சாய்ந்து விழிபார்த்துநான்
பதைக்கக்கொன்றேன்
புரமெரித்தபரமனைப்பிபா லருச்சந்திரனென்னையெய்தான்
புனிதாகப்பிர்

வசனம்.

முனிநாதா உமது ஆக்கினைப்படி "அரிச்சந்திரன சேனையின் பேரில்விழுந்தமடித்தேனதற்கு அரசன்காலருத்திரனைப்போல் வந்தென்னை வருந்தித்துறத்தினன்காப்பீர்சுவாமி.

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்படியேயுன்னை வருந்தச்செய்த பாதகன் .கெருவத்தை யொடுக்கிறேன் நீசுகமாயிருபபாய் பன்றியே.

வெட்டஞ் செய்காண்டம்
முற்றுப் பெற்றது.

உ

முருகன் துணை.

சூழ்விலை காண்டம்.

பொது விருத்தம்.

எம்முறையிடக்கேட்டு முனிதான் மெத்த
யெறிசுடரை நரசிமுனி தனிலெழுப்பி
வாபனனுமபூசுரரும் முனிவர்யோகர்
வாடிமனம்நிலைகுலைந்து மயங்கிவீழ
தாமதம்பேரவிருநீச்சத்தையன்மாரை
தற்செயலாயுற்புத்துத் தாவலோடு
காமனுட்பெண்களென வரிச்சந்தரன்பாற்
களிப்புடனேயனுப்புவிதங் காணுவீரே

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே பன்றிபட்டதுன்பங்கண்டு விஸ்வாமித்திரன்கோபங்கொண்டுநாசிசுவாசத்திலிருந்து இரண்டுபுலைச்சியர்களையுண்டுபண்ணியரிச்சந்திரனிட மேவுசிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

பாணப்பெண் விருத்தம்.

திங்களுங்கங்கைபூண்டுந திரிபுரமெரித்தோன் றன்னை
பொங்கமாய்துதிக்கும் நாறாமணிதவேமின்றுள்போற்றி
எங்களையிட்சணத்தி லெண்ணியேபடைத்தேனே
புங்கவாதெரியநன்மூய்ப் புகன்றிற்புரிகுவாயே.

வசனம்.

சுவாமியெங்களைப்படைத்த காரியந்தெரியச்சொல்லவேணும் முனிநாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மயலினைக்கூட்டும் பெண்களே நீங்கள்மலைகளுங்
கரையசங்கிதம்
ஜெயம்பெறப்படியயோத்திபன்மனதை
சீக்கிரனுநிந்திடச்செய்தும்
பயமதுகடிந்தேமோகம் நாட்டிப்பாவைகாள்
சுரதமும் நடாத்தத்
தயவுடனழை பிர்சடுத்திர்குடையைத்
தனமாழ்வாங்கியே வருவீர்

வசனம்.

கேளுங்கள் பெண்களே நீங்களரிச்சந்திரனைக்கண்டு அவன் மோபிக்குமபடிக்கி நாட்டியஞ்செய்து பாடியுங்களைச்சேரசெய்து சுகிப்பீர்கள் தடைசொல்வானுகில் பூச்சக்கரக்குடையை வெகுமதியாகக்கொடுக்கச்சொல்லி வாங்கிவாருங்கள் பாணப்பெண்களே.

பாணப்பெண் வசனம்.

சுவாமிநீர்சொன்னபடியேசென்று காரியத்தை முடித்துக்கொண்டுசீக்கிரத்தில்வருகிறோம் சிலவுதாரும்முனிநாதா சரணம்சரணம்

விஸ்வாமித்திரர் வசனம்.

அப்படியே போய்வாருங்கள் பெண்களே

கட்டியன் விருத்தம்.

புவனமெலாமொருகுடைக்கீழ் ஆளும்வீர்
புண்ணியநெறிதவறாதோர் அழகில்மாரர்
நவநிதியும்படைத்தகுண சீலர்சூரர்
நாற்றிசைவாழ் பிரஜைகளையுங்காக்குத்தாரா
தவமபுரியுமுனிவருக்கே யினிர்காரர்
தயைபொருமைநீதிதனி யுணர்ந்ததீரர்
பவமறுகாநலையுடையோர் பகைவற்காரர்
பரிதிகுலவரிச்சந்திரர் கொலுவாராரே

வசனம்.

சேளுங்கள் சபையோர்களே இராஜாதி ராஜனுன அரிச்சந்திரமகாராஜன கொலுவிற்குவருகிருர் கனவான்களே

அரிச்சந்திரன் தரு இ-ம் அடாணு தாளம் ஆதி

பல்லவி

மன்னர்மன்னருக்கெல்லாம் மன்னரிச்சந்திர
மஹாராஜனிதோவந்தான் கொலுவுருக்க
மகுடவர்த்தனன்வந்தான்

அநுபல்லவி.

அன்னநடைவஞ்சிய நாடச்சவரிபோட
அந்தணர்சித்தர்யோக ராசியதனைப்பாட
நன்னகாமாந்தர்களும் நாடிப்பணிந்திட
நாற்றிசையிலுங்கீர்த்தி நயமுடனணிந்திட
நல்லுளந்தங்கியே நவிலொணுமகிமையாய்
அல்லும்பகலும்சிவ னடிதுதிநேமியாய் மன்

சரணங்கள்.

நெத்திபட்டமிலங்க நிகழுமுடியுந் துன்ன
நேராய்முத்துவடமும் நீண்டவளைய மின்ன
சந்தியமொடிதுலங்கச் சாமரைபேரி பன்ன
சாங்ரேகரிவனேயெனச் சகலருந்துதி என்ன

நித்தியகருமநெறிநிலே பிசகாதே நேயன்
நிகருண்டெனவெங்கும் நினேக்கபோகதே தூயன்
பத்தினிமாதுபாகம் பண்பிரிந்திடுங் காயன்
பலகலேநீமத்தி பாரில்சத்திய வாயன்
பம்பையின்னொளி பம்பம்பம்மென
ஜம்பெயின் ஜாலர் ஜம்ஜம்ஜம்மென
கொம்புகள்தொனி கும்கும்கும்மென
தும்புருஇசை தொம்தொம்தொம்மென

ஜொலிக்க பகைவரை கெலிக்க தவறிலே
..லிக்க சத்தியம் ஒலிக்க புகழுடன்
சொல்லொணுத கீர்த்தி சூழ்ந்திட வந்தவன்
மெல்லொணுத சித்தி மேன்மைகன்தந்தவள் மன்

அரிச்சந்திர வசன்ம்,

அப்பா சத்தியகீர்த்தி நமது நாட்டின் ஆலயங்களிவ் கிரமப் பூஜைகள் நடந்துக்கொண்டு மாதத்தில் மும்மாரி பெய்துக்கொண் டும் வருகின்றதா.

சத்தியகீர்த்தி வசனம்.

மகாராஜனே யாதொருகுறையின்றி நடத்துக்கொண்டு வருகி ன்றது மகாராஜனே.

பொது விருத்தம்.

மாதர்கள்கண்டுநாண மானுக்கள்மையல்பூண
ஆதவர்மனமுமநாட அமரருமயங்கித்தேட
தி..றமுகவதின்காந்தி திகேகம்தெங்குங்கப்ப
பாதகன்விட்டபாணப் பறத்தையர்வருகின்ருரே


வசனம்.

பெருேங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரனேவிய பாணப் பெண்கள அரிச்சந்திரமகாராசனிடம் வருகிற விதங்காண் பீர்கள் கனவான்களே.

பாணப்பெண் தரு-யாக் ஆதி.

த..திரமாய் தளிர்தபாணமாதர்வந்தார்

கந்தகளபும் பூசி
கன்னியர்தம்மை யேசி
சா.துர்யமாகப் பேசி
சொ..குசாய்கைகளே வீசி தங்
கோங்கைகுலுங்க ஆட்டி
குறிப்பாய்பரதங் காட்டி
செங்கைவளேயர் பூட்டி
சிகிசகொண்டையு நாட்டி



அண்டத்துளோர்க ணோவ
அணைவரொளிகண் மேன
கொண்டைக்குயிலுங் கூவ
கோறிக்சபையைத் தாவ
வானத்தமரர் வாடி
வருந்திமனுக ணாடி
கீனவொலிகள் பாடி
கிட்த்தத்திக்கோமென் ராடி

பாணப்பெண் வசனம்,

பராக்கு பராக்கு வீரகட்டியனே,

கட்டியன் வசனம்,

பெண்களே நீங்கள்யார் எங்கிருப்பவர்கள் இங்குவந்த காரியம் தெரியச்சொன்னல் ராசாசமுகத்தில் தெரிவிக்கின்றேன்பெண்களே

பாணப்பேண் விருத்தம்.

இருப்பது இமயச்சார விறையவர்தன் புகழைக்கேட்டு
விருப்பமாய் வந்தோம் நாங்கள் விஞேதமீ நட்னமாதர்
வெறுப்பது கொண்டிடாமல் வேநதன்பாலுரைத்தேயெங்கள்
கருத்ததை முடிக்கச்செய்வீர் கழலடி போற்றியையா

வசனம்.

ஈரங்களிருப்பது இமோத்கிரி பருவதங் சாரல்ஞங்க நாட்டியமாதர்கள் ராஜனுக்குத் தெரிவித்தெங்கள் கோறிக்கை யீடேறச் செய்யும் கட்டியரே,

கட்டியன் வசனம்.

அப்படியே தெரிவிக்கின்றேன் பெண்களே
ஆண்டவனே யிமயச்சாரலி லிருந்திரண்டு நாட்டியமாதர்கள் வந்திருர்கிறுர்க ளுத்திரவாகில் வரச்செய்கிறேன் மகாராஜனே,

அரிச்சந்திரன் வசனம்.

வரச்சொல்லும்பிள்ளாய் கட்டியனே

கட்டியன் வசனம்,

அரசனுத்திரவாச்சுது கொலுமுனபோவீர்பெண்களே

பாணப்பெண் கவி

தீரா பராக்கு மாரா பராக்கு
சூரா பராக்கு துரையே பராக்கு
நேரா பராக்கு வீரா பராக்கு
காராய் பராக்கு கலலே பராக்கு

வசனம்,

இராஜாதி ராஜ பரமேஸ்வரா பராக்கு பராக்கு

அரிச்சந்திரன் விருத்தம்,

மேகத்தைபழிக்குங்கூந்தல் மேவியபெண்களாரோ
நாகமங்கையரோதேவ நாட்டில்வாழ்நங்கைமாரோ
மோகமங்கையரோமாரன் மொய்த்திடுங்கண்ணிமாரோ
வேகமேயிங்குவந்த வினையதையுரைசெய்வீரே

வசனம்,

கேளும்பெண்களே நீங்கள்யார்தேவலோகத்துப்பெண்களோ நாகக்கன்னிகளோ ரதிமாதர்களோ விங்குவந்தகாரியந்தெரியச்சொல்லுங்கள் பெண்களே

பாணப்பெண் வசனம்.

மகாராஜனே நாங்களிருப்பது இமயமலைச்சாரல் தொழுல்நடனம் புரிவதுகுலம் நீச்சம்பெண்கள் உதுகீர்த்தியைக்கேட்டுநடித்து வெகுமதிபெறவந்தோம் வேந்தனே

அரிச்சந்திரன் வசனம்.

நல்லதுநீங்கள் கற்றபதத்தையும் நாட்டியத்தையும் பார்ப்போம்நடத்துவீர்கள் பெண்ணே.

பாணப்பெண் வசனம்,

மகாபாக்கியம் மகாபாக்கியமப்படியே பாடிநடக்கிறோம்மகாராஜனே,

பாணப்பெண் ஜாவளிசெஞ்சுருட்டி ரூபகம்

சாமியுன்முகக்காந்தி சாசமயத்தைக்குதேஓ
சாமியாகிவாடவிதி கண்டேனெனைக்காருமே சாமி
தனியரம்வந்துவேண்டுமாதை தடுப்பதுமேதர்ம்மே
இனிவாயெனைச்சேராவிடில் ஏதேத்தினிதாளேனே சாமி
எங்களைப்போல்பெண்களினே யிறைவனேகண்டதுண்டோ
கொங்கைதொட்டுப்பார்த்தாலிந்தக் குமரிசுங்காஹுமே சாமி
சரசமிலாநாரியுடன் சையோகம் வீணலவோ
கரத்தாலெனைப்பணைத்தால்வெல்ல கட்டிசந்தோஷமே சாமி
கோபக்குறிநீக்கியெனைக் கொஞ்சிமுத்தமிடுமே
பாபமாக்கும்நீர்தடுக்கில் பழியேதுமில்லைதேவனே சாமி

அரிச்சந்திரன் வசனம்.

வெகுநேர்த்தியாயிருக்கிறது இன்னமொருபதம்பாடிநடப்பீர்கள்பெண்களே.

பாணப்பெண் வசனம,

மகாபாக்கியமப்படியே பாடிநடக்கின்றோம் ராஜபரமேஸ்வரா

பாணப்பெண்ஜாவளி வசந்தா ஆதி.

வாடினேனிராமையனே

தேடியிங்குற்றனம் திகழுடனேங்களைத்
தீண்டாதிருக்கப்போமோ தேவரவிதோ வாடி
பேடியோகீரன்றி பெண்களிலாணோ
பிடித்தென்பெருமூலை பேணவிதோ வாடி
ஆண்மையிருந்திடில் அணைந்திடுமெந்தனை
ஆலியாகிலெனக்கு ஆரையுமிதோ வாடி

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாயிந்தமாதர்கள் புரிந்தே நாட்டியந்
தந்தனர்செவிக்கேயின்பந் தனையனேயிவர்களுக்கே
விந்தைமரம்பட்டுஆடை வெள்ளிபொன்பணியுமீந்து
சுந்தராசத்தியகீர்த்தி சுருக்கெனவிடையீவாயே

வசனம்,

கேளாயப்பா மந்திரி இந்தப்பெண்கள் பாடியபதங்கள்செவிகளுக்கின்பந் தந்தனல்ல ஆடையாபரணங்கள் கொடுத்தனுப்புவாய்சத்தியகீர்த்தி.

பாணப்பெண் விருத்தம்,

வேந்தனேகேட்பீர்கள் வேண்டிலோம்பொன்பட்டாடை
சாந்தனேயெங்களுக்கு சமபத்துமெத்தவுண்டு
தீந்திடயெங்களரசை மேதவம்ச்சக்காமென்னும்
காந்தியாங்குடையளித்தால் களித்துடங்கொள்ளுவோமே

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா நாங்கள்பொன்பொருள் பட்டுகளை வேண்டிலோம் எங்களுக்கு மெத்தவுண்டு உமதுபூச்சக்கரக் குடையைக்கொடுத்தால் சந்தோஷமடைவோம் மகாராஜனே.

சத்தியகீர்த்தி வருத்தம்.

படபட்டப்பின்றிச்சொன்ன பரவைகாறுரைக்கக்கேளீர்
நடனமும்புரி தராஜன் நற்பணிபரிசுவிந்தால்
விடமெனத்தடுத்திக்கிட்டா விருதெனுங்குடையைகேட்டீர்
திடமுளபெருமைக்கேட்டாற் றிண்புயரளிப்பார்த்தானே

வசனம்.

கேளும்பெண்களே கிட்டும்பொருளைக்கேட்டால்கிடைக்குமேயன்றி கிட்டாத குடையைக்கேட்டால் அகப்படாதென் றறிவீர்கள்மாதர்களே.

பாணப்பெண் விருத்தம்,

தேடியேவந்துநாட்டியாதேவனே புரிந்ததாமெத்தப்
பாடியோர்குடையைக்கேட்டோம் பார்வேந்தேவெங்கள்தன்
கூடியேசுகித்தாய் மெத்தக்குணமதாங்குடையும்வேண்டாம்
ஓடியேசெல்வோம் நாங்கள் உற்றதோர்பதிக்குத்தானே

வசனம்.

கேளும் மகாராஜனே நாங்கள்வந்து பாடியாடி சந்தோஷப்படுத்தி வெகுமதியாக ஒரு சிறியகுடையைக்கேட்டோம் தடுத்தீர் எங்கள் மனஞ்சந்தோஷப்படும்படி எங்களைச்சேர்ந்தாலதுவேபோதும் மகாராஜனே.

சத்தியகீர்த்திவிருத்தம்.

வழுத்தியவார்த்தைகேட்ட வலுமைசேர்கட்டியக்காரா
உழுத்திவாகரத்தைபற்றி யிவ்விடம்நின்றிடாமல்
கழுத்தினைப்பிடித்துத்தள்ளி கரேமாய்வார்த்தைசொன்ன
கொழுந்தவர்தம்மைநீயே கொப்பெனநீக்குவாயே.

வசனம்.

அடா கட்டியக்காரா அடா தகாதவார்த்தையாடிய விந்தப்பெண்களைகழுத்தைப்பிடித்து வெட்டி நமது நாட்டைவிட்டப்புறம்துரத்திவிடுவாய் கட்டியனே.

கட்டியன் வசனம்.

நடவுங்களடி துன்மார்க்கிகளே கழுத்தைபிடித்திதோ தள்ளினேன் ஓடிப்பிழைத்துப் போங்கள் இல்லாவிட்டால் கொடியதெண்டனைக் காளாவீர்களடி நீச்சப்பெண்களே.

பாணப்பெண் இ-ம்-தாளம்-ஆதி.

அடிவாடி போகலா மினிநாமே.

நாடிநாடியே நயந்துபேசிப்
பாடினாலும் பாரன்தோசி
கூடிலேது குணமாகுதடி. வாடி

கோடிகோடியாய் கும்பிட்டும்
வாடிபாதம் வணங்கித்தொட்டும்
மோடியாக முடிந்தானடி. வாடி

மெத்தஆடி மெலிந்தோமென்று
கத்தவிதோ கடிந்தானின்று
மத்தன்சுத்த மட்டியாமடி. வாடி

பாணப்பெண் காப்பி-ஆதி.

அடிமானேஎன்ன அவதிப்பட்டோமடி
அயோத்திபனடித்திட லானதுமிப்படி அடி

முடிமிசையதியணி மூர்த்தியின்பாதத்தை
முற்றும்மதமித்திர முனிசொன்னபோதத்தை
படிதனிலவர்களும் பணியநடித்தும்மை
பலவாரிகழ்ந்துபேசி பதரவடிக்கலானான் அடி

மண்ணினுள்வேந்தரும் மமரர்முனிவர்களும்
மனமதருகிம்மை மருவுவரெவர்களும்
கண்ணிமைதன்னிலுங் கனிவுகாட்டாமலே
கடிந்துவவதித்தே கட்டியன்தள்ளிட அடி
பேடிப்பிறப்பாயினும் பேதையேயென்மொழியாள
பிரியமீறுவான்மந்ரை பிசைந்திடுவான்கையால்
மோடியாயிருந்தனன் மொழியொணுச்சத்யவான்
முனிவற்கிதையுரைத்து முறையிடுவோமடி அடி

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாகப் பாணப்பெண்களடிப்பட்டு விஸ்வாமித்திரமுனியிடம் முறையிடுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

பாணப்பெண் விருத்தம்.

நீருரைத்தபடிசென்றே யரிச்சந்திரன்பா
னேர்மையுடனடித்திட்டே மகிழ்வுகொண்டே
தேருபட்டு முத்துவடம்பொன்கொடுக்கத்
தீரனுமேதானுரைக்கக் குடையைக்கேட்டோம்
பேருபுனமந்திரிதான் றகாதுவென்றான்
பேசினேமரசனையே சேரச்சொன்னேங்
கூறுகெட்டவார்த்தையென்றே கோபங்கொண்டான்
கொப்பெனக் கட்டியன்றள்ளிக்குத்தினனே.

வசனம்.

கேளும் முனிநாதா அரிச்சந்திரன்முன் நாட்டியஞ்செய்தோம் சந்தோஷப்பட்டு வெகுமதி கொடுக்கச்சொன்னன் றடுத்துக்குடையைகேட்டோம் மந்திரிதடுத்தான் அரசனைசேரவாவென்றேங் கட்டியன்பிடித்து அடித்துத்தள்ளினன் நாங்கள்தப்பி வுயிர்பிழைத்தோடிவந்தோம் மகாரிஷியே.

விஸ்வாமித்திரன் தரு-அட்டாண-ஆதி.

பல்லவி.

இப்படியடிப்பித்தானு-வென்பெண்களேயுங்களை
எப்படியடிப்பித்தானே

அநுபல்லவி.

கைப்பிடித்தேயுங்கள் காலடிபணியச்செய்வேன்
கள்ளனவனுடைய வுள்ளங்கலங்கக்கொய்வேன். இப்

சரணங்கள்.

கொண்டகெருவமெல்லாம்போக்கின்றேன்-நீங்கள்
கோரியபடிநடக்கப்பார்க்கின்றேன்

கண்டவுடனுங்களைக் கைபிடித்திட்டலாச்சு
கருதேனென்றுலவன்மேற் காட்டுவேன்வெகுயேச்சு இப்

மாதைத்தொடவேயுண்டோநீதியே-அவன்
வமிசத்திற்கெல்லாநானே ஆதியே

வேதைசெய்தவன்காம வெட்டவைத்திடுநேரீங்கள்
விடுத்துயரமென்பின் விரைந்துபோவோம்வாருங்கள் இப்

அரசன்றனக்கிதுவுந் தகுமோ-யாசித்தோரை
யடித்துத்துறத்த நியாயம்புகுமோ

சராசரவென்றேவாங்கள் சாடுவேனவனை
தாழ்ந்தாலுங்களைமணந் தான்பற்றிடச்செய்வேனினை இப்

விஸ்வாமித்திரன் வசனம்.

அடா கட்டியக்காரா அந்தவரிச்சந்திரனுக்கு நான்வந்தசேதியைத்தெரிவியும் பிள்ளாய்.

அரிச்சந்திரன் வசனம்.

ஏதுகாரியஞ் சொல்லும் பிள்ளாய் கட்டியனே.

கட்டியன்-வசனம்.

சுவாமி விஸ்வாமித்திரமுனி கொலுவிலிருந்து நன்னுண்டனீச்சடாதரை யழைத்துக்கொண்டு வெகுகோபங்கொண்டிதோவந்திருக்கிறார் ஆண்டவனே.

அரிச்சந்திரன்-வசனம்.

இதோ வந்தேனப்பா கட்டியனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

தவந்தனிலுயர்ந்தவென்றன் குருவேயுன்றாள்போற்றி
பவந்தனையொழித்ததிவ்ய பண்பனேயுன்றாள்போற்றி
இவரிருமாதரோடு முனிவராக்கோபங்கொண்டே
அவதியோடிங்குவந்து அடியனுக்குரைப்பீர்போற்றி.

வசனம்.

போற்றிபோற்றி என்னாண்டவனே தாங்களிவ்வளவுகோபங்கொண்டிருந்த நீச்சமாதரை யழைத்துக்கொண்டுவந்த காரியமதையேனுக்குந் தெரிவிப்பீர் முனிநாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

அலைகடலுலவேரிந்த வவனியையாளுமன்னர்
நிலைமையுந்தவமுநீதி நேர்மையுமன்னிற்காமேவோன்
கொலைபுரிதொழிலுங்கேட்ட குணங்களுமிரப்போர்க்கீயா
தலைமையும்புரிந்தாயன்றித் தகைமையேவதுண்டோசொல்வாய்.

வசனம்.

அடா அரிச்சந்திரா ஆ ஆ பளா பளா நன்றாயிருக்கிறது அரசர்களுக்குரிய பூததயவு பட்சாபாதம் ஈவதிரக்கம் நீதியிவைகளிலொன்று முன்னிடங்காணோன் ஆனால் கொலைபுரிவதும்கெட்டநடக்கையும் ஏற்பவர்க்கில்லை யெனுங்குணங்கள் மாத்திரங்கண்டேனிவைகளுக்கு நீதான் குருவே நுண்டோ சொல்லடா.

அரிச்சந்திரன் விருத்தம்.

இப்புவனங்களெல்லாம் யேற்றிடுமுனியேநாதா
ஒப்புமையேதுமுண்டோ வுரைக்கவுமுகக்குளானேன்
தப்புமோவெனதுஅன்பு தன்னையனேயிழிவதாகச்
செப்புவாரரியேசீருஞ் சிருடன்வெளிசெய்வீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி யுமதுவாக்குக்கு வேறுசொல்ல விவ்வுலகோராலாகுமோ வெனதுநெறி பிசகாமோ நீரென்பேரி லிப்படிக்குக் கோபிக்குங்காரணந்தெரியச்சொல்லும நாதா.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

தவஞ்செய்வோர்க்குதவமந்தத் தன்மையைநீக்கிநீதான்
பவமுறகாட்டிலேகிப் பலமிருகத்தைகொன்றாய்
நலமுளசோலைவாழும் நல்லபன்றியைவதைத்தாய்
அவமதியன்றோநீயு மடித்ததுமிவயைத்தாயே.

வசனம்.

அடா வரிச்சந்திரா தவசிகளுக்குத் துணையாயிருக்கு மிருகங்களைக்கொன்றுமெனதுசோலையில் வாழ்ந்திருந்தபன்றியை வதைத்தாய் தவிரவென்பெண்களாகிய விவர்களையுமடித்தா யிது நீதியோ சொல்லடாமன்றே.

அரிச்சந்திரன்விருத்தம்.

நீதியாமன்னர்வேட்டை நீடித்தமுறையேயாகும்
ஆதியிலுதித்தவேத மறைவதுமறிந்திலீரோ
கோதிலாமனந்தோய்மர்தர் கூரியமொழியால்மந்திரி
ஓதினுன்றள்ளச்சொல்லி யும்பனேபொறுத்துடீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி நாட்டில் பிரவேசித்த மிருகங்களை வேட்டை புரிவது வேதவிதியன்றோ விம்மாதர்களடாதவார்த்தை புரிந்தால் மந்திரி தள்ளச்செய்தான் பொறுத்துரட்சிப்பீரென் ஆண்டவனே.

விஸ்வாமித்திரன் வசனம்.

அடாசண்டாளா அச்சமின்றிப் பேசலானுயடா துரோகி.

அரிச்சந்திரன் தரு-சுருட்டிரூபகம்.

கோபஞ்செய்குவதேனையா-என்
குருவே-மருவே-திருவே-நீர். கோப

பாபந்தீர்த்தென் தந்தைக்கேசுகம்
பாலித்தேயந்தர மேவிட்டநாதா
தாபமேது அடியேனுக்கருள்
தருகவேனுஞ் சகியேன்பாதா கோப
சாமியானைக் கடந்துவொன்றும்
சாற்றசகிய நல்லநாதா
பூமியில்நான் வந்தபோதேயுன்
பொன்னடிக்கா ளானேன்தேவா கோப
பரந்துபரந்து பட்சிகளெலாம்
அடர்ந்தவிருட்ச மவையுமோநாதா
பிறந்தநாளா யுன்றன்பாதம்
பெருமையாய்க்கொண் டிருந்தேன்பாதா கோப
வனத்திலுமிந்த நாட்டிலுள்ள
வகையோருக்கிடம் வேறேநாதா
எனக்குகெதி யுன்றன்பாதம்
என்றேநம்பி யிருந்தேன்தேவா கோப
சிறியன்செய்த பிழைகடன்னை
சிந்தைபொருந்தல் பெரியோரேநாதா
அறியேனென்றும் புரியேன்வேறு
அடியேனுன்றன் சேயேபோதா கோப

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மனமதுகலங்கவுன்றன் மணிமுடியுதைத்தேன்மெத்த
சினங்கொண்டேதடுத்துச்சொன்னாற் செபித்திடநினவுக்கொ
கனமுடனானேபெற்ற கன்னிகைமாரைநீதான் [ள்வேன்
மனமுறச்செய்தவேலை மன்னிக்கலானதன்றே

வசனம்.

அடா இதோ உன்முடியை உதைத்துத்தள்ளினேன் வேறு சொன்னாற்சபிப்பேன் என்பெண்கள்பேரில் நீநடாத்திய அக்கிரமம் மன்னிக்கப்படாதென்றறிவாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அரசரின்சபையில்வந்தே அடாததோர்வார்த்தைசொல்ல
தரமதோயிவர்கள்தம்மை தான்மேவவுரைத்தல்நன்றே
பரபரப்புடனேவந்த பாவையர்தமக்கேபூரி
திரமுடனிந்துந்தட்டித் தீயன்செய்மார்க்கம்யாதோ.

அரிச்சந்திரமகாராஜன் திருமுடியை விஸ்வாமித்திரர் உதைக்கிறபாகம்.



வ-ம். கேளுஞ்சுவாமி கொடுத்த வெருமதியைத் தடுத்த ராஜ சபையில் அடாதகாரியமான சொல்லைப்பேச விவர்களுக்குத்தகு மோ முனிநாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

தானத்திலுயர்ந்தோனென்றே தான்கொண்டேன்
 மனதில்தோற்றம்
மானமும்பெருமைவேண்டில் மருவுவர
 யிவர்கள் தம்மை
ஈனமென்றிரைப்பாயாகி லென்மனம்
 படிநீ யீய்ந்தால்
மோனநான்களிப்பேனீதான் மொழிசெய்வாய்
 விரைவாய்த்தானே.

வசனம்.

நீதானங்கொடுப்பதில்தீரனென்றறிந்தேன் உனக்குப்பெருமை வேண்டி விவர்களைக் கல்யாணஞ்செய்துக்கொள்ளு இல்லாவிடில்நா ன்கோறும்வாறு கொடுப்பையோ சொல்லடா அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

எதுநீர்கேட்டிட்டாலு மீகுவேன்றடையிராது
மாதினைத்தழுவவெண்ணம் மனதினிலென்றுநாடேன்
வாதனையெதுவந்தாலும் வாங்கிடேன் மனம்பின்னுதா
சோதிக்கலாமோநாடிச் சொல்வதைக்கொடுப்பேன்கொள்வீர்.

வசனம்.

கேளுஞ்சுவாமி நீரெதுகேட்டாலுந்தருவேன் இதாமாதரைச் சேரேன் இவர்களெனக்குப்பிள்ளைகளாகும் எத்துயர்வந்தாலுங்கல ங்கேன் றெறிவீர்முனிநாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

வேண்டியதெதுவோகேழ்க்க விருப்பமாய்சொன்னாய்நீதான்
ஆண்டிடுமரசுநாடு மதிலுளபொருள்களெலாம்
தாண்டிநீநகர்ந்திடாமற் றருமவானுவாயீய்ந்தா
லீண்டிங்குசெய்தகுற்ற மினியுடன்பொருப்பேன்காணே

வசனம்.

அடா கேட்டதைக்கொடுப்பேனென்ற துராங்காரியே யுனது செங்கோல் அரசு நாடுநகரமுதலானவைகளை நின்றநிலையிற்கொடுத் தால் நீ வேணுமென்று செய்தகுற்றத்தைப் பொருப்பனடா அரிச் சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னவனுனேயாகும் மாமுனியுரைப்பேன்கேளீர்
சொன்னதோர்வார்த்தைதப்பேன் சுறுக்கென நீட்டுங்கையை

இன்னகரரசுவாழ்வும் இறைவநின்றனக்கேயென்று
வன்னமாய்த்தாரைதானே வார்க்கிறேன்கொள்ளுவீரே

வசனம்.

கேளுஞ்சுவாமி நீர்கேட்டபடிக்கே எனது அரசுநாடு நகரம் முதலியதும் நான்சொன்னசொற் பிசகாமலுமக்கே தாரைவார்க்கிறேன் கைக்கொள்ளும்முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

இதுநிஜமான வார்த்தைதானு சத்தியந்தானு அல்லதுயேமாற்றலோசொல்வாய் மன்னு.

அரிச்சந்திரன்விருத்தம்.

தப்பிடேன்சொன்னவாக்கை தவமுனிசத்தியம்சத்தியஞ்
செப்புவாநிதரமாதர் சேர்க்கையைவிரும்பிஞனே
முப்புரமெரித்தோனுணை முனிவரேயரசையீந்தேன்
இப்புவிபுகழுநாட்டை யேற்றுர்ராள்குவீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி நான்சொன்னவாக்கைத்தப்பேன் பரமசிவனரியவெனது அரசையுமக்கேகொடுத்தேன் நீர்சுகமாகஅரசுசெய்வீர் ஆனுலிதரஸ்திரிகளைநான் கனவிலும் விரும்பேனென்றறியும் நாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

வேறேநானென்றுசொல்லேன் வேந்தனேசத்யனீயே
பாரையேயெனக்குஅப்பா பண்பிடனளித்தேனென்றாய்
நீரைனீகையிலள்ளி நினைவதையென்மேல்வைத்தே
தாரைதான்வார்பாயாகில் சத்தியமென்றுணருவேனே.

வசனம்.

கேளும் ராஜனே நீ நாடுநகரமெல்லாங் கொடுத்தேனென்றாய் ஆனுலுண்மையிலிருந்தி ஜலத்தையள்ளி எனக்குத் தாரைவார்த்தாலொப்புவேன் வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

இதோ நீர்கோரியபடி இந்தவரசைச்சார்ந்த நாடுநகரத்திலெனக்கு இருக்குஞ் சுதந்திரத்தை தாரைவார்க்கிறேனெப்புக்கொள்ளுஞ்சுவாமி.

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்படியேயொப்புக்கொண்டேன் அரசாட்சிக்குரிய உனது கிரிடம் புஜகீருது வாருவலயங்கள் முதலானதும் உனதுதேவியணிந்திருக்கும் பணிமுதலானதுகளும் கொடுப்பாயப்பாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

கேளும் முனிநாதா இவைகளெல்லா மும்மக்கே சேர்ந்ததுதான் வாங்கிக்கொள்ளும் சுவாமி ஆனாலிவங்களுக்கு உடுத்திக்கொள்ள வேறுவஸ்திரமாத்திரங் கொடுப்பீ ராண்டவா.

விஸ்வாமித்திரன் வசனம்.

இதோவிந்தக் காவிவஸ்திரத்தை யணிந்துக்கொள்ளுங்களப்பா

அரிச்சந்திரன் வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரமதி அப்பா தேவதாசா இந்தக்காவிவஸ்திரத்தை தரித்துக்கொண்டு நீங்களுடுத்திருக்கும் வஸ்திரமுதல் ஆரணமெல்லா முரிந்து மஹாமுனிவருக்குக் கொடுப்பீர்களப்பா.

சந்திரமதி வசனம்.

அப்படியேகொடுக்கின்றோம் என் பிராணநாதா

அரிச்சந்திரன் விருத்தம்.

கந்தைகள்தரித்துக்கொண்டோங் கனகமுங்களைந்துவைத்தோம்
தந்தையேபெற்றுக்கொள்வீர் தயாபராநாங்கள்யேக
விந்தையாய்வாக்களித்தால் வேரிடம்போறோம்நாதா
நிந்தைகள்பொருப்பீர்நாங்கள் நிழலடிபணிந்தோம்போற்றி

வசனம்.

கேளுந்சுவாமிநீர்கொடுத்தகந்தையை யுடுத்திக்கொண்டோம் பணிகளையிதோ கழட்டிவைத்தோம் எங்கள் வேறுதேசம்போய்ப் பிழைக்க விடைகொடுப்பீர் முனிநாதா.

விஸ்வாமித்திரன் வசனம்.

ஆனாலப்படியே போய்வாருங்க ளப்பா.

சத்தியகீர்த்தி கன்னரி புன்னாகவராளி ரூபகம்

மாமுனியேயுந்தனிட மனமுங்கருங்கல்லோ இந்த
வஞ்சம்வைத்தே தானம்வாங்க வந்ததுநீயல்லோ மா
பாவியுந்தன்மோசவெண்ணம் பாராமல்போனேனிந்த
பஞ்சவேடமன்னனைச்செய்ய பார்க்கவுமானேன் மா
தவமுனியென்றுதான்பணியநீ தாக்கியவிவ்வெண்ணம் நான்
தானமிந்தாற்றக்கபடி தானடப்போமுன்னம் மா
என்னமோசயெண்ணங்கொண்டா யிச்செகியாக்கபாவி
யிதுவோநீதான்றவஞ்செய்தகனம் இபம்புவாய்கேழ்க்க மா
மன்னவனுங்காவிகட்ட மகிழ்ந்தாயோபாவிசந்திர
வதியென்றுயித்துயிலுடுத்த வைத்தாயோதாவி மா

பாலன்றுயரங்கண்டுமுன்மனம் பதைக்கவில்லையோ யிந்த
பாதங்களுனைவிட்டப்பால் பற்றுமோசொல்லையோ மா
தெய்வமுனக்குதுணையாய்நின்ற தென்னமோமாயமிந்த
வையகத்திலுனைப்போல்வஞ்சம் வகுப்பரோஞானம் மா
பாழுந்தெய்வமிக்கோலஞ்செய்ய பார்த்துதேமிசையே நீ
ஏழுசென்மமெடுத்தாலும்பழி யேகுமோவசையே மா
செய்கோல்னிதிசெயவுனக்குச் சிறந்தோமுனியே பாவி
யெங்கள்தாயையிப்படிச்செய்தா லேற்குமோவினியே மா

விஸ்வாமித்திரன் விருத்தம்.

என்னடாசத்தியகீர்த்தி ஏகிப்பேசுகின்றாய்
என்னடாபோகுமராஜ னிவர்களைப்புணர்வானாகில்
என்னடாகுறைவதாகு மெனக்கிவ்வரசவேண்டாம்
என்னடாநீதான்சொல்வி யிணையவேசெய்குவாயே

வசனம்.

அடா. சத்தியகீர்த்தி யேண்டாமிகவுமென்னை யேசுகிறாய் உன துராஜனிந்தப் பெண்களைச்சேர்ந்தாலென்ன குறைவாகுமடாநீயவனுக்குத்தெரியப்படச்சொல்லி சம்மதிக்கச்செய்தால் யாயற்று மிங்கனே யவனுக்கு விட்டுப்போகிறேனடா.

சத்தியகீர்த்தி விருத்தம்.

நாடதுயிழந்திட்டாலும் நற்பணிதோற்றிட்டாலும்
காடதேயுறைந்திட்டாலும் கட்டமேதினிவந்தாலும்
வேடமேகுன்றினாலும் வேந்தனுமிதரமாதின்
கோடதைவிரும்ப நீயுங் கொள்ளுவீர்மனதிற்றானே

வசனம்.

சேளும் விஸ்வாமித்திரமுனியே நாடுமுதலானதும்போய்காடு சேர்ந்து இன்னமதிகமானதுன்பங்கள் வந்துற்றாலும் என்றனண்ணல்பரஸ்திரீ கவனங்கொள்ளாரென் றுணர்வீர்ரிஷியே.

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணேசந்திரவதி அப்பா தேவதாசா இனிநாம்போவோம் வாருங்கள்.

தேவதாசன் வசனம்.

சிக்கிரமாய்ப்போவோம் ஒருவருக்குத் தானங்கொடுத்த வெல்லையிலிருக்கப் போகாது என்பிதாவேதோஷமாகும் அம்மணி வாராய் சிக்கிரம்போவோம்.

விஸ்வாமித்திரன் வசனம்.

ஓய்ஓய் அரிச்சந்திரமகாராஜனே இன்னமொருகாரிய மறந்து போனீரோ ஓடிவாரும் ராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

இதோவந்தேன் சொல்லும் முனிநாதா,

விஸ்வாமித்திரன் விருத்தம்.

திலரகொளுமன்னுமோசம் தீட்டிநீபோகப்போயோ
மறையவன்பொன்னைநீதான் மறப்பதுநீதிதானோ
நிறையுளபாவமீதில் நெறிவுகளறிந்துதாரம்
இறைவனேயளித்ததுண்டோ வில்லையோசொல்லுவாயே.

வசனம்.

கேளும்ராஜனே யிப்படியும் மோசஞ்செய்யலாமோ வேதநாத்தி
களின் சொத்தையறப்பது நீதியோ முன் நீ யெனக்கு யானையின்
பேரில் ஒருவாலிபன் நின்று கவுண்டுவிதூரம்பொன்கொடுத்ததுண்
டோவில்லையா சொல்லு ப்பாவேந்தே,

அரிச்சந்திரன் விருத்தம்.

யாகத்திற்களித்தபொன்னை யமிழ்த்திருமறைந்ததுண்டோ
யோகத்திலுயர்ந்தநாதா வுன்மைநீருணராதேனோ
பாகத்தில்யாதுமுண்டோ பரிந்தெனைகேட்டீறன்றான்
மேகத்தையன்றிவேறு தீபனுக்கிலைகாண்பீரே

வசனம்.

கேளும்முனிநாதா உமக்கு கொடுத்தபொன்னை நான் மறைத்
துவைத்திருக்கிறேனோவைத்தவிடத்திலே இருக்கிறது இதைநாங்
களறியாத காரணமேயேதோவெங்களிதேகம் தவிர வேறுபொருளில்லை
சுவாமி.

விஸ்வாமித்திரன் வசனம்.

கேளாய்ராசனே நீயெனக்கு அரசாட்சிமுதலானது தாரைவார்
த்தபின் உனக்கிவ்விடத்திற் பொருள் சொந்தமுண்டோ வன்சொத்
திலெனக்கே கொடுப்பது நீதியோவன்று,

அரிச்சந்திரன் விருத்தம்,

முன்தானமளித்தபொன்னை முனிவரேயெவருறுநாளும்
பின்தானமளிப்பதோடு பெருகச்சேர்ப்பதுண்டோ
நன்மதியுடையா யெந்த ஞாடையதகொடுத்தவென்றீர்
தன்மையாயறியுமுன்பொன் தாவீயகையாகத்தானே.

வசனம்

கேளுஞ்சுவாமி முன்தானங்கொடுத்தபொன் உம்மிடபொக்கி
ஷத்திலிருக்க வன்னரசையுமதிலுள்ளதுந்தாரைகொண்டால்முன்
னிருப்புந்தவிர வென்றுணரப்போகாதோநாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

அரசேகேள்யாகத்திற்கு அன்றுநீயளித்தபொன்னை
அரசேநீபிடித்தாவ அன்றுடன்பார்த்ததுண்டோ

அரசேகேள்ரவிகுலத்தோர் அரைக்கரோபொய்நாவென்றும்
அரசேயுன்னெறியுமுன்பா லடுத்ததோவில்லையோசொல்வாய்

வசனம்.

கேளும்ராஜனே நீயெனக்குதாரைவார்த்தகாலத்தில் பொன்னை நீக்கித் தாரைவார்த்ததுண்டோ சூரியகுலத்தரசர் பொய்சொன்ன துண்டா அந்தநெறியுனக்குண்டா யில்லையோ சொல்வாயப்பா அரிச்சந்திரா,

அரிச்சந்திரன் விருத்தம்.

தடுத்தெனைக்கேட்கவந்த தபாபராவுரைக்கக்கேளீர்
தடுத்தெனைகேட்டபோதே தடையின்றிகொடுக்கவேணும்
தடுத்திடுங்கோபம்வேண்டாம் தனையன்வேற்நாடடைந்து
தடுத்திட்டகடனைதீர்ப்பேன் தாளுநேவிடையிவீரே.

வசனம்.

கேளுஞ்சுவாமி நான்சொன்னநீதியைத்தடுத்து நீர்கேழ்க்கபோகாது அப்படிக்கேட்டபோது கொடுப்பதேயெனக்கு சத்தியமாகும் நீர்கோறியபொன்னைவேறுதேசம் போய்கொடுக்கிறேன் சிலவுதாருஞ்சுவாமி.

விஸ்வாமித்திரன் வசனம்.

மெத்தசந்தோஷம் எந்தநாட்டில்போய்க் கொடுக்கின்றாய்அது எப்படியெனக்கு வருகிறவிதம்சொல்வாய் அரிச்சந்திரா,

அரிச்சந்திரன் வசனம்;

கேளுஞ்சுவாமி நான்காசிக்குப்போய்ச்சேர்ந்து கொடுக்கிறேன் என்றுடன்கூட வும்து ஆளையனுப்பித்துக்கொடும் முனிநாதா

விஸ்வாமித்திரன் விருத்தம்,

அப்பனேகேளுமெந்த ளுளிஜையனுப்பிவைப்பேன்
இப்பதிவிட்டேகாசி யெய்தவோர்நாள்துவக்கி
கப்புநாள்நாற்பத்தெட்டுங்கடக்குமுன்கொடுக்கவேண்டும்
தப்படிலேதுவாக்குத் தாறுரைசெய்வாய்மன்னா,

வசனம்.

அப்பா அரசேஅப்படியேஆளையனுப்புகிறேனிந்தநாடுவிட்டுபுறப்படும் நாளதுவக்கி நாற்பத்தெட்டுநாளில் கொடுக்கவேணுங்கெடுவுதவறாதிருக்க வொருசத்தியம்சொல்வாய்மன்னா,

அரிச்சந்திரன் விருத்தம்,

ஐயனேநீர்தான்சொன்ன அன்புள்ளதவணைதப்பேன்
ஐயனேதவறுவேனுகில் ஆண்டவன்மனைவறுந்தே
ஐயனேபுல்லயன்செய்து அன்னியமாதைச்சேர்வோர்
ஐயனேபோகுமந்த அருங்கதிக்காளாவேனே,

வசனம்.

கேளுஞ்சுவாமி நீரிட்டகெடுவுதப்பேன் மீறினேல் பொய்களவு செய்து அன்னியமாதரைச்சேர்வோரடையுங்கெதி சேர்வேனென்றறியும் முனிநாதா.

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்படியா நல்லதுபோய்வாரும் எனக்குக்கொடுத்தவாக்கைத் தப்பாமல் நிலைநிறுத்தும் வேந்தனே.

விஸ்வாமித்திரன் வசனம்.

ஓய் ராஜனே இன்னமொன்று மறந்துவிட்டேன்வாரும் ராஜனே

அரிச்சந்திரன் வசனம்.

இதோ வந்தேன் தெரியச்சொல்லும் முனிநாதா

விஸ்வாமித்திரன் விருத்தம்.

தாரைநீவார்த்தைநாட்டில் தனித்துநான் சென்றுலென்றன்
போரையார்கண்டோமென்றே யேசுவார்குடிகளப்பா
ஊரைநீகொடுத்ததாக உறைவதற்கெதிரிற்செப்பி
பாரைநானாளச்செய்திப் பதிவிட்டுநடப்பாய்வேந்தே.

வசனம்.

கேளும் ராஜனே நீயெனக்குத் தாரைவார்த்தநாட்டில் நான்தனியேபோனால் என்னைக்குடிகள் மதிப்பார்களா நீ யென்கூடவந்து இந்நாட்டிலுள்ளவர்களுக்குத் தெரியப்படுத்திதிட்டஞ்செய்துவருவாய் மகாராசனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே திட்டஞ்செய்கிறேன் முனிநாதா

பொது விருத்தம்.

பாவியாய்கௌசிகனு மரிச்சந்திரன்றன்
பட்டணமும்பாக்கியமும் பறித்துக்கொண்டே
தாவியேதேரேறிப் பட்டங்கொள்ளத்
தான்செல்வயோதிபன்று னடியிரண்டும்
நோவிடவேபூமியின்மேல் பின்னேயோட
நோக்கொணப்பஞ்சைகளாய்ப் பனுவதைப்போல
தாவியுமேசந்திரவதி தேவதாசன்
தானடக்கச்செங்கோலைத் தான்கொள்வேனே.

விஸ்வாமித்திராிடத்தில் அரிச்சந்திரமகாராஜன் அரசாக்ஷியை ஒப்பிக்கிறபாகம்.



வசனம்.

கேளுங்கள் சபையோர்களே நாட்டைதானொப்புகொள்ள விஸ்வாமித்திரமுனி ரதமேறிச்செல்ல பணிகளைப்போல அரிச்சந்திரனும் சந்திரவதியும் தேவதாசனும் பாதங்கள்நோவபின்னே கைகட்டிக்கொண்டு நடந்து அரசாட்சியை யொப்பிவிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-தரு-சாவேரி-ஆதி.

பல்லவி.

ஒப்புக்கொள்ளுவீர்முனியே என்னகரத்தை
ஒப்புக்கொள்ளும்முனியே

அநுபல்லவி.

கப்பியகரிபரி சட்டுங்கூடங்களிது
கருதிநீநேமிந்தக் காலிடும்கடலிது
தப்பிதமிலாபொக்கிஷ தலைவரிடமிது
தயாபரபொருளிடும் தனவரையாகுமிது ஒப்

சரணங்கள்

நீருக்கக்கூட்டிய நிகரில்லாமாடமிது
நிகழும்பள்ளியறையாம் நீர்தூங்கும்மாடமிது
நாரிகள்ஜலக்கிரீடை நடத்திடுங்கூவமிது
நத்திவோர்மன்னனிடம் நால்போக்குமிடமிது ஒப்

அரசனைமுடிவிது அரிசிலம்பணிபது
ஐயா ஆயுதச்சாலை அரிவனுடசாலையிது
துரவிகள்கூடியபாகந் தோகுத்திடுஞ்சோலையிது
சுத்தமனத்தோய்மாது சொகுசுறுசாலையிது ஒப்

சதுரங்கசேனைகளுஞ் சரிக்கிடமாது
தக்கபட்டாடைமற்றுந் தான்தயங்கிடமாது
இதுவெந்தநாட்டிலென்னை யிவர்களென்மைச்சுமார்
ஏதுக்கொள்ளுமுனியே யெல்லாமுமக்கேசுமார் ஒப்

குடிகளுக்கேயுரைப்பேன் கும்பிட்டுமைப்பணிவார்
கொலுச்சாவடியிதாகுங் கோதைவிசாலம்பாரீர்
அடிநடுதுணிவான ஆதிசிவத்தைக்கோரும்
ஐயாயென்மேற்கோப மகற்றியேயருட்பாரும். ஒப்

அரிச்சந்திரன்விருத்தம்.

மந்திரிமார்களே குடிகளேபொருளில்
மதித்ததோர்வணிகரே என்றன்
தந்திரச்சேனை பதிகளேகேளீர்
தனிவுடன்யானுமே யிவர்க்கே

இந்தநல்லரசுமிதிலுன் பண்டமு
பிரக்கவே யிந்தனன்கணிந்தே
முந்தியென்போலிவரை நீர்மதித்து
முறைகழுவின்றியே நடப்பீர்.

வசனம்.

கேளுங்களப்பா மந்திரிமார்களே குடிகளே வர்த்தகர்களே இந்தவிஸ்வாமித்திரமுனி கேட்டபடிக்கே நானெனது அரசுமனைத்சேர்ந்தபண்டு பதார்த்தங்களையுந் தானமாகக்கொடுத்துவிட்டேனின்றுமுதலிவரை யென்னைவிட மதிகமாகப்பாவித்து வரன்முறை பிசகாமல் நடந்துகொள்வீர்களப்பா,

குடிகள் விருத்தம்

ஐயனேயரசேயெங்கள் அண்ணலேயான்றதேவா
துய்யனேயுமதுவாக்கின் தோற்றதைமீறுவோமோ
மெய்யனேமுனிக்கேநீதான் மேவியின்றுடனளித்தக்
கையனேயுமக்கேவந்த காரணமுறைசெய்வீரே.

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா நீரிந்த சத்தியராசாங்கத்தை யிந்த ரிஷிக்கு தாரைவார்க்கும்படி யுமக்குநேரிட்ட காரணத்தைத்தெரியபடச் சொல்லவேணும் மகாராசனே.

அரிச்சந்திரன் தரு கல்யாணி சாப்பு.

பல்லவி.

சொல்லுவேன்கேளீர் குடிகளே சொல்லுவேன்கேளீர்

அநுபல்லவி.

வல்லமையிலிவ ருயர்ந்தோரானதால்
வாக்களித்திட்டே னதைக்கார்க்குங்கடனுங்களால் சொ

சரணங்கள்.

நீச்சமாதரைப்பெற்றே உன்னிடம்
நிகழ்த்தினர் மனமொத்தே

ஆச்சாயமாயவ ராடல்பாடல்புரிந்தார்
அடியேன்பரசளிக்க அதைவேண்டாம் சொ

பூச்சக்ரக்குடைகேட் டார் சத்தியகீர்த்தி
புகழல்லவென விட்டார்

தாட்சண்யமில்லாமற் றங்களைச்சேரவென்றே
சாற்றவென்மனம்நேர்ந்து சாயச்செய்தேனென்றே சொ



சென்றவர்கோளுரைக்க விம்முனிகோபஞ்
சீறினவராயிருக்க

கண்டெனை தூஷித்த கயவரைப்பற்றென்றார்
கருதிலேனுனெனக் காசினிநாவென்றார் சொ

சத்தியம் பொய்க்காமல் என்னரசதை
சாதித்தேன்சிக்காமல்

நித்திரநிராமய நிருபனருளைப்பாரீர்
நீங்களென்வாக்கைப்போல் நிகழ்ந்திவர்தமைக்காரீர் சொ

குடிகள் விருத்தம்,

ஐயையோவிதுதானென்ன அடாததோர்காலங்கண்டோம்
ஐயையோசத்யநெரி அரிச்சந்திரன் றனைவிட்டு
ஐயையோகுரூரங்கோப மடைந்தவிம்முனியைப்போற்ற
ஐயையோசிவமேநீதா னமைத்திட்டவிதியோநாதா.

வசனம்.

ஓபாழுங்தெய்வமே சத்தியம்வழுவாதஅரசனைப்பிரித்துகோப மும் கொடுமையுள்ளவிஸ்வாமித்திர முனியைவணங்கவெங்களைச் செய்தது முன்னுடைய திருகூத்தோசிவமே.

குடிகள் கண்ணிகள்-எதுகுலகாம்போதி-ஆதி.

என்னவிதிவந்தது எங்களரசனுக்கெ
யிவ்வேடந்தரித்திட்ட ஓ சிவமே

மன்னனெங்களைச்சொந்த மக்களைப்போல்நினைத்தே
மடிமேல்வைத்தேவளர்த்தார் ஓ சிவமே

தாயின்றதந்தைகுரு தாயிவரென்றேமதித்து
தாளடிக்காத்திருந்தோம் ஓ சிவமே

சேய்தனைப்பிரிந்தாவு செல்லும்வாரிருவருக்குச்
செய்தநின்னருள்தானோ ஓ சிவமே

பாதகமுனிவன்சொற்படி செய்யவேமனம்
பற்றுமோவெங்களுக்கு ஓ சிவமே

கர்த்தனிவனிருந்தால் கல்மழைபொழிவதன்றிக்
காலமழைபெய்யுமோ ஓ சிவமே

கோவைப்புலிகடித்தே கொண்டேகுங்காலமிதோ
கூத்தாயமைத்திட்டாயோ ஓ சிவமே

பாவையாந்தாயிவள் பத்தினிநாட்டைவிட்டால்
பறப்பாளேலட்சுமிதேவி ஓ சிவமே

எத்துயர்வந்திட்டாலும் யெங்களரசன்சதயம்
இழிவன்றிருக்கக்கண்பார் ஓ சிவமே
பற்றுமாதுடன் பாலன் பழுதின்றிவாழ்ந்திட
பரமனேயருள்செய்வாய் ஓ சிவமே

அரிச்சந்திரன் விருத்தம்.

என்னருகுடிகளோநா னியம்பிடுமொழிதான்கேட்பீர்
வன்னமாய்சிலநாள்சென்று வருகுவேன்துயரம்வேண்டாம்
இன்னகர்தனிலேநீங்க ளிருந்துமேசுகமதாக
நன்னயப்பயிர்களிட்டோ நாளுமேவாழ்வீர்வாழி.

வசனம்.

சேளுங்களப்பாகுடிகளே நீங்கள் துயரத்தைவிடுங்கள் நானின்னங்கொஞ்ச நாளி லிவிடம்வருகின்றேன் சுகமானவருக்குக் கொடுங்களென்னருமை குடிகளே.

குடிகள்வசனம்.

மகாபாக்கிய முமதுவாக்கின்படி நடக்கின்றோம் ஜல்தியில்வந்து எங்களை ஆதரிக்கவேண்டுஞ் சத்தியகுருவான அரிச்சந்திரமகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி அறிவுள்ளக்குணமந்திரி
அப்பனேமுனிவர்வாக்கை அசட்டையாய்மீறப்போகா
அப்பனேயிவரோமெத்த அறிந்தவர்ஞானமந்திரி
அப்பனேயிவர்போலும்றே யடிபணிந்திருந்திடாயே.

வசனம்.

கேளும்ப்பா சத்யகீர்த்தி சர்க்குண நீங்கள் முனிவர்வாக்கைக்கடவாமல் பணிந்து நடத்துக்கொள்ளுங்களப்பா மந்திரிகளே

மந்திரிவசனம்.

நேர்த்தி நேர்த்தி யெங்கள் விதியின்பய னென்றறிந்தோம் ஆண்டவனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சேனாதிபதிகளேநான் செய்யும்வாறென்றுகேளீர்
வானதிபொய்க்கினென்றன் வாக்கதுயழிந்திடாமல்
தானதிபொருளையெண்ணித் தவமுனிமகிழும்வாறு
மோனதிபதிசொற்கேட்ட முற்றிலும்பணிந்துவாழ்வீர்

வசனம்.

சேனுங்களப்பா தளபதிகளே இந்தத்தவமுனிவரி னுங்கினை கடவாமலு மெனதுவாக்குப் பொய்க்காமலும் பணிந்து நடந்துக் கொள்ளுவீர்களப்பா தளபதிகளே.

சேனதிபதி வசனம்.

கேளும் ஆண்டவனே விதியைகொந்து நீங்கள் சொல்லியவா றே நடந்துக்கொள்ளுகிறோம் மகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

இன்னகர்தனுலேநாளு மினிதுடன்வீற்றிருந்தே
உன்னதவவரிபஞ்செய்பு முத்தமகுணரேகேளீர்
மன்னவனுகவிந்த மாமுனிவாய்த்ததாலே
தன்னறம்வழுவிடாமற் ருவியேயடைப்பீரப்பா.

வசனம்.

கேளுங்களப்பா வர்த்தகர்களே யிந்தநாட்டுக்கு கௌசிகமா முனி அரசனுகவந்தமையால் நீங்களவருக்குப் பணிந்து சத்யம்பி சகாமலதர்மத்தை நிலைநிறுத்தி நடந்துகொள்வீர்களப்பா.

வர்த்தகர் விருத்தம்.

எந்தலேயுமக்குமிந்த விருவுறக்காதந்தானும்
எந்தலேவர்ய்த்ததெல்லா மெங்களின்கொடுமையாகும்
எந்தலேமுனிவர்சத்ய மெவ்விதமறியப்போருன்
எந்தலேநீர்தான்கொண்ட வெண்ணத்தைக்கடந்திடோமே.

வசனம்.

கேளும் மகாருசனே யுமக்கிந்த கெதிவந்து நாங்கள்செய்த கொடிமையாகு மிந்த முனுவனும்சாந்தமும் பொறுமையைக்கைக் கொண்டு சத்தியத்தைப் பாலிப்பானு நீர்சொன்ன வுத்திரவின்படி க்கே நடக்கின்றேமையா வெங்களாண்டவனே.

சந்திரமதி விருத்தம்.

என்னரும்பாங்கிமாரே யிழிவிலாத்தோழிமாரே
மன்னருமரசும்நாடும் மாமுனிதனக்கேயீந்தார்
பன்னருங்காசியேக பதிமனங்கொண்டார்போறேன்
துன்னமற்சுபாயவாக்குத் தோகைகாள்கொடுப்பீரம்மா.

வசனம்.

கேளுங்களம்மா தோழிமார்களே அரசர்செங்கோலே விஸ் வாமித்திரமுனிக்குத்தாரைவார்த்து காசிக்குப்போகின்றார் நானு ங்கூடப்போகின்றேன் நீங்கள் நல்லவுத்திரவுகொடுங்கள் தாதிமார் களே.

தோழி விருத்தம்.

அம்மணிதாயேயெங்க ளரசியேபஞ்சைவேடம்
அம்மணிகொள்ளக்கால மடைந்ததோவுமக்குத்தானே
அம்மணியினிமேனுங்க ளடிமையாயொருவருக்கே
அம்மணிபணிந்திருக்கோ மடியாரும்வருகுவோமே

வசனம்.

கேளுந்தாயே யுமக்கிப்போக்கொத்தகாலம் வந்ததா இனிநாங்களொருவரைப்பணியோம் நாங்களுங்கூட வருகின்றோந்தாயே.

1-வது தோழி-கண்ணிகள் பைரவி-ஆதி.

இந்தவிதிவிட்டாயோ தெய்வமே-எங்கள்
இறைவிதனைப்பிரிய தெய்வமே
வந்தகதியறியோம் தெய்வமே-யாரின்
வஞ்சமொன்றுந்தெரியோம் தெய்வமே
தாயைப்போற்காத்தவளை தெய்வமே நாங்கள்
தான்விடவும்விதியோ தெய்வமே
நாயைப்போலலைந்திட தெய்வமே தலை
நடுவிலெழுதினையே தெய்வமே
மாமுனிசொற்படியே தெய்வமே நாங்கள்
வணங்கநின்னருள்தானோ தெய்வமே
தாமதமிலாததாயை தெய்வமே யின்று
தானகலவிட்டாயோ தெய்வமே

உ-வது-தோழி-காம்போதி-ஆதி.

பல்லவி.

தங்கையீதென்ன காலமோ நமதுதேவி
தயங்கவிட்டதுங்கோலமோ

அநுபல்லவி.

மங்கையுமையாள்பாகன் வஞ்சன்மனதிலிட்டே
வகுத்தவிதியிதுவோ மனதிலித்துயருற்றே தங்

சரணங்கள்.

ஆதிலட்சுமிபோலே அழகிலுயர்ந்ததேவி
ஐயோபணுதியாகி அரையிற்காவியணிந்தே
நீதிபிசகாமன்னன் நிருடிக்கிவ்வரசதை
நிமைக்குள்ளளித்துப்பதி நீங்கரும்பணிந்தே தங்

பெற்றதாயையும்விடப் பெருத்தவாசையைக்காட்டி
பிரியத்துடனேநம்மை பேணிவளர்த்தவன்னை
உற்றவித்துயர்கண்டு யூரிலிருக்கவென்றன்
உள்ளம்படைக்கேனேயோ உண்மையிதுவோமுன்னை தங்
வேரையொருவர்பணி வேணல்ப்புரியலாகா
வீடுஞ்சுற்றமும்விட்டே விருண்டஅடவிபோவேன்
ஆரையினித்தாயென்று அழைப்பிப்பேனிவ்விதியிட
அயன்பாவிகருதிய தழகோ ஐயோசாவேன் தங்

சந்திரமதிவசனம்

கேளுங்களம்மா தோழிகளே சிவத்தின் கூத்திற்குவிசனப்படு வதில் பயனென்ன நீங்கள் துயரம்விட்டிருங்கள் நான்சீக்கிரத்தி லிவிடத்திற்கு வருகிறேனடி பாய்கிகளே.

தோழிவிருத்தம்.

நீவருங்காலமட்டும் நிலைகளையுணர்ந்ததாயே
தாவிருமடவருக்குத் தான்வாழ்ந்தேயிருப்பதன்றி
பாவத்திற்கஞ்சாதிந்த படுபாவிமுனிவனண்டை
சேவகமிருக்கமாட்டோஞ் செந்திருவடிக்கேபோற்றி

வசனம,

கேளுந்தாயே நீ வருகிறபரியந்தம் நாங்கள் காடுறைந்துவாழுந் திருக்கின்றோம் இந்தகாதகமுனிவனிடஞ்சேவிக்கோம் சுகமாய்ப் போய் வருவாயம்மா சந்திரமதித்தாயே.

தேவதாசன் விருத்தம்.

என்னுடனுடிப்பாடு மினோருரேதோழமாரே
மன்னவனரசையீந்த மாமுனிகவர்ந்ததாலே
இன்னகர்விட்டேகாசி யேகவேசித்தேமானோர்
சின்னவன்போயிவாரேன் செலவதுசோடுப்பீரப்பா

வசனம்.

கேளுமப்பாதோழர்களே விஸ்வாமித்திரமுனி யுபாயத்தினால் எங்கள் ராஜாங்கத்தைகைக்கொண்டதா லெனதுபிதா காசிக்கிப் போகவெண்ணங்கொண்டார் நானும்போகின்றேன் சிலவுகொடுங் களப்பாநேசர்களே.

சிறுவர்கள் விருத்தம்.

வெய்யதாயீயங்காச்சி மென்செவிதனிலேசாய்த்த
வையகமுறைமையைப்போல வழுத்திடலாகுமப்பா
நொய்யுறவெங்கள்தேகம் நோவிடகனமும்நீதான்
பையவேயுரைத்தவார்த்தை பாவிகள்கேட்கனன்றே.

வசனம்.

அப்பாதேவதாசா நீசொன்னவார்த்தை எங்கள் மனதைமெத்த வுருக்கிவிட்டது இதுவுமெங்கள் விதிதானப்பா.

சிறுவர்கள்-கண்ணிகள்-நாதநாமகிரியை-ஆதி.

எப்படிப்பிரிவோமுன்னை எப்படிப்பிரிவோம்நாங்கள்
இறைவனேம்பிரியலாச்சே தோழனே
ஆண்டுமெங்களுடனே யழகாய்க்காத்தடிவிட்டே
அன்பாய்ப்பரிசீவாயே தோழனே
வேண்டும்பணிதிகளும் விதத்தோருணவுகளும்
வினவியங்கள்செய்வாயே தோழனே
பள்ளியிலெங்களுடன் படித்தநாள்முதற்கொண்டு
பாலித்தாயெங்களையே தோழனே
துள்ளிபம்பரஞ்செண்டுதண்டுக் கோலாட்டமெல்லாம்
தூயமறந்திட்டாயே தோழனே
உன்நேசரென்றெங்களை யூரார்கனப்படுத்தும்
உரிமையின்றுடன்போச்சே தோழனே
தெய்வம்பிரிக்கபாவத் தீமைசெய்தோமேரவேறு
திசைகாணோம்மதிதோணோம் தோழனே
கைதவப்பலனிதோ கண்டோம்வேறுகெதி
காணோமனமும் தோழனே

தேவதாசன் விருத்தம்.

அழுவதைவிடுவீரெந்த னன்பனேதோழமாரே
வழுவதுசெய்யபிரமன் வகைகொண்டால்நாமென்செய்வோ
பழுததுமாமுனிவனாலே பலித்திடக்காலங்கண்டோம்
தழுவிடக்கொஞ்சநாளிற் றுன்வாறேன்மகிழ்ந்திடீரே.

வசனம்.

அப்பா சினேகிதர்களே பிரமன் எழுத்தை மாறப்போமோ இதற்குக்காரணம் முனிவனாயிருந்தான் நீங்கள் துயரத்தை விடுங்கள் நான்கொஞ்சநாளில் வருகிறேனப்பா.

சிறுவர் வசனம்.

நல்லது எங்களரசே சந்தோஷமாய்ப் போய் வருவாயப்பா தேவதாசா.

அரிச்சந்திரன் விருத்தம்.

தாகவிழ்சடையன்கோமான் தாமரைச்சரணமேற்றும்
மாதவமுனியேயுன்றன் மலரடிபணிந்தேனுதா
காதலியுடனும்பாலன் காசிக்கேடானும்போறேன்
பேதமன்றிசுவாமி பிரியமாய்விடையீவீரே.

வசனம்

கேளுஞ்சுவாமி முனிநாதா நானுமென்மனைவியு மென்பால னுங்காசிக்கிப்போக விடைதரவேண்டுந் தேவே.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

ஏனப்பாநீதான்மெத்த விரிவுறுந்துன்பங்கொண்டாய்
நானப்பாதவத்தாலிந்த நாரிகடனைப்படைத்தேன்
தானப்பாவிவர்கள்நம்மைத் தனிமனஞ்செய்வாயாகில்
ஈனப்பாடொன்றில்லாம லெல்லாமுன்வசனுஞ்செய்வேனே.

வசனம்.

அப்பாராஜனே துயரமேன்நான்தவஞ்செய்து பெற்றவிந்தப் பெண்களை நீகைக்கொண்டா லிவையாவத்து முனக்கேகொடுத் துப் போகிறேனப்பா.

அரிச்சந்திரன் விருத்தம்.

விழியினில்நீர்தான்சோர வெம்புறுவார்த்தைகேளேன்
அழிந்திடுமன்றேகம்போயி னன்னியமாதைநாடேன்
மொழிந்தவித்தரணிபண்ட முள்ளதும்வேண்டேனுதா
வழிபற்றுச்செல்வேனுளை வரச்செய்வீரிவாய்த்தானே.

வசனம்.

கேளும்சுவாமி நீர்சொல்லுய் கெட்டமொழி யென்செவிக்கே ராது அழிந்தாலு முடலன்னிய மாதைநாடேன் காசிக்கிப்போகிற படியாலும்முடைய ஆளனுப்பிவையும் முனிநாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

இத்திசைம்நீதான்சென்றே யிருந்திடுசரயுதீர்த்தம்
நத்தியேநாளையெந்த னுளினியுன்பின்னுகப்
பத்தியேவரவிடுப்பேன் பண்புடன்கெடுவுதன்னில்
வித்தியாசங்களின்றி விரைவினிற்கொடுப்பாய்த்தானே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரமகாராஜனே யின்றையதினம் நீசரயுநதியருகிலிரு நாளையதினமென்னுடைய ஆளையனுப்புகின்றேன் கெடுவுதப்பாமல் கடனைக்கொடுத்து விடுவாயப்பா.

அரிச்சந்திரன் விருத்தம்.

பழமொழிபிசகாமாதே பாலகாதேவதாசா
விதியிதுநமக்கேகண்டீர் வெளியிலுயர்ந்தநல்ல
சதிமனமில்லாதிவ்ய தவத்தினிலுயர்ந்தநல்ல
மதியுளமுனிவர்பாதம் மகிழ்வுடன்வணங்குவீரே.

வசனம்.

கேளாள்பெண்ணே சந்திரவதி அப்பாதேவதாசா யிதுநமக்கு விதிப்பயனென்றறிந்து முனிவரிடத்தில் பணிந்து சிலவுபெற்றுக்கொள்ளுங்கள் நாமினிப்போவோம்.

சந்திரவதி விருத்தம்.

நனிமனிகங்கைதும்பை நாகமும்பூண்டவந்த
தனிநிகரில்லாநாதன் தாளடிநாளுமேற்றும்
முனிவரேநாங்கள்செய்த முப்பிழையாற்றிவுன்றன்
கனிவுளம்மகிழ்ந்தேசெல்லக் கடையருக்கருளுவீரே.

வசனம்.

சுவாமி நாங்கள்செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்துக் காசிக்குப்போக செலவுகொடும் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அத்தனேயும்துதிவ்ய வடியினைப்பணிந்தேனுதா
கத்தனேயேழைசெய்த கடும்பிழைபொருக்கவேண்டும்
சுத்தனேயெனக்கேவெற்றி சூழ்ந்திடவாழ்த்தியென்னை
பத்தியாய்காசிபோக பரிந்துமேவிடையீவீரே.

வசனம்.

கேளுஞ் சுவாமி நான்செய்த பிழைகளைப்பொறுத்து காசிக்குப் போக சிலவுகொடுப்பீரெந்தனுட்டவனே.

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்படியே போய்வாருங்கள் போய்வாருங்கள்.

சூழ் வினை காண் டம்

முற்றுப்பெற்றது.

உ

முருகன் துணை.

நகர் நீங்கிய காண்டம்.

ஆரிச்சந்திரன் கண்ணிகள் - இ-ம் காம்போதி - தாளம் - ஆதி.

சரிகைகிரிகையோகச் சார்புஞ்சனங்கொண்ட
தவசிகளே நாங்கள் போய்வாரோம்

வரிசையுலகையாளும் வலுமையுளோரேசேனை
வதிபதியேநாங்கள் போய்வாரோம்

என்னைவிட்டகலாம லிருந்தமந்திரிகளே
யிதோகாசிபட்டணம் போய்வாரோம்

பொன்னைவிளைவிசெய்யும் புனிதமாங்குடிகளே
புகழ்பெறக்காசிக்கே போய்வாரோம்

சத்தியவணியஞ்செய் சர்ஜனகுணத்தோரே
சாற்றுங்காசிக்கிதோ போய்வாரோம்

நத்திருன்னுட்டில்வாழ் நண்பரேமைந்தரே
நாங்கள்காசிக்கிதோ போய்வாரோம்

பதிவழுவுறாமல் நின்றிவர்மொழிப்படி
நெறியுடன்வாழ்குவீர் போய்வாரோம்

பாதிமதிபுனைந்த பரமன்வருளமந்தப்
பதிகாசிநகர்நசங்கள் போய்வாரோம்

நகர்நீங்கியகாண்டம்
முற்றுப்பெற்றது.



உ

முருகன் துணை.

ஆரண்ணிய காண்டம்.

பொது - வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசனுமனேவியும் தேவதாசனும் நாடுவிட்டுச்சென்றபின்பு மந்திரியாகிய சத்தியகீர்த்தி அரிச்சந்திரமகா ராஜனிடம் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

சற்குணமந்திரியொன்று சாற்றுவேன்கேளாயப்பா
நற்குணமுடையவேந்தன் நாடியேசாருதீர்த்தம்
விற்பனரங்குசென்றூர் விரைவினிற்கண்டுவாரேன்
தற்பராவிங்குநீதான் றனிக்கொலுபுரிகுவாயே.

வசனம்.

கேளாயப்பா சற்குண நமது அரசன் சரயுநதியருகிலிருப்பதா னன்போய்க்கண்டுவருகிறேன் நீயிவிடத்தில்தனிக்கொலுவு புரிந்துக் கொண்டிருப்பா யப்பா.

சர்க்குணன் வசனம்.

அப்படியே போய்வாருமையா.

பொது வசனம்.

கேளுங்கள் சபையோரே சத்தியகீர்த்தி சரயுநதியினிட மிருக் கும் தனதரசனைக்கண்டு வாடுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

அத்தனேவெருநாளாக வடிமையைக்களிந்தேசர்க்க
கத்தனேயடியேன்றன்னைக் கைவிட்டுவருவதன்றே
சுத்தனேயுமைப்பிரிந்தே சொகுசுளநாட்டில்வாழேன்
யத்தனேநானுங்கூடப் பற்றுவேன்விடையீவீரே.

வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா என்னைநாளதுவரையில் பாதுகாத்து யிப்போது யடியேனைக் கைவிடுசலன்றே நான்றங்களைப் பிரிந்துநாட் டில் வாழேன் நானுங்கூட காசிக்கிவரச் செய்யவேண்டும் நாதனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

தொழுதுவிஸ்வாமித்திரன் துரைத்தனம்புரிவதாலே
பழுதன்றிவமைச்சனுகப் பரிந்துமேவீற்றிருந்து
தழுவியேவாழ்ந்திடாமற் ருழ்ந்துமேயேகுமென்பின்
இழுவுறவாறேனன்றே யிசைவறுமடுக்காதப்பா.

வசனம்.

கேளுமப்பா சத்தியகீர்த்தி முனிவனைப்பணிந்து நீதிவழுவாமல் நடப்பதைவிட்டு நீயென்பின் வருவேனென்பதுசரியல்ல நான்துயரமுறுங்காலையில் நீவருவது தகுதியல்லவென்றுணராததேன் மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

உந்தனைப்பணிந்தகையா லொருவரைப்பணியமாட்டேன்
எந்தனைப்போகச்சொன்னு லிறைவனையுயிரைமாய்ப்பேன்
சொந்தமென்பெண்டீர்பிள்ளை சோறுடன்சுகமும்வேண்டேன்
இந்தநற்றுயிலைப்போக்கி யிதோகாவியணிந்திட்டேனே.

வசனம்.

கேளுமென்னுண்டவனே தங்களைப்பணிந்து மினிமற்றொருவரைப் பணியமாட்டேன் நான் சோறுசுகம் பெண்டீர்பிள்ளை நாடுநகரமும்வேண்டே னிதோ நானுங் காவியணிந்துக்கொண்டேனுயிர் வேந்தனே.

சத்தியகீர்த்தி இ-ம் சுருட்டி-சாப்பு.

பல்லவி.

எப்படிதனிப்பேன் யுமைப்பிரிந்து எப்படிதனிப்பேன்

அநுபல்லவி.

இப்படிபுமயன் எழுதினவிதிதானே
கைப்பிடிகிளிபோல காத்தோரைப்பிரியேனே எப்

சரணங்கள்.

பட்சியவயங்காக்கும் பாவனையைத்தொட்டே
ரட்சித்தெனையிடிக்கி யிருந்தவன்னாலைவிட்டே எப்
விழியிமைகாக்கும் விதமாசுவிதுமட்டே
இழிவன்றெனைவளர்த்த எந்தைவன்னாலைவிட்டே எப்
சேயைத்தாய்பாலிக்குஞ் சிறிக்கதியாயுற்றே
காயத்தைவளர்த்திட்ட கருணைக்கடலைவிட்டே எப்

பரவுகுஞ்சினைக்காக்கும் போஷணைதனையிட்டே
காத்திலெலந்தனையேந்திக் காத்தவன்னாலவிட்டே எப்
உலகில்வாழ்வதை ஓஓ வேண்டேனயம்
அலவெளில்வாய்குவே னரசனேயுனக்கபயம் எப்

சந்திரவதிவிருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யரசரைப்போற்றிநாளு
மொப்பவேயிருந்தாய்நீங்கி னுயிருடனிருக்கமாட்டாய்
இப்பவேநமக்குவந்த விடர்நீங்கும்வரையில்நீதான்
கப்பியேயெங்களோடு கனமுடன்வருவாய்மந்திரி.

வசனம்.

கேளாயப்பா சத்தியகீர்த்தி நாளயதுபரியந்திர மரசருடன்வாழ்ந்திருந்த நீயிப்போது பிரிந்தாலுயிர்தாளமாட்டாய் வந்தகஷ்டமெல்லோரு மனுபவிக்கலாம் கூடவேவருவாயப்பா மந்திரி.

அரிச்சந்திரன் கண்ணிகள் சங்கராபரணம் தாளம் சாப்பு.

உந்தன் செயலிதுவோ ஓசிவமேநீ தந்தருளிதுவோ

வந்தகெதிகளெல்லா முந்தன்தயவென்றெண்ணி
சிந்தைமகிழ்வுகொண்டே னெந்தனையாளுன்னி உ

நதிக்கரையோரம்வந்து சதியுடனேமகனுளம்
விதியைநினைந்தேதறை கெதியெனப்பள்ளிகொள் உ

அமைச்சனுங்கோடென்று வழுதபரதேசியாய்
அடுத்தெனக்காக்கவேநீ யமைத்துவஞ்சுசியா உ

இன்னமெனக்குத்தன்ப மெதுவந்தெய்தாலுந்தானே
என்னைக்காப்பதுநீயே யேந்துமான்கரத்தோனே உ

போது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசனுந்தேவியும் பாலனும்சத்தியகீர்த்தியும் சரயுநதிக்கரையருகிலிருக்க விஸ்வாமித்திரமுனி சுக்கிர பகவானை நட்சத்திரத்தரகருய் வருகும்விதங் காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன் தரு இம்-தோடி தாளம் ஆதி.

பல்லவி.

சமயமிதுவேவருவீர் சுக்கிரமூர்த்தி சமயமிதுவேவருவீர்

அநுபல்லவி.

இமையமாதேவர்கள்முன்னே யெனக்குவாக்களித்ததே ச

சரணங்கள்.

வேதியனுகவேபட்டு வேட்டையச்ரையிற்கட்டி
சாதுர்யவார்த்தைகளாடி சமர்த்துடன்குதித்தோடி ச
திரிசங்கின்பாலநாடுந் திகழும்பணிகளெல்லாம்
பறித்துமேகாசிவரு பற்றச்செய்தேனெல்லாம் ச
கையிற்கிட்டியுந்தாளுங் கனத்தபிரம்புங்கொண்டு
ஓயிலாகநடைநடந்து ஒப்புந்தரகனென்று ச

விஸ்வாமித்திரன்வசனம்.

போற்றி போற்றி சுக்கிரபகவானே போற்றி.

சுக்கிரபகவான் வசனம்.

கேளும் கௌசிகமாமுனியே நீயென்னேயிந்த வேடங்கொண்டு வரும்படி கோறினதை தெரியச்சொல்லவேணும் ரிஷியே.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

சுக்கிரமூர்த்திகேளாய் சொல்லரிச்சந்திரன்பால்
உக்கிரமுடனேகாசி வுடன்சென்றுன்திறத்தினுலே
கக்கிஷப்படுத்திப்பொய்யைக் கதறிடச்செய்யவேண்டும்
புக்கிலேனென்ருல்பொன்னேப் போடெனவருத்துவாயே.

வசனம்.

கேளுஞ் சுக்கிரமூர்த்தியே அரிச்சந்திரனுடன் காசிக்குத் தரகனுய்ச்சென்று அதிக கஸ்திப்படுத்தி அவனேப் பொய்சொல்லச்செய்ய வேண்டியது அப்படிக்கிச் சொல்லாவிடில் 48-நாள் கெடுவில் பொன்னே வாங்கவேண்டுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

இன்னமுஞ்சொல்வேன்கேளா யிடுமவன்குருமேலாணே
வின்னமதாளுங்கிட்டி வேர்தனுக்கணிந்துங்கல்லே
பன்னரும்முதலில்வைத்தே பறுக்கடாபொய்யன்ருேது
மன்னவனுரைப்பானுகில் மகிழ்வுடனழைத்தேவாராய்.

வசனம்.

இன்னமுங்கேளுஞ் சுவாமி அவன்குருவாகிய வதிஷ்டன்மேலாணேயிடும் அன்னுந்தாளுங் கிட்டியுமாட்டும் நெற்றியிலே கல்லேத் தாங்கச்சொல்லும் பொய்சொல்லச்செய்யும் சொன்னுல் சந்தோஷமாயிவடமழைத்துவாரு மில்லாவிடில் பொன்னே வாங்கிவருவீர் பகவானே.

சுக்கிரபகவான் விருத்தம்.

பொய்யதும்பேசச்செய்வேன் பூபனேபுலேச்சிமாரை
மையலால்புணரச்செய்வேன் மறுத்திடில்வறுத்தெடுப்பேன்
துய்யனேயரசன்மெத்த துதித்திடவிம்சைதன்னில்
நொய்யவேயிறுத்திப்பொன்னே நொடிக்குளேவாங்குவேனே.

வசனம்.

கேளும்முனியே பொய்பேசச்செய்வேன் நீச்சமாதரைப் புணரச்செய்வேன் அனேகவிதமான கோரங்களுஞ்செய்து அவனேயுமவன் தேவியையும் பாலனேயும் வருத்தப்படச்செய்து பொன்னேக்கொண்டு வருகிறேன்பாரும் அவனெங்கே யெனக்குக்காட்டும் விஸ்வாமித்திர முனியே.

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்படியே காட்டுகின்றேன் வாரும்பகவானே.

சுக்கிரபகவான் வசனம்.

மெத்த சந்தோஷ மிதோவந்தேன்.

நட்சத்திரேசன் தரு-இ-ம் கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

நட்சத்ரத்தரகன்வந்தான் நற்குணம்போக்கியே
துற்குணமேவிய நக்ஷ

அநுபல்லவி.

அட்சயகின்னர ரனேவரும்நடுங்கிட
தட்சணத்தோன்கூடத் தான்கண்டுலூடுங்கிட நக்ஷ

சரணங்கள்.

கவடுஞ்சூதும்பொய்யுள் கற்றவணிந்திரஜாலன்
தல்லினும்காருரியக் கருதிக்கிழிக்குஞ்சீலன்
தவிடுபொடியோனெஞ்சம் தகைத்திடுமெமகாலன்
தாழ்ந்திடினுந்தயவு தன்னேக்காட்டாதகோலன்
சாட்ட துன்பமதைக்
காட்ட நிலேயதனே
ஓட்ட அரசனேயும்
வாட்ட விதோ
தகதகதகத் திகுதிகுவெனவே
தத்தளிக்கவனல் கொப்பளிக்கவிழி
தாண்டிவரிச்சந்திரனே தேண்டிதுடித்தேஓடி
ஆண்டிதடருவாறுய் நோண்டிவசையைப்பாடி நக்ஷ



விஸ்வாமித்திரன்வசனம்.

இதோவிருக்கின்றானே யிவன்றான் கடன்கொடுக்கவேண்டியவன் இவன்றானரிச்சந்திரனென்று சொல்லப்பட்டவன் தெரிந்துக்கொள்ளுமையா; தரகரே.

தரகன் வசனம்.

இவனெவ்வளவு பொன்கொடுக்கவேணும் விஸ்வாமித்திர முனிவரே,

விஸ்வாமித்திரன் வசனம்.

கேளுமையா நட்சத்திரேசரே ஓர்வாலிபன் ஆணையின்பேரில் நின்று கவுண்டெறிந்தவுயரம் பொன்கொடுக்கவேணுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

அரசனேகேளாயிந்த ஆதவர்தரகர்கண்டாய்
வரிசையாய்பொன்னைநீதான் வழுவின்றிக்கொடுக்கவேண்டும்
சரசனேயன்னந்தண்ணீர் சார்வறயளிக்கவேண்டும்
பிறகிவர்வருகும்போது பெருமைசெய்தனுப்புவாயே.

வசனம்.

கேளாய் ராஜனேயிவர்தான் என்னுடைய ஆள் இவரையுன்னுடன் தரகராய்க் காசிக்கனுப்புகிறேன் இவருக்கு வேளைவேளைக்கியன்னங்கொடுக்கத் தடைசெய்யப்போகாது கெடுவில்பொன்னைக்கொடுத்து அவருக்குஞ் சந்தோஷஞ்செய்து அனுப்பவேண்டும் அரிச்சந்திரனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே நடந்துக்கொள்ளுகிறேன் முனிநாதா.

தரகன் தரு-இம்-ஆரபி தாளம்-ஆதி.

பல்லவி.

நீதா அரிச்சந்திரன் அந்தவிருடியின்பொருளகை
தருபவனாகிய நீதானு

அநுபல்லவி.

தருகக்கூடுமோமன்னு முனி
சாத்தியப்படிபணம் நேத்தியதாகவே நீதானு

சரணங்கள்.

எப்போயளிப்பாய் ரொக்கம் அடா
இயம்பிடுகெடுவில் நயமுடன்தெரிய நீதானு

எங்காட்டில்கொடுப்பாய் அடா
என்மனங்களித்திட பண்ணுவாய்மன்னு நீதானு

துலைதூரம்நடக்கலாகேன் என்
தூலமும்மெலிந்திடும் கால்களும்வலித்திடும் நீதானு

பசிபொருத்திடமாட்டேன் என்றல்
பராக்ரமமில்லையே அதற்கேதுசொல்லையே நீதானு

நம்பிவரவோவுன்னை அடா
நாட்டாற்றில்கைவிட்டு விடுவாயோசொல் நீதானு

தரகன் வசனம்

ஓய்ஓய் ராஜனே நீதா அரிச்சந்திரன் நானுன்பின்வரட்டுமா கடனைக்கொடுப்பையா எவ்விடங்கொடுக்கிறுய் சொல்லும்பிள்ளாய் ராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயனேதரகனேகேள் யானையின்மீதிலேதான்
ஐயனேவீரனேறி அரிகவுண்டெறியுமுச்சம்
ஐயனேபொன்தான்நானே அருமுனிக்களிக்கவேண்டும்
ஐயனேகாசிசேர்ந்தே யடியனுங்கொடுப்பேன்வாரீர்.

வசனம்.

கேளுமையா தரகரே ஒருவாலிபன் யானையின்பேரிலேறி கவுண்டெறிந்தவுபரம் பொன்கொடுக்கவேண்டும் காசிக்குச்சென்று தடையன்றிகொடுக்கிறேன் கூடவாருமையா.

தரகன் விருத்தம்.

என்னைநீயழைக்கவேண்டு மிழிவன்றிகார்க்கவேண்டும்
அன்னைப்போல்பேசவேண்டு மகிழ்ந்தெனைப்புகழவேண்டும்
பொன்னைநீகெடுவுதன்னிற் பொட்டெனக்கொடுக்கவேண்டும்
பின்னைவேறுரைப்பாயாகில் பேசினுன்பொய்யென்பேனே.

வசனம்.

கேளும் ராஜனே நீஎன்னை நீயேயழைக்கவேண்டும் வெகுஜாக்கிரதையாய்க் கார்க்கவேண்டும் சந்தோஷமாய்ப்பேசவேண்டும் என்பெருமையைக்கொண்டாடவேண்டும் கெடுவில் ரொக்கத்தைக்கொடுக்கவேண்டும் வேறுசொன்னல் பொய்பேசினுனென்பேன் ராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

பொன்னையுங்கெடுவுக்குள்ளே போடெனக்கேட்பதற்கும்
என்னைதெண்டிப்பதற்கு மெந்தையேயுமக்கேசொந்தம்
உன்னையென்குலத்திலேற்றி யோதிடுந்தெய்வம்போலுன்
தன்னையேபணிந்துநிற்பேன் தயாபராபோவோம்வாரீர்.

வசனம்.

கேளுஞ்சுவாமி தரகரே உம்மை யென்குலதெய்வந்தைப்போ லெண்ணி நடப்பேன் கெடுவில்பொன்னைக்கொடுப்பேன் அதற்காக வென்னைத் தண்டிக்கும்படியானபாத்தியத்தை யுமக்கேயுண்டுவாரும் காசிக்குப்போபோவோம் சுவாமி.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

இன்னமோர்சேதிசொல்வே னிதையுளந்தனிலேவைப்பீர்
நன்னயக்கறியுஞ்சாதம் நவிலொணுநெய்யும்பாலும்
வன்னமாயளிக்கக்கேளும் வழங்கியும்பொன்னையெல்லாம்
மன்னவன்கொடுத்தால்வந்த வழிக்கூலிவாங்குவீரே.

வசனம்.

கேளும் நட்சத்திரேசரே இன்னமொருசேதிசொல்லுவேன் நல்லகறியுஞ்சாதமும் நெய்யும்பாலுங்கேளும் கொடுத்தால் தரகுக்கூலியையுங் கேட்டுவாங்குமையரே.

தரகன் விருத்தம்.

இதுதானுசெய்வேன்சொல்லை யிரும்புபோற்சிலக்கக்காச்சி
மதுவதுநுதர்வான்போல மனமதுபதைக்கச்சொல்வேன்
கதம்பியேகுழைவுப்போது தாவெனப்பொன்னைக்கேட்பேன்
பதுமனேபொய்மைமெள்ள பகன்றிடப்புரிவேன்கேளாய்.

வசனம்.

கேளும் விஸ்வாமித்திர முனியே யிதுதானுசெய்வேனென்றிருக்கிறீர் பேசுகின்றவார்த்தைகளை சிலக்கக்காச்சிய யிரும்பைபபோலாக்கி கள்ளுகுடிப்பவனுடல் நடுங்குவதைப்போல் நடுங்கவுரைத்து மனந்தளர்ந்து நிற்கும்வேளை ரொக்கத்தைகொட்டடாவென்பேன் லதாகிலும் எதார்த்தம்பேசினல் பொய்சொன்னுனென்பேன் எப்படியாகிலுமுங்களுடைய பந்தயங்கெலிக்கச்செய்வேன் முனிநாதா.

நரகன் விருத்தம்.

தருகுவேனென்றாய்ப்பொன்னை நயவுடன்மனமகிழ்ந்தேன்
வருகவுஞ்சொன்னாலென்னை வழிபற்றிநானோபாலன்
கருகவுமென்னாலாகா கன்பசிதாவுமுன்னே
தருகவேவேண்டுமன்னந் தானுரைசெய்வாய்மன்னா.

வசனம்.

கேளாய் ராஜனே பொன்கொடுக்கிறேனென்றாய் சந்தோஷம் நானோ சிறுவன் பசிபொறுக்கேன் பசிக்குமுன் அன்னங்கொடுக்க வேண்டுமிதில் தடையுண்டோ சொல்வாய் மன்னா.

அரிச்சந்திரன் விருத்தம்.

உன்பசிமுன்னேதீர்த்து வுணவதுயானேகொள்வேன்
வன்மமுஞ்செய்யேனுந்தன் வாக்குக்கேயிடையூர்சொல்லேன்
கன்மனங்கொண்டுபாரேன் காத்துமேயும்மைவாரேன்
தன்மனம்கொண்டநாதா தாவுவோம்காசிவாரீர்.

வசனம்.

கேளும் சுவாமி வும்மை முன்போஜனஞ் செய்யப்பார்ப்பேன் வுமது வாக்கைமீரேன் கெட்டமனதுடன் நடக்கேன் தவிர திரேகத்தை குறைவின்றி பாதுகாப்பேன் காசிக்குப்போகலாம் வாருஞ்சுவாமி நரகரே.

அரிச்சந்திரன் தரு இ-ம் சங்கராபரணம்.

போவோம்வாரீர் போவோம்வாரீர் புகழும்காசி
மகிழ்வதாக போவோம்வாரீர்

நாடுவிட்டேவந்தோமிங்கு காடுதாண்டிச்செல்வோமங்கு
கொடுமெனும்பொன்னைத்தேடி கொப்பனவளிக்கவேண்டி போ
நாணமென்பதையும்போக்கி நாமிருந்தஸ்திதியும்நீக்கி
வானவர்களேற்றுங்காசி வாசனைப்பணிவோம்நாமே போ
கவுசிகன்செய்மாயைக்கண்டோம் கனமதில்வறுமையுண்டோம்
பவுசுளக்காசிசேர்ந்தே பாதகன்கடனைத்தீர்க்க போ

சந்திரமதி தரு-செஞ்சுருட்டி-ஆதி.

பல்லவி.

நடந்துவாடா யெந்தன் நற்றவத்தாலுற்றபாலா.

அநுபல்லவி.

கடைவெண்ணை யேகனியே
கனுவிலாச்செங் கரும்பேதேனே நட

சரணங்கள்.

மல்லிகைமுல்லேயேவாசம் மருவியமருக்கொழுந்தேகுமிழே
சொல்லிநந்தியேதாழை சொர்னமேசுறுக்கதாக நட

முப்பழமேமாணீன்ற மொழியொணுநவரத்தினமே
கற்பகமேகலிபலா கமுகேகதிர்பச்சையே நட

இருவாட்சிசெண்பகமே யெங்குங்கிட்டாமாணிக்கமே
அருமையாய்வளர்த்தவெந்தன் ஆசைமிகுதேவதாசா நட

தேவதாசன் தரு-துஜாவந்தி-ஆதி.

பல்லவி.

எப்படிநான் நடப்பேன் இம்மணல்மீதில்
எப்படிநான் நடப்பேன்

அநுபல்லவி.

அப்பப்பா வெந்தனுட லடிதணியெறியுதே
அருமையாயெனைப்பெற்ற அன்னை தந்தையேவாரீர் எப்

சரணங்கள்.

கொப்புளிக்குதேயெந்தன் குளிர்ந்தபாதங்கள்வாரீர்
கொடுமையிதைச்சகிக்க கூடவில்லேயோபாரீர் எப்

நாவுமுலர்ந்துதெந்தன் நடையுஞ்சோருதம்மா
நடக்கவினிமேலென்னல் நாட்டம்போதாதுசும்மா எப்

கோவுமிருந்துங்கன்றை குறையைப்பார்ப்பதுண்டோ
கிருபைபுரிந்துஎன்மேல் கிட்டவருவீர்கண்டோ எப்

மாருந்துடிக்குதெந்தன் மனமும்நடுங்குதையா
மாருதென்னறிவையா எப்
மயக்கமாகுதேபேசி

வேறுதடைகளொன்றும் வெளியேறுக்கிலேயெந்தன்
வேதனைநீக்கவாரும் வேந்தையேயென்னையா எப்

உச்சியெறியுதெந்தன் உலவுகாலெறியுதே
ஓடியென்கிட்டவாராய் உத்தமாசரியுதே எப்

அரிச்சந்திரன் கண்ணி-சாமர-சாப்பு

ஐயோமைந்தனே அடவிதன்னிலே
அலையவும் விதியோ
அன்னசதியோ காலகதியோ அயாமகனே
அப்பனே அழுகாதொடாமகனே

என்னசெய்குவேன் எந்தனற்பாலனே
ஏங்கவும் விதியோ
ஏமன்சதியோ காலகெதியோ அடாமகனே
இன்பனே இழையாதடாமகனே

பாரில்காரியமும் பதைக்கவும் நம்மையே
பற்றவும் விதியோ
பரன்சதியோ காலகதியோ அடாமகனே
பாலனே பதைக்காதேடா மகனே

மண்ணுளுவாயென்ற மகனே யென்மகனே
மாறவும் விதியோ
மாயன்சதியோ காலகதியோ அடாமகனே
மைந்தனே மயங்காதேடாமகனே.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்பா தேவதாசா இந்தமணல்மீதில் வைத்தாலுனது பாதங்கள் நொந்துதோ பயப்படாதே என்றேளின்பேரிலேறிக்கொள்ளுங் கண்மணியே.

அரிச்சந்திரன் விருத்தம்.

பஞ்சணைமெத்தைதாக்கின் பாதமுநோகுதென்பாய்
கொஞ்சருங்கிளியேதேனே கொதிமணல்மிதிக்கலாச்சே
நஞ்சதுவுடையபாம்பு நாடியேதுரத்தவெந்தன்
வஞ்சியேகளைத்தாய்தோள்மேல் வருந்தாமலேறிக்கொள்ளே.

வசனம்.

பெண்ணே சந்திரவதி பஞ்சணைமெத்தை மிதிக்க பாதம்நோகுதென்பாயே கிளியே யிப்போது மணலின்மீது நடக்கவும் பாம்புமுதலானதுகளுந்துறத்த ஓடினதாலுங் களைத்தாயென் தோளின்பேரிலேறிக்கொள்ளும் பெண்ணே.

சந்திரவதி விருத்தம்.

தவமுனியும்வஞ்சகத்தை மனதில்நாட்டித்
தானிரக்கத்தயாபரனே தடைகளன்றி
அவமதித்தேசரியெனவே யரசும்நாடு
மதிலுள்ளநவமணியுந் தனமும்நாதா
வுவம்பலவுமுமையேற்றிப் புகழ்கொண்டாட்
வுத்தமனேசுமையெனவே யளித்ததேவே
பவமடைவேனரகுறுவே னடியாளேறின்
பதிவிரதையெனுநெறியும் பலிக்காதன்றே.

வசனம்.

கேளுமென் பிராணநாதா வஞ்சகநினைவுடைய விஸ்வாமித்திர மகாரிஷி பாசித்ததற்கு வுமது நாடுநகரமுதலானதும் லட்சியமில்லாமல் கொடுத்துவிட்ட தயாநிதியே வுமதுதோளில் நானேறுவேனாகில் பாவத்துடன் பதிவிரதையெனும் நெறிமாறும் மனனிப்பீர் பிராணநாதா.

அரிச்சந்திரன விருத்தம்.

மட்டிலாமதிதயேந்திரன மகிழ்பெருந்தவத்தில்வந்து
மட்டிலாமதிவகுத்த மாதேயனகற்பினேர்மை
மட்டிலாத்துயர்வந்தாலும் மாறியேபனிபோல்நீங்கும்
மட்டிலாநெறியாளான மங்கையேநடந்துவாராய்.

வசனம்.

பெண்ணே சந்திரவதி யுனதுடையகற்பின பலத்தினல் நமக்குயேதுதுயர்வந்தாலும் பனிபோல்நீங்குமாதலால் நடந்துவருவாயே மனோரஞ்சிதமே.


தரகன் விருத்தம்.

சுடுமணல்மிதிக்கச்செய்தாய் சொக்கிடமேனிசெய்யான
கடுமனத்தேனுங்கொட்ட கருதிடஜலமிலாமல்
நெடுவழிவந்தேனுனபின நேக்கிதேதுயரம்போரும்
விட்டுவிடுபோவேனபொனனே வேண்டிலேனரசோனே.

வசனம்.

ஓய்ஓய்ராசனே நேக்கு இந்தவெய்யலில் நடப்பதினாலும் விஷப்பூச்சிகள் கடிப்பதினாலும் குடிக்கஜலங்கிட்டாதபடியினாலு மெத்தவருத்தமானேன் இனிநடக்கமாட்டேன ரொக்கமும்வேண்டேன போகிறேனப்பா வேந்தே.

அரிச்சந்திர மகாராசன் காசிக்குப்போகிற பாகம்.



அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி தாங்கள் வேதநெறி பிசகாதிருக்கிற பக்ஷத்திலிந்தப் பூச்சிகள் தங்களைத்தீண்டுமோ வேதியரே.

தரகன் வசனம்.

ஒய் ஒய்ராஜனே இதுஇருக்கட்டுங்காணு மென்றனினி யெடுத்து ஓரடிவைக்க லாகாது வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

நானெடுத்துக் கொண்டுநடக்கிறே னென்றேனின்பேரில் தயவுசெய்து யேறிக்கொள்ளுஞ்சுவாமி.

தரகன் வசனம்.

வெகுசந்தோஷம் வெகுசந்தோஷ மிப்போது தெரிந்தேன் நீசத்தியவான்றான் காணும் ராசனே.

அரி-தரு-இ-ம்-உசேனி-தாளம் சாப்பு.

பல்லவி.

நடந்தேநீவாராய் பெண்ணே பெண்ணே
தொடர்ந்தே நீவாராய் கண்ணே கண்ணே

அநுபல்லவி.

நடந்ததாற்பாதம் நாயகிவனத்தினில்
படர்ந்தகல்முள்ளதினல் பதைத்தடிநொந்தையோ நட

சரணங்கள்.

தடததிற்றங்காதே ரவிபோய் தங்கும்பொழுதீதே
படத்திலெழுதொணுப் பாவையாலிந்தப்
பாடுபடவபன்யதித்தவிதியாமுந்த நட

துக்கங்கொள்ளாதேபின்னேபின்னே துயராய்நில்லாதே
அக்கிரமமென்ன யவனியிற்செய்தோமோ
விக்கெதிரமக்கே யீசனிடப்போமோ நட

விலங்குவாழிடம் பெண்ணேரவை நாவறுண்டுமோடிடம்
ஜலங்கண்டவிடம் சங்கரனைப்போற்றிக்
கலங்காவில்லமல் களைந் நீகிடத்தற்றி நட

அரிச்சந்திரன் விருத்தம்.

சுடுமணல்படர்ந்திருந்த சுந்திரனைகடந்தே
கொடுமையாம்பவத்தைபோக்குங்கோமதியாற்றைக் கண்டோம்
படுமென்றன் றுயரைப்பார்த்த பரிதியும்ஸ்தமானன்
கடுத்திடுமிரவுதங்கிக் காலையில்முன்செல்வோமே.

வசனம்.

கேளுஞ்சுவாமி தரகரேயிதோ கோமதியாற்றருகில் வந்தோம் சூரியனு மறைந்தான் பாவிகள்நெஞ்சம் போன்ற விருள்கப்பியது இந்தயிரவையிவ்விடத்திலேயே போக்கியுதயத்திலெழுந்து முன்னுக்கு நடப்போம் சுவாமி.

தரகன் வசனம்.

அப்படியேசெய்யலா மகாராஜனே ஆனாலெனக்கு மெத்தவும் பசியாயிருக்கின்றதே யென்னசெய்வேன் ராஜனே.

அரிசபந்திரன் வசனம்.

சுவாமிதங்கள்பசியைத் தீர்க்கவேண்டியவைவரவழைக்கிறேன் வேதியரே.

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தியந்தணர்பசிடைப்போக்க
அப்பனேநடந்தலுத்த வருந்துயரதைமறந்து
அப்பனேசென்று கொஞ்சமருங்கனிகொழங்குதன்னை
அப்பனே தீவரத்திலறிந்துமேகொணருவாயே.

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி நடந்துவந்த அலுப்பைமறந்து நமதுவேதியரின் பசி தீரவேண்டி நல்ல கனிவர்க்கங்கள் பறித்து வருவாய் மந்திரி.

சத்திய கீர்த்தி சென.

ஆண்டவனே அப்படியே நான்போய் கொண்டு வருகிறேன் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்பா மந்திரி விஷப்பூச்சிகள் மிருகங்கள் முதலானது கண்ணிற் சிக்காமல் போய்வருவா யப்பா.

மந்திரிவசனம்.

அப்படியே போய்வருகிறேன்வேந்தனே.

சந்திரமதி வசனம்.

நஞ்சதுவுடையபாம்பு நாடிடச்செய்யான்பூரான்
நெஞ்சதிலிரக்கமில்லா நிர்மூடமிருகக்காட்டில்
பஞ்சைபோல்மந்திரிதானும் பலகனிபறிக்கச்சென்றான்
அஞ்சலென்றழுதே காசி ஐயனே அவனைக்காரே.

வசனம்.

ஓகாசிவாழும் விஸ்வநாதனே பலமிருகங்களும் விஷப் பூச்சிகளுலாவும்படியான காட்டில் வேதியர்பசி தீர்க்க மந்திரிகனி பறிக்கச்சென்றான் இருளோ கப்பிக்கொண்டது என்முறைக்கிரங்கிஅவனுக்கு யாதொரு துன்பம்வராமல் காப்பாய் காசிநாதா.

பொது விருத்தம்.

மந்திரிவிடைபெற்று நெடுந்தூரந்தாண்டி
மடவில்வரவிருள்கப்ப மனந்தள்ளாட
சந்திரவதி முறைகேட்டான் கயிலைநாதன்
சாராமல் விஷப்பூச்சிமிருகம்யாதும்
தந்திடா திருக்கவருள் செய்தேகாந்த
வருவிக்கசோலையென்று வமைச்சன்கண்டே
சுந்தரன்றன்பதந்துதித்தே யுள்ளேபுக்குச்
சொகுசான பழம்பறிக்கும் விதங்காண்பீரே

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே பதிவிரதாசிரோன்மணியாகிய சந்திரவதி முறைக்கிரங்கி பரமனிருளைப்போக்கி மிருகங்களும் விஷப் பூச்சிகளும்வழியில்நாடாமல் செய்யவும் மந்திரிஒருபழவர்க்கச்சோலையைக்கண்டுகனிகள்பறிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி-கண்ணிகள் இ-ம்-பிலஹரி தாளம்ஆதி.

கனிகள்பறிக்கிறேனே அந்தலைகமுற்றிலும்வுரை
நிலைமைக்குறியதோர்தலைமை வேந்தனிடகளையதுபோக்கிட

பலவின்கனிபறித்தேன் இதோ
பற்றியேமாங்கனி நற்றியேதேங்கனி
சுற்றியேகளைதளை முற்றிலும்நீங்கிட

அரிச்சந்திர மகாராஜனிடத்தில் சத்தியகீர்த்தி கனிபறித்துக்கொண்டு வருகிறபாகம்.



தேவதாசன் தரகன் சந்திரவதி அரிச்சந்திரன் சத்தியகீர்த்தி

கோவைக்கனிபறித்தேன் எந்தன்
 கொத்தவன் மகிழ்ந்திட அத்தனும்புகழ்ந்திட
சித்தநான்மகிழ்ந்திதோ வுத்தமமாம்வாழை — கனி

இளநீரிதோபரித்தேன் என்
 ஏந்தலின்பின்வருஞ் சாந்தமிலா அரும்
 சிந்தைபுரிபலன் பசியிதோநீங்கிட — கனி

காட்டின்விளாப்பறித்தேன்என்னை
 கருதியேயாண்டிட்ட பார்த்திபன்கொண்டிட்ட
 தருமகுணமாதுபெருமையாய்ப்புசித்திட — கனி

கிச்சிலியும்பறித்தேனிதோ
 கிளரொணுவிலந்தையும் தளரொணுநெல்லியும்
 பளமுளதிராட்சியும் குலமகனருந்திட — கனி

சத்தியகீர்த்தி வசனம்.

எந்தையேயெனதுகோவே யெளியருக்கிரங்குந்தேவே
சொந்தமாயடியேன்சென்று சொகுசுள கனிகொணர்ந்தேன்
வந்தவிவ்வடவிதனில் வருந்தியகளையைப்போக்க
விந்தமாயிதைபுசித்தே விடாய்தணித்திடுவீர்போற்றி

வசனம்.

கேளும் மகாராஜனே நடந்துவந்த அலுப்பினாலுண்டாகிய பசியைத் தணிக்கவேண்டி கனிவர்க்கங்கள் கொண்டுவந்தேன் புசித்து நீரருந்திடில் களைப்பு நீங்கும் மகாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

வெகுசந்தோஷமப்படியே செய்யலாமப்பா மந்திரி.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரே நக்ஷத்திரேசவன்பரே யுரைப்பேன் கேளீர்
வெய்யலில் நடந்தேவந்து வெம்பசிதீரவேண்டி
துய்ய நம்மந்திரிசென்று தோணவே கனிகொணர்ந்தான்
மெய்யரே புசித்தே நித்திரை மேவுவீர் காப்பேன் சுவாமி.

வசனம்.

சுவாமி தரகரே உமது பசி நீங்க மந்திரி சென்று திவ்ய மதுரமுள்ள பலவகையான கனிகள்கொண்டுவந்தான் தேவரீர் களிப்புடனே சாப்பிட்டு நித்திரை செய்வீர். தங்களை நான் காத்துக்கொண்டிருப்பேன் வேதியரே.

தரகன் விருத்தம்.

பாலன்னந் தயிருவெண்ணெய் பசிக்குண்டதல்லால்வேறு
சீலமில்லாதவிந்த செங்கனிபுசிப்பதில்லை
காலமும்வந்ததோ யிக்கருமத்திற்கென் செய்வேன்
ஆலமுட்கொண்ட நாதனருளிதென்றறிந்தேன் வேந்தே.

வசனம்.

ஓய் ஓய் ராஜனே நாம் பசித்தகாலத்தில் பால் தயிர் வெண்ணை சாதம் பச்சடிகள் சாப்பிட்டதேயன்றி யிப்பேர்க்கொத்த குரங்குகள் பட்சிகள் தின்னும்படியான காய்களை புசித்ததில்லை. இப்படி வாய்ந்தது விதிதான் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

காய்பழமுமக்களித்தே காதகனானென்றுன்
தோயுறுதயிருஞ்சோறுந் துண்ணானே வுரைப்பீரையா
நேர்ப்பெறக் கால்கள்சோர புனிதமாய் கண்பஞ்சேற
நாய்படாத்துன்பங்கண்டு நவில்வது சரியோநாதா.

வசனம்.

சுவாமி யுனக்குக்கனிகள் கொடுத்து நான் வேறு புசித்தேனோ நாம் வழியிற்பட்டபாடு பார்த்திருந்து மிப்படிக்குறைப்பது தர்மமோ ஐயரே.

சந்திரவதி விருத்தம்.

அரசராயுலகையாண்ட வண்ணலும்வருந்திக்கேட்க
பிரசுளமொழியுரைத்தே பிரியமதகற்றலானீர்
சுரந்தனிற்றயிரும்பாலுஞ் சோறுண்டோவுமதடிக்கே
கரமதுகுவித்தேனையா களிப்புடன் புசித்திட்டீரே.

வசனம்.

சுவாமி காட்டில் தயிரும் பாலும் கிடைக்குமா விந்தக்கனிகளைப் புசித்து நித்திரை செய்யும் வேதியரே.

தரகன் வசனம்.

ஓய் ஓய் ராஜனே உன்னைவிட வுன்பெண்சாதி மெத்த பசப்பி போல் காணுது உன் பிள்ளை வாய்நிறந்தா லின்னமெப்படி யாகுமோ ஆகட்டு மென்காமவசந்தான் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி சற்றே சயனித்துக்கொள்ளு மிவாளுங் கொஞ்சம் நித்திரை கொள்ளட்டும் வேதியரே.

தரகன் வசனம்.

ஒய் ராஜனே நீயெனக்கடங்கி நடக்கும்போது உன்னைச் சார்வாளுமெனக்கடங்கி நடக்க வேண்டியதா யில்லையா சொல்லும்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி யிவர்களெல்லோரு முமக்கடங்கின வாளென்றறிவீர் நாதா.

தரகன் வசனம்.

ஆம் ஆம் எனக்கு நித்திரை வருகிறது சயனித்துக்கொள்ளுகிறேன் ஆனால் நீருமும்மிட புருஷனும் எனக்கு நித்திரைவருமட்டுந் தாலாட்டவேணும் யிந்தப்பயல் கால்பிடிக்கவேண்டும். இந்தத் தடியன் யாதொருமிருக மென்னருகில் வாராதபடிக்கு காவல் செய்ய வேண்டும் பிள்ளாய்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்படியே செய்கின்றோம் வேதியரே.

தரகன் வசனம்.

ஒய்ஒய்ராஜனே நீகோட்டிலேயும் உன்னுடைய ஆம்பிடையாள் தலைமாட்டிலேயுமிருந்து தாலாட்டவேணும் வேந்தனே.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியேசெய்கின்றோம்சுவாமி
சந்திரவதிதாலாட்டல் இ-ம் நீலாம்புரி
ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரா
சீரார்ரவி குலத்து செம்மலரிச்சந்திரரை
பாரெது தூக்கவைத்த பண்வினரேகண்வளரீர் ஆரா
கூறுங்களவுடனே சொல்லொணுப்பொய்மொழியும்
வாதுகளுமேயுணர்ந்த மறையவரேகண்வளரீர் ஆரா
பட்டபாடெல்லாம் பார்த்திருந்துங்கானகத்தில்
சட்டமுடன்பாலன்கேட்ட சகலகுறுகண்வளரீர் ஆரா

ஈட்சேத்திரத் தாரகனுக்கு சந்திரவதி தாலாட்டுகிற பாகம்.



வேதமுறைச்கும் விதியறிந்துமெங்கடனே
சோதனைசெய்யும் சுந்தரனேகண்வளரீர். (ஆரா)
அப்பாவென்றே அபிநயத்தேமன்னவர்மேல்
ஒப்பித்தானேறியந்த வுத்தமனேகண்வளரீர் (ஆரா)
பாலனைமூதாலும் பைங்கொடியாள் நொந்தாலும்
காலனைப்போல்வருத்துங் கருத்துடையோய்கண்வளரீர் (ஆரா)
கனிபழுந்தேனென்றே-காட்டிற்கொணர்ந்ததெல்லாம்
இனிப்புடனேதான் புசித்தனிதக்கமிலோய்கண்வளரீர் (ஆரா)

பொது விருத்தம்.

மாதுமிவ்வார்தாலாட்டத் தரகனுன
மாபாவிவிழித்திருக்க வமைச்சன்தாக்க
சாதுவுறுகுணமுடைய பாலன்காலைச்
சருவிவரக்கரம்நோகச்சக்ரவர்த்தி
ஏதிந்தவிதிநமக்கேயிட்டாயென்று
மீசனடிதனை நினைத்தேயிருக்கும்வேளை
வாதுமெத்தப்புரிந்திடவேயெண்ணியந்த
வஞ்சகனுமுனிவன்செயும்வகைகாண்பீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே யிவ்விதமாய் சந்திரவதி தாலாட்டத்தாகன் விழித்துக்கொண்டேயிருக்க மந்திரிகாவல்செய்ய தேவதாசன் கால்பிடிக்க யிவைகளைக்கண்ட அரசன் விதியை நொந்துக்கொண்டிருக்க பாதகத்திற் கஞ்சாத விஸ்வாமித்திரன் யாகஞ்செய்யும் விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-அகவல்.

ஆதிபராசத்தி யம்மணிரேணுகா
கோதிலாக்குணத்தி குமரிநீகௌரி
உம்பர்க்குவீரி யுலகாக்குமாரி
அம்புறுகரத்தி யடங்காப்பிடாரி
நீலிவிமலி நிகழ்த்தொணுச்சூலி
பாலியென்னுளம் பாலித்திடுங்கோயலி
பேச்சிப்பிணத்தி பிங்களிஜகத்தி
ஆச்சிவபாவி யறியொணுபாதவி
பேய்ப்படையாளே பெரும்பூததுரைச்சி
வாய்க்கவுன்னருளிதோ வருந்தினேனடியேன்
இரிசிகாட்டேரி யெக்காளிருத்திரி
சரிவுனக்கெவரையுஞ் சாற்றிடப்போமோ
சமயமீதம்மா சாம்பவியெனக்குன
அபயமேதருக யருள்புரிவாயே.

பூதகணத்தில் பொல்லாததுஷ்ட
வேதாளமொன்றை, விடையதுவளித்தே
என்முனேவருக விறைமேயபுரிவாய்
நன்மையாயுண்டியும் நானதிற்களிப்பேன்
தவிர்க்காதென்முறை தயாபரிபோற்றி
அவிர்ப்பாகமிதோ வளித்தனன்சரணம்.

பொது-விருத்தம்.

பாம்புபோற்சீறிச்சீறி பற்களைமிகக்கடித்தே
தேம்புறுசுடரைவாயால் தேக்கியேவிகாரரூபம்
சோம்புளபல்லைக்காட்டி குறுமுனிமுன்னதாக
விம்புகள்பலவாய்ப்பேசி வேதாளந்தோன்றிற்றன்றே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே யிவ்விதம் விஸ்வா மித்திரன் தோத்திரஞ்செய்ய அம்பிகை மனமகிழ்ந்து தன்னுடைய பூதப் படைத் தலைவரி லொருவனையனுப்ப அவன் முனிவன்முன் தோன் றுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

வேதாளம் வசனம்.

சுவாமி என்னையழைத்த காரியந்தெரியச்சொல்லவேண்டும் ரிஷியே.

விஸ்-விருத்தம்.

புவனமதையதஞ்செய்யவலுமைபூண்ட
பூதமேகோமதையின்கரையிற்காண்ப
புவனமதையாண்ட அரிச்சந்திரன்பாலன்
பூதேவிக்கொப்பானமாதினோடு
புவனதிற்றனக்குநிகரில்லாமந்திரி
பூசாரனுஞ்சயனிக்கக்காக்கிறார்கள்
புவனமெலாமடுக்குவுநீயிபட்டிமன்னன்
பொரிகலங்கிப்பொய்யுரைக்கப்புரிகுவாயே.

வசனம்.

கேளாய்வேதாளமே கோமதை ஆற்றின்கரையருகில் நட்சேத் திரேசர்சயனிக்க அவருக்குக்காவலாக சந்தியந்தவரா அரிச்சந்திர னும் சந்திரவதி தேவதாசன் சத்தியகீர்த்தியிவாள் காவல்புரிகிறார் நீசென்று உன்திராணி யெல்லாங்காட்டி வேதியனைமிரட்டி மன்ன னால் பொய்பேசும்படியாகச் செய்வாயப்பா வேதாளமே.

அரிச்சந்திர மகாராஜனிடத்தில் வேதாளம் வருகிறபாகம்.



சத்தியகிர்த்தி சந்திரவதி அரிச்சந்திரன் தரகன் வேதாளம்

பொது-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வேதாளம்வந்ததே முனிவிடுத்த வேதாளம்வந்ததே

அநுபல்லவி.

பாதாளத்தினில் பதுங்கிமறைந்திடினும்
பத்தியிழுத்துதிரம் பரிவாய்குடிப்பேனென்று (வே)

சரணங்கள்.

புவனமெங்கும்புகழ் போன்றவரசேயுனை
பொடிப்பொடியாக்கி யேசுவேன்என்
கவனமறந்தேவென்முன் கருதிவந்திடினுனை
கண்டித்துதிரமென் மேல்பூசுவேன்
சவமாயுனைவதைத்தே சதைவேறெலும்பாக்கி
சாதித்தென்பசிதீர சாங்மாய்க்கொள்வேனென்றே (வே)

வேதாளம்-விருத்தம்.

ஆரடாவிவ்வனத்தி லச்சமும்பயமில்லாமல்
சீரதாய்வரவுமானாய் சிறிக்கியார்பயலாராளார்
வீரமாய்ப்படுத்திருக்கும் வேதியர்க்கள்ளனாரோ
கூரடாயவனைநானுங் கொப்பனவிழுங்கத்தானே.

வசனம்.

அடாசற்றுமஞ்சம லிந்தவனததில் நீயார் அவள்யார்பயலார் ஆளார்பார்ப்பானர் சொல்லடாசொல்லு நானதோபடுத்துக்கொண்டிருக்கிற வேதியனைத்தின்று யென்பசிதீறுவேனடாபயலே.

தரகன் வசனம்.

ஓய் ஓய் ராஜனே அப்பாமந்திரி அம்மா சந்திரமதி யிதென்ன ஐயோ எப்படியெனக்கு அந்தவார்தலைத கேட்டே பாதிபிராணன் போய்விட்டது என்னைக் காவுங்கள்.

அரி-வசனம்.

சுவாமிவேதியரேநீ ரொன்றுக்கும் பயப்படவேண்டாம்நானிருக்கின்றேன்பொறும்அந்தவேதாளத்தைநான் விசாரிக்கின்றேன்ஐயரே.

அரி-விருத்தம்.

உரமுடனென்னைக்கேட்ட வுத்தமாகேள்வேதாளா
அரசன்நானயோத்தியாண்டோ னவளெந்ததேவிபாலன்

திரமுடனித்திரைசெய்வோர் திகழ்பெருந்தரகராகும்
கரமதுபணிவோன்மந்திரி காணுவாயப்பாநீயே.

வசனம்.

கேளாய்வேதாளமே நானயோத்திராஜன் இவளென்பத்தினி இவனென்குமாரன் இவனென் மந்திரியிவரேசகௌசிகராலேவப்பட்டதாகரென்றறிவாயப்பா.

வேதாளம்-வசனம்.

அடாராஜனே நீமெய்பேசினுய் சந்தோஷமானல் என்பசிதீர மாமிஷந் தரகன்தேகமென்றறிவாய் மகாராஜனே.

தரகன் வசனம்.

சத்தியந்தவறாத அரிச்சந்திர மகாராஜனே வேதாளமென்னை தின்னுவேனென்கிறான் ஆவிசோறுது அடியேனுன்னுடைய வாக்கைநம்பினன்வந்தேன் ரக்ஷியுமையாவேந்தனே.

அரி-வசனம்.

சுவாமி அடியேனிருக்கின்றேன் நீரொன்றுக்கும் பயப்படவேண்டாந்தரகரே.

அரி-வசனம்.

கேளாய்வேதாளமே யுன்பசிதணிக்க விந்தவேதியர் மாத்திரமுதவாரென்றறிந்து கொள்வாயப்பா.

வேதாளம்-வசனம்.

அடா ஆஆ வென்ன ஆங்காரமாய்த் தரகனைக்கொடுக்கேனென்றுயுன்னையிந்தவாளினல் யெறிந்து அந்தக்கொழுத்தவேதியனைப் புசிக்கிறேன் பாரடா பார்.

தரகன் வசனம்.

ஐயையோ வேதாளங்கிட்டவருகிறதே என்னசெய்வேன் யென்னசெய்வேன்.

[illegible]ன்-வசனம்.

சுவாமி யிந்த [illegible] ந்தைக்கண்டா யிப்படி நடுங்குறீர் பயப்படாதிரும் அந்த [illegible]யாகுங் கெதியைப்பாரும் தரகரே யுமக்கு முன்னிதோ நானிருக்கிறேன்.

சந்திரவதி வசனம்.

சுவாமியிதோ தேவதாசனுக்குமுன் அடியாள்நிற்கிறேன்

சத்தியகீர்த்தி வசனம்.

வேதியரே பயப்படாதேயு மிதோ நாவென்தாயாருக்கு முன் நிற்கின்றேன் திடமாயிருஞ்சுவாமி.

அரி-விருத்தம்

அடவிபூதத்தின்மிக்க வங்கபாரம்படைத்தோய்
அடவியிலென்பின்பற்றி அய்யரும்வந்தார்கண்டாய்
அடவியிற்றடமறித்தே யடஞ்செய்யத்தகுமோநீதான்
அடவியிலவரைநீக்கி யடியனைப்புசிப்பாயப்பா.

வசனம்.

கேளாயப்பா வேதாளமே என்னைநம்பிவந்த வய்யரைமாத்திரம் விட்டுயென்னைப்புசித்துப் பசிதீருவாயப்பா.

தரகன் வசனம்.

அப்படியே செய்யச்சொல்லும் சத்தியந்தவறுவேந்தரே.

வேதாளம்-விருத்தம்.

உங்களைக்கொல்லவென்மன மொவ்வலேன்மன்னுகேளாய்
தங்கமாய்ஜெர்லிக்குந்திரேகத் தரகனைப்புசிப்பேன்பின்னும்
எங்களினெஜமானுக்கே யிவன்தலைகொண்டேயேகி
பொங்கமாய்பாதத்திட்டே போற்றிடில்மகிழுவாரே.

வசனம்.

கேளாய்ராசனே உங்களை நான்புசிக்க மாட்டேன் தரகனையே புசிப்பே னவனுடைய சிரசை என்னெஜமான் முன்கொண்டுபோய் வைத்தால்மெத்த மகிஷியடைவார் மன்னனே.

தரகன் விருத்தம்.

அரசனேகோவேயுன்னை யண்டினோர்தன்னைக்காத்தாய்
அரசனேயேழைநம்பி யடவியிற்கூடவந்தேன்
அரசனேயிங்கேயென்னை யருந்திடப்பூதநதன்னை
அரசனேவரச்செய்தா ஆ-ஆ-ஆ இதுவுநன்றே.

வசனம்.

கேளாய் ராஜனே யுன்னை நம்பினோரை யெல்லாங் காத்தாய் அதைக்கேட்டு நானும் நம்பிவந்தேன் என்பேரிலேதோ கவுடுநினைத்து என்னைப்புசிக்க யிந்தபூதத்தையும் வரவிட்டாய் சரிசரிவேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நான்வரவிட்டேனென்று நவின்றிடுமையாகேளுந்
தானமும்சத்தியநீதித் தன்மையுமறிந்தோர்நீரோ
ஏனிந்தவெண்ணங்கொண்டீ ரேழைமேற்கோபமானீர்
மான்மழுதரித்தோனுனை மாயமதறியேன்போற்றி

வசனம்.

சுவாமி நான் வரவிட்டேனென்பது தருமமா சிவனறிய வெனக்கு இந்தபூதம் வந்தமாயந்தெரியாது வேதியரே.

தரகன் விருத்தம்.

அறிகிலேனென்றுசொன்ன வரசனேயுரைக்கக்கேளாய்
விரிசடைமுனிவன்பொன்னை வேண்டிடாதிருக்கவல்லோ
சரிமொழிசொல்லிப்பூதஞ் சாந்திடவிட்டாயென்மேல்
தெரிந்ததுவுனதுசத்யந் தின்புயாவோட்டுவாயே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா நீகொடுக்கவேண்டிய பொன்னைத் தப்பித்துக்கொள்ள விந்தப்பூதத்தை வரவிட்டாய் நான் பொன்னை வேண்டேன் போய் விடுகின்றேன் இல்லையென்றுலிந்த பூதத்தை வதைசெய்வாய் ராஜனே.

சந்திரமதி விருத்தம்.

கள்ளமுமோசவெண்ணங் கருதியேமன்னர்தன்னை
வள்ளலென்றுணர்ந்திடாமல் வஞ்சகரென்றுசொன்னீர்
கொல்லவந்ததுவோபூதங் கொடுமைதான்செய்ததேது
நல்லதேவுமக்கேநீதி நாதரேயிருப்பீர்சும்மா.

வசனம்.

சுவாமி கள்ளங்கபடு தெரியாத அரசரை வஞ்சகனென்று சொல்வது தருமமோ வேதியரே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

வேந்தனேயடியேன்செப்பும் விண்ணப்பமொன்றுகேளீர்
சாந்தமதென்னம்போகா சண்டாளன்சூதாதீதாகும்

பந்தாவேதாளத்தைப் பதைத்திடவதைப்பீர்நாமுஞ்
சேர்ந்திடகாசிகாலை சீக்கிரப்படுவோம்நாதா.

வசனம்.

சுவாமி இனித் தடைசெய்வதினாற் பிரயோசனமில்லை இந்தப்பூதம் விஸ்வாமித்திரனுடைய மாய்கையாகுமிதைத் தீவரத்தில் வதைத்து நாம் முன்னுக்குப்போக வெத்தனப்படுவீர் வேந்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே செய்கிறேனப்பா சத்தியகீர்த்தி.

வேதாளம்-விருத்தம்.

ஆயுதமில்லாப்பேயா ஆண்மைகள்படைத்தேயென்னைப்
பேயென்றும்பூதமென்றும் பேசுறாய்தகுதியன்றே
நாயதுகோலைப்பற்றி நமிக்கிடும்வாறுபோல
தேயுறேன்பாப்பான்தன்னை சீக்கிரம்பாராய்மன்னா.

வசனம்.

கேளாய் அரசனே நீமெத்த ஆங்காரமாயென்னைப் பூதமென்றும் பேயென்றும் பேசுகின்றாய் நாய்தோலை மெல்லுவதுபோல அந்தத் தரகனை மென்றுதின்கிறேன் பாராய் வேந்தே.

பொது-விருத்தம்.

இவ்விதப்பேசிப்பூத மெரியனலுடனேகிட்டி
கவ்விடத்தரகன்தன்னை கருதியேவரவேகண்ட
செவ்விளமுலையாள்தானுஞ் சினங்கொண்டுபுல்லைத்தாங்கி
ஒவ்வியேகணவற்கீய வொடுங்கும்வாரறிகுவீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களேபூதமானது தரகனைப்பிடிக்க அருகில் வரக்கண்ட சந்திரவதி ஒருதுரும்பையெடுத்து அரிச்சந்திரமகாராஜன்கையில் கொடுக்க அதினால் பூதம் மடியும்விதங் காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி—விருத்தம்.

மன்னிப்பீரரசேயந்த மாமுனிவிடுத்தபூதம்
இன்னமைதனில்மரித்த யேந்தியித்துரும்பைநீரும்
உன்னிதவெழுத்தையோதி யுருவேத்திற்றாக்கிநாதா
சென்னியும்பிளந்தேவந்த செருக்கெலாமழியுந்தானே.

வ-ம். கேளுமென் பிராணநாதா ஆயுத மில்லையென்று இகழ்ந்துபேசிய மிருகத்தன்மைபூண்ட பூதத்தின்பேரிலடியாள்தரு மித்துரும்பை தாங்கள் கையால்தாங்கி பிராணத்தைஒதித்தாக்கில் மடிந்துபோகுஞ் சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேசெய்கிறேன் என்பிராணநாயகி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

பூதமேவுனக்கேபுத்தி புகலுவேனினை வாய்க்கேளும்
காதமேவுனக்கேபுத்தி சருத்தகைதயகற்றிநீயிப்
போததிகாலமோடி புந்திட நிலைக்கலாகும்
வேதனைபுரிவேனென்றால் வீசுவேன்துரும்பாற்பாரே.

வசனம்.

கேளாய் துஷ்டவேதாளமே உன்னுடைய உயிர் பிழைக்கவேண்டுமாகில் வந்தவழியைப் பார்த்தோடிப்போவாய் இல்லாவிடிலுன்னையிந்தத் துரும்பினல் வீசுவேன்கண்டாய்.

வேதாளம்-வசனம்,

அடாபயலே உங்களைநான் அற்பமாய் மதித்திருந்தும் என்னைத் துரும்பால் வீசுகிறேனென்றாய் இதோபாரந்த வேதியனை நறநறவென்று மென்று தின்கிறேன்.

தரகன்-வசனம்.

அரிச்சந்திரமகாராசனே நீர்சொல்வதைப்பார்த்தா லெனக்குப் பயமாயிருக்கிறது வேதாளத்தின்கையில்வாளாயுதமிருக்கின்றது ஒரு புல்லைத்தாங்கி ஜெயிக்கப்போறாய் நீ யிறப்பது என்னையுங் கொல்ல யோசிக்கிறாய் ஐயையோ என்னசெய்வேன் சிவமே.

சந்தி வசனம்.

ஐயரே நீர் பயப்படவேண்டாம் வல்லவருக்குப் புல்லே ஆயுதமென்பது தெரியாதா பயப்படாமலிரும் வேதியரே.

சத்தியகீர்த்தி-வசனம்.

கேளுமகாராசனே தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல்லவிதியிருக்கத் தாங்கள் வேதாளம்பேரில் தயவுகாட்டுவதில் குணங்கானேன் சீக்கிரத்தில் வதைப்பீரென்றுண்டவனே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியானலிதோ தாங்கினேனப்பா சத்தியகீர்த்தி.

பொது—வசனம்.

கேளுங்கள் சபையோர்களேவேதாளமானது வேதியரின்பேரில் பாயக்கண்ட அரசன் சினந்து புல்லுக்கு மந்திரமோதித் தாக்கினவுடன் பூதமானது மடிந்ததென்றறிவீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தரகரேயும்மைநாடித் தாவியேயிங்குவந்த
பரபரப்புடையபூதம் பதைத்துமேதரையிற்சார்ந்தே
அரவமுமடங்கிப்பிரேத மானதேயருக்கன்ருனுங்
கிரமுடனுதித்தான்திவ்ய திருக்காசிபோவோம்வாரீர்.

வசனம்.

கேளுஞ்சுவாமி தரகரே யும்மைக்கோறிவந்த பூதமுமடிந்தது பொழுதும்விடிந்தது நாமினிமுன்னுக்குச்செல்வோம்வாருமையரே.

தரகன்-வசனம்.

அப்படியா பார்த்திரா நான் ஒருமந்திரத்தை மனதில் சொன்னேன் வேதாளமடிந்தது மன்னனே.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆம்ஆம் எல்லாம் தங்களால்நடந்த மகிமைதான்சுவாமி.

தரகன்—வசனம்.

அடாராஜனே இனி முன்னுக்கு நடக்கமாட்டேன் பொன்னைக் கொடும்பிள்ளாய் கொடும்.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி இந்த ஆரணியத்தில் பொன் கிட்டுமா நான் முனிக்குச் சொன்ன வாக்கின்படியே காசிக்குப்போய்த் தருகிறேன் வேதியரே.

தரகன்—தரு-இ-ட-மோகனம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாரேன்தாரேனென்று சாதிக்கிறுயல்லால்
தரும்வழியேதுசொல்லடா அடாசந்தாய்
தரும்வழியேதுசொல்லடா

அநுபல்லவி.

வீரமாகப்பேசி நேர்மையாய்க்கைவீசி
காரடவியிலோசி கோரஞ்செய்கிறுயோசி (தாரே)

சரணங்கள்.

நரிகளும்பதருதே அடாசந்தா
நாய்களும்வருகுதே
கரிநாயும்வருகுதே காக்கையும்கதருதே
சரிமனம்வெறுக்குதே சங்கட்டம்பெருகுதே (தாரே)

இன்னமெங்குபோராயிக் காட்டினில்
ஏதுசெய்வையோ கூறாய்
பொன்னைக்கொடுத்தாலாச்சு போவென்றுலொருபேச்சு
என்னை யிழுப்பதேச்சு என்சேஷிசுகம்போச்சு (தாரே)

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமியிதுதான் காசிக்குப்போகும்வழி இந்த பகற்காலத்தில் ஏன் திகிலடைகிறீர் காசிசேர்ந்து பொன்கொடுக்கிறேன் வேதியரே.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரம் தாகன்பேசியதைக்கேட்ட அரிச்சந்திரன் முதலானவர்கள் தியங்கிநிற்கும் சமயத்தில் விஸ்வாமித்திரமுனி வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு—இ-ம்-கரகரப்பிரியா-சாப்பு.

பல்லவி.

என்னசெய்வேன்நானே இனியேதுசெய்வேன்தானே.

அநுபல்லவி.

முன்னமேயிவன்சேதி முழுதுந்தெரிந்தாலும்
மூர்க்கத்தால்தேவர்முன் மோடாயாடிக்கெட்டேன்

சரணங்கள்.

தேளும்பூரான் விடுத்தேன்-விதவித
நீண்டும்பாம்புந் தொடுத்தேன்
வாழும்பாலன்தேவி வனமச்சனுங்கூடவே
வண்ணமாய்மனதினில் வாக்குக்கெட்டியாடவே-என்

பூதந்தன்னை விட்டேன்
பொடிமணல்சுட விட்டேன்
காதகமாயறியாதான் கையிற்றுரும்பதால்
வேதாளந்தன்னையே வீசினன்மறித்தால்-என்

அரிச்சந்திரமகாராஜன் தியங்கி நிற்கிறசமயத்தில் விஸ்வாமித்திரர் வருகிறபாகம்.



சந்திரமதி. அரிச்சந்திரன். விஸ்வாமித்திரன். தேவதாசன். சத்தியகீர்த்தி.

இப்பவனெதிர் செல்வேன்-தேவிமந்திரி
யிணங்குமுறை சொல்வேன்
எப்படியா மிவர்கடனைப்பிரிப்பேன்
எப்போவாசனும்பொய் யறைந்திடவுஞ்சிரிப்பேன்

அரிச்சந்திரன்-விருத்தம்.

படபடத்திடவேமேனி பனிநீர்போல்வேர்வைசோர
தடமதில்நடந்ததாலே தாளடிமெத்தநோவ
அடவியிலென்னைநாடி ஐயனேகோபமிஞ்சி
விடமதுவந்தவெண்ணம் விளம்புவீரெனக்குத்தானே.

வசனம்.

சுவாமி முனிநாதரே தங்கள் பாதம்நோக இந்தக்காட்டில் அடியேனைக்கான கோபமுடன்வந்தார்தெரியச்சொல்லும் முனிநாதரே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

மன்னவனேசத்தியமோங்க மகிழ்ந்துநீயரசுசெய்வாய்
கன்னநன்னடவிசார்ந்து கனிந்தபஞ்சாக்னிமத்தியே
நன்னருந்தவத்தினின்று நாதனைபணியப்போறேன்
என்னவுன்கருத்தெனக்கே யெடுத்துரைசெய்வாயப்பா.

வசனம்.

கேளாய் அரிச்சந்திரமகாராசனே நான்தவஞ்செய்யப்போகிறேன் உனது நாடுசேர்ந்து அரசுசெலுத்தி சுகமுடன் வாழ்ந்திருப்பாய் இதற்குள் கருத்தென்ன தெரியச்சொல்வாய் வேந்தனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

உனக்குநானளித்தநாட்டை யுத்தமாய்கருதிடேனே
தனக்குமேவேண்டுமானல் தாணியையாள்வீரல்லால்
எனக்கிந்தகுதுசெப்பி லேற்றிடேனெறியுமாரேன்
மனத்திடமிதைக்களிந்தே மாதவாநடப்பீர்போற்றி,

வசனம்,

கேளும்முனிநாதரேநான் தங்களுக்குத்தாரைவார்த்தநாட்டை ஒருக்காலும் விரும்பேன் நீரிவ்விதகுது செய்வதற் குடன்பட்டேன் தங்களாசிரமத்திற்கு எழுந்தருளுஞ்சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அப்படியா அரிச்சந்திரமகாராசனே கொஞ்சமிப்படி வாருந்தரகரே,

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

தரகரேநீர்தான்செய்த தாஷ்டீகமேதுங்காணேன்
வரவரபலத்துக்கொண்டான் வாய்மிஞ்சிப்பேசுவானுன்
கிருகிருவென்றேசுத்தி கிளிமொழியாளும்வாட
உரமுளகோரஞ்செய்தா லுன்னிப்பொய்சொல்லுவானே.

வசனம்.

கேளுஞ்சுக்கிரரே நீ ரவாள்பேரில் மெத்தவுந் தயவுவைத்திருப்பதாகத் தெரிகின்றது அரசன் மிகவுந்தைரியசாலியாகிவிட்டான் இவன்பெண்சாதிபிள்ளை வாடும்படிசெய்வீராகில் பொய்சொல்லுவானல்லது வேறில்லை பகவானே.

தரகன்-வசனம்

முனியேநீரொன்றுக்கும்யோசிக்கவேண்டியதில்லை நான்வேண்டிய சித்திரவிம்சைகள்செய்து பொய்பேசச்செய்கிறேன் முனிநாதா.

விஸ்வாமித்திரர்-வசனம்.

எனக்கு மெத்த விசனமாயிருக்கிறதுஇனியென்னசெய்யப்போகிறேன்உம்மால் பந்தயங்கெலிக்கவிருந்தேன் என்னெண்ணம் வீணாய்விட்டது சுக்கிரமூர்த்தியே.

தரகன்-விருத்தம்.

உரல்தனில்தலையைவிட்டு உலக்கைக்குநடுங்கப்போமோ
திரமுளதைரியத்தைத் தீட்டாமற்றியங்கலாமோ
அரசனைநீயேதோரு மரும்பொய்பைபேசச்செய்வேன்
பரமனையறிந்தேயுன்றன் பதியினுக்கேகுவாயே.

வசனம்.

மெத்தசந்தோஷம் உம்முடைய வார்த்தையை நம்பிப் போகின்றேன் எப்படியாகிலும் அரிச்சந்திரன்வாயில் ஒருபொய்யை வரவழைத்து என்னைக் காப்பாற்றவேண்டும் சுக்கிரமூர்த்தியே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

அப்படிஅரிச்சந்திரமகாராசனே கொஞ்சம்போதிப்படிக்கு வருவாயப்பாராஜனே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே வருகின்றேன் குருவே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

நான்சொன்னபுத்திகேட்க நாட்டாமற்போனுயென்னைத்
தான்செய்தபலனையெல்லாந் தனையனேமறந்துவிட்டாய்
வானெண்ணங்கொள்ளப்போகா வள்ளலே பொதுவாய்சொன்னேன்
தீனனேநீதானிர்த்தத் திருவெலாங்கைக்கொள்வாரே.

வ-ம். அப்பா அரிச்சந்திரமகாராசனே நான்உன்தந்தைக்குச்செய்த வுபகாரத்தைமறந்தாய் என்வார்த்தையுங்கடந்தாய் நான் ஒருவருக்கும் வெளியிடுகிறதில்லை நீமுன் எனக்குக்கொடுத்த அரசச்செல்வத்தை வாங்கிக்கொள்ளும் வேந்தனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அந்தணர்குடிகள்வேந்த ரறியவேயளித்தநாட்டை
பித்தநான்வாங்கினுலே பெருமையும்சத்யமுண்டோ
வந்தறங்கேட்போர்க்கீந்த வன்பெருமாளடைவேனுகி
னுந்தனுலிந்ததுன்ப முறுவனேவுணர்வாய்நாதா.

வசனம்.

கேளும் முனிநாதரே ஒருவருக்கு கொடுத்தபொருளைமறுபடியும் கேட்கும் எண்ணம் எனக்கிருக்குமா இந்ததுன்ப மனுபவிப்பேனே அது என்னுலொரு காலமுமாகாதென்றறிகுவீர் சுவாமி.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

அயனரியுந்தேவர்களுமென்றன்சொல்லை
  யனுவளவும்பிசகார்களன்றிச்செய்தால்
தயவன்றிசபித்திடுவேன்பொல்லாங்கெல்லாந்
  தான்வரவேயேவிடுவேன்தரணிதன்னில்
பயமறந்தவசுரர்களைப்பஞ்சுபோல
  பறக்கவைப்பேன்நீபயலேபதட்டமின்றி
நயம்விடுத்தேயெதிர்த்துரைக்கவுறவுமானுய்
  நன்றுநன்றிப்மாதர்தமைநாடுவாயே.

வ-ம். கேளாயரிச்சந்திரா மன்னர்மண்டலீகர் முதலானவர்களுமென்வார்த்தைக்குத் தடைப்பேசார்கள் அப்படிப் பேசினுல் உடனே அவாளை அதோகெதியில் ஆழ்ந்தச்செய்வேன் அப்படிக்கிருக்கஎன்னுடன் எதிர்வார்த்தையாடத் துணிந்தாயாகிலுஞ் சிந்தையில்லைநீசெய்தகுற்றம் பொறுப்பேன் இந்தப் பெண்களைக் கூடுவாயப்பா மகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தேவர்களும்முனிவர்களும் பாலர்தாமுந்
தெய்வமெனவுனைப்பணிதல் மெய்யானாலும்
பாவமிலாச்சத்தியத்தைப் பிடித்தநாளும்
பணிந்தன்றோநாடளித்தேன் பகன்றவர்போல்
தாவமுடனக்கிரமம் புரியச்சொன்னால்
தாவியும்நான்செயத்தகுமோ தனையன்றன்னைக்
கோபமுடன்சபித்திடினும் சகிப்பேன்காசி
கொண்டவுடன்பொன்கொடுப்பேன் குருவேபோற்றி.

வசனம்.

சுவாமி தங்களை யெல்லோரும்பணிவதுசரியே யடியேனும்பணிந்தன்றோ நாட்டையும் அரசையுங் கொடுத்தேன் சத்தியத்திற்கொவ்வாத செய்வதை செய்யச்சொன்னால் எப்படி ஒப்புவேன் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

காசியிற்சென்றுநீதான் கைதனிலோட்டையேந்தி
யாசித்தேபொன்னைவாங்கி யளிப்பதேயன்றிவேறு
யோசிப்பதுண்டோமன்னா வுலகத்தார்வகைபேசாரோ
யோசிப்பேகொடுப்பேனையா மெடுத்தலும்நீதியன்றே.

வசனம்.

அப்பா அரசே நீகாசிக்குப்போய் பொன்னை யாசகஞ்செய்து தானே கொடுக்கவேண்டும் கேட்போருக்கு கொடுக்கத்தகுந்தவன் போய் இரப்பது காட்சியென்றறிவாய் மன்னவா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அருந்தொழிற்புரிந்தேயங்கு அய்யனேயுமதுபொன்னை
வருந்திடாதளிப்பேனன்றி வறியனானிருக்கமாட்டேன்
தருமமுமறிந்தேயென்னை தகாததோர்செய்கைசெய்ய
கருதிடுமுனியேபோற்றி காசிக்கேயேகுவேனே.

வசனம்.

சுவாமி ஏதாகிலுந்தொழிற்புரிந்து உமது கடனைத்தீர்க்கின்றேன் சத்தியத்திற்கடுக்காத காரியஞ்செய்யேன் தாங்களிருப்பிடஞ் சேருவீர் நான் காசிக்குப்போகின்றேன் முனியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அம்மா பதிவிரதா சிரோன்மணியாகிய சந்திரவதி கொஞ்சமிப்படிக்கு வருவாய் தாயே.

சந்திரவதி-வசனம்.

அப்படியே வருகிறேன் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

மதிதயன்தவத்தில்வந்த மாதேயித்துயரங்கொள்ள
விதியதோதந்தைநாட்டை விரும்பியேசேர்ந்தால்ல
பதியினிலிருந்திடாமற் பரதேசிவந்தேன்பின்னே
கதிதப்பித்திரியுமுன்றன் காரியந்தகைமையன்றே.

வசனம்.

அம்மா சந்திரவதி மதிதயமகாராஜன் உன்னைப்பெற்றுவளர்த்த பெருமையென்ன நீயிந்த தரித்திரவரசன்பின் போகுங்கெதியென்ன ஐயையோ இதுவுமுனக்கு எழுத்தா நீ உன் தாய்விடுசென்று சுகத்திலிருப்பாய் அம்மணி.

சந்திரவதி-விருத்தம்.

தந்தைதாய்குருவுந்தெய்வந் தையலர்தமக்கோநாதா
விந்தையாங்கணவனன்றி வேறுண்டோகருதப்போமோ
வந்தையோமதிமயக்க வழிதனைமறித்துமேதான்
நிந்தையிவ்வார்த்தைகேட்டால் நிருபனுமகிழ்வான்போவீர்.

வசனம்.

முனிநாதரேகற்புடைய மாதருக்குக் கணவனேதாய்தந்தைகுரு தெய்வமெனும் நெறிதெரிந்தவராயும் இப்படி பேசுவது தகுதியல்லவெனக்கு விடைகொடுப்பீர் முனிநாதா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியானால் போய்வருவாயம்மா சந்திரவதி.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்பாமந்திரி சத்தியகீர்த்தி கொஞ்சமிப்படி வருவாயப்பா.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

அரசனைநானேகொண்டே னமைச்சநீதானெனக்கு
வரிசையாய்நீதிசொல்லி வாழாமல்வம்பனுகி
சரகதுபுத்திகாட்டிச் சாருதல்தகுமோவப்பா
காமதாகுவித்தேயென்பின் கனம்பெறவருகுவாயே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி நீயென்னுடன் கூடவிருந்து அரசுக்குரிய நெறிகளைசெலுத்தாம லிப்படி காட்டில்சஞ்சரிப்பது தகுதியல்லவென்பின் அயோத்திக்கு வருவாயப்பா.

சத்தியகிர்த்தி-விருத்தம்.

சீரனேமுனியேநீதான் செப்பியவுரைகளெல்லாம்
வீரனேநிலையிலின்பம் விரும்பினோர்க்கல்லால்வேனின்
மாரனைப்பழிக்குமென்றன் மன்னனைவிடுத்தேவாழ
சாரவேநாடேன்வேறு சாற்றுதலொப்பீர்போற்றி.

வசனம்.

கேளும் முனிநாதரே நீர் சொல்வதெல்லாம் அனித்தியவுடலைப் போஷிப்பவனுக்கே வேண்டியதாகும் நானெனது அரசனைப் பிரிய மனங்கொள்வேனென்றறிவீர் ரிஷியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்படியானல் போய்வருவாயப்பா சத்தியகீர்த்தி.

விஸ்வாமித்திரன்-வசனம்.

ஐயா தாகரே இப்படிவாருஞ் சுவாமி.

தாகன்-வசனம்.

இதோ வருகிறேன் விஸ்வாமித்திர முனியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

ஐயா சுக்கிரபகவானே நான் போய்வருகிறேன் எப்படியாகிலும் அரிச்சந்திரன் வாயில் பொய்வரும்படியாகச் செய்வீர்பகவானே.

தாகன்சொல்-வசனம்.

அப்படியே செய்கிறேன் நீர்விசனத்தை விட்டிருந்தவமுனியே.

விஸ்வாமித்திரன்-கண்ணிகள்-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

மோசம்வந்ததேபழிமுட்டையாச்சே விதியே
நேசம்விண்டோசெய்தமொழிநீங்கிடுமோ விதியே
இந்திரன்முன்முந்திச்சொன்னவென்றன்மொழி விதியே
பிந்திப்போகுமோதான்காணேன்பிரபஞ்சத்தில் விதியே
துயரம்வந்தாலுமேதளருமல்தூஷிக்கிறன் விதியே
அய்யாவென்னபுரிவேனின்னமறியேன்யாதும் விதியே
மன்னன்மந்திரிமனைவிபாலன்மதியொன்றுனர் விதியே
என்னவிதங்கெலிப்பேனுனியென்செய்குவேன் விதியே

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே கோபத்தையாற்றிவிட்டு கொஞ்சதூரம்வந்து ஐம்புலனையடக்கி ருத்திரமந்திரத்தைச் செபித்து விஸ்வாமித்திரன் அக்கினியையெழுப்பி அரிச்சந்திரனை தகிக்க அனுப்புகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன் அகவல்.

அம்சிறீம்ரூபா ஆனந்தமூர்த்தி
சமறீம்தேவ சரணமுன்வருவாய்
சிறிநசியென்றேன் சித்தங்குளிர்வாய்
சரியிதுகாலம் சாமியேயிங்கனே
கோறினே னுன்னை கொப்பெனவருவாய்
வீரியம்படைத்த வெந்தனல்சுடரே
சமயமீதையா சம்புவேகாத்திடும்
அபயமிட்டேநா னக்கினிதேவே
வேண்டினேன்மெத்த விரும்பியேபணிந்தேன்

அக்கினிபகவான்-வசனம்.

விஸ்வாமித்திரமுனியே என்னை வரவழைத்த காரியந் தெரியச் சொல்லவேண்டும் மகாரிஷியே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

தேயுவேயிந்தக்காட்டை திக்கெனவெரித்துக்கொண்டே
நோயுரவரசன்தேவி நுண்ணியமந்திரிபாலன்
காயுறவனலால்சுட்டு சுருக்கியேசாம்பலாக்கி
வாயுறவெனக்கேநல்ல வார்த்தைவந்தியம்புவாயே.

வசனம்.

கேளும் அக்கினியே கோமதையாற்றங் கரையிலிருக்கிற செடி களில்பாய்ந்து அண்டமளாவ தனலெழும்பி அரிச்சந்திரன்சந்திரவதி தேவதாசன் சத்தியகிர்த்தி இவாளைக்கிட்டி சுட்டு சாம்பலாக்கி யென க்குத் தெரிவிப்பாய் அக்கினியே.

அக்கினி விருத்தம்.

அரசனேவழுவாசத்திய னணங்கையோபத்தினிகண்டாய்
சரசமாயெரிக்கவென்றால் சத்தியமோயவள்நெருப்போ
சுரமதிலென்னைவளைத்தே சுட்டிடும்லோகமெல்லாம்
வரசையாய்சூழ்ந்தேகொஞ்சம் வருத்துவேனுனக்காய்த்தானே.

வசனம்.

கேளும் விஸ்வாமித்திர முனியே அரசனோ சத்தியவான் சந்திர வதியோ மகாபதிவிரதை அவள் நெருப்போ என்னைச்சுடும் அவாளை த்தகிக்க வென்றாலாகாது ஆனாலுமக்காக அவாளை வளைத்துக்கொஞ் சம் பயங்காட்டிவருகிறேன் முனியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

ஆனுலப்படியே செய்வீர் அக்கினிபகவானே.

பொது-விருத்தம்.

பூதத்தைவென்றுமப்பால் பூமியாண்டரசன்மற்றோர்
வேதனைதரகன்செய்ய வெறுப்பின்றிநடக்கக்காட்டி
காதகமுனிவன்றானும் கனலினால்வருத்தமெண்ணி
போதவேயேவஅக்கினி பொருமியேசூழ்ந்ததன்றோ.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய் வேதாளத்தைவதைத்தபின் தரகன்பேசும் வேதனைமொழிக்குள்ளாகி காட்டில் நடந்துவருவதைக்கண்ட விஸ்வாமித்திரன் அவாள்பேரில் அக்கினியையேவ அக்கினி சூழ்ந்துக்கொண்டதென்றறிவீர்கள் கனவான்களே.

தரகன்—வசனம்.

ஓய் ஓய் ராஜனே இதென்னகாணும் காடெல்லாம்பற்றிக் கொண்டு நெருப்புஇந்தமுகம் நோக்கிவருகின்றது ஐயையோ நானென்ன செய்வேன் என்னசெய்வேன் ராஜனே.

அரிச்சந்திரன்-வசனம்.

பொறும்பொறும் நீரொன்றுக்கு மஞ்சவேண்டாம் வேதியரே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அண்டகோளத்தையெல்லா மள்ளவியேபொறிகள்வீச
கண்டவர்மனங்கலங்க காற்றுடன்சேர்ந்தேமந்திரி
கொண்டல்போல்வருகுந்தீயின் குமிப்பெதோவறிந்தேநீதான்
விண்டிடவேண்டுமேனி வியப்புராமுன்னமப்பா.

வசனம்.

கேளாயப்பாமந்திரி இதேது விபரீதமான புகையுடன் நெருப்பு காட்டை வளைத்துக்கொண்டு வருகின்றது இதின் விபரமறிந்து சொல்லுவாய் சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

அடவியில்விஸ்வாமித்திர னணைத்தவிப்புதுமையாகும்
திடம்விடவேண்டாங்கோவே தீயினால்மடிந்திட்டாலும்
புடமதாயெரிந்திட்டாலும் பொய்யுரைப்புகலாச்சத்யம்
படமதாயெழுதிவைப்பீர் பண்புடன்மனதிற்றானே.

வசனம்.

கேளுஞ் சுவாமி நீர் அதை பிரியப்படப்போமோ இந்த அக்கினியினலெரிந்து சாம்பலாய்விட்டாலும் சத்தியம்பிசகாதென்னம் நிலையாகக்கொள்வீர் அரசரே.

அரிச்சந்திரன்-வசனம்.

இப்படி அளவிறந்த துன்பம்வந்தாலும் என்சத்தியம்பிசகாதென்றறிவாயப்பா சத்தியகீர்த்தி.

தாரகன்-விருத்தம்.

மன்னனேசுவாலைவீசு மக்கினிபுவியாள்மாந்தர்
வன்னமாய்க்காப்போர்தம்மை வதைத்திடுமுனக்கேன்துக்கம்
முன்னதாய்நெருப்பில்நானே மூழ்கிறேனுனக்குவேதை
தின்னமாய்நீங்குமென்றே தெளிவுடனிருப்பாயப்பா.

வசனம்.

கேளும் ராஜனே இந்தநெருப்பானது அரசனை நம்பிக் காட்டில் வந்தவரையே தகிக்கும் நானெரிந்துபோவேனுனக்குத் தொந்திரவும் நீங்கிப்போகும் விசனப்படாதேயப்பா ராஜனே.

அரிச்சந்திரன்—வசனம்.

கேளும் சுவாமி தாங்களடிக்கடி சுட்டிக்காட்டுதலடியேன் மனதிற்கு மெத்தவும் வருத்தமாயிருக்கின்றது இனியிப்படிப் பேசாதிருக்கவேண்டுகிறேன் வேதியரே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

எந்தனற்பெண்ணேமானே யிணையிலாமந்திரிபாலா
வந்ததோரனலில்நானே வருந்தாமல்முன்னேசெல்வேன்
வெந்தபின்நீங்கள்தானும் வெறுப்பின்றிகடன்கழித்தே
இந்தவேதியரைக்கூட்டி யேகுவீர்காசிதானே.

வசனம்.

அடிபெண்ணே சந்திரவதி அப்பா மகனே இந்தக்காட்டின் நெருப்பில் நான்முன்சென்று வீழ்வேன் நீங்கள் வேதியரையழைத்துக்கொண்டு காசிசேர்ந்து முயற்சிசெய்து முனிவன் கடனைத் தீர்ப்பீர்கள் அப்பா.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

மன்னருக்கிடுக்கம்வந்தால் மந்திரிகாக்கவென்றே
சொன்னதோர்நீதியான சுருதியையுணர்ந்தநாதா

தரகன் இந்நால்வரையும் தீயில் தள்ளுகிறபாகம்.



அரிச்சந்திரன். சந்திரவதி. தேவதாசன். சத்தியகீர்த்தி. தரகன்.

முன்னமேவளையுந்தீயில் முந்திநான்பாய்ந்துவிழ்வேன்
அன்னையேகாசிசென்று அருங்கடன்தீர்ப்பீர்நாதா.

வசனம்.

கேளுஞ்சுவாமி நீதியில் சொன்னபிரகாரம் நான் மந்திரியான தால் வருகிற தீயில் நானேவிழ்வேன் சுவாமி காசிசேர்ந்து முனியின் கடனைத் தீர்ப்பீர் வேந்தனே.

அரிச்சந்திரன்-தரு-தேசியதோடி-ரூபகம்.

பல்லவி.

என்னமாயமோமாதே என்னமாயமோ

அநுபல்லவி.

அன்னவாகனமீதேறும் ஐயன்சாபமோமாதே (என்)

சரணங்கள்.

நாடுவிட்டு காடடைந்து
நல்லபாம்பு மேளும்பூரான்
கோடுகோ டென்றழைநம்மை
கொத்தவந் ததுங்கோதே (என்)

பூதமொன்று நம்மைக்கண்டு
பொறிகலங்க வாளைக்கொண்டு
வேதனைசெய் ததைமீண்டு
வேகமாய்வந் ததுங்கோதே
வடமுகவக் கினிபோல
வகையுடனெதி ரெறிந்து
அடவியில் நம்மைதகிக்க
ஐயோவருகு தேசேதே (என்)

சந்திரவதி-வசனம்.

கற்புடையமாதராகில் கணவனுயிறத்தல்மேன்மை
முற்பிறவிறளேப்பீங்கு மொழிந்திடநூலிற்கண்டேன்
தற்பனைசெய்யவெண்ணிச் சண்டாளன்விட்டதீயில்
தற்பாரநானடப்பேன் தயாநிதிசத்தியங்காப்பீர்.

வசனம்.

கேளும் என்பிராணநாதா கணவனுக்காக பெண்சாதியானவள் பிராணனைவிடுவது கற்புடையமாதற் கழகென்று சொல்லுஞ் சுருதி யையறிவேன் முனிவிட்டதீயில் நானே முந்திவிழ்வேன் தாங்கள்சத் தியங்காப்பீர் ஆண்டவனே.

தேவதாசன்-விருத்தம்.

தந்தைதாயொருகாலத்தில் தான்மனந்தளர்வாராகில்
மைந்தனுயுதித்தோன்சத்ய மறிந்துளகிஞற்றுனே
முந்ததாய்ச்சென்றுவந்த மொய்த்ததோர் துயரைத்தீர்ப்பான்
எந்தையைநான்போய்வீழ்வே னினியசத்தியங்காப்பீரே.

வசனம்.

கேளும் என்பிதாவே தந்தைக்கு வருந்துயரை நீக்கவல்லவோ தனயன் பிறப்பது ஆகையா லிந்தத்தீயில் நானே வீழ்கிறேன் நீர்சத்தியத்தைக் காப்பீர் தந்தையே.

சந்திரவதி-விருத்தம்.

என்தவப்பொருளேயப்பா வென்குலக்கொழுந்தேபாலா
உன்மனந்தியங்கவேண்டா முத்தமமுனனேகேளாய்
வன்மமுஞ்சூதும்பொய்ய வழுத்துவர்தமையல்லாத
நன்மையுள்ளோரைக்கொள்ள நாடாதித்தீதானப்பா.

வசனம்.

கேளாயப்பா என்கண்மணியே இந்தத்தீயானது அசத்தியாளைக் கொல்லுமேதவிர நம்மையொன்றும் செய்யாது மகனே.

தேவதாசன்-விருத்தம்.

தாயேநீவயத்திற்ருங்கி தயவுடன்போஷித்தென்னை
நேயமாய்வளர்த்தவம்மா நீவிழாமுன்னம்யானே
தீயதிற்செல்வேன்பாராய் தெளிவுளதந்தைவாக்யம்
ஞாயமாய்நிறுத்திதானும் நாட்டுவேன்கீர்த்திதானே.

வசனம்.

கேளாய் என்னைப் பெற்றுவளர்த்த தாயே நானிந்தத்தீயில்விழுந்து என் தந்தையின் வாக்கியம் பிசகாதிருக்கும்படி கீர்த்தியை நாட்டுவேன் என்னம்மணி.

சந்திரவதி சந்தவிருத்தம்.

அப்பாமகனேகண்மணியே யமிர்தரசமேசெழுந்தேனே
இப்பேறறியுந்திரமுமே யென்னுனக்குவாய்த்தடா
செப்பாய்பால்வாய்மாறலையே சிறுந்தனலில்வீழ்வனென்றுய்
ஒப்பாமோடாகுலத்திற்கே யொளிவாய்வந்தகிளிவிளக்கே.

வசனம்.

அப்பாமகனே இந்தத்துணிவு உனக்கு எந்தநாளில் வந்ததடா நீ இந்தத்தீயில் வீழ்வேனென்பது தகுமோடா கண்மணியே.

தாகன்-விருத்தம்.

ஜாலங்கள்செய்தேமெத்த சமத்துகள்பேசிநீங்கள்
கோலங்கள்புரிவதெல்லாங் கொல்லவேயன்றியென்னை
ஞாலமேலிருத்தச்செய்யும் ஞாயமோநானுங்கண்டேன்
கூலனேகூகூபொன்னை கோறிலேன்போறேனப்பா.

வசனம்.

ஒய் ராசனே நீங்கள் சாமர்த்தியம் பேசுவதைப்பார்த்தால்என்னை நெருப்பில் தள்ள நினைப்பதன்றி வேறல்ல எனக்குப்பொன்னும் வேண்டாம் நாடோடிப்போகிறேன் கூகூ.

சந்திரவதி-விருத்தம்.

வேதவிதிகடந்தவரும்நீதிதப்பி
வித்தகனைமறந்தவரும்பதியின்வார்த்தை
காதலின்றிப்புரிந்தவளுமறிவுள்ளோரைக்
கனிவின்றியிகழ்ந்தவருங்கருணையற்றே
நீதறியாவிலங்குகளைவதைசெய்தோருந்
திக்கில்லார்தாம்வருந்ததீங்குசெய்து
பாதகரைத்தகிக்குமன்றியித்தீநம்மேற்
படராதுயென்பின்னேபற்றிவாரீர்.

வசனம்.

கேளுஞ் சுவாமி தரகரே எஜமான் வாக்கைமீறி நடப்பவர்களையுங் கொலை புன்புலை புரிபவர்களையும் இந்தத்தீவருத்துமேயன்றி நம்மைஒன்றுஞ் செய்யாதாகையால் என்பின்னே தொடர்ந்து வாரும் வேதியரே.

தாகன்-வசனம்.

ஆனால் வருகின்றேனம்மா சந்திரவதி.

சந்திரவதி-தரு-இ-ம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தேயுவேவழிவிடுவீரெங்களுக்கு
திக்குநீர்வரங்கொடுப்பீர்

அநுபல்லவி.

ஆயுள்தரகனுட அவதிதனிலேசிக்கி
தாயில்லாப்பிள்ளையைப்போல் தவிக்கின்றோமேநெக்கி (தே)

சரணங்கள்.

சுவாலாசுவாலமாகவுமிருபுறஞ் ஜொலிக்கவேதான்மகிழும்
தேவாநானுமேசத்திய நேசன்மனைவியானால்
ஆவாகனத்தைவிட்டு யடங்குவீர்முன்செல (தே)

மெத்தவேதுயரடைந்தோம் ஓதேவாபெழிலுமரசிழந்தோம்
சத்தியம்வழுவாதோன் சருவுனதேவிநானுனல்
சித்தங்குளிர்ந்துநீதான் செல்லயெங்களுக்கானுல் (தே)

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி தரகரே அக்கினியைக் கடந்துவந்தோம் உமது திருக்கண்களை திறந்து நடப்பீர் வேதியரே.

தரகன்-வசனம்.

அடா சந்தா பார்வதியோ நமது மந்திரத்தின் பலத்தை பாதிரு லோகமுடிவதற்கு வக்கினியடங்கிவிட்டது நீங்களினி திகில் விடுவீர்கள் விடுவீர்கள்.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி யெல்லாந் தங்களனுக் கிரகந்தான் நடந்துவாரும் வேதியரே.

விஸ்வாமித்திரன்-தரு-கேதாரகௌளம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வருணனேவந்திடுவா யுன்னைக்கோறினேன்
வருணனேவந்திடுவாய்

அநுபல்லவி.

கருணைகோறியகாலங் கனிவாக்களித்தநாதா
கார்க்கவேவடியேனை கடிகிவோடியேயிங்கு (வரு)

சரணங்கள்,

மேகத்திற்கதிகாரிவுலகிலே மேவுக்குமுபகாரி
யாகத்திற்கதிபதிமுனிவர்மற்ற யடியவற்குங்கெதி
தேகத்தைபோஷிக்குந் தேவேயுன்னயழைத்தேன்
தீவரத்தினிலென்முன் தரிசனமளித்திட(வரு)

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திர முனியானவன்செய்த பக்திக்கிரங்கி வருணபகவான் வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

வருணன்-தரு-தன்யாசி-ஆதிதாளம்

பல்லவி.

மேகநாதன்வந்தான் முனியைக்காண மேகநாதன்வந்தான்

அநுபல்லவி.

ஆகமவேதத்துறை அறிஞர்கட்கெல்லாமேட்டி
அனைத்துயிர்களுக்குமே அமுதமளிக்குங்கெட்டி (மே)

சரணங்கள்.

தவமுனிமுறைகேட்டுஓடோடியே தங்கமாற்றிசையெட்டு
புவனமுஞ்சூழவிட்டுபூலோகத்தில் போகுமன்பரைத்தட்டு
நவகுணனயோத்தியாம் நாட்டையரசுசெய்தேன்
தவங்கெடச்செய்வோர்களிற் றானுமொருவனாக (மே)

வருணன்-வசனம்.

கேளும் விஸ்வாமித்திரமுனியே என்னையழைத்தகாரணந் தெரியச்சொல்லும் ரிஷியே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

திடமுடனேவரிச்சந்திரன்தேவிபாலன்
திகழ்பெருகுமந்திரியுந்தரகனோடு
தடம்பற்றிக்காசிநகரருகில்போறார்
தயாபரனேவுன்மாய்கைதன்னைக்காட்டி
படபடெனுந்தொனியுடனேயிடியிமின்னல்
பார்மீதில்நீர்சொரிந்தேநடுவாறாக்கி
கடந்திடவேயாவரிரங்கிலநால்வர்தம்மை
காசிவிட்டுநெடுந்தூரங்கடத்துவீரே.

வசனம்.

கேளுஞ் சுவாமி அரிச்சந்திரன் சந்திரவதி தேவதாசன் சத்தியகீர்த்தி தரகன் ஆக ஐவரும் காசிக்கருகில் போகிறார்கள் உன்மாய்கையினால் பேரிடிமின்னலுடன் மழைசொரிந்து அவர்கள் நடக்கும் வழிமத்திலொரு காட்டாறு உண்டாக்கி அதில் அவாளிரங்க தரகன்தவிர மற்ற நால்வரையுங் காசிவிட்டு நெடுந்தூரங் கொண்டுபோகச் செய்வாய் வருணபகவானே.

வருணன்-விருத்தம்.

முனிவனேயுனக்காய்நானு முன்னிருள்கப்பச்செய்தே
பனியதைபெய்யவைப்பேன் பகரிடிமின்னல்காட்டி
தனினம்நீர்பெருக்கியாறுய் தானோடச்செய்வேனன்றி
கனிவுளபத்தினிவாக்கைக் கடந்திடசத்யனன்றே.

வசனம்.

கேளும் முனியே வுமக்காக இடிமின்னலுடன் மழையைப்பெய்யச்செய்வேன் காட்டாறு உண்டாக்குவேனானல் பத்தினியாகிய சந்திரவதிவாக்கைக் கடக்கவென்னாலாகாது ரிஷியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

சுவாமி வருணபகவானே நீரிவ்வளவுசெய்வதே போதுமானது அதற்குள் தாரகன் அரிச்சந்திரனை பொய்பேசச் சொல்லுவான் உம்மா லெனக்குங் கீர்த்திகிடைக்கும்

வருணன்-வசனம்.

அப்படியே செய்கிறேன் போய்வருகிறேன் விஸ்வாமித்திரமுனியே வாழி வாழி.

தாரகன்—விருத்தம்.

அப்பப்பாயிதேதுகால மடாதவின்னிருள்தான்வந்து
கப்பவேகண்கள்ரெண்டும் காண்பதுமருமையாச்சே
செப்புரின்னிடியுமின்னல் சீறுதேதுதிக்கைபோல
கொப்பவேவானநீருங் கொட்டுதேஐயாமன்ன.

வசனம்.

ஓய் ராஜனே இடிமின்னலிருளுடன் ஆனைத் துதிக்கைபோல மழை கொட்டுகின்றதே திரேகம் நடுங்குகின்றதே என்னசெய்வேன் ஐயையோ.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அருமையிலுயர்ந்தபெண்ணே அக்கினிக்கடந்துவந்தோம்
கருமேகங்கவிழ்ந்தேயிங்கு கலங்கிடமழையுந்தூவ
வறுமையுமுயர்ந்தமின்னல் வாட்டிடயிடியிடிக்க
சிறுமையேகொண்டாரையர் செய்யும்வாரறிகிலேனே.

வசனம்.

கேளாய்பெண்ணே சந்திரமதி இடியுமின்னல் பெருமழைபடிப்பதால் அய்யர் தயங்குகின்றார் இதற்கு என்னசெய்வேனடி மயிலே.

சந்திரவதி-விருத்தம்.

ஐயரேநட்சத்திரேச யன்பரேயஞ்சவேண்டா
மையரேயென்னைக்கிட்டி ஆலத்தின்கீழேநிற்பீர்
ஐயரேமழையின்வேக மடங்கித்துதிப்பேனானு
மையரேதணிந்தபின்பு யப்புரம்செல்வோம்சுவாமி.

வசனம்.

கேளுஞ்சுவாமி தாரகரே இந்தஆலமரத்தின்கீழ் என்னருகில்நிற்பீர் மழையடங்கவேண்டி வருணனைத் துதிப்பேன் நின்றபின்பு அப்புரம் செல்வோம் வேதியரே.

தாகன்-வசனம்.

ஐயோ ஒருமை ஜலங்கொட்டுகிறதே ஐயோ இடியிடிக்கிறதே மின்னுகிறதே நான் நிற்கமாட்டேன் பொன்னேயுங் கேட்கிறதில்லே ஒய் ராசனே நான் ஓடிப்போறேனப்பா விட்டுவிடுவாய்.

அரிச்சந்திரன்—வசனம்.

சுவாமி பயப்படாதேயும் ஒருநொடிக்குள்ளே மழையும் மப்பும் நீங்கிவிடும் என் நாதனே.

தாகன்-வசனம்.

அடாய் அடாய் ர்ாசனே நீயென்முன்னே நில்லடா அடா மந்திரி நீபின்னே நில்லடா அடாபயலே இடதுபாரிசத்தில் நில்லடா அம்மா சந்திரவதி நீயெனது வலதுபாரிசத்தில் நிற்பாய் நேக்கு'மெத்த திகிலாயிருக்கின்றது ஓஓஓ ஊஊஊ.

சந்திரவதி-தரு—இ—ம்-உசேனி-அடதாளசாப்பு.

பல்லவி.

வரமருள்வாய்வருணு கருணுகருணு

அநுபல்லவி.

வரமருள்வாயுன்னே பரமெனநான்துதித்தேன்

சரணங்கள்.

காலமல்லவேயிதுவே நீர்சொரிய
கோலம்வந்ததயிதுவே
சிலமுனிவன்செய்யுஞ் செய்கைக்குநீயுள்ளாகி
பாலனுடனேநாங்கள் பதைக்கவருத்தலாமோ (வர)

உத்தமிநானுமானல் ஓஓசுவாமி
சித்தமுநயப்பானல்
பெற்றவர்நான்சொலும் பிரீதிமொருக்கிரங்கி
கத்தனேயெங்களுக்கு கருணையொளிவைக்காட்ட(வர)

காசிக்குப்போகவே ஐயனே
கோசிகன்கடனேயிகவே
ஆசித்துனேப்பணிந்தே னடியாள்குறையகல
நேசித்துத்திங்கனேவந்து நிகழும்பனியடக்க(வர)

அரிச்சந்திரன்-வசனம்.

கேளுஞ்சுவாமி தரகரே இதோ மழைநின்றுவிட்டது இனிமுன்னுக்கு நடக்கலாம் வருவீர் வேதிரே.

தரகன்-வசனம்.

அடா சந்தாய் பார்த்தையா நானுங்கள் மத்தியிலிருந்தே ஒரே மந்திரஞ் செபித்தேன் மழையும்இடியும் பறந்துபோய்விட்டது பார்த்தையா நம்முடைய வல்லமை-ஆ-ஆ.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆம் ஆம் சுவாமி எல்லாமும்முடைய அருள்தான் அதற்குயாதொரு சந்தேகமுமில்லை நட்சத்திரேசரே.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய் மழைநின்றுமுன்னுக்கு நடக்கும்வழியில் விஸ்வாமித்திரனுக்கு வாக்களித்தபிரகாரம்வருணன் பெருகச்செய்த காட்டாற்றைக்கண்டு அரசன் மனங்கலங்கத் தரகன் பயப்படுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தரகன்-விருத்தம்.

அரசனேபோதும்போது மப்பப்பாலென்னாலாகா
தரகனுய்வந்துகண்ட தாபங்கடன்னைப்பார்க்கில்
கரையதுபிரண்டேயோடுங் காட்டாற்றைக்கடக்கப்போமோ
விரைவுடனோடிப்போவேன் வேண்டிலேன்பொன்னைத்தானே.

வசனம். ஓய் ராசனே நான் தரகனுய்வந்து அனுபவித்த துன்பம் போதும் இந்தக் காட்டாறைக்கடக்க வென்னாலாகாது பொன்னும் வேண்டாம் நானோடிப்போகிறேன் வேந்தனே.

அரிசந்திரன்-வசனம்,

கேளுஞ் சுவாமி தரகரே ஏனிப்படிப் பயப்படுகிறீர் நான்முன்னேபோகின்றேன் நீரென்பின் பற்றிவாரும் வேதியரே,

சத்தியகீர்த்தி-வசனம்.

கேளும் ஆண்டவனே இப்பெரிய காட்டாற்றிலாழந்தெரியாமல் நடக்கப்போகாது இதினுழத்தை நான் தெரிந்துக்கொள்கிறவரையில் சற்று பொறுப்பீர் மகாராசனே.

சத்தியகீர்த்தி-வசனம்.

ஒரு சிறிய கல்லைப்போட்டேே அது அடிபோய்ச்சேர இன்னங்காணேன் இதினுழம் யானைவிடஉயரம்போற்காணுகிறது வேந்தே.

சந்திரவதி-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யாண்டவனருளிருந்தால்
அப்பனேயிதுதானென்ன அகாலமோநான்முன்போறேன்

அப்பனேநீயும்பாலன் அண்ணலுமையர் தானும்
அப்பனேயெனைத்தொடர்ந்தே யன்புடன்வருகுவீரே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி ஆண்டவனருளிருந்தால் இந்தஆற்றைக் கடப்பது ஒருபெரிதா நான் முன்செல்லுகின்றேன் என்பின் நீங்கள் எல்லோருந் தொடர்ந்து வாருங்களப்பா மந்திரி.

சந்திரவதி-தரு-இ-ம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வழிவிடுகெங்கா நான்போக
வழிவிடுகெங்கா

அநுபல்லவி.

அழிமுனிசெய்திடு மகந்தைக்குள்ளாகிநீ
பழிபதும்புரிவது பத்தினிக்கொவ்வாது (வழி)

சரணங்கள்.

நாளுமுனைத்துதித்தேநாட்டில் நயமுடன்வீற்றிருந்தேன்
கோளுமுனிவன்செய் குறையாலிங்கேகற்றேன்
கோமலிசாமலி கிருபைசெய்தோங்கிநீ(வழி)

உன்னைப்பணிந்தேனேபெண்ணாளும் வுரைப்பதைதடுக்காதே
கண்ணைமூடிப்பின் காண்பதற்குள்ளாக
கங்காயிருபுரம் கால்செலநல்லாக(வழி)

பத்தினிநீயாச்சேஅம்மா பராமுகங்காட்டாதே
எத்திசையிலுமுன்னை யேத்திப்பணிந்தேனே
ஈஸ்வரிபொய்க்காமல் எங்களைக்கார்மானே(வழி)

அரிச்சந்திரன்-வசனம்.

ஐயா நட்சத்திரேசரே காட்டாற்றைக் கடந்துவந்தோம் இதோ காசிபட்டணந் தெரிகின்றது இனிபயமின்றி வாருஞ் சுவாமி.

தரகன்—வசனம்.

ஒப்ராசனே நான் சுருதிலோகத்தில் ஒன்றிற்பாதிநான்சொன்னேன் கங்கைபயந்துஇருபிளவாய்விட்டது பார்த்திரும் நானொருவனில்லாவிட்டால் நீங்களெல்லோருமிந்த ஜலத்திற்கே இறையாய்விடுவீர்கள் வேந்தனே.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி எங்களுக்கு நேரிட்டதுன்பமெல்லாந்தங்களனுக்கிரகத்தினால்நிவர்த்தியாயிவ்வளவுதூரம்வந்தோமன்றிவேறில்லைவேதியரே.

பொது-விருத்தம்.

பனியுடனேநெருப்பதனைக்கடந்துகாட்டில்
    பைங்கொடியாள்பின்பற்றிகாட்டார்தாண்டி
முனிவனிடுந்துயரமெல்லாம்நன்மைக்கென்றே
    முகத்தெளிவாய்மன்னவனுமனமகிழ்ந்து
கனிவுடனேகாசிநகர்தோற்றக்கண்டு
    கண்ணேக்கிக்கரங்குவித்தேகரும்பேநீதான்
இனியபரன்வாழ்நகரைத்தெரிசியென்றே
    இயம்பியிருவரும்பணிந்தேற்றுவாரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காசிக்கு வரும்வழியில் அநேகத் துயரையடைந்த அரிச்சந்திரமகாராசன் காசிநகர்க்கோபுரந் தோற்றக்கண்டு தன் பத்தினிக்குத் தெரிவித்து கரங்கூப்பித் தொழுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

கரங்குவிப்பாய்மயிலே இதோ காசிகாணுதுபார் குயிலே

அநுபல்லவி.

பிரமனன்றெழுதிய பெருவிதிகருமங்கள்
பிந்தித்தொடராநாளும் பெருமான்வாழ்நகர் (கர)

சரணங்கள்.

நால்வகையோனிகளில் நாட்டிலெழுதோற்றமாய்
நமன்வாதைக்காளாக நாடிப்பிறந்ததுன்பம்
கால்மேற்றலைகீழாய் கருதிநின்றுலுமந்தக்
கயவர்தமக்கேதுயர் கடக்கவருமோவின்பம்

கண்டவர்மகிழ்வுற அண்டவர்பதவிபெற
கொண்டவருமையற எண்டிசைபுகழ்தர
கொற்றவன்பிரணவ முற்றவனரிதவம்
பெற்றவன்தெரிநவ சுற்றன்வாழ்நகரிதோ (கர)

அரனடிநினையாம லங்கத்தையொடுக்கியே
அண்டியமாதினையே யகற்றிநிலைவிடுத்தே
சரகினையேபுசிக்கச் சார்ந்துயடவிபுக்கு
சாற்றுங்குருமொழியைச் சாரநெறிவகுத்தே

தன்னுளேவானவம் என்னதெனும்பவம்
முன்னமதின்கனம் வன்னதாகுந்தவம்
வேறுபடாமலே நேருவிடாமலே
பேருகெடாமலே சாரும்பரமன்னகரி (கர)

தீராத்துயர்கள்போக்கித் திவ்யபதவிவாய்க்கும்
தேஜோன்மயத்தைக்காண தெரியுமருளைத்தாக்கும்
ஆரானபவமது வகற்றியேயடிமானே
அன்பர்கள்வாழுமந்த வருஞ்சபைதன்னில்சேர்க்கும்

அடவியிற்சென்றதும் திடமுடனின்றதும்
புடமிசைவிண்டதும் இடாதுகொண்டதும்
அற்றிடபலதுயர் பெற்றிடசாகதி
உற்றிடநட்பெயர் நற்றிதோசிவநகர் (கர)

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்வாறு காசிநகர் கோபுரத்தைக் கண்டு அரிச்சந்திரன் சந்திரவதி முதலானவர்கள் சந்தோஷித்தராய் நாட்டுக்குள்நடந்தனர் இப்பால் அயோத்தியாபுரியி லரசுநடத்திவந்த சற்குணமந்திரி தன்னரசனுக்கு நேரிட்ட காலகெதியைமதிதய மகாராசனுக்குத் தெரிவிக்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

சற்குணமந்திரி-விருத்தம்.

ஆரடாகட்டியக்காரா யரிச்சந்திரமகிபன்றானும்
பாரடாயரசும்பாக்கியம் பண்புடன்முனிக்களித்தே
தேரடாமந்திரியோர்டுந் திகழ்பெருங்காசிக்குப்போ
னாடாசேதிப்போக்க நற்றாதன்வரச்செய்வாயே.

வசனம்.

அடா கட்டியனே நமதுராசன் காசிக்குப்போன சங்கதியை மதிதயராசனுக்குத் தெரிவிக்கவேண்டியதால் தூதனையழைத்து வருவாயடா கட்டியனே.

கட்டியன்-வசனம்.

அப்படியே அழைத்துக்கொண்டு வருகின்றேன் சுவாமி.

தூதன்-வசனம்.

அடியேனையழைப்பித்தகாரியந் தெரியச்சொல்லவேண்டுமையா.

சற்குணன்-விருத்தம்.

தூதனேநமதுவேந்தன் துன்மதிகவுசிகற்கே
தூதனையரசையீந்தே துலையாதகடனைத்தாங்கி
தூதனேகுடும்பத்தோடுந் துணைவனுய்சத்தியகீர்த்தி
தூதனேகாசிதென்றூர் தொடரவேதரகன்றூனே.

வசனம்.

அடாதூதனே நமது ராசன் விஸ்வாமித்திரமுனிக்கு ராச்சியத்தைக் கொடுத்ததுமன்றி அவனுக்குக் கடன்காரனுகி குடும்பத்தோடு கடனைத்தீர்க்கநாற்பத்தெட்டுநாள் தவணையிட்டுக்கொண்டு தரகனைய ழைத்துக்கொண்டு காசிக்குப்போனுர் கேளடா தூதா.

சற்குணன்—விருத்தம்.

ஆனதாற்றூதாகேளாய் அரைநொடிபோக்கிடாமல்
மானனுமதிதயேந்திர மகாராசன்கொலுமுன்சென்று
நானுரைத்ததாகவிங்கு நாதனுக்குற்றதெல்லாம்
தீனனுய்நின்றுசெப்பித் தீவரம்வருகுவாயே.

வசனம்.

ஆனதால் அடா தூதனே இந்தசங்கதிகள் உனக்குத் தெரிந்ததானுல் நமது ராஜாவின் மாமனுராகிய மதிதயராசனுக்கு விபரமாக நான் சொல்லியனுப்பினதாகத் தெரிவித்து விஸ்வாமித்திரன் வருவதற்கு முன்போய் இவ்விடம்வந்து சேருவாயடா தூதனே.

தூதன்-வசனம்.

அப்படியே தெரிவித்து வருகின்றேன் சுவாமி.

பொது—வசனம்.

கேளுங்கள் சபையோர்களே சற்குணமந்திரி இவ்வாறுரைக்கத் தூதனேட்டமும் நடையாய்நடந்து கன்னமாபுரியையாளும் மதிதய மகாராசன் கொலுமுன்சேர்ந்து அயோத்தியில் நடந்தவாறுரைக்கின்ற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தூதன்-வசனம்.

கேளுமையா கட்டியனே அரிச்சந்திரமகாராசாவின் தூதனேதோ தெரிவிக்கவேண்டி கொலுச்சாவடி வாசலில் வந்திருக்கிருரென்று ராசாவுக்குத் தெரிவியுமையா கட்டியனே.

கட்டியன்-வசனம்.

அப்படியே தெரிவிக்கின்றேனப்பா தூதனே.

மதிதயராஜன் கொலுவுக்கு தூதர்கள் வருகிறபாகம்.



மதிதயராஜன். மந்திரி. கட்டியன். தூதன்.

கட்டியன்-வசனம்.

வரும்படி உத்திரவாச்சுதப்பா தூதனே.

தூதன்-வசனம்.

போற்றி போற்றி கன்னமாபுரியையாளு மாண்டவனேபோற்றி.

மதிதயன்-விருத்தம்.

என்னடாதூதாநீதா னிரங்கியமுகத்தினோடு
என்னடாயிளைப்புமீற வேக்கமாய்நாவுலர்ந்து
என்னடாவோடிவந்தா யென்மகள்மருகன்சேதி
என்னடாவெனக்குத்தோன்ற வெடுத்துநீயுரைசெய்வாயே.

வசனம்.

அடா தூதனே நீ முகவாட்டத்தோடு ஏங்கிய குரலாயிங்கோடி வந்ததென்ன என்மகள் மருகன்பேரனிவாள் சுகமாயல்லது ஏதாவதுண்டா சீக்கிரஞ்சொல்லுவாயடா தூதனே.

தூதன்-விருத்தம்.

மன்னவனேகௌசிகனுமயோத்திவந்தே
  மகாராசன்றனைமயக்கிமாயமாக
வன்னமுளயாகமதுபுரியப்பொன்னை
  வாங்கியவர்பாலிருத்திவருவேனென்று
சொன்னவனும்விலங்கைவிட்டுப்பயிரழிக்க
  சுரமேவிவதைபுரியக்கண்டபாவி
என்னசொல்வேனிருநீச்சமாதர்தன்னை
  யேவினனினிநடந்தவியற்கைகேளீர்.

வசனம்.

கேளும் மகாராசனே விஸ்வாமித்திரமுனி அரிச்சந்திரமகாராசனிடம்வந்துயாகஞ்செய்வதற்காக ஆனையின்பேரில் ஒரு வாலிபனான புருஷனின்று கவுண்டெறியுமுயரம் பொன் கேட்டான் வேந்தனவ்வாறே கொடுக்க உம்மிடம்வைத்துவை வேண்டியபோது வருகிறேனென்று சொல்லிப்போய் மிருகங்களையேவிப் பயிரை யழிக்கச்செய்தான் அரசன் வேட்டையாடியவைகளை நாசம்செய்யக்கண்ட படுபாவி இரண்டுநீச்சமாதரை யனுப்பினான் இன்னம்கேளும்வேந்தனே.

தூதன்-விருத்தம்.

இருமாதுமரசனிடம்நடிக்கப்பூரி
  யிந்தாலுந்தடுத்திச்சையிணங்கவென்முர்

கருமமெனநீக்கிடவுமவர்சென்றேதக்
 கௌசிகனுங்கோவமுடனூட்டில்வந்து
வருவமதைமனதிலிட்டுவரசும்நாடும்
 வாங்கினன்மன்னவரையாண்டியாக்கி
தருமமிட்டபொருளதனைக்கடன்சுமத்தித்
 தரகனுடன்காசிசெலத்தான்விட்டானே.

வசனம்.

ஆண்டவனே கவுசிகனனுப்பிய நீச்சஸ்திரீக ளரசன்முன் நேர்த்தியான ஆடல்பாடல்புரிய அவர்களுக்குவேண்டிய வெகுமதிகள் கொடுக்கச்சொன்னர் அவைகளைமறுத்து பூச்சக்கரக்குடையைக்கொடும் இல்லாவிடில் எங்களைச் சேருமென்றார் அரசன் சபையைவிட்டு வெளியாக்க உடனே விஸ்வாமித்திரன் அரசனைமிரட்டி நாடுநகர்முதலாகியதும் தன் வசமாக்கிக்கொண்டு வேந்தனை பாதேசியாக்கி தானம் வாங்கி இருத்திப்போன பொன்னை கடனக சுமத்தினன் கடனைத் தீர்க்கக் குடும்பத்தோடு தரகன்தொடா காசிக்குப்போன சங்கதிதெரிவிக்கவந்தேன் சுவாமி.

மதிதயன்-விருத்தம்.

என்னநான்செய்வேன்மந்திரீயெப்படிதரிப்பேனுவி
மன்னவர்மன்னனுக்கே மருவியதுயரைப்போக்க
இன்னகர்விடுத்தேயிப்போ தேகிறேனயோத்தியப்பா
உன்னதையரசைநீநா னுரிமையாய்நடத்துவாயே.

வசனம்.

அப்பா மந்திரி தூதன்சொன்னவாரெல்லாம் கேட்டாயோ நான் அயோத்திக்குப்போய் வருகிறேன் நீயரசை பாதுகார்ப்பாய் மந்திரி.

வசனம்.

மகாபாக்கியம் அப்படியே போய்வாரும் தங்களுடைய ஆக்கினைப்படிக்கு நீதிவழுவாமல் அரசைப் பாதுகார்த்துக்கொண்டு வருகிறேன் ராசனே.

மதிதயன்-விருத்தம்.

அன்னமேயென்பிராணயாசையேயயோத்தியி
 னனகெதிதூதன்வந்தே
அறைந்தனன்கவுசிகன்சூதினலரசதை
 யளித்துமேகடங்காரனய்
மன்னவன்மாதுன்பாலனுமந்திரியு
 மாமுனிதரகனேவ

மாறுறிதரித்துமேகாசிநகர்போய்க்கடன்
மாற்றவேசென்றசேதி
உன்னதசற்குணன்தெரிவித்தனுன்சென்று
யூடாடறிந்துவாரேன்
உத்தமிநீயிங்குபத்திரமாயிரு
யொருவேளைசமயமாகில்
பன்னருங்கடனதையீந்துமென்மருகனை
பற்றியேயிங்குவாறேன்
பாவைநீயுமரனடிகளைத்துதித்திடு
பண்புடன்வாழிவாழி.

வசனம்.

கேளாய் என்பிராணநாயகி நமது மருமகன் செங்கோலை சௌசிகனுக்குக்கொடுத்துவிட்டு அவனுக்குத்தானங்கொடுத்தபொன்னைக் கடன் சுமத்திக்கொண்டு காசிக்குத் தரகனோடு போனதாகத் தெரிந்தேன் நான்போய் கடனைத்தீர்த்து அழைத்துக்கொண்டு வருகிறேனடி மானே,

சுந்தரரேகை-வசனம்.

அப்படியே செய்து சீக்கிரத்தில் அழைத்துவாருமென் பிராண நாதா.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே மதிதயமகாராசன் அதிக தீவரத்தில் அயோத்தியாபுரி கொலுச்சாவடிவரக்கண்ட சற்குணனெழுந்து வணங்கியாதரித்து அரிச்சந்திர மகாராசாவினுடைய வரலாறு விசாரிக்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

மதிதயன்-விருத்தம்.

மின்னிலங்கூர்வேலாளன் மெழிற்றிணிபொற்புயத்தோன்
மன்னரின்மன்னன்மாணன் மாநிலம்புகழ்கோற்றாயன்
என்னருமருகன்மற்று மென்தவப்புதல்விதானும்
பொன்னெடுஞ்சுவைசொற்பாலன் போனவாறுரைசெய்வாயே.

வசனம்.

அப்பா சற்குணமந்திரி வனுமைதங்கிய வென்மருமகனுகிய அரிச்சந்திரனு மழகுபொருந்திய மகளான சந்திரவதியு மினியவசனமுள்ள பேரனும் போனமார்க்கந் தெரியச்சொல்லுவாயப்பா மந்திரி.

சற்குணன்-விருத்தம்.

ஆதரமுடையவெந்த னண்ணலும்விந்தியன்றன்
போதனைக்குள்ளாகாமற் பொன்மலற்றுஞ்சும்நாட்டும்
ஏதறவிலைமொழிக்கே யிணையலவெனற்றுறந்து
ஓதரம்பெரிதென்றுள்ளி யொளிநகருற்றூர்வேந்தே.

வசனம்.

கேளும் மகாராசனே சத்தியம்பிசகா விஸ்வாமித்திரன் செய்த வகைகளுக் குடன்படாம லரசுமுதலானயாவற்றுஞ் சத்தியத்திற்கீடல்ல வல்லவெனத்துறந்து கவுசிகன் கடனைத்தீர்க்கக் காசிக்குப்போறாரென் றாண்டவனே.

மதிதயன்-விருத்தம்.

நல்லதுவமைச்சர்நானும் நாடிப்போய்காசியப்பா
வல்லவன்றனைநான்கண்டு வண்பொருளீந்துமீட்டு
எல்லவரெனைச்சிரேற்ற யேந்திழைப்பாலனோடு
சொல்லருங்களிப்பாய்வாறேன் சுருக்கினிலறிகுவாயே.

வசனம்.

நல்லதப்பா சற்குணா நான் காசிக்குப்போய் அரசனைக்கண்டு கடனைத்தீர்த்து அழைத்துக்கொண்டு சீக்கிரம் வருகிறேன்மந்திரி.

சற்குணன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே சீக்கிரஞ்செய்யக் கோறுகின்றேன் ஆண்டவனே.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரஞ் சொல்லிவிட்டு அரிச்சந்திரமகாராசனைப்பார்க்க மதிதயமகாராசன்காசிக்குச்சென்றானென்றறிவீர்கள் கனவான்களே.

ஆரணியகாண்டம்-முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சத்தியபாஷ அரிச்சந்திரவிலாசம்.

காசி காண்டம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

புவனத்திற்பெருங்கீர்த்தி பொருந்தியமதிதயேந்திரன்
தவமதால்நற்குணங்கள் தங்கியேயுதித்தமாதே
அவனியிற்பிறந்தமர்ந்த ரமைத்திடுப்பாவமெல்லாம்
கவனிக்கிலோடச்செய்யுங் காசிநாமடைந்தோம்பாராய்.

வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரவதி லோகத்திலுள்ளவர்கள் செய்யும்படியான சகல பாவங்களையும் போக்கத்தக்கதாகிய திவ்யமகிமை பூண்ட விந்தக் காசிநாடு வந்தோம் பாராய் பெண்ணே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-பைரவி-தாளம்-ஆதி.

க. பூலோகத்தினிலெங்கும் புகழ்கொண்டோங்கிடுந்திவ்ய
புண்யம்விளைக்குங்காசி பாராய்பெண்ணே
சாலோகசாரூபசாயுச்யஞ்
சாரவிடுங்குங்காசி பாராய்கண்ணே

உ. அயனரியறியாதவண்ணல்விஸ்வநாதனு
மாச்சியுடன்வாழ்காசி பாராய்பெண்ணே
ஜெயம்பெறமுனிவர்கள் சின்மயாநந்தங்கோரி
சிவயோகஞ்செய்யுங்காசி பாராய்கண்ணே

ந. கொலையுடன்புலையதைக் கோரிச்செய்தவர்வந்தே
கும்பிடத்துலக்குங்காசி பாராய்பெண்ணே
கலையுணர்ந்தவர்களைக்கருதாநிர்மூடர்களின்
கன்மம்விலக்குங்காசி பாராய்கண்ணே

ச. பஞ்சமாபாதகங்கள்பறந்தேபுரிந்தவர்கள்
பணிந்தேதுதிக்குங்காசி பாராய்பெண்ணே
நெஞ்சில்நினைக்கபாவம் நீங்கியோடிடச்செய்யும்
நேர்மைதங்கியகாசி பாராய்கண்ணே

௫. தீனதயாளவென்றே தினமுந்தொழவேகிருபை
திகட்டாதளிக்குங்காசி பாராய்பெண்ணே
மோனநிலையறிந்தோர்மூலக்கனலெழுப்பி
முத்தியடையுங்காசி பாராய்கண்ணே

௬. பெண்ணேநமைச்சார்ந்த பெருங்கபடன்போக்கிடப்
பேணக்கிடைத்தகாசி பாராய்பெண்ணே
கண்ணேயினிநமக்கேசாம்பனருளாகக்
கருதிக்கரங்குவிப்பாய் பாராய்கண்ணே

அரிச்சந்திரன்-விருத்தம்.

பத்தினிநாமுன்செய்த பலத்தினாற்காசிவந்தோஞ்
சுத்தியவுலகுமந்தச் சுரர்பதியிதற்கீடாமோ
நத்திபதுயரைவிட்டே நாதனைமனதில்காட்டி
இத்திசைதனின்வளப்பை யினிப்புடன்பார்ப்போம்வாராய்.

வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரவதி நாமுன்செய்த தபோபலத்தினா லிந்தக் காசிவந்தோம் ஆனதால் இந்தக் காசிப்பட்டணத்திலுள்ள வளப்பத்தைப் பார்ப்போம் வாராய் மாதே.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-தஞ்சரி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடந்துவாடியன்னமே அடிபெண்ணே
தொடர்ந்துவாடி சொர்னமே

அநுபல்லவி.

படர்ந்தவிக்காசியுறும் பதிகளை தெரிசிப்போம் (நட)

சரணங்கள்.

வந்ததுயரைப்போக்க அடிகண்ணே
தந்தமாய்கையைநீக்க
பிந்துமாதவமிது சந்திரவதிகாண்பாய் (நட)

வசனம்.

பெண்ணே நமக்குவந்த துயரை நீக்கவேண்டி இந்த பிந்துமாதவத்தை தெரிசிப்பாயடி மாதே.

அண்டினோரைக்காக்கும் அடி-எமன்
தெண்டனைவாராமல் தேய்க்கும்
துண்டிகணபதியைக் கண்டிதோசேவித்தேமுன் (நட)

வசனம்.

பெண்ணே அண்டினவரைக் காத்து காலனுடைய பாதையணு காமற் காக்குந்துண்டி கணபதியை தெரிசிப்பாயடி மாதே.

சந்தேகத்தைப்போக்கும் அடிபெண்ணே
வந்தவறுமைநீக்கும்
ஓந்தேகாசியாமிது சந்திரவதிபாராய் (௩ட)

வசனம்.

பெண்ணே நமது மனக்குறைகளெல்லாம் நீக்கும்படிக்குமிந்த ஓந்தே காசியெனுமிடத்தைத் தெரிசிப்பாயடி மாதே.

நேயமுயர்ந்தமாதே அடி-வேத
சாமமுரைப்பதிதே
சாமிபயிரவனைக் காமினிதொழுதேமுன் (௩ட)

வசனம்.

பெண்ணே சாமமுதற் சதுர்முறையும் புகழாநின்ற நலம்படும் வழித்துணைவனுகிய வயிரவனைத் தெரிசிப்பாயடி மாதே.

அண்டமெலாமிகழ பெண்ணே-நாம்
கொண்டசிறுமை யகல
தண்டபாணீஸ்வரனைக் கண்டுபணிந்தேமுன் (௩ட)

வசனம்.

பெண்ணே நம்மைப்பார்த்து இந்தலோகத்தா ரிகழும்படிக்குற்ற சிறுமையை யகற்றும்படிக் கிந்த தண்டபாணீசனைப் பணிவாயடி மாதே.

கருமமனைத்தும்நீங்கி பெண்ணேநாம்
பெருமையாகவே யோங்கி
கருகைவைகுந்தவாசம் கருணித்தேநோக்கியேமுன் (௩ட)

வசனம்.

பெண்ணே நமது துன்பமகல இந்த சிவர்க்கவாயலெனுங்குகை யைத் தெரிசிப்பாயடி மாதே.

திங்களனிந்தோன் தூங்கும் அடிபெண்ணே
பங்கமகற்றிக்காக்கும்
கங்கையாடியேவிஸ்வ சங்கரனைப்பணிவோம் (௩ட)

வசனம்.

பெண்ணே பரமசிவன் சிரசிற்றங்கி லோகத்தில் பிரவேசித்த டியர்கள் பாவம்போக்காநின்ற இந்தகங்கைநதியாடி விஸ்வேசரைத் தெரிசிப்போமா வருவாயடி மாதே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

என்னருங்கிளியேமானே யியப்புவேன்கனியேகேளாய்
வன்னமாங்காசிவந்தோம் வளம்பெறுபதிகள்கண்டோஞ்
சின்னமாய்வினைகளோடச் செய்யுமிக்கங்கையாடி
இன்னகரேற்றும்விஸ்வ ஈசனைப்பணிவோம்வாராய்.

வசனம்.

கேளாய் பெண்ணே இந்த கங்கையில் ஸ்நானஞ்செய்துகாசிவிஸ்வ லிங்கத்தைத் தெரிசிப்போமடி பிராணநாயகி.

சந்திரவதி- வசனம்.

மகாபாக்கியம் அப்படியே செய்யலாம் என் பிராணநாதா.

அரிச்சந்திரன்-தரு.

பல்லவி.

ஆடவாராய்கங்கை என்கூடவாராய்-மாதே

அநுபல்லவி.

தேடரியசிவத்தோடின் னுடனிலேமேவுந்
திவ்யபலத்தைத்தரு மொவ்யமாயோங்குநதி (ஆட)

சரணங்கள்.

செய்தபாவங்களெல்லாங் கொய்திடுங்கங்கையிது
செப்பும்வேதங்களெலா மொப்பிப்புகழ்வதிது
சித்தங்களிப்புட னுத்தமியென்னுடன்(ஆட)

ஜெனனமரணதுன்பக் தனையறுத்திடுமாதே
சீறுங்கோரங்களெலாஞ் சூறையிடுமேகோதே
சீரிலுயர்ந்ததாம் பாரிலமர்ந்ததாப்(ஆட)

தேவர்முனிவர்சித்தர் மூவர்பணியுமந்தத்
திகழாய்ப்பரசிவந்தான் திங்களுடனணிந்தப்
பாசவினையிருந்தாற் காசம்புரியும்பார்(ஆட)

அரிச்சந்திரன்-விருத்தம்.

பேருறுவயோத்திவிட்டே பெண்ணேயிக்காசிவுற்றே
சீருறுகங்கையாடி சித்தமுங்குளிர்ந்தோமாதே
ஆருறுங்கண்ணேநீயு மமைச்சனுஞ்சுதனுங்கூட
நேருறுவாகக்காசி நேயனைப்பணிவோம்நாமே.

வசனம்.

பெண்ணே சந்திரவதி நாமயோத்திவிட்டு காசிவந்து திவ்யகங் கையுமாடினோ மினிநாமெல்லோருஞ்சென்று மறவியையுதைத்தமகா னுபாவனாகிய காசிவிஸ்வநாதனை தெரிசிப்போமடிபெண்ணே.

சந்திரவதி-வசனம்.

அப்படியே தெரிசிக்கலாம் என்பிரான நாதா.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-உசேனி-தாளம்-ரூபகம்.

காசிலிங்கமிங் கிருக்குதாம்கேளாய்பெண்ணே
கண்டவர்மனக்கவலை போக்குதாம்போவோம்வாராய் (கா)

வாசிநுணியோகந் தாக்குதாந்தெரிசிப்போர்க்கு
வறுமையெல்லாமகல நோக்குதாம்போவோம்வாராய் (கா)

அண்டமெல்லாமொன்றாய் நின்றதாங்கேளாய்ப்பெண்ணே
அடியர்களிடரைக் கொன்றதாம்போவோம்வாராய் (கா)

ஒன்றிரண்டுமூன்றைக் கொய்வதாங்கேளாய்பெண்ணே
உறுதிகொண்டோருளங் களிப்பதாம்போவோம்வாராய் (கா)

மார்க்கண்டரையன்று கார்த்ததாங்கேளாய்பெண்ணே
மடிபணிந்தோரின்மாய்கை தீர்த்தம்போவோம்வாராய் (கா)

காலனைக்காலாலுதைத்த தேவனைக்கேளாய்ப்பெண்ணே
கண்டவர்கருத்தருளும் பாவனும்போவோம்வாராய் (கா)

அமரர்க்காய்நஞ்சையன்று வுண்டதாங்கேளாய்பெண்ணே
அபயமென்போர்க்கருள் நின்றதாம்போவோம்வாராய் (கா)

ஆதியில்ஜோதிகண்ட மானதாங்கேளாய்பெண்ணே
அடுத்தவரினிடுக்கம் போனதாம்போவோம்வாராய் (கா)

திக்கில்லார்க்குத்தெய்வ மாகுதாங்கேளாய்பெண்ணே
தெரிசித்தோர்மனக்குறைகள் போகுதாம்போவோம்வாராய் (கா)

கௌசிகன்கடந்தீர வேண்டியேகேளாய்ப்பெண்ணே
கழலடிகளைப்பணிவோந் தாண்டியேபோவாம்வாராய் (கா)

அரிச்சந்திரன்-வசனம்.

இதுதான் காசி விஸ்வநாதரடி பிராணநாயகி.

அரிச்சந்திரன்-தரு-இந்துஸ்தான்-பியாக்-ஆதி.

பல்லவி.

அம்பாபணியாதியே யருள்செய் ததிஜோதியே

அநுபல்லவி.

வெம்பிவுடல்வறுந்த வெனசுதியாடவே
வேதனைமுனிவனால் விளைந்ததுமோடவே (அ)

சரணங்கள்.

எங்கும்நின்றதேவனே யெளியோர்க்கருள்நாவனே
மங்கையிடப்பாகனே மாய்கைகொயுங்கோவனே (அ)

லொங்கனம்வாட லோகமுமிசைசொலத்
துங்கவாமுனிசெயுந் துயரறவருளருள் (அ)

தக்கன்சாபம்போக்கியே தனிமதியைத்தேக்கியே
அக்கந்தமானேக்கியே யடங்காப்புலிதாக்கியே (அ)

பக்கிடைத்துயிலாகப் பற்றியபொருளே
இக்கிணமடியேனை யேந்தியாளருளருள் (அ)

மாயன்மகம்போகவே வயிரவனையேகவே
பாயமச்சஞ்சாகவே பற்றிமணியாகவே (அ)

கேயதேவரைக்காத்த நிர்மலப்பொருளே
காயமுனங்கடிமை காத்தருளருளருள் (அ)

முனிவன்கடன்நாடியே முனைந்திங்குற்றேன்தேடியே
கனிவாய்வாசைபாடியே தரகன்வாரான்கூடியே (அ)

இனிவேறொருவர்துணை யிங்கில்லைப்பொருளே
பதிமதிசடையாளா பாத்தருளருளருள் (அ)

அரிச்சந்திரன்-விருத்தம்.

காசணமேதென்றறிகிலேனந்தக் கவுசிகன்வலையதிற்றேய்
வாரணமுலையாளிப்புறமேத வழைவிடைமேலுறுபவனே
நாரணனயனுங்கண்டிடாவுருவே நல்லுளமெங்குநீகனிந்தே
பூரணமயனேமுனிகடறிர்த்தெனைப் புனிதனுக்கிடவருள்புரியே.

வசனம்.

ஓபரமசிவமே நான் விஸ்வாமித்திர முனிமாய்கையிற்சிக்கியகாரணமறியேன் அந்த முனிநாதனின் கடனைத்தீர்த்தென்னைப் பவித்திரனாகச்செய்யும் தேவே.

சந்திரவதி-சஹானா-ரூபகம்.

அண்டபிண்டமொன்றாய் நின்றவா ஓமரோஹரா
அடியார்களையடிமை கொண்டவா
குண்டலிதனிவாசி யுத்தவா

அரிச்சந்திரமகாராஜன் காசிவிஸ்வநாதரை தெரிசிக்கிற பாகம்.



அரிச்சந்திரன். காசிவிஸ்வநாதர். சந்திரவதி. தேவதாசன். சத்தியகீர்த்தி.

கோறினேருக்கரு ளளித்தவா
இரவும்பகலுமேக மானவா
எங்கண்மீதிற்கருணை யாகவா
தூயர்கண்மீதிற்கருணை மணிந்தவா
தூரவிகளாநாளும் பணிந்தவா ஓமரோஹரா (அ)

தேவதாசன்-தன்யாசி-ரூபகம்.

அணுவிலணுவாக நின்றவா ஓங்குருபாசிவா
அருமறைநாலும்புகழைக் கொண்டவா
மனுமுதலோருமகிழ்ந்திடுஞ் சீருமே
மடியோர்க்குநின்றுதுதிபெருந் தவமே
ஆலவமுதாக வுண்டவா
அன்புடனிடர்தீர்க்க வின்றேவா
ஜாலஞ்செய்தானீயு வையனே
சகிக்கவசமில்லை மெய்யனே ஓங்குருபாசிவா-அ

சத்தியகீர்த்தி-சாவேரி-ரூபகம்.

ஏதுக்குநீ துணையென்று வந்தோம் ஓந்திகழொளிபவா
எங்கள்குறைநீக்கிடப் பணிந்தோம்
பாதுகாத்தெங்களை நீயுமே
பக்ஷம்வைத்துன்னருளை யீயுமே
என்றனைவிடவேறு மெங்குமே
உற்றதுணையறியோ மிங்குமே
சந்திரனைச்சடையி லிட்டவா
சரணமெங்களையின்று கிட்டவா ஓந்திகழொளிபவா

அரிச்சந்திரன்-தேவாரம்.

ஆதியாயருளுமாகி யடிமுடி நடுவுமாகிச்
சோதியாயங்கிங்கென்றே சோராமலெங்குமாகி
வேதியர்விரும்புவோரின் வினைதனைக்களைவோனைக்
கோதிரைவிஸ்வநாதா குறைதீரவருள்செய்வாயே

சந்திரவதி-தேவாரம்.

காகபூஷணனேயோக பாகனேவுமையாள்மேவும்
போகநாயகனேஞானப் புநிதனேகாசிநாதா
ஆகமவிதியாகின்றடிதொழ வறியேனிப்போ
வேகமேயெனையாட்கொண்டே வினைதீரவருள்செய்வாயே.

தேவதாசன் தேவாரம்.

அரிஅயன்தேடிக்காணு வன்பனேகைலைவாசா
கரியுரித்தோனேயந்தக் காலனையுதைத்தபாலா
விரிசடைமதியுங்கங்கை விளங்கிடத்தரித்தாய்நின்பால்
லுரியனுவிஸ்வநாதா வுள்ளம்வைத்தருள்செய்வாயே.

சத்தியகீர்த்தி தேவாரம்.

அமரர்கள்வாழ்வன்று ஆலத்தைவமுதாய்க்கொண்டோய்
குமரனையளித்தேதேவர் கொடுஞ்சிறைபறக்கச்செய்தோய்
சமரசசரர்சரத்திற் சார்ந்துமேபாவிநின்றாய்
தமரகன்னிவிஸ்வாமித்திரன் தன்சூதைவிலக்குவாயே

அரிச்சந்திரன் தேவாரம்.

முப்புரமெரித்தகண்ணு முனிவர்கள்பணியுமன்னு
இப்பிறப்பதனிற்கொண்ட விடரகன்றிடவேநான்றான்
கைப்பொருளியாதுங்காணேன் கடன்தீரவகைநீகாட்டிச்
செப்பிடவேண்டுங்காசி சீலனேநமசிவாயா

அரிச்சந்திரன் அகவல்.

சிவசிவசிவமே சீரருட்தவமே
தவமுனிவோர்பணி தனிமறைமுதலே
அம்புலிதங்கையு மணிசடையாளா
சம்புவேதீன சர்ச்சனத்தாளா
திரிபுரத்தகனு தெளியுள்வேதா
அரியயனறியா வழகுளபாதா
மான்மழுவேந்தும் மலர்கரத்தூயா
தேன்மொழியுமைசேர் திண்புயநேமா
எமனையுதைத்த வெழுறுணைபாதா
நாமனங்களிக்க நாடினேனீதா
பேதைநான்கொண்ட பெருந்துயர்கேட்பாய்க்
கோதையும்பாலனுங் கோனிடாமந்திரியும்
மனமதுகளிந்தே மாமுனிதனக்கே
கனமுளவரசை களிப்புடனளித்தோங்
தானமாயீந்த தனிப்பொருளாமென்
மோனனுங்கேட்க மூதையேயடியேன்
கடனதைதீர்க்கக் காலையாயிங்கே

தடமதனைவைத்தேன் தயாபரநங்கை
வருகிறவழியில் வருத்திடவிஷங்கள்
உருகுமண்மீதில் உறுத்திடப்பதங்கள்
பூதமுந்தூரத்த பெரியனல்மிரட்ட
வேதனைமிருகம் விஷப்புழுவிரட்ட
பனியதுபெய்யப் பதரிடமனந்தான்
இனிவிலாக்காட்ட பெய்திடமனந்தான்
மெத்தவும்பயந்தே மேனியங்குறுகி
அத்தனேயுன்னடி யண்டினேமறுகி
இக்கடன் தீர்க்கவே யெண்ணுவாய்நீயே
சக்கிஷத்தரகனுல் களிப்புறேன்சேயே
முனியவன்மெத்த முஷ்கரம்புரிந்தால்
கனிவுளமனத்தோல காருமுன்னருளால்
சத்தியம்நிலைக்க சம்புவேசரணம்
நத்தியேயுன்மனம் நாட்டுவாய்சரணம்

அரிச்சந்திரன் விருத்தம்.

மான்மழுதரித்தோய்காசீ மகாநகர்விஸ்வநாதா
வேன்புறுவடிக்கேதொண்டு விரும்பியேவந்தோம்வேதா
நான்முகன்களிக்கப்பாவி நாடியேமுனிநாதன்செய்யுந்
தேனடாத்துயர்தவிர்த்தே திருவருள்தந்தருள்வாயே

வசனம்.

ஓ காசிநாதனே-எங்களுக்கிந்த விதிவிதித்த பிரமன் மனமகிழ கௌசிகமுனிசெய்யுந் துன்பத்தைநீக்கி ரட்சிக்கவேண்டும் விஸ்வநாதா.

சந்திரமதி விருத்தம்.

எப்புவித்துறக்களெல்லா மீன்றதோரம்மாபோற்றி
செப்புறுஞ்சுடலைதன்னில் சிறுநடிநடித்தாய்போற்றி
முப்புரமென்றெரித்த முக்கண்ணன் மகிழ்வேபோற்றி
வெப்புறுங்கவலைநீக்கி வேணதையளிப்பாய்போற்றி

வசனம்.


அம்மாதிரிபுராந்தகத்தாண்டவி அரன்பாலொக்குந்தேவி அடியாள்கோறிக்கையை யளித்தருள்வாய் அம்மணி.

தேவதாசன் விருத்தம்.

காலனைபுதைத்தபர்தா கைல்வாழ்மருவேபோற்றி
வேலனையளித்தகோவே விமலியன்பாகாபோற்றி



சத்தியகீர்த்தியும் தேவகரசனும் விஸ்வநாதரை
தெரிசிக்கிற பாகம்.



சந்திரமதி விசாலாக்ஷியம்மனை தெரிசிக்கிறபாகம்.

சிலமேதறியேனீதா சேவடிபணிந்தேன்போற்றி
பாலனைவருத்தமின்றி பாலிப்பாய்தேவேபோற்றி

வசனம்.

சுவாமிகாலனையுதைத்தபாதனே பாலனைக்காருந்தேவனே

சத்தியகீர்த்தி விருத்தம்.

மதிசடையணிந்தேகையில் மான்மழுதரித்தாய்போற்றி
சதிபுரிவிஸ்வாமித்திரன் சார்பதையறுப்பாய்போற்றி
விதிதனைத்தடுக்கவன்று வேண்டியேபாலனுக்காய்
நதிம்பிடவுதிரங்காலன் றன்னையேயுதைத்தாய்போற்றி

வசனம்.

ஓ பரமசிவமே யாதொருதுன்பமும் விஸ்வாமித்திரனால் வராத படிக்கு யாண்டருள்வாய் நாதனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஏந்திளமயிலேபாலா வினிவுளசத்தியகீர்த்தி
நந்தியைத்தொழுவீர்ஞானம் நாடிடவையனின்றத்
தந்திரமாமுகனுமந்த தயாபரன்குகனைபோற்றிச்
செந்திருமாலுமற்ற சித்தரைப்பணிவீர்தாமே.

வசனம்.

பெண்ணே சந்திரவதி, அப்பாமகனே மந்திரி சத்தியகீர்த்தி முதல் நந்தியைத்தொழுது மூலதாரனாகிய கணபதியையும் ஞான மூர்த்தியாகிய வேலாயுதக்கடவுளையும் திருப்பாற் கடலிற்றுயின்ற மாயனையும் மற்றமிங்குளவடியார்களையும் பணிவீர்கள்.

பொது வசனம்.

அப்படியே பணிந்தோமெங்கள்கோவே

அரிச்சந்திரன் விருத்தம்

கன்னிகருவமையில்லாத் தாணுவைப்பணிந்தோர்மாதே
நன்னகரிருக்கும்நேர்ப்பும் நாட்டில்நீர்வளமுங்காண்போம்
உன்னதமாகவாழு முத்தர்தமையுங்கண்டே
என்னருங்கருமந்தீர வேற்பாடுஞ்செய்வோம்வாராய்.

வசனம்.

பெண்ணேசந்திரவதி காசிநகரைத் தெரிசித்தோமினி நாட்டை ப்பார்த்து வந்தகருத்திடேறவேண்டிய யேற்பாடு புரிவோம் வாராய் மாதே.

சந்திரவதி வசனம்.

அப்படியேவருகின்றேனென்பிராணநாதா

அரிச்சந்திரன் கண்ணிகள் கெண்டாசாப்பு

௧. வித்தைப்புத்திதருஞ் சித்திவிநாயகன் வீதியிதுபெண்ணே
வேண்டிநம்மையாளுங்காசிவிஸ்வேசன்வாழ்வீதியிதுபெண்ணே
அத்திசிவகாமி காளியம்மையின் வீதியிதுபெண்ணே
அருமையுளவேதமோதுமந்தணர் வீதியிதுபெண்ணே

௨. வேத்தியாயறம்நடத்தும் வேளாளர் வீதியிதுபெண்ணே
வேண்டச்சூரனைவதைக்க வேலவன் வீதியிதுபெண்ணே
எத்திசையும்புகழ்கொண்ட விறையவர் வீதியிதுபெண்ணே
எழிலுறும்வைசியர்வாழுமின்புள வீதியிதுபெண்ணே

௩. பற்றப்பணிதுள்செயும்பஞ்சாளர் வீதியிதுபெண்ணே
பாரினில்பாண்டங்கள்கூடும்பரமர்கள் வீதியிதுபெண்ணே
நத்தவேசேர்வைபுரியும்நாய்க்கர்கள் வீதியிதுபெண்ணே
நாட்டியம்செய்வேசியர்கள் நாளும்வாழ் வீதியிதுபெண்ணே

௪. கச்சையிணைசேனியர்கள்கூப்பிடும் வீதியிதுபெண்ணே
களங்கமற்றேயிழிகுலத்தோர்களித்திடும் வீதியிதுபெண்ணே
பச்சைக்கிளியேயரவணப்பகியைநீ பாராய்பெண்ணே
பண்புடன்றங்கிநாம்கொண்டபசிதீர்ப்போம் வராய்பெண்ணே

அரிச்சந்திரன் விருத்தம்.

தீதறவேதநான்குந் தெரிவுக்கும்நெறியுணர்ந்தப்
போதரேநரகரேநான் புகலுமோர்வார்த்தைகேளீர்
வேதனைப்பசிதணிக்க வேண்டியிம்மண்டபத்தில்
காதலாச்சமையற்செய்வோங் கருத்தினையுரைசெய்வீரே.

வசனம்.

நமது பசியைப்போக்க இந்தசத்திரத்திற்றங்கிசமையல்செய்யவுமது கருத்தை வெளியிடுவீர் சுவாமி

நரகன் வசனம்.

மகாசந்தோஷமப்படியே செய்யலாமப்பா வேந்தனே

அரிச்சந்திரன் விருத்தம்.

என்னுடனியுந்தன்ப மேந்திடவெண்ணிவந்த
பன்னருங்குணத்தோய்மந்திரி பகருவேனினிவாய்க்கேளாய்

இன்னகர்வாழுவோர் தம்பாலிரந்துவேணதெல்லாம்
நன்னலாய்க்கொணர்வையாகி லும்பசிதணிப்போமப்பா

வசனம்.

கேளாயப்பா சத்தியகீர்த்தி நமது ஐயரின்பசி தீரும்படிக்கிந்த நாட்டிலுள்ளவர்க ளிடஞ்சென்று யேதாகிலுமிரந்து கொண்டுவருவாய் மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

ஐயனேயரசேநீரு மடியனேக்கருதியிங்கு
மெய்யனேயன்பாய்ச்சொன்னமெழிலுருமொழிபோற்சென்று
துய்யனேநகரிலுள்ள தூய்மையாமனத்தோர்தம்பால்
கையதைநீட்டிதானங் கடிகியேவாங்கிவாரேன்

வசனம்.

சுவாமி தங்களுத்திரவின்படி யாசித்து சீக்கிரம் வருகின்றேன் தரகரை பத்திரமாய்ப் பாதுகாத்துகொள்வீர் வேந்தே.

சத்தியகீர்த்தி-தரு முகாரி ஆதி.

பல்லவி.

என்னவிதிவிதித்தாய் மெய்யா என்
னிறைவனவாழ்வைக் கெடுத்தாய்துய்யா

அநுபல்லவி.

மன்னனரசிழந்து மாமுனிகடனேத்தாங்கி
மாதுடன்பாலது மறையோன்றுயராலேங்கி ௭

சரணங்கள்.

பத்தினிமுகம்வாடிப் பதறியயர்ந்தேசோர
பாலன்பசியால்வெம்பி பருவாய்மனம்வேசார
நத்தித்தரகாய்வந்த நயமிலான்வருத்திட
நாயன்மனங்குழைய நான்பாவிகருக்கிட ௭

அண்டமுகடுமட்டும் யரசன்றன்கீர்த்திபொங்க
ஆறுலர்வேதியற்கு மளித்தார்திகழ்தங்க
கொண்டபெருமையாவுங் குலையவிடுத்தாயுன்றன்
கூற்றேசனியன்செயுங் கோளாவறியேனுந்தன் ௭

என்னமிடிவந்தாலு மீசாநீகதியென்று
எண்ணியிங்குற்றோமே யிரங்குவாய்மனமின்று
பன்னகபூஷணைப் பார்வதிகனிலோதா
பாவுந்துயிலத்தெங்களை பாலிப்பாய்குணசீலா ௭

பொது விருத்தம்.

மந்திரியரசன்சொன்ன வாக்கினைசிரமேற்கொண்டு
நந்தியைவிடையாய்க்கொண்ட நாதனைநோக்கிநொந்து
சந்திகள்சோருமுல்லை கப்பியகாசிநாட்டில்
புத்தியிலுயர்ந்தோதன்பால் பொயினனிரகத்தானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரமாகசத்தியகீர்த்தி தன்னுடைய அரசனுக்குநேரிட்ட மிடியைக்குறித்து மெத்தவுங் கிலேசப்பட்டுக்கொண்டு காசியில்வாழுஞ் சதாபர்த்திகளிடம் வந்து யாசகங்கேட்கிற விதங்காண்பீர்கள் தனவான்களே

சத்தியகீர்த்தி விருத்தம்.

காசியில்வாழுந்தர்மக் கையனேயுரைப்பேனன்யத்
தேசிகளிங்குவந்தோர் திவ்வியபசிதணிக்க
போசித்தோமாறைகையி லுதவிடபொருளுமில்லோர்
தேசிகமனையையிப்போ தீர்த்திடவருள்செய்வாயே.

வசனம்.

சுவாமி நாங்களன்னிய தேசவாசிகாளிங்கும் வந்தோம் மெத்த வும்பசியால் வாடினோந்தணிக்க யேதாகிலு முதவிசெய்ய வேண்டுந் தர்மவானே.

சோமாஜி விருத்தம்.

ஆரப்பாநீதானிங்கு யடைந்திடவிதிதானேதோ
கூரப்பாநான்பேருங் கூடவந்தவர்களியாரோ
தேரவேயெனக்கேசொன்னால் தெளிவுடனளிப்பேனுண்டி
நீரவேகுட்சிபாதைத் தீவரமதனிற்றுனே.

வசனம்.

அப்பா நீயார் ஊரென்ன யெத்தனைபேர்வந்தீர்க ளிங்குவரக் காரணமென்னதெரியச்சொன்னால் போஜனத்திற்குவேண்டியதைக் கொடுக்கிறேனப்பா.

சத்தியகீர்த்தி விருத்தம்.

இதற்குடைமூலை நானிருக்குந்தேச
மெளியோனுமெஜமானுந்தேவிபாலன்
சதற்கௌரசதனையுமே தாரைவார்த்தே
சாமிமுனிகடன்தீர்க்கப் பொருளைவேண்டி.

விதற்பருளவின்னகரி லடையவேதான்
விரும்பியேதரகனுடன் விளங்கிவந்தோங்
கதிர்குலனேமண்டபத்தே யிருத்தித்தானக்
கையனேயிங்குற்றேன் காண்பாய்போற்றி.

வசனம்.

சுவாமி நாங்களிருப்பது இதற்குவடக்கு இரவிகுலத்தார்நானு மெஜமானும் அவர் தேவியும்பாலனும் தரகனும் வந்தோம் அவாள் சத்திரத்திலிருக்கிறார்கள் முனிவன் கடனைத்தீர்க்க வின்குவந்தோம் சுவாமி.

சோமாஜி-விருத்தம்.

இன்னகர்தனிலேமெத்த விருக்கிறார்தனத்தில்மிக்கோர்
தன்னிடஞ்செல்வையாகிற் றனீவந்தடையிராது
உன்னிடபசியுமற்று முளநால்வர்க்களிக்கப்பாலு
துன்னியநெய்யும்வெல்லந் தோழனேயவையுங்கொள்ளே.

வசனம்.

அப்பா இந்தக்காசியில் அநேக தனவான்களிருக்கிறார்கள் வேண்டிய பொருளுதவிசெய்வார்கள் இதோ உங்களாந்துபேருக்கும்வேண்டிய கோதுமைநொய்யும் பாலும் வெல்லம் நெய் முதலானதுங் கொள்வாயப்பா.

சோமாஜி-வசனம்.

அப்பா சமையல் வர்த்தகத்துக்குரிய வெரிகரும்பு இலைபாத்திரங்கள் முதலானதுங்கொடுத்தேன் நீங்கள் போஜனஞ்செய்தபின் பிந்த ஆளின்வசங்கொடுத்தனுப்பினல் எனக்குவந்து சேரும் அறிவாயப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்.

வாழிவாழி நான் போய்வருகிறேன் சுவாமி.

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தக் காசியில்வாழும் சோமாஜியிடத்தில் சமயலுக்குரியதை பெற்றுவந்தேன் ஆண்டவனே.

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரவதி மந்திரி கொண்டுவந்ததையெல்லாஞ் சீக்கிரத்தில் சமையல்செய்து தரகர் திருப்தியாகும்படி சாதிப்பாயடி மானே.



காசிசத்திரத்தில் சந்திரவதி சமையல்செய்கிற பாகம்.

சந்திரமதி-வசனம்.

இதோ அடியாளும் சீக்கிரத்தில்சமைத்துதங்களுத்திரவின்படி ஐயருக்குச் சாதிக்கிறேன் பிராணநாதா.

சந்திரவதி-தரு-நாதநாமக்கிரியை-சாப்பு.

பல்லவி.

சமையல்செய்கின்றேன் தாதியைப்போல
சமையல்செய்கின்றேன்

அநுபல்லவி.

நிமைதனிற்றரகன் நீள்பசிதணித்திட (ச)

சரணங்கள்.

அடுப்பைக்கூட்டித்தீயிட்டு யக்கினிபூஜைபண்ணி
துடுப்புகைகோலெத்தாங்கி தோகைவிதியைநண்ணி (ச)

உலைதான்கொலையெழும்ப வோங்கிநெய்பதைத்தூவி
நிலைதான்றெறிந்தேபாலை நேராயதனுள்பாவி (ச)

பாலுறும்பாயசத்தைப் பண்பாய்முடித்தேனுனே
மேலுறுமப்பங்கடனே மெதுவாய்சமைத்திட்டேனே (ச)

சந்திரவதி-கவி.

ஐயரேநக்ஷத்திரேச அன்பரேசமையலாச்சு
வெய்யவுன்பசியைத்தீர்க்க வேண்டினேன்வருகுவீரே.

வசனம்.

சுவாமி தரகரே சமையலாச்சுது போஜனத்திற் கெழுந்துவாருந்தேவனே.

வசனம்.

மகா சந்தோஷம் இராசனையும் பயலையும் தடியனையும்ஒருமிக்க வழைப்பாயம்மா சந்திரவதி.

சந்திரவதி-விருத்தம்.

என்னருங்கோவேபாலா வினிமொழிமந்திரிகேளாய்
நன்னியபடியேபாகம் நானுமேவிரைவிற்செய்தேன்
உன்னதவையர்தானு முங்களைவழைக்கச்சொன்னூர்
வன்னமாயெழுந்திருந்தே வருகுவீர்புசிக்கத்தானே.

வசனம்.

கேளும் என் பிராணநாதா சமையலாச்சுதுபசிதீர்க்க ஐயரழைக்கிறூர் நீரும்பாலனும் மந்திரியும் வருவீர்கள்.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே வருகிறேன் என் பிராணநாயகி.

சந்திரவதி-வசனம்.

சுவாமி தரகரே இதோ எல்லோரும்வந்தார்கள் தங்களுக்குவே ண்டியவைகள் வட்டித்திருக்கிறேன் புசிப்பீர் வேதியரே.

தரகன்-விருத்தம்.

இவ்விதவுணவையானு மெப்பவுங்கண்டதில்லை
செவ்விளவதனுள்மெத்த சீக்கிரந்தனிலேபாலில்
கொவ்வையுமடைபாயாசங் கொப்பெனமுடித்தாளுண்டேன்
கவ்வியபசிதணிந்தேன் காசிவாழ்விஸ்வநாதா.

வசனம்.

காசிநாதனே இவ்விதமான உண்டி நானெப்பவும்புசித்தறியேன் வெகுநேர்த்தி வெகுநேர்த்தி சமையல்செய்வதில்சந்திரவதியம்மனே தெளிந்தவளென் றறிந்தேன்.

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரவதி எங்கள்பசிதீர்ந்தது நீயும்போசனஞ்செ ய்து மீந்ததை இந்த ஆளுக்கிட்டனுப்புவாய் மாதரசே.

சந்திரவதி-வசனம்.

அப்பா இதில் மீந்திருப்பதை நீபுசித்து பாத்திரங்களையெல்லா முனதுஎஜமானிடத்தில்வந்தனத்துடன்செலுத்துவாயப்பாசேவகா.

சேவகன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே செய்கின்றேன் தாயே.

பொது-விருத்தம்.

மண்டபந்தனிலிறங்கி மன்னனுமற்றுளோரும்
உண்டுமேகளிக்கக்கண்ட வுக்கிரதரசனையோ
கொண்டதன்னெண்ணமாகக் கொடுந்துயர்நடத்தவங்கு
சென்டெனத்தாண்டிதாண்டி செய்யும்வாரினிக்காண்பீரே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே பசிதீர்ந்து கொஞ்சம் மனக்களிப் புடனிருக்கும ராஜனைக்கண்ட தரகன் தான்கொண்டுவந்த எண்ணம் முடிக்கவேண்டிச் செய்யும்வாறறிவீர்கள் கனவான்களே.

தரகன்-விருத்தம்.

மருமலர்மாலைமார்பா மன்னனேயயோத்திவேந்தே
தருமமோவுனக்கேநன்றோ தரகனைவெகுநாளாக

வருந்தியேவாடச்செய்தல் வண்ணமோகுணமோவுன்றன்
குருவின்மேலாணையிட்டேன் கொடுத்துப்பொன்னெழுந்திராயே.

வசனம்.

கேளும்ராசனே நான்வந்து வெகுநாளாச்சுது இப்படிச் செய்வதும் நீதிதானோ உன் குருவின்மே லாணையிட்டேன் பொன்னைக் கொடுத்தெழுந்திருப்பாயப்பா வேந்தனே.

அரிச்சந்திரன்-வசனம்.

சிவசிவா சிவசிவா ஒபரமசிவமே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-நாதநாமக்கிரியை-தாளம்-ஜம்பை.

க. ஐயரடியேனை யனுவனுவாய்க்கொய்யீரன்றி
மெய்யன்குருமேலாணை மேவலழகாமோ

உ. முனிவர்கடன்தீரவென்னை முஷ்கரங்கள்புரிவீரன்றி
இனியகுருமேலாணை இயம்பலழகாமோ

௩. வேதனையஞ்சோதனைகள் வேண்டியெனைச்செய்வீரன்றி
போதகுருமேலாணை புகல்வதழகாமோ

௪. கற்றகொடுந்தீமையெல்லாங் காட்டுவீரென்மேலன்றி
உற்றகுருமேலாணை யுரைத்தலழகாமோ

ரு. என்னைநீரென்னபடி யெண்ணிச்செயலாகுமன்றி
அன்னகுருமேலாணை யறைதலழகாமோ

௬. உன்றனுக்குகவுசிக னுரைத்தபடிநடப்பீரன்றி
எந்தன்குருமேலாணை யிசைதலழகாமோ

எ. கத்திக்கொண்டுசிலமெழுந்தால் கடிந்துதைப்பீரன்றி
சத்தியகுருமேலாணை யிசைதலழ்காமோ

அ. ஆனமட்டுமெனைவருத்த லாகுமோதானீரன்றி
மேலானகுருமேலாணை மொழிதலழகாமோ

தரகன்-விருத்தம்.

தொல்லையுள்ளாகுஞ்சத்பத் தோன்றலேயாணைவிட்டேன்
இல்லைபோவென்றேநீதா னியம்பினலதுவேபோதுஞ்
சொல்லறபொன்னுமன்றிச் சோர்வறவண்ணுந்தாளும்
வல்லலம்புயமுனக்கே வகையுடன்மாட்டுவேனே.

வசனம்.

ஓப் ஓப் ராசனே இதோ ஆணையைவிட்டேன் பொன்னைக்கொடேனென்று சொன்னலாவதுபோது மில்லாவிடி லுனக்கிந்த அன்

ஞாந்தாளுங் கைவல்லியமுமணிந்து என்கண்குளிரப்பார்ப்பேன் வேந்தனே.

அரிச்சந்திரன்-கவி.

இரவிமதிமாறினு மெழுகடற்பொங்கினும்
வரமதுபெயர்த்திட்டாலும் வாயிற்பொய்யுரையேன்சுவாமி.

வசனம்.

சூரியசந்திரன் கதிதப்பினுங் கடல்கள்பொங்கினும் அந்த வார்த்தை நான்சொல்லேன் சொல்லேன் சுவாமி தரகரே.

தரகன்-வசனம்.

அப்படியானலிந்த அண்ணாந்தாளைப் பூட்டிக்கொள்ளுவாயப்பா மகாராஜனே.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி உமது சித்தத்திற்கு தடையொன்றுஞ் சொல்லேன் வேதியரே.

தரகன்-வசனம்.

அப்படியா விதோமாட்டினே னிதோமாட்டினேன் தடிமகனே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-ஆதி.


வாலையணிந்தேயுள மகிழ்ந்ததற்கோவண்ணாந்தாள்
மறையவன்பூட்டச்செய்தாய் ஜெகதீசா
நூலையுணர்ந்தோரைநோக்காதிருந்தேனோதான்
நோன்பென்னவகுத்தேனோ ஜெகதீசா

சங்கராபரணம்.

அடுத்தவர்குடும்பத்தையனியாயஞ்செய்தேனோ ஜெகதீசா
அவதியெனக்கேயிட்டாய் பாவநாசா
தடுத்தேநீதிமுறைபைத்தரணியையாண்டவனோ
தான்செய்தகர்மமேதோ பாவநாசா

பைரவி.

பத்தினிமாரைநோக்கிப்பாராக்குறியிட்டேனோ
பாரிற்கொலைசெய்தேனோ உமைநேசா
நித்தியநீதிநெறியைநேமமாய்புரியாமல்
நினைவின்படிசென்றேனே உமைநேசா



அரிச்சந்திரனுக்கு நட்சேத்திரத்தரகன் கிட்டிபோடுகிறபாகம்.

சஹாரு.

பிடரிநோகவுமென்றன் பின்னரம்புந்துடிக்கப்
பெரும்வெய்யல் கொளுத்துதே விசுவேசா

படபடென்றுகால்கை பதருதேவதருதே
பட்சம்வைப்பா யென்மீதே விசுவேசா

சந்திரமதி-விருத்தம்.

செக்கினிலெள்ளையிட்டு சீருடன் றிருகும்வாராய்
மிக்கவேதியரே மிறைவரைக்கசக்கலானீர்
பக்குவமிதுவோவேதை பண்ணிடிற்கவுசிகன்பொன்
கைக்குளேவருமோகோயங் காட்டாமலாட்கொள்வீரே.

வ்சனம்.

கேளுஞ்சுவாமி தரகரே அரசர்க்கு இவ்விதத்துன்பம் செய்யப்போமோ விதனுல் பொன்வருமா பொருப்பீர் வேதியரே.

தரகன்-வசனம்.

அடா சந்தாய் நீகொடுக்கவேண்டியபொன்னை ஒரே மூட்டையாய்க் கட்டிக்கொடுக்கும்படியாய் இதோகிட்டிக்கோல் சாதித்தேன் மகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

இப்படிக் கடியேனை வருந்துவதினுலேதுபலன் நான் கவுசிகன் பொன்னைக் கெடுவிற்குள்ளேகொடுக்கிறேன் மனம்பொறுப்பீரென்னையனே.

தரகன்-வசனம்.

இருக்கட்டும் பிள்ளாய் பொன்னைக்கொடு.

அரிச்சந்திரன்-தரு-இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோகாசிவாழ் விஸ்வேசா
அவதிப்படவிட்டாயோ சர்வேசா (ஐ)

அநுபல்லவி.

கையினிற்கிட்டியிடக் கடக்குதேயுடலது
கையலையோடிவந்தே காத்தருள்கதியிது (ஐ)

சரணங்கள்.

சுணையாழியிட்டதற்கோ கையிற்கிட்டிமாட்டினுய்
கர்மவிதியோயிந்தக் காலத்தென்னைவாட்டினுய் (ஐ)

துணைவேறுகாணனேயோ தோணவுசிரம்விம்மி
துடிக்குதேநரபவெல்லாந் தூயவாடுதேகம்மி ஐ

நகக்கண்ணுமெரியுதே நற்கணுக்கணேவுதே
நாவுமுலர்ந்தேமேனி நடுங்கியுனைக்கூவுதே ஐ

மகளிழந்தாவிசோர மந்திரிமுகம்வாடி
மறையவன்செய்தகோரத்தை மாற்றவருவாயோடி ஐ

அரைமுழக்கயிற்றினு லண்ணுந்தாள்சூட்டினர்
அங்கம்பதறிமெத்த யலைந்திடவாட்டினர் ஐ

துரைநீயென்றுமேயிதோ துதிசெய்தழைத்திட்டேன்
துங்காவுமையாபங்கா துணைவரைதுதித்திட்டேன் ஐ

அரிச்சந்திரன் வசனம்.

இந்தவருத்தமென்னல் படமுடியுமோ கிருபாநிதியே ரட்சியும் ஜெகதீசா.

தரகன்-வசனம்.

இதோபொய்சொன்னன் நானென்றுஞ் செய்யக்கூடாதென்று மறுத்தான் பாருங்கள்.

அரிச்சந்திரன்கவி.

இறவன்றியின்னந்தன்ப மேதுநீர்புரிந்திட்டாலும்
சதுர்மறைபொய்த்திட்டாலுஞ் சாமிநான்பொய்சொல்லேனே.

வசனம்.

தரகரே தாங்களென்னை யின்னமனேக துன்பங்கள்செய்தாலுமடியேன் பொய்பேசேன் சுவாமி.

தரகன்-வசனம்.

அன்னுந்தாள் பூட்டக்கூடாதென்றும் கிட்டி மாட்டக்கூடாதென்று மௌனுக்கினைக் குள்ளாகேனென்றுஞ் சொன்னது பொய்யல்லவோடா ராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

அடியேனுக்கு வந்ததுயரை நீக்கக் காசிநாதனைத் துதித்தேனேயன்றி வேறில்லை சுவாமி.

தேவதாசன்-விருத்தம்.

ஐயனேநக்ஷத்திரேச யன்பரேபொருவிண்ணப்பஞ்
செய்கிறேனுதையாட்கொண்ட சித்தம்நீகறைந்துமெத்த

ணையன்மேலிட்டதாளு மணிந்திடக்கிட்டிநீக்கு
மெய்யுமென்பொன்கொடுக்கு முயற்சிநான்புரிகுவேனே.

வசனம்.

சுவாமி என்தந்தையை வருந்தும்படிக்கு நீரிட்ட வண்ணுந்தாளுங்கிட்டியும் நீக்கும் உமக்குப்பொன் வரும்படியான மார்க்கம் நாண்செய்கிறேன் வேதியரே.

தரகன் விருத்தம்.

மேஷத்தின்வயித்திற்குட்டி மேன்புலியானாற்போல
ரோஷத்தைக்காட்டவந்த ருணப்பாவிபயலேவாடா
காசதைத்தருவேனென்ற கருத்தினிற்பார்ப்பேன்தந்தை
வேஷத்தைப்போனுனக்கும் விரும்பியேசாதித்தேனே.

வசனம்.

ஆ ஆ ஆ ஆட்டின் வயிற்றில் புலிபிறந்ததுபோலப் பேசவந்த கேச்சாவுனக்கு யிதோ கிட்டிமாட்டினே னிப்போ பேசடாபேசு.

தேவதாசன் வசனம்.

சிவசிவா சிவசிவா காசிவிஸ்வேசா.

தேவதாசன்கண்ணிகள்-இராகம்-சாமதாளம்-சாப்பு.

ஐயையோஐயனும்நொய்யும்படிக்கிட்டி
கையில்பிகித்தனனே
அணையரனே-துணையரனே

அலையவே-மதி-குலையவே-மதி-குலையவே-கு-கு.

கந்தனையளித்த சந்திரனைத்தரித்த
சுந்தரனே-வாராய்
கனிபாராய்-சனிதீராய்

கைலையா-அருள்-செயலையா-செ-செ

மான்மழுதன்னையே-தான்கரமேந்திய
மனோன்மணி யுல்லாசா
மருவாசா-அருளீசா

மறையவா-என்-துரையேவா-என்துரையேவா-து-து

அஞ்சலென்போர்தனைத் தஞ்சமென்றேகாக்குஞ்
செஞ்சடைமாதவனே
அரியவனே நெரிதவனே

ஆதியே பரஞ் சோதியே பரஞ் சோதியே-சோ-சோ.

காலனையுதைத்தக் கோலனே-பார்வதி
கருதுமனோஹரனே
கதியானே மதிபரனே முக்
கண்ணனே நிர்வண்ணனே நிர்வண்ணனே வ'வ

அரிச்சந்திரன் வசனம்.

ஆ ஆ பரமசிவமே யிதென்ன கொடுமையானகாலம் பசுவின் முன் கன்றுதுடிக்கவும் நான்பார்க்கவும்விட்டாய் சுவாமி தரகரே பாலனைவருத்துவது வுமக்குத் தருமமாவேதியரே.

தரகன்-தரு-இ-ம்-அடாணாதாளம்-ஆதி.

பல்லவி.

ஏண்டாமெத்தப் பிதற்றுகிறாய் அடாசந்தா
ஏண்டாமெத்தப் பிதற்றுகிறாய்.

அநுபல்லவி.

வேண்டாமுனக்கேதுன்பம் விடுவேனடைவாய்மன்னா
சான்றோனேநீயின்பம் சாற்றிலோர்பொய்யின்றா (ஏ)

சரணங்கள்.

தரணியாண்டவனென்றுமே யுன்கழுத்திற்
றுளசாத்தினேனின்றுமே
வர்ணிக்கவென்பெருமை வாயாயிரம்வேணும்
கரணித்துனைவிடுவேன் கடுகிப்போயிலையெனும் (ஏ)

இச்சான்சேஷியும்விட்டு துலைதூரங்
கிட்டினேனுனையிட்டு
வாச்சாநீபிடிவாதி வஞ்சிபசப்பிதாவி
ஆச்சாதகடிபெத்த யறிவில்லாப்படுபாவி (ஏ)

கொட்டிவிட்டால்பொன்னைஎதோபார்ப்போம்
கோஷிக்கேனினியுன்னை
கெட்டியாய்க்கூவினாற் கிளருவேன்பொய்யனென்றே
அட்டிசெய்யத்தகாது யளித்திடுபோவேனின்றே. (ஏ)

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி பசுவின்முன் கன்றைவதைப்பதுபோலென்முன் பால னைவருத்தாதியுமென்றாலிப்படிப் பேசலாமா நான்சொல்லத்தகாத காரியத்தை நீர் பன்னியுரைப்பதினால்பயனென்ன நீரின்னம்மதுசெய்தாலும் நீர் சொன்னவார்த்தை யென்னாலாகாது நாதா.

தாகன்-விருத்தம்.

பாம்புதன்பசியைநீக்கும் பற்றுண்டதேரையப்பா
தேம்பிதன்விதியையெண்ணுந் திறமைநீயறிந்தகன்றோ
சோம்புமுன்றுயரைப்பார்த்தால் செல்லுமென்பொன்போமன்றோ
மேம்புசொல்லாதேநெத்தி மேல்வைத்தேன்கல்லைத்தானே.

வசனம்.

அடாசந்தாய் பிடிபட்டதேரைவிதியையெண்ணிஞல்பாம்புபசிபைக் கோறுமல்லவா வுன்வருத்தத்தைப்பார்த்தால்கவுசிகன்பணம் வருமா நீபணங்கொடுக்கிறவரையிலிதோ நெத்தியின்பேரிலொருகல் லைவிட்டேன் சுமப்பாயடா ராஜனே.

அரிச்சந்திரன்-வசனம்.

சிவசிவா ஓகாசிவிஸ்வேசா யிதுவுமுன்றிருக்கூத்தோ.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-சஹானு-காளம்-சாப்பு.

ஐயோவெப்படியிருப்பேன்-கல்லைத்தாங்கி
யடிவேனெப்படிப்பொறுப்பேன்

பொய்யோவேதம்பொய்த்ததோ போச்சுதேவுன்னருளும்
பொறுக்கிலேனிந்தத்துன்பம் புனிதனேவந்தருளும் (ஐ)

கழுத்தும்விம்முதேநெற்றிக் கல்லைத்தாங்கிவேனொந்து
கண்ணிரண்டும்பிதுங்கக் கால்களுந்தான்தளர்ந்து (ஐ)

பாலன்கைக்கிட்டிதொட்டே பதைக்கிறனெதிராகப்
பத்தினிமெய்தளர்ந்தும் பதறவமைச்சனோக (ஐ)

மணலும்நெருப்பைபோல மாற்றிமெக்கப்பாதம்
மறிகருதேஸ்மயணையு மறைபவர்பிடிவாதம். (ஐ)

சத்தியகீர்த்தி-தரு-இராகம்-அடாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னைவிடுமென்று எண்ணுதே ஓ ஓ தாகா விந்தப்பழி (உன்)

அநுபல்லவி.

மன்னனேசத்தியபாஷன் மாதோபதிவிரதைபார்
மகனுஞ்சிறுவனுச்சே மனங்கரைந்தினியேகார் (உன்)

சரணங்கள்.

இப்படிக்கொடுமைசெய்தால்
ஏர்க்குமோ தெய்வந்தானி

தப்பிதம்புரிந்ததேதோ
தயவில்லாப்படுபாவி (உன்)

தொண்டுவேலைசெய்தாகிலுந்
தொலைப்போக்கவுசிகன்பொருள்
கொண்டுபோய்க்கொடுப்பாயிந்தக்
கொடுமைநீக்கிடவருள் (உன்)

அறியாதபாலன்கைபி
லணிந்திட்டாய் கிட்டியும்பூநி
சரியோநீசெயுந்தீது
சண்டாளத்துரோகிதுரோகி (உன்)

மன்னன்மூகம்பார்த்தாலுள
மயங்கித்தயங்குதையோ
அன்னம்போலென்றுயுமழ
வரும்பாவிகலநீக்காயோ (உன்)

ஒப்புநான்கவுசிகன்மொழி
யுண்மையென்றுநம்பினேனே
இப்படித்தெரிந்திருந்தால்
யென்வாளுக்கிறைசெய்வேனே (உன்)

சந்திரமதி-வெண்பா.

வேந்தனுக்கேயிட்ட விதியுனக்குவாய்த்ததுவோ
என்றுனுதித்திட்டா யென்வயிற்றில்-நான்றுனே
பாவியென்றுலித்தரகன் பாவியிலுமாபாவித்
தாவியுனைப்பாரேனே தான்.

வசனம்.

அப்பாமகனே தேவதாசா நான்றுன் பாவிபென்றுலிந்தத்தரக னென்னிலுமாபாவியாயிருக்கிறுன் நீஎன்வயிற்றில்பிறந்தகொடுமை யிந்தத்துன்பப்படுகின்று யென்னசெய்யலாமப்பா யென்னிருகண்ம ணியே.

தேவதாசன்-கண்ணிகள்-இ-ம்-கெண்டா-தாளம்-ரூபகம்.

அம்மா அம்மா அம்மா அம்மா அம்மா அம்மா அதோ
அழியுதென்றன்விறல்களெல்லாம் பழிகாரனாலே

கணுக்கையுமணிகட்டும் கடுக்குதேயம்மா
விணுவிணென்றுநரம்புகளும் வீங்குதேயம்மா (அம்)

விரல்களெல்லாமுராய்ந்திரத்தம் விம்முதேயம்மா
மறையவரின்மனமிரங்க மான்றுமேம்மா(அம்)

புறங்கையும்வீங்கியிதோ பொருமுதேயம்மா
இரங்கவிவரிருதயம்நீ யேற்றுவாயம்மா(அம்)

உள்ளங்கையுந்தள்ளிவீங்க முற்றுதேயம்மா
மெள்ளவலிமேனோக்கிச்சதை மீட்டுதேயம்மா(அம்)

நாவுலர்ந்தாவிசோர்ந்து நடுக்குதேயம்மா
ஏவுதைத்தவாறிபோல் விடிக்குதேயம்மா(அம்)

தாயிருக்கச்சேய்க்குத்துன்பந் தாவிற்றேயம்மா
வாய்திறந்துஐயர்பாதம் வணங்குவாயம்மா(அம்)

சந்திரவதி-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-தாளம்-சாப்பு.

மறையவனேயிந்த மதலையின்மேனிதான்
மர்மம்செயத்தகுமோ வையாவே
முறையிடுமுகிலுன்றன் முகத்தினபங்காட்டாமல்
மூர்க்கஞ்செயநியாயமோ வையாவே

கல்லாயுன்றன்மனது கறையாப்பெரும்பாறையோ
கபடஞ்சுவேலரமோ வையாவே
எல்லாவேதியர்களு மிப்படிக்கிருப்பாரோ
விதக்கமில்லாமனத்தோ வையாவே

இரும்பாகிலுமுருகு மிரங்காதேயுன்மன
மிக்கொடுமைதானுண்டோ வையாவே
பெருந்துயரெனக்கென்ன பிள்ளைசெய்தானோகாணேன்
பெற்றவள்முகம்பாரு மையாவே

ஐயர்வில்வருத்தஞ்செய் தவர்நீரில்லாதுலகி
லாருமேவேற்றியேனோ லையாவே
பொய்யாமிப்புவிவாழ்வு பொருளுமகங்காரம்நீர்
பொருந்தற்றகுதியன்றே யையாவே

இக்குழந்தையழகு மேல்மையைக்கண்டுமன
மிரங்காதென்னமாயமோ யையாவே
திக்குநீயென்றேயுன்றன் திருவடியைப்பணிந்தேன்
திரவுளமிரங்குவா யையாவே

அஞ்சினேஞ்சஞ்சலங்க ளடுத்தோமேயின்னடியை
ஆதரித்தாட்கொள்வா யையரவே
பிஞ்சகன்றனக்காய்நீர் பிரதிவசனமொழிப்
பேசித்துயரைநீக்கு மையாவே

சந்திரவதி-விருத்தம்.

வஞ்சமும்கொடுமைசூது வன்மமுமிகவுணர்ந்த
நெஞ்சதிலிரக்கமில்லா நேமியோநக்ஷத்திரேசா
கொஞ்சமுங்குறைவில்லாமல் குடமுனிகடனையீவோம்
அஞ்சலியிவர்கடுன்ப மகற்றுவாயகற்றுவாயே.

வசனம்.

ஐயா வஞ்சங்கொடுமை நெஞ்சிரக்கமில்லாத தரகரேவிஸ்வாமித்திரமுனிக்குச் சேரவேண்டிய மொத்தத்தைக்கொஞ்சமுங்குறைவில்லாமல் கொடுக்கின்றோம் என்னுபகரும் பாலகனும் படுந்துயரத்தை நீக்குவீர் சுவாமி.

தரகன்-விருத்தம்.

கற்பினிலுயர்ந்தவம்மா கன்னியாபுரியையாளும்
விற்பனனளித்ததாயே வேண்டிநீயுரைத்தவாறு
சற்பனைபுரியவென்னஞ் சற்றேனுங்கருதேனின்னம்
நற்குணவதியேநீதான் நவின்றவாறிதோசெய்தேனே.

வசனம்.

கேளாயம்மாசந்திரவதி நீசொன்னபடியேராஜனுக்கும்பாலனுக்கும் அணைந்தகிட்டிகளையும் அண்ணார்தாளையுங் கல்லையும்நீக்கிவிட்டேன் பொருளைக்கொடுக்கவேண்டிய முயர்ச்சி சீக்கிரத்தில்செய்வாயம்மணி.

சந்திரவதி-விருத்தம்.

என்னுயிற்றுணைவரானவேந்தலேயொருவிண்ணப்பம்
பன்னுவேனையாகையிற் பலதுயரருந்தவேனோ
இன்னுநாமழிந்திட்டாலு மிவர்மனங்கனிவுகாட்டார்
மன்னரேகடனைத்தீர்க்கு மார்க்கத்தையோசிப்பீரே.

வசனம்.

கேளுமென் பிராணநாதா இவ்விதத்துன்பங்கள் படுவதுசரியோகடனைத்தீர்க்க யோசனைசெய்வீர் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமேகிளியேமானே யறிவினிலுயர்ந்ததேனே
வன்னமாமரசுநாடும் வாழ்முனிதனக்களித்தே
இன்னகர்வந்தோமின்றி பென்னகையுங்காணு
தின்னமும்பொருடாறுண்டோதெரிவிப்பாயினிவாய்த்தானே.

வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரவதி நமது நாடுநகர் முதலியவற்றையும் விஸ்வாமித்திரமுனிக்குத்தாரைவார்த்து பரதேசிகளாப்போவிவடம் வந்தோமென்கையில் நீயறியாத வேறுபொருளுண்டோமாதரசே

சந்திரவதி-விருத்தம்.

அதிபதிகன்னிநாட்டை யாள்பவனுனவந்த
மதிதயனளித்தனுறும் மாதுமேகையிலிருக்க
விதியினுல்வந்ததற்காய் வேந்தனேகளைப்பதேனே
பதியினிலெனைவிற்றந்த பாதகன்கடன் தீர்ப்பீரே.

வசனம்.

கேளுமென்பிராணநாதா வுமது கையைப்பற்றி யடியாளிருக்க நீர் துயரப்படப்போமோவிந்தகாசிநாட்டிலென்னை அரிசிவிலையாய்விற்றுப் பொருள்வாங்கியிந்தவேதியரின் துயர்தீர்ப்பீரென்கோவே.

அரிச்சந்திரன்-விருத்தம்

மாதரிலுயர்ந்தபெண்ணே மதியனைளித்தகண்ணே
நீதரவன்றோபெண்ணைத் தேடநாம்வந்தநாட்டில்
பேதறகடனுக்காக பெண்டினையயோத்திவேந்தன்
ஏதறவிற்ருனென்றே பேசுவாரென்னையன்றோ.

பெண்ணே நாமெல்லோருங் கூடிவந்த நாட்டில்கடனுக்காயம் மாதைவித்தானென்றெல்லோருமென்னைவசைபேசுவார்களிதற்கென்செய்வேனடிமானே.

சந்திரவதி-விருத்தம்.

மின்னியவைவேலேந்து மிறைவரேவிஸ்வாமித்திரர்
உன்னியநினைவநீரு முணராமற்றயங்கலாமோ
என்னையின்னகரிதன்னி லேதேதுமெண்ணிடாமல்
மன்னரேவிற்றேபந்த மாமுனிகடன் தீர்ப்பீரே.

வசனம்.

சேளுஞ்சுவாமி விஸ்வாமித்திரனுடையவெண்ணமுங்கடுதெரிந்துந்தயங்கலாகுமோ வென்னை விற்றந்த முனிவன்கடனைத்தீர்த்துவிடும் பிராணநாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமேகுயிலேபெண்ணே யனியாயமிதற்கென்செய்வேன்
தன்னகமுடையவந்தத் தவமுனிக்கிறுலும்
உன்னைநான்விற்றேயிங் கொழிப்பதேகடனையன்றி
இன்னமோர்மார்க்கங்காணே னிதுவுமென்விதியாந்தானே.

வசனம்.

பெண்ணே விஸ்வாமித்திரமுனியின் கடனுக்காக வுன்னை விற்றுதீர்க்கவேண்டுமேதவிர வேறுவிதியாங்காணேனிதுவுமென் தலையெழுத்தாகுமடிகண்ணே.

அரிச்சந்திரன் கண்ணிகள் இ-ம்-காம்போதிதாளம் திரிபுடை.

எள்ளுமெண்ணைபோலவுங்குயிலே
இருந்தோமன்றேசாலவும்மயிலே
கொள்ளவிலைகூறவும் மயிலே மயிலே மயிலே
கொடுமைசெய்தேனேபாவி.

சந்திரவதி.

கள்ளஞ்சூது போக்கினீர் பதியே
காசினியைத்தேக்கினர் விதியே
உள்ளபடிநடத்திடும் பதியே பதியே பதியே
உகன்றெனைவிர்ப்பீர் தானே.

அரிச்சந்திரன்.

சதையுதிரம்போலவுங் குயிலே
சாரியாய்வாழ்ந்தோஞ்சாலவும்மனம்
பதைக்கவுனைவிக்கவும் மயிலே மயிலே மயிலே
பாவமென்னசெய்தேனே.

சந்திரவதி.

விதியைநினைந்துருகுவீர் அரசே
விப்புரன்கடன்தருகுவீர் பதியே
சதிநானுனக்கானதாய் பதியே பதியே பதியே
சரியாமென்றனைவிற்பீர்.

அரிச்சந்திரன்.

வேனுந்தொழில்புரிந்துமே சகியே
வேண்டுபொன்னைப்பரிந்துமேயிந்த



மானுபாவன் களிக்கவே மயிலே மயிலே மயிலே
மாதேகடனைத்தீர்ப்பேன.

சந்திரவதி.

தவணைநாளுமாச்சுதே பதியே
தரகன்றுயர்வாச்சுதே விதியே
தெய்வமும்பொய்க்கலானதே பதியே பதியே பதியே
தெளிவாயென்றனை விறபீர்.

அரிச்சந்திரன்.

என்னைவிலைசெய்குவாய் சகியே
இருடிகடனீக்குவாய் மான்
தன்னுடனேநீயுமுன் மயிலே மயிலே மயிலே
தாய்மனைபோயிருப்பாய்.

சந்திரவதி.

அன்னைகுருஅப்பனும் அரசே
ஆளனென்ஒப்பினும் பதியே
என்னைப்பரிட்சிப்பதேன் பதியே பதியே பதியே
இனிவாய்விலைகூறுவீர்.

அரிச்சந்திரன்.

நானுமன்னுகவே சகியே
நாட்டில்வந்தமநோகவே என்
சானுட்குன்றவே மயிலே மயிலே மயிலே
சதியைவிற்கவுமாமோ.

சந்திரவதி.

தானுவேநீதுடிக்கவும் அரசே
தனையன்றுயர்பிடிக்கவும் பதியே
காணும்படிவந்தபின் பதியே பதியே பதியே
கடனுக்கெந்தனை விற்பீர்.

அரிச்சந்திரன்.

இரதியுமதன்போல சகியே
யிருவர்வாழச்சாலவே பாவி
சதிமினைந்தோபிரமனும் மயிலே மயிலே மயிலே
சற்பனையோ வறியேன்.

சந்திரவதி.

விதியேவேலனுனதும் மரம்
விமலனையமெடுத்ததும்பதியே
கதிநல்லதில்மேவவே பதியே பதியே பதியே
கடிகிவிற்பிரேனேயே.

அரிச்சந்திரன்.

நாரும்பூவைப்போலவே மயிலே
நாட்டில்வாழ்ந்தோஞ் சாலவேயின்று
வேறுபடவந்ததோ காலம் சகியே சகியே சகியே
வினையின்கதியறியேன்.

சந்திரவதி.

காருஞ்சத்யவாக்கையே அரசே
கநமுற்றிமொக்கையே நானும்
வேற்றினுமன்புவேபதியே பதியே பதியே
விரதம்பொய்க்கேனுதா

சந்திரமதிவிருத்தம்.

எத்திசைபுகழும்வேந்தே யென்னையிக்காசிதன்னிற்
சித்தமஞ்சாமல்விற்றுச் சிருடன்பொருளைவாங்கி
முத்தனுக்களித்திடாமல் முகம்வாடியேன்வீணுக
இத்தனை துயரங்கொள்ள வேற்குமோவென்றன்கோவே.

வசனம்.

கேளுமென் பிராணரட்சகா என்னைவிற்றுவிஸ்வாமித்திரர் கடனைத்தீர்க்காமல் முன் பின்யோசிப்பதினுல் யாதொருபலனுங்காணேன் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

கற்பினிலுயர்ந்தமாதே காசியாம்புண்யநாட்டில்
விற்பனன் துயரினுலே வெம்பினேனுன்னைநீதிக்
கொப்பியேயுளந்துணிந்தே யுன்முடிமேற்புல்லிட்டுக்
கப்பியேவிற்கவெண்ணங் கருதினேன்காலந்தானே.

வசனம்.

ஆ ஆ பெண்ணே பாதிவாக்குமீறாத வென்கண்ணேயுன்முடி மீது புல்லைவைத்து விலைகூறக்காலம்வந்தது முன்செய்த கருமவசந்தான் மாதே.

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே சரஸ்வதி நீசொன்னவாறே முனிவருடைய கடன் தீர்க்கவேண்டி யுன்னை யிக்காசிதெருவில் விலைகூறிவிற்கின்றேன்பெண்ணே.

சத்தியகீர்த்தி-கண்ணிகள்-இராகம்-பரசுதாளம்-ஜம்பை.

ஐயனேயிந்தவெண்ண மாகாதுயாகாது
மையவேநானிருக்கக் கவலையுறலேது க

சத்தியத்தைவிடுக்காமல் சக்கரத்தைத்தாங்கிருந்தீர்
பெற்றவனேயித்துணிவு பேணுதலைவிடுவீர் உ

சாந்தமொருருபம்தான் சற்குணமுள்ளென்தாயை
வீந்துமனந்தனியேநீ ரிருப்பதுண்டோவையா ங

தாருவந்தபாதகனுந் தான்றொடுக்கபலகோரம்
பரமனுந்தான்செயுங்கூற்றே பாவமதோவையா ச

மாதைவிற்றார்மன்னரென்றுமாநிலத்தோர்வசைமொழிவார்
வேதையுண்டோவென்னைவிற்கவெறுப்பதுண்டோவையா ரு

உடலுமதுவுயிருமது ஊனுமதுநானுமது
புடமிசையில்வெறுமையுண்டோ புகலுவீரென்னையா சு

பெற்றபிள்ளை தன்னைவிட பிரியமகனிருக்க
உற்றமரேமனங்கலங்கு முறைக்கமேதோவையா எ

பாவியெனையிக்கோரம் பார்க்கவயனேன்படைத்தான்
தாவிநீரென்றாயைவிற்கத் தான்பார்க்கேனையா அ

இவ்விதியைநானோக்க விருந்தேனோவுயிருடனே
செவ்வலனேயான்மரித்தால் க்ஷேமம்விஸ்வநாதா கூ

தரகன்-வசனம்.

ஓராஜனேமந்திரியை விற்கவுனக்கு நீதியுண்டா விது சத்தியத்திற்கொவ்வாதவார்த்தை யந்தப்பொன்னை நான்வாங்கமாட்டேன் வேந்தனே.

அரிச்சந்திரன்-வசனம்.

கேட்டையா மந்திரி நீயுன் றுயரத்தைப்போக்க வந்தவிதியை நோக்குவாயப்பா சத்தியகீர்த்தி.

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரவதி ஐயர் சொன்னதைக் கேட்டையா யுன்னைவித்து கடன்தீர்ப்பதே யுறுதியாச்சுதுமாதே.

சந்திரவதி-வசனம்.

சத்தியந்தவொக்கும் தைரியம்விடாமல் சந்தோஷமாய் விற்பீரென் பிராணநாதா.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே செய்கிறேன் மாதே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

கற்பினிலுயர்ந்தார்தெய்வங் கணவனேயென்றிருந்தாள்
அற்புதநடைகுணுளி யாந்தர்யசத்தியூண்டாள்
விற்பனள்விவேகசாலி வேண்டியென்கடனைத்தீர்க்க
தற்பரனருளாலிங்கு தான்விற்கவந்தேன்கொள்வீர்.

வசனம்.

இவளோ பதிவிரதாசிரோன்மணி வேதமறிந்தவள்விவேகி யிவளை நான் முனிவனிடம்பட்டகடனைத்தீர்க்க விற்கின்றேன்வாங்கவருவீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-நீலாம்புரி-ஆதி.

விளையான்மனைவியையும்விஸ்வா மித்திரகடன்தீர
விற்கிறேன்நான்கனவான்களே வேண்டில்வருவீரே க

வசனம்.

என் விதிப்பயனுலமைந்த கடனைத்தீர்க்க வென்மனைவியை விற்கின்றேன் வாங்கமனமுடையவர்கள் வருவீர் கனவான்களே.

துணையானவளெனக்கும்பொய்யைச்சொல்லாதவள்பாரீர்
யிணையாய்வந்தேயிவளைக்கொள்ள விங்கோயோடிவாரீர் உ

வசனம்.

எனக்குயிர் துணையாயிருந்தவள் பொய்பேசாதவளிவளைக்கொள்ள வாருங்கள்.

எஜமான்மொழிகடவாதவ ளிரக்கமுள்ளமனத்தாள்
நிஜம்போன்றவள்கொலைவிட்டவள்நேராய்க்கொள்ளவாரீர் ங

வசனம்.

எஜமான்வார்த்தையைக் கடவாதவள் கொலைக்கிப்பயந்தவள் கொள்ள வாருங்கள்.

நலமன்னவர்குலம்வந்தவள் நெல்லறியுடையாள்
தலம்விட்டாலேகாளவிதி தாண்டாளிவள்வாரீர் ச

வசனம்.

நல்ல ராஜகுலத்திற் பிறந்தவள் அயல் வீடுபோகாதவள் தனக்குத் துன்பஞ்செய்தோரையு மின்பமாயழைக்கத்தக்கவள்பாருங்கள் கனவான்களே.

தரகன்-விருத்தம்.

அடா அடாபார்க்கப்போறே ளையையோபுத்திகெட்டே
படபடப்புடமோதைப் பற்றிகைகூவினுளிவ்
விடமதில்வருவாராரோ விலையெவர்கொடுக்கப்போறுர்
அடம்விடு இதுதகாது ஆண்மையுமல்லவேந்தே.

வசனம்.

ஓய் ராசனே இந்நேரம் கத்தியும் இவடத்திற்கு யார் வந்தார்கள் இவளை யார் வாங்கப்போகிறுர் உன்னுடைய பிடிவாவத்தை விட்டுவிடு இதுவுமொரு ஆண்பிள்ளைத்தனமல்லகாணும்வேந்தனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

மாதுகேளுன்னையிந்த மாநகர்காசிமேவுங்
கோதுறுவீதிக்கொண் டோடிவிலைதான்கூர்வேன்
தீதுண்டோநாமுமுண்டோ தெரிவிப்பாய்கண்ணேமெத்த
ஓதுமுன்றரகன்றுனு மொடுங்குதென்மனமும்பெண்ணே.

வசனம்.

அடிபெண்ணே தரகர்சொன்னதைக் கேட்டையா நானுன்னைக் கைப்பற்றித்தெருத்தெருவாய்ச்சென்று விலைகூறுவேனுனக்குயேதாகிலும் வெட்கமாகுமோ சொல்லுவா யென்கண்ணே.

சந்திரவதி வசனம்.

கேளுமென்பிராணநாதாகணவன் சுகத்தைக்கோறினவெனக்கு துக்கமுண்டா வெக்கமுண்டாமுனிவன்கடன்தீர்ந்தால்பரகதியடைவோமென்னுயகரே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேவிற்கிறேன் பெண்ணே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இராகம்-சாரங்கம்-ரூபகம்,

பூசுங்களபஞ்சேர்க்கப் புஷ்பந்தொடுக்கமெத்தப்
புனிதவிதமறிவாள் பாரீர்இந்தப்
புவியாளும்ராசர்களாணைுந் தடையில்லைப்
பொருளிந்திவளைக் கொள்ளவாரீர்

வசனம்.

இவளோ களையஞ்சேர்ப்பதிலும் புஷ்பந்தொடுப்பதிலு மெத்த சிறந்தவள் இராஜாக்களானாலும் விற்கத்தடையில்லை வருவீர்கள்வேந்தர்களே.

வீணிற்காலங்கழிக்காள் வேண்டுந்தொழில்புரிவாள்
விதிநெறிதவறிடாள் பாரீர்குல
வேதியரானாலும் வேண்டும்பொருளீந்தே
விலைக்கோயிவளைக் கொள்ளவாரீர். (உ)

வசனம்.

வேதவிதிதெரிந்தவள் வீண்காலம்போக்காதவள்வேண்டியபடியேபணிவிடை செய்யத்தக்கவள் குலத்திலந்தணரானாலும் விற்கத்தடையில்லைவாங்குவீர்கள் கனவான்களே.

வாய்மொழியெதிரிடாள் வணங்கிப்பாதம்பணிவாள்
வருக்காநிஜமுடையாள் பாரீர்குல
வைசியரானாலும் வருந்தும்பொருளளித்தே
வாகாவிவளைக் கொள்ளவாரீர். (ங)

வசனம்.

எதிர்மொழிபேசாதவள் வணங்கித்தொழில் செய்யத்தக்கவள் நிஜநிலைபிசகாதவள் குலத்தில்வைசியரானாலும் விற்கத்தடையிராது வாருங்கள்வாருங்கள் கனவான்களே.

கவிவாணருக்கு கவிகாலமுஞ்செய்தவள்
கல்வியிற்சிறந்தவள் பாரீர் இந்த
காசியின்வேளாள ரானாலும்பொருளீந்து
கரமுடனே கொள்ளவாரீர். (ச)

வசனம்.

இவளோ வித்தையிற் சிறந்தவள் வித்வான்களுக்கு வெகுமதி செய்தவள் உயர்ந்தகுலத்தோரான வேளாளராகிலும் விற்கத்தடையிராது வாருங்கள்புண்ணியவான்களே.

சாத்திரமுறைகளில் சற்றும்பிசகாத
சன்மார்க்க முணர்ந்தவள்பாரீர்
சூத்திரரானாலுஞ் சுருக்கெனவேபொருளைச்
சொரிந்தேயவளை வாங்கவாரீர். (ரு)

வசனம்.

நீதிசாத்திர நெறிதெரிந்தவள் சூத்திரராறுலும் விற்கத் தடையிராது வாருங்களப்பா வாருங்கள்.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திரமகாராசன் பதிவிரதாசிரோனமணியாகிய சந்திரவதியம்மனை விலைகூறி வருவதைக்கண்டகவுசிகன் காலாக்கினிக் கொப்பாகிய கற்புடையவளைக் கொள்ளமற்றியாருமகாதென வக்கினிதேவனை யழைக்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அக்கினிபகவானே வாரும் அக்கினிபகவானே.

அநுபல்லவி.

திக்குநீரென்றன்று தேவர்முறையிடவுந்
தேவேந்திரன்சபைதனில் திகழும்வரமளித்த (அக்)

சரணங்கள்.

காசிவேதியனுகமடியுடுத்திக் கையில்பஞ்சாங்கமோங்க
வீசிநடையதாகஅறுகுநூலும் விளங்கிமெய்யினிலோங்க
மாசிலாதயர்த மன்னனரிச்சந்திரன்
மாதைவிலைகூறுகிறுன் மடியேன்முன்னிதுகாலம் (அக்)

அக்கினிதேவன்-விருத்தம்.

அன்னமேசொல்லக்கேளா யமரர்கோன்சபையிலன்று
வன்னமாயரிச்சந்திரன்றன் வாயிலோர்பொய்யைநாடி
பன்னவும்விஸ்வாமித்திரன் பந்தயங்களித்தேகூறி
உன்னதசகாயஞ்செய்ய வுற்றெனைக்கேட்டான்பாரே.

வசனம்.

கேளாய்பெண்ணே சுவாலா, நான்தேவேந்திரன் சபைக்குப் போயிருந்த காலையில் அரிச்சந்திரமகாராசன் வாயிற் பொய்பேசச் செய்வேனென்று விஸ்வாமித்திரமுனி பந்தயங்கட்டியதைக் கேளாய்மாதே.

அக்கினிதேவன்-விருத்தம்.

அவனெனையேவணங்கியன்று போற்றிநிற்க
யனுமதித்தேன்வருவேனென் றளித்தேன்வாக்கு

தவமுனியுமின்றெனையே வேதியனாகத்
    தான்வரவங்கோறியிட்ட றுதியைக்கேட்டேன்
இவடமிருப்பதுமினியே தகாதுநான்போய்
    இட்டமுறைப்படியதனை யினியச்செய்வேன்
கவனமுடனீயும்பிரா மணத்திபோலக்
    காசிநகர்வந்திடுவாய் கடுகிற்றுனே.

வசனம்.

கேளாய் பெண்ணே சுவாலா என்சகாபத்தைக் கோறியன்று விஸ்வாமித்திரன் வணங்கிநிற்க நானுங் கோறியபோதுவருவதாய்வாக்களித்தே னிபபோது என்னை பிராமணவேடமாய் வரும்படியழைக்கிறான் போகின்றேன் நீயுங் கொஞ்சம்போது விட்டுக்கொண்டு பாப்பாததி வேடமெடுத்துக்கொண்டு காசிநகர் வருவாய் என் கண்ணே.

சுவாலாதேவி-விருத்தம்.

நாதனேகாசிதன்னை நாடியேவருவேனங்கு
நாதனேயங்குதங்க நலமுடவளவுமுண்டோ
நாதனேநாட்டோர்கண்டால் நம்மையெவ்வகைமதிப்பார்
நாதனேயதுதான்தோற்ற நயமுடனிரைசெய்வீரே.

வசனம்.

கேளும்பிராணநாதா நான் தங்களுத்திரவின்படி காசிபட்டணம்வருகின்றேன் அவடம் நாமிருக்க விடமேது ஊரார் மதிப்பரோ, இதற்கொருவுபாயஞ் சொல்லுவீர் சுவாமி.

அக்கினிதேவன்-விருத்தம்.

காசிநகர்வேதியர்வாழ் ரேணிதன்னிற்
    காலகண்டனெனுமையன் விடுதியுண்டு
ஆசித்தேயவன்மனைவி யுடனேயாத்திரை
    யகன்றிட்டான்குமரிதனை நாடிக்கண்ணே
யோசிப்பாயவன்றிரும்ப நெடுநாள்செல்லு
    முற்றவனைப்போலுருவை யெடுப்பேனும்
மாசின்றிநீயுமவன் றேவிரூப
    மாறிடுவாய்வரும்போது மானேபோறேன்.

வசனம்.

கேளாய் பெண்ணே சுவாலா, காச அக்ராரத்தெருவில் காலகண்டனெனும் ஓர் பிராமணனிருந்தான் அவனுமவன்தேவி காலகண்டியும் யாத்திரைபோயிருக்கிறார்கள் அவர்கள் திரும்பநாள்சொல்லு

ம்நானவனைப்போ லுருவெடுத்துப் போடுகின்றேன் நீவனதேவியை ப்போலுருவெடுத்து வருவாய் அவாளிருந்த மனையில் நாமும்சிலகா லமிருந்து வருவோமடி கண்ணே.

சுவாலாதேவி-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே போவீர் என்பிராணநாதா நானுங்க ளுத்திரவின்படி வந்துசேருகிறேன் சுவாமி.

பொது-வசனம்.

கேளுங்கள்சபையோர்களே கௌசிகமுனி யிட்ட முறையைக் கேட்ட அக்கினிதேவன் பிராமண வேடமெடுத்து முனிவன்முன் தோன்றினன் என்றறிவீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

போற்றி போற்றி அக்கினிபகவானே போற்றி.

அக்கினிபகவான்-வசனம்.

என்னையிந்த வேஷத்துடன் வரக்கோறிய காரியத்தைத்தெரிவி ப்பாய் முனியே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

மன்னவன்னரசதனை கவர்ந்திட்டேன்
சூதாலே மகிபன்றானும்
பொன்னதனைக்கேட்டதற்குக் காசிதன்னிற்
தருவேனென்ற புகலச்சக்ரன்
தன்னையுமேயின்தரக னய்விடுத்தே
னவன்புரிந்த தாழ்வுதன்னால்
இன்னகரில்பெண்டைவிற்க வெண்ணிநி
னரிச்சந்திர னியம்பக்கேளே.

வசனம்.

சுவாமி கபடமாக அரிச்சந்திரமகாராசனிடம் பொன்னை தான த்தை வாங்கி அவனிடமே வைத்த அவனரசைக்கைகொண்டு முன் னிருத்திப்போன பொன்னைக் கடனகச் சுமத்திக்கொடுவெனக் கே ட்கக் காசியில் தருகிறேனென்றான் சுக்கிரபகவானைத் தரகனய்விடு த்தேன் அவர்செய்த துன்பம் பொறுக்கமாட்டாமல்தன்மனையாளை விற்கின்றான் கேளுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

நீர்சென்றேவேதியராய் மாதுதன்னை
நிகழ்விலைக்கேகைக்கொண்டு பாலனோடும்

பார்தனிலையடியான்செய் பணிகளெல்லாம்
பத்தினிதான்புரிந்திடவே பகர்வீர்மற்றுஞ்
சீர்பெருகுமைந்தனையே மாடுமேய்த்துச்
செப்பருநற்சமுத்தைகயெல்லாங் கொணரச்செய்வீர்
பேர்பெருகவெனைநாளுங் காத்தளிக்கும்
பிரபலனேநின்னிருதாள் பேணினேனே.

வசனம்.

சுவாமி நீர் வேதியராகச்சென்று அந்த சந்திரவதியை விலைக்கு க்கொண்டு பாலனையுங்கைப்பற்றி பாங்கிகளுஞ் செய்யத்தகாத தொழில்களை பத்தினியாள் செய்யச்செய்து பாலனை மாடு கன்றுகள்மேய்த்து சமுத்துகள் கொணர்ந்து வரச்செய்வதுடன் அதிக துன்பப்படுத்தி என்கோறிக்கை ஈடேறச்செய்யும் நாதா.

அக்கினிபகவான்-வசனம்.

கேளும் முனியே நீசொன்னபடி நடத்த இதோ நான் போகின்றேன் வாழி வாழி.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே சந்திரவதியம்மனை விலைக்குக்கொண்டு அதிக துன்பங்கள் புரியவேண்டி அக்கினிபகவான் கொண்ட ஐபராக வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

காலகண்டன்-தரு-இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி

பல்லவி.

அருமறையுணர்ந்ததி யழகுபடைத்தகாசி
அந்தணரிதோவந்தார் காலகண்ட
ரந்தணரிதோவந்தார்

அநுபல்லவி.

பெருமையொளிவிளங்கிடும் பேசவுந்தெளிவுள்ளோங்கித்
தருமநினைவு பொங்கித் ததிக்குமருளைத்தங்கி
பேணியதேவரும் பெருநிதியாவரும்
பூணியமுனிவரும் புகழ்ந்திடயனைவரும்
போற்றபகுதிகளை யேற்ற
பொற்புருகமலயன்
வெற்புயவடிவினில்
தற்பரமிலகொளும்
அற்புதனாகிய



புனிதன்சகலசிரர் கினிதனசுரர்பணி
வனிதைநற்சுவாலையுடன் மனிதருபத்தே

சரணங்கள்.

காசித்தெருவிலோடியே
கனிவுடன்கவுசிக
னினிதுடன்வேண்டிட
ஆசித்தரசைத்தேடியே

காளையேறுபவன்
ருணையடையவென
நாளைவனுமைசெயும்
வேளையறிந்துதுதி

கற்புடையமாதுதனை
விற்பனவிலைக்கேகொண்டு
பற்பலகோரங்களுடன்
கற்பனைகளும்புரியக்

காண-அரசன்வெட்கம்
பூண-அமைச்சனுடல்
நாண-விருவரைக்கொள்
வேண-வெனத்தாண்டியே (அரு)

காலகண்டன்-விருத்தம்.

ஐபவேசுக்கிரமூர்த்தி யடியன்தன்வந்தனள்காண்
மெய்யனுப்விஸ்வாமித்திரன் மிகக்கோறிநின்றவாறு
துய்யநானடையாளோடுந் துயருற்றசுதனைக்கொண்டே
வெய்யருங்கொடுமையெல்லாம் விளைவித்தேபார்க்கவந்தேன்.

வசனம்.

கேளும் சுக்கிரரே, விஸ்வாமித்திரன் கோறியபடி இந்தமாதையும் பாலனையுங் கைப்பற்றி அநேக கோரங்கள்புரிய இதோ நானும் வந்தேனையா.

தரகன்-வசனம்.

மகாசந்தோஷம் மகாசந்தோஷம் மகாசந்தோஷம்

காலகண்டன்-விருத்தம்.

கங்கையைச்சடையிற்றாங்கும் காசிவிஸ்வேசகாட்டில்
மங்கையைவிலைதான்கூறு மறிவிலானுர்காண்பிள்ளாய்
நங்கையின்நாமமென்ன நாயகனுன்றாரும்பேரு
மிங்கையேவெனக்குநீதா னெடுத்துரைசெய்வாயப்பா.

வசனம்.

நீ ஆர்காணும்பிள்ளாய் ஆம்பிடையாளை விலைகூறிவிற்கின்றவன் இவள்பேரென்ன உன்பேரென்னஉன்தேசமெதுவோதெரியச்சொல்லுவாயப்பா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

இத்தலம்புகழயோத்தி யெழிலுறுதிரிச்சங்கென்ற
சத்யனரிச்சந்திரனென்றே சாற்றுவாரென்பேர்மாதோ
பத்தினியெனக்கேயாகும் பரமனின்னடியன்விஸ்வா
மித்திரன்கடனைத்தீர்க்க மெய்யனேவிற்கின்றேனே.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி ஞானயோத்திபாண்டதிரிச்சங்கென்றசத்தியபாஷனென்னும் அரிச்சந்திரன் இவளென்றேவி இயள்பேர்சந்திரவதிவிஸ்வாமித்திரமுனிவர் கடனைத்தீர்க்கவேண்டி விற்கின்றேனையா.

காலகண்டன்-விருத்தம்.

கடனுக்காய்மாதுதன்னை காசிதனிலிம்மட்டும்
உடன்பட்டுவித்தபேர்களுனையன்றிவேறுகாணேன்
தடதடத்திடவேநீதான் தருகிலேனென்றுனுன்னை
படபடத்திடவன்செய் பழுதேதுபகருவாயே.

வசனம்.

அய்யாராஜனேகடனுக்காக ஆம்பிடையாளைவிற்றவர்களுனையன்றி வேறுகாணேன் கடனைக்கொடுக்கிற 'தில்லையென்றுளாந்தமுனியேதுசெய்வானப்பா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஐயரேநீர்தான்சொல்வ தடாதகாரியமேயாகும்
மெய்யுமென்னுவிபெண்டீர் மித்திரர்மைந்தர்சுற்றம்
கையைவிட்டகன்றிட்டாலுங் கடனிலையெனவேவாயால்
பொய்யுரைமொழியவுள்ளம் பொரிந்திடேன்புநிதாபோற்றி.

வசனம்.

சுவாமிநீர் சொன்னதற்கொப்பேன் என்பெண்சாதிபிள்ளைசுற்றம் முதலானவைகள் போனாலும் கடனில்லையெனப் பொய்யைவாயாற் சொல்வதைவிட வென்னுவியைக் கைசோரவிடப் புன்னிடேனென்றறிவீர்வேதியரே.

காலகண்டன்-விருத்தம்.

பயந்தினிலெழுகவொண்ணாப் பாவையாமிவளைக்கொண்டால்
மடத்திலேவாழுமென்றன் மனைவியையிவடனக்கே
யுடன்பட்டுயேவற்செய்ய லொக்குமேயல்லாலிவடான்
படபடப்புடனேவேலை பணிந்துமேசெய்வாளோடா.

வசனம்.

ஒப் ராசனேயிவளழகைப் பார்த்தாளிவளுக்கென்னுடைய ஆம்பிடையாள் வேலைசெய்யவேண்டி யிருக்குமேயன்றி யிவளெந்தன் ஆத்துவேலைசெய்வாளோ சொல்லுங்காணும்பிள்ளாய்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

நீரிடும்வேலையெல்லாம் நின்றுமேவணங்கிச்செய்வாள்
பாரினிலியாருமெச்சப் பண்புடன்பூத்தொடுப்பாள்
சிறிடும்களபந்தன்னைச் சிறப்புடன்மைப்பால்பின்னும்
வேறிடம்போகாளைபா வீணுரைபுரியாள்காண்பீர்.

வசனம்.

சுவாமி நீருமற்றெல்லோருமெச்சும்படி நடப்பாள்களபகஸ்தூரிபூச்செண்டுகள் மெத்தவிநோதமாய் முடிப்பாள், அசல்வீடுபோகாள் வீண்வார்த்தை பேசாள்வேதியரே.

காலகண்டன்-விருத்தம்

வேலைகள்செய்வாளென்றாய் விளம்புவேன்மன்னகேளாய்
காலையிலெழுந்தேசாணங் கரைத்துமேதெளித்துபின்னும்
பாலைநான்கறக்குமுன்னே பசுத்தொட்டிபெருக்கிச்சாண
சாலவேதட்டிநெல்லைச் சலிபாமற்குத்துவாளோ.

வசனம்.

கேளும்ராஜனே காலையிலெழுந்துசாணந்தெளித்து முத்தம்விளக்கி பசுந்தொட்டி பெருக்கி முட்டைகள் தட்டி நெல்லுகுத்துவாளோ சொல்லும்பிள்ளாய்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

துய்யமாமறையுணர்ந்த நோன்றலேகேட்பீர்சொல்வேன்
மெய்யினையறிந்தேசத்திய மேவிடும்விதிகள்கற்றாள்
ஐயரேயுகந்துசொல்லும் அருந்தொழிலெலாம்புரிந்தே
உய்யநீர்மெச்சநாளுமுண்மையாய்நடப்பாள்சுவாமி.

வசனம்.

சுவாமியிவளோ நீதியுணர்ந்தவள் நீர்சொல்லும்படியான வேலைகளெல்லாந் தடையின்றிச்செய்து தங்களுடையமனங்களிப்புற நடந்துக்கொள்ளுவாளையரே.

காலகண்டன்-விருத்தம்.

இல்லறமதனைச்சார்ந்தே யிடுந்தொழிற்றன்னையெல்லாம்
வல்லமையுடனிவள்தான் வணங்கியேசெய்வாளென்றாய்
நல்லதுபிள்ளாய்நீதான் நாடியேவிற்குமொத்தஞ்
சொல்லவேவேணுமிங்குச் சுறுக்கெனவளிப்பேன்றானே.

வசனம்.

கேளும் ராஜனேமெத்த சந்தோஷம் இவளைநீ விற்கும்படியான மொததத்தைச்சொன்னால் நான்கொடுத்து வாங்கிக்கொள்ளுகிறேன் பிள்ளாய்.

அரிச்சந்திரன்-கவி.

கரிமிசைபேலொரு காளையேறியே
எரிகவுண்விடவது யேகுபரம்பொன்
தரிகிநீருமே தடைபுரியாமலே
அரிதிகிறையா யளிப்பேனிவளையே.

வசனம்.

சுவாமி ஒரு யானையின்பேரில் வாலிபன்ஏறி கவுண்டெறிந்தால் அதுபோகுந்தூரம் பொன்கொடுத்தால் உமக்கிதனை அறிதிக்கிறையமாய் விற்கின்றேன் சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

இப்புவிதனிலெந்நாளு மிப்பெருங்கடன்றான்பட்டோர்
செப்பவுமொருவராலென் செவியதாற்கேட்டதில்லை
அப்பனேதுகையோமெத்த வாகிலுஞ்சிந்தையில்லை
ஒப்பினேன்கொடுக்கயானு மோதுவாயெவர்க்குத்தானே.

வசனம்.

ஓராசனே நீசொல்லிய மொத்தமோவதிகம் ஆகிலும்யோசிக்க வேண்டியதில்லை நானுரிடங்கொடுக்கவேண்டியது.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தயவுளமனத்தேயென்றன் றயாபராநின்றாள்போற்றி
பயத்தினிலிருந்தவென்னைப் பாலிக்கவந்தோய்போற்றி

நயத்துடன்றரகாய்வந்த நாயகன்றனக்குநீரே
வியப்பின்றிபொருளளித்தே வேதியரேயிவளைக்கொள்வீர்.

வசனம்.

சுவாமி பென்மனேவிபாகூலத்தை நீக்கவந்த நாதா விங்கத்தர கருக்கு யிந்தமொத்தத்தைக்கொடுத்து விட்டு இவளைக்கைக்கொள் வீர் வேதியரே.

காலகண்டன்-விருத்தம்.

வாக்கதுபிசகாமன்ன வழுத்துவேனென்றுகேளாய்
நோக்கேதுந்துயரவேண்டாம் நொடிக்குமுன்பொருளைத்தாரே
தாக்கியித்தரணிமாந்தர் தான்செய்யும்வாறுபோல
நேக்குநீமுறிசீட்டொன்று நெறியுடனெழுதித்தாராய்.

வசனம்.

கேளும்ராசனே நோக்கேதும் விசனம்வேண்டாம் நானப்படி யே யிருவருக்குக்கொடுத்து விடுகிறேன் நீநாட்டின்வாடிக்கைபோ லெனக்கு முறிசீட்டெழுதிக்கொடும் பிள்ளாய்.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாசந்தோஷமப்படியே யெழுதிக்கொடுக்கிறேன் ஓலையுமெழு த்தாணியு மருள்செய்யவேண்டும் வேதியரே.

காலகண்டன்-வசனம்.

ஒய்தரகரே யும்மிடத்திலோலையு மெழுத்தாணியுமிருந்தா லிவ னுக்குக் கொடுப்பீர்காணும் பிராமணா.

தரகன்-வசனம்.

இதோ யப்படியே கொடுத்தேனையரே.

அரிச்சந்திரன்-ஆசிரியவிருத்தம்.

திங்களுடன்கங்கைமரு கொன்றையுந்தும்பையணி
தேவனும்விஸ்வநாதன்
திகழ்பெருகுமேவுநகர் காசிவாழய்யராங்
திரிகாலகண்டருக்கே
தந்தைவளரயோத்திபாண்டரவிகுலவேந்தனி
தரைபுகழ்திரிசங்குமே
தான்செய்தநற்றவப்பலனுமரிச்சந்திரன்
தவமுனியின்கடனிகவே

மங்கையெனதானநற்குணம் வளருமதிதயன்
மகிழ்ந்தீன்றசந்திரவதியை
மாமுனிதவனேபோற் கரியேறிகவுணெறியு
மட்டும்பொருள்வாங்கியே
சங்கையைவிலக்கியே யறிதியில்லையாகவென்
சாட்சியிம்மந்திரியுந் தரகனுங்காணவே
சாதித்தேன்வழக்கில்லையே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஐயனேநக்ஷத்திரேசா யன்பனேசத்யகீர்த்தி
நொய்யுறுமனத்தோடிவந்த றுணிமுறிச்சீட்டிலேதான்
கையதிற்றுங்கிச்சாட்சிக் கண்கண்டவாறுய்நீங்கள்
மெய்யரேகையைநாட்டி மிகக்களிப்புடனீவீரே.

வசனம்.

சுவாமி தரகரே அப்பாமந்திரி யிந்தமுறிச்சீட்டிலுள்ள சாட்சிக் கைநாட்டிட்டுக் கொடுப்பீர்களன்பர்களே.

தரகன்-வசனம்.

மகா சந்தோஷமிதோ நான் சாட்சியிட்டேனப்பா அரிச்சந்திர மகாராசனே.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

ஐயனேநான்செய்வதென்ன அரகராசிவசம்போ
மெய்யொளிதாயைவிற்று மும்முறிச்சிட்டுக்கென்னை
கையிடச்சாட்சியாகக் கதியெனக்கெழுதினுயோ
பையரவதனைப்பூண்ட பரமனேகாசிநாதா.

வசனம்.

ஐயையோ காசிநாதாஎன்றையே விற்றமுறிச்சீட்டுக்கு சாட்சி யெழுதும்படியெனக்கு விதித்தாயோ ஓதெய்வமேதெய்வமே.

சத்தியகீர்த்தி-இராகம்-தேசிகசங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காசிநாதனே-விட்ட-கதியிதுதானே.

அநுபல்லவி.

மாசிலாதயந்த-மதிதயன்பெற்ற
மாதானவென்றுயை-மழுகுறவிலைசெய்ய

சரணங்கள்.

என்னக்கொடுமையோ-முன் ஏதுவருமையோ
இன்னகர்தன்னி-லிவரவர்வேறாக
மன்னரொண்டியாகி மாதுபிரிந்திட — காசி

எப்போகாண்பேனோ வுடலென் தரிப்பேனோ
தப்பிலியப்பிரமன்-தானிவ்வாறாய்விதி
அப்பொழுதெழுதிட வறிவுமிழந்தானோ — காசி

உடலுஞ்சோறுதேயெந்தன்-வுதிரமாறுதே
கடனபட்டாலுமிக் காட்சிசெய்வதுண்டோ
விடமுண்டவாவுன் விளையாட்டோவிது. — காசி

சந்திரவதி-விருத்தம்.

அப்பனேமந்திரிநீதா னறியாததொன்றுமுண்டோ
செப்பவன்சாமிதுன்பம் நீக்கியவாறேபோதும்
தப்பிலியென்றஜன்மந் தன்னியமாயிற்றன்றோ
ஒப்பிலாநீசாட்சிநாட்டி யுறுதியாயளிப்பாய்பாலா.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி நீ துக்கப்படலாமோ வின்றல்லவோ வென்ஜன்மம் பெருமைபெற்றது நீ துயரத்தைவிட்டு மனதொத்து சாட்சி போடுவாயப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்.

அம்மணி இப்படிகேரிட்ட விதியறியேன் தங்கள்சொல்மீறேனிதோ மகாபாதகனென நானுமென்கைநாட்டு சாட்சியாய்யிட்டேன் தாயே.

சத்தியகீர்த்தி-வசனம்.

சுவாமி யிதோ வுமதாக்கினை யின்படி யென் தாயை விற்றமுறிச் சீட்டிற்கென்விதியை நொந்துநானுஞ் சாட்சியிட்டேனண்டவனே.

காலகண்டன்-வசனம்.

செப்பியவாக்குப்பொய்க்காச் செம்மலேநீதானிப்போ
ஒப்பியவரைந்தவந்த ஓலையிக்களிப்பாய்ப்பார்ப்பேன்
எப்படியாகிலிந்த விருடியின்தரகனுக்கே
கைப்பொருளீந்தேயுன்றன் கடனைத்தீர்ப்பேனப்பா.

வசனம்.

கேளும் ராசனே நீயெழுதிய சீட்டைக் கொண்டு நான் வாசித்துப்பார்த்து உன்கடனைக் கொடுத்துத்தீர்த்து விடுகிறேன் வேந்தனே.

அரிச்சந்திரன்-வசனம்.

இதோகொடுத்தேன் வாசித்துப்பார்த்துக்கொள்ளுஞ் சுவாமி.

காலகண்டன் விருத்தம்.

அவனியிற்கீர்த்திபோன்ற யண்ணல்பின்றரகனுன
தவமுனியனுப்பவந்த தயாபராநட்சத்திரேசா
கவலைகொண்டிங்கேமெத்தக் கதறினனல்பொருணன்றுமேன்
இவனைநீகேழ்க்கொணுது இயம்புவீரினிவாய்ததானே.

வசனம்.

கேளுஞ்சுவாமி தரகரே நோக்கு இந்த அரசன் கொடுக்கவேண்டிய தொகையை நான்கொடுக்கிறேன் நீர் மன்னவனைக் கேழ்க்கப்போகாது வேதியரே.

தரகன்-வசனம்.

மகாசந்தோஷம் அப்படியே யுமதுவார்த்தையே யெனக்குப்போது மினியவனை யந்தப்பொனனைக்கேழ்க்கேன் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தவணைபொற்பணத்தைத்தண்ட தாகராய்வந்ததிவ்ய
நவகுண்டநட்சத்திரேசா நாகனேநின்றுள்போற்றி
பவமதைத்தொலைக்கவெண்ணிபாங்கிலையவிற்றுமொத்தம்
இவருனக்களித்திட்டாரோ வியம்புவீரெனக்குச்சுவாமி.

வசனம்.

கேளும் தரகரே நான்கொடுக்கவேண்டிய முனியின்கடனுமக்குவந்து சேர்ந்ததா தெரியச்சொல்லுஞ் சுவாமி.

தரகன்-விருத்தம்.

நீர்வளமோங்குங்காசி நிலையுளகாலகண்டா
சீர்பெறுமுனிவன்பொன்னைச் செலுத்தினுர்கைக்கொண்டேனே
பார்புகழ்வேந்தேயுன்றன் பாரியாங்கற்பினாளைச்
சோர்வின்றியவர்பின்னேகச் சுறுக்கெனவிடையீவாயே.

வசனம்.

கேளும் ராசனே எனக்கு வரவேண்டிய பொன் வந்துவிட்டது இனி விஸ்வாமித்திரமுனி கடன் தீர்ந்துவிட்டது சந்திரமதியை இந்த வேதியருடன் செல்லச் செலவு கொடுத் தனுப்புவா யப்பா ராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியம்மப்படியேயனுப்பித்துக் கொடுக்கிறேன் சுவாமி.

காலகண்டன் விருத்தம்.

வேந்தனேயெனக்குவந்த வேதனைத்துன்பமெல்லாஞ்
சாந்தமாய்விலக்கிவிட்டேன் சற்குணிபெனுமுன்றேவி
மாந்தையுமகனைக்கூட மனைக்கேகவென்றன்பின்னே
சேர்ந்துமேவருகநீதான் செப்பியேவிடையீவாயே.

வசனம்.

அப்பாராசனே யுனக்குவந்தபொல்லாங்கைநீக்கிவிட்டேன் இப்போது நான்போகவேண்டு மாதலாலென்பின்னிந்தப் பெண்ணையுமிந்தச் சிறுவனையுமனுப்புவாய் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதைநான்விற்றதன்றி மகன்றனைவிற்றதுண்டோ
ஏதையாவிந்தமோச மெண்ணிடக்கருதிற்கொண்டீர்
சூதையேமனதிலிட்டே செல்வதுமடுக்காதையா
பேதையையழைத்தேசொல்வீர் பிள்ளைநானனுப்பிலேனே.

வசனம்.

சுவாமிநான் என்பெண்சாதியை விற்றேனல்லால் பிள்ளையைவிற்றேனு வனிந்த மோச மெண்ணிக்கொண்டீர்மாதையழைத்துக்கொண்டுபோம் பாலகனையனுப்பேன் வேதியரே.

காலகண்டன் விருத்தம்.

அனுப்பவேமாட்டேனென்று யளர்ந்தோர்மன்னுகேளாய்
கனப்பசுவதனைக்கொண்டாய் கன்றுக்குவிலைவேறுண்டோ
புனைப்பட்டதன்றோநீயும் போக்குநீக்கதிந்திடாமல்
சிறுக்கிருப்வாடிசந்தி சிறுவனோடென்பின்றுனே.

வசனம்.

கேளாய் வேந்தனே பசுவைவாங்கினல் அதின்கன்றுஞ் சேர்ந்தல்லவா அடி சந்திவாடி அடேபயலே ஓடிவாடா ஓடிவாடா போவோம்.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இராகம்-முகாரி-சாப்பு.

இப்படிவழக்கதை-யொப்பிநீர்பிரிவது
இன்னமோ-நான்செய்த-கர்மமோ
கைப்பிடிமாதைநான் கடனுக்காவிற்றதல்லால்
காளையையும்விற்றேனோ சொல்லுவீர்
மெய்யை மெல்லுவீர்.

காலகண்டன்-கன்னிகள்-இராகம்-தனசரி-சாப்பு.

சத்தியந்தப்பாமல்-சாந்துலகாண்டமன்னு
 தருமோ-கீர்த்தியது-வருமோ.
நந்திப்பசுவைக்கொண்டா னற்கன்றுக்குமேவேறு
 நல்விலையீவதுண்டோ மன்னவா
 வீணுய்ச் சொன்னவா.

அரிச்சந்திரன்.

பால்மறந்திட்டகன்றைப் பசுவுடன்சேர்த்துவிட்டால்
 பாரிலுண்டோமுறைதான்சொல்லுவீர்
 மெய்யைமெல்லுவீர்.

காலகண்டன்.

மரத்தைவிலையாய்க்கொண்டால் மன்னுபதின்பிஞ்சுக்கு
 மாறுவிலையுமுண்டோ மன்னவா
 வீணுய்ச்சொன்னவா.

அரிச்சந்திரன்.

மரமென்றிபானல்லாமல் மாதவளோநீர்தான்
 மார்க்கந்தனையுணர்ந்தேசொல்லுவீர்
 மெய்யை மெல்லுவீர்.

காலகண்டன்.

வாழ்மலையைவிலையீந்தே வாங்குவதினுற்கேணி
 வசமாகத்தடையுண்டோ மன்னவா
 வேறுசொன்னவா.

அரிச்சந்திரன்.

மனையடியேனல்லாமல் மங்கைக்குவந்தமொழி
 மாறநீதியுமுண்டோ சொல்லுவீர்
 மெய்யை மெல்லுவீர்.

காலகண்டன்.

அரசையொருவன்கொண்டா லதிலுற்றபொருளெல்லா
 மவனுக்கேசேர்ந்ததன்றோ
 வேறு சொன்னவா.

அரிச்சந்திரன்.

அரசென்பதானல்லாம லடாதுமாகுரைக்கல்
யதின்கருத்தையுணர்ந்தே சொல்லுவீர்
மெய்யை மெல்லுவீர்.

காலகண்டன்.

மகனைக்கண்டேயிவளை மன்னுவாங்கினேனன்றி
மாதுயெனக்குவேண்டா மன்னவா
வேறுசொன்னவா.

அரிச்சந்திரன்.

இதுவுமயனன்று எழுதியவிதியொக்கும்
இருவரையுங்கைகொள்வீர் ஐயரே
வெகு பொய்யரசே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாயென்ன மதிமோசம்வந்ததிந்
தந்திரிவேதியன்றான் தானுரைத்ததவுங்கேட்டாய்
மைந்தனையனுப்பச்சொல்லி மாதவன்வழக்கெடுத்தான்
தந்திடேன்பொன்னையென்றான் தவரிடலெதுசெய்வேனே.

வசனம்.

அப்பாமந்திரி யிதுவென்னவிபரீதகாலம் பாலனை யனுப்பாவிடில் சந்திரவதி வேண்டாமென்றுரிதற்கு யோசனைசொல்லுவாய் சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

வேந்தையேநமக்குவந்த் வினையுடன்சனியுங்கூடச்
சாந்துமேவரத்தொடங்கிச் சார்ந்ததால்மனங்களித்தே
ஏந்தலேதாய்பின்பிள்ளை யேகினுலிருவரொத்து
நீந்தியேதுக்கவாரி நிலைமையாய்வாழ்வீர்சுவாமி.

வசனம்.

கேளும் மகாராசனே யிதுவும் நம்முடைய காலகதியன்றிவேறல்ல தாயுடன்கூட பிள்ளையை யனுப்பினுல் தாய் தனக்குநேரிட்ட துயரை மறக்கவும் ஒருகாரணமாயிருக்கும் நாதா.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பாமந்திரி நீசொன்னகருத்துஞ் சரிதானிதோ யப்படியே யனுப்பித்துக் கொடுக்கிறேனப்பா சத்தியகீர்த்தி.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி நீர்கோறியபடியே மாதையும் மகனையுங் கைக்கொள்வீர் வேதியரே.

காலகண்டன்-விருத்தம்.

வேந்தனேநீ தான்சத்யன் வேந்தனேநீ தானித்யன்
வேந்தனேநீ தானுற்றோன் வேந்தனேநீ தான்கற்றோன்
வேந்தனேநீ தான்மெய்யன் வேந்தனேநீ தான்றுய்யன்
வேந்தனேயுனதுகீர்த்தி விளங்கிடும்வாழிவாழி.

வசனம்.

கேளும்மகாராசனே நீசத்யன் உன் கீர்த்தி சதாவாழிவாழி அரிச்சந்திரமகாராசனே.

காலகண்டன்-வசனம்.

அடாபயலேவாடா நாம் ஆத்துக்குப்போவோம்.

தேவதாசன்-விருத்தம்.

ஐயருமென்னைக்கூட யழைக்கிறார்வரவேசொல்லி
ஐயனேநருமென்னை யன்புடன்விற்றதுண்டோ
ஐயருஞ்செய்வழக்கு யடாததால்தானுமிப்போ
ஐயரின்வேலைசெய்ய வடியனும்போகேன்போற்றி.

வசனம்.

கேளு மென்பிதாவே என்னைநீர்விற்றதுண்டோ வேதியர் கிரமமாயழைக்கிறார் நான்போய் இவரிடம்வேலைகள்செய்யமாட்டேன் றந்தையே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அப்பனேதேவதாசா யறிவுள்ளமகனேகேளாய்
கப்பியேநம்மைசூழ்ந்த கடனிருள்தொலைந்ததிங்கே
ஒப்பியென்பாலாவுன்னை யுண்மையாய்விற்றதில்லை
தப்பிநீமறையோன்வார்த்தை தடைசெயிற்கடன்றீராதே.

வசனம்.

அப்பாமகனே நானுன்னை விற்றதில்லையிப்பொழுதுன்னை யனுப்பத்தடைசெய்தால் கடன்றீராதப்பா கண்மணியே நீயுன்றாயுடன்கூடபோய்வாடா புத்திசிகாமணியே.

தேவதாசன்-கண்ணிகள்-இ-ம்-கெண்டா-தா-ஆதி.

தாயுடன்கூடவென்னைத் தான்போகச்சொன்னீருன்றன்
றாளடிகாண்பதெப்போ-ஐயாவே என்னையாவே

அரிச்சந்திரன் இ-ம் முகாரி-தா-ஆதி.

நேயமாயுன்னிடம் நித்தம்நான்வருகுவேன்
நீயொன்றுக்குமஞ்சாதே மகனேஎன்மகனே

தேவதாசன்.

ஐயரின்வீட்டினி லடிமைத்தொழில்புரிய
ஆகாதுவெனச்சொல்லும் அய்யாவே என்னையா

அரிச்சந்திரன்.

பையனென்றேயுனக்குப் பணிச்செப்பார்விளையாடி
பண்புடன்வீற்றிருப்பாய் மகனேயென்மகனே

தேவதாசன்.

அடிமைகொண்டவனுக்கே யருந்தொழில்செய்யாவிடில்
யடிப்பான்தொழுவிடுவான் அய்யாவேஎன்னையாவே

அரிச்சந்திரன்.

முஷ்டிவேதியர்போலே மூர்க்கரல்லவிவரு
முகந்துநீகூடப்போவாய் மகனே என்மகனே

தேவதாசன்.

தந்தைசொல்வாக்கியத்தை தடுத்ததற்குமோகாதா
தனையனைநாளுங்காப்பீர் அய்யாவே யென்னையாவே

தேவதாசன் விருத்தம்.

பாலனேயுமக்கேமெத்தப் பணியென்றும்விதிக்காறென்றே
சாலவேயெனக்கெடுத்து சாற்றியேகோவேகேளீர்
காலமோநமக்குமிந்த காசியிற்பிரிந்துநிற்கத்
தாளடிவிட்டேயேகத் தயங்குதென்னுள்ளமையா.

வசனம்.

கேளுந்தந்தையே எனக்கிவர் வேலையிடாரென்று சொன்னீர் சரியே யிக்காசிவந் தும்மைப்பிரிய விட்டதும் விதியோ ஆனாலெனக்குப் போகமனம்வரவில்லை யென்பிதாவே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சென்மத்தில்செய்ததொல்லை சேர்ந்திடசனியன்தொட்டால்
வன்மமாமுனிவன்றூனும் வகையறிந்துறுவாய்வந்தான்

கன்மத்தின்வாறுக்கோரம் கலங்குதலடா துமைந்தா
உன்மனங்களித்தேநின்று யுரிந்துயரகற்றிக்காரே.

வசனம்.

அப்பாமகனே முன்செய்த வினையானது முனிவனுய்வந்து த ஊயிட்டது நீயுன்றுயுடன்சென்று யவளுக்குவேண்டிய தைரியஞ் சொல்லிக்கொண்டிருப்பாயப்பா வென்கண்மணியே.

தேவதாசன் விருத்தம்.

தந்தையேயெனக்காய்மெத்த தவமதுசெய்துபெற்ற
மைந்தனுமெனையுமென்றன் மாதாவைக்காசிதன்னில்
வந்துபின்தாங்கும்பாரவன் சுமையிறக்கியாச்சோ
உந்தனைக்காண்பதெப்போ யுரைசெய்வாய்யெனதுகோவே.

வசனம்.

கேளுமென்பிதாவே யிந்தக்காசியில்வந்தபின் னிதுவரையில் நீர்தாங்கிக்கொண்டிருந்த பெருஞ்சுமையாகிய யென்னையுமென்தா யையுமிறக்கிவிட்டார் இனியெப்போ தும்மதுபாதத்தை காண்பே னையாவே.

தேவதாசன்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதி.

என்னையேயீன்றெடுத்த ஐயாவேஐயாவே நான்
எப்போதுந்தனைக்காண்பேன் ஐயாவே

இன்றைக்குக்காசிவந்தே ஐயாவே நான்
எங்களைப்பிரிந்தீரோ ஐயாவே

உலகத்தையாளப்பெற்ற ஐயாவே என்னை
ஒடுங்கமுறியாச்செய்வீர் ஐயாவே


பலகலையுணர்வித்த ஐயாவே என்னை
பாப்பான்பின்னேகச்சொன்னீர் ஐயாவே

சிம்மாதனத்திருத்தி ஐயாவே நீர்
சித்தங்குளிர்ந்திடாமல் ஐயாவே

இம்மாநிலத்தோரேச ஐயாவே என்னை
யீனவடிமைசெய்தீர் ஐயாவே

சீராகவளர்த்தே ஐயாவே யிங்கு
சிறுமைப்படவேவிட்டீர் ஐயாவே

பாராமனுமைநாளும் ஐயாவேதனிப்
பரதேசியாகச்செய்தீர் ஐயாவே



அரிச்சந்திரனைவிட்டு சந்திரவதியும் தேவதாசனும் பிரிகிறபாகம்.

இன்றைக்குப்பார்த்தும்மை அய்யாவே நான்
இனியென்றுகாணப்போறேன் அய்யாவே

கொன்றைபுனைந்தோனிட்ட அய்யாவே விதி
குறைவிதுவோதெரியேன் அய்யாவே

தந்தையென்றழைத்தவாய் அய்யாவே யாரைத்
தானழைப்பதினி அய்யாவே

விந்தையாகவளர்த்த அய்பாவே காசி
வேதியனுக்களித்தீர் அய்பாவே

அரிச்சந்திரன்-விருத்தம்.

காலத்தையெண்ணிபந்த கடவுளைத்துதித்திடாமல்
பாலகாநீயுமப்போ பதறியேயழுதனன்றே
சாலவேநீதிக்கற்ற சாந்தனேமகனேகூட
மேலதைநடப்பாரையா மெத்தவும்புனிதர்காணே.

வசனம்.

அப்பா யென்னருமைமகனே நமதகாலத்தை யெண்ணி காசிநாதரைத் துதித்துதுதித்துக்கொண்டு ஐயாபின்செல்லு யுனக்கவர் வேலையிடார் கண்மணியே.

தேவதாசன்-தரு-இ-ம்-தர்பார்-ருபகம்.

பல்லவி.

போய்வருவேன் ஐயாநான் போய்வருவேன்

அநுபல்லவி.

பொன்னைபெற்ற அன்னைநற்
பொருளெவர்க் கருளைநான் போ

சரணங்கள்.

அண்டமெல்லாந்துதி கொண்டேயிருந்தவென்
றண்டவனேகனிவாயாஎன்
அன்னையுமென்னையும் விட்டுனை ஓண்டியா
யாக்கினதே சனிமாயா
கண்டம்புகழ்சேவகனே காசிநாதர்நேசனே
தேன்றல்மலர்வாசனே திசமுநிஜபாஷகனே போ

பாதகன்செய்திட்ட காதகத்தாலே நீர்
பரதேசியாநீரே ஐபாயாரைப்
பட்சமாய்தந்தையென்மெச்சிமனதொத்து

பாவியமைப்பதுமெய்யா
வேதனையும்விட்டதுவோ   வினைத்துயராற்றதுவோ
பாதகனைப்பெற்றதுவோ   பலனுமக்கேயுற்றதுவோ போ

மதலைச்சொற்கோட்டு மிதங்கொண்டமனம்
மாறுபடக்காலமாச்சோ நாளும்
மாதுபணிவிடைசெய்மவீற்றிருந்த
மன்புமின்றுடனேபோச்சோ
பூதலம்ரீழந்ததுவும்   பொற்கொடிவேறானதுவும்
பாதகனுன்பிரிந்ததுவும்   பணிவிடைக்காளானதுவும் போ

அருந்தவனைப்பிரிந்து
யன்புடனின்றிட்டமெய்யாவிந்த
அந்தணன்பின்னேநானடங்கிச்சென்றிட
வருள்வாக்களித்திட்டதுய்யா
வருந்தலாகுமோநானே   வாய்த்தவிதிக்குத்தானே
சிறந்தபாதம்பணிந்தேனே   சேவடிநான்மறவேனே போ

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பாதேவதாசா நீதுபரமின்றி சுகமாய்ப்போவாயப்பா.

அரிச்சந்திரன்-தரு-இராகம்-ஆகிரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆதிசிவமே ஐயையோ சிவமே

அநுபல்லவி.

பாவிநானென்ன பாவங்கள்செய்தேனோ
பாலனென்கண்முன்னே பதறியழுதிட   ஆ

சரணங்கள்.

உலகமாளுவனென்றே ஓங்கித்தவமிருந்தே
யுருகிப்பெற்றெடுத்தவென்பாலன்ஐயோ
பலதரம்பன்னிப்பன்னி பதைத்துப்போய்வாறேனென்ற
பாஷையைக்கேழ்க்கவிட்டாய் காலம்   ஆ

சின்னஞ்சிறுவயதில் சிரதாய்க்கல்வியுஞ்
செங்கோன்முறையுணர்ந்த சீலன்ஐயோ
என்னென்னமோவெண்ணி யேங்கிறேன்றேக்கிறே
ளித்துயர்பார்க்கவிட்டாய்கோலம்   ஆ

என்றன்முகத்தைப்பார்த்தே யேங்கித்தந்தையெனவே
 ரெண்ணிக்கதறினனே லோலன் ஐயோ
உன்றனைப்பணிந்ததா லுற்றபலனேகரி
 யுரித்தவாரீயிட்டஜாலம் ஆ

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரவதி இந்த ஐயர்பின் கூடபோவாய்கிளியே.

சந்திரவதி வசனம்.

அப்படியே யென்பிராணநாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

பொற்புறுகிளியேமானே பூவையேமயிலேயென்று
கற்பனையிட்டழைத்தே கனியுடன்பேசுமந்த
அற்புதமொழிகளின்றோ டகன்றதோதெய்வங்கூடி
சற்பனைசெய்ததேநான் சகிப்பனோபிராண்நாதா.

வசனம்.

அடிமானே தேனே மயிலே கிளியே பூவையே மருவோா யகமே யென்று விதவிதமாகப் பெயரிட்டழைத்து முக மலர்ச்சியோடு பேசுகின்ற யென்சுவாமி இன்று வும்மைப் பிரியலாச்சுதா வினியெக்காலத்துமது திருமுகத்தைக் காணப்போகிறேன் பிராணநாதா.

சந்திரவதி-தரு-இ-ம்-ஆகிரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எப்படிபிரிவேன் என்சுவாமியுமை எப்படிநான்பிரிவேன்

அநுபல்லவி.

இப்படியும்பாவி யெழுதியிருந்தானோதான்
கைப்பிடிக்கணவரின் கழலடிவிட்டுநான் எப்

சரணங்கள்.

வேந்தர் மனைவிகளும் வேண்டித்தொழில்செய்வாரே
விந்தையென்றவாழ்வை விரும்பித்தவஞ்செய்வாரே
சாந்தமோருறுவான சத்யரேவேறுனீரோ
தையலாலெனைவிட்டுத் தானொண்டியாய்ப்போனீரோ எப்

உம்மைப்பிரிந்துமண்ணி லுயிருடனிருந்திட
ஓகோவென்னகால முற்றதுபிரிந்திட
நன்மைசெய்தார்க்குத்துன்பம் நாடுமோதெரிந்திட
நாயகரேகிலேசம் நாட்டுதேவருந்திட எப்

என்பிராணநாதாவும்மை யென்றைக்கினிகாண்பேன்
எங்குதன்னுடலாவி யெவ்விதம்நான்சகிப்பேன்
நன்னடிகள்பாராமல் நானெப்படிதரிப்பேன்
நாதாயுமக்குதவி நாட்டிலாரென்றிருப்பேன் எப்

அரைக்கணமெனைவிட் டகன்றிருந்தநாளுண்டோ
ஆளன்றியேமாது அவனியில்வாழ்வதுண்டோ
மறையவனுக்குத்தொண்டு மானேநானின்றே
மனதிற்றுயரம்வேண்டாம் மாறனுந்தீதன்றே எப்

சந்திரவதி வசனம்.

சுவாமி அடியாளை யாட்கொண்ட பாதாம்புயங்களையெப்படிப்பிரிவேன் சுவாமி.

சந்திரவதி-கண்ணிகள்-இ-ம்-துஜாவந்தி-தாளம்-ஆதி.

விதியின்வசமோயிதுவே ஓபிராணநாதா
வேறுபடவந்ததுவோ ஓபிராணநாதா
சதியோமுனியாலிதுவோ ஓபிராணநாதா
உம்மைப்பிரிந்தென்றுமே ஓபிராணநாதா
உண்டறியேனென்றும் ஓபிராணநாதா
தம்மைபடுத்தகன்றுமே ஓபிராணநாதா
தான்வேறானேயின்றுமே ஓபிராணநாதா
பாக்கியுமென்னைப்போலவே ஓபிராணநாதா
பாரினுண்டோதான்சாலவே ஓபிராணநாதா
வேதனைத்துயராற்றுழவே ஓபிராணநாதா
சத்தியம்நிறுத்தக்காரமே ஓபிராணநாதா
சாயுச்சியமடையப்பாருமே ஓபிராணநாதா
நித்தியமல்லவேதேறுமே ஓபிராணநாதா
நிலையிலிருப்பீர்நீருமே ஓபிராணநாதா
நீதிமானெனமாந்தரே ஓபிராணநாதா
நேமமாய்துதிப்பார்சாந்தரே ஓபிராணநாதா
பாதியாமதியோன்வேந்தரே ஓபிராணநாதா
பக்ஷமாயருள்வானகாந்தரே ஓபிராணநாதா

சத்தியகீர்த்தி விருத்தம்.

பஞ்சணைமீதிற்பாதம் பட்டிடில்வருந்துமென்றே
அஞ்சலிகரத்தாற்றாங்கி யருமையாய்மலடிவைத்த
தஞ்சமுமறந்துபிள்ளை தன்னையுமறந்துநீரும்
பஞ்சைபோனீரேயெங்கள் பாவத்தான்முறிபானுமே.

வசனம்.

சுவாமி என்பாதம்பஞ்சணைமீதில் பட்டால் வருந்துமென்று அரவணைத்தஎன்துரையே யிப்போது என்னை யுமது ஆசைமகனை யும்பிரிந்து பஞ்சைபோலாநீரே யிதுவுங்கதிபா என்கோவே.

சந்திரவதி-கண்ணிகள்-இ-ம்-கெண்டா-சாப்பு.

என்றுநான்பிரியோமென்றே எண்ணியேயிருந்தோமையா
விந்தைவிதிவந்ததோதான் மன்னவரே
இன்றுயிந்தக்காசிதனில் ஏந்தலேநாம்வேறாக
விதவுமென்பாக்கியந்தான் மன்னவரே
வேதியருக்கடிமையாய் வேந்தரேயுமைப்பிரிய
விட்டசதியையுரைப்பீர் மன்னவரே
பாதிமதிதானணிந்த பரமனருளிதுதானோ
பட்சமறவாதிருப்பீர் மன்னவரே
கன்றைப்பிரிந்தபசு கதறப்பால்கறந்தேனோ
காரணமெதுவாமோ மன்னவரே
கொன்றைதும்பையுமணி கோலமனுமகிழ்ந்து
கொடுத்தமதியிதுதானோ மன்னவரே
கவிவாணர்தமைக்கண்டு கருதிமதித்திடாமற்
கடுத்துரைசெய்தேனோநான் மன்னவரே
புவியேற்றும்விசுவேசன் பொருமையரவளித்த
புதுமைத்தொழிலிதுதான் மன்னவரே

சத்தியகீர்த்தி-விருத்தம்.

ஐபருக்காளதாக வடியாளுமகனோடேக
ஐபரேயன்றுசெய்த அரும்பழிப்பயனிதாகும்
ஐபன்றனெழுத்தைமீற லாகுமோயவனிமாந்தர்
ஐபரயற்றுவேக வடியாளுக்கருள்வேந்தே.

வசனம்.

சுவாமி பிரமனெழுதியதைமீரப்போகாது யின்றுவும்மை விட்டுப்பிரிந்து இந்தவேதியரி னடிமையாகித் தொழில்செய்யுங் காலம் நேரிட்டது நானெப்படி பிரிந்துபோவேன் யெனதாசை மணவாளனே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-சாமா-ரூபகம்.

அன்னமேநான்தொட்ட சொன்னமே நீமெத்த
துன்பப்படப்போமோ
அறமாமோ-தரமாமோ
ஆரையோ-மனந்தேரையோ-மனந்தேரையோ-தே

சந்திரவதி.

ஆகமவேத போகவஜீகர
போகருணைபதியே
அணிமதியே-மணிமதியே
ஆசையே-குயிலோசையே-குயிலோசையே-ஓ-ஓ.

அரிச்சந்திரன்.

என்னைமணந்துமே யுன்னைபெற்றதந்தை
அன்னைதனைமறந்தாய்
ஏதுவறிந்தாய்-மாதுப்பிரிந்தாய்
ஏற்றுவாய்-சிவம்-போற்றுவாய்-சிவம்-போற்றுவாய்போ

சந்திரவதி.

அண்டமெல்லாம்புகழ் தண்டபராயெனைக்
கொண்டமனோகரனே
அதிபரனே மதிதரனே
ஆளனே-மணவாளனே-மணவாளனே-வா வா

அரிச்சந்திரன்.

பத்தினிமார்களில் முத்தியபாவையே
தித்திக்குந்தேன்மொழியே
பதிகிளியே மதியளியே
பாங்கிய வாரே ணேங்கியே-வாரே-ணேங்கியே-ஓ ஓ

சந்திரவதி.

அன்னைதந்தையாசை தன்னைமறந்திட
என்னைவைத்த லோலனே
அனுகூலனே தனுசீலனே
அன்பனே மன இன்பனே மன இன்பனே யி யி

அரிச்சந்திரன்.

உன்னைப்பிரிந்திட முன்னமெனக்குநீ
சொன்னமொழிவிடுத்தே
உளங்கடுத்தே வளந்திடுத்தே
உரையுறுய் என்கரையுறுய் என்கரையுறுய் க க

சந்திரவதி.

மாரனைப்பழிக்குந் திரனேஜீவவுந்
தாரனுனபரனே

மணிகரனே பணிவரனே
மன்னனே கயற்கண்ணனே கயற்கண்ணனே க க

அரிச்சந்திரன்.

ஆவியுளமட்டுந் தேவிகேளுன்னையிப்
பாவிமறப்பதுண்டோ
அறிவுண்டோ குறிகண்டோ
அப்பவும்வருவே னெப்பவும்வருவே னெப்பவும் எ எ

சந்திரவதி.

சத்தியமாதுமே நித்தமும்வாழ்த்திடு
உத்தம ஒய்யார
சதிமாரா ரதிவீரா
சார்வையோ எனைச்சேர்வையோ எனைச்சேர்வையோ சே

அரிச்சந்திரன்.

உன்னைப்பிரிந்தாலும் அன்னமேயென்பது
என்னைவிட்டுப்போமோ
உறமாமோ அறமாமோ
உப்புவேன் கவனஞ்செய்புவேன் கவனஞ்செய்வே செ செ

சந்திரவதி.

என்றும்பிரியாம லின்றுபிரிந்திதோ
நின்றேன் விதிநிசமோ
எதுவசமோ விதுநிசமோ
எப்பவோ கண்டதிப்பவோ கண்டதிப்பவோ இ இ

அரிச்சந்திரன்.

பிரமனெனும்பாவி மர்மத்தெழுதிய
கர்மத்தினாற் பிரிவேன்
பெண்ணோமற்றேன் கண்ணேயிறவேன்
பேதையே என்கோதையே என்கோதையே கோ கோ

சந்திரவதி.

சப்பிரமஞ்சத்தில் கப்பித்தனிமொழி
செப்புவதும்போச்சோ
சதியாச்சோ விதியாச்சோ
சாமியே என்சாமியே என்சாமியே சா சா

அரிச்சந்திரன்.

அடிக்கடியுன்பாற் குடிக்கொழுந்தேசொல்
விடித்திடவாறேன்
அன்புவீறே இன்புமாறேன்
அன்னமே பசுஞ்சொன்னமே பசுஞ்சொன்னமே சொ சொ

சந்திரவதி.

அன்னமேகிளியே சொர்ன்னமென்றழைக்கும்
உன்னதமும் போச்சே
அசைபோச்சே வசையாச்சே
ஆனீரே வேறு போனீரே வேறு போனீரே போ போ

அரிச்சந்திரன்.

இந்தவிதியயன் தந்திடவும்
எந்தமனங் கொண்டான்
ஏதுகண்டான் தீதுவுண்டான்
ஏங்காதே துயரோங்காதே துயரோங்காதே ஓ ஓ

சந்திரவதி.

பக்குவமறிந்து தக்கபடிக்கன்னம்
பக்குபவராரூ
பணியாரூ மணிவேரூ
பாவியேநான் தோஷியேநான் தோஷியே தோ தோ

அரிச்சந்திரன்.

சத்தியமுனக்கே வித்தகாயுதித்திட
உத்தமப்பெண்ணாளே
சதியாளே விநிகேளே
சம்புவே சதாநம்புவே சதாநம்புவே ந ந

சந்திரவதி.

இன்னமெப்போவென்றன் மன்னுவுமைக்காண்பேன்
என்னவிடைதாரீர்
எனைப்பாரீர் வினைதேரீர்
ஈசனே என்னேசனே என்னேசனே நே நே

அரிச்சந்திரன்.

எனக்கேமாலேயிட வுனக்குமேயிவ்விதி
எழுதிருந்தான் பாவி

என்றன்மேவி பங்கமேவி
எண்ணுதே துயர் நண்ணுதே துயர்நண்ணுதே ந ந

காலகண்டன்-வசனம்.

ஒய் ஒப்ராசனே இதென்னகாணும் வேடிக்கைசெய்கிறுய் மெத்தநேரமாய்விட்டது என்காம்பிடையாளுருமை வையாள் இவாளை நிறுத்திக்கொள்ளுகிருபா ஓதுங்காணுமரசே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பாமந்திரி ஐயர்மெத்தநேரமாயிற்றென்று முகங்கடித்து நிற்கிறுர் நாமுன்னுக்குச் செல்லலாம் வாருமப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்.

இவடமிருக்க வுருக்கத் துயரமதிகரிக்கும் நீருரைத்தபடி செய்வதே வுத்தமமென வேந்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆனுல் வாருமப்பா மந்திரி

சந்திரவதி-சாமா.

இன்னமொருதரம் மன்னுவுன்முகத்தைக்
கண்ணுரப்பார்த்துப் போறேன்
இனிவாரேன் கனிதேறேன்
ஏந்தலே மறவாவேந்தலே வேந்தலே வே வே

அரிச்சந்திரன்.

வாக்குநிலேக்கவும் யோக்கியனுக்கவும்
பாக்கியம் நீயளித்தாய்
வரந்தரித்தாய் கரங்குவித்தாய்
தோழிநீ பிராணதோழிநீ பிராணதோழிநீ தோ தோ

சந்திரவதி.

நத்தியென்காத்தை பத்தியகைக்கொரு
முத்தமிட்டுப்போவேன்
நாடித்தாவேன் கூடிவாறேன்
நாதனே பொற்பாதனே பொற்பாதனே பா பா

அரிச்சந்திரன்.

சின்னக்குமாரனை உன்னிச்சுகமாக
அன்னமே நீகாப்பாய்

சீர்சுரப்பாய் பேர்சிறப்பாய்
சொல்லுவாய் சுபஞ்சொல்லுவாய் சுபஞ்சொல்லுவாய்-சொ

சந்திரவதி.

ஆதலர்மாதவர் ஒதுவோரேற்றிடும்
பாதமதைப் பணிந்தேன்
அடிபணிந்தேன் முடிகுனிந்தேன்
அண்ணலே சுபம் வண்ணலே ஜயம் வண்ணலே-வ-வ

சந்திரவதி-வசனம்.

நான்போய்வரவா லென்னுசை மணவாளனே.
பெண்ணே ஏனிவ்விதமாய் துயரங்கொள்ளுகிருய் காசி நாதனருளே நாடுவாயடி கண்ணே.

சந்திரவதி-அகவல்.

ஏந்தலேயபோத்தி எழிலுடனுண்ட
சாந்தனேயிதுவுஞ் சனியனின்கோளோ
மதிதயனென்க்காய் மனமதுவுருகி
பதிதனைக்கோறி பாக்கியமடைய
வெகுதவம்புரிந்தே வேந்தனேரிஷிகளால்
அருதிகேளோமம் யனைத்தையுஞ்செயவே
மான்மழுவேந்து மறைமுதலோனுந்
தானமர்ந்தொருபெண் தாலியைத்தாங்கியே
பிறப்பனலுனக்கே பெருகற்கீர்த்தியும்
சிறப்படுமென்றே செப்பிபசிவனும்
தாலியுண்டென்று தரனெவனுரைக்கின்
பாலியப்பெண்டாய் பண்புடனளியென
நாளுமுதித்தே நாளொருமேனியாய்த்
தானுமேவளர்ந்தேதைபலர்க்குரிய
மங்கைப்பருவ மடைந்திடக்கண்டே
சங்கையில்லாமலே சாற்றுவேன்றந்தை
சுயம்வரமென்றே சூட்டிடவோலைதான்
யாருமுடன்நீர்வர நாடினேன்பரத்தை

மன்னுதிமன்னரும் மகுடவர்த்தனரும்
என்னுசையாலே யேய்கிவந்திருக்க
தோழியுமவாவர் தோள்வலுவீரமும்
தாழ்ந்திசைபன்ன தமியனுமுணர்ந்து
உமதுநல்லுதவு முறமுளபெருமையும்
சமமுடனிருசெவி சார்ந்திடக்கேட்டேன்
ஆனந்தளாகி யங்குற்றவேளை
மானனேநீர்தான் மங்கையின்கழுத்தில்
தாலியுண்டென்று தயாபராயுரைக்க
மேலிதுசமைய மெனக்களிப்புற்றே
மணமாலைதன்னை மகிழ்வுடனுமது
கணமுளோர்வாடக் கழுத்தினிலணிந்தேன்
தேவர்களாகி நீற்றினர்குனிவர்
பாவந்துலைந்திட பாவலர்வாழ்ந்திட
அதுமுதலிதுவரை யடியாளுநீரும்
சதுருடன்வாழ்ந்தே சர்வருமேற்ற
இருந்தநோர்சுகந்தை யேற்காமலயனும்
வருந்திடமனமும் மன்னரேகாசில்
பிரித்தனன்பாவி பேதைநான்வேறாய்
தரித்திரமுறவே தயாபராநீரும்
வேறுவேறாக விதிவந்ததையோ
தேறுதலுமக்கே நீட்டுவோராரோ
உமதுநற்பணியிடை ஓதுக்கினென்வேதியர்
தமதடிபணியத் தந்ததெய்வம்
விடைதருவீரிவ் வேதியருடனே
கடைமனையேகக் கழலடிகதியே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-தனாசரி-சாப்பு.

ஏனிந்தக்கலக்கங்கண்ணே
ஏ, மங்கையர்க்கரசியாளே
நீ, தானிந்தமார்க்கஞ்சொல்லி ஏ
பின். தயங்கத்தகுமோமெல்லி ஏ
நீ, பெற்றபாலனுடங்கூடவே ஏ
உன், பேதமைபகன்று ஓடவே ஏ

இந்த, வேதியருத்தவரே ஏ
உனே, வினையனுகாதுபாரே ஏ
நீ, சத்தியம்நிலைக்கமேதே ஏ
துதி, சாம்பசிவத்தைக்கோதே ஏ

சந்திரவதி-விருத்தம்.

அப்பனேசத்யகீர்த்தி யன்புள்ளபாலாகேளாய்
இப்பவேயடிமைகொண்டவிறைவன்பின்னுனும்போறேன்
கப்பியதுபரையெண்ணி கணவரின்கையையீதோ
ஒப்பயுன்கரத்திலிட்டே னுண்மையாய்க்காப்பாய்மைந்தா.

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி கவுசிகன்கர்ப்பனையா லிக்கதி நேரிட்டது நான்வேதியருடன் சொல்லுகின்றே னிதோவென்னுடையபத்தாவின் கையைப்பற்றி யுன்கையிற் கொடுத்தேன் கூடவேயிருந்து காப்பாயப்பாமந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

அம்மணிநீர்தான்சொன்ன ஆக்கினைமீறமாட்டேன்
அம்மணிநம்மையிவ்வா ரயன்பிரித்திட்டான்பாவி
அம்மணிபரசரைவிட் டனுவேனுமகலமாட்டேன்
அம்மணிபாலன்றன்னை யன்புடன்காப்பீர்போற்றி.

வசனம்.

என்னைவளர்த்ததாயே தங்கள் வாக்கைமீறேன்தேவதாசனை பத்திரமாய்க் காப்பீரென்னம்மணி.

சந்திரவதி-வசனம்.

போய்வருகிறேன்சுவாமி போய்வருகிறேன்என்னுசைமணவாளரே அடியாள்செய்த குற்றங்களிருந்தால் மன்னித்து யடிக்கடியுமதுபாததெரிசனங்கொடுப்பீர் பத்தாவே சரணம்சரணம்சரணமென்கோவே.

அரிச்சந்திரன் கண்ணிகள்.

என்னவிதியென்றன்விதி மன்னனுய்ப்பிறந்தபலன்
  இட்டதே யெனைத் தொட்டதே
பன்னகபூஷணுகாசி யண்ணலேயென்னுடலது
  பற்றுதே துயர் சுற்றுதே

வேணப்பணிதாதிமார்கள் தோணச்செய்விற்றிருந்த
வேந்திபை குணசாந்திபை
காணமுற்றேவேதியற்கு தாணடிமையாகச்செய்தேன்
நந்தியேவிதி பத்தியே
மாதுயெனேக்கண்டேயழ தீதமுனிமகிழவு
மாச்சுதேசுகம் போச்சுதே
ஏது இனிசெய்யப்போறேன் வாதுதரகன்சிரிக்க
இட்டையேசனி தொட்டையே
தொண்டுவேலைசெய்யவுமே கண்டுகண்டேவிற்கச்செய்தாய்
தோகையைஎன் வாகையை
திண்டுமெஞ்சமுற்றமேனி குண்டுபோலுருளவிட்டாய்
தீங்கதோ மனவாங்கதோ
வேறுபடவெங்களுக்கே யாருடையசாபமோதான்
வித்தனே மனசுத்தனே
யேருபெற்றுவாழ்ந்ததற்கோ தூருக்கெனேயாளாய்ச்செய்தாய்
பித்தனே யருள்நித்தனே
வேதியர்க்கடிமையென வேதிடவென்றேவிளை
விட்டையா துயரிட்டையா
பாதிமதிதரித்தவா சோதினேயகற்றியென்கை
பற்றையாவென நற்றையா
நீலவிழிமாதுபோருள் காலகண்டன்வாழ்மனைக்கே
நீருமேயருள் பாருமே
ஞாலமீதிலென்றன்சத்யஞ் சாலவோங்கவந்தேயென
நாடுமேவினே ஓடுமே
சிறியபாலன்கூடப்போறேன் முறியாத்தொழிற்றுன்புரிய
சித்தனே யருள்முத்தனே
அறிபவுன்தன்கூத்தையிக்கு தெரியலாகுமோஒநாதா
அத்தனே வாரும்நித்தனே

காலகண்டன்-விருத்தம்.

அல்லவேயாசேயுன்னே யழுதிடச்செய்திட்டானே
நல்லதுன்குடும்பந்தன்னே நாடிநீநிறுத்திக்கொள்வாய்
செல்லவேஆக்துக்கேநான் சிட்டையும்வாங்கிக்கொள்ளும்
வல்லமையுமதுசத்ய வகையும்நானறிந்திட்டேனே.

வசனம்.

ஒபரசனே நீயழுகிறகாரணமென்ன வுன்பெண்டையும் பிள்ளையையும் விறத்திக்கொள்ளும் இதோ சீட்டையும் வாங்கிக் கொள்ளும் நானபோய்விடுகிறன் வேந்தே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மிகமறையுணர்ந்தவேத மித்ரனேயுன்றாள்போற்றி
ஜகமதில்சொன்னவாக்கை சற்றேனும்பிசகேன்பேசற்றி
அகமதிலெனக்கேபரம னமைத்ததோர்விதியையேற்றி
பகவானைத்துதித்தேனன்றி பதிலுரைபகரேன்போற்றி.

வசனம்.

சுவாமி நான்சொன்ன வாக்கைத்தவறேன் சிவனிட்டசதியை யெண்ணித்துதித்தே னிதோ பாலனையும் மதையுஞ்சுகமாயழைத்துக்கொண்டு போவீர் ஐயரே.

காலகண்டன்-வசனம்.

கேளும்ராசனே இதுவேசரி யுமதுவாக்குக்கும் வீரத்தன்மைக்கும்மெச்சினேன் போய்வருகிறேன்வேந்தனேவாழிவாழி.

அரிச்சந்திரன் வசனம்.

போய்வாருஞ்சுவாமி இவாளேதாகிலுங் குற்றஞ்செய்தால் மன்னித்தாட்கொள்வீர் உமதுபாதங்களுக்கு சரணஞ்சுவாமி.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-சஹாரு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அப்பாமந்திரி-அப்பாமந்திரி-அப்பாதுணையார்
அப்பாயினி மந்திரி.


அநுபல்லவி.

ஒப்பாரில்லாதயென் னுத்தமியைபிரிந்து
சப்பிதுயரினுல் கரைந்துவுடல்சரிந்து அப்

சரணங்கள்.

வேதியருரைக்கவே விரகமாய்த்தூதறிந்தே
விட்டுமுமைவரத்தால் விரும்பிமணம்புரிந்தே
பாதிமதியணிந்த பரமனையனுஷ்டித்தே
பணியவுதித்திட பாலனைநான்விடுத்தே அப்

தொட்டநாள்முதலென்றன் துணையாயிருந்தமாதும்
துயராய்வேதியர்பின்னே தொடரக்கண்டேன்போதும்
கெட்டவிதியெனக்கே கிட்டியதற்சனியனும்
கெடுதிவிளைக்கலானுன் கின்றவேன்முனிவனும் அப்



அரிச்சந்திரனும் நட்சேத்திரத்தரகனும் தர்க்கமாடுகிறபாகம்.

எக்காலமோயினிநா னென்றேவியைப்பார்த்து
ஏதுவுறுதிகொள்வே னென்றுடலைக்காப்பது
திக்கானபாலனுந் தேம்பியழுதச்சென்றான்
திபேசமுங்கலக்குதே தென்பாய்தரகனின்றான் அ

சத்தியகீர்த்தி விருத்தம்.

நித்தியமோயாசபெண்டீர் நிசழ்சுதன்சுற்றம்பொய்யோ
சத்தியந்தன்னைநாளுஞ் சாதிப்பதொன்றுமெய்யே
புத்தியைவசமாக்காமல் போக்குதற்றருமோவையோ
எத்திசைதனிலுங்கீர்த்தி பெய்திட்டீரென்றன்கோவே.

வசனம்.

நேனுமாண்டவனே அரசுபெண்டீர் பிள்ளை சுற்றமிவைகள் நிலையாகுமா சத்தியம் நிலையாகும் என்னாளுமழியாத கீர்த்தியைக் கொண்டீர் துயரத்தைவிட்டிருப்பீர் வேந்தனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியம்போமோவென்றன் சன்மார்க்கம்போமோமந்திரி
பத்தினிதன்னைமெய்வாக்கை பாலிக்கவல்லோவிற்றேன்
நத்தியேயவிஸ்வாமித்ரான் நாட்டிநின்சூதக்கஞ்சேன்
வித்தியாசங்களெண்ணேன் விமலனேகெதியெனக்கே.

வசனம்.

அப்பாமந்திரி சத்தியத்தை நிறுத்தவேண்டி பெண்டைவிற்றேன் சவுசிகனினிச்செய்யும் சூதுக்கஞ்சே னினிபரமசிவமேயெனக்குத்துணையப்பா மந்திரி.

தரகன்-விருத்தம்.

அழுகிறாய்பெண்டுபிள்ளை யனைத்தையுந்தோற்றேனென்றே
ஒழுகிறாய்முனிவன்பொன்னை யுன்னையார்கொடுக்கச்சொன்னார்
பழுதுண்டோவில்லையென்றால் பாக்யமும்பாலன்மாதும்
பொழுதுவிறக்குமுன்னே பூசுராயளிப்பேன்கொள்ளே.

வசனம்.

ஓய்ராசனே முனிவன் கடனுக்காக பெண்டுபிள்ளைபோச்சுதென்றழுகிறாய் இல்லையெனச்சொன்னால் பொழுதுபோகுமுன்னே அவளை வரவழைத்துக்கொடுக்கிறேனப்பா அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மனைவியும்வேண்டேனென்றன் மகனையும்வேண்டேன்ராஜ்யம்
தனைவியுமவேண்டேனுதன் தயைதனைத்துதித்தேனல்லால்
வினைபதேயுறவாய்வந்த வேதியர்பொய்யான்பேசேன்
முனிவனேயினிவேறுண்டோ மொழிகுவாயெனக்குத்தானே.

வசனம்.

ஐயாதரகரே நான்பெண்டுபிள்ளை ராஜ்யமுதலியவைவேண்டேன் என்வயால் நெறிபிசகிடும் வார்த்தைபேசேன் உமக்குக்குறைவின்றி பொன்வந்ததா இன்னமேதாகிலுமிருந்திடிற் சொல்லும் வேதியரே.

தரகன் விருத்தம்.

தவமுனிகடனைத்தீர்த்தால் தருமவானீயேயாகும்
பவமில்லைபற்றிக்கொண்டேன் பழுதின்றியுன்பின்னுக
அவதிநாலுற்றேவந்த வருங்கூலி கருகுவாயே
சவலமாயில்லையென்றேதான் சாற்றிடிலபோரேனப்பா.

வசனம்.

கேளுமகாராஜனே முனிவனுக்குச் சேரவேண்டிய கடன்வந்துவிட்டது குறையில்லை நானுங்கூடவந்த கூலியைகொடுப்பாயா இல்லையா சொன்னால்போறேன் வேந்தே

தரகன்-தரு-இராகம்-மத்தியமாவதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கொடுப்பாயா இல்லையா-என் கூலிபொன்னை
கொடுப்பாயாயில்லையா

அநுபல்லவி.

அடுத்துவந்தேனுன்னையே அரசனென்றெண்ணியே
கடுத்தேநீயில்லையென்றாற் காசிவிட்டோடிப்போறேன் கொ

சரணங்கள்.

காடுசெடிதனிலே-நான் கடுகிவந்தேன் முன்னாலே
நாடிநீவரச்சொல்ல நான்வந்தேநல்லாமல்
ஓடிப்போவெனச்செப்பில் ஒருநொடியும்நில்லாமல் கொ

போவென்றால்போதுமடா-அது ஒரு பொய்யல்லஒதுமடா
பாவிமுனியினாலே பகுவேதைக்குள்ளானாய்
தாவியொருபொய்சொன்னாற் றரணியையாளுந்தானாப் கொ

என்வார்த்தைகேளப்பா அரிச்சந்திராவித்துயர்பெரிதப்பா
உன்மனைவியும்பாலன் ஓடிவாச்செய்கிறேன்
சொன்னவாக்கின்படியே சூட்டிடவுய்கிறேன் கொ

அரிச்சந்திரன்-விருத்தம்.

வரும்விதிதங்காதென்றே வழுத்தும்வாறிதுவேயாகும்
கருதிநீர்தரகாய்வந்தே காட்டிலேபலவாய்நொந்தீர்
தருமமேயுமக்கேகூலி தான்றரக்கடமையாகும்
மருமத்தைவிட்டேமொத்தம் மகிழ்வுடனுரைசெய்வீரே.

வசனம்.

சுவாமியுமக்குக் கூலியகத்தியங் கொடுக்கிறேன் மொத்தத்தை தெரிவிக்கவேண்டும் வேதியரே.

தரகன்-கவி.

மன்னன்கூலிதான்
பொன்பதினாயிரம்
உன்னிநீயீந்திடில்
என்மனங்களிப்பேன்.

வசனம்.

கேளும் இராஜனே நேக்கு கூலிபதினாயிரம்பொன் கொடுப்பீராகில் மெத்தசந்தோஷத்துடனுமை வாழ்த்திப்போகின்றேன் வேந்தனே.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி அப்படியே கொடுக்கிறேனையா வேதியரே.

தரகன்-விருத்தம்.

கொடுக்கிறேனென்றுசொன்ன கோதிலாவெந்தன்பெண்டை
விடுத்துநானிங்கிருக்க வேமனந்தாளேன்கண்டாய்
தடுத்திடாதீவையாகிற் றங்குவேனின்றுஅந்தி
தொடுத்திடிலோடிப்போவேன்தோன்றமேலயிலையென்பாயே.

வசனம்.

கேளும்ராஜனே கொடுக்கிறேனென்றாய் நேக்குமெத்த சந்தோஷம் ஆனால் என் ஆம்பிடையாளின்பேரில் ரொம்பவும் கியாபமாகின்றது பொழுதுபோகாமுன்னமே கொடுக்கிறதானாலிருக்கின்றேன் தடைப்படுத்துவதாகி லில்லையெனு மோடிப்போகினறேன் வேந்தனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சொன்னதையில்லையென்றே சொல்லிடேனடிக்கடிக்கி
பன்னிநீர்கேழ்ப்பதாலே பயனென்னகண்டீரையா
இன்னிமைதனிலுன்கூலி யீகுவேன்தடையிராது
தன்னிகரில்லாவேதந் தானகற்றநாதாவாரீர்.

வசனம்.

சுவாமி சொன்னசொல் லில்லையென்று யெப்போதுஞ் சொல்லேன் சொல்லேன் அப்படியே அந்திபாகுமுன் கொடுக்கிறேன் வாருந்தரகரே.

தரகன்-வசனம்.

அப்படியானால்மெத்தசந்தோஷம்வருகிறேனப்பாமகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்

நிகழ்காலஞ்சென்றகாலம் நினைக்குமுன்வருகுங்காலம்
மகிழுறத்தெரிந்தேசொல்லும் மந்திரியுரைக்கக்கேளாய்
புகழ்பெற்றசத்யமோங்க புனிதன்றன்கூலிக்காக
திகழுடனென்னைவிற்றே தீவரமளிப்பாயப்பா.

வசனம்.

அப்பா திரிகாலமுந்தெரிந்து சொல்லும்படியான சத்தியகீர்த்தி நமது சத்தியம்நிலைக்க விந்தத் தரகருடைய கூலிக்காக வென்னைவிற்றுகொடுப்பாயப்பா மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

மழுவதைக்காச்சியென்றன் மன்னவாசெவியிற்றூக்கித்
துருவியவாறுபோலத் தோன்றலேவார்த்தைசொன்னீர்
புழுகுபோற்றுடிக்குதுள்ளம் புனிதன்றன்றரகைத்தீர்க்க
பழுதன்றியெனைநீர்விற்றே பாங்குடனளிப்பீர்போற்றி.

வசனம்.

சுவாமி மழுவைக்காச்சி யென்செவியிலிட்டாற்போலிந்தவார்த்தையைச்சொன்னீர் இவர்கூலிக்காக அடியேனை விற்றுக்கொடுத்தனுப்புவீரென்கோவே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

உன்னைநான்விற்றேயீந்தா லுசிதமோசத்யமாமோ
என்னைநீவிற்கலாகு மென்மொழிதடுக்காமந்திரி
முன்னம்நான்செய்தபாவம் மூண்டுதின்னுளிலப்பா
பின்னையொன்றுன்னேலின்று பிரியமாய்விலைசெய்வாயே.

வசனம்.

கேளாயப்பா மந்திரி உன்னைநான்விற்பது தகுதியன்றேநான் முன்செய்தவினை யிப்போது மூண்டதாலே என்னை நீயொன்று மோசியாமல் மனதொத்து விற்றளிப்பாயப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-தரு-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

இவ்விதங்காணவோநா - னிருந்தேனுடலந்தையாக
ஈசனருளிதுவோ வந்தலே

அநுபல்லவி.

ஒவ்வினின்னகரி லும்மைவிலைதான்கூற
ஓகோவென்விதிநோ வந்தலே இ

சரணங்கள்.

அன்னை தந்தையுமென்னை யாண்குருவென்றுமே
அகத்தின்மகிழ்ந்தேன்பாவி யேந்தலே
உன்னைப்பிரிந்தேயென்னை பொண்டியாயிருந்திட
உமைப்பாகனிட்டான்தாவி. யேந்தலே இ

தாயைப்பிரிந்ததன்பந் தான்சற்றுந்தளராமுன்
தந்தையைவிற்கலானேன் யேந்தலே
நாயைப்போலோரியாய் நாட்டினினைலையவே
நலமிலாமதியானேன் யேந்தலே இ

அரசனைவிற்றான்பாவி யமைச்சனென்று மேலோகம்
அறையும்பழிக்காளானேன் யேந்தலே
வரிசையாயொன்றேடொன்று வருகுதேதுன்பமையா
வஞ்சன்றயரத்தாளேன் யேந்தலே இ

அரிச்சந்திரன் விருத்தம்.

சூதுபொய்வஞ்சமில்லாச் சுகுணனேசத்தியகீர்த்தி
யேதுநீகலகமுற்றே யிப்படிதயங்கலானாய்
வாதுவெய்துமகன்கூலி வைப்பதுந் தகுதியன்றே
தீதுகள் துலையவிற்றே திகழுடனளித்திட்டாயே.

வசனம்.

அப்பாமந்திரி நீயிப்படிக் கலங்கலாகுமோ நீதிநெறியறிந்தவனுச்சுதே என்னைதொடர்ந்துயர்நீக்க நீசந்தோஷமாய்விற்று இவர் தரகைக்கொடுத்தனுப்புவாயப்பா மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

முன்னைநான்செய்திருந்த மொழியொணப்பழியீதன்றி
பின்னையார்சாபமோயப்பிரபனிவெழுகந்தோவையா
அன்னையாய்தந்தையாகி வாண்டவென்குருவுமான
மன்னனைவிற்கவெனறன் மனம்வராதென்செய்வேனே.

வசனம்.

சுவாமி எனக்கு அன்னையுந் தந்தையுமான வும்மைவிற்க வெனக்கு மனம்வராதே என்செய்வேன் தெய்வமே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அவரவரிழைத்தகர்ம மவரைவிட்டயலிற்போமோ
பவமதைததுலைக்கவல்லோ பாரினிற்பிறந்தோமந்திரி
தவமதிலுயர்ந்தவந்த தன்யாராகினும்விடாதே
இவர்கடன்தீரவென்னை யிட்சணம்விற்பாயப்பா.

வசனம்.

அப்பாமந்திரி அவரவர்செய்தவினை யவரையேகாரு மதை யனுபவிக்கவல்லவோ மானிடதிரேக மெடுத்தோம் நீதியறியாததல் லவோ இந்தத் தரகருடைய கூலிதீரவிற்தட்சணமே யென்னைவிற்பா ய் சத்தியகீர்த்தி.

தரகன்-விருத்தம்.

மன்னவனமைச்சனான மந்திரிசொல்லக்கேளாய்
என்னருந்தரகுதானு மிறைவனால்வருகவேண்டும்
உன்னைமேயவிற்றுயிநதா லெப்பிலேனரசன்வாயாற்
பன்னமேலோர்பொய்யைச்செய்யின் பாருகூலியையேவண்டாம்.

வசனம்.

அப்பா மந்திரி நீயேன் துயரப்படுகிறாய் என்தாகு இவ்வர சனால் வரவேண்டுமேயன்றி யுன்னைவிற்றுக் கொடுத்தால் நான் வாங்கேன் ஆனால்நீ யரசன்வாயா லில்லையெனச்சொல்லி வித்தால் கூலிவேண்டாமப்பா மந்திரி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

விண்டுதோசத்தியகீர்த்தி வேதியருரைத்தவார்த்தை
கொண்டுதேயென்னுட்டுன்பங் கொதிக்குதேமேயரியெல்லா
பண்டுநாளுமேலீதான பட்சமாபென்னைவிற்ற
கண்டுளமகிழக்கூலி கைவிட்டேபோவேன்பாரே.

வசனம்.


அப்பாமந்திரி வேதியர்சொன்னதைக் கேட்டையா இனித்த டையின்றி யென்னைவிற்று யிவர்தரகைக் கொடுத்தனுப்புவாய் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

தேசதேசாதிமன்னர் திசுழுடன்ஜெயவென்றேத
மாசதையறுத்தயோகர் மகிழுதாயாதிகூற
வாசமாமாலைதாங்கி வஜ்ஜிரமுடிபுனைந்த
பாசனின்சிரமேற்புல்லை பாவிநான்வைப்பேனோ.

வசனம்.

ஓ பாழுந்தெய்வமே நீயெங்கள் பங்கிலில்லாமல் முனிவனுட ன்கலந்தையா என்னை ராஜாராஜாக்கள் பணியும்படிமகுடம் பூண்டிரு ந்த வென்றுண்டவன்முடி மீதில் புல்லைவைக்கவிட்டாய்தெய்வமே.



அரிச்சந்திரனை காசிவீதியில் சத்தியகீர்த்தி விலைகூறுகிறபாகம்.

சத்தியகீர்த்தி-வசனம்.

எந்தலேயென்னசெய்வே னென்றலேவீதியீதாச்சோ
எந்தலேயெனேப்போற்பாவி யெங்கனுங்காணப்போமோ
எந்தலேயும்மைவிற்க விதோர்புல்லேமுடிமேலிட்டேன்
எந்தலேபாவிமுன்னே யிசைந்துமேநடப்பீர்நாதா.

வசனம்.

கேளுமென்னுண்டவனே யும்மைவிற்கவிதோநான்புல்லேயுமது முடிமீது வைத்தேனிந்தப் பாதகனுகிய வென்முன்னேநடந்துவரு வீரென்கோவே.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாசந்தோஷ மப்படியே வருகிறேனப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-கண்ணிகள்-இராகம்-ஆகிரி-தாளம்-ரூபகம்

முன்செய்ததீவினே முனிவனுலுற்றதின்
முனேயைக்களேந்தெரியத்தானேயதோ
நன்கையிலாத்தரகன் நாடுங்கூலிக்காக
நாயகனேவிற்கலானேன்.

வசனம்.

விதிவசத்தால் முனிவனுக்குக் கடன்காரனுகிய யரசன்றன்மனே வியை விற்றுக்கடனேத்தீர்த்துத் தரகன்கூலிகேட்பதாலிதோநான் அரசனே விற்கிறேன் சுவாமி.

சத்யமெனுங்குடையைச் சாற்றும்வழுவுருமற்
சார்ந்தேசெங்கோல்புரிந்தீரோர் ஐயா
நித்தியமும்மாதவ நெறியுஞ்சப்தபம்
நீடித்தோங்கச் செய்தீரரர்.

வசனம்.

சத்யம்பிசகாமல் குடிகளேக்காத்தவர் ஆலயப்பூசைகள் தடை யின்றி நடக்கச்செய்தவர் அழகில்மன்மதனேப் பழிக்கத்தக்கவர் தெய்வமே.

மன்னுயிர்தன்னுயிர்போல் மானிலத்தினிலெண்ணி
மதித்தேநீதி யளித்தராஜர்-இவர்
பன்னுஞ்சராசரத்தில் பலவுடல்களிலாடும்
பரமன்பத மறவாரேசர்.

வசனம்.

ஜீவகாருண்ய முடையவர் நீதிவழுவாதவர் பஞ்சாசதகோடி பூமண்டலத்திலுள்ள ஜீவராசிகளு மடாநின்ற பரம்பொருளைமறவா தவர் தெய்வமே.

ஆபத்துவேளையி லாதரித்தோரைகுரு
அன்னைதந்தையெனுங்கருத்தார் தரகன்
கோபத்தீமூட்டியே கோரம்புரிந்துமோர்பொய்
கூறேனே னிவர்மறுத்தார்.

வசனம்.

ஆபத்துக்குதவினவரைப் பிதாவைப்போ லெண்ணத்தக்கவர் தரகனால் வதிகதுன்பங்களை யனுபவித்தும் பொய்சொல்லா திருந்த மகானுபாவர் தெய்வமே.

எதிரிட்டபகைஞர்கள் ஏக்கிப்புறமிட்டோட
ஏருங்கணைதொடுக்குஞ்சூரர்-கொள்ளும்
பதியிடும்வேலைகள் பலவண்ணமாயினும்
பண்பாய்வணங்கிச் செய்யும்வீரர்.

வசனம்.

எதிரிட்டவர்களை வெல்லத்தக்கவர் தன்னைக்கொள்பவர்களிடும் வேலை யாதாயிருக்கினும் பணிந்துசெய்யத்தக்கவர் தெய்வமே.

சத்தியகீர்த்தி-வசனம்.

ஓ பரமசிவமே யின்னேரங் கத்திக்கத்தி கூவியும் யாரும் வரக்காணே னினியென்னாண்டவனே ஒவ்வொருவிதியாயழைத்துக்கொண்டுபோய் விலைகூறுவேனுக விதுவு முன்செய்தபயனோ காசிநாதா.

ஆதிமூலப்பொருளால் ஜோதிவொளிவான
அறனடிமறவாதோர் பாரீர்-குல
வேதியராகினுஞ் சாதிப்பேதங்களில்லை
வேந்தலைக் கொள்ளவாரீர்.

வசனம்.

பரம்பொருளாகிய பரமசிவ னடியை மறவாதவர் குலத்திலவேதியராகுனூர் தடையில்லை வாங்கவருவீர் கனவான்களே,

எத்திசைதன்னிலே சுத்தினுமிவளைப்போல்
இன்புளர்சிக்கிலர்பாரீர்-குல
க்ஷத்திரியராணுலும் விட்டிடத்தடையில்லை
சாங்கமாய்க்கொள்ளவேவாரீர்.

வசனம்.

எந்ததேசங்களிலு மிவருக்கிணையான வுத்தமரில்லை இராஜாக்களானாலும் விற்கத்தடையில்லை கொள்ளவாருங்கள் கனவான்களே.

கணிதமுறையில்லவரு மணிதமறிந்தவர்
கருதார்மோசங்களெனறும்பாரீர்-குல
வணிபராணுலுமிவர் பணிவார்பொருளளித்தே
வாங்கிக்கொள்ளவேயோடிவாரீர்.

வசனம்.

கணிதநூலிற் சிறந்தவர் மோசக் கருத்தில்லாதவர் குலத்தில் வைசியராணுலும் விற்கத் தடையில்லை வாங்க வருவீர்கள் கனவான்களே.

வாரந்திதியோகச் சாரஞ்க்ஷேத்திரதர்
வருந்தெரிந்தவர்பாரீர் தானத்
தீரச்செல்வமுடைய காராளராணுலுந்
திவ்வியரைக்கொள்ளவே வாரீர்


வசனம்.

நாள்நட்சத்திரங்கள் தெரிந்தவர் பூக்களின் சாரம் நன்றுயறிந்தவர் குலத்தில் வேளாளராயினும் பெண்கொடுத்தால்விற்கத்தடையிராது வாருங்கள் புண்ணியவான்களே.

கோணுர்கொண்டவர்க்குப் பூணுர்பிறர்வார்த்தை
குணமில்லாவுரைசெய்பார்பாரீர்-ஐயா
நாணுவிதவருண ராணுலும்விற்றிட
நான்றடைபுரிகிலேன் வாரீர்

வசனம்.

எஜமான் வாக்கியமீருர் பிறர்வார்த்தை கேளார் வீண்வார்த்தைபேசார் எந்தஜாதியராணுலும் விற்கத் தடையிராது வாருங்க ளன்பர்களே.



விஸ்வாமித்திரரிடத்தில் எமதர்மராஜன் வருகிறபாகம்.

பொது-விருத்தம்.

சத்தியகீர்த்திபுல்லைச் சற்ஜனன்முடிமீதிட்டே
வித்திடவீதிதோறும் விரும்பியேவருகுங்காலை
நத்தியேவிஸ்வாமித்திரன் நவிலொணுக்கொடுமைசெய்ய
கத்தியேகாலன்றன்னைக் கருதியேயழைப்பான்றுனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே சத்தியகீர்த்தி நரகனுடைய கூலிக்காக அரிச்சந்திரமகாராசன்முடிமீதில் புல்லைவைத்து வீதிதோரும் விலைகூறிக்கொண்டு வரக்கண்ட கவுசிக னின்னமனேகதுன்பஞ்செய்யக்கருதி எமதர்மராசனை யழைக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரர்-தரு-இராகம்-தனுசரி-சாப்பு.

பல்லவி.

காலனேவாரீர்-இதுவேளை-காலனே-வாரீர்

அநுபல்லவி.

கோலமாகவேநீரைக் குழைத்துநுதலிற்பூசி
சாலகம்பளம்போற்றி சட்டியுங்கோலேந்தி(கால)

சரணங்கள்.

கறுத்துமேனியுடனேயுன்ன காதலியாளுடனே
பெருத்ததொனியைநாட்டிசிறுத்த பார்வையாக்காட்டி
வெறுத்தசுடலைகாக்கும் திருத்தமானவன்போல(கால)

காலநகரைநாடி என்முறை கவனித்தேநீரோடி
தேசிகர்சொன்னவாக்கின் வாசினியைநோக்கின்
யோசித்தேனிவ்வேளை நேசித்தேன்முன்பாக(கால)

எந்தன்றுபராறுக்கமன்னவன் ஏகமாய்ப்பொய்யுரைக்க
வந்திடுவாநிருபனே சுந்தரதருமனே
பந்தயங்கெலித்திட தந்திடவுன்னருள்(கால)

எமதர்மராசன்-விருத்தம்.

தேன்மொழியேயடிகுயிலே நானுமொன்று
தெரிவிப்பேனீயறிவாய் தேவராஜன்
தான்புரிந்தகொலுவில் கவுசிகனுமென்றன்
தாள்பணிந்தேயபயஸ்தந் தருகவென்றுன்
நான்கனிந்தேவாக்களித்தே னிப்போதென்னை
நாடியேவெட்டியான்போற் காசிபுக்க

மான்வடிவேவ தநிக்கின்ற னும்போறேன்
மாதரசேநீயுடனே வருகுவாயே.

வசனம்.

கேளாய் பெண்ணே சாமலா தேவேந்திரன் சபையில் விஸ்வாமித்திர னென்சகாயத்தைக் கோறினன் நானும்வாக்களித்தே னிப்போது பறைவேடமெடுத்து காசிக்குவரும்படி துநிக்கிறன் கேளாய் மாதே.

இதுவுமது.

வெட்டியானைப்போல்நானுங் கேளாய்கண்ணே
வேடத்தேடவன்முன்னே மேவுகின்றேன்
கட்டமதுக்கனிச்சனேயே கொஞ்சம்போது
காலமதைநீதேக்கி பறைச்சிபோல
கிட்டிடுவாயபிநயித்தே யுருவைமாற்றிக்
கிளறியேகொச்சைமொழி கிளியேநீதான்
அட்டியின்றிவந்திடுவாய் காசிநாடு
அடிமாதேநான்போறே னறிகுவாயே.

வசனம்.

பெண்ணே நான் பறைவேடந் தரித்துக்கொண்டு போகிறேன் நீயும் வெட்டிச்சியைப்போ லுநதரித்து கொஞ்சகாலம்போக்கி காசிநகர் வருவாயடி கண்ணே.

சாமலாதேவி-விருத்தம்.

நல்லதுசுவாமிநாம்தான் நாடியிவ்வேடங்காசி
வல்லவர்சென்றுற்றங்க வளமானவிடுதியுண்டோ
அல்லவங்குற்றதோட்டி யறிந்திடீனமமைநாதா
தொல்லலும்வசையுமாக தோற்றுதேயெனக்குத்தானே.

வசனம்.

சுவாமி நாம் தோட்டி தோட்டிச்சிபோற் காசிசேர்ந்தால் இருக்கயிடம்வேண்டும் காசித்தோட்டிகண்டால் வசையாகுமோ யிதற்கேதுவழி நாதா.

எமதருமராசன்-விருத்தம்.

அடிமாதேகாசிவளர்வீரவாகு
யவன்மனைவிதன்னுடனே மாயமாகத்
தெரிமாதேயிமபகிரி மலைச்சாரல்புக்க
தீவரத்திற்செய்கின்றேனவன்றன்றாபந்

தரிமாதேயெடுத்தவர்வாழ் குடிசைபுக்குத்
தானங்குசிலகாலந் தங்கிக்கண்ணே
சரியாகமுனிகளிக்க நாம்நடாத்திச்
சாருவோமிப்பதிக்கே சாற்றினேனே.

வசனம்.

கேளாய்பெண்ணே காசியில்வாழுந்தோட்டி வீரவாகுவை மவன் மனேவியையும் இமயச்சாரலில்போய் சேரச்செய்கிறேன் நாமவர்களைப்போல வயதும்ரூபமுந்தரித்து அவன்குடிசைசேர்ந்து முனிவன் மனங்களிக்கச்செய்து நமதிருப்பிடம்வருவோ மறிவாயடிமாதே.

சாமலாதேவி வசனம்.

அப்படியானல் போகலாம் நீர்போம் நானுமது கட்டளைப்படி வருகிறேன் சுவாமி.

பொது விருத்தம்.

தருமனுமேயிவ்வாறுபேசிநோக்கித்
தானேவந்தூதர்களு மோடிவந்தே
அருமறைகள்புகழ்காசிச் சுடலைத்தோட்டி
யரண்மனேயிவிருவரையு மிமயச்சாரல்
கருதியேயெடுத்தேகி விடுத்தாரங்கே
கனிசருகுபுசித்துமவர்க ளியல்புனேடே
பருவதத்தையடைந்திருக்கக் காலன்ருனும்
பறையனைப்போல் முனிவனெதிற்பற்றுவானே,

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்வாறு எமதருமனுேக்கத் தூதர்களோடி காசிமயானத்தோட்டியையு மவன்தேவியையுந் தூக்கிக் கொண்டுபோய் இமயச்சாரலில்விட அவர்க ளங்குள்ள கனி சருகு புசித்திருந்தார்கள் இப்பால் காலனும் வெட்டியானைப்போல் வேடம்பூண்டு விஸ்வாமித்திரன் முன்பாகத் தோன்றுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன் வசனம்.

போற்றிபோற்றி எமதருமராசனே போற்றி.

எமதருமராசன் விருத்தம்.

வஞ்சகந்தனையகற்றி வாக்கினில்நாளுமந்த
அஞ்செழுத்ததனையோதியரியொளுப்பொருளைநோக்கும்

விஞ்சனேவிஸ்வாமித்திர வீரனேயெனையழைத்த
பஞ்சகமதனையிங்கே பகருவாய்விறைவிற்றுனே.

வசனம்.

கேளாய்முனிவனே என்னையிந்த வேடமாய்வரத் துதித்தகார ணத்தை தெரிவிப்பாய் முனிவனே.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

தருமமேவுரைக்கக்கேளீர் தரணியில்சிறந்தமன்னன்
வருந்தியேதரகன்கூலி வழக்கிடவிலையாகின்றான்
பொருந்தநீர்சுடலைகாக்கும் புலையனுயங்குசென்றே
பருந்துபோரற்கொண்டோன்தான் பகருவார்புரிகுவீரே.

வசனம்.

சுவாமிதரகன் கூலிக்காக அரிச்சந்திரன் மந்திரிவிற்கிறான் நீஅ வனைவாங்கி நான்சொல்லும்படி செய்யவேண்டும் அதாவது கேளு ம்நாதா.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

மாடதையறுக்கச்செய்வீர் மாமிஷமுறித்தும்பிரேதக்
காடதைகாக்கச்சென்றீர் கருத்தொணுப்புலையனைப்போல்
வேடமுந்தரிக்கச்செய்வீர் வித்தகாதுயரமீற
நாடதில்பொய்யைப்பேச நகமுடன்வலுத்துவீரே.

வசனம்.

சுவாமி அவன்கையால் மாடுரித்து மாமிஷந்தாங்கவும் சுடுகாடு காக்கவும் பறையனைப்போலொத்தவுமின்னமனேகவேலைகளுஞ்செய் வித்து அவனைப் பொய்பேசச்செய்து என்னைக்காப்பாற்ற வேண்டுந் தேவே.

எமதருமன் விருத்தம்.

அரிச்சந்திரன்றன்னை அடிமையாய்நானேகொண்டு
சுந்தரன்மனமுமெந்தச் சோர்வுறத்துன்பந்தன்னை
எந்தனுலின்றமட்டும் யிம்சையுங்கொடுமைகாட்டி
வந்தவன்பொய்யுரைத்தால் வழுத்துதென்வாழிநீயே.

வசனம்.

ஒ முனியே நீ கோறியபடியே அவனை வாங்கி பலவிதத்துத் து ன்பமும் படுத்துவைக்கிறேன் அப்படி பொய்சொல்லுவானுகி லுன க்குத் தெரிவிக்கிறேன் வாழிவாழி.

விஸ்வாமித்திரன் வசனம்.

மகா பாக்கியம்பாக்கியம் சுவாமி.

பொது விருத்தம்.

ஜாதியிலேநூற்றிற்கு மொன்றேவேண்டும்
சமயமோராசியின்மே லொன்றதாகும்
நீதியிலேபிரமத்தின் நெறியைக்கொண்டோன்
நிலையிலேதனக்குநிக நில்லாரேயன்
ஆதியிலேதத்தைப் பறையடித்தோன்
அரிச்சந்திரன்றனைக்கொள்ள ஆவல்கொண்டே
ஜோதியுளகாசிநகர் நாளும்வாழும்
சுடுகாட்டுத்தோட்டியைப்போல் தோன்றினனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே எமதருமராசன் ருத்திரகளைபூண்டு மயானங்காக்குந் தோட்டியைப்போ லுருமாறி அரிச்சந்திரமகாராசனைவாங்க வருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

வீரவாகு-தரு-இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்ஆதி.

பல்லவி.

தோட்டிநானுண்டே காசிவாழ் தோட்டிநானுண்டே.

அநுபல்லவி.

மூட்டியேபுகைசுடு காட்டினிற்பிணமதை
நீட்டியேதடியினால் மாட்டியேவாட்டிடும் தோ

சரணங்கள்.

செத்ததோர்மாடெடுப்பேன் மனஞ்
சிவத்தினிராட்டினிதினமிருப்பேன்
சுத்தமாய்நானிருப்பேன் கேளுஞ்
சுழுத்தியில்மெய்த்தூக்கினிலிருப்பேன்
சத்தியந்தனையேசற்றுமறந்திடேன்
கர்த்தனேமனதினிற்கண்டேமகிழ்ந்திடும் தோ

இருகலையிணைத்திடுவேன் மேல்
எட்டாமல்வாய்மூடிடுவேன்
கருவியையொடுக்கிடுவேன் உந்திக்
கருமலத்தின்பாலையுங்குடித்திடுவேன்
வரும்வினைகளையே வகையாய்த்தெரிவேன்
அறுத்திடப்பிறவியை அட்சரமறிந்திடும் தோ



அரிச்சந்திரன் தோட்டிக்கு விலையாகிறபாகம்.

வேதத்தின் நுணியறிவேன் அந்த
  வித்தகன் தங்கிடும்விடமறிவேன்
நாதத்தின்முதலறிவேன் விந்து
  நாடித்திரண்டும்விதமறிவேன்
ஜோதியொளிவையுஞ் சூட்சத்திலறிவேன்
  ஆதிநடுமுடியையறிந்தவனாலே   தோ

பணமதைமிகத்தேடி வுலகில்
  பருத்தோரைமதியாமல்வாயாடி
குணமதிலோகோடி ஜாதி
  கொள்கைவிடுத்திடப்பதம்பாடி
மனமதாயிவர்கள்மகுந்திடிற்சுட்டு
  ஆதிநடுமுடியையறிந்தவனாகிய   தோ

வீரவாகு விருத்தம்.

ஆரையா ஆண்டைநீதான் ஆளையும்விலையாக்கூறி
ஊரையேகோலமாக உளரியேவருவாயுந்தன்
பேரையும்வாழ்ந்தவூரும் பிரியமாயாளைநீயே
தாரைவார்த்திடும்பணத்தை தான்சொன்னால்வாங்குவேனே.

வசனம்.

ஓ ஆண்டே ஆரடா ஆண்டே ஆளைவிக்கிறது உன்பேரும் நீ பொறந்தவூரும் விக்கிறவிலையும் சொன்னுவாங்குறேண்டா ஆண்டே.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

வாங்கவேயோடிவந்த வள்ளலேநின்றுள்போற்றி
ஒங்கமுன்பேருமூரும் வுரியநின்தொழிலுஞ்சாதி
சாங்கமாயுரைத்தால்நீதான் சார்ந்துமேகேட்டதற்கே
ஈங்கவேயரைவேன்பொன்னை யீந்துநீகைக்கொள்வாயே.

வசனம்.

ஐயாவுனதுபேருமூருஞ் சாதியுந் தொழிலுஞ்சொன்னுலிவரை விற்கு மொத்தத்தை நான்தெரிவிக்கின்றேனையா.

வீரவாகு விருத்தம்.

அன்னகர்காணியாள வனன்குலம்புலையனாண்டே
வின்னமாஞ்சுடலைகாக்கும் வெட்டியான்பிணத்தைதீர்ப்பேன்
வின்னமாவென்பேர்வீர வாகுவென்றழைப்பார்கண்டாய்
நன்னவாயுனதுசேதி நலமுடன்சொல்லுவாயே.

ஓ ஆண்டே நான் சுடுகாட்டுத்தோட்டி என்பேர் வீரவாகு உஞ் சேதி சொல்லாண்டே சொல்லு.

சத்தியகீர்த்தி விருத்தம்.

நாதனேகாசிவாழும் நம்பினேனிருவர்காணாப்
பாதனேமகிபன்தன்னை பறையனேகொள்ளச்செய்தாய்
நீதநுவெதுசெய்தோமோ தேவனேசெங்கோல்போக்கி
பாதகச்சனியன்செய்யும் பழியதோவறிகிலேனே.

வசனம்.

ஓ காசிநாதா பதியும் அரசும் போக்கி யென்னை ஆண்ட தந்தையை யிக்கெதிசெய்யும் பறையனுக்கு அடிமையாகச்செய்கிறது உன்னுடைய திருக்கூத்தோ அல்லது சனியன் மகிமையோ தெரியேன் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அப்பனேசத்யகீர்த்தி வறுவிலாவதனைப்பேரில்
இப்படித்தயங்கலானு யிவரன்றியென்னைக்கொள்ளச்
செப்புமுன்னேசைகேட்டுஞ் செழிப்பனவந்தோர்காணே
முப்புரமெரித்தோன்கூத்தே முனேவந்துநீவிற்பாய்பாலா.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி நீ யிப்படி தயங்குதல் சரியோ இவரை விட்டால் கொள்ளுபவ ரொருவருங்காணேன் இதுவுங் காலகதியென்றெண்ணி மனக்களிப்புடன் விற்றிடுவாயப்பா மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

ஐயரேயென்னையாண்ட அன்பரேகோவேதானக்
கையரேவுலகையாண்ட கருணரேவாக்குமீறு
மெய்யரேபறையனுக்கே மேவிநான்விற்கச்சித்தம்
ஐயையோவருமாயெந்தன் அப்பனேயென்னசெய்வேன்.

வசனம்.

ஓ பரமசிவமே என்னையாண்ட மன்னவரை பறையனுக்குவிற்க வெனக்கு மனம்வருமோ தெய்வமேதெய்வமே.

வீரவாகு விருத்தம்.

வேந்தனேயெந்தன்சேரி விளம்புவேன்மெத்தநூரஞ்
சாந்தனேஆனைவிக்குஞ் சத்தங்கேட்டோடிவந்தேன்
மாந்தளிர்மேனிபூண்ட மாதுவென்செல்விநாளும்
காந்தியைப்போக்கியென்னைக்கடிந்துரைசெய்வாள்போறேன்.

வசனம்.

ஓ ஆண்டே என்சேரி ரொம்பதூரத்திலேயிருக்குது என்பெண்சாரி கோவுச்சுக்குவா நான்போறேனாண்டே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பா மந்திரி இனிகாலதாமிஷஞ் செய்யாம லிவருக்கே யென்னைவிற்றுவிடுவாயப்பா.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே செய்கிறே னிதுவும் விதிவசந்தான் சுவாமி

சத்தியகீர்த்தி-வசனம்.

ஐயா வீரவாகு நீகேட்டதைச்சொல்லுகிறேன் தெரிந்துக்கொள்வாயப்பா.

வீரவாகு வசனம்.

என்னேரஞ் சீக்கிரஞ் செல்லண்டா செல்லு.

சத்தியகீர்த்தி விருத்தம்.

புகழோங்குமயோத்தியாண்ட புனிதராமரிச்சந்திரன்பேர்
திகழோங்கும்வீரசூரர் திரண்மையாங்கல்விகற்றோர்
மகிழோங்கிநீதான்கொள்ளு மையனேகூறிக்கும்வேலை
இகழோங்காவாறுசெய்வா ரிவர்கடன்டீர்ப்பாய்போற்றி.

வசனம்.

அப்பாவீரவாகு இவர் அயோத்தியாண்ட அரிச்சந்திரமகாராசன் நீயிடும்வேலைகளை வணங்கிச்செய்வார் இந்த வேதியருக்குச் சேரவேண்டிய பொன்னைக்கொடுத்து யிவரை வாங்கிக்கொள்ளுவா யப்பா.

வீரவாகு விருத்தம்.

அண்ணலேயானேகொள்வே அறைகுவாய்வேலைகேழ்ப்பாய்
திண்ணமாய்ச்சுடலைகாத்தே திரண்மையாய்மாடுரித்து
வண்ணமாமாமிசத்தை வகைவகைபிரிக்கவேணும்
நண்ணருப்பணிவேறுண்டு நவந்திவன்புரிகுவாயே.

வசனம்.

அப்பா ஆண்டே இவனைநானேவாங்கிறேன் சுடுகாடு காக்குறும் மாடுறிக்குறும்இன்னம்ரொம்பரொம்பவேலையிங்கேயிக்குது இவனாலாகுமோ செல்லப்பாசெல்லு.

சத்தியகீர்த்தி விருத்தம்.

கொண்டிடிலிட்டவேலை குறைவரச்செய்வாரையா
எண்டிசையிகழ்ந்திட்டாலு மிவர்மனங்கலங்கவின்றி
விண்டிடும்வார்த்தைமீறூர் வெகுமனங்களிப்பாய்நீதான்
சண்டியின்தரகையிந்தே சடுதியிற்கொள்ளுவாயே.

வசனம்.

ஐயா நீரிடும்வேலைகளெல்லாஞ் செய்வார் இந்தத்தரகர் கூலியைக் கொடுத்து யிவரை விலையாய்க் கொள்ளுவீரையாவீரவாகுவே.

வீரவாகு விருத்தம்.

மறைமுதலேற்றும்நாதன் மருவுமிக்காசிநாட்டின்
பறையனுனீதான்கேழ்க்கும் பணமதைநொடியிற்றூரேன்
நிறையுளநாட்டாரொப்ப நீயுமோர்சாசனந்தான்
குறைவரயெழுதிஆண்டே கொடுப்பையோசொல்லுவாயே.

வசனம்.

ஆண்டே இப்பவே் பணங்கொடுத்துற்றேன் நீ ஆண்டமாரைப்போல் சிட்டுபெழுதி கொடுப்பியா சொல்லும ஆண்டே.

சத்தியகீர்த்தி வசனம்.

ஐயா வீரவாகு நீகேட்டபடியே யிதோ சாசனமெழுதிக் கொடுக்கிறேனையா.

வீரவாகு விருத்தம்.

விடையதுகேட்டஆண்டே வீரமாயிவனைவிற்றே
அடையதுகோருமொத்தம் அன்புடனுரைப்பாயாகில்
தடையதுபுரிந்திடாமல் தங்கிபவிடத்திற்றுனே
இடைந்திருநகராமுன்ன மீகுவேனினிவாய்த்தானே.

வசனம்.

ஆண்டே இவனை விக்குற மொத்தத்தைசொன்னுக்கா யிங்கே நின்னபடியே கொடுத்துவாங்கிக்கிறேன்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

சடனதைத்தண்டவேண்டும் காசிக்கேயெங்கள்பின்றன்
உடன்பட்டுத்தரகாய்வந்த வுத்தமர்தனக்கேகூடி
அடவுடன்பொன்னேபத்து ஆயிரங்கொடுப்பையாகில்
நடந்திவர்சொல்வார்மன்னர் நாடியுன்வசமாவாரே.

வசனம்.

ஐயாவீரவாகுவே இந்தத்தாகருக்கு நீர்பதினுயிரம் பொன்கொடுத்துவிட்டால் இவர்போய்விடுவார் அரசர் உமதுபின்னேவருவாரையா.

வீரவாகு-விருத்தம்.

ஆண்டேகேளுலுத்தரான அரும்பாவிப்பிணங்கள்மெத்த
மாண்டதால்நாட்டிநானே மயானத்திற்கேகவேண்டுந்
தீண்டொணுப்பிணங்கடன்னைத் தீய்த்திட்டபொன்னைத்தாரேன்
வேண்டிலென்சானத்தை விரைவினிலெழுதுவாயே.

வசனம்.

ஆண்டைலுத்தப்பிணம் பாவிப்பிணஞ் சண்டாளப்பிணம்மெத்தச்செத்து தாம்பிணஞ்சுட்ட காசுகளைத்தாறேன் சீட்டுயெய்திக்கொடு ஆண்டே.

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்படியே இதோவெழுதிக்கொடுக்கிறேன் ஓலையுமெழுத்தாணியுங் கொடுப்பாயப்பா வீரவாகுவே.

வீரவாகு-வசனம்.

டேசாமி பாப்பரையா ஓலையுமெழுத்தாணியுங் குடுராயென்கூத்திமவனே.

தரகன்-வசனம்.

அடேநீச்சத்தேவடியாள் பிள்ளாய் தூரயில்லடா தீண்டாதேடா நாம்பிரமகுலம் ஓலையுமெழுத்தாணியுமிதோமந்திரிகையிற்கொடுத்தேன் அப்புரம்போவாயடா நீச்சப்பயலே.

முறிச்சீட்டு-அகவல்.

உன்னதகாசியி லோங்கியேசுடலை
தன்னினைக்காக்கும் தனத்தினிலுயர்ந்த
மன்னனும்வீர வாகுவின்றனக்கே
நன்னகரயோத்தி நாதனின்மந்திரி
தன்னறமில்லாத் தரகன்கூலிக்காய்
மன்னனரிச்சந்திர மகிபனைவித்தே
என்னவசரத்திற் கெழில்பதினுயிரம்
பொன்னதைக்கொண்டே பூசுரர்க்களித்தேன்

இன்னதைக்கண்டவ மிரவமதிதரகன்
பன்னவேசாட்சிநான் பதிந்தனன்கையெழுத்
துன்னவேசாசனந் தோய்ந்தவாரதுபோல்
இன்னிவர்தன்மேல் எதிர்வழக்கில்லையே

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தசானத்தைமனதொப்பி எப்படிபுலையன்கையில்கொடுப்பேன் காசிநாதா.

அரிச்சந்திரன்-வசனம்.

சிவசிவா இப்படியுஞ் சொல்லப்போமோ மந்திரி சத்தியம்பங்கமாகுமோ தடையின்றி குளிர்ந்தநினைவுடன் மனதொப்பிக்கொடுப்பாயப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-வசனம்.

சுவாமி நான்விதியைநொந்தேனேயல்லது வேறல்ல அப்படியே கொடுக்கின்றேன் ஆண்டவனே.

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்பாவீரவாகுநீவ பொன்னைக்கொடுத்து சாசனத்தையுமிவரையுமொப்புக்கொள்ளுவீரையா.

வீரவாகு-வசனம்.

ஆண்டேபொன்னையார்வசங்கொடுக்கிறதுசொல்லுமப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தபுண்ணியவான்கையிற்கொடுத்துவிடுவாயப்பா.

வீரவாகு-வசனம்.

ஓபாப்பறைஆண்டேயிதோபொன்வாங்கிக்கோ.

தரகன்-வசனம்.

அடேதூரமெப்படிநில்லாநீச்சப்பயலே.

வீரவாகு-விருத்தம்.

விலைப்படாஆண்டையான விதரணசாலிகேளாய்
புலையனென்மரித்தோர்தம்மை பொசிக்கியகூலிக்காசை
தொலைக்கிறேனுனக்கேனுந் தொடாமல்நீவிட்டவேண்டாம்
கொலைக்குமோநாய்வித்தேநான் கொண்டபொன்கூறுவாயே.

வசனம்.

ஒவிலேப்படா ஆண்டே பார்ப்பாராண்டே பொணஞ்சுட்டகாசி கொடுக்கிறேன் ஙாய்வித்தகாசு கொலேக்குமா சொல்லடா ஆண்டே சொல்லு.

தரகன்-வசனம்.

அடேநீச்சத்தேவடியாள்பிள்ளாய்தாழவையடாவை.

தரகன்-விருத்தம்.

பார்ப்பவர்மெய்க்கப்பந்தயம் பகர்ந்துமேபொருளேயெல்லாம்
தோர்ப்பவர்போலப்பொய்யைத் தொடேனெனவேமயானங்
காப்பவனுமிந்தக் கண்ஞுவியுண்டோவேந்தே
நேர்ப்பிதோசரியோநீதான் நிகழ்த்துவாய்கருத்தைத்தானே.

வசனம்.

அப்பா அரசனேபார்ப்பவர்கள்மெய்க்கப் பந்தயம்வைத்துத்தோர்ப்பவன்போல் பிடிவாதஞ்செய்து சுடுகாடுக்கும் பறையனுக்கடிமையானுப் இந்தக்கோரம் பார்க்கப்போமோ யிலியாகிலுமுன்னுடையகருத்தைச்சொல்லுவாய்ராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

கருத்தொன்றுங்கேழ்க்கவேண்டாங் கடவுளால்வந்ததெல்லாம்
பொருத்திடபணமுங்கொண்டேன் புனிதராப்விஸ்வாமித்திரர்
வருத்தியவாறைவெண்ணேன் வழுவுறேனெனதுசத்பம்
பொருத்திடச்செய்வேன்கூலி பெற்றீரோவுரைப்பீர்சுவாமி.

வசனம்.

சுவாமிதாகரே என்கருத்தைக்கேழ்க்கவேண்டாம் விதியால்வருவதெல்லா மனுபவிக்கசித்தமாயிருக்கிறேன் உம்முடையகூலியைப்பெற்றுக்கொண்டீரா வேதியரே.

தரகன்-விருத்தம்.

வையகங்களிலேகீர்த்தி வகுத்திட்டவரசேகேளென்
கையினிற்சிக்கினோர்கள் கடிகினிப்பொய்யைச்சொல்வார்
ஐயனேநீதானித்யன் அப்பனேநீயேசத்யன்
பொய்சொலாக்குடையாாலும் போய்வாரேனுசீர்வாதம்.

வசனம்.

ஐயாவேந்தனே என்கையிற் சிக்கினவர்களனேகமாகியகோரபாதகங்களுக் குடன்படுவார்கள் நீயோ நிலைபிசகாதவன் பொய்பேசாக்குடை பிடித்தவன் நான்தரகுப்பொன் பெற்றுக்கொண்டேன்போய்வருகிறேன் ஆசீர்வாதம்வாழிவாழிவேந்தனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஐயரேநட்சத்திரேச யன்பரேயடியேன்போற்றி
துய்யராம்விஸ்வாமித்ரர் துணையடியிரண்டும்போற்றிக்
கையதைக்குவித்தேனென்றே கழறுவீர்கௌசிகற்கே
பையலாயடிமைகொண்ட பதியுடன்போறேன்சுவாமி.

வசனம்.

சுவாமிதரகரே உமதுபாதங்களுக்குப்போற்றிசெய்தேன்விஸ்வாமித்ரமுனிபிருபாதங்களுக்குமடியேன்பணிந்ததாகச்சொல்வீர் என்னையடிமைகொண்டதுரையின்பின்போகவிடைதாருஞ்சுவாமி.

தரகன்-வசனம்.

மகாசந்தோஷமப்படியேகவுசிகமாமுனிக்குத் தெரிவிக்கின்றேன் நீவாழிவாழிமகாராசா.

பொது-விருத்தம்.

தரகனுமேவிடைபெற்ற யரசன்தன்பால்
தவமுனியினிடமேகிக் கவலைகொண்டு
பரபரப்பாய்தான்சொன்ன வாற்கெலிக்கப்
பார்த்ததெல்லாம் வீணானபலன்தானென்று
துறவிமுன்னே அரிச்சந்திரன் றன்னைச்செய்த
துன்பமெலாந் தான்செப்பித்துக்கத்தோடே
அரசனவன்பொய்பேசா மெய்யனென்றே
அறைந்திட்டானவன்மனதில் நிறைந்திட்டானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசனைவிட்டு நட்சத்ரேசன்விஸ்வாமித்ரனிடம்வந்து தான்செய்த துனபங்களெல்லாம்வீணானதால் அவன்பொய்பேசாமெய்யனென்று சொல்லுகிற விதங்காண்பீர் கனவான்களே.

தாரகன்-விருத்தம்.

அன்பனேவிஸ்வாமித்ர அருந்தவமுனியேகேளாய்
மன்னனேயென்னுலான மட்டிலும்வருந்திப்பார்த்தேன்
தன்னிலேதவிரக்காணேன் தருந்தகுமவனேசத்யன்
இன்னமேன்விருதாவென்ன மெடுக்குறீர்வீணதாமே.

வசனம்.

கேளும் விஸ்வாமித்ரமுனியே என்னுற்கூடியஇம்சைகள் எல்லாம்செய்துபார்த்தேன் அரிச்சந்ரன் நிலேமிசகக்காணேன சத்தியனவனேயாக்கும்அன்றியுமுன்பாதங்களுக்குநமஸ்காரஞ்சொல்லச்சொன்னுன் ரிஷியே.

விஸ்வாமித்ரன்-விருத்தம்.

ஆகட்டுமின்னங்கொஞ்ச மாட்டமுமாட்டிப்பார்ப்பேன்
போகட்டுஞ்சுடலேக்கேதான் புரிஷித்தேயதிகதுனபம்
வாகட்டுஞ்சமர்த்தைநானே வழுவறயறிவேனேயா
ஜேகோட்டுமுமதுதிவ்ய க்ஷேத்திரமடைவீர்போற்றி.

வசனம்.

ஐபாசுக்ரமூர்த்தியே இன்னங்கொஞ்சமாட்டி அவன்நிலேமையறிகிறேன்நீருமதிருப்பிடமேகுவீர்உமதடிக்கேபோற்றி.

வீரவாகு-விருத்தம்.

அடிமையேயுரைப்பேன்கேளாய் அயகுளமென்சேரிக்கே
கடிகியேநடப்போமுன்னைக் காத்திருந்தவனுமிந்த
முடிகுனிந்தமைச்சனுன்பின் முன்னேந்துமேழவருவானுகில்
இடியுறவெந்தன்றேவி யேசுவாளேகச்செல்லே.

வசனம்.

அடாயடிமையே நாம் சேரிக்கிப்போகுனும் இந்த மூறிப்பட்டன்டையை போகச்சொல்லு என்பெண்சாதி கோவிச்சுக்குவாநீயிந்த புலாக்காவடியை எடுத்துகினுவாடா அரிச்சா.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியமப்படியேமந்திரியைப்போகச்சொல்லி புலால்காவடியைத்தூக்கிக்கொண்டுவருகின்றேன்சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

மறைவழுவாதயெந்தன் மந்திரிசத்தியகீர்த்தி
நிறையுடன்நட்சத்திரேசன் நீங்கினூர்தரகுபெற்றே

பறைபருபறைப்பதாலே பாவிநான்பற்றிப்போறேன்
துறையைப்போற்காசிதன்னில் துணைவனேவாழ்வாயப்பா.

வசனம்.

அப்பாசத்யகீர்த்திதாகர்போய்விட்டார்நானெஜமான்பின்பற்றிப்போறேன்நீஇந்தகாசியில்சுகமாயிருப்பாயப்பாமந்திரி.

ஆபரமசிலமேஇதுவுமுன்திருக்கூத்தோகாசிநாதா.

சத்யகீர்த்தி-தரு-இ-ம்-ஆகிரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எப்படிபபிரிவேன் என்னையனே எப்படிப்பிரிவேன்

அநுபல்லவி.

இப்புவிதனிலென்னை யன்புடனாண்டிட்ட
கைப்பிடிநாதாவுன் கழலடிதனைவிட்டு (எப்படி)

சரணங்கள்.

அன்னையுந்தந்தைநீ ஆனகுருவெனவே
அகத்தில்மகிழ்ந்தேகூட அண்டிவந்தேனின்றே
உன்னைப்பிரிந்தேநா னுலகிலலைந்திட (எப்படி)
அக்காலத்திலென்னை ஆண்டவாஎந்தையே
அடிமையையினிக்காப்போ ராராகும்வேந்தையே
திக்கானவுன்பதந் திகைதப்பிவணக்குமே
தெரியேன்வேறுகெதி தேவேவதனக்குமே (எப்படி)
தாயைப்பிரிந்தசிசு தானுகெடவுப்பாகி
தாணியிலிளைத்திட்ட தலிப்பழியோதாவி
நாயைப்போல்காட்டில் நாலைந்திடவெய்யா
நட்டாற்றிற்கைவிட்டால் நலமாச்சுதென்னையா (எப்படி)

அரிச்சந்திரன்-விருத்தம்.

மதிதனிலுயர்ந்தளந்தன் மந்திரிசத்யகீர்த்தி
விதியில்லைவருவதெல்லாம் விரும்பிபேசகிக்கவேண்டும்
பதியெனுங்காசிதன்னிற் பாலனெனுந்தேவியுன்டே
நிதியதுயிலைத்தேகாத்து நீயுமேசுகிக்காயப்பா.

வசனம்.

அப்பாமந்திரிவிதியால்வருவதெல்லாம் அனுபவிக்கவேண்டும்இந்நாட்டுஅக்கிராரத்தில்சந்திரமதியுந்தேவதாசனுமிருப்பதால்நீயுமிருந்துவேண்டியபொருளைசம்பாதித்துஅவர்களையுமபாதுகாத்துச்சுகமாயிருப்பாய் வாழிவாழி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

திங்களுங்கங்கைதன்னைத் திகழுடனணிந்தசிவ்ய
மங்கைமோர்பாகங்கொண்டே மகிபன்றனருளிதாமே
பொங்கனே அரசேயுன்னைப் புலையனுக்கடிமைசெய்த
பங்கனும்போறேன்பாதம் பணிந்திட்டேன்வாழிகேவே.

வசனம்.

சுவாமி அடியேனைத் தாங்களதந்தையைவிட அதிகஅன்புவைத்து காத்ததற்காகத் தங்களை பறையனுக்கடிமைசெய்தகொடும்பாவிதங்கள்பாதம்பணிந்தேன்நான்போய்வருகின்றேன் உமதிருபாதங்களும் வாழிவாழிஎன்னுண்டவனே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேபோய்சுகித்திருப்பாஎன்னருமைதங்கியபாலாசத்தியகீர்த்தி நேசதாவாழிவாழி மைந்தனே.

பொது-விருத்தம்.

மன்னவனுட்விடைகொடுக்க மந்திரிநின்றான்
மயானத்தைகாக்குமந்த வீரவாகு
தன்னருமைதங்கியதோர் மாதைக்காண
தான்விரும்பிபறையனைப்போ லபினயித்தே
துன்னவனுமுன்னடந்து யடிமைகேழ்க்கத்
தெளிவெடுத்துப்பலவாறு மொழிகளாடி
அன்னநடையாளான சாமலாவை
அவைபுடனேயழைக்கும்வா றறிகுவீரே.

வசனம்.

கேளும் சபையோர்களே இவ்விதம் மந்திரிபிரியக்கண்டவீரவாகு அரிச்சந்ரமகாராசனை பின்வரச்செய்து தான் முன்சென்று பறையனைப்போல் அபினயித்து நீச்சமொழிகள் செப்பி தன் தேவியாகிய சாமலாவை அழைக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

வீரவாகு-வசனம்.

கேள்ராடோ அடிமைநான்மின்னேபோறேன் நீகூடவேவாடோ அரிச்சா,

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே வருகிறேனெயன் ஆண்டவனே.

வீரவாகுசிங்காரப்பாட்டு.

பல்லவி.

நாநாநன்னனே நன்னன்ன நன்னனே நாநாநன்னனே

அநுபல்லவி.

நாரிசொன்னவாக்குபோல் சாரிவரக்காணேனே (நாநா)

சரணங்கள்.

திருமால்பதியோரம் இருபிரிவாய்நீரோடை
கருமணியேவூத்நிரைக்க உருகுறண்டிபெண்ணளே
வருவாள்செல்லியென்று வயிபார்த்தானிருந்தேன்
தருவாளென்றுசுகம் சாராயம்நான்குடித்தேன்
இருவிழிசிறுத்தவள் எவனோடேபோனாளோதான் (நாநா)

நாநாநன்னனே நன்னன்ன நன்னனே
நாரிகுட்டிதன்னைவிட்டு நானும்வேறேஆனேனே
நாநாநன்னனே நன்னன்ன நன்னனே
சேரிப்பையன் சின்னான்கையில் சிக்கிஅவள்சொக்கினாளோ (நா)

காப்புங்கனகமுங் கைநிறைந்தமோதிரமும்
கோப்பியமாப்பூணுமெந்தன் குடும்பிவரக்காணேனே
வேப்பம்பூவாசம் வீசுமவள்மேனி
பாப்பாரக்குட்டிகள் பத்திப்பிடித்தாரோ
ஆப்பக்கடைதனிலே அடுத்துப்படுத்தாளோதான் (நாநா)

நண்டுதிம்பாள்நத்தைதிம்பாள் நரைகொக்குபூச்சிதின்பாள்
தொண்டுகாராகுளக்கென் தோகைவரக்காணேனே
வண்டுகள்சேரா வன்னத்தலைக்காரி
தண்டுதளைப்பிடித்தே தானடப்போனாளோதான் (நாநா)

பொது-வசனம்.

அடாதோட்டிபோரைக்கூப்பிடுகிறாயடா.

வீரவாகு-வசனம்.

என்பெஞ்சாதியைகூவுரேண்டாவவுத்தியாரே.

வீரவாகுசுந்தரக்கண்ணி.

புதுமையுள்ள ஆத்தங்கரை புன்னைமரச்சோலை
புளியம்பூநிறத்தையொத்த பூவைவரக்காணேன்

வாசமலர்த்தோட்டத்திலே வந்திருக்கச்சொன்னேன்நான்
வாறேனென்றுவார்த்தைசொன்ன வஞ்சிவரக்காணேன்
அந்திப்படசந்திப்பட அலைந்துதவிப்பேனே
அன்னமும்வராவிட்டால் ஆவிவிடுவேனே.

பொதுவசனம்.

அடா தோட்டி என்னடா இப்படி கத்துகிறாய் உன் மனைவி நீவரும்போதே கூடவே ஏண்டா கூட்டிக்கொண்டு வராமற் போய் விட்டாய் இங்குவந்து கத்துவதில் பயனென்னடா தோட்டி.

வீரவாகு-வசனம்.

டே எம்மவனே நன்னுசென்னியே உங்கள் ஜாதியிலே புருசன் வேலைக்குப்போனுக்கா பெண்சாதியும் கூடவே இஸ்துகூறு போரதோ சொல்லு ஆண்டே நல்லஜாதி ஆண்டே.

வீரவாகு-ஒய்யாரக்கண்ணி.

கருங்குயிலொலியே பெருங்கிளிமொழியே
வருகபேதுதடைவந்ததோ அடிசெல்லியே (வருக)
கண்டுவெகுநேர்மாச்சே வண்டுகளுங்கூவலாச்சே
கொண்டுமையலெங்கு நின்றுளோஅடிசெல்லியே (வருக)
வரும்வழிபாத்துமே இருவிழிபூத்துதே
கருங்குழலிவரக்காணேனே அடிசெல்லியே (வருக)
மாருவழியில்லையே கூறுசொல்லவல்லையே
யாருகூடஆடப்போனுளோ அடிசெல்லியே (வருக)

பொது-வசனம்.

அடா தோட்டி இன்னேரம் நீகத்தியும் உன் மனைவியைக்காணேம் நீவந்தவேலையைப் பார்த்துக்கொண்டு போடா தோட்டி.

வீரவாகு-வசனம்.

அடா எங்கூத்தியாரே பாத்தா சளுக்குமளுக்குனு யீக்கிரியே நெத்தியிலென்ன பூச்சியீத்து யிக்கிரியே சாமியைபார்த்து யிக்கிரியா ஜம்பம்பண்ணரியே இதோபார் நானு காசிவிஸ்வேசனைக் கூப்பிட்டு என்பெஞ்சாரியை யிட்டுக்குனு வரச்சொல்றேன்.

வீரவாகு-தங்கச்சிந்து.

ஆதிசிவமே அறியாப்பெரும்பொருளே
சோதிச்சுடரே சுழித்தின்முனேயே
அனுதிநடுவே அருமறையோனே
காசிவாய்விஸ்வநாதா என்பெஞ்சாரி
காணேமே'யென்னசெய்வேன்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஆட்சியாமுமையாள்தன்னை அன்புடனணைத்தபாதா
நீச்சனுக்கடிமைசெய்த நின்னருளதுபோதாதோ
தாச்சியக்கோவிறைச்சி தங்கியகாவுமின்று
வாச்சிதோதூக்கியேக வைத்தையோகாசிநாதா.

வசனம்.

ஆ. பரமசிவமே, அடியேனைப் பறையனுக் கடிமையாகச்செய்து பார்த்ததும்போதாமல்.இந்தக் கோவிறைச்சிக் காவடியையுந் தூக்கி ஏகச்செய்தாயோ காசிமருவே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-நாதநாமக்கிரியை.

தாளம் - ஆதி.

கல்லோதானுன்மனது கரையாதோயெந்தனுக்காய்
காவடியைத்தாங்கவிட்டாய் கழலடியைத்தாதா

அல்லோநான்பாவிதோஷி யானுலுமிக்கொடுமை
அமைப்பதுநீதியன்றே யாட்கொள்பொற்பாதா

கங்கைகமக்கானெனக் கிறியவிறைச்சியைக்
கிட்டியென்தோளிலிட்டாய் கெதிசரியோவேதா

மங்கைவுமையாளுமுன் மனமுங்குளிர்ந்ததோ
மாட்டிறைச்சிதூக்கவிட்டாய் மழுவேந்தியநாதா

அரிச்சந்திரன் தோட்டி குடிசைக்கு போகிறபாகம்.



கோவைவளராதோனெனக் கொய்யாதமாமிசத்தின்
கூடைசுமக்கவிட்டாய் கிருபையுடனீதா
பாவையுடனேஎன் பாலனும்வேறுனோர்
பறையனுயெனைவிட்டாய் பரமேயருட்போதா
தொண்டரைக்காப்போனென்றே துதிக்குஞ்சுருதிமொழி
தூரமறையச்செய்தாய் துணையாரினியாதா
அண்டமெல்லாந்துதிக்கும் அன்பரைக்காக்குமருள்
அடியேன்மேல்நீக்கிவிட்டாய் அறிந்தேனினிபாதா.

அரிச்சந்திரன்-வசனம்.

ஓ பரமசிவமே இப்படிக்கொத்த காவடியுந் தூக்கச்செய்தது உன் திருக்கூத்தோ யறியேன் காசிநாதா.

பொது-விருத்தம்.

எவ்வுயிர்காக்கவென்றே எமனுருடன்கலந்து
அவ்வுயிர்தழைக்கயன்பை அறிந்திடுந்தேவிதானுஞ்
சவ்வுடன்தோலேந்தி சாமலாஅரிச்சந்திரன்றன்
ஒவ்வியநிலையைக்காண ஓடோடிவருகின்றாரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே எமதருமராஜன் சொல்லி வந்தபடி சாமலாதேவி பறச்சிவேடமெடுத்துவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தோட்டிச்சி-தரு-இராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தோட்டிச்சிவந்தாளே சாமியைத்தேடி தோட்டிச்சிவந்தாளே

அநுபல்லவி.

நாட்டமுடனேகால னுருமகிழ்ந்திட
ஓட்டமும்நடையாக ஊராருமிகழ்ந்திட (தோட்)

சரணங்கள்.

கையிற்கூடைகொண்டு
கறுத்தமேனிபூண்டு
பையநடைநடந்து
பறைச்சிவார்த்தைகள்விண்டு (தோட்)

கோணக்கொண்டைவிளங்க
குலுங்கநகைத்துநின்று
நாணம்வெட்கமும்விட்டு
நானேவெட்டிச்சியென்று (தோட்)
பார்த்தவர்கள்நகைக்கப்
பல்லையிளித்துக்காட்டி
சேர்த்துக்கண்ணைசிமிட்டி
சேரியேவிட்டோடி (தோட்)
நீண்டஸ்தனங்களுடன்
நீறும்பெருக்கப்பூசி
ஆண்டமார்களேயென்று
அதிசயவார்த்தைபேசி (தோட்)

பொது-வசனம்.

நீ ஆரம்மா உன் ஜாதியென்ன நீ எங்கே வந்தாய் சொல்லு மம்மா.

தோட்டிச்சி-தரு-அசாவேரி-ஆதி.

பல்லவி.

எங்கள்சாதிபறைசாதி ஆணடே
ஜாதிக்கெல்லாமேலாஞ்சாதி ஆண்டே

அநுபல்லவி.

திங்களிளம்பிறை கங்கையுடனேபுனை
மங்களவுமைபாகன் தங்கும்காசிநன்னாட்டில் (எங்)

சரணங்கள்.

செத்துக்கிடக்கு மாட்டை எடுக்காமலே யிருக்கமாட்டோம்-ஆண்டே, அதைசீருய் அறுத்துக்குடலெலும்பு சேர்ந்திடும்படிய தைக்கூட்டோம்-ஆண்டே, பத்துபேருமாய்ச் சேர்ந்து பொங்கலி டாமுன்னம் வூட்டோம்-ஆண்டே, பத்திரகாளிபூசைசெய்யாமலே நாங்கள் கள்ளைத்தீட்டோம்.

நித்தமுஞ்சிவனடி நினைவினிலேற்றியே
நெறிபிசகாமலே நேமமாய்ப்போற்றியே
நெட்டுவோம் கொடி நட்டுவோம் பறை
கொட்டுவோம் வசை திட்டுவோம் ஆண்டே (எங்)

நேமநிஷ்டையாக வெண்ணீறு மெங்களுங் பூசிக்கொள்வோம்-ஆண்டே, இன்னம் நித்தமொவ்வொரு பூசை நத்திச்செய்தமே

துயர்மீள்வோம்-ஆண்டே, சாமமாகிலுஞ்சுடு காடுவரும்பிணத்தைக்கொள்வோம், சண்டாளனென்றறிந்தால் காலாலுதைத்தப்புறந்தள்வோம்.

ஆடையானைநாங்கள் அடேபுடேசாமியெம்போம்
அவனுமெங்களைசெல்வி அடிகுட்டிஅக்காஎம்பான்
ஆடுவோம்சிவம் நாடுவோம்பதம்
பாடுவோம்சுகந் தேடுவோம்-ஆண்டே (எங்)

சாம்பசிவம்படைத்த சகலகுலங்களுக்குமேட்டி - ஆண்டே, சாதி அந்தணருடன்சார்ந்த பலருக்குமேதபாட்டி-ஆண்டே, ஆம் போநாழைபடாத வேளாள ஆண்டைபாதம் நாட்டி, ஆ எங்கள் அங்கத்துடன்சிரசும் படியப்பணிவோம்நீட்டி.

வீம்புடன்பதினெட்டு விருதுகள்பூட்டுவோம்
வேறொருவரணிந்தால் விறட்டியேமாட்டுவோம்
வெல்லுவோம்மறைசெல்லுவோம்சுரு
கொல்லுவோம்அடிமெல்லுவோம்ஆண்டே (எங்)

தோட்டிச்சி-சிந்து-நாதநாமக்கிரியை-ஆதி.

சபைதனில்வீற்றிருக்கும் ஆண்டமாரே
சாதிசொல்லுறேன்சற்றேகேளும் (சபை)
நால்வகையோனிதன்னில உதிக்கும்
நானாவுருவுகளெந்தன் பிள்ளையே
வேலவனென்பிள்ளையே சித்தி
விநாயகன்நான்பெற்ற தலைப்பிள்ளையே (சபை)
பிரமனைக்கண்டெடுத்தேன் ஆதிப்
பிரணவத்தாலே கெர்ப்பமடைந்தே
அரனைநான்கைப்பிடித்தேன் நாட்யம்
ஆடவைத்தேனெனைத் தேடவைத்தேன் (சபை)
அச்சுதன்கூடவந்தான் உலகில்
ஆடுங்கருவிகளை யான்படைத்தேன்
தெச்சணத்தில்நானிருப்பேன் உன்னைத்
திருமுலைபடைத்தவன் நானாண்டே (சபை)
சுருதிகளுருவானேன் பிணங்கள்
சூழுஞ்சுடலைதனில்நிலையானேன்
சருவமும்நானறியேன் துஷ்ட
சண்டாளப்பிணங்களை கண்டித்தடிப்பேன் (சபை)

டனேவாக்கின்நிலையறியேன் எந்தன்
மாயமெல்லாமெங்கும் பாயவைப்பேன்
வினோதசபையைப்புகழ்வேன் நாளும்
வேண்டிக்கொள்வேன் பதம்பாடிக்கொள்வேன் (சபை)

தோட்டி-ஆனந்தபயிரவி-ரூபகம்.

எங்கேநீபோனாய் ஆஆளநத்ன்செல்வி
எங்கேநீபோனாய்
கங்குல்வருமின்னே காணுமலேயெந்தன்
காமியேயுனை சாமிநான்தேடினேன்

தோட்டிச்சி-நாதநாமக்கிரியை-ஆதி.

ஊருக்குப்புரமேகாளி தேவரும்பறைசாட்ட
சீருடனேகினேனங்கு வேறுசெயலிலைதோட்டி

தோட்டி.

கன்னலைப்போல்பேசுகின்ற எண்ணமுள்ளாளே
கன்னியேயுந்தனைக் கருதியேயென்மனம்
கார்த்துவேர்த்துயெங்கும்பார்த்துநான்கூவினேன் (எங்)

தோட்டிச்சி.

செத்தமாடுரிக்கப்போன முத்தனுக்கேகூழெடுத்து
நத்தம்பாடியேரியண்டே உத்தமனேபோயிருந்தேன்

தோட்டி.

கொக்கதைப்மோலேஉடுத்திய தொண்டைஅழகாளே
கொப்புகாப்புமிட்டு குண்டுபுலாக்கிடும்
கூவிக்கோதேயுனைப் பாவிநான்வாடினேன் (எங்)

தோட்டிச்சி.

ஆப்பக்கடைவீதிபோயி ஏப்புக்காட்டிபையனிடம்
காப்பணத்தைக்கொண்டுவந்தேன் கோப்பாளமேனேடாசாமி

தோட்டிச்சி-விருத்தம்.

கன்றுகள்மேச்சுக்கட்டி காச்சிகூழ்பில்லும்வெட்டி
நன்றுளசேரிவிட்டு நடுவயல்தனக்கேயேகி
நின்றுநான்நாத்துவிட்டு நிலுவைகாசுகளுந்தண்டி
இன்றுமேவரயின்னேர மேன்கோபம்வேண்டாந்தோட்டி.

வசனம்.

கேளடா எம்மவனே நான்கூய்காசி பில்லுவெட்டி நாத்துநட்டுவரயின்னேரமாச்சு உனக்கேண்டாநோப்பாளந்தோட்டிசாமி.

வீரவாகு-உல்லாசக்கண்ணி.

கொத்தவாணும்கூட்டவாணும்	தங்காச்சிகண்ணே
கூடியிருந்தாபோதுமடி	பெஞ்சாரிகண்ணே
மாடு-மேய்க்கவாணும்தேய்க்கவாணும்	செல்லாத்தாகண்ணே
என்-மின்னிருந்தாபோதுமடி	பெஞ்சாரிகண்ணே
கூய்-காச்சவாணும்கரைக்கவாணும்	தங்காச்சிகண்ணே
என்-கால்பிடித்தால்போதுமடி	பெஞ்சாரிகண்ணே
கண்ணு-வெட்டவாணும்விரிக்கவாணும்	செல்லாத்தாகண்ணே
என்-கிட்டிருந்தாபோதுமடி	பெஞ்சாரிகண்ணே
கோல்-வாங்கவாணும்வைக்கவாணும்	தங்காச்சிகண்ணே
எனைத்-தாங்கியிருந்தாபோதுமடி	பெஞ்சாரிகண்ணே
நாத்து-நடவாணும்தொடவாணும்	செல்லாத்தாகண்ணே
கிட்ட-படுத்திருந்தாபோதுமடி	பெஞ்சாரிகண்ணே
நெல்-அறுக்கவாணும்அடிக்கவாணும்	தங்காச்சிகண்ணே
நீ-பெருந்திருந்தாபோதுமடி	பெஞ்சாரிகண்ணே
அடி-குந்திகுந்திஆடிஆடி	செல்லாத்தாகண்ணே
கொஞ்ச-கொப்பிபாட்டுசெல்ரிகேக்ணும்	பெஞ்சாரிகண்ணே

தோட்டிச்சி-கொப்பிப்பாட்டு.

கொப்பியள்ளோ-கொப்பியள்ளோ-கொப்பியள்ளோ.

கொ-முன்னேமுன்னேவிநாயகனே முருகாசரஸ்வதியே
கொ-வேலனுக்குமுன்பிறந்த வேள்முகாஎன்மவனே
கொ-கணபதிக்குப்பிறந்த கந்தவேளேஎன்மகனே
கொ-ஆதியிலேமாயனவன் அறியாக்குலத்தில்வந்தேன்
கொ-ஜாதியெனும்சன்மதத்தை சாடிமேலாய்நானேநின்றேன்
கொ-பறையரல்லநாங்கள்குல பண்பையிகழ்ந்தோன்பறையன்
கொ-சின்னஜாதியல்லதெய்வ சிறிநடப்போர்சிறியர்
கொ-பெரியஜாதிஆண்டேநீங்கள் பிறந்தகுலமேதுசொல்வீர்
கொ-மாடுதிம்போம்பறையர்நாங்கள் மாட்டுதிரமார்குடித்தார்
கொ-ஆதியிலேமாடுரித்த ஆண்டவன்பேரென்னசொல்வீர்

ஆறுவர்க்கம்வேறுசெய்தஅண்ணல்பேரைகொஞ்சம்சொலவீர் கொ
மாறிமாறிநீர்பிறக்கமண்ணில்வருமுறையேதோ கொ
பாப்பறையன்தோமநூலைபடைத்தவன்பேரைச்சொல்லும் கொ
இன்னமத்தசேதியெல்லாம்எம்புருசாநீசொல்லடா கொ

தோட்டி-வசனம்.

அடிதங்காச்சி என்னைச்சேதி சொல்லச்சென்னையே செல்றேன் கேளடிபெண்ணே.

தோட்டிச்சி-வசனம்.

அடா எங்குத்தசாமி ஆண்டமார் கேக்கணுமா எல்லாம் நல்லா செல்லுராசெல்லு.

தோட்டி-வசனம்.

அப்படியேசெல்லுறேன் நன்றாகேள்நிஎம்மவளே ஆண்டமாரை கேண்டமாரை பாத்துக்குனு யிருந்தினு கணுக்காலைவாட்டிடுவேன்எம் மவளே.

வீரவாகு-தெம்மாங்கு.

தெந்தினானே தென்னானே தெந்தி
நாதந்தி நாதந்தி நானானே
தெந்தினானே தென்னானே தெந்தி
நாதந்தி நாதந்தி நானானே.

நானேபெரியவண்டிகுட்டி நாடோருக்கெல்லாம்எஜமாண்டி
தானேபிறந்தவண்டிவீர சாம்பவனென்பெயராமாண்டி தெ
பூணுநூல்என்னுதடிபலர் பூசிக்கொள்வெண்ணீறுமென்னதடி
வேணுநாதம்என்னுதடிநாலு வேதத்துதிப்பதுமென்னையடி தெ
வேதமறிந்தவனுந்தாண்டிலோகந்தெரியசொன்னபறையேண்டி
தவமறியாதவன்தாண்டிஎன்னைதாய்ந்தயனென்பார்நீகேளேண்டி தெ
காடுகரைஎன்னுதடி ஆண்டேகட்டிக்கொள்விருதுமென்னுதடி
நாடுபடைத்தவர்மாண்டுவந்தால்தக்கநலங்கொடுப்பவனுந்தாண்டி தெ
கோவைஅறுத்தவனுந்தாண்டி கரிகலங்கொடுப்பவனுந்தாண்டி
தாலைவக்கண்டோனுந்தாண்டி எந்தனுக்குயேந்தவள்நீதாண்டி தெ

தோட்டி-வசனம்.

அடாஎஞ்சாமிஆண்டமார்ஜாதியிக்குதேஅதுக்குமேல்நம்முதே யிக்குதடா எனக்குநீயேசரி உனக்குநானேசரி.

தோட்டி-வீராயிமெட்டு.

மதனவில்லடிநீஎனக்கு குட்டி
மாரன்கணையடி நானுனக்கு
மதனவில்லுக்கு மாரன்கணைக்குமே
மாற்றலுண்டோடி செல்லாயி.

தோட்டிச்சி.

தாழைப்பூவடா நானுனக்குசாமி
தழைக்கும்வித்தடா நீஎனக்கு
தாழைப்பூவுக்கும்தழைக்கும்வித்துக்கும்
தாழ்மையுமேதடா வெட்டியானே.

தோட்டி.

மட்டிப்பாலடிநானுனக்கு குட்டி
மதனப்பூவடிநீஎனக்கு
மட்டிப்பாலுக்கும் மதனபூவுக்கும்
மாறுதலேதடி செல்லாயி.

தோட்டிச்சி.

மல்லிகைபூவடா நானுனக்குசாமி
மருக்கொழுந்தடா நீஎனக்கு
மல்லிகைப்பூவுக்கும் மருக்கொழுந்துக்கும்
மாறுசெல்லப்போமோ வெட்டியானே.

தோட்டி.

வன்னமயிலடிநானுனக்கு குட்டி
வர்னப்பேடடி நீஎனக்கு
வன்னமயிலுக்கும் வர்னப்பேடுக்கும்
வகைவேறமுண்டோ செல்லாயி.

தோட்டிச்சி.

வர்னக்கிளியடா நானுனக்குசாமி
வன்னக்குயிலடா நீஎனக்கு
வர்னக்கிளிக்கும் வன்னக்குயிலுக்கும்
வஞ்சகமுண்டோடா வெட்டியானே.

தோட்டி.

ஆதிபரமடி நானுனக்கேகுட்டி
அநாதிஒளியடிநீயெனக்கு
ஆதிபரத்துக்கும்அநாதிஒளிக்கும்
அகம்புரமுண்டோசெல்லாயி.

தோட்டிச்சி.

பாதநிலையடாநானுனக்குசாமி
பணியுங்குறிப்படாநீயெனக்கு
பாதநிலைக்கும்பணியுங்குறிக்கும்
பட்சபேதமேதோடாவெட்டியானே.

பொது-வசனம்.

அடா தோட்டி இவளாரடா.

தோட்டி-வசனம்.

அடா கேள்டோ வவுத்தியாரே.

தோட்டி-டப்பா.

தோம்தரதோம்தரனா கேள்ரா அண்ணே தோம்தரதோம்தரனு
வாறுகண்ணிமாறுவயறி கேள்ளரா அண்ணே
வருந்திப்பளெந்தன்பரம் சுந்தரகண்ணுள் (தோ)
ஆட்டிறைச்சிமாட்டுகறியும் கேள்ரா அண்ணே
ஆசையுடனேபுசிக்கும் நேசியாம்பெண்ணுள் (தோ)
கொள்ளுகண்ணிகள்ளுதண்ணியு கேள்ரா அண்ணே
கொண்டுவிலண்டிடாத கண்டியாம்பெண்ணுள் (தோ)
சிற்றிடையுமுற்றகுணமும்கேள்ரா அண்ணே
சேர்ந்திருக்குமெந்தனுடன்சார்ந்திடுங்கண்ணுள் (தோ)
தன்னையறிவுன்னதத்தையும்கேள்ரா அண்ணே
தாயிருக்குமிடந்தெரிகேயுளகண்ணுள் (தோ)

தோட்டிச்சி-வசனம்.

அடாஎன்சாமிசெத்தஎருமையெடுத்துவடபாப்பாரச்சேரிக்குபோ
னவனின்னேரமெங்கேபேயிருக்கேதபணமெங்கடாசெல்ராஎன்மவனே

தோட்டிச்சி-ஆனந்தகன்னி.

காசிருந்தாகொண்டுவாடா-கறுத்தவுடையா
காசிருந்தாகொண்டுவாடா

சல்லாவாங்கிகட்டவேணும் சாந்துபொட்டுநீட்டவேணும்
மல்லிகைப்பூவாங்கவேணும் மாறுமேலேவைக்கவேணும்
கள்ளுவாங்கிகுடிக்கவேணும் கைகலந்துஆடவேணும் (௧)

கடைத்தெருவேபோகவேணும் கடலைவெல்லம்வாங்கவேணும்
விடப்பயலேபார்க்கவேணும் வெள்ளகொடிபோடவேணும்
படுத்துக்குனுஆடவேணும் பக்கத்திலேநீயிருடா (௧)

சேரிவிட்டோடவேணும் சீமைசுத்திபார்க்கவேணும்
வாரிவாரிகுடிக்கவேணும் வந்தவனையேய்க்கவேணும்
காரிமேலேஏறவேணும் கண்சிமிட்டிபாரடா நீ (௧)

வீரவாகு-விருத்தம்.

ஒன்றுஞ்செய்யவில்லையுரைக்கிறேன்கேளாய்மாதே
கன்றைநான்றூக்கிச்சேரிக்கனுப்பியேவருகும்போது
தொண்டுபோமக்குசெய்பதெ கைகொஞ்சமீந்துகொண்டேன்
கண்டுநீயிட்டவேலைகடுகியேசெய்வான்பெண்ணே.

வசனம்.

அடிபெண்ணே நான்செத்தகன்னையெடுத்து சேறிக்கனுப்பி விட்டுவருகிறவழியிலேயிவனைவுனக்குவேலைசெய்யகொஞ்சங்காசு கொடுத்துவாங்கினேனடி.

தோட்டிச்சி-விருத்தம்.

குணமதாய்நடப்பானோநான்குறையின்றிவேலைசெய்த
பிணமதைச்சுடுமயானமபிசகின்றிகாக்குவானோ
பணந்துண்டுயரிசியெல்லாம்பழுதின்றியறுப்புவானோ
வணக்கமாய்நமதுகாணிவாழ்வானோநம்பிலேனே.

வசனம்.

டாசாமிஇவன்நிசமுடயவனு சுடுகாடுகாப்பானுதுண்டுவாய்க்கரிசிபணம்முதலானதுசரியாயனுப்புவானுசெல்ராயெம்மவனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

எனக்கிவராண்டையாகு மெஜமானியாகும்நீயென்
றனக்குமேதாயதாகுந் தாளடிக்கடிமையானே
மனக்குறைவேண்டாஞ்சத்யம் மாறிடேன்விளம்பும்வேலை
சினக்கின்றிச்செய்வேனம்மாசீரடிசரணந்தாயே.

வசனம்.

அய்யா இவரெனக்கு ஆண்டவன் நீரெனக்குத் தாயாகும் நானுங்களுக்கடிமை சத்தியந்தவறாமல் நீங்களிடும்வேலைகளைக்குறையின்றி செய்வேனம்மணி.

தோட்டிச்சி-வசனம்.

டாமாமா இவன்ரொம்பவணக்கமாய்பேசுரான்டா இவனுக்குத்தக்கவேலைசொல்லடாமாமா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

எளியவரையிகழ்ந்துபேசி யினிப்பிலாப்பொருட்டைந்து
பழிஞரைப்புகழ்ந்தேவாழ்ந்த பாவியாம்பிணங்கடன்னை
வழியுடன்சுட்டுநீறாய் வகுத்திடுமென்றனுண்டே
களிப்புடனெனக்குவேலை கழறிநாற்செய்குவேனே.

வசனம்.

எளியோரைக்கடிந்துமோசத்தாற்பொருள்சேர்ந்த பாவிகளையுமவாளைஅண்டிப்பிழைத்திருந்ததுஷ்டப்பிணங்களையுந்தகித்தநீராக்கும் ஆண்டையேஎனக்குஏதாகிலும்வேலையிருந்தால்சொல்லுவீரையா.

வீரவாகு-வசனம்.

அடா அடிமைத்தோட்டி இதுதான் நான் வாயுக்குடிசை குனிஞ்சிவந்து காவடியை கீழேவைச்சி என் காலுரொம்ப நோவுது பிடியடா பார்க்கலாம்.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேபிடிக்கின்றேனையா.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கேபோனாயோ-ஓ-ஓ-சிவமே-எனைமறந்தாயோ

அநுபல்லவி.

மங்கையோர்பாக மமைத்திடுங்கரமே
திங்களைத்தாங்கிடுந் திகழ்சடைப்பரமே(எ)

சரணங்கள்.

லெங்கவைத்தாயோ உன் லோகம்விட்டாயோ
பொங்கரவதனைப் பூணாரம்பூண்டவா
கங்கைதரித்தவா கருத்திதோ ஆண்டவா(எ)

ஆண்டமனஞ்சொலிக்க என் அங்கமதுகளிக்க
நீண்டகரங்கொண்டே நேயன்கால்நோய்நீங்க
வேண்டிபபிடித்திட விட்டாய்விதியோங்க(எ)

உத்தமர்மாண்டாலே யதி யுருக்கமாய்சுடுகாலே
மத்திமப்பிணத்தை மாறிவுதைத்திடும்
சத்தியன்காலது சவுக்கியமடைந்திடும்(எ)

வீரவாகு-விருத்தம்.

காலையேபிடித்தாயப்பா களிப்புற்றேனினிநீசெய்யும்
வேலைகளுனக்குநானே விளம்புவேன்பசுக்களுக்கே
பாலையுஞ்சுறக்கப்பண்ணும் பசும்புல்லையறுக்கவிந்தக்
கோலையுமரிவாள்தாங்கிக் கொப்பெனக்கொணருவாயே.

வசனம்.

அடா அடிமைசதோட்டி நீகாலைஅமுக்கி புடிச்சே நோவெல்லாம்போச்சி நீபோய் நம்பபசுவுக்கு நல்லபச்சை பில்லாயறுத்துக்குனுசல்தியாவாடா.

அரிச்சந்திரன்-வசனம்.

என்னாண்டவனே எனக்கும் புல்லறுக்கும் வகைதெரியாது கருணைகூர்ந்து காட்டினலப்படியே அறுத்துக்கொண்டு வருகிறேன் அபசாரம் மன்னிக்கவேண்டியதையா.

வீரவாகு-வசனம்.

டாஅனிச்சா இப்படித்தா னறுக்கிறது தெரிந்துக்கொள்வா யடிமையே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே யறுத்துக்கொண்டு வருகிறேனைபா.

சாமலா-வஷி.

அரசேயிந்த வடிமையின்சரிதை
வரிசையாயெனக்கே வழுத்துவீர்சுவாமி.

வசனம்.

சுவாமி நமக்கு அடிமையானவனுடைய சரித்திரமென்னதெரியச்சொல்லும் பிராணநாதா.

எமதருமன்-விருத்தம்.

மாதேகேளிவன்சூரியவம்சத்துற்றோன்
மழுவேந்திதனக்கினியனயோத்தியாண்டோன்
தீதேதுமறியாதோனேகபத்தினி
தெளிவுற்றநல்லறிவோன்வதிஷ்டனுக்கே
ஏதேதுங்குறைவின்றிச்சீடனானே
னிவன்சத்யனெனவிளம்பஇந்திரன்முன்னே
கோதேயக்கவுசிகனுந்தியனென்றே
கூறினானிநடந்தவாறுகாணே.

வசனம்.

கேளாய்ப்பெண்ணேசாமலா இவனயோத்தியையாண்ட திரிசங்கென்ற சத்தியபா ஷரிச்சந்திரனென்பே னிவனுக்குயிணையிமயவரை சொல்லப்போகாது இந்திரன்சபையில் வதிஷ்டனிவனை வுத்தமனென கவுசிகமறுத்திவனை அசத்யனுக்கிறே னென்றான்கோதே.

இதுவுமது.

இராஜபிரம்மரிஷியிருவர்தானு
மேற்றினார்பந்தயங்கள்முன்னேபாவி
மோசமதுபுரிடவெண்ணியாசகித்த
யிவனைமுடிப்பதன்பாலிலிருத்திராட்டை

நாசகனுங்கைபற்றிக்கடனுந்தண்ட
நயமுடனேசுக்கிரனேவமாதை
பாசமின்றிவிற்றளித்தான்தரகுக்காகப்
பாவையேநமக்கடிமையானுன்கண்டாய்.

வசனம்.

இவ்வாறுபந்தயமிட்டு யாகத்திற்குத் தானம்வாங்கிப் பொன்னே கடன்சுமத்தி நாடுநகரைபறித்துக்கொண்டு யிந்தக் காசிவரச்செய்துசுக்கிரனேத்தாகனுக்கி அவன்துயரா லிவன்பத்தினியைவிற்றுக்கொடுக்க தரகன்தன் கூலிகேட்க தான்நமக்கடிமையானுனென்றறிவாய் மாதே.

சாமலா-விருத்தம்.

தெரிந்திட்டேநீர்தானிப்போ தெளிவுறவுரைத்ததெல்லா
மறிந்திட்டேனரசனம்ப ளடிமையைநீக்கிச்செங்கோற்
புரிந்திடப்போவதெப்போ பொட்டெனவெனக்குத்தோண
அறைந்திடவேணுமென்ற ளனேதருமவானே.

வசனம்.

சுவாமி நீர்சொன்னதெல்லாம்தெரிந்தது இனியிவன்மறுபடியுராஜனுவானு சொல்லுவீர் பிராணநாதா.

எமதருமராஜன்-வசனம்.

பெண்ணே இன்னங்கொஞ்சநாள்போனல் பின்புசுகமடைந்து ராஜனுவானடிசாமலா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சொல்வழுவாதமெய்ஙனேசுமங்கலிவுமையாள்நேசா
கல்மனங்கொண்டேநீதான்கடுந்துயர்விளைக்கப்போமோ
வல்வினையெதுவந்தாலும்வானவர்க்கிரையேகாப்பாய்
புல்தனையறுக்கவைத்தபுண்யனேகாசிநாதா.

வசனம்.

ஓபரமசிவனே உன்னடிகளே கெதியென நம்பியிருந்தவன்னேபுல்லறுக்கும்படி எழுதிவிட்டாயோ காசிநாதா.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-காம்போதி-அடதாளம்.

என்னவிதி விட்டனே சிவமே
எங்கிஅரிவாளைத் தாங்கிப்புல்லறுக்க — என்ன

முன்னற்செய்த பழியோசிவமே
முற்றுமடியே நற்றுதிருந்திடில் — என்ன

இன்னங்கோபமாகுமோ சிவமே
எந்தன்மனைவியைத் தந்துமுறியாக — என்ன

கன்னல்மொழி பாலனுஞ்சிவமே
கதரியலைந்திடப் பதறிச்செலமந்திரி — என்ன

உன்னையேற்றிப் பணிந்தோரைசிவமே
ஊழ்வினைவந்துமே தாழுறச்செய்யவோ — என்ன

என்றுலாவதேது சிவமே
இறைவனெனப்பூமி துறையாய்நானுண்டதும் — என்ன

வின்னத்தோட்டிக் கடிமையாய்சிவமே
விரனுமலுத்திடக் காமும்வலித்திட — என்ன

வன்னப்பசு தின்னவேசிவமே
வயலில்நின்றுபுல்லைக் கயவனைப்போற்கொய்ய — என்ன

நன்னதானபசும் புல்லாய்சிவமே
நாயனறுக்கவுங் காயம்படவிரல் — என்ன

என்னவிதி விட்டனேசிவமே
ஈசாவுந்தன்கூற்றே நேசாவெனைக்காக்கும் — என்ன

அரிச்சந்திரன் விருத்தம்.

கோவதிற்குணவுயீந்தாற் கோடியாம்புண்யமென்னும்
பாவமதென்னினெஞ்சிற் பறையன்றனருட்படிக்கே
சாவதானங்களின்றிச் சடுதியிற்பில்லைக்கட்டி
ஏலவுஞ்சிரமேற்றுங்கி யிட்டையோகாசிநாதா.

அரிச்சந்திரமகாராஜன் வேலைசெய்கிறபாகம்.



வசனம்.

ஓகாசிவாழும் விஸ்வலிங்கமே பறையன் வீட்டிலிருக்கும் பசுக்களுக்கிதோ பில்லைக் கட்டிக்கொண்டு போகின்றேன் இதுவுமுன்னருள் உன்னருள் தான் சிவமே.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படிநடப்பேன் சுமைதாங்கி எப்படிநடப்பேன்

அநுபல்லவி.

இப்படியும்விதி விட்டாயோயென்னையா
கைப்பிடித்தென்னையே காருங்காருமெய்யா

சரணங்கள்.

உச்சியெறியுதே உள்ளங்கால்நோகுதே
ஓஓஓநாதா உடலெல்லாம்வாடுதே
மெச்சியோய்யந்தன் மேனிவதங்கிட
மேட்டிதிக்கறிகிலேன் ஓசிவமே(எப்)
தோள்களும்நோகுதே துடைகளும்விம்முதே
துடிக்குதேகால்களுந் தாயாகரஞ்சோருதே
நாள்களும்வந்ததோ நான்மனம்வாடிட
நம்பினேனுன்பதம் ஓசிவமே(எப்)
பிடரிவலிக்குதே பின்புறந்துடிக்குதே
பேசுநாவுலர்ந்தே பிரக்கிணைமாறுதே
கடையனென்மேனுந்தன் கருணையைநாட்டுவாய்
கழலடிபோற்றினேன் ஓசிவமே(எப்)

அரிச்சந்திரன்-வசனம்.

ஐயா இதோ உமதுகட்டளைப்படி புல்லைக் கொண்டுவந்தேன் சுவாமி.

விரவாகுவசனம்.

அடா அரிச்சா பில்லைப் பசுவுக்குபோட்டு சிக்கிரம்வாடா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஐயனேயடியேன் றன்னை யடிமையாய்க்கொண்டகோவே
துய்யனேபில்லையெல்லாந் தோணவேபசுவிற்கிட்டேன்
மெய்யனேவேறுவேலை மேவும்வாறிருந்தாலன்பு
செய்யவேவேணும்நாதா சிக்கிரம்புரிகுவேனே.

வசனம்.

ஐயா தங்களுத்திரவின்படி பசுவிற்கு பில்லைப்போட்டுவிட்டேன் இனிவேறுவேலை ஏதாகிலுஞ்செய்ய உத்திரவுதாரும் ஐயா,

வீரவாகு-விருத்தம்.

புல்லதைப்பசுவுக்கிட்டு புகழுடனோடிவந்தே
நல்லதாய்வணங்கிச்சொன்ன நண்பனேமகிழ்ந்தேனப்பா
வல்லயங்கத்திகொண்டே வருந்தாமலிருந்தகன்றை
மெல்லவேயறுத்துதோல்மா மிசம்வேறுசெய்குவாயே.

வசனம்.

அடா அனிச்சா சந்தோஷந்தான் இந்தசெத்த கண்ணுக்குட்டியை யறுத்துரித்து கறிவேறு எலும்புவேறாய்ச் செய்வாயடா.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே செய்கின்றேனையா.

மேற்படி-வசனம்.

ஓகோகோ காசிநாதா கன்றையும் அறுக்கச்செய்தாயா.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனதுஎப்படித்துணிவேன் ஓகாசிநாதா
மனதுஎப்படித்துணிவேன்

அநுபல்லவி.

கனமாயிருந்தவென்னை கன்றின்கழுத்தறுக்க
காட்சிகொண்டாயோயீசா கங்கைபுனைந்தகோவே (மன)

சரணங்கள்.

காலனையுதைத்தவா கன்றின்தோலையுரித்தோன்
கரியுரித்தோனேவிதோ கையாற்குடல்தெரித்தேன்
சிலமனைத்தும்விட்டு சிரசுவேறாக்கினேன்
செப்புவதென்னயீசல் சிவனேநான் தூக்கினேன் (மன)

என்விதியைஎண்ணிப்பின் இருகாலைத்துணித்திட்டேன்
இடறேதுசெய்தேன் முன் னிருகால்களறுத்திட்டேன்
வன்மனமுனக்குயென்மேல் வந்ததிதோபரமே
வாகாய்க்குடலுள்மலம் வாங்கிடவென்கரமே (மன)

சிரத்தைப்பிளந்துதந்தஞ் சிப்பிளனும்புந்போக்கி
சேர்ந்தவிறைச்சியுடன் செப்பும்மூளைவேருக்கி
பரமேவுமையாள்மேவும் பங்கர்குறவனையை
பற்றியகன்றின்நாவை பாவிக்கையாலணைய(மன)

அரிச்சந்திரன்-விருத்தம்.

மாண்டதோர்பசுவின்கன்றை பகிபனேயறுத்துதோலை
ஆண்டவாவேறுசெய்தே யதிலுள்மாமிசத்தை
வேண்டதையொருமையாக்கி வேணதைவேறுசெய்தேன்
தாண்டவாவேறுவேலை தயவுடனுரைசெய்வீரே.

வசனம்.

ஐயா தங்களுத்திரவின்படி கன்றையறுத்து தோல்வேறுமாமி சம்வேறு எலும்புவேருகச்செய்தேன் இன்னம் வேறுவேலை அருள் செய்யவேணுமையா.

வீரவாகு-விருத்தம்.

அப்பனே அனிச்சாகன்றை யறுத்தவார்மிகவும்நன்றே
இப்படிபறையர்தன்னு லெள்ளளவாகிலாகா
துப்பனேவுனக்குமிந்த துபருறவடிமையாக
எப்படிவந்ததோதா னியம்புவாயெனக்குத்தானே.

வசனம்.

அடா அனிச்சா நீ கன்னுகுட்டியை அறுத்தது மெத்தவே டிக்கை இந்தசேரியிலிப்படி யாருஞ் செய்யமாட்டாங்கோ நல்லது நீயடிமையான காரியமென்னமோ சொல்லடா அனிச்சா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தவமதுபுரிந்திடக் கௌசிகன்வந்துபொன்னதைத்
தானமாய்ப்பெற்றுமென்றன்
றனிவசமிருத்தியே சென்றுமேபயிர்கெடத்
தான்விட விலங்கையெல்லாம்
நவகுனவோட்டினேன் பன்றியைநாட்டினேன்
நன்பிலாப் புலைச்சிமாரை
நாடிடச்செப்பினர் மறுக்கவேந்தனிட
நாட்டையே-தாரைகொண்டார்

கவனமில்லாமலே வோட்டினார்வருகையிக்
கனத்தமுன் பொருள்தாவெனக்
காசியிற்றருவனென தாகனையுமேவினார்
கன்னிதனை விற்றளித்தேன்
பவமிலாத்தாகனுந்தன் கூலிதாவெனப்
பற்றினனன்றி லோர்பொய்
பகரெனப்பேதையுன் னடிமைதானுகினேன்
பாவியென் றறிகுவீரே.

வசனம்.

கேளும் எனையாட்கொண்ட ஐயா தவத்தினிலுயர்ந்த விஸ்வாமித்திரானவர் என்னை ஒரு பொய்வார்த்தை சொல்லச்சொன்னார் யான் சொல்லமாட்டேனென்றேன் இதனால் அவருடைய வஞ்சனையால் எனது நாடுநகரம் பெண்டுபிள்ளை முதலானதும் தோற்று நானும் தங்களுக்கு அடிமையாகவும் நேரிட்டது ஆண்டவனே.

வீரவாகு-வசனம்.

அடா அரிச்சா ஒருபொய் சொல்லிவிட்டால் இந்தமாதிரி கஷ்டம் வராதே சொல்லிவிடுகிறதானே அடா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

இப்புவியழிந்திட்டாலு மிரவிமதிதப்பிட்டாலுங்
சப்புமென் னுடற்போனாலுங் கனவிலும்பொய்யைச்சொல்லேன்
தப்புறேன்சத்யமீறேன் தயாபராநீர்தான்சொன்ன
ஒப்புறாக்கொடியசெய்கை ஒருக்காலும்நாடேன்போற்றி.

வசனம்.

கேளுமையா பூலோகமழிந்தாலுஞ் சூரியசந்திராள் மாறினாலு மென்திரேகம் அழிந்தாலுஞ் சத்தியம்பிசகி பொய்பேசேன் ஆண்டவனே.

வீரவாகு-விருத்தம்.

அப்பனே அரிச்சாவுந்த னுடையைக்கழட்டிவைத்தே
துப்பறுவென்குலத்தோர் தொட்டிம்வாறுபோல
இப்பழங்கம்பளத்தை எகலிட்டுத்தட்டிபூண்டே
ஒப்பியுஞ்முடியிலேஞ்சை உடுத்திமுன்வருகுவாயே.

வசனம்.

அடா அனிச்சா உன்துணியை அவிழ்த்துவைச்சி நம்பசேரி யாரைப்போல் தட்டியிட்டு கம்பளிபோத்தி தலைக்கு முண்டுகட்டி என்முன்வருவாயடா அனிச்சா.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே உடுத்திக்கொள்ளுகிறேன் ஐயா.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

அரனேகங்காதரனே வுன்ற னருளோயிதுசிவமே
அடியேனிந்தவேடங்கொள்ள யமைத்தாய்விதிசிவமே
துரைமன்னர்கள்பணிமகுடந் தொட்டமுடிசிவமே
துண்டுமேலேஞ்சுந்தான்கட்டிடத் தொகுத்தாய்விதிசிவமே
அம்புத்தூணிதாங்குந்தோளி லையோயின்றுசிவமே
அருங்கம்பளியேற்றவைத்த யருமைநன்றுசிவமே
வாளுங்கச்சைவளருமடி வணிந்தயிடைசிவமே
பருந்தசட்டிபூட்டவைத்தாய் வகையறியேன்சிவமே

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி நீர்சொன்னபடியே உடுத்திக்கொண்டேன் இதோ நான் பூண்டிருந்ததுணிகளை ஒப்புக்கொள்ளும் வேறே வேலையே தோ சொல்லுமையா.

வீரவாகு-விருத்தம்.

திடமுளவடிமைகேளாய் தெரிவிப்பேனெனதாங்காணி
சுடலைபோய்காக்கவேணுஞ் சோராமல்வருஞ்சவத்தின்
படனுளகொம்புநாரு பற்றியகாஷ்டமீதிற்
கடன்காசும்பிண்டந்துண்டுங் கவர்ந்திங்கேயனுப்புவாயே.

வசனம்.

அடா அடிமை என்நாணிபாச்சியாகிய சுடுகாட்டுக்குப்போய் தூங்காமல் வருகிற பிணங்களைக்கண்டு துண்டுசுடுகூலி வாய்க்கரிசி பாடையிலிருக்கும் கொம்புமுதலானதை மோசஞ்செய்யாமல் இவ்விடம் அனுப்பவேணும் அனிச்சா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

நாருடன்கொம்புங்காசு நற்றுண்டும்பிண்டமீய்ந்த
காருளகட்டையெல்லாங் கழலடிசேர்ப்பேனையா
வீறுடநானேமேவ விடமொன்றுங்குட்சிபாதை
மீறிடாதனையமார்க்க மினிப்புடனுரைப்பீர்போற்றி.

வசனம்.

சுவாமி உம்முடைய ஆக்கினைப்படியே செய்கிறேன் அவ்விடத்தில் எனக்கிருக்க இடமும் போஜனத்துக்கு மார்க்கமுஞ் செய்ய வேண்டும் ஐயா.

வீரவாகு-விருத்தம்.

வாயிடுஅரிசிகொண்டே வளர்பசிதணித்துக்கொள்வாய்
நோயுறுக்குடிசைதாங்கி நோன்புடன்காப்பாயப்பா
நீயினியிற்கலாகா நீங்கியபணமுந்துண்டுங்
காயிதாப்படிவெனக்கே கருத்துடனனுப்புவாயே.

வசனம்

அடா அடிமை வாய்க்கரிசியை நீ எடுத்துக்கொள் மற்றதை எனக்கனுப்பு அவிடத்திலிருக்கும் குடிசையில் வெகு ஜாக்கிரதையாக யிருக்கவேண்டியது.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே காத்துக்கொண்டிருக்கிறேன் சிலவுதாருஞ் சுவாமி ஒருமனுவு சுடலைக்கு வழி காட்டவேணுமையா.

வீரவாகு-வசனம்.

ஆனால் நானும் கூடவருகிறேன் வருவாயப்பா அடிமை.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே வருகிறேன் ஆண்டவனே.

வீரவாகு-வசனம்.

பாத்தியா அனிச்சா இதுதான் சுடலை இதோ பரணையிருப்பதால் இந்த முத்திரைக்கோலை கையிற்றாங்கிக்கொண்டு அதிக ஜாக்கிரதையாக காவல்செய்யவேணும் அடிமையே.

காசிகாண்டம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சத்தியபாஷ அரிச்சந்திரவிலாசம்

மயானகாண்டம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஆண்டையேநின்வாக்கிற்கே யனுவெனும்பிசகுசெய்யே
னாண்டையேகாவல்சோரே னன்பதுந்தவறேனையா
ஆண்டையேயடியனுக்கா யடர்ந்துமிந்துாரம்வந்தீ
ராண்டையேயுமதுசேரிக் கன்புடன்செல்வீர்போற்றி.

வசனம்,

சுவாமி தங்களுத்திரவின்படி சுடலையைக்காத்திருக்கிறேன் அடியேனுக்காக இவ்வளவுதூரம் நடந்தீர் தங்களுடைய திருப்பாதம் நோவிற்றே தங்களிருப்பிடம் சேர்வீரையா.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-நவரோஜ்-தாளம்-ஜம்பை.

ஆதிசிவமேயுனது பருளிதுவேஷயா
அடிபணிச்சுடலேபுக்க யமைந்ததுவேமெய்யா-அரனே

சோதித்திதானணிந்த சுருணமணமுடையாநின்
சொல்மறவாதடியனக்கே சொன்னதிதுவிடையா-சிவனே

தந்தையும்நீதாயெனவே தான்மதித்தேனையாநின்
தனையனுக்கித்துயரருந்த தலைவிதியோதுய்யா-அரனே

இந்தகெதியிவ்வுலகி லெவருற்றுரறியேன்-என்
இறையவனேயுனக்குச்செய்த லழிவிதுவோதெரியேன்-சிவமே

காலனையன் றுதைக்கவந்த கருணை என்மேலில்லையா-உன்
கழலடியைத்துதித்தும்வராக் கருமமென்றன்றொல்லையா-அரனே

யாரைவதைபுரிந்தேனோயடுத்தவரைக்கெடுத்தேனோ-உன்
யடிநினைந்தாலறுக்குமென யறைவதிகுதானோ-சிவமே

ஒருதரமுன்பேருரைத்தாலுகந்தருள்வோமென்றே-தேவே
ஓதுமொழியடியனுக்கா யொழிந்ததுவேயின்றே-அரனே

தருமமிதுவென்றுனக்கே றயைபுரிவாய்நன்றே-இத்
தாரணியிலுனைப்பணிந்தேன் தனயன்ஞானக்கன்றே-சிவனே

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்.

சங்கரசங்கா தாரகமசிவாய சம்போசதாசிவனே-அந்த
திங்களிளம்பிறையை-முடிமிசை தேக்கும்பரசிவனே (க)
நீதிமுறைபிசகிவஞ்ச நேசருடன்கூடி-வெகு
காதகமதுபுரிந்தகெட்ட கருமியோநானடி (உ)
இந்தகெதிவிட்டாய்சுடுகா டிருக்கக்கெதிவிட்டாய்-ஆதி
அந்தமாய்நீதிபெய்துபுல காண்டபலன்தொட்டாய் (ஙூ)
வேதநெறியடைந்து-பதின் விதிபிசகாமநாதா-மறை
ஓதஅறமளித்தபலன் உதவினையோபாதா (ச)
குறைபேதுசெய்தறியேனெதுங் கோவித்துரைத்தறியேன்
பறையனுய்நின்றிடவேநீயும் பார்க்கயோமோசிறியேன் (ரு)
எதுக்குமீனவேநம்பி யிருந்தவனேஅரனேமெத்த
வாதிக்கவுந்தகுமோஎன் வறுமையைக்கெய்பரனே (சு)

அரிச்சந்திரன்-விருத்தம்.

அன்னனேகயிலவாசா யன்பனேவுமையாள்நேசா
விண்ணனேவிடைமீதேறும் வேந்தையேவருவாயிங்கு
வண்ணனேவுனதுபாதம் வருந்தியேயழைத்தேன்மூன்று
கண்ணனேகாசிநாதா கடையனையாள்வாய்போற்றி.

வசனம்.

ஓ-காசிநாதா இதுவுமுமது அருளாகும் அடியேனைக்காக்கவருவீர்பரமசிவமே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இ-ப-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

இன்னமும்நின்மனதிரங்கா தென்னகொள்ளோயோ-ஐயா
இப்படிநானுனக்குச்செய்த யிடரைச்சொல்லையோ (இன்)
மன்னவனுயெனையிருத்தி மகிழ்ந்தவனியே-இந்த
மயானங்காக்கவிட்ட வாருன்மலரடித்தாயே (இன்)
சிவமேபெரிதெனயோக வான்கள்சிந்திக்கிறுரேநின்
சேவடிதொழுதாலே பலசிக்கறுமென்பாரே (இன்)
தவமிழைத்தேனேசிறுவயதிலே தாழ்ந்தேனுன்னையேநான்
தாவுபவிழ்க்கவந்தே கதலைதகிப்பாயன்னையே (இன்)
பட்டபாடுமுற்றுவறுமைபானேபோதும்நான்
பாவிபாவிபாதம்பணிந்தேன் பவமறவோதும் (இன்)
கெட்டநடத்தையிருக்கினு முன்கிருபையால்நீக்கும்ஐயா
கிரணமவேதம்பொய்த்திடாமற் கெதியருள்தாக்கும் (இன்)

அரிச்சந்திரன் கலித்துறை.

பிறந்ததுமண்மேலிறப்பதற் கென்றேபேசிடுநூலிற்
றுரந்தநற்சுகமுந்துக்கத்திற் கீழெனுஞ்சொல்லுங்கண்டேன்
கரந்தனைக்கூப்பிச்சுடலையுங்காக்கக் கனிவுகொண்டேன்
வரந்தந்துமுன்னடிக்கீழா லருத்தியேவாழ்விட்டையே.

வசனம்.

ஓபரமசிவமே துக்கஞ்சுகத்திற் கேடல்லவென்பதை யறிந்தேன் சுவலையுங்காக்கின்றேன் உன்திருவடிகாட்டி என்னை யாட்கொள்வீர் காசிநாதா.

பொது-விருத்தம்.

மன்னனைவிற்றபின்னர் மந்திரிவேறதாகி
நன்னகர்காசிதன்னில் நாளொன்றேதங்கிநொந்து
என்னமோபலவாறெண்ணி யிறைவனைக்காணவ்வதான்
கன்னமாஞ்சேரிதன்னைக் கருதியேவருகின்றுனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசனைப்பிரிந்தமந்திரி ஒருநாளெல்லாங் காசியிலிருந்து பலவாறெண்ணி அரிச்சந்திரனைப்பார்க்க ஆவசை கொண்டு தேடுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

சத்தியகீர்த்தி-தரு-இ-ம்-தர்பார்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆசிவமே நல்லகெதி ஆக்கினும் சிவமே

அநுபல்லவி.

அண்ணா அருள்வண்ணாயிது நண்ணா முக்கண்ணா (ஆ)

சரணங்கள்.

அன்னைதந்தையெனவெண்ணியிருந்தயென்
னரசனைப்பிரித்தாயே அந்த
ஆதிலக்ஷ்மியைப்போலொத்தவென்தாயை
யடிமையாவிடுத்தாயே
உன்னைகெதியென்றதுவு முத்தமனைப்பிரிந்ததுவுந்
தன்னந்தனியானதுவுந் தனையன்வேறுபோனதுவும் (ஆ)

ஆரைகெதியெனயிருப்பேனினி
யரசனைவிட்டு நேயா என்
அங்கம்பதருது ஆவியுஞ்சோருது
அரியயனறியாத்துயர்
வேரையாரைச்சாருவது வேந்தனேயேன்தூருவது
பேரைநம்பிவாருவது பித்தகனேகூறுவது (ஆ)

வேந்தர்வேந்தனைவினைநினைந்து நீ
விட்டாய்பறையனுக்காளாய் ஞான
வித்தகனேபரிசுத்தவனேஉனை
விரும்பித்தொழுதமேநாளாய்
சாந்தம்நீவிட்டதுவேன் சதிபுரியத்தொட்டதுவேன்
பாந்தமதைபற்றதுவேன் பாவியும்நான்கெட்டதுவேன் (ஆ)

அரசனைமுறிபாத்திறனென்றுமே
யவனியோரெனே பேச பின்னும்
அரும்பாவியாமையமைச்சனென்றுமே
யவரும்வகைதனைப்பேச
சார்பதிநீதந்ததுவுஞ் சுகுணனையேபிரிந்ததுவும்
வாமருளாதிருந்ததுவும் வஞ்சகனானதுவுங் (ஆ)

சத்தியகீர்த்தி-வசனம்.

ஓ-பரமசிவமேஎன்னைரக்ஷிக்கவருள்செய்யவேண்டும்காசிநாதா

சத்தியகீர்த்தி-கண்ணிகள்-இ-ம்-முகாரி-தாளம்.

எங்கெனத்தேடுவேநாதா மன்னனிருப்பிடமறிகிலே நாதா
திங்களணிந்திடும்நாதா நற்றேவனேகாக்கவா நாதா
நாய்கள்குலைக்குதேநாதா என்றன்நாதனைவாட்டுமே நாதா
பேய்களுலாவுமேநாதா கந்தைசிற்றிடைவிட்டுமே நாதா

வசனம்.

ஓ ஐயா எங்களரசனைப்பார்த்தீர்களா சொல்லுங்கள்.

பறந்தும்பறக்குதேநாதா தோல்பற்றிநாயிழுத்துமே நாதா
வருந்துதென்னுள்ளமேநாதா மன்னன்வாழிடந்தெரியாமல் நாதா
சுரைபடர்ந்திருக்குதேநாதா வீட்டில்சுந்தரரிருப்பாரோ நாதா
அரைந்தயணிதோலுக்கேநாதா சந்திரன்கலமுங்காயுதே நாதா

வசனம்.

ஓஅம்மா எங்களரசனைப் பார்த்தீர்களா சொல்லுங்களம்மா.

சிந்துங்கூழ்மீதிநாதா யீக்கள் சேர்ந்துமேமொய்க்குதே நாதா
வந்துதேயிவ்விதிநாதா மன்னர் வாழ்ந்திடயிவ்விடம் நாதா
சேரியெல்லாந்தேடநாதா நான்சிக்கிமெய்வாடினேன் நாதா
வீரியனென்வேந்தநாதா எங்கும் வீற்றிடக்காணேனே நாதா

சத்தியகீர்த்தி-விருத்தம்.

பறையர்கள்வாழுமிந்தப் பண்பிலாச்சேரியெல்லாஞ்
சுரைகளுநாயுந்தோலுஞ் சொக்குதேயன்றியெந்தன்
துரைதனையடிமைகொண்ட தூயன்றன்வளவைக்காணேன்
உரைசெயவேண்டிகேட்டா லுண்டிலையெனச்சொல்லாரே.

வசனம்.

ஓ-சிவமே இந்தச்சேரியெல்லாந் தேடினேன் நாயுங்கழுகுந்தோலுங்காணுகின்றதேத் தவிர எனது அரசனிருக்குமிடந்தெரியேன்சொல்லோருங் கிடைக்கவில்லையே காசிநாதா.

சத்தியகீர்த்தி அரிச்சந்திரனைக் காணுகிற பாகம்.



சத்தியகீர்த்தி-விருத்தம்.

தேடினேனிங்குதானே தேசனேகண்ணுற்கானேன்
நாடியேசுடலைகாக்க நாயகாவேணுமென்றே
பாடினன்விற்றபோது பண்புடன்வீரவாகு
ஓடினனங்குமுற்றே உம்பனைத்தேடுவேனே.

வசனம்.

காசிநாதா இவவிடத்தி லிராசனைக்காணேன் வீரவாகு வாங்கும்போது சுடலைகாக்கவேணுமென்றான் அங்கும்போய்தேடுவேன் விதியே

சத்தியகீர்த்தி-தரு-இ-ம்-செஞ்சுருட்டி-தாளப்-ரூபகம்.

தேடித்திரிகிறேன் என்னண்ணலைத் தேடித்திரிகிறேன்.

தேடித்திரிந்துமேவாடிச்சேரிபார்த்தே
நாடிச்சுடலையைஓடிநான்கண்டிட (தேடி)
காட்டைவிட்டேதனிபாட்டைதொட்டேசுடு
காட்டைக்காணவழிஒட்டமாய்க்காட்டுக்குள் (தேடி)
இங்குக்காணுததால்பொங்கிமனம்வாடி
எங்குந்தோணும்புதர்தங்கிநான்பார்த்துமே (தேடி)
பாலைவனம்விட்டுசாலைவழிதொட்டு
காலைவீசிருத்திரவாலையிடம்வந்து (தேடி)
மண்டபமாவியுங்குண்டுசமாதியுங்
கண்டுமேமயானங்கொண்டுமகிழ்வுடன் (தேடி)
நரிகள்கூவவுங்கரிகளோடவுங்
குரிகிப்பிணமதுஎரியுஞ்சுடர்கண்டே (தேடி)
இராஜனுமிங்கேயேவாசஞ்செய்வாரென்றே
நேசமாயெண்ணியே ஆசையுடனேடி (தேடி)

சத்தியகீர்த்தி—வசனம்.

ஆனல் உற்றுப்பார்க்கிறேன் சுடலையை சுற்றிப்பார்க்கிறேன்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஆரடாபயலேயிந்த யடாதவிவ்விருளில்வந்த
தாரடாசுடலைதன்னிற் றங்கியவாறுதன்னைக்
கூறடாவுந்தன்பேரைக் கொப்பெனப்பேசாவிட்டாற்
பாரடாதண்டத்தாலே பதைத்திடமாட்டுவேனே.

வசனம்.

ஆரடா நீ இந்நேரத்தில்வந்து பார்க்கிறவன் உன்பெயரென்ன சொல்லாவிடில் இந்ததண்டத்தாலே வீசியடிப்பேன் பாரடா.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

ஆரெனவென் றுகேட்ட வன்புள்ளகாவற்காரா
தீரனுமயோத்திமன்னன் நிஷ்டூடிகாணவேண்டி
வீரமாயாவல்கொண்டு விரும்பியேயிங் குவந்தேன்
வேறதுவொன்றுமில்லை வெறுத்தெனைக்கோபிக்காதே.

வசனம்.

அப்பாகாவற்காரா நான்வேறொன் றுக்கும்வந்தவனல்ல எனது அரசனாகிய அரிச்சந்திரமகாராசனைத் தேடிவந்தேன்கோபிக்கவேண்டாம் அப்பா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

உனக்கந்தவயோத்திமன்ன னுண்டிங்குவந்தானென்றே
கனத்துடனுரைத்தபேர்யார் கடிவுறுசுடலைதன்னில்
வனத்துடனவனிருக்கும் வாறுநீகண்டதேது
எனக்கதுதெரியநன்று மியம்பினாற்கோபிக்கேனே.

வசனம்.

அடா உனக்கவன் சுடலையிலிருப்பானென்று சொன்னவர்யார் அரசனிங்குவரக் காரணமென்ன தெரியச்சொன்னாற் கோபிக்கமாட்டேன் அப்பா.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

மாமுனிசடனுக்க க மன்னனுங்காசிவந்தே
காமுனிமாதைவிற்று கடன்தீர்க்கத்தாகன்கூலி
சாமியையன்றேகேட்கச் சத்தியகீர்த்தினானும்
சேமியைவிற்றேன்தோட்டி நிதிதந்துகொண்டான்காணேன்.

வசனம்.

அப்பா முனிகடன்தீர என்தாயை விற்றுக்கொடுத்தபின்தாகன் கூலிக்காக எங்களரசனான அரிச்சந்திரமகாராசனை விற்றபோதுதோட்டிவாங்கினனதினாலிங்கே தேடிக்கொண்டுவந்தேன் அப்பாகாவலனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யரிச்சந்திரன்நானேகண்டாய்
இப்படிநீயும்வாட யேற்குமோயெந்தன்பாலா
தப்பவேநமதுமேன்மை தவமுனிகுறிபாநின்றான்
கப்பியதுன்பமுன்னைக் கருதியேவந்திட்டாயோ.

வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி நான்தான் அரிச்சந்திரன் எனக்கிந்தகெதி வாய்த்தது நீயுந் துயரமனுபவிக்கவேண்டி வந்தாயோ சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

மன்னுநிமன்னர்போற்ற மகுடவர்த்தனர்கள்தாழ
தன்னதிசெங்கோலேந்தி தனிமையாய்நீதிசெய்ய
வன்னரேநீருமிந்த வழுவுற்றுமயானங்காக்க
பன்னவன்மகிழ்ந்திட்டானே பாவிநான்காணத்தானே.

வசனம்.

என்னாண்டவனே மன்னுதிமன்னர்சூழ வீற்றிருந்த என்சத்திய கோவே நீரிந்தச் சுடுகாடுகாப்பதுங் காலகெதியோ பாவியாகிய யானின்றுள்பணிந்தேன் சுவாமி.

சத்தியகீர்த்தி-தரு-இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி.

உன்னையுமிக்கெதிசெய்தானோ பாழும்பிரமன்
உன்னையுமிக்கெதிசெய்தானோ
கொன்னைமாமலரோன்காசி கோளனருளில்லையோ
குணமேமிக கனனே ஐயா (உன்)
தீரமும்பராக்ரமுநின் வீரமுங்குன்றியேசாமி
கோரமானநீச்சவேடங்
கொண்டையோதுய ருண்டையோஐயா (உன்)
மெய்யனேநீதிசெலுத்துங் கையனேமாதைவிற்றே
பையனைப்பிரிந்தாயென்ன
பாவியா கெட்டகோவியாஐயா (உன்)
தருமமும்பொய்த்ததோகால கருமமுமுற்றதோநாதா
பெருமையுங்குன்றிடலானாய்
பேதையாள்காதையா ஐயா (உன்)

சத்தியகீர்த்தி-விருத்தம்.

ஐயனேயெனதுகோவே யடியனும்விற்றபின்பு
துய்யனேவிலையாய்க்கொண்ட துரையின்பின்சென்றீரோ
பையவங்கேதுசெய்தீர் பறைச்சேரிவிட்டேயிங்கு
மெய்யனேசுடலைக்காக்க மேவியவாறைச்சொல்வீர்.

வசனம்.

சுவாமி நான் தங்களை விற்றபின்பு நடந்த சங்கதிகளையும் சுடுகாட்டுக்குவந்த காரணத்தையும் தெரியச்சொல்வீர் ஆண்டவனே.

அரிச்சந்திரன்-க்கண்ணிகள்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

என்னசொல்லுவேனப்பா வெதெனப்புகல்வேனாந்தா
னெனக்குவந்தகெதியை மந்திரிமந்திரி
பொன்னைக்கொடுத்தேகொண்ட புலையர்நானேயப்பா
புலால்சுமந்தவிதியை மந்திரிமந்திரி

சேரியைக்கட்டியபின்பு செம்மலுற்றநோயைப்போக்க
செங்கையினாற்கால்பிடித்தேன் மந்திரிமந்திரி
கூரியவார்வயல்புக்கி கோவுதின்னபுல்லறுத்துக்
கொண்டுமுடிதாங்கிவந்தேன் மந்திரிமந்திரி

பாவிநான்பசுக்கேயிட்டு பறைபனைப்போல்மாண்டகன்றை
பற்றிக்கொய்தேதோலுரித்தேன் மந்திரிமந்திரி
தாவியேநானதுதிட தசைவேறெலும்புவேறாய்
தறித்தாண்டைமுன்னேவைத்தேன் மந்திரிமந்திரி

கொண்டவர்மனமகிழ்ந்தே கொடுத்தனரிவ்வுடைதை
கோரிப்பறைவேடம்பூண்டேன் மந்திரிமந்திரி
தொண்டனேநீபிச்சுடலைத் தோட்டியாய்க்காவென்றுசொல்லி
துரையிங்கிருத்தகண்டேன் மந்திரிமந்திரி

காசியில்வாழ்விஸ்வநாதன் கருணையதாமென்றுயெண்ணி
களிப்புடனிருக்கலானேன் மந்திரிமந்திரி
மாசிலாமணியோனானசூனன்பதத்தைநாடி
மயானத்தைக்காக்கலானேன் மந்திரிமந்திரி

சத்தியகீர்த்தி-விருத்தம்.

நாதனேநீருமிந்த நவிலொணுத்துன்பங்கொள்ள
காதகப்பிரமனென்ன கருத்துடனெழுதினுனே
தோதகனுகக்காரித்துணைப்படமுனிவனுடே
பாதகனுஙகண்டேன் பாவியினுயிர்வைகேனே.

வசனம்.

சுவாமி உமக்கிந்தவிதியிட பாவிபிரமனும் சனியனும் முனியுமோவ்மூனுர்களோ இந்தக் கோரங்களைக்கேட்டு எனுயிர் வைப்பது சரியோ? ஆண்டவனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சிவனருளதனலல்லோ செல்வமுங்கண்டேனப்பா
சிவனருளதனலல்லோ செல்வமைப்பிரியலானேன்
சிவனருளதனலல்லோ செப்பருஞ்சுடலைவந்தேன்
சிவனருள்காக்குமென்றுன் சித்தத்தில்வைப்பாய்மந்திரி.

வசனம்.

அப்பா மந்திரி சிவனருளா லரசுசெய்தேம் பெண்டுபிள்ளையைவிட்டு அடிமையானேன் சுடுகாடும்காக்கலானேன் சிவனருளாலேயே காக்குமென் றறிவாய் மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

அப்பனேசோவேநீரு மடிமையாய்ச்சுடலைவந்தீர்
இப்படியுமையான்பார்க்க வெழுதிய விதியையொந்தேன்
செப்பரும்பசிதணிக்கச் செய்தவாறெனக்குத்தோற்ற
ஒப்பவேகனிவுகூர்ந்து உரைசெய்வீருரைசெய்வீரே.

வசனம்.

சுவாமி தங்களுடைய போஜனத்திற் கெந்தவாறு செய்துக்கொண்டீர் தெரியச்சொல்லும் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அன்னலாமடிமைகொண்டவையனுமனக்களித்தே
தின்னவேசவத்தின்வாய்க்கே தேசத்தோர்விரும்பித்தூவும்
வன்னமாமரிசிகொள்ள வாக்கதுவளித்தார்புத்திக்
கன்னமேயரிசிதோஷம் கழிக்கும் வாறுரைசெய்வாயே.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி என்னையடிமைகொண்டவர் வாய்க்கரிசி யைமாத்திரம் என்னை எடுத்துக்கொள்ளச்சொன்னார் அதின்தோஷம் நீக்கும் வகையைச் சொல்வாய் மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

நல்லதுயென்றன்கோவே நவிலுவேன்தோஷம்போக்க
வல்லவனழித்தாயந்த வாய்க்கிடுமரிசியெல்லாம்
புல்லரும்பசுவிற்கீய்ந்து புழுங்கிடுஞ்சாணந்தன்னை
வல்லவாகன்னையாட்டி வளமுடனருந்தலாமே.

வசனம்.

சுவாமி வாய்க்கரிசியை பசுவுக்கிட்டு அதின் சாணத்தைக் கழு விப்போக்கி அமுதைப் புசிக்கலாம் வேந்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

மெத்தசந்தோஷம் அப்படிசெய்யலாமப்பா மந்திரி.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்வாறிருக்க சந்திரமதியம்மனைப் பார்க்க காலகண்டிவருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

காலகண்டி-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கும்புகழ்நிறைந்தே அங்கங்குருவாய்நிற்கும்
மங்கைசுவாலைவந்தாள் காலகண்டியாய்
மங்கைசுவாலைவந்தாள்

அநுபல்லவி.

திங்களொளியோவென எங்குளோருந்திகைக்க (ம)

சரணங்கள்.

கருத்தஅளகமதை திருத்திக்கோதிமுடித்தே
கணவனுமயங்களிக்கக் கண்ணிற்குமையிழுத்தே
பெருத்ததனையுங்குஜஞ் சிறுத்தயிடையுங்குணம்
பேணியுடலெங்கும் பூணிக்கந்தமணம்

சந்திரவதியையும் தேவதாசனையும் காலகண்டி காணுகிற பாகம்.



சந்திரவதி. தேவதாசன். காலகண்டன். காலகண்டி.

பிடித்து கையினலீலை
மடித்து வெகுவிரைவாய்
நொடித்து காலகண்டனைப்
படித்துயாவரு மேற்றும்
பெருமைமீறைப்பணித்து அருமைத்திலர் தந்திட்டி
வறுமையுற்றமாதினை பொருமையகற்றிநாட்டி

காலகண்டி-வசனம்.

ஏதுகாணும் இன்னேர' வரையிலும் நீரெங்கனம் போயிருந்தீர் இதென்ன மாடுங்கண்ணுமாக இழுத்துவந்தீகாணு மையரே.

காலகண்டன்-வசனம்.

அன்னுடி சேஷி நேக்கிவளும் நோக்கந்தப்பயலும் வேலைசெய்ய கொண்டுவந்தேண்டி.

காலகண்டி-வசனம்.

நேக்கு ஏதுக்குங்காணு மிந்தப்பயல் நோக்கேனே அவள் ஏது காணு விசித்திரவார்த்தை சொல்லுகிறீர் வெறுமை கிடைத்தார்களோ ஒதுகைமயரே,

காலகண்டன்-வசனம்.

அன்னுடி அன்னு கொஞ்சம்போது காசுகொடுத்து வாங்கிவந்தேண்டி நம்ம ஆத்துவேலையெல்லாம் சிராய் செய்வார்களடி.

சந்திரமதி-விருத்தம்.

தாயரைப்போன்ற தாயேயுன்பாதத்திற்கே
நேசமாய்சரணஞ்செய்தோம் நீதயைபுரிவாயிஷ்ட
காமியம்விடுத்துக்கால கதிபதாலடிமையானேம்
தாமதம்புரியோமுஞ்சொல் தட்டிடப்பணிவோந்தாயே.

வசனம்.

சரணஞ்சரணமம்மா காலகண்டித்தாயே நீரேன் எங்களுக்காக ஐயர்பேரில் கோபித்துக்கொள்ளுகிறீர்கள் நாங்களே அடிமைப்பட்டு வந்தபடியினலே தாங்கள் காலாலிட்டவேலையை நாங்கள் தலையாலே நடந்துசெய்கிறோம் எங்களுக்குண்டான வேலைகளைச் சொல்லுமம்மா காலகண்டித்தாயே.

காலகண்டி-விருத்தம்.

ஐயரேசுவாமிக்கா யருந்தவத்தனிலுயர்ந்த
துய்யரேயிவளின்காந்தி தோனுதேபரிதிபோலித்
தையலோ ஆதிலட்சுமி தனையனேதேசமாள்வான்
உய்யவென்வயாக்வேலேயுமைக்கவும்வருமோசெல்வீர்.

வசனம்.

ஓய் ஐயரே இவளோ மெத்த அழகியாயிருக்கிறுள் இவள் பிள்ளையைப்பார்த்தால் இராஜமானுயிருக்கிறுன் இவாள் யேலேசெய்வார்களா நாதா.

காலகண்டன்-வசனம்.

அடிசேஷி நீயிடும்படியான வேலைகளைச் செய்வார்களடி.

காலகண்டி-விருத்தம்.

ஐயரேயிவர்களுக்கா வடிமையாய்வந்தவாறுந்
துய்யவேவாழ்ந்தவூருந் தோஷங்கள்விளைந்தகூறும்
மெய்யரேயெனக்குத்தோன்ற பேசி—வேண்டுமூர்த்தன்
றையவானுன்களித்தேதருக்தொழிலியம்புவேனே.

வசனம்.

ஓய் ஐயரே இவாளடிமைப்பட்ட சங்கதிகளைத் தெரியச்சொல்லும் சுவாமி.

காலகண்டன்-இரட்டை-ஆசிரியவிருத்தம்.

மாதேகேளிந்திரனு முலகிற்சத்திய
மன்னனுண்டோவெனக்கேட்க வதிட்டமூர்த்தி
சூதேதுக்தெரியாதோன் பொய்பேசாதோன்
சொன்னமொழிதவருதோ னெனதசிடன்
தாதேகேளயோத்திநக ரான்வோனென்ன
தடுத்துரைத்தேகவுசிகனும் பந்தியமிட்டப்
போதேவவ்வரசன்பாற் பொன்யாசித்தே
புகழ்பெறவேயக்கிருத்தி விலங்கையேவ
வாதேதம்புரியாதோன் மடிகநீச்ச
வனித்தைகளைத்தானனுப்பி யணையவென்றுன்

கோதேகேளவன் மறுக்க யரசைக்கொண்டான்
கொற்றவனை வூர்விடுத்தப் புரமேசெய்து
ஈதேநற்றருணமெனச் சுக்ரன்றன்னை
யேவினன்பணர்தண்டத் தாகனுக்கி
தீதேதுமறியாதோ னிவனைவிற்றே
திகழ்பெருமுனிகடனைத் தீர்த்திட்டானே.

வசனம்.

கேளாய் பெண்ணே தேவேந்திரன் சபையில் நாங்களிருக்குங் காலை இவ்வுலகில் சத்யனுண்டோவென வதிஷ்டன் தன்சீடனை அரிச்சந்திர னொருவனேயென்றான் கதிர்குலரிஷியாகிய கவுசிகன் கனிந்துரைத்து யவனைப் பொய்யனுக்கக்கருதி யாகத்திற்குப் பொன்னிரந்து அவன்பாலிருந்தி மிருகத்தால் பயிரையழித்தான் அதையரசன் வதைக்க நீச்சபாதவையேவினன் அவளரசனை மருவவாவெனக் கோறவே அரசன்மறுக்க முனிகோபித்து அவனரசைக் கவர்ந்து பரதேசியாக்கி முன்தானம்வாங்கி அவனிடம் வைத்தபொருளை கடனாகச்சுமத்தி சுக்கிரனைத் தாகனுபமைத்து இக்கனுப்ப மன்னனை அதிகதொந்தரவுசெய்ததால் இவனைவிற்று முனிவன்கடனைத் தீர்த்தானென்றறிவாய் மாதே.

காலகண்டி-விருத்தம்.

சொன்னதைதெரிந்தேனிந்த சுந்தரவதனன்மைந்தன்
என்னகாணென்னுள்பட்டு மிருப்பார்களடிமையாகி
முன்னகர்த்தனையேயாள முனைவரோயிலையோநீரும்
பன்னமேவேலும்பிரான பதமானசுவாமிபோற்றி.

வசனம்.

கேளும் என்பிராணநாதா இவாளிந்தவடிமைநீங்கி மறுபடியும் தங்கள் தேசஞ்சேர்வார்களோ இல்லையோதெரியச்சொல்லுஞ்சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

இன்னமுங்கொடியதான மிட்சைகள்கௌசிகன்றன்
வன்மையாயுரியச்சொன்ன வாறதுபோலநாமும்
அன்லமேடத்தமேவேண்டு யனுபவத்திவர்கள்பின்னே
தன்னுலகாண்டுமெத்த தகைமையாய்வாழ்வர்கண்டாய்.

வ்சனம்.

கேளாய் சேஷி விஸ்வாமித்திரன் நேக்கு சொன்னபடி கொஞ் சம்பேர்தா யிம்சைகள் தரவேண்டும் இவாளனுபவித்துபின்பு தங்கள தேசம்போய் சுகமாக வாழ்வார்களடி.

காலகண்டி-வசனம்.

அப்படியா ஓய் ஐயரே இவளாலென்ன வேலை நடக்குந் தெரியச் சொல்லுஞ் சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

வீட்டினைவிளக்கிச்சாணம் விதமுடன்தெளித்துமுட்டை
தாட்டியாய்த்தட்டிநெல்லை தங்காமற்குத்திநாளும்
மீட்டிடுங்கூழைவுண்டு யேவியேயிருப்பான்பையன்
மாட்டையுமேய்ப்பான்பெண்ணே மனதொத்துகைக்கொள்வாயே.

வசனம்.

அன்னுடிசேஷி இவள்நம்ப ஆத்திலுள்ள வேலைகளெல்லாம் செய்வாள் முட்டைதட்டுவள் முத்தம்பெருக்குவள் நெல்லுகுத்து வள் நீயிடுங்கூழைச் சாப்பிட்டுக்கொண்டிருப்பள் இந்தப்பயல் மாடு கன்னுகளை மேய்ப்பானடி சேஷி.

காலகண்டி-வசனம்.

நல்லது இவள்பேரென்ன காணும்.

காலகண்டன்-வசனம்.

இவள்பெயர் சந்திரவதி.

காலகண்டி-வசனம்.

ஆம் இவள்பேர் நேக்குத்தெரிந்தது இந்தப்பயல் பேரென்ன.

காலகண்டன்-வசனம்.

இப்பயல்பேர் நம்முடைய தாசன்.

காலகண்டி-விருத்தம்.

தேன்மொழிமாதேகேளுந் தெரிந்திடச்சொல்வேன்கேளாய்
நாளுனக்கிடுமோர்வேலை நயந்துநீபுரியவேண்டும்
வீண்பொழுதுபோக்காதே வெகுநேரந்தூங்கலாகா
தாளிடுகூழைபுண்டு தலைக்கடையுறங்குவாயே.

வசனம்.

அடிசந்தி நானென்னவேலை சொல்லுகிறேனோ அதைக் காலதாமசமில்லாமற் செய்யவேண்டியது பொழுதுவிடியுமுன் எழுந்திருக்கவேண்டியது நான் சாதிக்கும்படியான கூழையுண்டு தலைக்கடையில் காவலாய் படுத்திருக்கவேண்டியது.

சந்திரவதி-வசனம்.

மகாபாக்கியர்தாயே தாங்களிடும்படியான வேலைகளை முடிகுனிந்து வணக்கத்துடனடியாள்செய்வேன் விவரமாய்ச் சொல்லவேணும் என்னம்மணி.

காலகண்டி-விருத்தம்.

விடியுமுன்னெழுந்தேமுத்தம் விளக்கியேசாணமிட்டு
அடிமையேகோலந்தீட்டி யழுக்குதிபாத்ரமெல்லாம்
படிமிசைதான் துலக்கி பசுவிடுசாணந்தன்னை
நொடியினுள்வாரித்தட்டி நுணிதமாய்நெல்லைக்குத்தி
கடியுமிதவிடும்போக்கி கல்லையும்விலக்கியப்பாற்
குடித்திட்டபசுக்களுக்கே கோணுமல்நீருங்கொட்டு
வடித்திடுங்கூழையுண்டு வதனமுந்தளர்ந்திடாமல்
முடித்தபேவிழித்துநீதான் தோகையேயிருப்பாய்தானே.

வசனம்.

அடிசந்தி விடியுமுன்னெழுந்து முத்தம்பெருக்கி சாணந்தெளித்துக் கோலமிட்டு பட்டி சாணமெல்லாம்வாரி பிசைந்து முட்டைதட்டி மாட்டுத்தொட்டிகள் நிறைய ஜலங்கொட்டி நான் சாதிக்கும்படியான கூழையுண்டு தினமொன்றுக்கு பதிங்கல நெல்லைக்குத்தி உமிவேறு தவிடுவேறு கல்வேறுக்கி அழுதுமனை முறியாதபடிக்கும் அளவுகுறையாதபடிக்கு மொப்பித்து தலைக்கடையில் விழித்துக்கொண்டேயுறங்கவேண்டியது சந்தி.

சந்திரமதி-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே தாங்கள் காலாலிடும்வேலைகளை என் சிரசால் செய்துக்கொண்டு தாங்கள்வார்க்கும் கூழை பஞ்சாமிர்தமாக உண்டு தங்கள் சித்தத்திற்கு யொத்த சந்தோஷமாகும்படி நடந்துக் கொள்ளுகிறேன் என்னம்மணி.

சந்திரவதி வேலைசெய்கின்ற பாகம்.



காலகண்டன். சந்திரவதி. தேவதாசன். காலகண்டி.

காலகண்டி-வசனம்.

சந்தோஷம் சந்தோஷமடி சந்திரமதி நம்முடைய ஆத்துக்குப் போவோம் வாடி.

காலகண்டன்-வசனம்.

அடாய் கிச்சான் என்முன்னே நடடா நம்முடைய ஆத்துக்குப் போகும் வழிகாட்டடா.

தேவதாசன்-வசனம்.

சுவாமி அடியேனுக்கு வழிதெரியாது.

காலகண்டன்-வசனம்.

இந்தபாட்டை வழியைப்பற்றி நடடாபயலே.

தேவதாசன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே நடக்கிறேன் சுவாமி.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே இப்படியாகக் காலகண்டையர் சந்திரவதியம்மனையும் தேவதாசனையும் வீட்டுக்கழைத்துக்கொண்டு போனபிறகு வேலையிடுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

காலகண்டி-வசனம்.

அடிசந்தி எதோபார்ப்போம் மூத்தத்துக்கெல்லாஞ் சாணந்தெளியடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே தெளிக்கிறேன் தாயே.

சந்திரமதி-விருத்தம.

என்னதான்கொடுமைஐயோ யியற்றினேன்நானேபாவி
மன்னரின்பாதசேர்வை மமைத்ததிற்குறைகள்யாதும்
பன்னகாபுரிந்நிட்டேனே பதைக்கவென்னுடல்புகூச
இன்னகமையன்வீட்டி லிடச்சாணம்விட்டாய்நாதா.

வசனம்.

ஓ-காசிநாதா நானென்னபாதகஞ்செய்தேனோ என்புருஷர்பணிவிடையில் வஞ்சுறைபுரிந்தேனோ இந்த வேதியர்வீட்டில் சாணந்தெளிக்கவிட்டாய் சிவமே.

சந்திரவதிசாணந்தெளிக்கிற

தரு-இ-ம்-கெண்டா-அடதாளம்.

ஜென்மாந்திரத்திற்செய்தசதியோசிவனே கௌசிகன்புரிமதியோ
இன்ஞளிற்சாணமிடகெதியோ லீசனருள்வாரதோவிதியோ
மண்ணாண்டவனரிச்சந்திரன்பாங்கி யமர்ந்திருந்தேன்கரத்திலோங்கி
யெண்ணுதுமெண்ணினேன்தேங்கி யிவ்விதசாணங்கையிற்றாங்கி
ஞளனுக்குப்புனுகுபூசுங்கை அருமையாங்களபங்கவவீசிமெய்
தாளுமப்பணத்திகளோங்கிச்செய் தருந்தொழிற்புரிபவிட்டாய்நீ
கெட்டகவுலுநாற்றம்வீசுதே கிட்டிமேனியுமுடர்கூசுதே
பட்டணத்துஜனங்கள்பேசுதே பாதகியென்றெனேயேசுதே
அள்ளிதெளிந்தவிரல்நோகுதே அரங்கைபுங்கைதேய்ந்துபோகுதே
துள்ளியெனதுமனம்வேகுதே துர்க்கந்தத்தால்மயக்கமாகுதே
காற்றுபனியும்என்மேற்றாக்குதே கணவர்வைத்தசுகத்தைநோக்குதே
ஏற்றுக்கொள்வாரைத்தேடலாக்குதே யிவைதபெருங்கூற்றாய்விதிபார்க்குதே
என்னையன்ஞளிற்கைதொட்டு பேவற்றொழில்புரியவிட்டு
தன்னைபிரிந்தார்துயருற்று தான்வருவதுமெப்போமற்று
கூசிவிஸ்வேசாநீயேகதி கவுசிகன்புரிகிறுன்கதி
மாசிலாதரிச்சந்திரவதி மகிழ்ந்திருக்கவேயருள்வதி

சந்திரவதி வசனம்.

அம்பா சாணந்தெளித்தாச்சுது வேறுவேலைசொல்லுந்தாயே.

காலகண்டி வசனம்.

ஏதடி சந்றி கட்டியுமுட்டையுமாய் தெளித்திருக்கிறாய் இருக்கட்டும் இந்தத்துடப்பத்தாலே முத்தம்பெருக்கடி பார்ப்போம்.

சந்திரவதி வசனம்.

அப்படியே பெருக்கிறேனம்மணி.

சந்திரவதி-தரு-இ-ம்-ஆதி.

பல்லவி.

விதிவாயிதுபார்செய்திட்டசதியோ ஐயையோபாழும் (விதி)

அநுபல்லவி.

மதியுடனயோத்தி மானிலம்வாழ்ந்த
சதிபெனேத்துன்பஞ் சார்ந்திடவிட்டாய்

சரணங்கள்.

சந்தனம்புனுகுதனைபூசி என்
சரசனரிச்சந்திர துரையுடன்கூட
பந்தனப்பாடலுமொழிபேசி பல
பாங்கிகளென் துயற் ருங்கிடயிருபுறங்
கந்தமலர்கள்கையாற்கோசி அதிற்
கனவருத்தமெந்தன் கரங்களுற்றதென
வெந்தன் மனுளரேனேயேசி அடியென்கண்ணே
இருத்திடுகரமதை விரித்துபன்னீரினின்
றெறிந்திடும்வலியென உரைத்ததும் போச்சே (விதி)

மாறுகையினிற்றொடலாச்சு அதி
மகிழ்வுறயந்தண ஞிகழுறுபட்டியை
நேறுடன்விளக்கவுமாச்சேயென்
நெஞ்சுநோவவிரலஞ்சும்வலித்திட
சேரும்பாதத்திற்ருக்கலாச்சு அம்மா
செப்பியபடியே ஒப்பியேநானும்
திருமிழ்காவாய்கூட்டலாச்சே-பாழுந்தெய்வமே
நிலைகொளாவாசலை தலைப்பேகறிட
மலமும்நீரொழுகியநிலமதைவிளக்க (விதி)

முத்தம்பெருக்கலானேனையா இதோ
மூக்குநேர்வடிந்ததும் நாக்குநீருமிழ்ந்தும்
மெத்தத்துடைக்கலானேன்மெய்யா இந்த
மிணுக்கெறிமாடமுமூால்குழிகூடமும்
கட்டத்துடைப்பமேந்தியையா நான்
கால்களும்சோவிடசாளரமுழுமையுன்
பற்றாத்துலக்கலானேன் அய்யா-ஓசிவமே
பாதகிநானென்ன காதகஞ்செய்தேனோ
சோதனைசெய்கிறேன்வேதனைாகிறேன் (விதி)

வீதிபெருக்கவிட்டாய்நீயேநாதா
வெம்புதுயென்னுடல்நம்புதுஉன்னையே
மாதினைக்காக்கவருவாயேநான்
மன்னவன்வாக்கிற்குபின்னங்கள்செய்தேனோ
பாதிரோழிகூட்டவிட்டாயே இங்கு
பார்த்தவரெந்தனைசாற்றிடமிழியேன்
ஒதிச்செல்லவுமகிழ்ந்தாயே ஓர்சிநாதா
வுனபதம்நம்பினேனென்மணவாளருக்
துன்மையுறுதிடன்மைபுரிகுவாயே.

சந்திரவதி வசனம்.

அம்மா தங்களுத்திரவின்படி முத்தம்பட்டிமுதலான துவிளக்கித்
தீர்ந்ததுதாயே.

காலகண்டி வசனம்.

சந்தோஷம் தண்டுமேக ணுமல் கோலமிடுவாய்சந்தி

சந்திரமதி வசனம்.

மகாபாக்கிய மப்படியே யிடுகிறேன் தாயே.

சந்திரவதி-தரு-இ-ம்-தர்பார்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கோலமிடுகிறேன் விதியே-கோலமிடுகிறேன்

அநுபல்லவி.

நீலவிழிக்தரசி நேர்மையைக்கொண்டு
காலகண்டன்தேவி கருதியவாற்கண்டு (கோல)

சரணங்கள்.

நின்றுகுனிந்துமே கால்நேரகர்ந்துமே
கெண்டச்சதைநோவ கிளரிடைமேவ
தண்டுகோணுமற் ருன்தீட்டியேபால (கோ)

முத்கந்தன்னிலுபலர் மொக்கைப்பார்க்கிலும்
சித்தம்வருந்திட சேரக்கொடியோட்டி
உத்தமியம்மணு மொப்பமனம்நாட்டி (கோ)

தெருவில்வந்தேனேதோழி தீர்த்தலானேனே
விரல்கௌரிய வேலையைச்சொரிய
பிரமனெழுதிய பெரும்விதிக்குரிய(கோ)

சந்திரமதி-வசனம்.

அம்மா அடியாளுந் தங்களுத்திரவின்படியே கோலந்தீட்டினேன் தாயே.

அடிசந்தி பசுத்தொட்டியிலிட்டிருக்குஞ் சாணத்தை செத்தையுமுமியுங்கலந்து விளாங்காய்ப் பிரமாணமுருட்டி புழக்கடைகுட்டைச்சுவற்றில் கோணுதபடிக்கு முட்டைத்தட்டுவாயடி சந்தி.

சந்திரவதி-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே தட்டுகிறேனம்மணி.

சந்திரவதி-கவி.

பலபலசாணமும் பதருடன்செத்தையும்
நலமுடனதிண்டவும் நாதன்றன்செயலோ.

வசனம்.

ஓ-காசிநாதா என்கையினுல் பல சாணந்தொட்டு முட்டைதட்ட நீயிட்டவிதியோ பரமசிவமே.

சந்திரவதி-கண்ணிகள்-இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

சாணமுருட்டி முட்டைதட்டலாச்சே-முன்
சம்பத்துஞ்சுகம் பெருமையுமின்றேபோச்சே
நானிலத்தினி லென்னைப்போலொரு
நங்கையுண்டோமனம் பொங்குதேபாரு(சாண)

எருமைபிட்டபலமும் சேர்த்தேனே-இதோ
யிணைப்பசுவிட்ட சாணங்குவித்தேனே
சிறுமையிப்படி யருந்திரேருண்டோ
செம்மலாஞ்சந்திரரை நம்பினதைக்கொண்டே(சாண)

கன்றுகழித்ததங் கைபால்வாரினேன்-சாம்பசிவா
கடாளருவி நீநந்தூரினேன்
செண்டுமல்லிகையை கொண்டுநாளுடியே
செழித்தகாமித்தா வமைக்குநாளுடியே(சாண)

சாணிக்கூடையிடையிற் றுங்கியே-தலைவிநிவெண்ணி
சார்ந்துபாழுஞ்சுவற்றி லோங்கியே
கோணிடாமலே நாணிபோலவே
கொண்டவள்மெச்சிட நின்றுநான் சாலவே(சாண)

நெல்லின்பதரையு மள்ளலானனே-சிவசங்கரனே
நோய்க்கூளமுஞ் சேர்க்கலானனே
சொல்லியவாறே நெல்லிக்கனிபோல
சுருக்காயுருட்டியே பெருக்காமற்சால(சாண)

எழுந்துவாடா யழுகாதேபாலா-என்கண்மணியே
யிருசிகண்டா லடிப்பானேகோலால்
குழந்தாயேண்டா விழுந்தாய்சதறியே
கூவிடாதேயப்பா தாவுவாள் அறியே(சாண)

கணவனேதெய்வ மென்றிருந்தேனே-காசிநாதா
காலமுமவர்பாதம் பணிந்தேனே
குணமிலாவையன் கொடுமையிற்பட்டு
கூப்பிட்டேன்மன்னவா காப்பாற்றிடக்கிட்டு(சாண)

சந்திரமதி-வசனம்.

அம்மா தங்களாக்கினையின்படி மூட்டைதட்டியாச்சு இன்னமடியாளுக்கிடும் வேலைகளிருந்தால் உத்திரவுசெய்யும் அம்மணி.

காலகண்டி-வசனம்.

அடிசந்தி பசுமாட்டுகளுக்குக் குடிக்க ஜலங்கொண்டு தொட்டிகளில் நிறையக் கொட்டிவருவாயடி.

சந்திரமதி-வசனம்.

நல்லதம்மணி அப்படியே தொட்டிகளில் தண்ணீர்நிறப்பி வருகிறேன்.

சந்திரமதி-கண்ணிகள்-இ-ம்-சுருட்டி-அடதாளம்.

தண்ணீர்க்குடமென் றலைமேலிடவுந்
ததியோவபனிட்ட விதியோநானறிகிலேன்(தண்)
மண்ணின்மீதமெய் மன்னவன்தேவியாய்
மகிழ்ந்ததுமென்றன்சீ ரிகழ்ந்ததுமறிகிலேன்(தண்)

உச்சியெறிந்திட உடலும்வருந்திட
உற்றதுமில்விதி பெற்றதுமறிகிலேன் (தண்)
மதிதயன்செய்ததும் மாதவத்தால்வந்ததும்
மறைபவனடிமையாய் வரைந்ததுமறிகிலேன (தண்)
நெத்திநரம்புட பின்னரம்பிழுத்திட
நிமைக்குள்ளேயித்துய ரமைத்தவாறறிகிலேன் (தண்)
பிடரிவலித்திட பின்னரம்பிழுத்திட
பெற்றவாயித்துன்ப முற்றவாறறிகிலேன் (தண்)
பத்தாவின்பணியிட பாப்பானடிதொட
பாதகமுன்செய்த காதகந்தெரியேனான் (தண்)

சந்திரமதி-வசனம்.

அம்மா பசுத்தொட்டிகளிளெல்லாம் தண்ணீர் நிறப்பினேன் வேறுவேலே திருவாய்மலர்ந்தருளினால செய்கின்றேன் தாயே.

காலகண்டி-வசனம்.

அடிசந்தி இவிடமிருக்கிற நெல்லு பதிங்கலமிருக்கிறது கொஞ் சந்தா னிதைகளைக்குத்தி உமிவேறு தவிடுவேறு கல்வேறுசெய்து அரிசிகள் நொய்யாகாமற்படிக்குச்சரியாய் கொண்டுவருவாயடி சந்தி.

சந்திரபதி-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே குத்திக்கொண்டு வருகிறேனம்மணி.

சந்திரவதி-கண்ணிகள்-இ-ம்-அபுரூபம்-தாளம்-ரூபகம்.

காசிவிஸ்வநாதரின் கருணைசெயத்தீதா
மாசிலாபொற்பாதாஉன் மலரடியைப்போதாதா
மன்னன்கைகொட்டாரென்னை பெருமகிழ்ச்சிகொண்டேன்முன்னை
அன்னவப்பேசுடேன்றேசெவன்னை ஐயோயழைத்தவரும்பின்னை
சந்தனார்பூசிடுங்கையாலென்னை சாணமிடவிட்டாய்பொய்யா
உந்தனருளிதோதுய்யா நாலுலகுந்தாங்கவுமெய்யா
பஞ்சணைமீதுற்றமேனியிதோ பதைக்கவேவதையைக்கோணி
நெஞ்சங்கலங்கிடநாணியிந்த நெல்லைக்குத்தவைத்தாய்பூணி
காதாமுன்னானுலேயிந்த கருமம்வந்ததென்மேலே
பாதகஞ்செய்தேன்முன்னாலேயினி பாராயருட்கண்ணினாலே
தோழிகள்தாங்கிடுங்கையு-ஐயை துவளுதுடலாவிடுமெய்யும்
தாழிலாக்கருணைசெய்யுஞ்சாமி தயாபராமனம்வையும்

சல்லடைமுறத்தைத்தாங்கிகொல் சார்புடைக்கவிரல்வீங்கி
வல்லவாகோகுதேவேரன்கிஅருள் வையுந்துயரோடநீங்கி
ஆட்சிவிசாலியென்தாயேஉன் அருளிப்போகாட்டநீயே
காட்சிகண்திரந்துவாயேநின் கழலடிக்குநான்சேயே
எந்தனைகைதொட்டமன்று எங்ஙனேயித்தொழில்செய்விட்டதென்று
உந்தனையிகழ்ச்சேனேமுன்னுலெனக் குறைசெய்யவாருங்கன்று
எனழுகிருயப்பாமுன எழுநினவிதிதப்பா
தான்வருந்தலேனிப்பாசிவங் தவக்கிதுமனமொப்பா

சந்திரமதி-விருத்தம்.

காலகண்டேயர்மேவுங் கற்புளமாதேயம்மா
காலவேர்நீர்கொடுத்த கம்மிலாத்தான்யந்தன்னை
மேலறிவுமிலைநன்ருய் மீட்டியேதவிடுங்கல்லு
ஞாலமேலரிசிசெய்தேன் நயப்புடன்கைக்கொள்வாயே.

வசனம்.

கேளுமம்மா தாங்கள் கொடுத்த நெல்லைக்குத்தி உமிவேறு தவிடுவேறு கல்வேருகப் பிரித்து அரிசிசெய்தேனம்மணி.

காலகண்டி-வசனம்.

அப்படியா எதோபார்க்கலாம் அரிசிகளை நொய்களாக்கி பாழாக்கினியோ கொஞ்சமெடுத்துக் காட்டுவாயடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

அம்மணி கொஞ்சமும் நொய்யில்லாமல் குத்தியிருக்கிறேன் பாருந்தாயே.

காலகண்டி-வசனம்.

இருக்கட்டுமெடி சந்தி நோக்கு கொட்டனேபோது கூழ் சாதிக்கிறேன் வாங்கிக்கொள்ளடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

அம்மா கூழானுலுந் தேவாமிர்தமாய் புசிக்கிறேன் தாயே.

காலகண்டி-வசனம்.

அன்றுடிசேஷி இந்தப்பயலுக்கு மேதாகிலும் வேலையிட்டடி பார்ப்போம்.

காலகண்டி-வசனம்.

ஓ அய்யரே நேக்குயிவள்போரும் இக்தப்பயலுக்கு நீரே வேலை யிடுங்கானும்.

காலகண்டன்-வசனம்.

அப்படியானால் சந்தோஷம் அடா நம்மிடதாசா இங்குவாடா பயலே.

தேவதாசன்-வசனம்.

சுவாமி இதோவந்தேன்

காலகண்டன்-வசனம்.

அடாய் தாசா நீ நம்முடைய யடிமையன்றோ ஆனதாலிந்தப்பசுக்களையுங் கன்றுகளையும் மேய்த்துக்கொண்டு வாடாய்.

தேவதாசன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே மேய்த்துக்கொண்டு வருகிறேன் சுவாமி.

தேவதாசன்-விருத்தம்.

ஐயையோயிதுதானென்ன யடாத தந்தார்காலந்தானோ
பொய்யுரைதனக்கேயஞ்சிப் புவிதனைத்தாரைவார்த்தோந்
தெய்வமும்பொய்த்ததோதான் திரிபுராநாங்களென்ன
வையகமதனிற்பாவம் வகுத்தமோகாசிநாதா.

வசனம்.

ஐயையோ காசிநாதா இதுவுமுன் திருக்கூத்தோ அல்லது நாங்கள்செய்த பாவமோ என்னை மாடுமேய்க்கவிட்டாய் பரமசிவமே.

தேவதாசன்-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

மாடுமேய்க்கவோ மன்னன்தவத்திலே
மகனாய்ப்பிறந்ததும் வீதி-வீதி(மாடு)
ஆடும்பாம்பினை அணிந்தநாதனே
காடுகல்முள்ளிலுஞ் சரி-சரி(மாடு)
மன்னருஞ்சூழ மமர்ந்திருக்காமல்
கன்றும்பசும்மேய்க்க கதி-கதி(மாடு)
காற்றும்வீசுதே கனலுமின்சுதே
ஓட்டிமடக்கி யினி-யினி(மாடு)
தாகமீறுதே தனுவும்வாடுதே
வேகம்போக்குவாய் சனி-சனி(மாடு)

தேவதாசன் வேலைசெய்கின்ற பாகம்.



கலகண்டன்.



தேவதாசன்.



காடு.

கனையுமீறுதே கால்கணேகுதே
பலழபதமிடான் பாவி-பாவி(மாடு)
கோவினம்நீங்கள் கூடிவாருங்கள்
போவோமயனே புகழ்-புகழ்(மாடு)

தேவதாசன்-வசனம்.

சுவாமி அடியேன் பசுக்கூட்டத்தை மேய்த்துக்கொண்டு வந்தேன் எனதாண்டவனே.

காலகண்டன்-வசனம்.

நல்லது பிள்ளாய் நமது மடிவேட்டிகளையெல்லாம் ஊருக்கப்புறமிருக்குங் குளத்திற்குச்சென்று நன்றாய்த் தோய்த்துக்கொண்டு சீக்கிரம் வருவாயடா பயலே.

தேவதாசன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே தப்பிக்கொண்டு வருகிறேன்சுவாமி.

தேவதாசன்-தரு-இ-ம-தர்பார்-ஏகதாளம்.

பல்லவி.

வேட்டிதப்புறேன் இதோவேதியனும் சாதித்தோர் (வே)

அநுபல்லவி.

விமலாயுன்றன்செயலாயிது கமலாவந்துவிமலாவருள் (வே)

சரணங்கள்.

குறுக்கிற்கொய்துமே|யிதோ
அறுக்கமயலுமே
சுறுக்கதாகவே வருகவென்றான்
சூராயதி-வீராகதி-தாராபுனி-பாராயருள் (வே)

செட்டிற்சேர்த்துமே கை
பற்றித்தோய்த்துமே
நில்லாமலேநா செல்லாமபோக
நேசாயினி-பீசாபர-வாசாயடி-தாசாயருள் (வே)

குளத்தைக்கண்டுமே கால
ஜலத்தில் நின்றுமே
கொண்டேகுளி ருண்டேங்கிட
கோவாசதி-லோலாபணி-லீலாயெம-காலாயருள் (வே)

மூலைசேர்த்துமே கரை
  நூலைக்காத்துமே
முதுங்காதிட பிதுராமலே
  முத்தாஞான-சித்தாபர-லித்தாவென-தத்தாபருள் (வே)
மடித்துக்கொட்டியே நீர்
  வடித்துத் தட்டியே
மாராமலும் நோய்க்கரை
  மண்ணூழக்-கண்ணூவென-தண்ணூஜக-வண்ணூபருள் (வே)
உடல்வருந்தவுங் கை
  துடைபருந்தவும்
ஓடோடியே நாடேவிட
  உம்பர்சிவ-சப்பரபுள-கம்பாததி-எம்பாலருள் (வே)

தேவதாசன்-வசனம்.

சுவாமி தங்களுத்தரவின்படி வேட்டிகளைச் சுத்தமாய்த் தப்பிக் கொண்டு வந்தேன் சுவாமி.

காலகண்டன்-வசனம்.

அடாய் தாசா கால்களுக்கு மெத்தநோகிறது எனக்குமெத்த சொகுசாய் நித்திரைவரும்படி கால்பிடிப்பாயடா பயலே.

தேவதாசன்-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே | தங்கள் காலைப்பிடிக்கின்றேன் சுவாமி.

தேவதாசன்-தரு-இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கால்பிடிக்கிறேன் ஐயனேயுன் கால்பிடிக்கிறேன்

அநுபல்லவி.

பால்மறந்திடாப் பாலனென்றறிந்தும்
பட்டியேதிட்டியே சொன்னூற்போற் (கா)

சரணங்கள்

செங்கோற்றுங்கிடு மென்கரங்கள்
இங்கேநோக்கிடு
அங்கம்வியர்த்திட யாவிதளர்ந்திட
ஆடியே-நாடியே-வாடியே-சொன்னூற்போற் (கா)

ஆதியோசித்தே விசாரணை
நீதிநேசித்தே
தீதிலாமொழி தேறவெழுகின்ற
செங்கையா-லிங்கையே-லொக்கியே-சொன்னாற்போற் (கா)
எண்டிசைபெற்றவேடராசனுக்
கண்டவர்போற்றவே
அண்டியபேர்களை அன்புடன்காத்திடும்
அங்கையாற்-சங்கையா-லெங்கையாற்-சொன்னாற்போற் (கா)

பொதுவிருத்தம்.

மாதுசந்திரவதியுடனே மகனுங்காசி
மமர்வேதியனருகே வருந்திவேலை
ஏதுயவனியம்பிடினும் பணிந்துசெய்தே
யிருக்குமந்நாடனிலே சனியன்கோளாற்
தீதுபுரியடவிக்கே பாவனேசித்
திகழிலாத்துயருறவே அயலார்வீட்டு
ஓதுவர்தன்மைந்தர்களுங் கூட்டமாக
வோடிவந்தார்காட்டிற்கு போகத்தானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய் சந்திரவதியம்மனும் தேவதாசனும் காலகண்டையர் வீட்டில் கஷ்டமான வேலைகள் செய்துக்கொண்டிருக்குங் காலத்தில் காட்டிற்குப் போகவேண்டி அசலாத்துப்பிள்ளைகள் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

அசலாத்துப்பிள்ளைகள்-தரு-இ-ம-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

அசலாத்துமைந்தர்வந்தாரே இதோஇதோ (அச)

அநுபல்லவி.

பிசகில்லாமலே வேதமந்திரம்
பேசிடுமேசிடும் வாசிக்காமூடரை (அச)

சரணங்கள்.

ஆதிப்பிராமணகுலத்தோராகுமே யாருங்காணாத
யரும்பொருடனை யறிந்தோராகுமே
ஜோதிப்பெருவெளி சுடரைநோக்குவோர்
துய்யராய்மிக்கவே வையகம்வாழ்த்துவோர்

சூடிடும்பாடிடும் வேதத்தைநாளுமே
பட்டுவஸ்திரமிடையிற்கட்டியே யாவரும்போற்ற
பாரமடிதனை முடியிற்சுட்டியே
எட்டுத்திசைகளு மதிரவேதவுரை
எடுத்துப்பேசுவோர் தடுத்துரைப்போரை
ஏங்கவேதேங்கவே எண்ணிமதித்திடும் (அச)
அஞ்சுபெழுத்தை யனுட்டியிதோகாளும்வெண்ணீர்தனை
யணிந்தேநெற்றியி லழகுடன்தாளும்
நெஞ்சிற்கபடு சூதறிகிலார்
நிதாக்ஷண்யமா யேதும்புரிகிலார்
நேராகவீராக காட்டுக்கேயேகிட (அச)

சாமாசாஸ்திரி-வசனம்.

அடாகுப்பா நீ காட்டுக்கு வருகிறாயா.

குப்பாசாஸ்திரி-வசனம்.

குருடோழிமகனே நான் வரமாட்டேன் அப்பாசாஸ்திரியை யழைத்துக்கொண்டு போடாய் சாமா.

சாமாசாஸ்திரி-வசனம்.

நானும் வருகிறேண்டா தேவடியாள் பிள்ளாய்.

சுப்பாசாஸ்திரி-விருத்தம்.

சினுநீவருவாயோதான் செப்படாயிலேயோநேக்கு
மேனுவுகட்டத்தும்பு மிக்கனமாகவேண்டுங்
காறுறுதாண்டிச்சென்றே கருக்குநாலுந்தேட
நானுகப்போறேனின்னம் நற்சமித்துக்கும்பாரே.

வசனம்.

அடாய்சினு நான் சமித்துக்கும் பசுத்தும்பிற்கு நாருமுதலானவை கொண்டுவரக் காட்டிற்குப்போறேன் நீயும்வருகிறாயா சொல்லும்பிள்ளாய்.

சினுசாஸ்திரி-வசனம்.

நேக்கும் தெர்ப்பை முதலானது வேண்டியதுதானிதோ நானும் வருகிறேண்டா சுப்பா.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே அசலாத்துப் பிள்ளைகள் காட்டிற்கும்போவதை விஸ்வாமித்திரனறிந்து சூதுசெய்யக் காலகண்டைய ரிடம் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-இம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

நல்லகாலந்தந்தது வதிட்டனை நான்கெலிக்கவே வந்தது.

அநுபல்லவி.

கள்ளமறிந்திடாத காளைதேவதாசனை
காட்டிற்கேய்பகவிட்டுக் கபடுசெய்யயோசனை (நல்ல)

சரணங்கள்.

வேதியருக்குச்செப்பி சிறுவன்றன்னை
விரட்டியடவிக்கொப்பி
நீதிமாதுரைக்கினும் நிக்ரகிக்கவேபண்ணி
நிமைக்குளெனசபதத்தை நேராய்முடிக்கநண்ணி
காட்டிற்குமவனை மகவைபின்னால்
கதறியேதாயும்நோக
நீட்டிப்பலசகுனம் நிர்வஞ்சகிம்னதை
நெருப்பிலிட்டமெழுகாய் நீத்துவாட்டிடச்சதை (நல்ல)
அடவியிற்பாலன்சேர-நாகந்தீண்டி
அங்கவனுவிசோர
தடங்கண்டுசந்திரவதி தாங்கிச்சுடலைபுக்க
தந்தையுங்கண்டழுதே தாவிப்பொய்மொழிகக்க (நல்ல)

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

திக்குநீரொன்றுயெண்ணித் தெரிசிக்கவந்தேனாதா
பக்குவக்காலமின்றே பலித்ததுயெனக்குமையா
கைக்குள்ளேயிருக்குப்பாலன் காட்டிற்கேபோகச்செய்தால்
அக்கினிதேவேயங்கு யடியன்மேற்புரிகுவேனே.

வசனம்.

சுவாமி அக்கினிதேவரே நீர்செய்த முயற்சியினுல் மெத்த சந்தோஷமடைந்தேன் இப்போது தேவதாசனை அசலாத்துப்பிள்ளைகள் காட்டிற்குப் போகிறபடியால் கூடவேயனுப்பினுல் நானவ்விடத்தில் சில காரியங்களைச்செய்து பந்தயங்கெலிக்கின்றேன் சுவாமி.

காலகண்டன்-வசனம்.

மெத்தசந்தோஷப்படியே யனுப்புகிறேன் விஸ்வாமித்ரமுனியே

விஸ்வாமித்திரன்-வசனம்.

சீக்கிரமாய்ச் செய்யுஞ் சுவாமி சந்திரவதியின் வார்த்தையைக் கேளாதையும் நான் போய்வருகிறேன் போற்றிபோற்றி.

காலகண்டி-வசனம்.

அப்படியே போய்வாரும் முனியே வாழிவாழி.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாக விஸ்வாமித்திரமுனி சொல்லிப்போனதின்பேரில் காலகண்டர் அசலாத்துப்பிள்ளைகளுடனே தேவதாசனைக் காட்டிற்கனுப்புமிதவிதங் காண்பீர்கள் கனவான்களே.

காலகண்டன்-வசனம்.

அடா மூட்டுத்தேவடியாள் பிள்ளைகளே எவ்விடம்போகிறீர்களடா.

சாமாசாஸ்திரி-விருத்தம்.

சமிதைகள்கொணரவேண்டி சாங்கமாயடவிக்கேகி
சுமைரந்தத்தெர்ப்பைபுஷ்பஞ் சோர்விலாவிரகுமுஷ்டை
நிமைக்குளேபறித்துக்கொண்டு நேரமுமாகமுன்னே
நமக்குளயாத்துக்கேதான் நாம்வரப்போறோமையா.

வசனம்.

கேளுமையரே நாங்கள் காட்டிற்குப்போய் தெர்ப்பை விரகுமுஷ்டைமுதலானதுகளை கொண்டுவரப்போகிறோமையா.

காலகண்டி-வசனம்.

நம்முடைய பிச்சாளையு மனுப்புகிறோம் கூடஅழைத்துப்போவீர்களடா பயல்களே.

சாமாசாஸ்திரி-வசனம்.

ஆனால் ஜாக்கிரதையாயனுப்பும் நேரமாகிறது.

காலகண்டன்-வசனம்.

அடிசந்தி அசலாத்துமைந்தர்கள் காட்டிற்குப் போகிறதால் நீயுமுன்னுடையமகனை அவாளுடனனுப்பி தெர்ப்பை முதலானதுகளைச் சேகரித்து சிக்கிரம் வரச்செய்வாயடி. சந்தி.

காலகண்டி-விருத்தம்.

ஏதுகாணுமக்குமிந்த யிருசியின்குணங்கள்தானிப்
போதுதான்வந்ததேதோ புதுமையாத்தோற்றுதிங்கே
ஓதுநீர்பாலன்றனை யொடுக்கிலாமிருகஞ்சூழ்ந்த
நிதுளகாட்டிற்கேக தெரித்தலுந்தகைமைதானோ.

வசனம்.

இதென்னகாணுமையரே பல மிருகங்களிருக்கும்படியான காட்டிற்கு இந்தயதியாதபாலனை யனுப்புவது தகாதகாரியமானதால்தடைசெய்யுஞ் சுவாமி.

காலகண்டன்-கவி.

இட்டதோர் வேலைசெய்ய
யிவர்களைக் கொண்டேனன்றி
வட்டமாய் மனையிற்றாங்க
வன்னுடி தெரிகுவாயே.

வசனம்.

அன்னுடிசேஷி நான் சொல்லும்படியான வேலைகளைச் செய்வதற்காக இவர்களைக் கொண்டேனன்றி வேறில்லை சேஷி.

சந்திரமதி-விருத்தம்.

மழலைச்சொல்மாறவில்லை மானபல்லோவிழுவேயில்லை
தழைமுள்ளும்புலியும்யானை தனிப்பாம்புமலிந்தகாட்டிற்
குழந்தையையனுப்புதற்கென் குடலதுநடுங்குதையா
பழமறையோரேயென்னைப் பரிவுடனனுப்புவீரே.

வசனம்.

ஐயா என்மகனுக்கு இன்னங்குதலைச்சொல் மாறாமலும் பால் நிறைந்த பல்லுவிழாமலு மிருப்பதால் நரிபுலி கரடியானை சர்ப்பமிருக்குங் காட்டிற்கனுப்ப என்மனம் வருந்துகின்றது உத்திரவானுல் நான் போய்வருகிறேன் சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

ஏதடிசொன்னய்சந்தி யெண்ணிக்கையில்லாப்பொன்னை
மாதநிகொடுத்தேயன்றோ பயலையுமுனையுங்கொண்டேன்
தீதனறிநான்சொல்வேலை தேவிநீதடுப்பாயாகிற்
பாதவேரொக்கந்தன்னை பொட்டெனக்கொட்டுவாயே.

வசனம்.

அடிசந்தி என்னசொன்னய் கணக்கிலாத பணத்தைக் கொடுத்து உன்னையுமிந்த தெத்துப்பயலையும் வாங்கினே னப்படிக்கனுப்ப உனக்கு மனமில்லாதவிஷயத்தில் ரொக்கத்தை கொட்டடி பார்ப்போம்.

சந்திரமதி-வசனம்.

சுவாமி தேவரீர் சித்தத்திற்குக் கோபம்வேண்டாம் விதியைவெல்லப்போகாது என்மகனை காட்டிற்கு தங்களிஷ்டப்படி யனுப்புகிறேன் வேதியரே.

சந்திரமதி-விருத்தம்.

புவனத்தையாண்டயந்த புண்ணியன்பரத்தைக்கோறி
தவமதுசெய்துபெற்ற தனயனேயிங்குவாடா

பலமிலாவையரிந்தப் பாலர்பினசமிறைதக்காக
கவனமாய்ப்போகச்சொன்னார் கருத்தென்னவுரைப்பாயப்பா.

வசனம்.

அடா என்கண்மணியே இந்த ஐயமாரோடு உன்னையுங் காட்டிற்கனுப்பி தர்ப்பை இலை விறகு முதலானவைகள் கொண்டுவரும்படி வேதியருத்திரவு செய்தார் என் சொல்லுகிறாயப்பா.

தேவதாசன்-விருத்தம்.

சுகத்தினிலிருந்தவாழ்வை சோர்வினில்நினைக்கப்போமோ
அகத்தினில்வந்தகாலை யவதியும்பெருமையுண்டு
ஜகத்தினிற்சமமாயெண்ணிச் சாருதல்நமக்கேநித்யம்
வகத்துவமுள்ளோர்பின்னே வனமேகவிடையீவாயே.

வசனம்.

கேளுமம்மா தாழ்வு வந்தபோது வாழ்ந்ததை நினைக்கலாமோ பூமியிற் பிறந்தபோதே சுகமுந்துக்கமுஞ் சமமாயெண்ணி யனுபவிக்கவேணுமானதால் இவர்பின்போக விடைகொடுமம்மா.

சந்திரமதி-வசனம.

அப்பாமகனே நான் ஐயரைக்கேட்டு உன்னை கொஞ்சதூரம் வந்து வழிகூட்டியனுப்பி வருகிறேண்டா கண்மணியே.

தேவதாசன்-வசனம்.

நல்லதப்படியேசெய்யும் என்னைப்பெற்ற தாயே.

சந்திரமதி-விருத்தம.

பொய்யிலாமெய்மைபூண்ட புண்ணியமூர்த்திகேளீர்
செய்யவிலன்மைந்தனைபெற்ற சிறுவனுமலினற்சுவாமி
ஐயரவில்லாதந்த யாலாத்துச்சிறுவரோடு
பையவேயனுப்பிவாறேன் பரிந்துமேவிடையீவீரே.

வசனம்.

சுவாமி என்மகன் சிறுவனானதால் கொஞ்சதூரம்போய் அநலாத்துப் பிள்ளைகளுடன்வழிகூட்டியனுப்பிவர உத்திரவுதரவேணுஞ் சுவாமி.

காலகண்டன்-வசனம.

அப்படியே வழிகூட்டியனுப்பி சீக்கிரம் வருவாயடி சந்தி.

சந்திரமதி வசனம்.

அடா என் கட்டிக்கரும்பே காட்டிற்குப்போக வருவாயடா கண்மணியே.

தேவதாசனும் அசலாத்துப்பிள்ளைகளும் காட்டுக்குப் போகிறபாகம்.



சந்திரமதி. தேவதாசன். அசலாத்துப்பிள்ளைகள். காடு.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே சந்திரவதியம்மன் தேவதாசனைக் காட்டிற்கனுப்ப அசலாத்துப் பிள்ளைகளுடன் வரும்போது விஸ்வாமித்திரன் அநேக துர்ச்சகுனங்களைக் காட்டி அவள்மனதை நோகச் செய்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி-கொச்சகம்.

வேதியரின்மைந்தர்களே விளங்குமென்தன்பாலகனே
காதகமாயிவ்வனத்திற் காட்டிவருஞ்சகுனமதால்
வேதனையேவருமோ வென்றனுளம்வாடுதப்பா
பாதகிநான்பெற்றவயிர் பற்றுதடாகண்மணியே.

வசனம்.

பாருங்களப்பா அசலாத்துப்பிள்ளைகளே என்னருமை மகனான தேவதாசா இந்த வழியிற்காட்டுங் கெட்ட சகுனங்களாலெனக்கு மெத்த வருத்தமாகின்றதப்பா.

சந்திரவதி-கண்ணிகள்-இ-ம்-ஆகிரி-ரூபகம்.

நீதிநெறியுணர்ந்தநெருடிகண்மைந்தரே	ஐயமாரே-இந்த
நேரில்வருஞ்சகுனமயாருக்குமாகாதே	தம்பிமாரே
பாதிமதியணிந்தபரமனைமறவாதே	தேவதாசா-இதோ
பாம்புகுறுக்கிடுதறிக்காகங்கட்டுதே	தேவதாசா
ஆந்தையுமலருதேயதோகருடன்கட்டுதே	தேவதாசா-இது
ஆகாதசகுனங்களங்குமுறுகுதே	தேவதாசா
ஒத்தைக்குரலோசையோட்டியழுகிறளே	தேவதாசா-அப்பா
ஓகோயென்வயிறதுஒருவாருருகுதிவ்வேளை	தேவதாசா
நெருப்பைத்தாங்கியொருத்திநேரினில்வாராளென்	ஐயமாரே-எது
நீங்காவருத்தங்கள்நேரிடுமோவறியேன்	தம்பிமாரே
கட்டைச்சுமையைத்தாங்கிகடுகியொருத்திவாருள்	ஐயமாரே-இதை
கண்டவிடத்திற்கப்பால்காலிடப்போமோபுத்தி	ஐயமாரே
தந்தையின்பாதத்தைதனையனேகவனிப்பாய்	தேவதாசா-நமக்கு
தாவும்வினைதுலையத்தந்திடுமருளப்பா	தேவதாசா

சந்திரமதி-வசனம்.

அப்பா தேவதாசா.

தேவதாசன்-வசனம்.

சொல்லும் என்னைப்பெற்ற தாயே.

சந்திரவதி-கண்ணிகள்-சமா-சாப்பு.

என்னசெய்வேனடா என்மகனேயிதற்
கேதுசெய்வேனடா கண்மணியே
துன்பம்விளையுமோ இச்சகுனத்திறற்
சோறுதென்னுவி யடாமகனே.

தேவதாசன்-இந்துஸ்தான்-காபி-ஏகதாளம்.

துன்பமணுகாதம்மா
தூயனதிருவடியை
அன்பாகநான் துதித்தே என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
அறுதமேதசமித்துவாமேறன்.

சந்திரவதி.

அருந்தவஞ்செய்தேண்டா என்மகனே அடா
அவதிக்குள்ளானேண்டா கண்மணியே
கருமவிதிதானோ உனைத்தனிவிட
காலமும்வந்த தடாமகனே.

தேவதாசன்.

தனியாய்விடுத்தேனென்று
தளராதேயுன்மனதில்
இனிவாவ அஞ்செழுந்தை என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
எடுத்தோதிப்போயிவாறேன்.

சந்திரவதி.

பெற்றநாள்முதலா யென்மகனேயுன்னைப்
பிரிந்தறியேனடா கண்மணியே
உற்றசகுனத்தாலேதவிளையுமோ
ஒன்றுமறியேண்டா என்மகனே.

தேவதாசன்.

வந்தவினைவிலக்க
வளர்விசுவேசனுண்டு
தந்தையடிகளென்னை என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
தான்காக்கும் போய்வருவேன்.

சந்திரமதி.

சின்னவயதடா என்மகனேயெங்குஞ்
  சென்றறியாயடா கண்மணியே
வன்னமாங்காட்டினி லெதுவாகுமோவென
  வாடுதேயென்மனம் அடாமகனே.

தேவதாசன்.

ஆவதுவொன்றுமில்லை
  அயன்விதிபோல்முடியுஞ்
சாவதுமீறலுண்டோ என்னம்மணி
  ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
  சடுதியில்நான்வருவேன்.

சந்திரமதி.

எப்படிப்போவேண்டா என்மகனே-மிருக
  மெதிர்த்திடுங்காட்டினிற் கண்மணியே
தப்பிலாவேதிய னுன்னையனுப்பிடத்
  தான் துணிந்தான்மனம் அடாமகனே.

தேவதாசன்.

விலங்கின்பயமுமில்லை
  விமலனருளுமுண்டு
கலங்கவுந்ததியிதன்றே என்னம்மணி
  ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
  கடுகிப்போயிதோவாறேன்.

சந்திரமதி.

கொஞ்சம்வயதடா! என்மகனே-நரி
  கூத்தாடுங்காடாச்சே கண்மணியே
நெஞ்சம்பதறி யருகில்நெருங்காதே
  நீதணிக்காதேயடா என்மகனே.

தேவதாசன்.

நரியும்பரியுமாக
  நம்பன் திருவடியை
கருதிப்பணிந்திடுவேன் என்னம்பணி
  ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
  கவலைநீ விட்டிடுவாய்.

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்.

பழுதுள சகுனமென்று பதறியேதாயேநீதா
னழுவதைநிறுத்திநாங்க ளடவிக்கேகடுதியேக
வழுவின்றிவிடைதானீவாய் வந்திட்டோமெத்ததூரம்
மழுவதைத்தரிப்போன்காப்பான் மனத்துயர்விடுவாயம்மா.

வசனம்.

கேளுமம்மா மெத்ததூரம் வந்துவிட்டாய் இங்குகண்ட சகுனத்திற்காக வருத்தப்படவேண்டாம் ஈசனிருக்கிறான் நாங்கள் போக விடைதாரும் தாயே.

சந்திரமதி-விருத்தம்.

போவெனச்சொல்லநெஞ்சம் பொங்குதேதுயரமீறி
கோவதைப்பிரிந்தகன்று கூர்மைபோலெந்தன்பாலன்
தாவியேயடவிக்கேக தகுமதியின்னங்கொஞ்சம்
மேவியேயுரைத்துநானு மென்னிடந்திரும்புவேனே.

வசனம்.

கேளுங்களப்பா அசலாத்துமைந்தர்களே இன்னங் கொஞ்சந்தூரம்வந்து என்மகன் தைரியப்பட சிலபுத்திகள் சொல்லித் திரும்புகிறேனப்பா.

சந்திரமதி-கண்ணிகள்-இ-ம்-முகாரி-தாளம்-சாப்பு.

கெட்டசகுனங்கள் முற்றுங்கண்டோமென் மகனே
உற்றுமனதில் நற்றிப்பயமுறாதே மகனே
கட்டைசமித்தைகள் பொட்டெனவேசேடி மகனே
அட்டிசெய்யாமலென் கிட்டவருகுவாய் மகனே
அடவிஜெந்துக்களை துடர்ந்துறாத்சாதே மகனே
படபடத்தேயோடிப் பாதம்நோவுறாதே மகனே
தோழர்கள்சொல்வதை தாழவேபுரிகுவாய் மகனே
ஆனரிச்சந்திர னருளுவக்காகிடு மகனே
புத்தின்மேற்செடிதனைப் பத்தியிழுக்காதே மகனே
கத்திஅராவமுங் கொத்தநத்துவளிந்திடும் மகனே
காசிநாதனடி நேசமாய்ப்போற்றிசெய் மகனே
மாசிலாமணியனு மகிழ்ந்தாநள்செய்குவான் மகனே

சந்திரமதி-வசனம்.

அடா நான்பெற்ற செல்வமே.

தேவதாசன்-வசனம்.

சொல்லும் என்னைப்பெற்ற தாயே.

சந்திரமதி-கண்ணிகள்-இ-ம்-முகாரி-தாளம்-ஆதி.

உன்னைத்தனியனுப்பவும் மகனே
ஓகோபிரமன்விதிக்கவும் அடடா
என்னைப்பிரிந்திருக்கவும் மகனே-ம-ம
எதுசெய்வேன்பாலா.

தேவதாசன்-இந்துஸ்தான்-காபி-ஏகதாளம்.

ஏதுக்குமஞ்சாதே
ஈசன் துணைவருவான்
நேசனருள்புரிவான்
வாசன்சுகந்தருவான்
பொழுதுபோகுமுன்னமே என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
பொன்னடிகாணவாறேன்.

சந்திரமதி.

மண்ணுளநீபிறந்ததும் மகனே
மறையோன்முறிபுரிந்ததும் அடடா
என்னுடெண்ணிப்பிரிவது மகனே-ம-ம
என்னபாதகியோடா.

தேவதாசன்.

பாதகியல்லவம்மா
பதிவாக்குமீறாத
சதிமொழிசாறாத
விதிவழியாறாத
தேவிநீவரங்கொடுப்பாய் என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஓ-ஓ-என்னம்மணி
தீவிரம்போய்வாறேன்.

சந்திரமதி.

மன்னர்தவமிழைத்தது மகனே
மாறுதென்னுள்தழைத்ததும் அடடா

இன்னாள்மட்டும்வளர்த்தது மகனே-ம-ம
இக்காட்டிற்கேகவோடா.

தேவதாசன்.

காட்டிற்கேபோறேனென்று
கலங்கிவருந்தாதே
குலுங்கியருந்தாதே
விலக்கும்நெருங்காதே
மேட்டிசிவனருளால் என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஒ-ஒ-என்னம்மணி
மின்னோடிவாறேனம்மா.

சந்திரமதி.

அன்னம்விட்டுயிருக்கவும் மகனே
அப்பாகூழைகுடிக்கவும் அடடா
வன்னநிறந்தறைய மகனே-ம-ம
வந்தசதியறியேன்.

தேவதாசன்.

சதியொன்றுமில்லையம்மா
சத்தியம்நிற்கவென்றே
முத்திராம்புக்கவென்றே
பத்தியைக்காக்கவென்றே
விதியால்விளைந்ததுன்பம் என்னம்மணி
ஆ-ஆ-என்னம்மணி ஒ-ஒ-என்னம்மணி
விடுதிக்குயேகுமம்மா.

சந்திரவதி.

கன்றுக்குட்டிமேய்க்கவு மகனே
கந்தைத்துணிதோய்க்கவும் அடடா
மண்ணுள்ளோர்கண்வைக்கவு மகனே-ம-ம
மனதுநொந்தேனடா.

தேவதாசன்.

கன்றதுவல்லவம்மா
 கையனேறும்விடை
 மலைமகளுடும்படை
 நிலைபெறவேதுதடை
 நின்றில்விடந்தனிலே என்னம்பணி
 ஆ-ஆ-என்னம்பணி ஓ-ஓ-என்னம்பணி
 நீவிடைதான் தருவாய்.

சந்திரமதி-கொச்சகம்.

கட்டிக்கரும்பேயென்மகனே கருணம்பணியேசெழுந்தேனே
வெட்டிமருவேசெண்பகமே வேண்டிற்கிட்டாப்பசுங்கிளியே
குட்டிவிளவினிதழ்மணியே குயிலேமயிலேகோமளமே
விட்டிங்குனைநான்றன்பிரிய விதியோமுனிசெய்சதியோடா.

வசனம்.

அப்பா, உன்னைவிட்டுப்போக மனம்வரவில்லையே.

இதுவுமது.

கண்ணேஒளிவேகுலவிளக்கே கணவரிழைத்தபெருந்தவமே
விண்ணேதுலக்குமரவபதியே வேந்தர்புகழும்ளிப்புமனே
மண்ணேயாளவென்வயிற்றில் மகிழப்பிறந்தமருக்கொழுந்தே
நண்ணேவிடுத்தேநான்போக நடுங்குதெந்தனுடல்மகனே.

வசனம்.

அப்பா தேவதாசா, உன்னைப்பெறவேண்டி நானுமுன்தந்தையும் பரமனைக்குறித்து அருந்தவஞ்செய்து பெற்றுவளர்த்து அடிமையாகி இந்தக்காலத்திலுன்னைத் தனித்துக் காட்டுக்கனுப்ப மனம்பதறுதடா கட்டிக்கரும்பே.

தேவதாசன்-வசனம்.

என்னசெய்யலாம் ஐயர்வாக்கு மீறலாகுமா போய்தான் தீரவேண்டும் நீ விசனப்படாதே அம்மா.

சந்திரமதி-வசனம்.

அப்பா தேவதாசா,

தேவதாசன்-வசனம்.

சொல்லுந்தாயே.

சந்திரமதி-கண்ணிகள்-செஞ்சுருட்டி-ரூபகம்.

பால,யென்னகாலம் வந்ததடாமகனே-ஆ-ஆ-சுதனே
பற்றுதேயென்வயிர்
நற்றுதேதுபாஞ்
சுற்றுதேவுடலும்
பெற்றபலனிதோ—(பாலா)

தேவதாசன்,

தாயேவீணுப் தயங்கியேயழுகாதே-ஆ-ஆ-அன்னையே
தங்கநிறமேனி
எங்குமநீர்சொரிய
அங்கம்பதருதே
மங்களமாய்வாறேன்—(தாயே)

சந்திரமதி.

மன்னன்செய்ததவத்தால்வந்தாயேமகனே-ஆஆசுதனே
மாயமாய்வந்தவு
பாயமறியேண்டா
ஞாயமெவனிடம்
போய்முறைசெய்குவேன்—(பாலா)

தேவதாசன்.

அன்னையின்னமழுகதீதவிக்காதே ஆ-ஆ-அன்னையே
ஐயனருளினாற்
பையகாவ்சென்றிதோ
துய்யசமித்துடன்
நொய்யுறுமல்வாறேன்—(தாயே)

சந்திரமதி.

கண்ணேஎப்போகாண்பேனடாகட்டிக்கனியேஆசுதனே
கலங்குதேநெஞ்சமும்
விலங்குளகாட்டிலே
துலங்கவேசென்றுமே
நலமாய்வருவாயோ—(பாலா)

தேவதாசன்.

அம்மாமெத்தயழுதுமே துடிக்காதே ஆ-ஆ-அன்னையே
அண்டிஞாயாளுஞ்
சண்டிகையாளு
முண்டிதோதர்ப்பையை
கொண்டோடிநான்வாறேன்—(தாயே)

சந்திரமதி.

என்னவிதியெழுதினனந்தப்பாவி
எரியுதேயென்குடல்
நரிகளுங்கூவுதே
நெறியுளலோகிதா
சரியாயோநான்போக—(பாலா)

தேவதாசன்.

தல்லிமனந்தயங்கியேபுலம்பாதே ஆ-ஆ-அன்னையே
தானேயுதித்தவன்
மானேதரித்தவன்
கோனேதுணைசெய்வான்
நானேபோய்வாறேன்—(தாயே)

சந்திரமதி.

காட்டைகண்டேன்மனங்கலங்குதேகண்ணே-ஆசுதனே
கட்டிக்கரும்பேநான்
விட்டிங்குனைச்செல
மட்டிலாப்பாதமும்,
அட்டிப்படுதேடா—(பாலா)

தேவதாசன்.

ஆச்சிமெத்தநேரமாச்சுதிங்கே தாயே ஆ-ஆ-அன்னையே
அடவிதூரமாமே
துடரில்வழிதாமே
நடக்கப்பொழுதில்லை
தடம்பற்றிநானபோறேன்—(தாயே)

சந்திரமதி.

கண்ணொளிமயக்குதேகட்டிக்கரும்பே ஆ-ஆ-சுதனே
காலமும்வந்ததோ
பாலனைப்பிரிய
ஞாலத்தில்நான்பாவி
கோலமாய்நிற்பேனோ—(பாலா)

தேவதாசன்.

வாழ்த்திவழிவிடுகுவாய்பெற்றதாயே ஆ-ஆ-அன்னையே
வணங்குடனுமல்
மனம்வருந்தாமற்
றனம்போன்றவாயாற்
கனம்பெறச்சொல்லி—(தாயே)

சந்திரமதி.

உடலுந்தலைவேறாய்க்காணுறுயேபாலா ஆ-ஆ-என்சிலா
உரையுங்குளறுது
கரையும்வரனுது
தரையினில்யானுமே
குறையென்னசெய்தேனோ—(பாலா)

தேவதாசன்.

தந்தைசத்தியந்தான்றுணைசெய்யுந்தாயே ஆ-அன்னையே
தாவியடியேனும்
மேவியடவியிற்
றேவிசமிதைகள்
பாவியோடிவாறேன்—(தாயே)

சந்திரமதி.

வாருமுன்றன்மகனைக்காத்திட வேந்தே ஆ-என்கோவே
வாடுதயென்மனந்
தேடுதவுந்தனை
நாடுநின்பதங்
கூடுவீர்பாலனை—(வாரு)

சந்திரமதி-விருத்தம்.

நல்லதுமகனேயென்றன் நற்றவப்பொருளேகாசி
வல்லவனருளுனக்கே வாய்த்திடும்வனத்திலப்பா
சொல்லறுபிசகாத்தந்தை சுத்தமாம்பாதகம்பு
அல்லலுமகற்றிலோக மாளுவாயறிகுவாயே.

வசனம்.

அப்பா தேவதாசா காசிநாதர் துணைவருவார் உன் தந்தையின் பாதாரவிந்தங்களைத் தியானித்துக்கொண்டே சமித்தெடுத்துசீக்கிரம் வந்து சேருவாய் கண்மணியே.

தேவதாசன்-வசனம்.

அப்படியேவந்து சேருகிறேன் தாயே.

சந்திரமதி-விருத்தம்.

மறையவர்மக்களேயென் மைந்தனோசிறுவன்கண்டீ
ரிறையவனமைப்பாலிக்க னைவுநானுனையா
உறைசெயவறிவேன்வேறு னொப்பித்தேன்காட்டில்யாதோர்
குறைகளுமணுகிடாமற் கூட்டியேவருவீர்போற்றி.

வசனம்.

அப்பா அசலாத்துமைந்தர்களோ என்மகன் அதிக சிறுவனாதலால் பத்திரமாய்ப் பாதுகாத்து என்னிடஞ்சேர்ப்பீர்கள் உங்கள் பாதங்களுக்குப் போற்றி போற்றி.

அசலாத்துப்பிள்ளை-வசனம்.

அப்படியே வந்து சேருகிறோம் நீ வீட்டிற்குப் போவாயம்மா.

சந்திரமதி-வசனம்.

அப்பா தேவதாசா நான்போகட்டுமா எனக்கொருமுத்தங்கொடுத்துப்போடா கண்மணியே.

தேவதாசன்-வசனம்.

அப்படியே கொடுக்கிறேன் பத்திரமாய் வீடுபோய்சேரும் என்னம்மணி.

பொது-விருத்தம்.

மங்கையராடதிவ்ய மாளிகைதங்கள்பாட
சங்கையில்லாமல்மன்னர் சாலினைதமைக்.ர்கூட

காசிராஜன் சபைக்கு சோமாஜி வருகிறபாகம்.



காசிராஜன். மந்திரி. கட்டியன். அனிச்சத்தோட்டி. சோமாஜி.

எங்குளபகைஞர்வாட யினியவேதியர்கொண்டாட
கங்கைசூழ்காசிமேவந்தன் கனமுடன்கொலுவிற்ருனே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, இவ்வாறிருக்ககாசிபட்டணத்தை அரசாக்ஷிசெய்யுங் காசிமகாராசன் கொலுவுக்கு வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

காசிராசன்-தரு-இ-ம்-தோடி-ஆதி.

பல்லவி.

இராஜராஜனுன ராஜன் காசியையாளும்
ராஜாதிராஜன்வந்தான் கொலுவிருக்க.

அநுபல்லவி.

தேசாதிபர்கள்சூழ திகைக்கப்பகைஞர்தாழ
திவ்யனமுகில்மாரன் தீரவீராதிவீரன்
சீர்பெறுமனுமுறை நேர்வழுவாதுறை
பார்தனிலருமறை சீர்பெறவேயுறை (இரா)

சரணங்கள்.

இரத்னமுடிசிரசி லெழிலுடனேதுலங்க
யேற்றிறுதலில்நீறு யிடரிலாமலிங்க
கொத்தாய்முத்துவடங்கள் கூடியார்பிற்றுலங்க
கூறும்புயவலங்க குவிர்தோரொளிகலங்க (இரா)

கத்தியொளிவுமின்ன-பகைவர்
கண்டேசரணமென்ன-கீர்த்தி
எத்திசையிலுந்துன்ன கவிஞ
ரிருபுரமிசைபன்ன
தித்திமிதிமிதிமி திமிதிமிபெலவே
திசைகளெட்டுமெதிர பலர்க
ளிசைகள்கொண்டுவந்திர

செப்புறுபேரிகை பம்பைகொம்புகள்
ஒப்புறுவல்லரி துந்துஞசங்கள்
ஜெபஜெபவென சீருடனூதிட
பயமுடன்கட்டியம் பணிந்துமேஓதிட (இரா)

காசிபன்-போற்றிவிருத்தம்.

செங்கதிர்குலம்விளங்க ஜெயமுடன்மன்னர்வாழ
எங்குநீர்பொழிந்தேநேமக மெகேஷ்டமாய்குடிகள்வாழ்க
பங்கமதின்றி தர்மர் பாலித்தெவ்விடமுமோங்க
கங்கைபோலெனதுசெங்கோற் கனம்பெறஅருள்வாய்போற்றி.

மந்திரி-போற்றி-விருத்தம்.

தேசத்தில்நீதியோங்க தெளிதபநெறிகளொக்கிப
வாசமாய்ப்புரியசித்தர் வாழ்ந்திடக்குடிசனுட்டில்
நேசமாய்ப்பசவும்வேங்கை நீககியேபகையைவாழ்க
பாசமாயரசுசெய்யுன் பாதமேபோற்றிநாதா

காசிபன்-தேசவிசாரணை.

சூர்பதிச்செங்கோலுங் குறைவின்றிவிண்ணுலகில்
சுகமாய்நடக்தேறுதா

மந்திரி.

தூபனேயிந்திரன் நேமமுளவாளுகை
சொகுசாய்நடந்துவருதே

காசிபன்.

நரர்பதியெனுமன்னர் முறைமைமதவமுவாமல்
நியாயமாய்நடக்கிறுரா

மந்திரி.

நாட்டினிலரசர்கள் நீதிதவறுமலே
நடத்துறுர்செங்கோலுமே

காசிபன்.

நூலவிதிதவறுமல் வேதியர்கள்வேதத்தின்
கோஷமதுசெய்கிறுரா

மந்திரி.

சொற்றவாயந்தணர்கள் சாலவேகுறைவின்றி
கொண்டாடியேவருகிருர்

காசிபன்.

ஆலயங்களிற்பூஜை சாலவேகுறைவின்றி
யனுதினம்நடந்தேருதா

மந்திரி.

அண்ணலேபூஜைகள் யாதும்வழுவின்றியே
யன்புடனேங்கிவருதே

காசிபன்.

காசினிதழைக்கவே மாதமும்மாரியும்
கருதியேபெய்கின்றதா

மந்திரி.

கடவுளினருளதா லின்றுமேயோங்கவே
க்ஷமழைபெய்துவருதே

காசிபன்.

வருணாதிமுறைகளினற் குறைவின்றிநாட்டுளோர்
மகிழ்வுடன்நடக்கிருரா

மந்திரி.

மகாராஜனேகுல விதிகள்பிசகாமலே
மதியாய்நடக்கிருர்கள்

காசிபன்-வசனம்.

பெத்த சந்தோஷமப்பா மந்திரி.

கட்டியன்-துதி.

விராதிவீரனே வீரப்ரதாபனே விஜயனே வெகுபராக்கு
வேந்தனேகாசியைச் சாந்தமாயாள்கின்ற விமலனே வெகுபராக்கு
காந்தாளமின்றியே தர்மத்தைவிளேவிக்கும் கர்த்தனே வெகுபராக்கு
கடிந்திடும்பகைவரின் நெஞ்சைபிளந்திடும் கையனே வெகுபராக்கு

சூராதிசூரனே சூக்ஷமறிநிபாயத்தின் சுத்தனே வெகுபராக்கு
சொல்லொணுதிவ்யகுண வல்லவாவைரமுடி சூடுவோம்வெகுபராக்கு
காயமனவாக்குடன் நேயமாய்மன்னுளோர் கருதுமணியே பாராக்கு
கைகட்டிவெகுமன்னர் மெய்த்தொண்டிசெய்திடுங் காசிபாபராக்கு.

காசிபன்-விருத்தம்.

மந்திரிநமதுநாட்டில் மகிழ்வுடன்யாத்திரையாக
வந்திடும்பிரஜைகட்கே வண்மையாய்சோமாஜிகள்
தந்திடுகிறாரோதர்மந் தழைக்குதோதெரியவேண்டி
எந்திருசபைக்கவாளை யினிதுடன்வரச்செய்வாயே.

வசனம்.

அப்பா மந்திரி நமதுநாட்டில் யாத்திரையாக வருபவர்கட்குவேண்டியவைகளை சோமாஜிகள் தடையின்றி நடத்துகிறாரா அவாளைவரவழைப்பாயப்பா.

மந்திரி-வசனம்.

அப்படியே வரவழைக்கின்றேன் மகாராசனே.

மந்திரி-கவி.

கேளாய்கேட்டியக்காரா கெடிதலக்காசிதன்னில்
நாளுமேசதாவர்த்தியும் நம்பிகள்வரச்செய்வாயே.

வசனம்.

அடா கட்டியனே நமதரசனுக்கினையின்படி சதாவர்த்து கொடுக்கிறவர்களை வரச்செய்வாயடா.

கட்டியன்-வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே, இவ்விதமாய் கட்டியன் சென்று காசிப்பட்டணத்தில் யாத்திரையாக வரப்பட்டவர்களுக்கு சதாவர்த்துகொடுக்கும் சோமாஜிகளுக்குத் தெரிவித்தவுடன் சபைக்குவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சோமாஜிகள்-தரு-சௌராஷ்டகம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

சோமாஜிகள்வந்தார் ராஜனைக்காண சோமாஜிகள்வந்தார்

அநுபல்லவி.

சாமாஜி எமாஜீ சம்போஜீ லம்போஜி
நாபாஜிகளான நம்பிகள் திரளாக (சோ)

சரணங்கள்.

வெகுவிதமாக வேண்டும்பொருளைத்தேடி
விந்தையுலகிலுண்டு விரும்பிப்புதைத்திடும்
இகபரந்தனக்கு யேதுவாகுந்தான
மீபாலேபிகளை யிழிவாகப்பேசிடுஞ்(சோ)
வாகனஞ்சிவிகைகள் வைப்பார்பொருளதை
வட்டிக்காசித்தீர்ந்து வழக்கிட்டேயழுகுவார்
சாகிறேனென்றெருகுவர் சாற்றினும்போவெனுஞ்
சண்டாளரைபென்றுஞ் சாந்தமேகண்ணோர்கா(சோ)
சிவமகோற்சவங்கள் செய்வோரையிகழுவார்
சிலையிற்பலனில்லை சீச்சீவிடுவென்பார்
சவபாபட்டுந்தங்கள் சம்பத்தும்பொருள்மதஞ்
சார்ந்தேநரகேகுஞ் சண்டாளரையேகஞ்(சோ)

சோமாஜிகள்-வசனம்.

போற்றிபோற்றி எங்களாண்டவனே.

காசிபன்-விருத்தம்.

நம்பிகாணமதுநாட்டில் நாடோறும்வருவோருக்கு
நம்பிகாள் தானம்நீங்களையமுடனளிக்கின்றீரே
நம்பிகாள்குறைகளுண்டோ நாட்டினில்பசித்தோருண்டோ
நம்பிகாளுணுங்கேட்க நலமுடனுரைசெய்வீரே.

வசனம்.

நம்பிகளே, நமது நாட்டில் வரும்படியானவர்களுக்கு சதாவர்த்து தடையின்றிகொடுத்து வருகின்றீர்களா சொல்வீர்கள் சோமாஜிகளே,

சோமாஜிகள்-விருத்தம்.

வேந்தனேவந்தவரைதேடியேகொண்டுவந்து
விறைவிலில்நபலரையெண்ணி

விந்தமாம்பயறுநெய்ரவைபாலுஞ்சர்க்கரை
விநோதகனியெறிகரும்புஞ்
சாந்தனேபாத்திரம்விடுதியுந்தீபநெய்
சயனிக்கவொலுசுமெத்தை
சந்தனந்தாம்பூலமீந்தவிசைகேட்டிடச்
சதிருமேற்பாடுஞ்செய்து
பாந்தமாயென்னாளிருக்கினுங்குறைவின்றி
பணிவிடையியற்றிடாதா
பண்புடனவர்கேட்பதெவ்வண்ணமாயினும்
படைத்துடன்களிக்கவித்தங்
காந்தனேநெறிபுடன்காசிமானேயிவ்வாறு
கருத்துடன்பாதுகாத்தே
கன்யரேயுமதுசெங்கோலதுதழைக்கேதாங்க
கருதிநடக்கின்றேமாமே.

வசனம்.

ஆண்டவனே, உமதாக்கினை கடவாமல் வந்தவர்களுக்கு சோறு நெய் ரவை பால் சர்க்கரை முதலானதுங் கொடுத்து யாதொன்றும் குறைவின்றி போஷித்துவருகிறோம் மகாராசனே.

காசிபன்-வசனம்.

மகாசந்தோஷம் மகாசந்தோஷம் நம்பிகளே.

காசிபன்-வசனம்.

அப்பா மந்திரி, இந்த நம்பிகளுக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புவாயப்பா.

மந்திரி-வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் மகாராஜனே,

பொதுவிருத்தம்.

மன்னவனுங்காசிநகராளுர்வேந்தன்
மந்திரியுங்கொலுக்கலைந்துமனைக்குசென்று
றன்னநடைசந்திரவதியின்றபால
னடவிக்கேகசமித்தெடுக்கவேண்டியந்த

நன்னவளும்வேதியரின்மைந்தரோடு
நாயகியும்வழிகூட்டியனுப்பிப்பின்னர்
சொன்னமொழிதவறுமலையர்பாதஞ்
சோர்வின்றித்தானடைந்துதொழுகுவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காசிராஜன் கொலுக்கலைந் தரண்மனைபுகுந்தான் அப்பால் சந்திரவதி தன்மகனை சமித்தெடுத்து வரும்படிவேதியமைந்தருடன் வழிகூட்டியனுப்பி தன்னை யடிமைகொண்டகாலகண்டையரிடம் வந்துரைக்கும்விதங் காண்பீர்கள்கனவான்களே.

சந்திரமதி-விருத்தம்.

ஐயரேநீருரைத்த யசலாத்துமைந்தரோடு
பையவேபோகயெந்தன் பாலனையனுப்பிவந்தேன்
செய்யவேயெனக்கேவேலை செப்புவீர்புரியநானுந்
கையதாற்பணிந்தேனுந்தன் கழலடிக்கடியாள்போற்றி.

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அசலாத்துப் பிள்ளைகளுடனென்மகனையுங் கூட்டியனிப்பிவந்தே னெனக்கு யினிச்செய்யவேண்டிய வேலைகள்சொல்லும் வேதியரே.

காலகண்டன்-விருத்தம்.

ஏதடிசந்திநீதா னின்னேரம்பொழுதுபோக்கி
ஓதடிவரவுமானு யொப்புமேநீதிதானோ
தீதடியிவ்வாறுகத் திரிவதுமுனக்குநன்றே
போதவென்னுத்தின்வேலை பொட்டெனப்புரிகுவாயே.

வசனம்.

அடி சந்தி காலதாமிஷஞ்செய்து வருவதுனக்குந்தகுமா விட்டிலுள்ள வெளிவேலைகளைச் செய்யப்போவாயடி சந்தி.

சந்திரவதி-வசனம்.

அப்படியே செய்கிறேன் கோபம்வேண்டாம் வேதியரே.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே வேதியர்வீட்டில்சந்திரவதியம்மன் தன்மகனைப்பிரிந்த துயரத்துடன் வேலைசெய்துக்கொண்டிருந்தாள்தெர்ப்பைக்காகப்போகு மசலாத்துப்பிள்ளைகள் காட்டில் தேவதாசனை விசாரிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

அசலாத்துபிள்ளைகள்-விருத்தம்.

சுந்தரமுடையபாலா சொகுசுளதேவதாசா
அந்தணர்க்கடிமையான ஆபத்துயாதோ்காணே
யிந்தவூர்நீங்கள்வந்த தெந்தவாற்முன்வசித்த
சொந்தநாடெதுவோவப்பா சொல்லுவாயினிவாய்த்தானே.

வசனம்.

அப்பா தேவதாசா உங்கள்தேசமெதுவோ நீங்களிந்த வேதியனுக்கடிமையான காரணமென்ன தெரியச்சொல்லுவாயப்பா.

தேவதாசன்-வசனம்.

அப்படியே சொல்லுகிறேனப்பா தோழர்களே.

தேவதாசன்-அகவல்.

என்வளப்பதனை யினிவுடன்கேட்ட
நன்மதிதோழரே நவிலுவேன்கேளீர்
என்றனைப்பெற்றோ னிறைபரிச்சந்திரன்
தந்தநோரயோத்தி தானுண்டமன்னன்
செல்வமும்பாக்கியஞ் சிறதும்படைத்தே
தொல்லுலகாண்டு சுகித்திடும்நாளில்
தவமுனிகவுசன் தான்யாகஞ்செய்ய
கவன்விடுதூரங் கரியின்மேலேறியே
பொன்மனைக்கேட்டான் புகழ்வுளோனுன
லைவத்திருவேண்டில் வருவேனென்றே
கைப்பதிதாங்கொள காட்டில்வாழ்விலங்கை
ஏவியேபயிர்களை யிழிவதுபுரிந்தான்
தாவியென்றந்தை தான்வேட்டையாடி

ஒட்டவேவிலங்கை யோதுவேகேளீர்
தாட்டீகப்பன்றியைத் தானவனனுப்ப
நிருபனும்வதைக்க நீச்சமாதிருவரை
குருமுனிவிடுத்தே கூடிடச்சொன்னான்
வேந்தனுமறுக்க விசுவாமித்திரன்
சாந்தமாய்நாட்டைச் சரசமாய்க்கவர்ந்தே
பரதேசியாக்கிப் பாவியுமெங்களைத்
துறவிபோற்காவி துணியதுகொடுத்தே
நாட்டைவிட்டப்புறம் நகன்றிடச்செய்தான்
காட்டையுமடையவே கவுசிகன்றானும்
தானமாயீந்த தனமதைத்தாவென
மோனனுங்கேட்டான முடிபுனைமன்னன்
காசியிற்சேர்ந்து கடன்தருவேனென
தேசிபோற்றாகளைத் துடரவேவிடுத்தான்
அவன்புரிதுன்ப மனுபவிக்காமலே
தவமுனிகடனைத் தானதரவேண்டி
அன்னையைவிற்க வரசனுந்துணிய
பொன்னதக்கொடுத்து பூசுரன்வாங்கினான்
அடர்வழக்கிட்டு யடியனைக்கூட
திடமுடன்பத்தினன் தெரிகுவீரையா
தந்தையுமந்திரியுந் தானுமேசென்றனர்
எந்ததோராநாடோ வெளியனுமறியேன்
வேதியனியற்றும் வெம்புறுதொழிலதை
ஆதிபினெழுத்தென வமைக்கின்றேமையா
எந்தன்றன்சரித்திர மிதுவதாம்நேசரே
சந்திரவதிதாய் சாற்றினேனறிவீர்.

அசலாத்துபிள்ளை-வசனம்.

இதுகளெல்லாம் பரமசிவன் செயலிதற்காக வருத்தப் படாதே யப்பா.

சாமாசாஸ்திரி-விருத்தம்.

காட்டினைவிட்டுநாமும் நடந்ததிதூரம்வந்தோம்
காட்டினிற்பாதியுற்றேன் கதிரோனுமுச்சிசாய்ந்தான்

தாட்டீகமாகத்தொர்ப்பை தன்னேடுசமுதிடுக்கி
வீட்டினிற்கேகவேண்டும் விரைவினிற்சேர்ப்பீரப்பா.

வசனம்.

அடேசினு குப்பா அப்பா தேவதாசா வுச்சிப்பொழு திரங்கிவி ட்டது காட்டில் நெடுந்தூரம் வந்துவிட்டோம் சிக்கிரம் சமுத்துகள் சேர்த்துக்கொள்ளுங்கள் வீட்டிற்குப்போவோம் தோழர்களே.

அசலாத்து-வசனம்.

ஆம்-ஆம் நேரமாய்விட்டது நேக்குபசிக்கிறது அடா நேக்கும் பசிக்கிறது சிக்கிரம் போகவேண்டுமடா சீனு.

தேவதாசன்-தரு-நாதநாமக்கிரிகை-அடதாளம்.

சேர்ப்பீர்களென்றிடுமுன்னமே இதோ
சிக்கெனகாரைபரித்தனன்

அசலா-மோகனம்-அடதாளம்.

பார்ப்பவர்மெய்த்திடநாங்களும் இதோ
பற்றியேதர்ப்பையுந்தந்தனும்

தேவதாசன்.

புதரினில்வெள்ளனத்தாவியே யிதோ
பொடிவிரகுகளைச் சேர்த்தனன்

அசலாத்து.

சதிராகநாங்களுஞ்சென்றுமே இதோ
தழைத்தபிலாவிலைதந்தனும்

தேவதாசன்.

நீண்டமாந்தளைசுற்றியே யிதோ
நிகழ்வேக்கிலைகளுஞ் சேர்த்தனன்

அசலாத்து.

தாண்டவமாடிபோநாங்களும் யிதோ
தனிமுசுட்டைமுன்னைதந்தனும

தேவதாசன்.

தோழரேமுன்னைமுசுட்டையும் பாலா
சொல்மாவிலையும பறித்தனன



அசலாத்து.

தாழ்வதுவன்றியேநாங்களும் பிதோ
தனிவிறகுமெத்ததர்ப்பேரு

தேவதாசன்.

அண்ணமாரேதெர்ப்பைதேடியே கொஞ்சம்
அறுத்தேவருகிறேன் தாழ்வீரே.

அரலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்.

அப்பனேதேவதாசா அந்தியின்பொழுதுவாய்த்தும்
அப்பனேயிங்குநின்றால் யானைநாய்கரடிநோக்கும்
அப்பனேவுனக்கேதெற்பை யளிக்கிறோம்கொஞ்சம்நாங்கள்
அப்பனேவருவாய்போவோமாத்திற்குவிரைவிற்றுனே.

வசனம்.

அப்பாதேவதாசா, சாயுங்கால மாய்விட்டது யிங்கிருக்கப் போகாது மிருகங்கள்கண்டால் வதைசெய்யு முனக்கு நாங்கள் கொஞ்சம் போது தெர்ப்பை கொடுக்கிறோம் நம்பளாத்திற்குப் போவோம் வருவாயப்பா.

தேவதாசன்-வசனம்.

அதுசரியல்ல நான்தேடி அறுத்துக்கொண்டு சீக்கிரம் வருகின்றேன் தோழர்களே.

பொது-விருத்தம்.

காட்டினிற்றேவதாசன் கருதியேதெர்ப்பைக்காக
காட்டினிற்நிற்கக்கண்ட கவுசிகன்சமயமென்றே
காட்டினிற்சர்ப்பமாகக் கந்தனைவரவேகோரி
காட்டினிலழைக்கமார்க்கங் கருதியேதெரிகுவீரே.

வசனம்,

கேளுங்கள் சபையோர்களே தேவதாசனிந்தப்பிரகாரங் காட்டில் தெர்ப்பையைத் தேடப்போகுஞ் சமயங்காத்திருந்த கவுசிகன் சுப்பிரமணியரை வரவழைக்கிர விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-எமுனகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வேலாயுதனேவருவீர் யிதுசமயம் வேலா

அநுபல்லவி.

கோலாகலமாமயிலேறுங்கந்தனேநாதா
சீலாதெய்வானைமகிழ்லோலாநின்வாக்கின்படி. (வே)

சரணங்கள்.

தேவர்கள்சபைமுன்னிலே வசிஷ்டனுடன்
செய்தபந்தன்னிலே
மேவநின்னடியன்றுமேனவாக்களித்தமூர்த்தி
சாவதானஞ்செய்யாமற் சாற்றுமென்முறைகேட்டே (வே)

நாடுநகரஞ்சொத்தும் அரிச்சந்திரன்
வீடுங்கவர்ந்தேன்முற்றும்
ஓடுகைவேந்திக்கட னுட்பட்சிக்காசிவந்தே
யீடுமகன்றேவியையும் யிட்டானடுமையானன் (வே)

பாலன்காட்டிற்கேவர்தான் சமிதைக்காக
லோலன்தெர்ப்பைக்காய் நொந்தான்
காலமிதுவேநாதா கடுகிநீயென்முன்கவரில்
ஞாலமீதினிற்கீர்த்தி நானடைகுவேன்சுவாமி (வே)

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரன் சபையில் கொடுத்த வாக்கின்படி சுப்பிரமண்யர் விஸ்வாமித்திரன்முன் தோன்றினரென்றறிவீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

போற்றி போற்றி சிவசுப்ரமணியக்கடவுளே போற்றி.

சுப்ரமண்யர்-வசனம்.

ஓய்முனியே யென்னைக்கோரி அழைத்தகாரியந் தெரியச்சொல்லவேண்டும் ரிஷியே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

கந்தனேசொல்லக்கேளாய் காலகண்டையரேவ
வந்ததோர்தேவதாசன்வனமதிற்தெர்ப்பைக்காக
நொந்ததோகொய்யவேண்டி நோக்கிருனலத்தண்டே
அந்தமாம்புத்தொன்றுண்டு பதிற்சேர்வாயறையக்கேளே.

வசனம்.

சுவாமி தேவதாசன் காட்டி லசலாத்துப்பிள்ளைகளுடன் தெர்ப்பைகொய்யவேண்டி ஆலமரத்தருகிலிருக்கும் பாழும்புத்தின்மீதினே க்கியிருப்பதைநோக்கிரு நீரதிற்பிரவேசிக்கு விதஞ்சொல்லுவேன்கேளுஞ் சிவசுப்ரமண்யக் கடவுளே.

இதுவுமது-விருத்தம்.

அறைகுவேனண்ணலேநீ ரரவமாம்புத்திற்சேர்வீர்
துரைமகன்தெர்ப்பைக்கொய்ய துணிந்திடநானேசெய்வேன்
விரைவினிநீருஞ்சிறி விஷமேவக்காத்திற்கொத்து
மறைபவன்றனைக்கெலித்தே வாழ்குவேனும்மாற்றேவே.

வசனம்.

சுவாமி நீர்நாகப்பாம்பாகி யந்தப்புத்திலிரும் நான்தேவதாசனை புத்தின்மீதிருக்குந் தெர்ப்பையைக்கொய்யச் செய்வேனப்போதவன் கையில் விஷமேரும்படிகொத்து மதினல் நான்வதிஷ்டனை கெலிப்பேனுண்டவனே.

சுப்ரமண்யர்-வசனம்.

அப்பாமுனிவே அப்படியேகொத்தி தேவதாசனை மரிக்கச்செய்வேன் நீவுஞ்சமர்த்தால் அரிச்சந்திரன்வாயால் பொய்சொல்லச்செய்வாய் முனிவே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

ஆண்டவனே தாங்களிவ்வள வுபகாரஞ்செய்யி னனந்தவரிச்சந்திரன்வாயிற் பொய்வரவழைத்துடனே வதிஷ்டனை பதிகபவமானத்திற்குள்ளாக்குவேன் சுவாமி,

சுப்பிரமணியா-வசனம்.

அப்பாமுனிவயே நீசொல்லிய வாறே செய்கிறேன் போய்வருகி றேன் ரிஷியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அடியேன்பேரில்கிருபைசெய்வீர் சுப்பிரமணியக்கடவுளே.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே சுப்ரமணியர் பாம்பர்ப்புத்தில்சே ர்ந்தவுடன் விஸ்வாமித்திரமுனி பிராமணவேடம்பூண்டு அசலாத்துப் பிள்ளைகள் முன்வந்து தேவதாசன்தனித்து நிற்கிறகாரணத்தை விசா ரிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்பா சிறுவர்களே நீங்களார் பிந்தமாலைப்பொழுதில் மிருகம் நிறைந்தகாட்டில் நிற்கிறீர்கள் யென்னயோசிக்கின்றீர்கள் யெனக் குச் சொல்லுங்களப்பா மைந்தர்களே.

அசலாத்து-வசனம்.

கேளும் அய்யரே நாங்கள் காசியிலிருக்கும் வேதியர்களின்பிள் ளைகள் சமுத்தெடுக்கவந்தோம் இந்தச்சிறுவனுக்கு தெர்ப்பைவேண் டியோசிக்கின்றோம் வேதியரே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

இந்தசிறுவன்யார் இவன்வுங்களைவிட மிகுந்த அழகும் காத்தி ரமும் வுடையவனுயிருக்கிறன் யிவனும் பிராமணப்பிள்ளைதானுசொ ல்லுங்களப்பா பாலரே.

அசலாத்து-வசனம்.

இவன் பிராமணப்பிள்ளையல்ல க்ஷத்திரியபிள்ளை காசிபட்டண த்திலிருக்கும் ஒரு வேதியனுக்கடிமையாகுமையா சுவாமி.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

ஆரப்பாயுன்னையீன்ற வன்னையார்தந்தையாரெங்
தூரப்பாவடிமையாக வுற்றவாரெதுவோவுந்தன்
பேரப்பாயாதானே பெருகநீதெற்பைகொய்ய
தேறப்பாவுன்பின்வாந்றன் றிவாஞ்செப்புவாயே.

வசனம்.

அப்பா பாலகாநீயார் வுன்றந்தையார் நீயடிமையான காரணம் சொன்னால் நீதெற்பைகொய்யுமிடத்திற்கு நானும்வருகிறேனப்பாசி றுவனே.

தேவதாசன்-விருத்தம்.

எந்தவூரென்றுமே வந்தென்னைக்கேட்டிட்ட
விளம்பினே வுரைக்கக்கேளா
பினிவுடையயோத்தியைக் கனிவுடனாண்டதொரு
பிறைபவ நற்றவத்தாற்
சந்திரவதிகெர்ப்பத்தின் வந்தனென்பெயர்தேவ
தாசனென் றியம்புவார்கள்
சர்ப்பனைகள்புரியவப் பாவிகௌசிகன்செய்த
சதியினா லரசிழந்தோம்
வந்தவனிரக்கவே தந்தபொன்கடனாகி
வளமிகுநகக் காசிசேர்ந்தே
வனிதயைவிற்றன னினிவுடனென்தந்தை
வாங்கினான் காலகண்டன்
தொந்தமாய் வழக்கிட்டெங்களைக்கவர்ந்ததி
சொல்லொணா விம்மையிட்டான்
தூத்தினனடவிக்கே வருத்தமாய்வந்தேனான்
துரோகிமுனி செய்தநூதே.

வசனம்.

கேளுஞ்சுவாமி யென்பேர்தேவதாசன் யென்தாய் சந்திரமதித ந்தை அயோத்தியாண்ட அரிச்சந்திரன் பாதகனாகிய விஸ்வாமித்திர னெனதோருதுஷ்டன் அரசைக்கவர்ந்தான் தானங்கொடுத்த பொன் னைகடனாய் சுமத்த காசியில்வந்து தந்தையென் தாயைவிற்க வேதிய

ன்வாங்கி மோசத்தால் என்னைக்கொண்டு வெகுதுன்பங்கொடுத்து காட்டிக்குமனுப்பினு னிதுவெல்லா மெங்களுக்கு சனியனாய்முளைத்த சண்டாளகௌசிகனு லானதென றறியீரையா.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்பா தேவதாசா முனிவனானதென்று சொன்னாயவன் மென்னமோசஞ்செய்தா னெனக்குத் தெரியச்சொல்லுமப்பா பாலகா.

தேவதாசன்-விருத்தம்.

ஐயரேயிரந்தபொன்னை யரசன்பாலிட்டுச்சென்றே
ஐயவோபுரைச்சொல்லி யனுப்பினா னீச்சமாதை
ஐயரேமறுக்கவே யந்த வரசனைக்கவர்ந்தான்பாவி
ஐயரேயந்தப்பொன்னை யருங்கடன்சுமத்தினானே.

வசனம்.

அப்பா தானம்கொடுத்தபொன்னை அரசனிடம் வைத்துச்சென்றார் நீச்சமாதையனுப்பி சோச்சொன்னான் மறுக்கதந்தையின்செங் கோலைகவர்ந்தான் பாதேசிக்காளாக்கினான் செங்கோலுக்குள்ளடங்கி லதென்றுணராமல் முன்வைத்தபொன்னை கடனாகச்சுமத்தினானின்ன லனைகளும் வேதியரே.

இதுவுமது-விருத்தம்.

அன்பனேகடனைந்தண்ட லனுப்பினான்தாசனென்றால்
துன்பமேபுரிந்தோன்பொய்மையைச்சொல்லெனவறுத்தெடுத்தான்
கன்பமீசாகாதென்றே கருதியேயடிமையானேன்
மின்னமென்செய்வான்பாவி யிலரியஞ்சேர்கதெரிகுவாயே.

தேவதாசன்-வசனம்.

ஐயரே கடனைத்தண்ட தாசன்வர்தாவலன் மகாளாக ராசித்தமு டையவன் ஒருபொய்யுரையென வாறுக்கினுன தற்கஞ்சினானுமென் தாயுமடிமைபட்டு கடன்தீர்த்தோ மினிபந்தப்பாவி யென்ன செய்தாலு மஞ்சுளோமென்றறியீர் வேதியரே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்பாபாலகா யிவ்விதத்துன்பங்களை யனுபவிப்பதைவிட ஒரு பொய்யுரைத்தாலதினாலென்னபோகுமப்பா சிறுவனே.

ஸ்ரீ அரிச்சந்திர விலாசம்

தேவதாசன்-விருத்தம்.

நீரின்மேற்குமிழியொக்கும் நிலையில்லையிவ்வாழ்வுநிதமோகையா
யாருதானடைந்திருந்தா ரழியாபவிவ்வுலகில்சத்தியராகி
சீர்மனைவிமக்கள்சுற்றந் தனைநம்பிநிலைவிடுத்தாற்செப்பப்போகா
பேர்நரகிலாழ்ந்திடுவாரினிக்கேளே னிவ்வார்த்தைபேசாதையா.

வசனம்.

கேளும் வேதியரே பொய் சொல்லி அசத்தியனாய் கற்பகோடி காலம் பூலோகத்தில் வாழ்ந்தவர்களுண்டோ மனைவிமக்கள் சம்பத்தைநம்பி நிலைவிட்டவ னிருப்பதற்கிட மதிகரமென்றறிவீரினி விப்பேர்க்கொற்றவார்த்தை யென்செவிகேட்கப்பேசாதிருப்பீரையாவேதியரே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்பா சிறுவனே நோக்கு இந்தவேளையில் தெற்பையெங்குசிக்குமப்பா பாலனே.

தேவதாசன்-வசனம்.

ஐயோ அதோ ஒருபுற்றின்பேரில் விசேஷமாய் தெற்பை தெரிகின்றது அருகில்சேர அச்சமாகின்றது வேதியரே.

விஸ்வாமித்திரன-வசனம்.

அப்பாபாலகா க்ஷத்திரியனாய் பிறந்தபிள்ளை யச்சங்கொள்ளப்போமோ பயத்தைவிட்டு பறித்துக்கொண்டு போவாயப்பா.

தேவதாசன்-விருத்தம்.

ஐயனே அருகிற்சேர யச்சமும்பயமுநெஞ்சி
லையனேயாகுதெந்த னன்னைமேல்நாடுமென்ன
மையனேதெற்பைதன்னை வமைக்காமற்செல்வேனுந்
னையனேயடிமைகொண்டோ னடிப்பனேயென்செய்வேனே.

வசனம்.

கேளும்வேதியரே தெற்பையைப்பார்த்து அருகிற்சேரநிமிலாகின்றது தாய்தந்தைகள்பேரில் மனம்நாடுகின்றது தெற்பை கொண்டு போகாவிட்டால் காலகண்டையர் தெண்டிப்பாரென்று திகிலுமாகின்றது யென்னசெய்வேனையரே.



விஸ்வாமித்திரன-வசனம்.

அப்பா பாலகா நான்முன்னே நடக்கிறேன் நீ பயப்படாமலே யென்பின்னே வருவாய்பாலகா.

தேவதாசன்-வசனம்.

அப்படியானால் வருகிறேன் சுவாமி.

அசலாத்து-விருத்தம்.

ஒப்பிலாத்தேவதாசா வுபர்குணபாலகேளாய்
இப்பவேபொழுதுதானு மிரக்கிடுமுகமாச்சையா
அப்பனேயக்கபுற்றி னருகினிற்போகப்போகா
திப்படித்திரும்பிவாரா யெங்கள்பங்குனக்கேயீவோம்.

வசனம்.

அப்பாதேவதாசா அந்திநேரத்தில் புற்றினருகிற் போகக்கூடாது புற்றிலிருக்கும் சர்ப்பம் வெளியாகுங்காலம் நாங்களறுத்த தெற்பையையுனக்கே கொடுக்கிறோம் வருவாயப்பா.

தேவதாசன்-விருத்தம்.

ஐயரேகாடுதன்னி லலைந்துமேவருத்தமுற்று
மெய்யவேகொய்ததெற்பை நுகர்வதுநீதியன்றே
பய்யராமனைசெறுத்தெற்பை பற்றிபின்கோடிவாரேன்
கையதைக்குவித்தேனிங்கு கனிவுடனிற்பீர்போற்றி.

வசனம்.

அப்பா தோழர்களே நீங்கள் காட்டிலலைந்தறுத்த தருப்பையை நான்வாங்கிக்கொள்வது நீதியல்லவானதாலித்தோ நானோட்டமாயோடி தருப்பையறுத்துக்கொண்டு வருகிறேன் அதுவரையில் நீங்களிந்தமரத்து நிழலில் நிற்பீர்களப்பா நேசர்களே.

அசலாத்து-வசனம்.

ஆனாலுன்னிஷ்டம்போல் போய் சீக்கிரம் வருவாயப்பா.

தேவதாசன்-விருத்தம்

அடிமையாயென்னைக்கொண்ட வன்னலவ் வேதியன்றான்
கொடும்பாவிவருதன்முன்னே கொய்துவாதர்ப்பையென்றான்
விடிகிலானன்றிச்சென்றால் வேதியனடிப்பானேயோ
கடுகியேகொய்வேன்காப்பாய் காசிவாழ்விஸ்வநாதா.

வசனம்.

ஓ காசிவாழும் விஸ்வநாதனே நானிந்ததருப்பையைக் கொய்து க்கொண்டு போகாவிட்டால் என்னைக்கொண்டுபோகிறவேதியன் தண்டிப்பான் புற்றருகிற்செல்ல பயமாகிறது நீதான் றணைவிஸ்வநாதா.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவதாசனை யழைத்துக்கொண்டு வந்த விஸ்வாமித்திரன் புற்றினருகில்விட்டு மாயமானான் தேவதாசன் கடவுளைத்தியானித்து புற்றின்மீதிலிருக்கிற தருப்பையைப் பறிக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவதாசன் -கண்ணி-அபுரூப-உசேனி-ஏகதாளம்.

தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்
தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம் (தில்)

எல்லாமுனிகூதோகாசி யீசாவுன்றனருளோ
இக்காட்டினிற்றருப்பைகொய்ய விட்டாய்விதிச்செயலோ (தில்)

பார்க்கப்பயமாகுதுளம் பதறுதடிதாயே
பற்றிக்கையாற்றருப்பைக்கொய்வேன் பரமேயருள்வாயே (தில்)

பாவிகனிவில்லாலென்னைப் பாலனென்றுமறிந்தே
பற்றச்சொனானென் றருப்பையிதோபறிக்கிறேனேதெரிந்தே-தில்

தேவதாசன்-விருத்தம்.

என்னமோயீசாபுற்றி லிரைச்சலுஞ்சிறற்சத்த
மென்னமோயிடுகுதையா வேதுண்டோவறியேனுள்ளே
என்னமோகாலங்காணே னெங்கையேயபெற்றதாயே
என்னையித்துயாருந்த வெழுதினேனபாவியன்றோ.

வசனம்.

ஓபரமசிவமே என்னைப்பெற்றதந்தையே என்னுடைமறவாததாயே இந்தப்புற்றினுள் பெருத்த விரைச்சலுஞ் சிறலுங் கேட்கிறதே

ன்னமோ தெரியேன் அடியம்மா வுனவயிற்றிலென் ௯வுறபிக்கும்போ
தேயிவ்விதத்துன்பமனுபவிக்கவெழுதினவன்பாவிபாகுமடி அம்மணி.

கண்ணி.

புதருபோலபுற்றின்மீதிற் பொதிந்தோங்கியதருப்பை
புசித்தகொய்யமனதிற்பயம் பொங்குதருள்வைப்பை (தில்)

சத்யமுளவெனதுதந்தை சந்திரன்பதந்தன்னைச்
சார்ந்துயிதோகொய்யலுற்றேன் சம்போகாருமென்னை (தில்)

ஆ ஆ காசிநாதாநாக வரவஞ்சீறித்தானே
அடியேன்கையிற்கடித்ததுனக் கபயமிதோநானே. (தில்)

தேவதாசன்-விருத்தம்.


ஐயரின்மக்காளென்னை யழைத்தமேவந்திரிங்கு
பையவேதருப்பைதன்னைப் பற்றிநான்கொய்யுங்காலை
நொய்யவேநாகஞ்சீறி நோக்கியேவெயிற்றிறாலே
கையதிற்கடித்ததப்பா கடிகியின்கோடிவாரீர்.

வசனம்.

அப்பா தோழர்களே நான் தருப்பை கொய்யும்போது புற்றிலி
ருந்து நாகசர்ப்பஞ்சீறி யென்வலது கரத்திற்கொத்தினது ஓடிவருவீ
ர்களப்பா நேசர்களே.

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்.

என்னடாதேவதாசா வெங்கள்பின்னுடிவர்தா
யென்னடாவேண்டாமென்று மேற்காமற்றருப்பைகொய்தா
யென்னடாசர்ப்பந்தீண்டி யேங்கிறுய்தாய்வயிற்றி
லென்னடாகொள்ளியிட்டா யிதற்கென்னசெய்வோமப்பா.



வசனம்.

அப்பா தேவதாசா நாங்கள் வேண்டாமென்று தடுத்துங்கேளாததால் புற்றின்மீதிருக்குந் தருப்பையைத் தீண்டவே பாம்பு கடித்தது பெற்ற தாய்வயிற்றில் கொள்ளியை வைத்துவிட்டாய் என்னசெய்வோமப்பா.

தேவதாசன்-கண்ணி-சாவேரி-ரூபகம்.

ஆசிவனே ஆசிவனே ஆசிவனே-அரனே
காசிவாழுமீசாவுன்றன் கழலடிதாபரனே (ஆ-சி)
புவனம்படைஅயனுமரி பூணக்கிட்டாத்நாளா
பவநீக்கிபரனேகாசி பாதாவென்னையாளா (ஆ-சி)
நீவிமகிழ்நிபுணமதி நீருமழுவுடையா
ஞாலியுனைப்பணிந்தேன்பிஞ் ஞகனேபூதப்படையா (ஆ-சி)
மாயன்றனக்கோராழியை மகிழ்ந்திட்டகுணனே
சேயன்தனைவிஷந்தீண்டிற்று சீர்பதந்தாமணனே (ஆ-சி)
அஞ்சலெனவமரர்நஞ்சை யன்றுவுண்டபரனே
தஞ்சமென்றேயுனைக்கோறினேன் தற்கார்சூலக்கரனே (ஆ-சி)
காலன்றனைவிழவுதைத்தே காத்தாய்பாலன்றனையே
சீலனெனத்தொழுதேனினிச் சீர்தூக்கிடுமெனையே (ஆ-சி)
முக்கண்ணனேமாயன்மகன் முடியவெரித்தவனே
இக்கண்ணெனைக்காருமுமை யிடமாய்த்தரித்தவனே (ஆ-சி)

வசனம்.

ஓ-பரமசிவமே, என்ன கெதிவிட்டாய் உன்றிருவடிக்கபயம் அபயம் காசிநாதா.

தேவதாசன்-கண்ணி.

ஆதியேயும்பரோதிமெவ் வருளேசுயம்பொருளே
ஜோதியேயுனைத்தொழுதேனிங்கு சுகுணவரமருளே. (ஆ-சி)
விண்ணேவிண்ணின்வெளியேசிவ வித்தேமோனமுத்தே
அண்ணேயுன்றனடியேற்றினே னரனேவராதந்தே (ஆ-சி)
எங்குநின்றவீசாவென் றுளிங்குநின்றதுரையே
தங்தம்படியுன்பதந்திற் றனைவைத்தருளிறையே (ஆ-சி)

சரவணனையளித்தசரா சரத்தினுளவுருவே
தருணமிதுகாசிவிட்டே தாவவென்முன்குருவே (ஆ-சி)

தேவதாசன்-வசனம்.

அப்பா தோழமார்களே.

தேவதாசன்-விருத்தம்.

ஆலமுள்ளரவப்புற்றென் றறியாமற்றுவியம்மா
தாலனுந்தற்பைதன்னைப் பற்றியேயறுக்கப்பாம்பு
சிலனைக்கடித்ததென்று செப்புவீரென்றன்றாயு
மோலமிட்டழுவானீதி ஓதிப்பின்போவீரப்பா.

வசனம்.

அப்பா தோழர்களே பாம்பிருக்கிற புற்றென்றறியாமல் நாங்கள் தடுத்துங்கேளாமற் றருப்பையைக்கொய்யப் பாம்புகடித்து உன்மகனிறந்தானென்று என்றாய்க்குச் சொல்லி மெத்தவழுதுபுலம்பாமல் வேண்டிய தைரியமுஞ் சொல்வீர்களப்பா.

தேவதாசன்-கண்ணி-பியாக்-ரூபகம்.

சிவசங்கராசிவசங்கரா சிவசங்கராசிவமே
தவஞ்செய்தெனைப்பெற்றதாயை தற்காத்தருள்பவமே.
ஐயோவண்ணமாரேவென் றன்னைசொன்னசிரே
நொய்யவந்துமுடிந்ததிங்கே நோகீர்விதிநேரே.

அசலாத்துப்பிள்ளைகள்-கண்ணி.

அப்பாதேவதாசாநாங்க ளடிக்கடியேதடுத்தோம்
ஒப்பாமலேமோசஞ்செய்தாய் ஓகோதுயரடுத்தோம்

தேவதாசன்.

அன்றேஅயனெழுதினதை யழிக்கப்போமோவையா
இன்றிக்கெதியுற்றதென்ன வியம்பீர்தாய்க்கேமெய்யா.

அசலாத்துப்பிள்ளைகள்.

விதியோமுனிசதியோகால கெதியோவொன்றுமறியோம்
பதிவிரதைமனந்தேற்றிடும் பண்பெதுவோதெரியோம்.

தேவதாசன்.

அன்னையிதைகேட்டால்மெத்த வழுவாளுயிர்விடுவாள்
முன்னைவினைவாய்த்ததென்று மொழிவீர்பிலேப்படுவாள்.

அசலாத்துப்பிள்ளைகள்.

கூடியுனையழைத்தேவந்தோர் கொடும்பாம்பிற்குயிரையாய்
தேடியிட்டசேதிசெப்புந்தெளிவறியோம்நிறையாய்

தேவதாசன்.

ஈசன்விதிதனக்கோர்நீங்களேதுசெய்வீரையா
நாசமுனிசூதுஞ்சனி நாட்டமென்பீர்மெய்யா.

அசலாத்துப்பிள்ளை-வசனம்.

அப்பா தேவதாசா என்னடா வாய்குளறிறாற்போல் பேசுகிறாய் நேக்குமெத்தத் துக்கமாகிறதப்பா.

தேவதாசன்-கண்ணி-சாமா-ரூபகம்.

கால்சோருதுகைசோருதே கண்களிருளுதம்மா
பால்குடித்தநாவும்பல்லும் பற்றிக்கிட்டுதம்மா
மறையோன்கையிலுன்னைவிட்டுமடியலானேனம்மா
நுரைதள்ளுதேநெஞ்சின்கோழை நோக்குதேமேலம்மா
பெற்றவயறெரியவிட்டேன் பிள்ளையெனுமாசை
அன்றிடவுங்கெதியுனக்கே யமைந்ததுவோஓசை
தந்தைபோனவழியுங்காணேம் தனையனையுந்துறக்க
இந்தவிதியுனக்கேபாவி யெழுதினானோபறக்க.

தேவதாசன்-வசனம்.

அப்பா தோழர்களே நீங்கள் ஜாக்கிரதையாய் நாடுசேர்ந்து என்தாய்க்கு இந்தச் சங்கதிசொல்லி அவளென்னைக் காணும்படிக்கு அடையாளமிட்டுக்கொண்டு போவீர்களப்பா நேசர்களே.

தேவதாசன்-கண்ணி-முகாரி-ஏகதாளம்.

அன்னைதனைவிடுக்கவுமிந்த வடவிதர்ப்பையெடுக்கவும்
என்னைப்பாம்புகடிக்கவும் அரனே-அ-அ-இதுவுமுன்றனருளோ()
தந்தைதனியானதுமென்றன் குருபுமறியானதும்
என்றனுயிர்பறிப்பதும்-அரனே-அ-அ-இதுவுமுன்னருளோ(அர)
மன்றுநாள்பிறந்ததும்-அ-அ-அ-மறையோனுக்காளானதும்
இந்நாள்தனியானவும்அரனே-அ-அ இசைந்ததுமுன்வருளோ ()
சூரியன்குலம்பொய்த்ததும்வேதச் சுருதிமொழியேத்ததும்
காரியுமுனிசேர்ந்ததும்-அரனே-அ-அ-கபடமுன்றனருளோ(அர)

தேவதாசன்-கன்னி-நீலாம்புரி-ஏகதாளம்.

என்னைகெதியென்றிருந்தால் இனியொண்டியாய்விட்டேன்
அன்னைதனையருள்வைத்துமே ஆளுமுறையிட்டேன்
அடியற்றதோர்மரம்போல்மண்ணி லமர்ந்தேனிதோஅரனே
முடிசோர்ந்துகபங்கட்டுதே மூச்சொடுங்குதுபரனே.

சாமாசாஸ்திரி-விருத்தம்.

என்னதான்செய்வோமிந்த வியம்பொறுவவதிக்கேதான்
மன்னவன்பாலன்றானு மண்மீதிலயர்ந்தேசோர்ந்தா
னிந்ததுரதேதிதன்னை யியம்பிடிலவன்றாய்கேட்டே
நன்னகர்தனில்வாழாளே நாமிதற்கென்செய்வோமே.

வசனம்.

அடா சுப்பா சீனு இந்த அவதிக் கென்னசெய்வோம் இவன் மண்மீதிற் சாய்ந்திறந்தான் இந்தச் சங்கதியை இவன்தாய் கேட்டால் உயிர்வைக்கமாட்டாளே அதற்கென்ன செய்யலாஞ் சொல்லுங்களடா.

சுப்பாசாஸ்திரி-வசனம்.

அடாசாமா நோக்கொன்றுந்தெரியவில்லை இந்தப்பழி நம்மை விட்டதென்று எண்ணப்போகாதடா.

அசலாத்துப்பிள்ளை-கன்னி-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

என்னசெய்குவோமினி என்னசெய்குவோம்நாம்தான்
இவனுக்குற்றவிதிக்கே—ஓசிவமே
அன்னநடையாளெங்கள் அடைக்கலமெனச்செய்தா
ளவடனக்கேதுசொல்வோம்—ஓசிவமே
என்மகனெங்கேயென்று யேங்கியவடான்கேட்டா
லெவ்விதம்வாய்விடுவோம்—ஓசிவமே
மன்மதனையெரித்த மகிபாநீபுரிந்திட்ட
மாயமோதான்தெரியோம்—ஓசிவமே
இனியவசனமுள்ளா னிலகுங்கல்வியுணர்ந்தோ
னிறைவன்மகனேர்சே—ஓபாம்பே.

கனிவாயுளோனைவிட்டே கருதியெங்களைத்தீண்டி
கருமமோவுனக்குத்தான்—ஓபாம்பே.
அசைத்துங்கட்டையைப்போல யழகுள்ளதேவதாசா
னடங்கிமூச்சொடிங்கினான்—ஓசிவமே.
வசைக்காளாய்நாங்களின்றோம் வடிவுடையாள்பாகனே
வந்திச்சவத்தைக்காப்பாய்—ஓசிவமே.

அப்பாசாஸ்திரி-விருத்தம்.

இப்படியழுவதாலே யிக்குறும்பலனேதப்பா
இப்படியிவனுமாண்டா னினிவீடுபோகவேண்டும்
இப்படிவளர்த்ததாய்க்கே யிவன்சேதியுரைக்கவேண்டும்
இப்படிவிட்டாற்பிரேத மிருக்குமோயிராதோசொல்வாய்.

வசனம்.

அன்றடாசினா இவனோ யிறந்துவிட்டான் இந்தசேதியிவன் தாய்க்குத் தெரிவிக்கவேணும் பொழுதும்போகின்றது நாம் போய் விட்டால் இந்தசவம் இங்குஇப்படியேயிருக்குமோ இராதோ இதற்கொருயோசனை சொல்லடா சினா.

சினன்-விருத்தம்.

ஓடியேதெர்ப்பைகொய்து ஓங்கியேதோழன்றன்னை
நாடியேயிங்குபக்ஷி நரிகளுந்தீண்டிடாமல்
தேடிநாமிலைகொம்பாலே திரேகத்தைமூடிச்சென்று
கூடியுந்தாய்க்கேசொன்னால் வந்துகண்டிடுவாளப்பா.

வசனம்.

அடா அப்பா தேவதாசனை நரி கழுகு முதலானதுகள் தீண்டாதபடிக்கு செடிகளைப்பிடுங்கி இவன் திரேகத்தைமூடி தாயானசந்திரவதிக்குப் போய்ச்சொன்னால் அவள்வந்து காணக்கூடுந்தோழர்களே.

அப்பாசாஸ்திரி-வசனம்.

ஆம்ஆம் அப்படியே செய்யலாம் நீசொன்ன உபாயங்கேட்டு எனக்கு மெத்த சந்தோஷமாச்சுது சீக்கிரம் செடிகளைப் பிடுங்குங்களப்பா தோழர்களே.

அசலாத்துப்பிள்ளை-வசனம்.

அப்பா தேவதாசா உன்னுடலை நாய்நரிகள் தீண்டாதிருக்கச் செடிகளால் நன்றாய் மூடிவிட்டோமினி நாங்களாத்துக்குப் போய் உன்னுடைய தாயாருக்கு இந்தச்சங்கதி தெரிவிக்கின்றோம் இதுவுமெங்கள் தலைவிதிதான் உன்னைத் தனியேவிட்டுப் போவதடா தோழனே.

சாமாசாஸ்திரி-விருத்தம்.

ஓதுவேனென் றுகேளீ ருண்மையாந்தோழமாரே
மாதுதான்வழியறிந்து மகன்றனைக்காண்பதற்கு
மேதுவாய்த்தழைபிடுங்கி யிரைத்துக்கொண்டேகினப்பா
தீதுகளின்றிமாண்டோன் திரேகத்தைக்காணுவாளே.

வசனம்.

கேளுங்களப்பா சந்திரவதிக்குவழிதோற்றுது ஆதலால்தேவதாசன் சொன்னபடி வழியிற்காணுஞ் செடிகளைப் பிடுங்கி நாம் நடக்கும் பாட்டையிற் போட்டுக்கொண்டு போனால் அதைப் பார்த்துக்கொண்டேவந்து தன்மகனைக் கண்டுபிடிப்பாள் தோழரே.

அசலாத்துப்பிள்ளை-வசனம்.

ஆம்ஆம் நீசொன்னபடியே அடையாளமிட்டுக்கொண்டு ஜாக்கிரதையாய் ஆத்துக்குப்போகலாம் வாருங்களப்பா.

பொதுவிருத்தம்.

இவ்வாறுவசலாத்து மைந்தர்காட்டி
விருத்தியேபிரேதத்தைத் தழையால்மூடி
நொவ்வாமல்வழிதெரியக் குறிப்புமிட்டு
நோக்கிவரக்காசிதனை ஐயன்வீட்டில்
ஓவ்வாதமனத்துடனே பிரிந்துசென்ற
உத்தமியும்பொழுதஸ்த முற்றதென்று
எவ்வாறுமகன்காணே னெனவேயெண்ணி
ஏங்குவாள்துயரத்தா லேங்குவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாக அசலாத்துப்பிள்ளைகள் காட்டைவிட்டுவருகிறவழிகளில் தழைகளைப்போட்டு விட்

டிற்கு வருகுஞ்சமயத்தில் சந்திரவதியம்மன் மாலைப்பொழுதாகி தாகியும் மகன் வரவில்லையென்பதாகத் துயரப்படுகிறவிதங் காண் பீர்கள் கனவான்களே.

சந்திரவதி-கொச்சகம்.

காட்டுக்குப்போனவென்றன் கண்மணியந்தியாயும்
வீட்டுக்குவரவேகாணேன் வேகுதென்கும்பிஐயோ
நாட்டுளமைந்தர்விட்டு நடந்துமுன்வந்திட்டாரோ
கேட்டுமேவருவோமென்றாற் கிட்டிடவிடமுங்காணேன்.

வசனம்.

ஓ-பரமசிவமே, காட்டுக்குப்போன என்மகன் இன்னோமாகி யும் வரக்காணேன் அந்திப்பொழுது மாய்விட்டது என்வயிற்றிலே தோ சங்கடமாகின்றது அசலாத்துப்பிள்ளைகளைப் போய்க்கேட் போமென்றால் இடமுந்தெரியேனே தெய்வமே.

சந்திரவதி-தரு-சாமா-செஞ்சுருட்டி-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்வேனின்னமும் வரக்காணேன்-ஆ-என்மகனே
எந்தன்வயறிதோ எரிந்துவாடியே

அநுபல்லவி.

என்வயிற்றினி லீசனருளினால்
நன்மையாய்த்தோன்றிய நாயகமாமணி (என்)

சரணங்கள்.

அந்திப்பொழுதும் வந்திடலாச்சே-ஆ-ஆ-மகனே
அன்னங்கேட்டு நேரமும்போச்சே
எந்தன்மனமெத்த யேங்கித்துடிக்குதே
எண்ணுமெதல்லாமெண்ணி யென்னுளம்நோகுதே (என்)

தீபம்வைக்கும் பொழுதும்வந்துதே-ஓ-ஓ-மகனே
தேரவிருண்டு மானங்குவிந்துதே
தாபமாகுதே தனிவயிற்றிற்கொள்ளி
தாக்கினவாறுபோற் றவிக்குதே துள்ளி (என்)

காட்டுமிருகத்தைக்கண்டு பயந்தாயோ-ஆ-ஆ-மகனே
களைசொக்கிக்காற்பின்னி யினடந்தாயோ
நாட்டுமையந்தர்கள் நாடிவளர்வீதி
நானறியேன்கேட்க நாயகத்தின்சேதி-என்
காதகன்றூது யேதுசெய்தானோ-என்மகனுங்
காலில்முட்தாக்கிக் கடுக்கநின்றானோ
வாதனையாகுதே வதனமுஞ்சோருதே
வாவாமகனென வாக்கில்வருகுதே-என்

பொதுவிருத்தம்.

இவ்வாறுசந்திரவதி யெண்ணுதெல்லா
மெண்ணியேதுய்ரமுற் றிருக்குங்காலை
அவ்வாறுயடவிதனை நாடிச்சென்ற
யசலாத்துமைந்தர்களுந் தோன்றிநெஞ்சம்
ஒவ்வாமற்றொருபுரத்திற் சத்தங்காட்ட
உத்தமியுந்தொனியறியுந் துட்புறத்திருந்தே
வவ்வால்போற்பறந்துவந்து மகனேயென்று
பதறுவாளவர்கள்முன்னே கதறுவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய் சந்திரவதியம்மன் மகன் வரவில்லையென்று விசனப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையில் அசலாத்துபிள்ளைகள் காலகண்டன் வீட்டிற்கெதிரில்நின்று சத்தங் காட்ட சந்திரவதியம்மன் ஓடோடிவந்து வேதியர்மைந்தர்களை விசாரிக்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி-விருத்தம்.

தாவியேமான்றன்கூட்டந் தனைக்கண்டோட்டுறவார்போல்
ஏவியுடயுங்கள்பின்னே யிணங்கவென்மகன்றானெங்கே
ஓவிதியேதோகாணே னுரைத்திடீரெனக்குத்தோன்ற
பாவியென்வயிறுமெத்தப் பதறியேபதைக்குதப்பா.

வசனம்.

அப்பா ஐயமாரே மான்கூட்டத்தைக் கண்டு மான்தொட்டுறவதைப்போல் உங்கள்கூடவந்த என்மகனெங்கே சொல்லுவீர்களப்பா.

தேவதாசனிறந்ததை அசலாத்துபிள்ளைகள் சந்திரவதிக்கு தெரிவிக்கிறபாகம்.



சாமாசாஸ்திரி-வசனம்.

அடாய் சீனு நீசொல்லும் பிள்ளாய்.

சீனன்-வசனம்.

அடாய் சாமா நேக்குவயிற்றைப் பற்றியெரிகிறது நீயே சொல்லும் பிள்ளாய்.

சாம-வசனம்.

அடாய் அப்பா நோக்குதோஷமில்லே நீயே கிலும் சொல்லும் பிள்ளாய்.

அப்பாசாஸ்திரி-வசனம்.

அடாய் சாமா நேக்கானல் பயமாகின்றது கையுங்காலு முகறுகிறது நாமெல்லோரும் ஓரே முகூர்த்தமாய் சொல்லுகிறதும் ஓடுகிறதுமாயிருக்கவேண்டும் பிள்ளாய்

சாம-வசனம்.

ஆம் ஆம் அதுவேசரி அதுவேசரி.

சந்திரவதி-வசனம்.

ஓ-காசிநாதா, என்னமோ மோசம் நேரிட்டாப்போலிருக்கின்றதே நானென்னசெய்வேன் அப்பா நடந்தவாறு தெரியச்சொல்லுங்கள் வேதியர் மைந்தர்களே.

அசலாத்து-விருத்தம்.

அழுவதாலாவதென்ன அம்மணிசொல்லக்கேளாய்
பொழுததுசாயாமுன்னம் போயினுமங்குன்பாலன்
வழுவின்றிமிதைசிராய் வமைத்திடதெர்ப்பைகொய்நான்
பழுதுளபாம்புதீண்டிப் பாலகன்மாண்டானம்மா.

சந்திரவதி-கண்ணி-அபுரூபம்-சாப்பு.

ஐயோ-மகனேபாம்பு அப்பாமகனேபாம்பு
ஐயோமகனேபாம்பு அடவியிற்கடித்ததோடா
அப்பாஅப்பா அம்மாஅம்மாவென்று
அழுதுமடிந்தாயோடா ம-ம
மணலிற்புழுபோலத் துடித்துமேனிழியில்நீர்சொரிய
பழிகாரிநான்பெற்ற மகனே-ம-ம

என்னென்றழுதாயோ ஏங்கிப்பறந்தாயோ-ஐயோ
ஏந்தலேமனதி லெண்ணமிட்டாயோடா-மகனே-ம-ம

கன்னமாபுரியாள்வோன் கருதிபநற்றவத்தில்
பாதகிவந்ததிந்த கன்றுவிகாணவோடா-மகனே-ம-ம

பாவியுன்னைப்பார்த்துப் பாரிலுடல்தனும்பி-ஐயோ
பதவிபெறுவோமென்றே பண்புற்றிருந்தேனம்பி-மகனே-ம-ம

ஆவிகுலேந்தையோ அரவத்தாலுத்தம
ஆதித்தன்மரபினன்னமே மாண்டாயோடா-மகனே-ம-ம

தந்தையைநினைத்தாயோ தாளடிதொழுதாயோ-அப்பா
தாயானவென்வயிற்றிற்றணியாத்தீயிட்டாயோடாமகனே-ம-ம

இந்தவிதிகாணவோ என்னைவிட்டுப்பிரிந்தாய்
யேதுக்குச்சென்மமென யேபசிபிறந்தாயோடா-மகனே-ம-ம

என்னநான்செய்வேன்டா எப்போதுகாண்பேன்டா-அப்பா
என்வயிற்றினிற்பெற்ற இன்பமேமாண்டாயோடாமகனே-ம-ம

அன்னமேதாராவே யழகுகைப்புருவே
ஐயையோவென்வயி றடிபற்றெரியுதடா-மகனே-ம-ம

சந்திரவதி-விருத்தம்.

மாண்டையோமகனேபாம்பால் மறந்தையோயன்னைதன்னை
வேண்டையோதெருவிலென்னை விட்டையோவொண்டியாக
ஆண்டையுஞ்செத்துப்போன யடிமையும்பொய்க்கலாச்சோ
பூண்டையோநாதன்பாதம் போனையோமகனேயப்பா.

வசனம்.

அப்பா மகனே நீ காட்டில் தனியாய்மாண்டாயா என்னை ஒண்டியாய்விட்டாயே உன்தந்தைசெயத அடிமையுமறந்தாயா இனியெப்போ காண்பேன்டா கண்மணியே.

சந்திரவதி-தரு-இ-ம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி.

அப்பாமாண்டையோ ஓ-ஓ-பாலனே
எப்போகாண்பேன்டா என்பிலனே

அநுபல்லவி.

நம்பியேயுன்னைக் காளைநிண்டிட
ஒப்பிவந்ததோ ஓகோவிதியே-அ

சரணங்கள்.

கத்தித்தடித்துமே கதறியழுதையே
தத்திநீயுந்தரை தாங்கவிழ்ந்தையோ
சத்தியம்பொய்த்ததோ சந்திரவதிபெற்ற-அ
பாவியாக்கியெனைப் பறந்துபோனையோ
கூவித்தாயென்றே குரலுமற்றையோ
ஆவிபோம்போது அம்மாவென்றுமே-அ

எந்தன்வயறிதோ எரிந்துவாடியே
உந்தனைவிட்டுநான் ஒண்டியாகியே
வந்தவினையால்நீ வாய்விட்டலறியே-அ

தளத்திலுன்னையே தாங்கினேனுமே
வளத்தேனே பாம்பின்வாய்க்கோனுமே
குளத்திற்கேயினிக் கொழுந்தேதடா-அ

சந்திரவதி-விருத்தம்.

போனையோமகனேநீதான் புவியாள்வாயென்றிருந்தேன்.
போனையோயெனைமறந்தே பூசுரன்றன்பம்விட்டே
போனையோயெந்தலவந்தாற் புகன்றிடவேதுங்காணேன்
போனையோயினியோர்பாலன் பொறுந்துவாருண்டோகண்ணே.

வசனம்.

அப்பா மகனே நீ அரசாள்வாயென்றும் உன்னால் பதவிபெறலா மென்று மிருந்ததற்கு இந்தத்துன்பதசைவைத்து நீ வேதியரை துன் பத்தை நீக்கிக்கொண்டு யென்னை வெண்டியாக்கிறாய் இனிவேறுபுத் திரன் உன்னைப்போல் கிடைக்குமோ செல்வமே.

சந்திரவதி-கண்ணி-சுத்தசாமா-ஏகதாளம்.

என்னநான்செப்வேண்டா எவ்விதமறப்பேண்டா
சின்னவயதிலுனைச் சிரட்டப்பாவியானேன்
நீரில்லாக்கிணறுனேன் நிலையில்லாப்பட்டானேன்
பாரினிமேலுன்னை பார்க்கப்போறேனோபாலா
தனிமையாய்நீமாண்டாய்த் தவிக்கிறேன்நான்கண்டாய்
இனிமேலெனக்குத்துணை எவரைக்காண்பேண்டாபாலா
இரவில்லப்பகலானேன் ஈன்றதார்பசுவானேன்
பாதவிக்கவேயுன்னை பாம்புக்கிட்டேண்டாபாலா

ஒண்டிமரமாய்நின்றேன் உதவாப்பிறப்பிதென்றேன்
எண்டிசையிலுமுன்னை யினிநான்பார்ப்பேனோபாலா.

சந்திரவதி-கொச்சகம்.

கடிகிநீவருவாயென்றே கையினிற்கூழையேந்தி
அடவியின்வழியைப்பார்த்து அரும்பாவிகார்த்தேனடா
படபடத்திடவென்னெஞ்சம் பாலனேநீயுங்கொத்தி
விஷத்தினால்மாண்டாயென்றே விளம்பவுங்கேட்டேன்பாவி.

வசனம்.

அப்பாமகனே காட்டுக்குப்போனவன் சீக்கிரம் வருவாயென்று ஐயரின் தேவிவார்த்த கூழையுனக்காகவைத்து நீ வருகிற வழியைப் பார்த்துக்கொண்டிருக்க காட்டில் பாம்புதீண்டியிறந்தாயென்று கேட்கவுமானேனடா செல்வமே.

திக்கில்லாப்பாவியானேன் தியங்கியுறுகலானேன்
கக்கிப்பெற்றேனோவுன்னை கைசோரவிடப்பாலா
மதியில்லாவீணனானேன் மருந்தில்லாப்புண்ணானேன்
விதியோவெனக்குமுன்னை விஷத்திற்கிடவும்பாலா
இலையிலாச்செடியானேன் ஏறில்லாக்குடியானேன்
குலையிலடக்கியுனைக் கொண்டபலனிதுவோ
அரசில்லாநாடானேன் அறுகில்லாக்காடானேன்
வரத்தாற்பெற்றுமேயுன்னை வனப்பாம்புக்கிட்டேன்பாலா
கூடில்லாப்பக்ஷியானேன் குறையுளபேச்சியானேன்
நாடிப்பெற்றுமேயுன்னை நமனுக்கிட்டேன்டாபாலா

சந்திரவதி-விருத்தம்.

ஐயரின்மக்காளுங்க ளாதீனமெனவேசொல்லிப்
பையனையொப்பித்திந்த பாவியுந்திரும்பினேனே
நொய்யுறபவனைவிட்டே நோக்கினீரெங்கேசென்றீர்
துய்யரேநான்போய்க்காணத் தோன்றுவாறுரைசெய்வீரே.

வசனம்.

அப்பா அசலாத்துமைந்தர்களே உங்களடைக்கலமென்று ஒப்பித்த மானைவிட்டு நீங்களெங்கே போனீர்களப்பா என்மகனிருக்கிற விடத்தின் அடையாளந் தெரியச்சொல்லுங்களப்பா.

அசலாந்து-விருத்தம்.

அம்மணிதாயேகேளா யறைகுவோம்நீகான்கிட்ட
நம்பளின்நாட்டைவிட்டே நாடிநீமுன்னேவந்த
செம்மலிபாட்டைசேர்ந்தே செடியிலைக்குறிப்பைப்பற்றி
சிம்மெனச்செல்வாயாகிற் சிக்குமோராலந்தானே.

வசனம்

கேளுமம்பா தாயே நீ முன்வந்த வழியைப்பற்றிநடந்தால் நாங்கள் செடியைப்பிடிங்கி யடையாளமாய்ப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறோம் அதைப் பற்றிச்சென்றால் ஒரு பெரிய ஆலமரந்தோன்றும் கேளாய் தாயே.

இதுவுமது-விருத்தம்.

ஆலமரத்தைக்கண்டே யதற்குநேர்தெற்கிலம்மா
சீலமாந்தர்ப்பையோங்குச் செப்பொணாப்புற்றைக்கண்டாய்
கோலமாமிருகமுன்றன் குழந்தையைதீண்டிடாமல்
ஞாலமேற்கிடத்திமூடி நாம்வந்தோமறிகுவாயே.

வசனம்.

அம்மா அந்த ஆலமரத்துக்கு நேர் தெற்கிலொரு தர்ப்பைவளர்ந்திருக்கும் புற்றொன்றுண்டு அதனருகில் தேவதாசனைக்கிடத்திமிருகங்கள் தீண்டாதிருக்க இலைகளால் மூடிவந்திருக்கின்றோம் தாயே.

சந்திரவதி-கண்ணி-காம்போதி-ரூபகம்.

ஐயோஎன்னமோசஞ்செய்தாய் கண்ணின்மணியே-ஆ-ஆ-கனியே
அடுத்தமங்கையரறிந்துமென்னையே ஏச-ஆ-ஆ-மகனே
அரும்பாவியென் றனைவரும்நின் றுபேச-ஆ-ஆ-மகனே

ஆலமரத்தெதிர் பாழும்புற்றில்வளர்
காலமுனைத்தீண்ட சீலாநீமாண்டாயோ-ஐ

அப்பாவென்னசெய்வேனடா கண்ணின்மணியே-ஆ-ஆ-கனியே
அருந்தவஞ்செய்து வருந்திப்பெற்றேனேசீலா-ஆ-ஆ-மகனே
அடுக்காத்துயர மருந்தலுற்றேனேபாலா-ஆ-ஆ-மகனே

அடவிக்குள்ளேசென்று படருந்தர்ப்பைகொண்டு
திடமாய்வாரேனென்று நடந்தவன்மாண்டாயோ-ஐ

கொஞ்சம்வயதாச்சுதேடா கண்ணின்மணியே ஆ-ஆ-கனியே
குருமொழிதனைக்கேளாது திருந்தேனோ கிளியே ஆ-ஆ-மகனே
கொண்டவர்மனங்கொதிக்கநடந்தேனோ அளியே-ஆ-ஆ-மகனே

சோரவென்றழுகாதே நோவலுருகாதே
மேவநீதிசொன்ன பாவத்தால்மாண்டாயோ-ஐ

தாயேயெனும்வாயும்போச்சே கண்ணின்மணியே-ஆ-ஆ-கனியே
தரையிலடித்தோரைத் தவிரவிடுத்தேனோ பாவி-ஆ-ஆ-மகனே
நாயிலாச்சுகவைத் தடிகொண்டடித்தேனோ மேவி-ஆ-ஆ-மகனே

தவியென்வயிற்றில் ஆவிகொண்டெழும்ப
பாவிநீயையிட்டு கோவித்துமாண்டாயோ-ஐ

சந்திரவதி-விருத்தம்.

ஐயனேகாசியீசா யருளிலோமழுதைத்தாங்குங்
கையனேபாலனாவி கவர்ந்தையோபாம்பையேவி
தய்யனேமுனிகோளிற்கே துணைவனானாயோநீதான்
நொய்யவேவிட்டதுன்னை நோன்பினைதற்கோநாதா.

வசனம்.

ஓ-காசிவிஸ்வநாதா உனக்கு நானிழைத்த நோன்பிற்காக முனியுடன்கலந்துபாம்பையேவி என்மகனுயிரைப் பறித்தாயேதெய்வமே.

சந்திரவதி-விருத்தம்

ஆதியாய்புவனமெல்லா மாள்பவன்கோளோகூற்றோ
சோதிக்கும்விஸ்வாமித்திரன் சூழ்ச்சியோமாய்கையாதோ
மாதினைவருத்தயந்த மகேசனுமகிழ்ந்ததாலே
வேதியர்மக்காளுங்கள் வீட்டினிற்சேருவீரே.

வசனம்.

அப்பா மைந்தர்களே எனக்கித்துயர்வந்த காரணம் ஈசன்செயலோ அல்லது விஸ்வாமித்திரர் சூதோ தெரியாது நீங்களுங்கள் வீட்டிற்குன் போவீர்களப்பா.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே அசலாத்துப்பிள்ளைகள் தேவதாச னிறந்தானென்று சொல்லிப்போனபின்பு சந்திரவதியம்மன் தன்னை யடிமைகொண்ட வேதியரிடம்போய்க் கேழ்க்கிறவிதங் காண்பீர்கள் கனவான்களே

சந்திரவதி-விருத்தம்.

ஐயரேயண்டினோரை யாதரித்திடும்பொற்பாதா
வய்யவேயசலாத்துள்ள வேதியர்மைந்தர்வேந்தே
பையரவதினாலென்றன் பாலனுமடிந்தானென்றார்
துய்யரேசிலவளிப்பீர் தோகைசென்றடக்கத்தானே.

வசனம்.

என்னையடிமைகொண்ட ஆண்டவனே காட்டுக்குத் தாங்களனு ப்பிய வெனதுபாலனைப் பாம்புகடித் திறந்தானென்று அசலாத்துப் பிள்ளைகள் சொல்லிப்போனார்கள் நான்போய் அடக்கஞ்செய்துவர உத்திரவுதரவேணுஞ் சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

என்னடிசொன்னாய்சந்தி யின்னமோர்தரம்நான்கேழ்க்கப்
பன்னடிஎனதுதிரேகம் பதைக்குதேநூவிகூடத்
தின்னமாயேங்குதையோ தீங்கதுவந்ததெந்தன்
பொன்னெலாம்பாழதாகப் போச்சுதென்செய்வேன்பாவி.

வசனம்.

ஐயையோ ஐயையோ என்பணமெல்லாம் போச்சுதே வயிறெரி யுதே வயிறெரியுதே.

காலகண்டன்-தரு-இ-ம்-தர்பார்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்வேண்டி அடிசந்தி ஏதுசெய்வேண்டி
என்னசெய்வேண்டி

அநுபல்லவி.

அன்னிதமாய்ப்பொன்னை யளித்தேனடிபாவி
ஆ-ஆ-ஆ-இப்படியாகுமென் றறியேண்டி-என்ன

காலகண்டையரிடத்தில் சந்திரவதி விடைபெற்றுக்கொள்ள வருகிறபாகம்.



சரணங்கள்.

கறியினமீதிரேனறி ஒருகாலேயும்பாரி
லெரிகவண்மீதில்பொன் னெண்ணிநேனேனகாரி
வரும்விதிதனை வறியாமலேமஞ்
சரிபோனபடி சாந்துகெட்டேன்கனம் (என்)
நல்லவுணவறியோ மொருநாயையவுடுப்பறியோஞ்
செல்லப்பரியறியோ மடிபாவிசெருக்காயணிந்தறியோ
கல்லுமுள்ளுந்தைக்க காலுமெத்தநோகத்
தள்ளாடிசேர்த்திட தனமும்போச்சேமிக்க (என்)
கிச்சாளுலேகானே அடிபாவிகேட்டையிந்தேனே
வாச்சாய்சண்டிதானே உன்னாலேவருமோபணந்தானே
ஏச்சாநீயெந்தனை யெத்துசெய்தாயடி
போச்சாபணம்நல்ல புத்திகற்றாயடி (என்)
பெண்ணாலாவதேததனம்பெருகுமோதானேது
உன்னாற்பலன்யாது கிச்சானுதவிபோனபோது
மண்ணாண்டவனிந்த பர்மமறிந்துமென்
பொனனைவாக்கியந்த புனிதனுக்கீவானேன் (என்)
சேஷியுஞ்சொன்னாளே யிப்போசீறவுமாவளே
தோஷியுமநாளேஓடி தளேவாயேகோளே
யேசித்துநிற்காதே யுனக்குவிடையிதோயென்
காசுக்குவாங்கின காணியடிமைநாயே (என்)

சந்திரமதி-கன்னி-புன்னாகவராளி-அடதாளசாப்பு.

பெத்தவயிறது பத்திபெறியுதே
உத்தமாநானென்னசெய்வேன்-பதி
பத்தியாயுன்னடியுப்வேன்-என்
கத்தனையாண்டவன் கண்மணியைக்காண
கருணைவாக்களித்திடு மையா

காலகண்டன்-மோகனம்.

நத்தியழுதுமே சித்திரமாய்ப்பேசி
தத்திளிழுகிறாயென்னடி உனக்கு
புத்தியுண்டோசந்திபன்னடி மெத்த
சத்தியவானென்று சாற்றியவரெல்லாந்
சடுதிவெளியாச்சு போபோடி

சந்திரவதி.

பாம்புகடித்தோனை சாம்பலாய்நீத்திட
தேம்பிவிடைகேட்டேனையா-நீர்
விம்புகள்செய்வதேன் றுய்யா-பா
தாம்புயங்கோறினேன் தனிவாய்மனந்தேற்றி
தயைவிடையீகுவீர் நாதா

காலகண்டன்.

ஏதுடிசந்திரீ ஓதுறுய்வீண்வார்த்தை
தீதுகள்செய்குவேன் பாரடி-மெத்த
வாதுசெய்குவேன் பாரடி-மெத்த
போதும்போதுமெத்த புதுமையாய்ப்பேசுறுய்
போகவிடையீயே னடி

சந்திரவதி.

கெட்டகுடிகெடும் பட்டகாலிற்படுங்
திட்டமுநான்கண்டேன் நாதா-இந்த
அட்டதிசைபுகழ்பாதா உன்
இட்டமதைப்பெற வெண்ணிவணங்கினேன்
ஏதவருள்தாருஞ் சுவாமி

காலகண்டன்.

ஏகக்கூடாதெங்கும் போகக்கூடாதடி
தேகத்தைவிற்றவள் நீயாச்சே
பாகத்தில்கஷ்ட மதுவாச்சே-உப
யோகமில்லாப்பல ஞெழிந்துபோனதை
உதறியாத்தின்வேலை செய்யடி

சந்திரவதி.

செய்யும்வேலையெல்லாங் கையினல்முடித்திட்டேன்
ஐயனேயந்தியில் யானுமே-அருள்
தய்யனேயங்கே நானுமே-பாவி
பொய்யுரைசெய்யிலேன் பொழுதவிடியாமுன்
போற்றிடவருகிறேன் நாதா

காலகண்டன்-வசனம்.

அடிசந்தி நீசொன்னவார்த்தையால் என்பணமெல்லாம் பாழாய் விட்டதடி பிள்ளைபோனால் மறுபடியும் நீ பெற்றுக்கொள்ளலாம் பணம்வருமாயடி அடிமையானதால் எனது உத்திரவின்றி யெங்கும்போகக்கூடாது கால்மாட்டில் விழுந்திருடி.

சந்திரவதி-விருத்தம்.

பண்டுநான்மெய்யேமெய்யே பணிந்திட்டேன்குருவேஐயா
தொண்டுநின்னடிக்கேயாகுந் துய்யனேபேதமுண்டோ
செண்டுபோற்பாலன்மாண்ட செல்லொணுபடவியேகி
கண்டுமேயடக்கிவாறேன் கடுகினிலருளுவீரே.

வசனம்.

சுவாமி அடியாள் தங்களுக்குத் தொண்டென்பதற்குத் தடையுண்டா நான் காட்டுக்குச்சென்று மாண்டமகனை அடக்கஞ்செய்து அதிக ஜாக்கிரதையில் வருகிறேன் சிலவுதாருஞ் சுவாமி.

காலகண்டி-வசனம்.

ஓய் ஐயரே இவள் பெற்றவளானதால் வருந்துகின்றுள் நோக்கேதகாணும் கொஞ்சமாகிலுமனமிரங்காதிருக்கிறது சடுதியில்போய் சவத்தைச்சுட்டுவரும்படி யுத்தரவுகொடுத்தனுப்புங்காணும் ஐயரே.

காலகண்டன்-வசனம்.

அடிசேஷி ராஜன்தெரிந்தும் நமக்கு மோசஞ்செய்தான் தெரிந்திருந்தும் மகனைவிற்ருன் பிச்சானுஞ் செத்தான் இவளையுமனுப்பி விட்டால் வருவாளோ என்னமோ தெரியாதடி.

காலகண்டி-விருத்தம்.

கேளுமோய்வீணாய்மெத்த கிளம்புறீர்மன்னனந்த
நாளுமேவிற்றநிந்த நாரியுமாண்டோன்றன்னைக்
கோளுரைபுரிந்தேவம்பாற் கொண்டுநீயந்திரையா
தாளுடபாலனைக்கொண்டான் தபங்கவேனிருப்பீர்சும்மா.

வசனம்.

ஓய் ஐயரே ஏன்காணும் மெத்தவருத்தப்படுகிறீர் ராசன் சந்திரமதியை விற்றுனன்றி பிச்சானை விற்கவில்லை நீர் மோசமாய்க் கொண்டு வந்தபடியால் உம்மை மோசஞ்செய்து எமன் கொண்டுபோனன் வெறுமையாயிருங்காணும்.

காலகண்டன்-விருத்தம்.

நல்லதுசந்திகேளாய் நாரிநீபசப்பிநீதி
சொல்லிடிலதிகவண்ணஞ் சேடித்துவாடுகின்றாய்
நல்லிருடனிலேபோடி காடியுன்பாலன்றன்னை
செல்லமாயெடுத்தடக்கிச் சீக்கிரமவருகுவாயே.

காலகண்டன்-வசனம்.

அடிசந்தி நீமெத்த பச்சபியாயிருக்கிறாய் ஆக்கின்வேலைகள் அதிகமிருப்பதால் ஜாக்கிரதையாய்ப்போய் கிச்சானைத் தகனஞ்செய் தோடிவருவாயடி.

சந்திரவதி விருத்தம்.

போவெனவிடைதானீந்த புண்ணியவடிமைகொண்ட
கோவேகானடவிசென்று கொப்பெனப்பாலன்றன்னை
மேவியேமயானமுற்று மிறந்தோனைசுட்டுமையா
தாவிபேவிடியாமுன்னும் தாளடிவருவேன்போற்றி.

வசனம்.

அடியாள்செய்த அபசாரங்களைப் பொறுத்து போகவிடையீந்த நாதா நான்போய் பாலனை மயானத்தில் தகனஞ்செய்து விடியுமுன் னேவருகிறேன் உமது பாதங்களுக்குப் போற்றி சுவாமி.

காளகண்டன்-வசனம்.

நல்லது தீவரத்தில்வந்து சேருவாயடி நமது சேஷிக்குத் தெரி வித்தேயடி சந்தி.

சந்திரவதி-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே தெரிவித்துப்போகிறேன் சுவாமி.

சந்திரவதி-விருத்தம்.

அம்மணிஐயர்தானு மன்புடன்சிலவளித்தார்
அம்மணியடியாளிப்பா படவிக்கேயேகிபாலன்
அம்மணிமடிந்தவாறு மறிந்துமேசுடலைசேர்ந்து
அம்மணிதகித்தேதவாறே னடியாளுக்கருளுவாயே.

வசனம்.

அம்மா ஐயர்போகும்படிக்கு யுத்தரவுகொடுத்தார் தாங்களும் அடியாள்மகனை யடக்கஞ்செய்துவர சிலவுதாரும் அம்மணி.

காலகண்டி-விருத்தம்.

சந்திரமேனாய்சொல்வேன் சாருடைவிபோருய்
வந்திடும்யானைசிங்கம் வகைவகைபூதஞ்செந்நாய்
நந்திவண்ணனையேயேற்றி நாடினூற்றுயன்பமீங்கி
உன் திருமகனைச்சுட்டே உளமதுகளிப்பாயம்மா.

வசனம்.

அடிசந்தி இத்தலவிருளில் காட்டுக்குள் போகிறபடியால் யானை சிங்கம் பேய்பூதங்கள வருமானதால் காசிநாதன் திருவடியையெண்ணித துதித்துச் செல்லுவாயானல் எல்லாம்விலங்கி நீயுஞ்சந்தோஷமடைவாயம்மா.

சந்திரவதி-வசனம்.

மகாபாக்கியம் அப்படியே நியானித்துக்கொண்டுபோகின்றேன் தாயே.

சந்திரமதி-கண்ணி-இ-ம்-காம்போதி-தாளம்-ஆதி.

வேண்டியதவம்புரிந்தேன் வெகுவிரதமிருந்தேன்
விரும்பியுனக்காகவே மகனே மகனே மகனே
ஆண்டியருளால்கரு வாகநீதியுதித்தபின்
அடிவயிற்றிடத்தந்தேன் மகனே மகனே மகனே
காலகாலவுனைக் கடிந்துவொளிமழுங்கி
கறுக்கமுலைக்காம்புகள் மகனே மகனே மகனே
தூலம்வதங்கிப்பால் தோன்றிடக்கண்டுமே
தேஷிமனமகிழ்ந்தேன் மகனே மகனே மகனே
ஒன்றுடனெட்டுந்தள்ளி ஒன்பதில்நாளையெண்ணி
ஓகாரீவரக்காத்தேன் மகனே மகனே மகனே
நன்றுநீதிகள்பத்தில் நாடிவெளிவரவே
நான்வெகுதுபருற்றேன் மகனே மகனே மகனே
வேளைக்கொருவிதமாய் வேண்டியுனைவளர்த்தே
வித்தைபுக்கட்டலானுய் மகனே மகனே மகனே
காலைவயதில்நீயே கணையாழிதாங்கியிக்
காசினியாள்வாயென்றேன் மகனே மகனே மகனே

காதகன்புரிந்திட்ட கடூரத்தாலடிமையாய்
 காட்டில்மடிந்தாயோடா மகனே மகனே மகனே
பாதகிநானுமென்ன பழிசெய்தனோவென்று
 பத்தாவுக்கேபதிலேன் மகனே மகனே மகனே.

இ-ம்-இந்துஸ்தான்-ஸஹானு-தாளம்-ரூபகம்.

ஐயையோயீ தென்னகாலம்
 அடவிசென்ற மகனைநஞ்சுப்
பையரவந்தீண்ட லானனே
 ஆனொருமில்லாப்பாவி
அரும்புதல்வன் மாண்டபோதே
 நானேதேஷி நாட்டில்வாழேனே
வாழ்ந்தபல னிதுவேபோதும்
 வஞ்சகமுனி வன்சூதால்
தாழ்ந்தநிலைக் காளாகினேனே
 ஆளாக்கியென் னைளர்போனார்
அவர்திரும்பு முன்பேபாலா
 காளமூந்தன் காலனுச்சுதே
ஆச்சுதிந்த கெதிகாசி
 அய்பனரு ளில்லையோதான்
போச்சுதென்றன் புகழுமின்றோடே.

இ-ம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

மகனேலோகிதாயென்ன மாளாத்துயரமிட்டாய்
 மாபாவிவருந்திடக் கண்மணியே
அகமதிற்கீர்த்திபெற்ற பரசளித்தசிலா
 பனியேமடிந்திட்டாயோ கண்மணியே
கண்ணேகளித்தேனே கற்கண்டேதெள்ளமுதே
 கலங்கவிட்டாயோ யென்னைக்கண்மணியே
விண்ணேமதியேரவி விளக்கேவிரிமருவே
 விட்டென்னைமாண்டிட்டாயோ கண்மணியே

தந்தைதனைப்பிரியத் தான்செய்தபாழுந்தெய்வம்
தாயையும்பிரித்ததோ கண்மணியே
இந்தவிதியுனக்கே யெழுதினபாவி அயன்
மெனக்கெழுதா தேனோடாகண்மணியே

சந்திரவதி-விருத்தம்.

பிறைமதைச்சடையிலிட்ட பிஞ்சகாகைலைவாசா
மறையவர்க்கடிமையாக்கி மைந்தனைப்பறித்துமென்றன்
துறைமகன்வீழ்ந்தபூமித் தோற்றுமலையக்காட்டில்
நிறையிருள்மழையுங்காற்றும் மேரிடச்செய்தல்நன்றோ.

வசனம்.

ஓ-பரமசிவமே என்னை பதியைவிட்டகற்றிப் பாப்பானுக் கடிமையாக்கிப் பாலகனைக்காட்டில் விஷப்பாம்புதீண்டியிறக்கச்செய்தாய் அவனிறந்தவிடத்தை நான்தேடிவர வழிதோற்றுதபடிக்கு இருளும் காற்றும்மழையும்மின்னலு முண்டாக்கினது வுமுன்னுடைய திருவிளையாடலோ தெய்வமே.

சந்திரவதி-கண்ணி-மோகரி-அடதாளசாப்பு.

ஆசிவமே இத்துயருற இத்துயருற
இத்துயருற ஆகாசிவமே

பாவிநானென்ன பாதகஞ்செய்தேனோ
தாவிப்பத்தாவார்த்தையை தன்னைத்தடுத்தேனோ
பாதிக்கிறுயென்னை சோதிக்கிறுய்மெத்த
வேதிக்கிறுயருள் சாதிக்கிறுநீயே-ஆசி

உன்னைப்பணிந்திட்ட உத்தமர்தன்பாலன்
தன்னைவிஷந்தீண்டிடத் தவமுனிக்கனுகூலன்
சாதித்தையேபகை போதித்தையேசேயை
யேதித்தையேமுற்றுஞ் சோதித்தையேயிதோ-ஆசி

அடவியினுன்போக யதட்டிப்பலமிருகங்
தொடரமனதுமெத்த துயருருந்திவருக
சூட்டினையேயிருளை காட்டினையேமதி
ஓட்டினையேமெத்த வாட்டினையேசரி-ஆசி

அசலாத்துமைந்தர்க ளமைத்தகுறிவழியில்
பசபசெனவிழித்தே பயந்தோடக்கையில்
பண்ணுகிறாய்கோர மெண்ணுகிறாயென்மேல்
நண்ணுகிறாயிடியிடி விண்ணுலகாதிய-ஆசி

தாயில்லாமைந்தர்கள் தலையிலடித்தேனோ
வாயில்லாமிருகத்தை வதைதான்புரிந்தேனோ
வாட்டுகிறாய்துயர் காட்டுகிறாய்பகை
காட்டுகிறாய்மதி ஓட்டுகிறாயிது-ஆசி

பாலன்படித்தயர்ந்த பாழிடத்திலொருவர்
ஆலமாமுண்டென்று அறைந்தனரேசிறுவர்
ஆதித்தனேயிடம் போதித்தனேமனம்
பேதித்தேனேதடம் சாதித்தருளுவாய்-ஆசி

சந்திரவதி-வசனம்.

ஓ-பரமசிவமே நானுனக்குச்செய்த குற்றங்களென்ன அதையென்முன்வந்துரைசெய்யும் ஆண்டவனே.

சந்திரவதி-கண்ணி-நாபி-ஆதிதாளம்.

ஐயோயிந்தவிதியேயாரா
லமைந்ததோவாகதியே

என்னபழிசெய்தேனடா-உனக்
கித்துயர்வந்ததேண்டா
அன்னமிட்டாருக்கடா-நான்
அருந்துயரிட்டேனோடா-ஐ

தருமமிகப்புரிந்தேன்-பலன்
தன்னையிதோவறிந்தேன்
கருமங்களேதுசெய்தேன்-மனங்
கலங்கிடயாரைவைதேன்-ஐ

தரையைமெழுகிப்பாலா-பல
தவங்கள்செய்துமே-சிலா
திரையின்முழுகிமேனா-வுன்னைத்
தேடிப்பெற்றேனேலோலா-ஐ

பெற்றுமலடியானேன்-பலர்
பேசவகைக்குள்ளானேன்
மூற்றுமூதேவியானேன்-சுபம்
முடித்துப்பார்க்காமற்போனேன்-ஐ

காட்டுக்குப்போனநீதான் கடுகிவருவாயென்றே
காத்திருந்தேனன்பாவி கண்மணியே
நாட்டுப்பாலகருன்னை நாகங்கடித்ததென்றே
நவிலவாடினனுளம் கண்மணியே
அந்தமெழுதினவ னுயுனைத்தானெழுத
அபர்தமறந்தானோடா கண்மணியே
இந்தப்பழியாருக்கோ நினைத்திருந்தேனோமுன்பு
டெரியுதென்னடிவயிறு கண்மணியே.

சந்திரவதி-விருத்தம்.

வனத்தில்வாழ்கிளிகுயில்காள் வலுமைசேர்மிருகம்பூச்சி
கனப்புகழ்மேயாத்திவேந்தன் கருநீயேயளித்தபாலன்
தினத்திலுங்குற்றபாட்டைத் தெரிந்திருப்பீர்களாகில்
மனக்குறையகலநீங்கள் மகிழ்வுடனுரைசெய்வீரே.

வசனம்.

இந்தவனத்தில் வாசஞ்செய்யும்படியான பக்ஷிகளே மிருகங்களே என்னுடைமகனானதேவதாச னிங்குவந்தானா நீங்கள் கண்டிருந்தாலெனக்குச் சொல்லுங்கள்.

சந்திரவதி-விருத்தம்.

படர்ந்தவிவ்வனத்திலுள்ள பலமிருகங்கள்பக்ஷி
நடந்திடும்பாட்டைதன்னி னயமுடன்வணங்கிக்கேட்டும்
தொடர்ந்துநீயிங்குவந்த தோகையதையுரைத்திடாமல்
அடர்ந்தெனைச்சூழ்ந்தேநின்று யழுகுதென்செய்வேன்மைந்தா.

வசனம்.

ஆ-மகனே தேவதாசா நீ யிங்குவந்த சங்கதி யிக்காட்டிலுள்ள மிருகம் பக்ஷிமுதலானதுகளைக் கேட்டாலென்றுஞ் சொல்லாமலென்னைச்சூழ்ந்து வருத்தமாய் நிற்கிறதே என்னசெய்வேன் பாலா.

சந்திரவதி-தரு-வராளி-ரூபகம்.

பல்லவி.

கெங்காதர கெங்காதர கெங்காதர வருவாய்

அநுபல்லவி.

தங்காமாது பங்காவெங்குந்
தங்காமலேந்தீங்காயென்முன்-கெங்கா

சரணங்கள்.

மன்னன்றனேவிட்டு அந்த மறையோன்பணிதொட்டு
கன்றிழுந்தேன்பாம்புக்கிட்டு கதறுங்குரலிட்டு
காராதயர் தீராயோடி
வாராயிங்கே நேராகநீ-கெங்.

ஒருத்திதானேதோசி யிந்த உலகில்வந்தேன்ரோசி
பருத்திபடும்பாட்டைவீசி படவிட்டனேகாசி
பாசாயன்பர் நேசாபாவ
நாசாஜெக தீசாவாராய்-கெங்.

அந்தவயன்றனே எனைக்கவித்தவிதிதானே
தொந்தபணியெனவேயானே தொழுதேனுனைநானே
நூயாலோக மாயாகனி
வாயாமங்கை நேயாவாராய்-கெங்.

சிறகறுந்தபக்ஷி யிங்குசிக்கிவாடிகுக்ஷி
மரமாகினேன்வந்தோரக்ஷி மாப்பருங்காக்ஷி
கதியேமழுப் பதியேசுரர்
மதியேவந்து ததியீதருள்-கெங்.

சந்திரவதி-விருத்தம்.

மெய்யதையுணர்ந்தசத்திய மீனையிலாமகனேநீதான்
உய்யொணுக்காட்டில்வந்தே உடம்பெலாம்வாடமுள்ளும்
பையவேதைத்துமென்றன் பாலனேயுனைவதைக்கத்
தெய்வமுமுரியவேனுட திகழெனச்சேர்ந்துதோடா.

வசனம்.

மகனே தேவதாசா நீயிந்தக்காட்டில் வரவும் முள்ளுகள் கீறவும் பாம்புதீண்டி யிறக்கவும் செய்தது தெய்வத்தின் கொடுமையோ விஸ்வாமித்திரன் சூதோ யறியேனடா மகனே.

சந்திரவதி-கண்ணி-சங்கராபரணம்-அடதாளம்.

அப்பாலோகிதாசா வென்கண்மணியே
ஒப்பிடாக்குணத்துட னுதித்தாற்பணியே
உன்னையிழந்தபின் னுயிர்வைத்தல்பிணியே
இனித் துயர்பெற்றேன் துணியேன்-து-து-அடா-அ
கும்பியுங்குடல் கொதிக்குதேமருவே
குழந்தையென்றேயாரைக் கூப்பிடத்திருவே
பால் சாப்பிடத்தருவே-த-த-அடா-அ
பெற்றவயிற்றில் தீபிடித்ததேவிதியே
பிள்ளையெனுமாசை பிரண்டதேசதியே
மனம் வரண்டதே மதியே-ம-ம-அடா-அ
செம்மலினறத்தினால் ஜெனித்தாற்கலையே
செல்வமீமாண்டபின சீரேதுமிலையே
சுகம் வேறேது அலையே-அ-அ-அடா-அ
பட்டகாலிலேகல்லுபடும் வாறுயளியே
பாதகிக்கேயிதோ பலித்ததே ஒளியே
பகை கெலித்துதேவிழியே-கி-கி-அடா-அ
எனக்குக்கொள்ளிதனை யிடவந்தவயிலே
யிறந்தையோநாகத்தா லென்செய்வேன்குயிலே
உன் தன்கெதிக்கொயிலே ஒயிலே ஒயிலே-அடா-அடா॥

சந்திரவதி-விருத்தம்.

சூரியன்மரபுவோங்கச் சொலித்திட்டயுனையேதேடி
வீரியமைந்தர்சொன்ன விதிப்படியிங்குவந்தேன்
கோரியதெய்வங்கூடக் கொடுமைசெய்திடவேயெண்ணிக்
காரிருள்சூழ்ந்ததிங்கள் கவலைகொளுமேனன்பாலா.

வசனம்.

ஆ-மகனே லோகிதாசா அசலாத்துப் பிள்ளைகள் நீயிறந்த சங்கதியைத் தெரிவித்து நான் வருவதற்காகக்குறிப்பிட்டதைத் தொடர்ந்திவ்வளவு தூரம் வந்தேன் இக்குற்ற விருளினால் வழிதப்பியதோ தெரியேன் தெய்வமுஞ் சதிசெய்கின்றதப்பா என்னருமை மகனே.

சந்திரவதி-கண்ணி-நீலாம்புரி-ரூபகம்.

மாதோஷியென்றெனைவிட்டு நீமடிந்தாயோடாமகனே-இந்த
மண்ணின்மீதுபதியையவமதித்தேனோடா மகனே-நீ
நீதோநகர்தனைவிட்டிந்த திசைக்கேவமகனே-மனந்
தேங்கரியுளாரநெஞ்சந் திடுக்கிடவே மகனே-ஐயோ
அம்மாவென்றுயினிமேலென்னை யழைப்பவரார்மகனே-இந்த
அவனிதனிலெனைப்போற்பாவி யார்தானுண்டு மகனே-நீ
பெம்மான்மகிழ்பெருகும் நடைபெற்றிருந்தாய்மகனே-உன்மேல்
பிரமனுசைநவத்தேவுயிர் பிடிங்கினனோமகனே-நாம்
இனிமேற்சுகமடைபோமென்று பெண்ணினேன் மகனே-இந்த
பிருண்டவனந்தனிலேவந்து இறந்தாயோடா மகனே-உன்
கனிவாயையுங்கிளிமொழியுங் காண்பதெப்போ மகனே-என்றன்
காயமனல்பெருகாகவே கரையுதிப்போமகனே-நான்
மனனன்பிரிந்ததையுமுன்னால் மறந்திருந்தேன் மகனே-அந்த
மறையோனுக்காய்காடுறைந்து மறைந்தாயோடா மகனே
என்னையுந்தவேந்தருனே யெங்கேயென்றால் மகனே-நான்
எதுசொல்வேன்பாதகிதான் இருசியானேன் மகனே

சந்திரவதி-வசனம்.

ஓ பரமசிவமேயெனக்கென்னவிதியெழுதிவிட்டாய் ஐயோ நகருமகுமாருக்கதிபதியே.

சந்திரவதி-கண்ணிகள்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

அதிபதியரிச்சந்திர ரளித்தமகனைத்தேடி
அலைகிறேனிவ்வருளில் ஐயையோ-ஐயோ-ஐயோ
சதியோமுனிருதோ சாதித்தபழிதானோ
சற்றுமறிகிலேனே ஐயையோ-ஐ-ஐ

கொடுமையிலுமதிக கோரஞ்செய்தேனோயுன்
கோவிலடியாதோதான் ஐயையோ-ஐ-ஐ
அடிமைகொண்டவருமே யதிசீக்கிரம்வாரென்றார்
அன்றில்சத்தியம்பொய்க்கும் ஐயையோ-ஐ-ஐ
இத்திசையெதுவென்று வெளிதில்நான்தெரியவும்
இருள்வந்தேகப்பியதே ஐயையோ-ஐ-ஐ
கத்தியமுதமுன்றன் கண்ணுக்குருடோகாதும்
கல்லாலடைப்பட்டுதோ ஐயையோ-ஐ-ஐ
மின்னலொளியினால் மெள்ளவடிமேலடி
மிதித்திந்தமட்டும்வந்தேன் ஐயையோ-ஐ-ஐ
சொன்னவாலமரத்தின் சொரூபங்கண்டிடமின்னல்
ஜொலிக்காமலிருண்டுதே ஐயையோ-ஐ-ஐ
நாய்களும்பேய்களும் நரிகளுங்கூவுதே
நடுகாட்டில்வழிகாணேன் ஐயையோ-ஐ-ஐ
தாய்வருவாளென்றன் தனையனுங்காத்திருப்பான்
தடமிங்கேகாணேநான் ஐயையோ-ஐ-ஐ
ஐயாவருணதேவா அபயமுனக்கபயம்
அடங்கியொளிவைக்காட்டும் ஐயையோ-ஐ-ஐ
மெய்யானவரிச்சந்திரர் மெல்லியனானால்
மேவியொளிச்சங்காட்டும் ஐயையோ-ஐ-ஐ


பொதுவிருத்தம்.

பத்தினியும்மாண்டமகன் றன்னைத்தேடி
பதைத்துவுடல்வெதும்பியிரு ளதனால்வாடிக்
கத்திமுறையிடவருணன் கலங்கிநெஞ்சங்
கயவர்மனம்போலோங்கு மிருளைவாங்க
நத்திவந்தவாலமரந் தன்னைக்கண்டால்
நாட்டமுடனோடியக்கு தெர்ப்பைதானு
மூத்தியுமேவினைந்திருக்கும் புற்றைக்கண்டே
முறுவாளினித்துயர மீறுவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே சந்திரமதியம்மன் வருணபகவானைவேண்ட யிருளானது நீங்கிற்று உடனேதேடி ஆலமரமுந் தெர்ப்பைவளர்ந்திருக்கும் புற்றையுங்கண்டு புலம்புகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

தேவதாசன் இறந்ததைக்கண்டு சந்திரவதி புலம்புகிறபாகம்.



சந்திரவதி-கண்ணி-சஹானா-ஆதி.

பாலனிறந்தவிட மிதுதானோ-என்றன்
சீலன்மடிந்தவிட மிதுதானோ
ஆலமரமென்றது மிதுதானோ-சிறுவர்
சாலவேவைத்திட்ட குறிப்பிதுதானோ.
காறைமுள்ளுபுதரென்ற திதுதானோ-மகன்
பேரையழித்திட்டவிட மிதுதானோ
தெர்ப்பைபயோங்குமென்று சொன்னதிதுதானோ-சேர்ந்து
அர்ப்பச்சமித்துவகை மிதுதானோ
என்மகன் தேவதாச னிவன்றானோ-விஷந்
துன்மையான்மபங்கியிங்கு வீழ்ந்தானோ

சந்திரவதி-வசனம்.

அப்பாவென் கண்மணியே.

சந்திரவதி-தரு-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

வாடாயென்கண்ணின்மணியே எழுந்தொருமுத்தம்தீ
தாடாவென் கண்ணின்மணியே

அநுபல்லவி.

காடாவுனக்குமனை வீடாநீயிங்குறங்கப்
பாடாவயன்விதித்த தோடாநான்பாவிபாவி (வா)

சரணங்கள்.

பஞ்சணையைவிட்டியிறங்காய் அடாமகனே
நெஞ்சைவிட்டுத் தாழுவுறங்காய்
கொஞ்சுங்கிளிமொழிக்கே அஞ்சுவையேடா அப்பா
வஞ்சமிருகக்காட்டில் பஞ்சைபோற்றூங்கலுற்றாய் (வா)
உறக்கப்பேசினாற்றிடுக்காய் செவிகள்மூடி
திறக்கவுங்காலும் விடுக்காய்
சரக்கெனுமொலிகேட்டா லிருக்கமாட்டாயேநானு
வருக்கமிருகங்கூவ பெருக்கவுறங்கலானாய் (வா)

சோச்சியென்றுவருவாய் அடிக்கடிக்கி
பாச்சிபாச்சியென்றுவருவாய்
காச்சியிபஞ்செவியதிற் காச்கிவிட்டவாறதுபோல்
ஆச்சிமக்களுமுரைத்த பேச்சினுலுருகலானேன் (வா)

சந்திரவதி-வசனம்.

ஆ ஆ ஐயையோ என்னருமை மகனே என்னடாபேசாமலிருக்கிறுப்.

சந்திரவதி தரு-இந்துஸ்தான்-சுருட்டி-சாப்பு.

பல்லவி.

வாவாவா வெனக்கூவியழைத்தால் ஓடிவருவாயே
மகனேவருவாயே முத்தந்தருவாயே மகனே (வா)

அநுபல்லவி.

கூகூவெனநான் தாவியழைத்தவாயாற்
பாவியழுதகுரல் மேவியுன்றன் செவிக்கேறலையோ
மகனே ஏறலையோ நான்பெறலையோமகனே (வா)

சரணங்கள்.

கொள்ளிவாயின் பூதம் குள்ளநரிகாடி
பல்லையிளித்துமெனறன் உள்ளம்நடுங்கிடவே
பார்க்குதேடா மகனே பார்க்குதேடா
உனைக் காக்குதோடா மகனே (வா)

உன்னையடிக்கடி எண்ணியெனதயிரு
கண்ணின்நீர்வடித்திடும் அன்னையின்மேற்கோபம்
ஆகுமோடா மகனே ஆகுமோடா
துயர் போகுமோடா மகனே (வா)

ஆதிப்புருடனொளி ஜோதிபடைத்தபகல்
பாதிதனில்மறைந்த கெதிபாவினைநான்
பாவியோடா மகனே பாவியோடா
குலத் துரோகியோடா மகனே (வா)

தந்தையின்வாக்கியம் பிந்திடாதபடி
யுந்தனுக்கித்துயர் வந்ததிக்காரணந்
தர்மமோடா மகனே தர்மமோடா
என கர்மமோடா மகனே (வா)

சந்திரவதி-விருத்தம்.

அப்பனேஐயாவாவென் றழைத்திடும்பெருமைபோச்சே
ஒப்பிநீயம்மாவென்றே யுரைப்பதுமின்றேபோச்சே
செப்பியேசாதங்கேட்குஞ் செங்கனிவாயைமூடிக்
கப்பியவிஷத்தாலிந்தக் காட்டினில்மடிந்தாயேடா.

வசனம்.

அப்பா என்னருமைமகனே நான் வாடா என் கண்மணியேயென் றழைப்பதும் நீ அம்மாவென்றெனைக் கனிந்தழைப்பதும் இன்றுமறக்கலாச்சோ பாம்புகடித்த விஷமேறி மடிந்தனையோ மகனே.

சந்திரவதி-கண்ணி-இ-ப்-சாமா-ஏகதாளம்.

ஐயோமகனேநீ அலறித்துடித்திட
அரவந்தீண்டலாச்சே
அருள்போச்சே யிருள்வாச்சே
அப்பவே-காண்ப-தெப்பவே-காண்ப-தெப்பவே-எ-எ
கப்பியகாட்டினி லப்பாதேவதாசா
காளந்தீண்டவிதியோ
காரிமதியோ ஏரிசதியோ
கண்ணனே-சொல்லு-வண்ணனே-சொல்லு-வ-வ-வ
பற்றியெரியுதே பெற்றவயிறுமே.
உற்றதுசொல்லாயா
பணிநேயா மணிவாயா
பாவியே-எனைத்-தாவியே-எ-தா-தா-தா
அருந்தவஞ்செய்துமே யருந்தியேநான்பெற்ற
தருமகுணபாலனே
அதிலோலனே மதிசீலனே
அன்னமே-அடா-சொர்ணமே-அடா-சொ-சொ-சொ
சந்திரனைப்பழிக்குஞ் சுந்தரவடிவுள்ள
என்றன்குலமணியே
சரமணியே வரப்பணியே
சாரையோ-எனைப்-பாரையோ-எனைப்-பா-பா-பா

உன்னைப்பெற்றதந்தை என்னைவந்துகேட்டால்
மன்னனுக்கேதுரைப்பேன்
உருக்குரைப்பேன் செருக்குரைப்பேன்
ஒதடா-துணை-எதடா-துணை-ஏ-ஏ-ஏ

மன்னனுவாயென்ற கண்மணியென்றுமே
மகிழ்ந்திருந்தேன்தோசி
மனம்ரோசி யினமேசி
மாண்டையோ-என்ன-வேண்டையோ-என்ன-வே-வே-வே

ஆண்டிட்டகாலத்தில் மாண்டிருந்தாலேநீ
வேண்டுந்தளம்வருமே
அளிதருமே ஒளிபெருமே
ஐயையோ-வாழ்வு-பொய்யையோ-வாழ்வு-பொ-பொ-பொ

அப்பாமகனே

அர்த்தராத்திரியில் ருத்திரபூமியை
எத்திசையென்றறிவேன்
அறிவறியேன் குறிதெரியேன்
அப்பனே-ஒன்றுஞ்-செப்பனே-ஒன்றுஞ்-செ-செ-செ

இப்பச்சுடலையி லப்பாவளர்த்திட
எப்படிச்செய்வேண்டா
இனியேண்டா கனிவேண்டா
எசவோ-விதியை-ரோசவோ-விதியை-ரோ-ரோ-ரோ

பொட்டெனவந்தையே கட்டையுலைச்சுடக்
கிட்டுமோடாமகனே
வுனிகுணனே யினிமனனே
போறேண்டா-சுட-வாறேண்டா-சுட-வா-வா-வா

இருசியைப்போலுனை ஏந்தியென்றோளிலே
ஏகவிட்டாய்பாவம்
இதுசாவம் எதுகோவம்
ஏகிறேன்-சுடலை-பேகிறேன்-சுடலை-போ-போ-போ

சந்திரவதி தேவதாசனை யெடுத்து புலம்புகின்றபாகம்.







பொதுவிருத்தம்.

பாலனைக்கண்டிவ்வாறு மனதுயாடி
பரதவித்துயினிச்சுடலை போமேயென்றே
காலவித்தலையினைத் துக்கன்றிழந்த
காருலைப்போற்கதறி மகனைத்தங்கி
ஜாலமதிலுயர்ந்தவனுங் காட்டின்வாழுஞ்
சண்டாளவேடனைப்போ லுருவெடுத்து
கோலவிழிபடைத்தவளுங் கெதிரேவந்து
கொடும்பாவிகவுசிகனுங் குறுக்கிட்டானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாகச் சந்திரவதியம்மன் மகனையெடுத்துக் கையில்தாங்கித் துயரப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் விஸ்வாமித்திரன வேடரூபமெடுத்து எதிரே வருகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

வேடனாய்வந்தான் விஸ்வாமித்திரன் வேடனாய் வந்தான்.

அநுபல்லவி

காடதனிலேவாழுங் கனமிருகப்பக்ஷிகளை
கவர்ந்தேபுசிக்குமந்த பவக்குணம்படைத்த (வேட)

சரணங்கள்.

கையில்வில்லைத்தாங்கியே முடியிற்றுணி
கட்டிச்சுருக்குகளைத்தாங்கியே
மெய்யில்வலையைத்தாங்கியே விழிசிவந்து
மிரட்டியுருட்டியோங்கியே
பையநடைநடந்து பதுங்கிப்பல்லைப்பவிசி
கொய்யுநந்தேவிமுன் நோக்கிநோக்காமலே (வேட)

வேடன்-விருத்தம்.

ஆரதுவின்னேரத்தி லாதவிவ்வனத்தில்வந்தே
வீரமாய்த்தனித்துக்குந்தி வீற்றிட்டசத்தத்தோடே
கூறலாய்சிவத்தையெண்ணிக் கோவித்தேயழுதுநின்ற
வாதுவைவனக்குத்தோன்ற வகையுடனுரைசெய்வாயே.

வசனம்.

ஆரது இந்த இருண்டகாட்டில் தனியாய் சிவத்தின்பேரில்நொந்து துயரப்படுகிற காரணமென்ன தெரியச்சொல்லுவாய்.

சந்திரமதி-விருத்தம்.

திக்கில்லாப்பாவியையா தெய்வமுமிவ்வாறென்னை
கஷ்டப்படவேசெய்துங் கருதிர னீன்றபாலன்
விக்கினம்போன்றேன்சாக விரும்பியேபாம்பையேவி
துக்கிடவுயிரைக்கொண்ட துயரத்தாலழுகின்றேனே.

வசனம்.

அண்ணா நான் திக்கில்லாப்பாவி தெய்வமென்னை இக்கெதிசெய்து மென்மகனையும் பாம்பைவிட்டு கடிக்கச்செய்து உயிரைப்பறித்ததால் விசனப்படுகிறேன் அண்ணா

வேடன்-வசனம்.

மகனைப் பாம்புகடிக்கும்படி விட்டு எங்குபோயிருந்தாய் சொல்லும் அம்மா.

சந்திரமதி-கண்ணிகள்-இ-ம்-கெண்டா-ஆதிதாளம்.

என்னசொல்லுவேனண்ணா ஏதுசொல்வேநானே
எனக்குவந்தவிதியை அண்ணா
மன்னனரிச்சந்திரர் மனைவியாய்நான்வாழ்ந்து
மகனையும்பெற்றெடுத்தேனண்ணா
பாதகவெண்ணமிட்டே பற்றில்லாவிஸ்வாமித்திரர்
பறித்தனர்நாடுஞ்செங்கோலண்ணா
காதகர்மன்னர்மீது கனத்தகடன்சுமத்தி
காசிவரவேசெய்தாரண்ணா
தாகாவரனுப்ப தயையிலாப்பாவிசெய்த
தாழ்மையாலினிக்கேளுமண்ணா
மரம்போலவென்கணவர் மகிழ்வாறெனைவொரு
மறையோனுக்கேவிற்றாரண்ணா
கொண்டவேதியனென்றன் குமாரனைக்கொண்டே
கோரப்பணிஇளிட்டாரண்ணா
அண்டைவீட்டுமைந்தர் அடவிக்கேபோறாரென்றே
அனுப்பச்செய்தாரிவனை அண்ணா

வந்தபாலனும்பிந்தி வருகாமலேசிவனும்
வதைத்திட்டான்பாம்பிலண்ணா
என்றன் மகனைநான் எடுத்தேகச்சுடலைக்கே
எதுவோவழியறியேனண்ணா
அடிமைசெய்ந்தயரசர் அமைச்சனுடனேகூட
யகன்றவிடமுங்காணேனண்ணா
புடமிசையைப்போல பிறந்திட்டபாவியுண்டோ
புலம்புறேனிதற்காய்நானண்ணா.

வேடன்-விருத்தம்.

நல்லதுநீதான்சொன்ன நியாயமும்நம்பப்போமோ
அல்லலைபறுத்தேஞான மறிந்தோர்விஸ்வாமித்திரன்
கல்லதாய்மனதைநாட்டிக் கருதியேயுனையிவ்வாறு
தொல்லையிலிறுத்தவந்த தோற்றமேதுரைசெய்வாயே.

வசனம்.

நீசொன்னதை நம்பலாகுமோ ஞாலசில்லுஞகிய அந்த விஸ்வாமித்திரமுனி உன்னை இவ்வாறுசெய்யானே அப்படி செய்வதற்கு வந்த காரணத்தைத் தெரியச்சொல்லுவாய்.

சந்திரவதி-விருத்தம்.

வேந்தனையடுத்தேதானம் விரும்பியேநாடிக்கேட்டார்
வேந்தருங்கொடுக்கப்பெற்றே விருத்தியஞ்செங்கோசென்றார்
வேந்தருங்கருதாப்பொய்யை விளம்பிடவேண்டிநின்றார்
வேந்தருமறுக்கவிந்த வினைகளைப்புரிந்தாரண்ணா.

வசனம்.

அண்ணா முனிவர் ராஜனைத் தானங்கேட்டார் கொடுத்தபின் ராஜனிடத்திலேயே வைத்துச் சென்றார் மறுபடியும் பழியையழித்து ஜாரத்வம் புரியச்சொன்னார் மறுகாப்பொய்பேச வேண்டினார் தடுக்க வெங்களை இக்கெதிக்காளாக்கினார் அண்ணா.

வேடன்-விருத்தம்.

ஆஆஆஇதுதானென்ன ஆச்சர்யமானவார்த்தை
ஆஆஆயொருபொய்க்கஞ்சி யரசனுந்தேவிதன்னை
ஆஆஆயடிமைசெய்ய வடுக்குமோநானேயாகில்
ஆஆஆவேண்டும்பொய்யை யனேகமாயுரைத்தேவாழ்வேன்.

வசனம்.

ஆ-ஆ-ஆ யிதென்னவாச்சரியம் ஒருபொய்பேசமாட்டாமல் ராஜன்பெண்ணை விற்பதான்மையா நானுகில் வேண்டியபொய்களைப்பேசிச் சீவிப்பேன்.

சந்திரவதி-விருத்தம்.

பொய்சொன்னபேருக்கண்ணா புவிதனிற்றூழ்வேயாகும்
பொய்சொன்னபேருக்கல்லோ புகழிலாநரகம்வாய்க்கும்
பொய்சொல்லவுலகிற்சாவை போக்கியேவாழ்ந்தோருண்டோ
பொய்யல்லோவாழ்வுஞ்சுற்றம் புவிதனிற்கீர்த்திமெய்யே.

வசனம்.

அண்ணா பொய்சொன்னவாளுக்கிருப்பிடம் நரகமல்லவா பொய்பேசினுல் சாவைநீக்கலாகுமா மெய்பேசுவதே சத்தியங்கீர்த்திசுத்தமென்றறிவா யண்ணா.

வேடன்-விருத்தம்.

நல்லதுமாதேயுன்றன் நாயகன்றனைநான்றேடி
மெல்லவிச்சேதிவெல்லா மிசைந்திங்கனழைத்துவாரேன்
வல்லமைகொள்ளநீங்கள் வாய்ந்தவன்னடிமைபோக்கச்
சொல்லவேவார்பொய்சொல்வித்தாற் சுகமுடன்வாழ்வீர்தானே;

வசனம்.

நல்லது நான்போய் உன்கணவனைத்தேடியழைத்து வருகிறேன் ஒரு பொய்பேசச்செய்வித்தாற் றுயரங்களையெல்லாம் நீக்கி சுகமாயிருக்கலாம் உன்னைப்பார்க்கப் பரிதாபமாயிருக்கின்றது.

சந்திரவதி-விருத்தம்.

உடலுமுயிரழிந்தாலும் வதையுற்றாலு
மோகோகோபொய்பேச ஒப்பாமண்ணா
சடலமிதைசுமந்தொருநாள் தலைக்கவேணுஞ்
சண்டாளப்பொய்யுரைத்தல் சரிதானன்றே
கடலோங்கிப்பொங்கிடினு மெனைமணக்க
கணவரும்பொய்யுரைப்பதுவே கனவிலுண்டோ
தடஞ்சுடலைநானேகக் காட்டியாள்வாய்
தமையனேநின்னடிக்கே தழ்ந்தேன்போற்றி.

சந்திரவதி தேவதாசனை மயானத்திற்கு கொண்டுபோகிறபாகம்.







வசனம்.

அண்ணா எங்களுக்கு இன்னமநேகதுன்பம் வந்தாலும் உடலழிந்தாலும் லோகமுழிகினாலு மென்பிராணநாதர் கனவினும் பொய் நினைக்கார் சுடுகாட்டிற்குப்போகவழி காட்டுவாயண்ணா.

வேடன்-வசனம்.

நீ-சுகப்படவுனக்குச்சொன்னேனதைத்தடுத்து விட்டாய் ஆனாலுன்னிஷ்டப்படி யிதோவழிபாய்ப்போனால் சுடுகாடு காண்பாய்.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே வேடனுய்வந்த விஸ்வாமித்திரமுனி மயானத்திற்கு வழிகாட்டி மறைந்தானினி சந்திரவதி சுடலைவருஞ்சிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி-கண்ணி-கேதாரம்-ரூபகம்.

போறேனிதோ போறேனிதோ போறேனிதோ
போறேனிதோ போறேனிதோ சுடலை

தேறேன் துய ராறேனப்பா
காறேனுங்கை பாரேனினி (போ)

சுடலையிருப் பிடமோகாடி
அடவிதனிற் றடங்கொண்டுநான் (போ)

நில்லுமென்றே கல்லெறிந்தே
சொல்லும்பூதத் தல்லல்நீக்கி (போ)

வருந்தும்வழி குறுக்காகவே
கருநாய்களுந் திருகவுநான் (போ)

மெத்தபசி உத்தேனென
கத்திபேயுந் தத்தளிக்க (போ)

என்னைச்சுட வுன்னைப்பெற்றேன்
தன்னைச்சுட அன்னையும்நான் (போ)

நானேஒண்டி யானேன்மாறிப்
போனேனினித் தானேயிதோ (போ)

வசனம்.

அப்பாமகனே.

சுடலைபாராய்! புடம்வெகுது
மடலோங்கிய விடமிதுதான்-போ
வந்தேனடா வந்தேனடா வந்தேனடா
வந்தேனடா வந்தேனடா சுடலை

சந்திரமதி-வசனம்.

ஓ-காசிநாதா, நான்பெற்றமகனைத் தோளின்மேலில் தாங்கிச்சுடு காடுவந்தேன் இவனை இந்த மணலின்மேலில் வைத்துக் கட்டைதேடப்போகிறேன் சிங்கம் கரடி நாய்நரி பூதமுதலானது தீண்டாதிருக்கச் செய்வாய் விஸ்வேசா.

பொதுவிருத்தம்.

மாதுமகன்றனைக்கிடத்திக் கட்டைமுட்டை
மயானத்திற்றான்பொருக்கச் சென்றாளிப்பாற்
றீதேதுமுன்செய்தே னப்பாமந்திரி
திகழிலாப்புலையனைப்போல் வேடந்தாங்கி
வாதுபுரிந்தாட்டமிடும் பேயின்கூச்சல்
வர்ணசங்கீதமெனச் செவியிற்கேட்சப்
பாதகமென்புரிந்தேனோ பரமேவென்றுப்
பதறுவான் துயரத்தினாற் கதறுவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்வாறு சந்திரமதி தன்மகனை ஓரிடத்தில்வைத்து கட்டைபொருக்கச் சென்றாளிப்பால் அரிச்சந்திரன் தனக்குநேரிட்ட காலகெதியையெண்ணி மந்திரியுடன் பிரலாபிக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-கண்ணி-நீலாம்புரி-ஜம்பை.

ஆதிசிவசங்கரனே யடியேனிச்சுடலைவர
பாதிமதியோன்றனது பக்ஷமதோமந்திரி

மந்திரி.

சந்திரனுமன்றொருநாள் சாம்பவியினுடன்கூடி
இந்துதங்கிநடனித்த யிடமிதுகாணரசே

அரிச்சந்திரன்.

காட்டமடிக்கிச்சவத்தை கடத்தித்தணல்மூட்டிடவும்
வாட்டமுடன்நாற்றமதில் வருந்துவதேன்மந்திரி

மந்திரி.

இத்திருவாசனைகொள்ள என்றுஞருமிவ்விடத்தில்
ருத்திரனும்வீற்றிருப்பா னுண்மையிதுவரசே

அரிச்சந்திரன்.

கைதனிலேகோலேந்திக் காவலிங்குநான்புரிய
வையகத்திலென்னகுறை வகுத்தநோதான்மந்திரி

மந்திரி.

வறுமைசுகமன்புபொருள் வாழுலகோர்புரிவதெலாந்
தருமனதிகதேநீதி தாவிடுங்கோலரசே.

அரிச்சந்திரன்.

பரணையின்மேல்கானமர்ந்து பலவிதமாய்நொந்துருகத்
தரணிதனிலேதுசதி தான்புரிந்தேன்மந்திரி.

மந்திரி.

அட்டமதங்களையொடுக்கி யங்குராகமதையடக்கி
இட்டமுடன்சாம்புவனு மிருந்தவிலையரசே

அரிச்சந்திரன்.

பூசமுடாகினிகொள்ளி பொறிஜாதிஜாகினிகூவ
பாதகனன்கேட்கயென்ன பழிபுரிந்தேன்மந்திரி

மந்திரி.

ஆதிசத்தியம்பிகை அமைத்தருவங்காளியைப்போற்
சோதனைசெய்வேளையவள் சொற்கேட்போரரசே

அரிச்சந்திரன்.

தட்டிதொட்டுமென்னறையிற் றரித்துமிந்தக்கருங்கந்தை
வெட்டியான்போலிங்கிருக்க விதிவசமோமந்திரி

மந்திரி.

பரமன்புலித்தட்டிதொட்டு பாங்குடன்கரித்தோலை
கரத்திலிட்டுநடனித்த காரணங்காணுமே

அரிச்சந்திரன்.

சுடுகூலிவாங்கிடநான் சுடலைதனைக்காத்திருக்க
படுபாவியேதகுற்றம் பண்ணினேனோமந்திரி

மந்திரி.

அன்னமிட்டவர்க்கிலையை யசட்டைசெய்துமறித்திடவே
பண்ணியதோர்கருமத்தின் பகுதிபலமாமே

அரிச்சந்திரன்,

பெண்டுபிள்ளைகளோடுவிட்டு பிரிந்திருக்கச்சிவனுடைய
தொண்டுபுரிவோரையென்ன துன்பஞ்செய்தேன்மந்திரி.

மந்திரி.

சத்தியத்தைக்கைக்கொண்டு சார்ந்திருப்பீர்பத்திநெறி
நித்யமலவாழ்வெனவே நினைக்கவந்திராசே

அரிச்சந்திரன்.

சுற்றத்தான்நேசமெங்கே சூழுமன்பாசையெங்கே
நற்றுபந்துவர்க்கமிங்கு நாடாததேன்மந்திரி

மந்திரி.

மச்சமதிற்காசித்தே மகிழ்ந்தநோக்கிநேர்வாங்கில்
மெச்சிவேறிடம்போகு மியற்கையென்பிராசே

அரிச்சந்திரன்.

மந்திரிகடனிலொருவன் மனந்தளர்ந்துபோகாமல்
எந்தனுடன் துயரருந்து மிச்சையென்னமந்திரி

மந்திரி.

கமலமதநீரிலுற்றே காய்ந்திடினுங்காய்ந்துதிக்குஞ்
சபலம்விட்டேயுண்மைதனைச் சான்றோன்முறையாசே

அரிச்சந்திரன்.

சித்திரையின்றேவருது நேமமுடனென்காவல்
பத்தியாய்ப்புரிபவரார் பகர்ந்திடுவாய்மந்திரி

மந்திரி.

நாலிருந்துகாவற்செய்வேன் நாயகனேசித்திரைநீர்
தான்புரியவேதுதடை தயவுசெய்வீரரசே.

போதுவசனம்.

கேளுங்கள்சபையோர்களே இந்தப்பிரகாரம் பாணையின்மேரில் சித்திரைசெய்யும்போது கினவுகண்டு திகைத்து மந்திரிக்குத் தெரிவிக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்-அகவல்.

மந்திரிகேளாய் மகிழ்வுடனானுஞ்
சுந்தரப்பாணைமேற் சொக்கினேனளவில்
கினவதுகண்டேன் கிளம்புவேனீகா
நினைவுடன்கேட்டே நிகழ்த்துவாய்பலனே
ஒருபெரும்பூதம் ஒடுங்கிப்பதுங்கவே
மருளுடன்மற்றொன்று மகிழ்ந்துசந்தோஷமாய்
ஜெயஜெயத்தோட்டி ஜெயம்பெறுவென்றே
நயமுடனுரைத்தே நாட்டியஞ்செய்தது
பெண்பூதமொன்று பிள்ளையையேந்தியே
என்னொளிமுன்பாயிருந்தியேநின்றது
பாம்புருவாகப் பதைத்தொருபூதந்
தேம்பிடசிசுவின் திரேகத்திற்றங்க
காலுங்கையில்லக் கரும்பூதமொன்று
மேலாகவென்றே மிசைந்தோடக்கண்டேன்
கொள்ளிப்பிசாசுங் கூடொருபிடாரியுங்
கள்ளனைப்போலவே கறுத்தமேனியாய்
கோலக்கிடாவின்மேற் கொண்டிடக்கண்டேன்
நாலொருதலையுடன் நகைத்தொருபூதஞ்
சிரித்துபேயாட சிசினில்பயிரை
விரித்துவிர்வரணமாய் வேறொருபூதம்

பக்கத்திலேயொரு பசாசினைத்தாங்கி
கக்கத்திற்சட்டியுங் காலையுந்தூக்கியே
வந்தெதிர்நிற்க வாயதுகுளறி
எந்தேகமறந்து ஏங்கியேநிற்குறேன்
வெள்ளிமுளைத்திட விடிந்ததுபொழுதெனத்
துள்ளியானெழுந்து தொடுத்துசெங்கோலினை
தேசவிசாரணைத் திகழுடன்புரிந்தேன்
மோசமெனவருமோ மொழிகுவாய்மந்திரி.

சத்தியகீர்த்தி-தரு-பைரவி-ஆதி.

பல்லவி.

பெருமைபெருகக்காலம் பெம்மானருளாலெனைப்
பெற்றவராவரும்பாரீர்.

அநுபல்லவி.

அருமையாய்நீர்கண்ட அச்சமிலாக்கினவால்
அடையும்பலனைச்சொல்வேன் ஐயாயினிமேல்நீரும் (பெ)

சரணங்கள்.

நம்பைக்கெடுக்கமனம் நாட்டியிவ்வாறுசெய்த
நலமிலாமுனிவனை நடுக்கிக்குன்றியபூதம்
இம்மைமறுமையினி லேற்றகீர்த்திபுனைந்த
இறைவாநின்குருநானே யெதிரிலாடியபூதம்
ஏந்தலேபெண்பூத மென்றனைப்பெற்றதாய்
என்னுவீர்தூக்கிய தெழிலுருமைந்தனீர் (பெ)

பாம்பென்றிரப்பூதம் பன்னிருகைவேலன்
பகன்றகொள்ளிவாய்ப்பூதம் பாருமக்கினிதேவன்
தரமின்றுகண்டகள்ளன் தருமராயன்சடை
தரித்தபரமசிவன் தானேபார்வதியுடன்
தந்தையேகாலிலான் தாவியகாரினுள்
தானுவேமுடிந்ததாற் றுண்டினன்வாழ்த்தினீர் (பெ)

வெள்ளிமுளைத்ததன்றே விளம்பினோதசுக்கிரன்
வேண்டியுமக்காயிங்கு விரைவில்வருவார்கோவே

கள்ளம்புரிந்தமுனி கர்வமடங்கியும்யாற்
கவலைக்குள்ளானவனல்ல சதியைப்பெறுவீர்தேவே
காசிலிறியிலுமதுக்னமுமபெருமையோங்கும்
கதிர்குலந்தழைத்திடுங் கழலடிக்கடியனே (பெ)

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசன்கண்டகினவின் சங்கதியை மந்திரிசொல்லக்கேட்டு மனதுக்குளிர்ந்திருந்தான் அச்சமயத்தில் சந்திரவதியம்மன் கட்டைபொறுக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி-கண்ணி-ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

காசிநாதா யிதுவுன்னருளோ
காட்டினில்மைந்தனை நீட்டினேனுன்வசம்
மேட்டிமேநான்வற மட்டிலுமையா (காசி)

முட்டைபொருக்கவைத்தாய் சிவமே
முன்னாளினில்யான் யென்னபாதகம்
பண்ணினேனோவன்றி வுன்னருள்தானோ (காசி)

கட்டைதேடவேவிட்டாய் நீயே
காருல்மிகுத்திடும் போதகரளித்த
நீதிலாப்பாலனை பாதகிசுடவே (காசி)

சுப்பல்பொறுக்கவைத்தாய் சுகமே
சுந்தரநாதா உன்றனருளிதோ
என்றனைவொண்டியாய் வந்தழச்செய்தாய் (காசி)

சுள்ளிகுவிக்கலானேன் காலம்
சோதனைசெய்தனை வேதனைபுரிந்திட
பாதகிநானென்ன தோதகஞ்செய்தேனோ (காசி)

சந்திரவதி-விருத்தம்.

வனத்தினிலுன்னைத்தேடி வருந்தியேகண்டெடுத்து
இனத்துநான்றோள்மேற்றூங்கி சேர்ந்துமேசுடலைதன்னிற்
கனத்ததோர்பிணங்கள்வெந்து கரித்திட்டகட்டைதேடி
மனத்துணிவாககஷ்ட மடிக்கினேன்வளர்த்துமேனே.

வசனம்.

அப்பா மகனே தேவதாசா உன்னைக் காட்டில் கண்டெடுத்து சுடுகாடுவந்து பிணங்கள் சுட்டு மீந்தக்கட்டைகளை பொறுக்கி காஷ்டமடிக்கினேன் இனிவுன்னை வளத்தரேண்டா கண்மணியே.

கண்ணி.

சாசிவிஸ்வேசா நீயேகெதி
கங்காதரனே திங்களணிந்தவா
எங்களையிவ்வண்ண மயங்கிடச்செய்தாய்
போதும்நான்பட்டதுன்பம் மன்னு
புண்ணியவரசே எண்ணியுமதுபதம்
நண்ணியவிதிப்படியென் கண்மணியைச்சுட
ஓடிவருவீர்பிராணநாதா
வுத்தமவனக்குநான் பத்தியாய்நடந்ததே
சத்தியமாகினில் இத்திசைவருவீர்.

சந்திரவதி-விருத்தம்.

மன்னனேயுமதுவாசை மகனுமோராகந்தீண்டித்
தின்னைமறித்தான்காட்டில் தேடிநான்றூக்கித்தோளில்
இன்னருமயானந்தன்னி லெறிந்தகொள்ளிகளைச்சேர்த்து
இன்னிமைவளர்த்திகொள்ளி யிடுகிறேன்வருவீர்நாதா.

வசனம்.

ஓ என் பிராணநாதா வுமது கண்மணியை சர்ப்பந்தீண்டி காட்டில் மறித்தான் நான் தூக்கிவந்து யிவ்விடத்தி லெறிந்துவிட்ட கட்டைகளால் காஷ்டமடிக்கி மகனைவளர்த்தி கொள்ளிவைக்கப் போகிறேன் நான் பதிவிரதாதர்மம் பிசகாமல் நடந்தது மெய்யானால் நீர் ஓடிவந்து பார்த்துப்போவீர் பிராணநாதா.

கண்ணி.

காஷ்டத்தில்நீ படுப்பாய்மகனே
கல்மீதாவைத்தேன் நல்லொலிவாய்க்கே
மெல்லியமனலே தேள்ளூறேனரிசியாய்

வசனம்.

ஓ பிராணநாதா.

கொள்ளிவைக்கவேபோறேன் மன்னு
கூவியும்மைமகன் பாவியழைத்தகுரல்
மேவியுமதுயிரு செவியிலுழையிலையோ

எறியுதேசட்டைபற்றி அப்பா
என்னிருவிழியில் றன்னுளமணியே
உன்னருந்தேகம்போன்றதோமகனே (கா-கி)

சந்திரமதி-விருத்தம்.

பார்த்திட்டகோவிலெல்லாம் பணிந்துகைசிரமேற்கொண்டு
கார்த்திகைவிரதத்தோடுங் கனமுளதானமீந்து
பார்த்திபரளிக்கப்பெற்ற பண்புளபாலாவாசை
தீர்த்தையோகர்மமென்றன் தீவினையாற்செய்தேனே.

வசனம்.

அப்பாமகனே அருந்தவஞ்செய்தும் பெற்றபலனை யின்று தீர்த்தையோ பாலா யிதோ வுனக்குச்செய்யவேண்டியகருமஞ் செய்தேனப்பா கண்மணியே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

என்னமோபுதுமையாக விருக்குதுமந்திரிபாராய்
வன்னிருள்தனிலேயிந்த வனத்திலில்யாரோகாணேன்
தின்னமாய்க்காஷ்டமேற்றித் தீயதோமூட்டுகின்றார்
உவ்விடமடைஞ்சென்று உருப்பார்த்துவாரோனப்பா.


வசனம்.

அப்பாமந்திரி யிதேதோ புதுமையா யிருக்கின்றது யாரோயிந்த அர்த்தராத்திரியில் காஷ்டந் திருட்டுத்தனமாகக்கொளுத்துகிறார்கள் நான்போய் பார்த்து வருகிறேனப்பா சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-வசனம்.

மஹாபாக்கியம் அப்படியே போய்வாரும் ஆண்டவனே.

சந்திரவதி குழந்தையை தகனஞ்செய்கிறதை மயானகாவலன் காலாலுதைக்கிறபாகம்.



அரிச்சந்திரன்-விருத்தம்.

ஆரடிகள்ளிநீதா னடாதவிவ்விருளிற்றனே
பேரிடிமழையில்வந்தே பிணந்தனைச்சுடவுமானாய்
கூரடிவுன்றனாருங் கொளுத்துமிப்பிணத்தின்வாறுந்
தாரடியாண்டைவாரந் தடுத்திடின்விடமீயேனே.

வசனம்.

ஆரடி யார் நீ திருட்டுத்தனமாய் வந்து இவ்விடத்திற்கு கொடுக்கவேண்டியதை கொடுக்காமல் பிணத்தைச் சுடலானாய் நீயார் உன் பெயரென்ன சொல்லடி சொல்லு.

சந்திரவதி-விருத்தம்.

கள்ளிநானல்லவையா கபடியுமல்லவையா
துள்ளியென்பாலன்காட்டிற் றேன்றியநஞ்சால்மாண்டான்
நள்ளிருள் தனிலேதாங்கி நானிந்தசுடலைகண்டேன்
கொள்ளியைவைக்கலானேன் கோபத்தைப்பொறுப்பாய்போற்றி.

வசனம்.

ஐயா நான் திருடியுமல்ல கபடியுமல்ல வென்மகன் பாம்பு கடித் திறந்தான் ஆனதாலிங்கே தகனஞ்செய்ய வந்தேன் தயவுசெய்வீர் ஐயா,

அரிச்சந்திரன்-விருத்தம்.

சுடலையையாளுமென்றன் சுவாமியினருட்படிக்கே
கடமையைவாங்கவிங்கு காவல்நானிருக்கநீயுந்
திடமுடனுத்திரவின்றி தீயதைமூட்டலானாய்
நடநடபிணத்தைத்தூக்கி நண்ணரியுன்பதிக்குத்தானே.

வசனம்.

அடியேன் எசமானுத்திரவின்படி யிங்கு காவலிருக்க என் எசமானுக்குச் சேரவேண்டிய கூலியைக் கொடாமல் தீயைமூட்டியது தகாது சவத்தையெடுத்துக்கொண்டு உன் வீடுபோவாயடி திருடி.

சந்திரவதி-விருத்தம்.

காவலிங்குண்டேயென்றன் கணவிலுமறியேனையா
பாவிநானேழைதொண்டு பகருமுன்கடமையீய
தாவியேபடைத்திருந்தாற் றனித்திங்குவருகுவேனோ
கோவிக்காதென்மேலிந்தக் குழந்தையைச்சுடச்செய்வீரே.

வசனம்.

ஐயா இவ்விடத்தில் காவலுண்டென்று எனக்குத்தெரியாது நா னே ஒருத்தருக்கடிமை கூலிகொடுக்க கெதியிருந்தால் தனியாய் வரு வேனோ தயவுசெய்து குழந்தையைச் சுடச்செய்வீர் ஐயா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

நாட்டினிலெதுக்குபஞ்சா நாரிநீலிநீலி
வாட்டமில்லாமலிங்கு வந்ததுமன்றிமெத்த
நீட்டமாய்ப்பேசலுற்றாய் நிர்மூடிசவத்தைநீதான்
ஓட்டமாயெடுத்துச்செல்வா யுதைத்திட்டேன்கள்விபாரே.

வசனம்.

ஆ-ஆ-அடி நீயே நீலி யிதோ வுன்மகனைக் காலாலுதைத்து தள் ளினேன் எடுத்துக்கொண்டோடி ஓடிப்போடி.

சந்திரவதி-தரு-இ-ம்-காப்பி-தாளம்-ஆதி.

அடபாலாவிந்த அவதியென்னடாசிலா
அங்கம்பதறத்தோட்டி யதட்டிகாலாலுதைக்க (அட)

படைமன்னர்சூழ்ந்திட பட்டவர்த்தனர்தாழப்
பணிந்துபலதேசத்தோர் பாதமதைத்தொழ
குடைநிழலினீதிக் கூறியரசளித்தக்
கொற்றவராவித்திட்ட குலமணியேசிலா (அட)

அரசும்பதியும்நாடும் அடியவரிறந்திட
அளித்தவென்னைசரீன்ற அளியேநாம்பிரிந்திட
பரமனருளால்காசி பாப்பானடிமையாகி
பாம்புகடித்திறந்தும் பறையனுதைக்கச்சிலா (அட)

மண்ணிற்பெண்ணாய்பிறந்து மாதவங்கள்புரிந்தேன்
மகனெபதின்பலனை மயானந்தன்னிலறிந்தேன்
எண்ணிக்கையில்லாத்துய ரெனக்கேயெழுதவயன்
ஏதுபழிபாவங்க ளிழைத்திருந்தேனோசிலா (அட)

போத-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசன் ஜாக்கிரதையாய் வராதப டியால் மந்திரி நாம்போய் பார்க்கலாமென்று அரசனிருக்கிறவிடம் வந்தானென்றறிவீர்கள் கனவான்களே.

சந்திரவதி-வசனம்.

ஐயையோ மகனே அப்பா மகனே என்னருமை மகனே காசி நாதா காசிநாதா.

அரிச்சந்திரன்.

மகனேமகனேயென்று ஜெகஜாலவிருட்டினில்
பகவானைநினைக்கிறாயென்னடி-நீலி
சுகமாயெனக்கதைபன்னடி
சகலருமயங்கிடச்சாதிக்கிறாய்மொழி
சாத்துவேன்கோலினாற்பாரடி

சந்திரவதி-கண்ணி-கெண்டா-சாப்பு.

என்னடியெனத்தோட்டி வின்னமாய்ப்பேசிடுஞ்
சின்னமொழிகேட்கலாச்சுதே-என்
வன்னமேன்குன்றிப்போச்சுதே
மன்னவர்பாதத்தைமனோவாக்காற்பூசித்து
மயானத்திலிக்கெதிவாச்சுதே

அரிச்சந்திரன்.

பதிவிரதாதர்மத்தி றெியாயின்வரவிங்கு
விதிவந்தகாரணமென்னடி-மெத்த
அதிசயமுந்தன்சொற்றானடி
சதிகாரிநீமெத்த சண்டாளிபடுநீலி
சாற்றினேனுன்வாயைமூடடி

சந்திரவதி.

சதிகாரியென்றெனை மதியாமற்றோட்டிதான்
அதிகமாய்ப்பேசவுமானதே-என்
பதியோடிருந்தசுகம்போனதே
விதிவசமோவிந்த வெட்டியான்பலவாறு
வெறுத்துப்பேசவுங்காலமானதே

அரிச்சந்திரன்.

வெட்டியானென்றுமே மட்டிபோற்பேசுறாய்
கெட்டித்தனமுள்ளபாதகி-இனி
எட்டிநடவடிகாதகி
பட்டித்தனவாக்கைப் பதறாதேகதறாதே
பாரிலிலாக்குணகாதகி

சந்திரவதி.

காதகியென்றெனை யோதவும்தோட்டி
அன்னீதங்கேட்கவிதிவிட்டையோ-உன்
பாதம்பணிந்துங்கைவிட்டையோ
வேதந்துதித்திடும் விமலாகாசிவாசா
விளக்கத்துன்பந்தலைப்பட்டையோ

அரிச்சந்திரன்.

காசிநாதனைமெத்த யாசித்தவள்போல
பூசிப்பேசுறுயுன்றன் ஜாலத்தை-மூடி
தூஷிக்கிறுயென்றன் கோலத்தை
பேசிடிற்பயனுமோ பேச்சிகாசீந்திடில்
பிணஞ்சுடலாயனுகூலத்தை

சந்திரவதி-விருத்தம்.

நதிவளம்பெருகுங்காசி நகரினிற்சுடலைகாக்கும்
அதிபதிகேளன்பாலன் அரவத்தால்மாண்டான்காட்டில்
விதியினுற்சுடவோனும் வெந்தணலவித்திரையா
கெதியில்லைகாசுமீயக் காப்பாயுனகழலைபோற்றி.

வசனம்.

ஐயா கோபஞ்செய்யவேண்டாம் என் குழந்தையைச்சுடவேண்டாமெனில் எனக்கு காசுமுதலானது கொடுக்க கெதியில்லையானதால் தயவுவாக்கு கொடுப்பீர் உமக்கு போற்றிசெய்கிறேனையா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

போற்றியென்றுரைத்தமாதே புகலுவேனென்றுணை
சாற்றியவாறுபோலச் சவந்தனைச்சுடவேகூலி
மாற்றிடேன்றண்டுங்காசும் மகிழ்வுடனரிசியீந்தால்
ஏற்றியேசுடுவேனென்னை யெஜமானுமதிப்பார்பெண்ணே.

வசனம்.

பெண்ணே எனக்குப் போற்றி செய்தாய் கால்பணம் முழத்துண்டு வாய்க்கரிசி முதலானதுங் கொடுப்பாயாகில் தடையன்றி உன் மகனைச் சுடுவேன்மாதே.

சந்திரவதி-விருத்தம்.

துண்டுகாற்பணத்திஞேடு தோகைவாய்க்கரிசிதானுங்
கொண்டளித்திடவெனக்குக் கூடுமாயிருக்குமாயின்
கண்டிருள்தனிதேநானுங் காளிபோற்சவத்தைபேந்தி
யூண்டியாய்வருகுவேஞே உத்தமாவிடைதாவையா

வசனம்.

ஐயா அப்படி பணந்துன்டு வாய்க்கரிசி முதலானது கொடுக்க சக்தியிருந்தாள் நான் ஒண்டியாய் சபங்கொண்டுவருவேஞேமன்னித் தருளுமையா.

அரிச்சந்திரன் விருத்தம்.

விடையதுகொடுக்கநாஞே வெட்டியாளடிமைகாண்பாய்
தடையதுசெய்வாரென்னைத் தண்டிப்பாரெஜமான்கேட்டால்
கடையாநானெனக்குச்சேருங் கமுறுவாய்க்கரிசிவேண்டேன்
படைத்துநீகாசுந்துண்டு பாலனைச்சுடுவாய்மாதே.

வசனம்.

கேளாய்மாதே யெனக்குச்சேரும்படியான வாய்க்கரிசியைத்த ள்ளிவிடுகிறேன் மற்றதைத் தள்ளிஞல் என்னெஜமான் தண்டிப்பா ரானதால்காசுந்துண்டும் கொடுத்துவிட்டு பாலனை சுடுவாய் மாதே.

சந்திரவதி விருத்தம்.

ஐயனேயுரைப்பேனுஞே அரும்பாவிகெதிவேறில்லை
வையகந்தனிலெனக்கு வாழ்மனைசுற்றமில்லை
கையினிற்காசுந்துண்டுங் கவர்ந்திடவகையுமில்லை
துய்யனேமனுவுதாராய் தொழுதடிபோற்றினேனே.

வசனம்.

ஐயாயெனக்கு காசுந்துண்டுங் கிடைக்கும்வழியில்லை எனக்கு கொடுப்பவருமில்லை தயவுசெய்துசுடச்செய்தால் வுமக்கு தருமமுண் டு ஐயா.

அரிச்சந்திரன்-விருத்தம்

கெதியில்லைசுற்றமில்லை கிட்டிடவகையுமில்லை
பதியில்லையென்றுயிங்கே பணிந்துமெயுரைத்தகோதே
பதிதனிலுணர்ந்தேனுன்னை மாஜாலிநீவியென்றே
சதிவிடுந்தாலிதன்னை சாங்கமாய்விற்றுத்தாராய்

வசனம்.

ஆ-பெண்ணே கெதியில்லையென்றுசொல்லுகிறாய் நீ மஹாயிந் திராஜாலி உன்கழுத்திலிருக்கிற அதிக பிரகாசமுள்ள தாலியைவிற்று க்கொடுப்பாயடி மாதே.

சந்திரவதி-கண்ணி-சாமா சாப்புத்தாளம்.

என்காலமிந்தக்காலம் எனக்குவந்ததிக்கோலம்-ஐயோ
அன்னமே காசியில்வாழும் ஆதிசிய ஓ-விசாலாட்சி-எ

தேவர் முனிவர்சித்தர் தேடினுங்கண்ணிறற்கான
ஓவியமுற்றவென்றுலி ஓகோதேட்டிகாண் ஆட்சி-எ

இராஜருந்தேசருங்கூட எண்ணிலுங்காணிடாத்தாலி
வேசருஞ்சுடலைகாக்கும் வெட்டியான்பார்த்திடகாட்சி-எ

மன்னவர்கண்ணிற்கேதோற்ற மாதவத்தாற்பெற்றதாலி
இன்னரும்புலையனுக்க இட்டைபேவிதிகாமாட்சி-எ

அரிச்சந்திரன்விருத்தம்

தாலியைகண்டேனென்றே தவிக்குறாய்தயங்குகின்றாய்
நீலிபோல்வந்துமென்னைநிந்தித்தேபுலம்புகின்றாய்
சீலியாந்தேவிதன்னை சிந்தித்தும்வருந்துகின்றாய்
பாவிநீயார்தானிந்த பாலனார்பகருவாயே.

வசனம்.

அடிமாதே நான் தாலியைக் கண்டேனென்று என்னை நிந்தித்து சிவத்தை சிந்தித்து மெத்த வுருகுகின்றாய் நீயார் இந்தபாலனார் சொல்லுவாய் மாதே.

சந்திரவதி வசனம்.

ஐயா யென்னை யாறென்றீர் என்குறைதையச்சொல்லுகின்றேன் கேட்டபின்பு கூடவுத்தரவுதாருமையா.

சந்திரவதிஅகவல்.

ஆரெனவென்னை அன்புடன்கேட்ட
வீரவாகுவேநான் விளம்புவேனையா
கன்னமாபுரியைக் காத்திடுமரசன்
நன்னருந்தவத்தால் நானுதித்தேனே

என்னுடன்கூடவெயெழிலுருதாலியும்
உன்னதமாகவேஓங்கியேவந்தது
அயோத்தியையாண்ட அரிச்சந்திரதீரர்
வியோத்தமரென்னையே வேண்டியேமணந்தார்
சந்தோஷமாக சகலமும்படைத்து
இந்நற்புதல்வனை யீன்றனர்பாவி.

அரிச்சந்திரன் வசனம்.

கேட்டையாமந்திரி.

மந்திரிவசனம்.

முழுதுங் கேட்பீரையா ஒருவேளை முனிவன்சூதாயிருக்கும்.

அரிச்சந்திரன்வசனம்.

நல்லதப்பா மந்திரி,

கவுசிகர்தானுங் கபடநினைந்தே
தவசுக்குப்பொன்தான் தரவெனவரசர்
ஈந்தனாவாங்கி யிருத்துமுன்னிடமெனச்
சாந்தமாய்ச்சென்றபின் சகிக்கொணுகோரம்
பன்னிபோனாட்டைப் பறித்திமேகொண்டு
வுன்னிடம்வைத்தபொன் னுதவெனக்கேட்டார்
இன்னகர்தனிலே யீகுவேனெனவே
மன்னவர்பின்னே மகாபாவிபான

அரிச்சந்திரன் வசனம்.

கேட்டையாமந்திரி

மந்திரி வசனம்.

பொருமையா.

தரகனென்றொருவன் தகாதவாறுடி
கரமதிற்கிட்டிதாள் கல்லிலெத்தியிலும்
இட்டனன்பாவி யிறைவருக்கங்கே

பட்டயிப்பாலனும் பதைக்கவுங்கிட்டிபை
பூட்டினன்தோஷி பொறுக்காமலென்மனம்
நாட்டினில்விற்கவே நயந்திடவரசர்.

அரிச்சந்திரன்வசனம்.

இதுகேட்டையாமந்திரி.

மந்திரி வசனம்.

கேழ்க்கிறேனையா.

விலையதுகூறி விற்றிடச்சகல
கலைகளுமுணர்ந்த காலகண்டையன்
விலைக்கெனவாங்கியே வேந்தனைமிரட்டிக்
குலக்கதிர்பாலனைக் கொண்டனன்தன்வசம்
தொண்டதுபுரிந்தே தொழுதிடும்நாளிற்
கொண்டுவாசமித்தெனக்குழந்தையாமிவனை
காட்டிற்குமேவக் கடித்துமேபாம்பு
மாட்டியவிஷத்தால் மாண்டனன்பாலன்
வேந்தனும்மந்திரி விடையதுகொடுத்தே
சார்ந்தனரெங்கைபோ சதியறியேனே
என்குறைமெத்த விருக்குதுவுரைத்தால்
நான்மதிபுரிந்தே நயந்துவாக்கருள்வாய்
பாலனைச்சுடவே பாதகிசடுதியிற்
காலகண்டன்மனை கருதிட ஐயா,

சந்திரமதி-வசனம்.

உனக்கு இப்பேர்க்கொத்தகாலம்வந்ததா என்னம்மணி.

அரிச்சந்திரன் விருத்தம்.

சூரியன்மரபின்றேடு சேர்ந்ததோ அழிந்துபோச்சோ
காரியமெண்ணமாச்சோ கவுசிகன்சதிக்குள்ளாச்சோ
கோரிநான்பெற்றபாலன் குவலயமாண்டிடாமற்
காரிருள்காட்டிற்பாம்பு கடித்துமேயிறக்கவைபோ,

அரிச்சந்திரன் தேவதாசனை எடுத்து புலம்புகிற பாகம்.



வசனம்.

ஓபரமசிவமே சூரியகுலம் அழிந்ததா முனிவருஞ் சனிபனும் ஒன்றுனர்களானானதவஞ்செய்து பெற்றபாலன் பாம்புகடித்திறக்கச்செய்தாயா ஐயோகாசிநாதா.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

அப்பா யெப்போகாண்பேனடா கட்டிக்கரும்பே-ஆ-ஆ-அரும்பே.
ஆவிவிடுத்திட-கூவிநாகமது
தாவிகடித்துயிர்-பாவிகொண்டோட-அப்

ஐயோபெந்தனுளைவெல்லர்ம்போச்சே-அளிபே-ஆ-ஆ-கிளியே
அன்னைக்குதவிபாய் உன்னையனுப்பினேன்
தன்னைவஞ்சித்துமே-என்னைமோசஞ்செய்தாய்-அ

குலத்திற்கொருவிளக்காயிருந்தாய் குயிலே-ஆ-ஆ-மயிலே
கோதைபழுதுமே-பாதைதெரியாமல்
வேதையுடன்வந்து-தீதைகொள்ளவிட்டாய்-அ

மரபுக்கொருமுளைபாய் வந்தாபேமணிபே-ஆ-ஆ-கனியே
மாதவஞ்செய்துமே-பாதகனுனுமே
ஆதவரேற்றிடும் நாதனைகோறினேன்-அ

கொள்ளிவைக்கவுன்னை பெற்றேனடாகுமரா-ஆ-ஆ-சமரா
கூவியழுதாலும்- தாவிமகனேநீ
பாவிமிந்தமுகம்-மேவிபார்க்காயோடா-அ

அரிச்சந்திரன்-தரு-மியாக்-ரூபகம்.

தாயைவிட்டுவந்துகாட்டில் தனியாய்மாண்டாயோ-அன்னை
தன்னை வேண்டாயோ.

வாயைமூடியிருப்பதென்மேல் வஞ்சமோபாலா-உன்னை
வணங்குமுறிசெய்தேனென்று வர்மமோசிலா-என்றன்
கர்மமோலோலா-எ

செங்கோலீயாத் தந்தையெனசித்தம்நொந்தாயோ-அப்பா-சிறு
வயதில் விடுத்தேனெனச் சிறுமைதந்தாயோ-வருத்த-அருகே
வந்தாயோ-வ.

ஐயர்சொன்னவாறடவி அடைந்தையோ தாவி தெர்ப்பை அறுக்
கும்போது பாழும்பாம்பு அமைந்ததோகூவி-தீண்டலான
தோமேவி-தீ.

திக்கில்லாரைப்போலகாட்டில் செத்தையே பூதம்-உனைதேடிப்
பேயுங்கூளிகூவி செப்பசங்கீதம் நீ
ஒப்பிடங்கீதம் நீ

தந்தையென்றே எனையழைத்து தாவிடுங்காலம் ஐயோ தப்பின
தோபிரிந்ததினுல் தனிமையாய்க்கோலம் இனி தாழ்ந்ததோ
சீலம் இனி.

என்னுலல்லோயிந்தத்துன்பம் நேர்ந்ததுமானே அப்பா இனி
க்ஷமித்துதாய்முகத்தை பேரிடாதேனே பழிபோந்தினேன்
நானே-ப.

அரிச்சந்திரன் வசனம்.

அப்பா மகனே அருமைசுதனே.

அரிச்சந்திரன்-தரு-சங்கராபரணம்-ஆதிதாளம்,

பல்லவி.

என்னசெய்வேனினி ஏதுபுரிவேநான் தான்
எனக்குவந்தகெதிக்கோசிவமே.

அநுபல்லவி.

அன்னவாகனமேறு மயனுமிவ்வாறெழுக
அணைத்தமதியெதுவோ இணைத்தபழியிதுவோ-எ,

சரணங்கள்.

முன்னாளினிலென்ன மூர்க்கங்கள் புரிந்தேனோ
முனிவர்கள்மனம்நோக முறைகளிசைத்தேனோ
இன்னாளிலெனக்கு யீன்றமகனுஞ்சாக
யீசாஅன்பரைகாக்கும் நேசாவிசுவேசாநோக்கும்-எ

அரசையிழந்தபின்ன ரவதிகளுக்குள்ளாக்கி
யடிமைபடவித்த தனதித்துயர்க்காளாக்கி
வரிசையென்குலத்திற்கே வாய்த்தபாலனைமாய்க்க
வழியோ யுனக்கென்மேற் பழியோவென்றுரைப்பாய்-எ

உன்னையனுதின மோதிப்பணிந்தபாலன்
ஒகோயிதோகண்டேனுரங்கிட வென்சீலன்
என்னையடிக்கடிக்கி யிப்படிசோதிப்பது
எதோவுந்தனிட சூதோயிவ்வகைகெட-எ

சந்திரவதி-கண்ணி-செஞ்சுருட்டி-ரூபகம்.

துரையேவுன்னைப்பரையனாகச்செய்தானோ-ஓ-ஓ-பாழுபிரம்மன்
தொல்லுலகரசர் அல்லும்பகலுமே
வல்லவாவின்புகழ் சொல்லுவதும்போச்சோ-து

அங்கமுந்தனமுருந் துன்றிடலாச்சோ-ஆ-ஆ-மன்னவா
ஆனாலுமிக்கெதி வானாளுந்தேவருந்
தானைவேந்தருங் காணாரென்னாளிலும்-து

குரலுமாறிக்கூறுகின்றாயேயென்கோவே-ஆ-ஆ-மன்னவா
கோடிசூரியருங் கூடியொருமிக்க
நாடியவர்முகம் வாடியேதங்க-து

என்னைத்தொட்டுபென்னசுகம்பெற்றாய்கோவே-ஆ-ஆமன்னவா
ஏதென்றுசொல்லுவேன் பாதம்பைத்தொட்ட
வாதனைபாலல்லோ நீதுகள்வாய்த்தது-து

புருஷர்சுகமபெண்டாலென்பார்மொழிநா தா-ஆ-ஆ-மன்னவா
பூமியிலேபாவிசாமிநானேயாகும்
தேமிக்குமிக்கெதி காமிக்கேவாய்த்தது-து

மனைவிபாவமணாளனுக்கென்பாரேகோவே-ஆ-ஆ-மன்னவா
மாபாவிநானும் ஆ-ஆ-ஆ-யித்துயர்
ஓ-ஓ-ஓ-நீர்படசாகாமல்நான்பார்க்க-து

பத்தாவென்னுயிர்பாரும்பாதத்திலேமடிப்பேன்-ஆஆமன்னவா
பாத்தவருமேசகாத்தவரும்ரோச
மூத்தவளாமென்னைசேர்த்தபாவமிதோ-து

உம்மால்மாண்டாலுலகிற்கீர்த்தியாங்கோவே-ஆ-ஆ-மன்னவா
உத்தமாயென்கையை நத்திப்பிடிக்காதே
செத்தாலும்நானும்சீர் பெத்திடவாழ்ந்திடும்

சத்தியகீர்த்தி தரு-முகாரிசாப்பு.

பல்லவி.

ஆ-அம்மணி உனக்கித் துன்ப மமைந்தோவம்மணி.

அநுபல்லவி.

பாரினில்நீயொரு பாதகமறியாயே
பாவிஅயனிப்படி பரிவாயெழுதினனோ-ஆ

சரணங்கள்.

மதியதன்நற்றவத்தில் மண்ணிறபிறந்தாயையோ
மன்னரரிச்சந்திரரை மகிழ்வாயமணந்தாயையோ
விதியருமுனிவர்கள் விளம்பினார்சுபமென்றே-ஆ
வேணநீயித்துன்பம் விழுதலிதுவுநன்றே-ஆ

கந்த்ரன்றனைப்பழிக்கும் சார்ந்தவழகெங்கே
சரிமரைந்தேவுடல் சாங்கங்குறைந்ததிங்கே
இந்தவிதிகாணவோ வியற்றினாய்வெகுநோன்பு
என்னசெய்குவேன்பால னிறந்தானுனக்கார்தெம்பு-ஆ

சதிகாரகவுசிகன் சனியனாய்த் தோன்றினன்
சர்வமுந்தான்பறித்தே சன்யாசராக்கினன்
பதிபிரிந்தாற்றுணை பாலனென்றிருந்தேனே
பாவிதெய்வமுமிந்தப்படி செய்பவரிந்தேனே-ஆ

தாயைப்போலென்றனைத்தான் வளர்த்திட்டவம்மா
தரையிற்புரண்டுநீயுந் தானழுகாதேசும்மா
சேயைப்பிரிந்தசோகஞ் சித்தத்தினிவிடாதே
சிவனருளானுவிது சீக்கிரமழியும்வாதே-ஆ

வேந்தன்றுயரைமாற்றி வேண்டுந்திறமுரைப்பாய்
விளையாட்டில்வாழுவென்று விரவில்மனங்களிப்பாய்
ஏந்தலுநீயுமம்மா வித்துயரருந்திட
யிரக்காமல்நானுமே யிருந்தேனேயுயிருடன்-ஆ

சந்திரவதி-விருத்தம்.

வேணவேசத்தியகீர்த்தி விப்புரன்விதித்தவாறு
தோணுவாயானேதோஷி தொன்றலுமெனைமணந்தே
வினிைலனேகதுன்பம் விளைந்ததுகடலேகாத்தல்
காணப்பாதுணையாய்நீயுங் கஷ்டமுற்றனையோபாலா.

வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி அரசரெனைக்கைப்பற்றியபின் அநேக துன்பங்களனுபவிக்கலானர் நீயும்கூடதுன்பப்படலாச்சுதே அப்பா.

அரிச்சந்திரன்-தரு-சாமா-சாப்பு.

ஐயையோபாலனே அருமைசீலனே
அயர்ந்துபடுத்தாயோடா
அடுத்தாயோடாதுடித்தாயோடா
விடுத்தாயோடா அடாமகனே
ஆனையோ பாவி நானயோ மாண்டிபோனையோ போ-போ

சேயானீயுமே செங்கோலாளவே
செப்பியதும்போச்சே
திங்குமாச்சோ காங்கலாச்சோ
வாங்கலாச்சோ உயிர்மகனே
சேயனே தனி நேயனே கனிவாயனே வா வா

பத்துவயதில்பெற்றே அரசை
பற்றியிருப்பாயென்றே
படித்தனரே ஞடித்தனரே
விடித்தனரே அடாமகனே
பாவியோ நான் தோஷியோ குலதுரோகியோ து-து

ஓகோமைந்தனே சாகாவென்னவே
உரைத்தமொழி போச்சோ
உனக்காச்சா எனக்கேச்சோ
முனிவாச்சோ அடாமகனே
உற்றதோ துய ரிட்டுதோ ஆசை விட்டுதோ வி-வி

அப்பாநெருப்பினில் ஒப்பியேவிழ
கப்பிநடந்தாயடா
துடந்தையடா விடந்தையடா
தொடர்ந்தாயடா மகனே
ஐயையோ நூல்பொய்யையோ விதிமெய்யையோ-மெ

இந்தவிதிக்கோ சந்தமாநூல்களும்
விந்தையாய்நீபடித்தாய்
இங்குமடிந்தாய் அந்தமொடித்தாய்
பந்தநொடித்தாய் அடாமகனே
இப்பவே காண்ப தெப்பவே மனமொப்பவே ஓ ஓ

அரிச்சந்திரன் வசனம்.

அப்பா தேவதாசா என்னடா பேசாமலிருக்கின்றாய் உன்னைப் பெற்ற தீர்த்தச் சிறுவயதி லிறக்கவா மகனே.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-சுத்தசாமா-ஏகதாளம்.

அப்பாநீமாண்டாயோ அன்னையைவேண்டாயோ
தப்பிலிநான்துரோகி சண்டாளனேடாபாலா

அஞ்சலியென்றோரை அதட்டிசொன்னேனேயுரை
கொஞ்சம்வயதிலுன்னை கொள்ளைகொடுத்தேன்பாலா

நீதிநிலையைவிட்டு நெறியிலாவழிதொட்டு
ஓதினவியாயமோடா உன்னையிழந்தேன்பாலா

எண்ணாதவெண்ணமையா வெண்ணியிருந்தேன்றுய்யா
புண்ணாக்கியெங்களையே போனாயேமாண்டுபாலா

கொள்ளியெனக்குவைக்க குமாரனிருந்தாய்தக்க
துள்ளியாடிடும்நாளில் துரையேநீமாண்டாயோபாலா

அரசுக்குரியநடை அழகும்படைத்தாய்விடை
இன்றாளெங்களைவிட்டு இறந்துபோனாயே பாலா

பரமனெனைச்சினந்து பறித்தானுன்னையேபாலா
உன்னாலெனதுகுலம் ஓங்குமென்றேனேநலம்

முறிசெய்ததந்தைமுகம் சரியாமோபார்க்கவசம்
மரியாதையலவென்று மாண்டுபோனாயேபாலா

அரிச்சந்திரன்-கண்ணிகள்-முகாரி-ஆதி.

உன்னைப்பெறவீட்டிலேமகனே
உருத்திவங்காட்டிலே-அடடா
தன்னைச்செய்தேன்மேட்டிலே மகனே-ம-ம
சதிமோசஞ்செய்தாயடா

கம்பம்நட்டுநாளுமே-மகனே
கையலையனைத்தானுனே-அடடா
கும்பிட்டதுவீணுமே மகனே-ம-ம
கொள்ளி கொடுக்கவோடா

வீம்புசெய்யுமுனியுமே மகனே
விரட்டக்கூடபனியுமே அடடா
பாம்புதீண்டதனியுமே மகனே-ம-ம
பறந்ததோ ஆவியடா

போயிவாறேனென்றுமே-மகனே
புகன்றுபென்முன்னின்றுமே அடடா
தாயைவிட்டு இன்றுமேமகனே-ம-ம
தனியாய்மாண்டாயோ பாலா

என்னபழிசெய்தேனோ மகனே
எவர்சிசுவைகொய்தேனோ அடடா
சொன்னமொழிதவிர்த்தேனோ ம-ம
சொக்கவேபாம்பாறபாலா

முன்னோர்செய்தபாபமோ மகனே
முனிவரிட்டசாபமோ அடடா
மன்னவர்மனஸ்தாபமோ மகனே ம-ம
மாண்டிடபாம்பாற்பாலா

போகேனென்று தடுத்தாயே மகனே
பூசுரன்பால்விடுத்தேனே அடடா
நேராகமனங்கொடுத்தாயே ம-ம
நுண்ணறிவெங்கேயடா

சத்தியகீர்த்தி-தரு-கமாஸ்-ஆதி.

பல்லவி.

ஏனிந்தப்படிமனங்கலங்கலானீர்மன்னா
விறந்தசிறுவனுமேயெழுந்துவருவானோதான்-ஏ

அநுபல்லவி.

தானிந்தத்துயரத்தைதரித்து மனங்கலங்கிற்
றூனுமேதுலைசெய்வேன் தாணிபுகழுமன்னா-ஏ

சரணங்கள்.

நீர்மேற்குமிழியைப்போனிலையிலா விவ்வுடல்பாரீர்மெத்த
நெறியாயிருப்பதுவே தரையிலறியாதெனத்தேறீர்

ஆறுநூறுண்டுக ளழுதேபுரண்டிடினும்
அயனவிதியைத்துடைக்கப்பயன்றறுகுமோர்பாரீர்-ஏ

சத்தியமெனுந்தனுசக்கரத்திற் றரித்தவருமானீர் சற்றுஞ்
சார்பிலாப்பேதைபோல் ஜனங்கண்ணில்கிரப்பிடலானீர்

நித்திய நிராமய நிர்மலநிஷ்கள்
நிருபனு மருபனுந் தருமனைமறந்துமே-ஏ

வருத்தமும்நீங்கிடத்தரித்திர மகன்றிடக்காலம் இதோ
வந்துகாசிவாழ் சுந்தரனருளினுல்ஞாலம்

விரித்தவரசும்வாழ்வு மரித்தபுதல்வன்கரி
யுரித்தோனருள்புரிந்தாற் றறிந்திடுவீவேந்தே-ஏ

சந்திரவதி விருத்தம்.

கிரிதனையிகழ்ந்ததோளா கிளரொணுயுண்மைத்தாளா
அரியருமகனைக்கண்டே யழுவதும் நீதிதானே
அரிமகனெழுத்தைநம்பா லழித்திடப்போமோநாதா
பிரியமாய்நீரிங்குற்ற பெருமையையுரைசெய்வீரே

வசனம்.

கேளுமென் பிராணநாதா பிரமன்விதியைக் கடக்கப்போமாண்டமகன் வருவானு நீரிவ்விடம்வந்தகாரணஞ் சொல்லுவீர்சுவாமி.

அரிச்சந்திரன்-கண்ணி-காப்பி-ஆதிதாளம்.

என்னசொல்லுவேன்கணேண்-இதோ
  எனக்குவந்தகெடுதியை
முன்னமுனேயேவிற்று அந்த
  முனிகடன்தீர்த்தபின்னே என்ன

தரகன் கூலிக்காயென்னை பர
  தவிக்கு மொழியுரைத்தான்
கரங்கூப்பித்தன்னைவிற்க யங்கு
  கதறினன் மந்திரியவன் என்ன.

தடுக்கவெனையேவிற்கவுன்
  தனையன்கூவினன் தோட்டி
கொடுக்கப்பொன்சம்மதித்தேயவன்
  கொண்டானெனையடிமை என்ன.

இவனேயென்தாயுந்தந்தை மற்றும்
  இணையிலாத் தோழனுமே.
அவனுமென்னுடனிங்கு பல
  அவதிப்படவுமானன் என்ன.

சந்திரவதி-கண்ணி ஆகிரி-ரூபகம்

அரசற்கெலாமொரு அதிபதியா யிருந்தமன்னவா உமது
உரமுமழகுங்குன்ற உகந்தெழுதி னனோதான் மன்னவா

சிரமதிமுடி சீருடன்தாங்கிருந்த மன்னவா இந்த
பரக்கந்தைதன்னையே பணிந்தேயுடுத்தலாச்சே மன்னவா

முத்துவடம்மாலைமோகன மணியுந் தோள்மன்னவா இந்த
பொத்தகம்பளந்தாங்கப்பொறுத்தீரோமனந்தான் மன்னவா

அவனிமகிழச்செங்கோல் அணிந்திட்டவுமதுகைமன்னவா யாருங்
கவணியாவெட்டியன் கைக்கோலெந்தவுமாச்சே மன்னவா

விலைமதியாமடியும் வெண்பட்டுடுத்துமரைமன்னவா என்ன
தலைவிதியோவிந்தத் தட்டிபூண்டவலானீர்மன்னவா

மஞ்சத்திருந்தென்னுடன் மகிழ்வாய்சயனித்தமன்னவா ஆ ஆ
நெஞ்சம்பதரித்தூங்க நீச்சக்குடிசையாச்சோ மன்னவா

வேணுநாதமும்வீணை வெகுவாய்க்கேட்டிட்டமன்னவா இங்கு
பூணுதோபேய்களும் பூதத்தொலிகள் கேட்கமன்னவா

கந்தபரிமளங்கள் காலமும்பூசுமுடல்மன்னவா-சவம்
வெந்தசாம்பலுங்கப்ப விதிவந்ததுவுங்காலம்மன்னவா

அதிபயவிநயமாய் அரசர்பணியும்பாதம்மன்னவா இங்கு
மிதிக்கச்சுடலைசாம்பல்மிருடனமைத்ததுவோ மன்னவா

தேசத்தரசரேவல் திகழாய்ச்செயவிருந்தமன்னவா நீர்
நேசமாய்முறிபட்டு நீச்சனுக்காளாய்நின்றீர்மன்னவா.

அரிச்சந்திரன்-தரு-தேசிகதோடி-ருபகம்.

பல்லவி.

ஏனழுகிறாய் மாதே ஏனழுகிறாய்

அநுபல்லவி.

வானுலகிலமரீசன் வகுத்தவிதியிதுவாகும்

சரணங்கள்.

முன்னஞ்செய்தகர்மம்வந்து
மூண்டுதிந்ததுயர்தந்து
நன்னிலைமறந்துநீதான்
நாயகியுருகலாமோ ஏ

புத்தியிலுயர்ந்தபதி
பத்தியிலமர்ந்தசதி
நித்தியமன்றேயிவ்வாழ்வு
நினைப்பதுஞ்சரியாமோ-ஏ

உன்னைநான்பிரிந்துமகன்
தன்னைப்பாம்புதீண்டஇறகன்
கொன்றைமலரோனுடைய
கோளதன்றிவேறதாமோ-ஏ

சொர்ப்பனத்தில்கண்டபூதம்
செப்பமந்திரியெனநீபதம்

இப்போதுனைக்கண்டவிதம்
  இறைவன்செயலன்றியாமோ-ஏ
எந்தநாளுமுனைக்காண
  எனக்குவராதெனத்தோண
நொந்தவென்மனங்களிக்க
  நோக்கினதேபலன்போது-ஏ

அரிச்சந்திரன் விருத்தம்.

என்னருங்கிளியேமானே யினிப்புகள்கனியேதேனே
உன்னைநானடிமைசெய்தே னுலகெலாமிழிவுபெற்றேன்
பன்னரும்பாலன்மாண்ட பழிக்கிமேயாளாமென்றன்
தன்னைநீகண்டுவாடத் தருமோதான்தகைமையன்றே.

வசனம்.

கேளாய் பெண்ணேநானுன்னையடிமைசெய்வித்ததுந்தவிரபால னிறந்தபழிக்கு யாளானேன் இப்பாவியைப்பார்த்து நீவிசனப்படப் போமோ அடிமாதே.

சந்திரவதி விருத்ம்.

கற்புடையமாதர்கட்குத் தரணிவேந்தே
  கணவரலால்வேறுதெய்வங்கருதவுண்டோ
விற்பனமும்புத்திரனுங் கணவரின்றி
  வேறுவிதமடைவதற்கு விதியுமுண்டோ
சொற்பமல்லகணவரென்று லென்றன்கோவே
  ஜோதியெனும்பரப்பிமசொரூபமாகும
நற்றினவர்பதிபெறுவார் கணவர்பாதம்
  நாடாதார்நரகடைவர் நாளுந்தேவே.

வசனம்.

சுவாமி உத்தமிகளுக்குக் கணவனே குருதெய்வமாகும் கணவ ரைப்பணிந்தவர் பதவிபெறுவார்கணவரையிகழ்ந்தவர் நரகமடைவா ர் ஆனதாலும்மைவிட நான்வேறுகருதேன் என்பிராணநாதா.

சந்திரவதி-வசனம்.

ஐயையோசாமியுன்ற னசனத்திற்கெந்தவாறு
செய்யவுமானீர்திரேகச் சீரெலாங்குறைந்துதோதான்
துய்பவெண்காளையேறுந் தோன்றலினருளிதாச்சோ
வெய்யிலானலிந்திட்டீரே வேந்தனேஎன்மணாளா.

வசனம்.

சுவாமி உமதுபோஜனத்திற் கேதுசெய்தீர்உமது தங்கநிறமான மேனிவாடியதே சிவத்தினருளிப்படிச் செய்ததோ பிராணநாதா.

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே நம்மாலாவதொன்றுமில்லை நீஒன்றுக்கும் விசனப்படவேண்டாம் சவத்திற்கிடும் வாய்க்கரிசியை பசுவிற்கிட்டுத் துலக்கி வடித்துப் புசிக்கின்றேனடிமாதே.

சந்திரமதி-வசனம்.

ஐயையோ காசிநாதா இதுமுன்றன் திருவிளையாடலோ

சந்திரமதி-வசனம்.

சுவாமி இறந்துபோன நமது பாலனை சீக்கிரம்சுடுவீராகில்நான் சீக்கிரத்தில் ஐயர்வீடுபோய்ச் சேருகிறேன் பிராணநாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதினியுரைப்பேன்கேளாய் மகிபனென்னுண்டையான
கோதிலான்வாக்குக்கேதுங் குறையதுபுரியப்போகா
பேதினைவெளியிடாமற் பிரியமாய்நீயேசென்று
வேதியாருகிற்பெற்று விரைவுடன்வருகுவாயே.

வசனம்.

பெண்ணே என் எஜமான்வாக்கு மீறலாகாது உன்னையடிமை கொண்ட வேதியரிடஞ்சென்று காற்பணமும் முழத்துண்டும் வாங்கி வருவாயடிகண்ணே.

சந்திரவதி-விருத்தம்.

மறுனரேசத்தியந்தன்னை மகாநெறியுடனேகாக்கும்
உன்னருட்படியேபோடி ஒருநொடிக்குள்ளேவாறேன்
நன்னருமகனையிங்கு நாய்நரியணுகொணுமல்
உன்னியேகாப்பீருன்ற னுபயபாதங்கள்போற்றி

வசனம்.

சுவாமிஅப்படியேபோய்வாங்கிவருகிறேன் அதுவரையில்மகனை நாய்நரிகள் தீண்டாமற் பாதுகாப்பீரென்றுண்டவனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

கேளடிமாதேநான்ருன் கிளறுநன்மொழிதானிங்கு
தாளவேவெகுநேரந்தான் றடையதுபுரிவையாகில
கோளடியிங்கேதங்கிற் கோவிப்பாரெனதுஅண்ணல்
தோளதிற்கோலேயெந்தித்தோகையேசெல்லுவேன்கண்டாய்

வசனம்.

பெண்ணேநீசீக்கிரம்வரவேண்டியது நேரஞ்செய்வையாகில்சுடு காட்டைச்சுற்றிப் பார்க்கப்போவேனடிமாதே.

சந்திரவதி-வசனம்.

அப்படியேசெய்யுமென்பிராணநாதா.

சந்திரவதி-விருத்தம்.

பிள்ளைபோலெங்களோடு பிரியாமற்றுன்பமெல்லாம்
கொள்ளவேயுடந்தையான குணமுளமந்திரிகேளாய்
வள்ளலிவ்விடத்தைவிட்டே வகன்றிடினீதானின்றே
தெள்ளரும்பாலன்றன்னைத் திறமுடன்காப்பாயப்பா.

வசனம்.

அப்பா மந்திரி ஒருவேளைவநமதரசன் சுடலையைப்பார்க்கச் சென்ருல் நீ என்மகனைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுவாயப்பா சத்தியகீர்த்தி.

காலகண்டையரிடத்தில் விஸ்வாமித்திரன் வருகிறபாகம்.



விஸ்வாமித்திரன். காலகண்டையர். காலகண்டி.

சத்தியகீர்த்தி-விருத்தம்.

அன்னையேயென்னைப்பெற்ற வருந்தவப்பொருளேயம்மா
மன்னவரடிமையிந்த மயானத்தைச்சுற்றவேண்டி
உன்னியேநடப்பார்நானு மொருவருமிருக்குபாலன்
றன்னையேபாதுகாப்பேன் றடம்பற்றிப்போவீர்தாயே

வசனம்.

கேளாயம்மணி அரசரடிமையானதால் சுடுகாடுசுற்றப்போனாலும் நானிருந்து பார்த்துக்கொள்ளுகிறேன் சீக்கிரம்வருவாயம்மணி.

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாகச் சந்திரமதிபம்மன் காற்பணமுழந்துண்டும் வாங்கவேதியன் வீட்டிற்குத் திரும்பக்கண்ட கௌசிகன் முன்னுதாகக் காலகண்டையரிடம் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-தன்யாசி ஆதிதாளம்.

பல்லவி.

ஓடிவந்தானே விஸ்வாமித்திரன் ஓடிவந்தானே.

அநுபல்லவி.

தேடிவேதியன்றுன் திவ்வியமாளிகைபுக்க
நாடியிதோசமயம் நான்கெலிப்பேனென்று-ஓடி

சரணங்கள்.

பாலனிதோமாண்டான் அடிமைத்தோட்டி
பணமின்றிச்சுடத்நிண்டான்
காலகண்டனைக்கண்டு கனிப்புடன்தான்பேசி
காசுந்துண்டதைக்கேட்கிற்கடிந்துக்கொள்ளெனச்சொல்லஓ

வெறுங்கைபோடிவள்வந்தால் சவத்தைத்தோட்டி
வேண்டிடச்சுடகனிந்தால்
தருமமருந்துசத்தியத் தண்மையைவிட்டானென்றே
தாண்டிவிண் ணுலகேகித் தானுரைப்பேனென-ஓடி

நல்லசமயமீதே ந்தபக்தை நான்கெலிப்பேனிப்போதே
வல்லமையினாலந்த வதிஷ்டன் றன்கெர்வத்தை
வாட்டியென்புகழெங்கும் வழங்கச்செய்வேனென்று-ஓடி

விஸ்வாமித்திரன்-வசனம்.

எனக்காகசோகத்தைவிட்டு காசிபட்டணம்வந்த அக்கினிபகவானே போற்றிபோற்றி.

காலகண்டன்-வசனம்.

வாரும் வாரும் விஸ்வாமித்திரரே யின்னேரத்தி லிவ்வளவுதுரிதமாய் நீர்வந்தகாரியம் சொல்லுமுனியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

சுவாமிநீர்காட்டிற்கனுப்பினபாலனைபாம்பினால்வதைசெய்தேன் அதைக்கண்டு தாயுந்தந்தையு மழச்செய்தேன் இப்போதுசுடுகூலி பணம் கேட்கவருகிறுள் நீரொன்றுங்கொடுக்காவிடில்அவன் தன்னுடையமகன் தானேயென்று சுடுவானந்தச்சமயம்பார்த்து நின்பிசகினுனென்று மெய்ப்பித்து வதிஷ்டனைகெலிப்பே னக்கினிபகவானே.

காலகண்டன்-வசனம்.

கேளும் விஸ்வாமித்திரமுனியே நீர்சொன்னபடியே செய்வேனன்றி வேறுசெய்யேனம்பும் ரிஷியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

சந்தோஷம் போய்வருகிறேன் சுவாமி போற்றி

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய்விஸ்வாமித்திரன்கால கண்டருக்குரைத்து அங்குநடக்கும்சங்கதிகளை யறிந்துக்கொள்ள மறைந்திருக்கும்சமயத்தில்சந்திரவதிபுலம்பிக்கொண்டுவருகிற விதங் காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி-தரு-எதுகுலகாம்போதி-ஆதி.

பல்லவி.

என்னவிதி என்னகாலம் எங்களுக்கே வந்தகோலம்

அநுபல்லவி.

மன்னரிழந்துமையோ மயானங்காத்திடவந்த-எ

சரணங்கள்.

என்னையேபிரியவவ ரின்றநற்புதல்வன்சாக
தன்னிகரிலாவேந்தர் தானடிமைதோட்டியாக-எ

ஆதிசிவமேயுனக்கு அடியரென்னகுறைசெய்தோம்
சோதித்தாயென்றுரைத்தன்னை சொல்லும்நீச்சனுக்காளாக்க-எ

கோடிசூரியர்போன்றமேனி குன்றியேயுடலும்வாடி
நாடிநாற்றச்சுடலைதன்னி ளுதன் வீற்றிருக்கலான-எ

பாலன்மாண்டதுயரைவிடப் பதிமடங்கதிமாமென்
னோலனுற்றகெதிகண்டேன் னுயிர்விடாதிருந்தேன்பாவி-எ

வேதியன்கொடியனோ விரைவினிற்கொடானே துண்டும்
பாதிமதிபூண்டோய்காசும் பாலனைசுடவேஐயா-எ

சந்திரவதி-விருத்தம்.

ஐயரேயென்றன்றன்னை அடிமையாய்க்கொண்டுமெத்த
நொய்யுறுப்படிபேசாக்கும் நோன்பினில்மிக்கோய்போற்றி
பையவேமாண்டோன்றன்னை பற்றியேசுடலைபோனேன்
கையினிற்காசுந்துண்டுங் காட்டெனத்தடுத்தான்றோட்டி

வசனம்.

கேளுஞ்சுவாமி நான்காட்டிற்குச்சென்று மகனைக்கண்டெடுத்து சுடுகாட்டிற்குச் சென்றேனங்கே கால்பணமுழந்துண்டுங் கொடுக்காமல் சபம்சுடக்கூடாதென்று தோட்டி தடுத்தான் வேதியரே காற்பணமுழர் துண்டுந் தபவுசெய்வீரையரே.

காலகண்டன்-விருத்தம்.

ஏதடியுரைத்தாய்சந்தி யிங்கேதுபணமுஞ்சீலை
ஓதடிநேக்குமென்ன வுபாயங்கள்கற்றனீவி
சாதனைபுரியவேண்டாய் சாதிக்கேனேதுநோக்கு
வேதனையிட்டாய்றொக்கம் வீணுச்சேயோடிப்போடி.

வசனம்.

அடிசந்தி யென்னிடம் பணமேது துண்டேதுநேக்குபணம்நஷ்டமாச்சுதேயன்றி வேறென்ன போடி-போ-போ.

சந்திரவதி-விருத்தம்.

கோபங்களென்றன்மீது கொள்ளவுந்தகுமோசுவாமி
பாபங்கள்செய்ததாலென் பாலனும்பாமபால்மாண்டான்
சாடனைவிடுத்தேயையா சான்துணிபணங்காலீந்தாற்
றுபமதின்றிச்சுட்டுன் றளடிபணியமீள்வேன்

வசனம்

சுவாமி நான்பாவி நீர் துண்டுங்காசுங்கொடுத்தால்சவத்தைசுட்டு சிக்கிரம் ஓடிவருகிறேன் இவ்வளவு அருள்புரிய வேண்டும் ஆண்டவனே.

காலகண்டன்-விருத்தம்.

கொடுத்திடேன்றென்றும்நோக்கே கூச்சலிங்கிடுவையாகில்
படுத்துமேயிருக்குஞ்சேவி பதைத்தென்மேற்கோபங்கொள்வாள்
எடுத்துநீசவத்தையங்கு இருக்குமோரடவிதன்னில்
விடுத்துமேபோடியிங்கே விடியுமுன்வருவாய்சந்தி

சந்திரவதி காலகண்டையரிடத்தில் காப்பணமும் முழந்துண்டும் வாங்கவருகிறபாகம்.



விஸ்வாமித்திரன்.　　சந்திரவதி.　　காலகண்டையர்.　　காலகண்டி.

வசனம்.

அடிசந்தி நான் ஒன்றுங்கொடுக்கமாட்டேன் நீ ஓடிப்போய்சவத்லை ஒருஜலம் ஓடுகிற ஓடையில் எறிந்துவிட்டு சீக்கிரம் வருவாயடிசந்தி.

சந்திரவதி-கண்ணி-சாமா-சாப்பு.

என்னைமுறிகொண்ட-நன்னவாதோட்டியும்
இன்னமிகப்படித்தான்
என்னைதடுத்தான் சினந்தொடுத்தான்
மனங்கடுத்தான் கனங்கெடுத்தான்
ஏற்றுவேன்சுவாமிபோற்றுவேன் சுவாமி-போ-போ

காலகண்டன்-இந்துஸ்தானி-காபி-ஆதிதாளம்.

ஏற்றவும்வேண்டாமடி என்றன்பணம்போச்சு
வந்ததுவேபேச்சு
சாற்றுமொழிவிட்டி சண்டாளிநீஆ-ஆ-சண்டாளி நீ
ஓ ஓ-சண்டாளிநீ சார்ந்துமடத்திருப்பாய்.

சந்திரவதி.

இருக்கத்தடையுண்டோ மறித்தமகனையே
எரிக்கத்தடையாச்சே
இழிவாச்சே வழியாச்சே
கழிபோச்சே,பழியாச்சே
ஈகுவாய் துண்டமீகுவாய் காசும்-ஈ-ஈ

காலகண்டன்.

ஈவதுமில்லையடி என்னிடந்துண்டேது
நன்னியகாசேது
ஆவதுவொன்றேயடி சண்டாளிநீ-ஆஒ
அடிமைபெதிர்க்கலாமோ

சந்திரவதி.

எதிர்மொழிபேசிட சதுர்மறை ஐயரே
என்னுற் றுணிவாமோ
வினியாமோ கனிவாமோ
சனிபோமோ நனியாமோ ஐயா
எண்ணிடேன் தடைபண்ணிடேன்-த-ப-ப

காலகண்டன்.

இழிவதுமேதடி யிருக்கப்பாவிமாண்டால்
பெருகாச்சுழி கொண்டால்
பழிவந்துசாருமடி சண்டாளிநீ-ஆ-ஓ
பத்திரம் வாய்மூடடி.

சந்திரவதி-விருத்தம்.

தெய்வமேயிதுவுமுன்றன் றிருக்கூத்தோவறியேனென்றன்
கைதவப்பாலன்மாண்ட கலக்கத்தினதியதாக
மொய்யெனத்தோட்டிக்கீயும் முழந்துண்டுபணங்காலின்றி
நொய்யுறைவைத்தாயென்ன நோன்பது நூற்றேன்நாதா

வசனம்.

ஓ பரமசிவமே என்பாலன் பாம்பால் மடிந்தும் தோட்டிக்குச் சேரும்படியான கால்பணமும் முழத்துண்டுக்கும் கெதியில்லாமல் தவிக்கவிட்டாயோ ஓ தெய்வமே.

காலகண்டன்-விருத்தம்.

அன்னுடிசந்தியுன்ற னுளனுங்கொர்வியன்றே
சொன்னடிபொய்பேசாத சூரத்தாலுனையேவிற்றுன்
வென்னடியீண்டுநீதா னிசைந்துபொய்யுரைக்கச்செய்தா
யின்னெடிக்காசுந்துண்டு மினித்தரவிசைவேன்கொள்வாய்

வசனம்.

அடி சந்தி யுன்னும்பிடையாள் பொய்பேசேனென்ற அகங்கார ங்கொண்டுஉன்னை அடிமைசெய்தான் இப்போதாகிலும்பொய்பேச ச்செய்வாயாகில் பணமுந்துண்டுங் கொடுக்கிறேன்

சந்திரவதி விருத்தம்.

சத்தியத்தை நிலைநிறுத்தவேண்டுமன்றிச்
சாரமில்லாப்பொய்யுறைக்கில்வருவதேது
புத்திரனுமொண்டிட்டான்சவத்தைநானே
புதைத்தாலுமெறிந்தாலுமொன்றேயாகும்
நத்தியிதற்காய்ப்பொய்யைநாவாற்பேசில்
நாயகனையார்மதிப்பார் தரணிமீதில்
எத்திசையும்புகழோங்கநிலையினிற்போ
மிறந்தவனையான்கருதேனினிவாய்த்தானே.

வசனம்.

சுவாமி, சத்தியம் விட்டுப் பொய்பேசில் வருவதேதுகுழந்தையி றந்தான் இறந்தவனை சுட்டாலுஞ் சரி மெறிந்தாலுஞ் சரியே யாகும் இதற்காகவா பொய்பேசச்செய்வது தகாது

பொது விருத்தம்.

மாதுரைத்தவுறுதிதனைக்கேட்டேயங்கே
மறைந்திருந்தகவுசிகனுமனம்நடுங்கி
ஏதுயிவர்பாலனுக்காய்மனமிரங்கி
யியம்பிலோர்பொய்யெனவேயெண்ணிவேறு
சூதுசெயக்கருதியவனடவியுற்றே
சொல்லொணாத்துயரமதைவருத்தநெஞ்சை
வாதுபுரிந்திடவிளைத்தசொல்லுக்காக
வாடுவேனினிவேறுதேடுவானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாகச்சந்திரவதிகால கண்டருக்குச்சொன்ன உறுதிமொழிகேட்டிவர்கள்பிள்ளையிறந்ததற்காக மனந்தளரமாட்டார்கள் ஆனதால் நாம்வாய்க்கொழுப்பால் செய்துக்கொண்டபந்தயங்கெலிக்கவேணுமென்று வேறு உபாயந் தேடிச்செய்கிறவிதங்காண்பீர்கள் கனவானகளே.

விஸ்வாமித்திரர்-தரு-கல்யாணி-ஆதி

பல்லவி.

வருவாய்வைகுந்தா-என்றனைநாடி-வருவாய்வைகுந்தா

அநுபல்லவி.

கருதித்தொழவேயென் கருணைவாக்கீந்தவாறுவருவா

சரணங்கள்.

அமரர்க்கருளளித்தநேயா முன்னம்
ஆனையைக்காத்தளித்ததூயா
சமரசமாகவண்ட-சராசரமாளுந்தேவே
சாற்றித்துதிகையேற்றி சரணமடைந்தேனிங்கு-வரு

விஸ்வாமித்திரன்-வசனம்

சுவாமிஅன்டினபேரை ஆதரிக்கவேண்டிய உபாய தந்திரங்களுஞ்செய்து காப்பாற்று மாயாவதாரியே போற்றி.

மகாவிஷ்ணு-வசனம்.

கேளும்விஸ்வாமித்திரமுனியே என்னையழைத்தகாரியத்தைதெரிவிக்கவேண்டும் ரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

இக்காசிவேந்தனின்றிட்டபால
 னிருக்கிறன்மஞ்சத்தினித்திரைபூண்டு
சித்தெதனநீர்கள்ளனைப்போற்சென்றுமந்தச்
 சிறுவனேயேகவர்ந்தவன்றன்னுயிரைப்போக்கி
பக்குவமாய்பணிகளெலாங்கழட்டிக்கொண்டப்
 பாவைசந்திரவதிமிதிக்கும்பாட்டைதன்னில்
தக்கிடவேயெறிந்தகன்றுபோகவேண்டுந்
 தயாபரனேயிதுசமயந் தற்காப்பாயே.

வசனம்.

சுவாமி இந்தக்காசிராஜன்மகன் தாய்பக்கதில் மஞ்சத்தில் நித்திரைசெய்கிறன் நீர்திருடனைச்சென்று அவனையெடுத்துவந்துபணிகளைக்கழட்டிக்கொண்டு உயிரைப் போக்கிசந்திரவதி வருகிற வழியிலெறிந்துபோகவேண்டும் நாதனே.

மகாவிஷ்ணு-வசனம்.

அப்படியே செய்கின்றேனுகிலும் நீகெலிப்பது வருத்தமென்றறிவாய்முனியே.

பொது-விருத்தம்.

கன்னக்கோல்வில்லுமம்பு கத்திரிவாளுமீட்டி
வன்னமுட்டிகளேந்தி வாகுடன்காளிபூசை
தின்னமாய்முடித்துக்காசித் தேவன்றன்சுதனைத்தேடி
உன்னதமாயக்கள்ள ரோடியேவருகின்றரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காசிராஜன்பள்ளியறையில்சயனித்துக்கொண்டிருக்க விஸ்வாமித்திரன்கோறியபடி மகாவிஷ்ணு வாள்கெதை சங்குசக்கரங்களைத் திருடராக்கித் தானவர்களின் றலைவனைப்போல் ரூபந்தரித்துக் காசிபன்மகனைக் கவறவருகிறவிதங்காணீர்கள் கனவான்களே.

திருடர்-தருமத்தியமாவதி- ரூபகம்.

பல்லவி.

திருடர்நாங்களே-பொல்லாத்-திருடர்நாங்களே

அநுபல்லவி.

வருமையுற்றுமே வன்பொருளமைத்த
வம்பர்கள்வீட்டினி லம்புபோற்பாந்திடுந்திரு

சரணங்கள்.

கோரைமீசைதனைமுறுக்கி-கண்டோர்
குலைநடுங்கிடவிறுக்கி
ஊரைவலமாகநெரிக்கி-நல்ல
உண்டைவிற்கன்னக்கோல்பெருக்கி
யாறைமறந்தாலு-மாங்காரங்கொண்டோரை
யடித்துதள்ளிவீட்டை யிடித்துக்கொள்ளையிடுந்-திரு

காலபாசமதைத்தள்ளுவோம் அதுக்
கண்கள்தோற்றுமலே கொல்லுவோம்
சிலமுறப்புத்திவிள்ளுவோம்-தீயர்
சிந்தித்தவர்பொருளள்ளுவோம்
வேலனருளினுல்-வித்தையுணர்ந்தோரை
வேண்டிப்புகழ்ந்திதோதாண்டிப்பணிந்திடுந்-திரு

உத்தமர்பொருளை எடுக்கோம்-லோபி
ஊராள்வானாலும்விடுக்கோம்
சத்தியவன்வாசலையடுக்கோம்-ஈயாச்
சண்டாளரைவிட்டுப்படுக்கோம்
செத்ததோரன்னிய செல்வங்கவர்ந்திடும்
சிரிலாப்பாதகர் -பேரினைத்தூஷிக்கும்- திரு

இச்சபையோங்கிடநடிப்போம் எங்கு
வெகுகள்பெருமையைவிடிப்போம்
அச்சமில்லாமலேதுடிப்போம்-மெத்த
அன்புடனிக்கதைபடிப்போம்
மெச்சத்தக்காரக மெட்டுகளமைத்த
மித்ரன்சுப்பராயன் மேன்மையையேற்றிடும்-திரு

தலைவன்வசனம்.

தோலிருக்கச் சுலேவிழுங்கிதான்வந்தானு
இதோவந்தேனையா
துரும்பிலே மறையும் வெறியான்வந்தானு
இதோவந்தேனையா
காலிலேமலேகெல்லிதான்வந்தானு
கடுகிலேகட்டைகுத்திதான்வந்தானு
இதோவந்தேனையா

தலைவன்வசனம்.

கேளுங்களப்பா நமக்குயிர்த்துணையாகிய அமாவாசையிருட்டுக் கிடைத்துப் நாம்நாடிவந்தகாரியத்தை முடிக்காமலிருக்குங்காரணஞ் சொல்வீர்களப்பாதிருடரே.

திருடர்-வசனம்.

ஐயாஎங்களாலாகவேண்டிய காரியத்தைச்சொன்னு லிப்போதே முடித்துவருகிறோமையா

தலைவன்விருத்தம்.

மனமதிற்குருராண்மிட்டே மயங்கிடவினிப்பைகாட்டுஞ்
சினமதுகுடி-டாரோஉசெப்புவேனென்றுகேளீர்

கனமுளகாசிமன்னன் கருதிடும்பாலன்றன்னை
இனமதாயெடுத்துத்தோண்மே யிக்கணங்கொணருவீரே

வசனம்.

அப்பாகபடமுஞ்சூதும் சதாமனதிலடக்கஞ் செய்திருக்கும்நேச ரே காசிராஜன்பிள்ளையையிக்ஷணத்திலெடுத்தோடி வருவீர்களப்பா.

திருடர்-வசனம்.

ஐயாநீர்சொன்னகாரியஞ்செய்யத்தடையிராது காசிராஜன்மனை க்குளெப்படிச்செல்வோமையா.

தலைவன்வசனம்.

அப்பாதோழர்களேஇந்தச்சொக்குத்தூளைகோட்டையின் பேரில் தூவினு லொருவருமெழுந்திருக்க மாட்டார்கள் அரசனிருக்குமப ள்ளியறைசேர்ந்து கதவிற்கொஞ்சந்தூளைதாக்கி கதவுந்திறக்கும் உ ள்ளே நுழைந்து பணிகளுடனே பாலனைக்கொண்டு வாருங்களப்பா.

திருடர்வசனம்.

ஐயாநீர் சொல்லியபடியே சென்றுகாரியத்தை முடிவுசெய்துக் கொண்டுவருகின்றோமையா.

பொதுவசனம்.

கேளுங்கள் சபையோர்களே தலைத் திருடனுத்திரவின்படி கள் ளர்கள் தூளை தூவிராஜன்பள்ளியறைக் கருகிற்சென்று கதவின்பேரி லும்தூளைத்தாக்கியுள்ளேசென்ற பாலனையெடுக்கிறவிதங்காண் பீர் கள்கனவான்களே.

திருடர்வசனம்.

அண்ணேபத்திரமாயிதோ தாய்பக்கத்திலிருக்கிற பாலனை நகை களோடுயெடுத்துக்கொள்வீர்களண்ணே.

திருடர்வசனம்

அப்படியேயெடுத்துக்கொண்டோம்பத்திரமாபோடிவந்து விடுங் களப்பா

திருடர்வசனம்.

கேளுமையா தங்களுத்தரவின்படி காசிராஜன்மகனையெடுத்துக் கொண்டுவந்தோம் இனிநடக்கும் வேலைக்கு கட்டளை செய்தாலந்தப் படி முடிக்கிறோமையா.

தலைவன்வசனம்.

அப்பா நேசரே யிந்தச்சிறுவன் நகைகளையெல்லாங் கழட்டிக்கொண்டு கழுத்தைமுறித்து அதோதெரிகிற கால்வழியிற்குறுக்காகக்கிடத்தி வருவீர்களப்பா நேசர்களே.

திருடர்வசனம்.

அப்படியேசெய்கின்ருேமையா.

திருடர்வசனம்.

அண்ணே நீரிட்ட ஆக்கினைப்படி நகைகளைக் கழட்டி கொண்டு பாலனுடைய வுயிரைப்போக்கி சுடுகாட்டிற்குப் போகிறவழியில்வளர்த்திவந்தோமையா

தலைவன்வசனம்.

அப்பா தோழரே நாம்நாடிவந்த காரியமுடிந்தது இனி நமதிருப்பிடம் போவோம் வாருங்களப்பா.

பொது-விருத்தம்.

மாயவனுந்திருடனைப்போற்காசிமன்னன்
  மகன்றனையேகவர்ந்துயிரைப்பறித்தேயந்த
சேயிழந்தசந்திரவதிசெல்லுமார்க்கஞ்
  சிக்கும்வார்கிடத்தியுமேயபபாற்போக
நேயமுடன்மஞ்சத்திலரசனேடு
  நித்திரைகொண்டமதனவல்லிவிழித்துப்பெற்ற
தாயவளும்பாலனிலையென்னவென்று
  தாவுவாள்கணவனுடன்கூவுவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரம் மகாவிஷ்ணுவானவர் கள்ளனாகி காசிராசன்மகனைக்கைப்பற்றி உயிர்போக்கிச்சுடலைவழியிலெறிந்துபோய்விட்டார் இப்பால் காசிராசன்மனைவி விழித்து மகனைக்காணேமென்று தன்புருஷனிடஞ்சொல்லுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே

மதனவல்லி வசனம்.

ஐயோ மகனைக்காணேமே

மதனவல்லி விருத்தம்.

மஞ்சத்தினித்திரைசெய்யு மகிபனேமன்னுகேளீர்
நெஞ்சதிர்கரத்தைத்தாக்கி நித்திரைசெய்தபாலன்

வஞ்சமோயாரின்சூதோ வந்ததோர்கள்ளர்தா மூ
மஞ்சவிமகனைக்காணெ னன்பரேயெழுந்திடீரே.

வசனம்.

கேளுமென்பிராணநாதா மஞ்சத்தில் படுத்திருந்த மகனைக்காணே
ன் இதுவென்னமோசமோதெரியாது எழுந்திருஞ்சுவாமி.

காசிராசன் விருத்தம்.

அரண்மனைக்கட்டடந்தா னற்பமோவதனைச்சுற்றி
உரமுளமதில்களென்ன உன்னதகாவலென்ன
சரப்பணியடைத்தலுள்ள சாரொணுவிடத்தைகாடி
வரக்கள்ளரானமாய வகையறியேனேமானே.

வசனம்.

அடிபெண்ணே இதென்னவாச்சரியம் நமதரண்மனைக்கட்டுக்கா
வலென்ன இப்படிக்கிருக்க எப்படிவந்தலர்களோ தெரியேன்மாதே.

காசிராசன் விருத்தம்.

பயப்படவேண்டாமாதே பாலனையெடுத்துப்போன
கயப்புளகள்ளர்தம்மைக் கவர்ந்திடவிக்கணத்தி
னயப்புடனகரைக்கார்க்கும் நமதுகாவலர்கடன்ஞல்
வியப்புறப்பிடித்துன்முன்னே விட்டிடச்செய்வேன்மானே.

வசனம்.

பெண்ணே பாலனைத்திருடிப்போன கள்ளரை யிந்தக்ஷணம்பிடி
த்துவந்துமுன் விடச்செய்கிறேன் துபரப்படாதே மாதே.

காசிராசன் விருத்தம்.

ஆரின்றுவாசற்காத்த ஆசாரகட்டியகாரா
வீரியமாகச்சென்றே விரைவுடனமைச்சர்தம்மை
காரியமாகநான்ருன் கடுகியிங்கழைப்பதாகக்
கூறியேயவரைபென்முன் கொப்பனவரச்செய்வாயே.

வசனம்.

அடாகட்டியனேசீக்கிரமாகயோடிப்போய் மந்திரியையழைத்து
வருவாயடா.

கட்டியம் வசனம்

மகாபாக்கிய மப்படியேயழைத்துவருகிறேன் சுவாமி.

கட்டியன்வசனம்

சுவாமிகளே தங்களை அதிசீக்கிரமாகக் கொலுமண்டபத்திற்க
ழைத்துவரும்படி ஆண்டவனர் ஆக்ஞாபித்தாலரயா.

காசிராஜனிடத்தில் காவலாளிகள் வருகிறபாகம்.



காசிராசன். மந்திரி. கட்டியன். காவலாளிகள்.

மந்திரிவசனம்

இந்தவேளையி லரசரழைத்தகாரியமிபாதோ இதோவருகிறோமப்பாகட்டியனே

மந்திரிவசனம்

போற்றிபோற்றிசுவாமி எங்களை யிவ்வேளையி லழைப்பித்த காரியம் உரைசெய்வீர்வேந்தே.

காசிராசன் விருத்தம்.

என்னருமமைச்சமாரேயியம்பிடப்போமோநெஞ்சம்
அன்னமும்நானுமைந்தனமர்ந்துமஞ்சத்தின்மீது
நன்னதாய்நித்திரைசெய்தோம் நாயகன்றனையேகள்ளர்
கன்னமாய்க்கொண்டுபோன காரியமறிந்துசொல்வீர்

வசனம்.

கேளுங்களப்பா மந்திரிகளே என்னுடன்கூட சயனித்திருந்த பாலனைக்கள்ளர் பணியுடன்கொண்டுபோன சங்கதிதெரிந்து சொல்வீர்கள்மந்திரிகளே.

மந்திரிவிருத்தம்.

வேந்தனேபாலன்றன்னை விளைந்துமேகொண்டுபோன
சாந்தமில்லாதவந்த சண்டாளர்தம்மையிப்போ
மாந்தளிர்மாலைமார்பா மடக்கிடவாட்களேவிக்
காந்தலத்துடனேயிங்கு கடுகியேவரச்செய்வோமே.

வசனம்.

சுவாமி உமது பாலனைத் திருடிப்போனவர்களை இந்தக்ஷணம் காவலாளிகளைவிட்டுப்பிடித்துவரச்செய்கின்றோம்வேந்தனே

மந்திரிவசனம்

அடாகட்டியனே நமதுநகர் காவற்காரரை சீக்கிரமழைத்துவருவாயப்பா,

கட்டியன்வசனம.

ஓ காவலாளிகளே உங்களை அரசன் அதிசீக்கிரமழைத்து வரச்சொன்னார் வாருங்களடா

காவலர்கள்வசனம்.

அப்படியே வருகின்றோஞ்சுவாமி

பொதுவிருத்தம்

இந்திரஞாலவித்தை யெழிலிலாச்சூதுவாது
சந்திரவதிமயக்கஞ் சொக்குத்தூளேவங்கள்ளர்
மந்திரஞ்செய்வோர்தம்மை மடக்கிடபிடித்துக்கட்டி
தந்திரமுடனெடுக்குந் தணிக்காவலாளர்வாரார்

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காசிப்பட்டணத்தை நெறியுடன் காக்கானின்ற காவற்காரர்கன் வருகிறவிதங்காண் பீர்கள் கனவான் களே.

காவற்காரர்-தரு-தன்யாசி-ஆதி.

பல்லவி.

காவற்காரர்நாங்களே காசிகாவற்காரர் நாங்களே.

அநுபல்லவி.

பாவமொழிகாசி பார்த்திபநகரைக்
காவலனினுள்ளங் களித்திடக்காக்கும் காவ

சரணங்கள்.

உத்தமர்தன்னை நத்திடாமூடர்க
ளொடுங்கும்படிக்கேயடிப்போஞ் சற்று
மொழுங்கில்லாமலே அழும்புசெய்தீயர்க
ளுதட்டின்மே லெட்டியிடிப்போம்
நித்தமும்பொய்தனை சுத்தம்போலாடிடும்
நீச்சரினுவிவைமுடிப்போம் மிகு
நேசமாய்ப்பேசியே மோசம்புரிவோம்
நெஞ்சுதிரத்தையே குடிப்போம்.

கத்தியும்வாளம்பு கனத்ததோமரங்
கதைவேலீட்டியிற் கைகள்பழகியே
சுத்திவெகுகாதஞ் சோம்பலிலாமலே
சூரமும்வீரமாய்ச் சொல்நகர்காத்திடும் கா
வீட்டினுழைந்திடப் பூட்டையுடைத்துமே
வேகிடுங்கள்ளரைத்தேடியே அதி
வேகமதாகவே யேகவவர்களை
விட்டிடாமலடிநாடியே

காட்டிலொதிந்திட ஓட்டமாபோடினும்
கயவரையெட்டிக்கூடியே
கண்டககோடாலிதைக் கொண்டேயவர்களின்
கரங்களற்றிடசாடியே

மேட்டியாய்ப்பொருளோ ராங்காரம்பேசியே
மேலோரைமதியா மிருகப்பிறவிகள்
ஊட்டியைத்திருவி உதிரங்குடித்திடும்.
ஓகோகோயிக்காசி உள்ளும்வெளிகாக்கும் கா

யானைபுலிசிங்கஞ் சேனைவந்தாலெதிர்
அலட்சியமாயென்னிக்கட்டுவோம் வெகு
அலங்காரமிஞ்சியே செகப்புறட்டுசெயு
மற்பரைவாய்மூடக்கட்டுவோம்
பூனைபோற்குலத்தைப் பொய்யெனவிகழும்
புல்லரின்பற்களைத்தட்டுவோங்கையில்
பொருள்வைத்துலகினிற் கருணையிலாப்பேயின்
புகழைப்பேசிநாளுந்திட்டுவோம்.

மானையணிந்தவன் மகிழுங்குகனடி
மறவாதெங்கள்குரு மனங்களித்திட
ஆனைமுகனரு ளாலேயிக்கைபேடு
அன்பாயெழுதிய ஆழ்வாரடிபோற்றுங் கா

காவலா-வசனம்.

போற்றிபோற்றி ஆண்டவனே எங்களையழைத்த காரியஞ் சொல்லும்மகாராசனே.

காசிராசன்வசனம்.

அடாகாவளாளிகளே கெருடன்கோழியின்குஞ்சைத் தாவுவதுபோ லென்மகனை நீங்களெடுத்துப்போனீர்கள் கொண்டு வாருங்களடா காவலர்களே.

காவலர் வசனம்.

சுவாமி நாங்களிதுவரையிலிப்படிச்செய்ததுண்டா என்றுமில்லாதவார்த்தை கேழ்க்கலானோமியாதுகாரணமோ யறியோம் ஆண்டவனே.

மந்திரி வசனம்.

அடாகாவலாளிகளே நமதுராசன் மகனைத்திருடிப் போன கள்ளரை இந்தக்ஷணம்பிடித்து வராவிட்டாலுங்களைச்சிரைச்சேதஞ்செய்விப்பேனடா காவலாளிகளே.

காவலர் வசனம்.

சுவாமிநீர்சொன்னபடியே கள்ளரைப்பிடித்துவருகிறோமையா.

காவலர் வசனம்.

கேளுங்களண்ணமாரே திருடர்களின்காலடி யிதோதெரிகிறது இதைப்பற்றி நாலுபக்கமும் பார்த்துக்கொண்டு வருவீர்களப்பா

காவலர்-தரு-இந்துஸ்தான்-பைரவி-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்வோமண்ணமாரே எப்படியுய்குவோமுயிர்.

அநுபல்லவி.

மன்னன்மகன்சிக்காவிடில் மாய்வதின்றிவேறேதுநாம் என்ன.

சரணங்கள்.

கள்ளர்தனைக்காட்டவேணுங் காட்டேரிநமைக்காக்கவேணும்
வள்ளலமகன்சிக்காவிடில்வாட்டுவானகழுமாட்டுவான் நாமஎ
பாவிகள்ளரெங்கிருந்து பதுங்கிவந்தாரோதெரிந்து
தாவிநாமதடிக்காவிடில் தண்டிப்பானரசனினிநாம் என்ன
ஊரில்நம்மைக்காக்குமாரி உபயபாதத்தைக்கோரி
சீரானகாவுடன்பூசை செய்குவோம்நாளைதினம் என்ன
உத்தமிபிடாரியோடி உகந்துமேவருவாய்தேடி
சத்தியமுள்ளவளானாற் சமயங்காப்பாயெங்களைநாடி என்ன

காவலர் வசனம்,

அடாஅண்ணமாரே சலிக்காமலென்னைப்பற்றி வாருங்களப்பா

காவலர்-தரு-யமுனாகல்யாணி ரூபகம்.

பல்லவி.

பதுங்கிவாருங்கள் என்பின் ஒதுங்கிவாருங்கள்.

அநுபல்லவி.

ஒதுங்கவேகள்ள ரொட்டுத்திண்ணைகளில்
ஒண்டியிருப்பார்க ளோரமாநோக்கியே பது

சரணங்கள்.

சந்திரனுக்குங்கள் தடியாற்சாடத்தாக்குங்கள்
மூந்திக்கறுப்பாகமூடுதுவென்னமோ
சந்தடிசெய்யாமற்சரங்கமாய்ப்பருங்கள் - பது

பள்ளத்திற்பாருங்கள் ஏதோபரிவாய்த்தேருங்கள்
பள்ளத்தைமெத்தெனப்பாய்ந்துமேபப்புறம்
மெள்ளமதிலேறிமேலேயும்பாருங்கள் - பது

நாட்டைவிட்டோமேசுடலைநல்வழிதொட்டோமே
கேட்டீரோயாரோ கீச்சுகீச்சென்றார்
ஓட்டமாபோடியே உற்றுமேபார்த்திட - பது

பொது விருத்தம்.

காலகண்டன்காசு தரத்தடைகள்செப்பிக்
கண்டித்தமொழிபேசமாதுதானும்
நீலகண்டனிவ்விதிபைவிதித்தானென்றே
நினைந்துருகிச்சுடலைதனைக்குறுகவாங்கு
கோலமிசையுற்றதுபாருந்திவாடிக்
கொண்டழுதுவரும்வழிபிற்காலிற்பட்ட
ஞாலமகிழ்காசிபன்றன் புதல்வன்தனை
தறும்புதல்வனென்றேந்திரவிலுவாளே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காலகண்டன் துண்டுங்காசுங்கொடுக்கத்தவிர்த்தபின் சந்திரவதிமறுபடியுஞ் சுடலைக்கு வரும்வழியில் தன்காலிற்பட்ட காசிபன் மகனையெடுத்து தன்மகனென்று புலம்புகிறவிதம் காண்பீர்கள் கனவான்களே.

சந்திரவதி காசிராஜன்மகனை தன்மகனென்று எடுத்துப் புலம்புகிற பாவம்.



சந்திரமதி விருத்தம்.

ஐயையோமகனேயுன்னை யண்ணலின்காவல்விட்டே
பய்யவெப்பூதந்தாங்கிப் பற்றிபிங்குற்றதோடா
உய்யவேபுதிரம்பாய ஊட்டியைபறிபல னுய்
வையகந்தனிலேயந்த வருத்தமுற்றோருமுண்டோ

வசனம்.

அப்பா மகனே உன்னை அரசன்காவலைவிட்டுப் பூதங்கொண்டு வந்து கழுத்தைகடித்து எறிந்து போச்சுதோடா இதுவும் விதிதானேமகனே.

சந்திரவதிகண்ணி பொக்குருபகம்.

சிவசிவசிவமேசிருளதவமே இந்த
சிறுவனுமேராதெரிகிலேனுனைச்சிந்தித்தேன்நவமே

அரகரசிவமே ஆதரிபரமே இங்கு
அடியாள்படுந்துயரத்தைவந்தகற்றுவாய்தரமே

திரிபுரதகனே திகம்பூரணிபோனே யுன்
திவ்யவடிகாட்டிக்கவிபைத்தீர்த்தருளவோனே

கரியுரித்தோனே கபிலைவாசனே நான்
கதறினேனேவதறிடாமலேகனியும்நேசனே

மதியணிந்தோனேமழுதரித்தோனே அந்த
மாமுனிவன்சூதோ காரிமாயமோமோனே

கெதியினைந்தேனே கிழ்ப்பணிந்தேனே என்ன
கெடுதியிதுவறிவேனுன்றன்கிருபைகாணேனே

அருப்பெருஞ்சொருளே ஆதிபாருளே பால
னுசென்றறியாமல்செத்த அலருதேனருளே

வருந்தடத்திலேவருடக்காலிலே என்
வருமைப்பெத்தமகனையாடுதேதகானே

பாசம்பிரேன் பாராய வெம்பினேன் என்
பாலனேவன் றியாமோ நெஞ்சிற்பயந்துசோம்பினேன்
வேதபோதனேவிமலிநாதனே ஐயா
வெதும்புதுளப்பொருக்கிலே னுனைவேண்டினேன் பாதனே.

தலைக்காவலன் விருத்தம்.

காட்டையுங்கடந்தேயந்த நடுச்சாமவேளைதன்னிற்
காட்டையும்பற்றிநாமுங் கால்வழிதனிலேவந்தோம்
கேட்டையோபேதோசத்தங் கேழ்க்குதேவடக்குமூலை
ஓட்டமாயோடிப்பார்ப்போ மொருமித்தேவருகுவீரே.

வசனம்.

அடா காவலாளிகளே இந்தக்காட்டில் வந்துவிட்டோ மேதோ வடக்கு மூலையிற் சத்தங்கேட்குறது மெதுவாய் வருங்களப்பா.

காவலர்-வசனம்.

அப்படியே வருகிறோம் அண்ணே.

காவலர் வசனம்.

அண்ணே அதோ யாரோ ஒருபிசாசு பிள்ளையையேந்திக் கொண்டிருக்கிறது சிக்கிரமாயோடிவாருங்கள் போய்ப்பார்போம்.

காவலன் விருத்தம்.

ஆரதுதனிமையாக அடாதவிவ்விருண்டகாட்டில்
சீரதாய்நின்றுயேதோ செப்பியேபுலம்புகின்ற
கோரபேபிசாசோபேயோ குலத்திற்குதெய்வமோநீ
வீரமாயெங்களுக்கே விரைவினிலுரைசெய்வாயே.

வசனம்.

ஆரது இன்னேரத்திலிந்தக்காட்டிற் புலம்புகிறாய் நீ பேயோ அல்லது பூதமா தெரியச்சொல்லவேணும்.

சந்திரவதி விருத்தம்.

பேயல்லபிசாசுமல்ல பேணிடுந்தெய்வமல்ல
நாயல்லபூதமல்ல நாட்டின்வாழ்மாதுகாண்பீர்
மாயமாய்மாண்டவென்றன் மகன்றனைச்சுடவேயாகும்
நேயதிலிங்கேபால னேரிடவழுகின்றேனே.

வசனம்.

ஐயா நான்பேயுமல்ல பிசாசுமல்ல தெய்வமுமல்ல மனுஷிதான் என்மகனைச்சுடவேண்டிய சுடலையில்வைத்து வந்தவ னிங்குவந்திருக்கின்ற கோரத்தைக்கண்டு புலம்புகின்றேனையா.

காவலாளி வசனம்.

அண்ணே இவள் கையிலிருக்கிற குழந்தை நமது ராசாவினுடையதுதான் பாருமண்ணே.

தலைக்காவலன் விருத்தம்.

சிக்கினாள்கள்ளிதானுஞ் சேர்ந்தவரெங்கேகாணேங்
கக்கிடவுதிரம்வாயாற் கழுத்தின்மேலரையடாநீ
பக்கமும்விரியக்கையைப் பற்றிபேகயிற்றாற்கட்டி
குக்கிடவடித்துத்தள்ளிக் கொணர்ந்திடரென்பின்தானே.

வசனம்.

அடாகாவலாளிகளே இதோதிருடி அகப்பட்டா ளிவளையிந்தமணிக்கயிற்றினல் கட்டி வுதிரங்கக்கும்படி மேலடியடித்துக்கொண்டுயென்பின்கொண்டுவாருங்களப்பா.

காவலாளி வசனம்.

அப்படியேகொண்டு வருகிறோமையா.

சந்திரவதி-கண்ணி-எதுகுலகாம்போதி-சாப்பு.

மடலோடுமடலிருக்கி வரியகயிற்றினுற்கட்ட
வந்த்விதியறியேன் சிவமே.

காவலாளிகள் வசனம்.

அண்ணே ஏதடாவாய்பேசிகிறுள் மொட்டடா தலையின் பேரில் மொட்டு.

சிவமேயுனதுசெய்கைபோ வீதறியேன்
சிக்கினுள்கள்ளியென்றுஞ் செப்பும்வகையறியேன்
தவமோநான்முன்செய்த தவப்பழியாதோகாணேன்
தற்பராயுன்றனருள்தானிவ்வகையாதோ.

காவலாளிகள் வசனம்.

சிவத்தை நினைப்பதேதடி ஆனநீயேநீ எங்களரசன்மகனைக் களவால்கைப்பற்றி பணிகளெல்லா முன்புருஷன்வச மனுப்பிவிட்டு ஓடிப்போகிறவேளையி லெங்கள்கையிற் சிக்கினுயிப்போ எய்க்கவெத்தனிக்கிறுயோ அடா அண்ணே கன்னத்திலறையடா.

பாதிமதியுடனே பயரவமணியும
பங்கையனேயருள் பார்க்கவோடிநீயும்
வேதனையடியினுல் வெம்புதேமேனியும்
விரியுதெனதுநெஞ்சம் விரளுதேயாவியும்

காவலாளி வசனம்.

கத்தியினுல் திருடியின் தேகத்தில் குத்துங்களடா பிள்ளையின்கழுத்தைத்திருகி யுதிரமுங்குடித்திருக்கிறுள் நமதரசன் முன்னே சீக்கிரம்போகவேண்டும் தள்ளிக்கொண்டு வாருங்களப்பா.

என்மகனென்றுமே யெண்ணிக்கைத்தொட்டிட
விவ்விதிவந்ததே யென்றெண்ணாமற்றிட

கன்மனத்தோரென்னை கைகட்டிபற்றிய
கள்ளியென்றுமேசொல்லி கத்திபாற்குத்திட

காவலாளி-வசனம்.

இருக்கட்டும் நடவடிநட மாயக்கள்ளி

சந்திரவதி வசனம்.

ஓ ஓ பரமசிவமே யிதுவுமுன்றன் செயல்தானோ.

சந்திரவதிகண்ணி-நாதநாமக்கிரியை-சாப்.

ஐயையோயிதென்ன அன்னீதம்
யார்சகிப்பாரித்துன்பம் ஓதெய்வமே

மெய்நடுங்குதேயென்றன் மேனியும்வாடுதே
மிடியாச்சேயென தின்பம் ஓதெய்வமே

மதிதயன்செய்திட்ட மாதவத்தால்நானும்
மண்ணுலகிலுதித்தேன் ஓதெய்வமே

விதியிவ்வாரெழுதிட விப்புரன்கொண்டிட்ட
வெறுப்பறவேதுதித்தேன் ஓதெய்வமே

என்னைப்போல்பெண்ஜென்மமெடுத்தவர்களுமு ங் ே ா
ஏங்கித்துடிக்கவிட்டாய் ஓதெய்வமே

உன்னைக்கெதியெனவே உருகிப்பணிந்துகாரிக்
குடன்பட்டெனைத்தொட்டாய் ஓதெய்வமே

மறைபோனக்கடிமையாய் மகனைப்பறிகொடுத்து
மனங்கலங்கிடும் வேளைபோதெய்வ ே

திரைதரும்வேந்தன்முன் திருடியென்றனைபேசும்
திகழுஞ்சரியோநானை ஓதெய்வமே

வேந்தர்சபையின்முன்னே வெட்கம்நாணமுமச் ...
விட்டெவ்வகைபாயடுப்பேன் ஓதெய்வமே

சாந்தமாய்தருமத்தை சார்ந்தபகனோவிவர்
சாற்றிலேது தடுப்பேன் ஓதெய்வமே

விலைமதியாச்சுகத்தில் வீற்றிருந்ததைமாற்றி
விசனத்திற்காளானேன் ஓதெய்வமே

கொலைகாரிபெனவெனைக் கூறுவாரிவரங்கு
கோலேனுபகிதானே ஓதெய்வமே

தொல்லைபகற்றியேகண் தோற்றியேசாக்ஷியிவர்
தோன்றலுக்குரைப்பாரே ஓதெய்வமே

இல்லையென்றாலும்பழி பென்னைவிட்டகலுமோ
யேதுக்குந்துணைகாரே ஓதெய்வமே

தலைக்காவலன் வசனம்.

அப்பா காவலாளிகளே கொலுவாசல்வந்தோம் அரசன்முன் கொண்டுபோக நாலுபக்கமு மிவளைச்சூழ்ந்து வாருங்களப்பா

தலைக்காவலன் விருத்தம்.

எங்களாண்டவனேயிந்த விருட்டினிற்றேடிநாடி
திங்களில்லாதகாட்டில் திடமுடசென்றோமிந்த
மங்கையும்பாலன்றன்னை மடித்துமேவாயால்ரத்தம்
பொங்கமாயுரியும்வேளை பொட்டெனக்கட்டிவந்தோம்.

வசனம்.

கேளுஞ்சுவாமி நாங்க ளெல்லாவிடமும் தேடிக்காணாமல் பின்பு காட்டில் நுழைந்தோமந்த தங்கள்பாலன் ஷூட்டியைபவுரிந்துக்கொண் டிருக்கும் வேளையிலிக்கள்ளியைப் பிடித்துவந்தோம் தேவே

காவலாளிகள் சந்திரவதியை பிடித்துக்கொண்டுவந்து
காசிராஜனிடத்தில் விடுகிறபாகம்.



காவக்காரன். கட்டியன். காசிராஜன். மந்திரி. சந்திரவதி.

காசிராசன்வசனம்.

அப்படியா

காசிராஜன்-தரு-செஞ்சுருட்டி-ஏகதாளம்

பல்லவி,

பாலாயெனைமறந்தாயோ-நான்பெற்றேன்
சீலாமடிந்திரந்தாயோ
அடாபாலா-குணசீலா மதிவேவிழிலோலா பாலா

அநுபல்லவி.

கோலகாலனைவென்ற மூலாதரனால்வந்த
லோலாசதங்கைகொஞ்சுங்காலாபென்சரணங்கண்ணின்மணிபா

சரணங்கள்.

தந்தையெனுமொழிபோச்சே விதிவசத்தால்
வந்தகெதியிதுவாச்சோ
எந்தன்தவத்திலுற்றேவந்தவுனக்கிந்நாட்டை
தந்துமகிழ் கொண்டபந்தமிதுதானோடா பா

என்னகெதிபானுப்பாலா வடிந்துதிரம்
இன்னம்வருதேடாசீலா
சினனவபதிலுன்னை உன்னதக்கல்விகற்று
மன்னவனுவாயென்றே சொன்னமொழியும்போச்சோ பா

நீதிமொழிகடந்தாயோ எங்குரிசை
ஜோதிபடமடந்தாயோ
பாதிமதியணியும் ஆதிபரரையேற்றி
வேதிபரோதவே நாமேதினியாளப்பெற்ற பா

வீட்டைவிடவானுபோடா பிணங்கள்சுடு
காட்டைமேவப்போனாயோடா
கோட்டையில்வாழ்ந்தென்னநாட்டைநாணுண்டென்ன
மூட்டையாவயிற்றினில் போட்டையேபெருந்தீயை பா

காசிராசன் விருத்தம்.

அன்னமேமாதேயுன்ற னருமையாமகனையின்று
கன்னமாக்களவுசெய்த கள்ளியுங்கிடைத்தாளென்றே
நன்னகர்காவலாளர் நாடியேபிடித்துவந்தார்
என்னருமகனுமாண்டா னினியென்னசெய்குவோமே.

வசனம்.

பெண்ணே உன்னுடைமகனைத் திருடிப்போன கள்ளியை காவலர் பிடித்துவந்தார்கள் ஆனல்பாலன் மாண்டானென்ன செய்வோமடிமாதே.

மதனவல்லி விருத்தம்.

மாண்டாயோமகனேநீதான் மலடியின்கையிற்சிக்கி
மாண்டையோ யென்வயிற்றில் மட்டிலாநெருப்பையிட்டு
மாண்டையோஅம்மாவென்றே மனதினினினைந்தேயப்பா
மாண்டையோயிவளேயிங்கே மறித்திடச்செய்குவேனே.

வசனம்.

அப்பாமகனே என்கட்டிக்கனியே மாண்டாயா என்னைமறந்தாயடா கண்மணியே.

மதனவல்லி விருத்தம்.

மகன்றனைக்கொல்லவந்த மாபாவியிருசிமூடி
ககனத்திலுன்னைபோன்ற காதகியுண்டோகள்ளி
ஜெகந்தனைமிரட்டுங்தோழி செங்கோலுமுன்னேநீலி
வகத்துடன்கையிலேந்தி வந்தையோமயக்கத்தானே.

வசனம்.

அடிசண்டாளி என்மகனைக்கொன்றதுமல்லாமல் அச்சமின்றி ராஜசமூகத்தில் கையிற்றூங்கிக்கொண்டு வந்தாயா அடிதோஷி.

சந்திரவதி விருத்தம்.

தோஷிநீயென்றுவென்னைத் தூரமவிதியேதாயே
ஆசித்தேதிருடிப்போன அடாதவள்நான்ருனென்றே
தூஷிக்கும்வகைதானந்த தோகைபார்வதியாளோடு
காசிவாழ்விஸ்வலிங்கன் கருத்தெனத்தெரிந்தேனம்மா.

வசனம்.

அம்மணி என்னை திருடி தோஷி நீலியென்று பலவாருப் சொல்வது காசிநாதன் செயல்தான் தாயே.

மதனவல்லி விருத்தம்.

காலனுனுலுங்கொஞ்சங் கருணைதான் செய்வாணிந்த
பாலனைபதைக்கக்கொன்ற பாதகிபடிசண்டாளி
சாலவேஅச்சம்விட்டு சரிசரியென்முன்நின்று
ஞாலவன்பெயரைச்சொல்ல ஞாயமோவுனக்கேநீலி.

வசனம்.

அடிபாதகி எமனுனுலுங் கொஞ்சம் மனமிரங்குவானே உன்மனமிரங்காமல் கொன்றுவிட்டும் காசிநாதனை நினைப்பதுந் தகுமோடி திருட்டுக்கள்ளி.

சந்திரவதி விருத்தம்.

கள்ளியென்றுநீலியென்றும் பிசாசமென்றுங்
  கடிந்துரைக்குமம்மணியேகழறக்கேளாய்
நள்ளிருலுன்னருகே விருந்துவந்த
  நற்புதல்வன்றனையெடுத்தோன் நானுமன்றே
கள்ளிகொண்டு மாண்டவன்றன் மகனையம்மா
  சுடச்சுடலை போவர்தடத்திற் சுதனைக்கண்டு
வெள்ளிமயக் கிரிபமர்ந்தோன் வினையோவென்று
  வெம்பினேனினிநீதி விளம்புவாயே.

வசனம்.

அம்மணி என்னை நியாயமின்றி கள்ளி நீயென்று ராஜாசமுகத்தில் பேசுவது சரியல்லஎன்மகனை கொன்றவள்நானல்லதாயே.

மதனவல்லி-தரு-காப்பி-ஆதி.

கள்ளிகுலேக்காரி-கருணையிலாமாரி
கொள்ளிவாயின்வீரி-கொண்டிவனப்பிடாரி
துள்ளிநடிக்காதடி-சண்டாளிநீ
தோஷியகலப்போவாய்.

சந்திரவதி-தரு-காப்பி-ஆதி.

கள்ளியென்றுபேசவுந்-தாயே
கடிந்துசொல்லியேசவும்-என்னையே
தள்ளிமனம்ரோசவும் விதியே-வி-வி
தயாபரனருடானே.

மதனவல்லி.

தெய்வத்தைநிந்தித்து-சீரதைசிந்தித்து
வைவதைசிந்தித்து-வாய்தனைமந்தித்து
நொய்யுறக்காரணமோ-சண்டாளிநீ
நொடிக்குள்வதைப்பேனடி.

சந்திரவதி.

வதைக்கவெனைநீயுமே-மனம்
வைத்தாற்போதுந்தாயுமே-என்னையே
சிந்தைககச்செய்தாலோயுமே-விதியே-வி
செங்கழல்போற்றி அம்மா.

மதனவல்லி.

நீதிகள்பேசாதே-நீர்மூடிஆகாதே
ஓதினர்கூசாதே ஒன்றும்பலியாதே

வேதனையிட்டாயடி-சண்டாளிநீ
வெட்டுண்டுபோவாயடி.

சந்திரவதி.

வெட்டிடுவேசெய்குவாய்-தாயே
விமலனருளுய்குவாய்-கனியே
இட்டவிதிசெய்குவாய்-விதியே-வி-வி
இறைவிதுணைதானே.

மதனவல்லி.

பாலனைக்கொன்றுமே-பாவிநீயின்றுமே
சீலமாய்சென்றுமே-செருக்கோடுநின்றுமே
கோலமாய்பேசவந்தாய்-சண்டாளிநீ
கொலைகாரிவாய்மூடடி.

சந்திரவதி.

பாலந்தன்னைக்கொல்லவே-தாயே
பாதகிநான் அல்லவே-கனியே
காலமம்மாசொல்லவே-விதியே-வி-வி
கடிந்துரைக்காதே அம்மா.

மதனவல்லி வசனம்.

ஓபிராண நாதா யிவளை யின்னம் வெட்டச் செய்யாம லிருப்ப தேன் சுவாமி.

காசிராஜன் வசனம்.

பெண்ணேநியாயத்தை விசாரித்து வெட்டச்செய்கிறே னென் கண்ணே.

மதனவல்லிவசனம்.

சுவாமி நானிந்தப்பாதகியை பார்க்கமாட்டேன் இறந்தபாலனை ச்சுடலைக்கனுப்பி யிவளைச் சித்திரவதை செய்விப்பீர்பிராணநாதா.

காசிராஜன் வசனம்.

அப்படியேசெய்விக்கிறேன்நீபோவாயடிகண்ணே

காசிராசன் விருத்தம்.

அன்னமேதுயரந்தன்னை யடைந்துநீயுருகவேண்டாஞ்
சொன்னமேகாசிராதன சோதித்தானம்மையன்றி
இன்னிமைதனிலேயால னேகிடச்சுடலேசெய்வேன்
கண்ணியின்களவைக்கண்டே கட்டளையிடுவேன்போவாய்.

வசனம்.

பெண்ணேநீதுபரப்படவேண்டாம் நான்நீதிவிசாரித்து தெண்டனை விதிக்கின்றேனடி பிராணநாயகி.

காசிராசன் விருத்தம்.

பெண்ணாகப்பிறந்தவிந்தப் பேதையைத்திருடியென்றே
எண்ணாமற்கொணர்ந்தீர்நீங்க ளெவ்விதம்வதைக்கக்கண்டீர்
கண்ணாடிவொளிவைப்போலக் கழறுவீர்பொய்யுரைத்தால்
விண்ணாடுயேகநீங்க விதிப்பேனுனக்கனைதானே.

வசனம்.

அடாகாவலாளிகளே இந்தப்பெண்பிள்ளை திருடியென்று கொண்டுவந்தீர்கள் நடந்தவாரைச்சரியாய் சொல்லுங்கள் பொய்யுரைத்தாலாக்கினை செய்விப்பேனடா காவலாளிகளே.

காவலர் விருத்தம்.

திருடியுமிவளோநாதா தேடியேவடிவைப்பற்றி
மருவிடக்கானகத்தில் மைந்தனைக்கழிக்கக்கண்டோம்
திருடிபேருழ்ந்தோமங்கு சிமைக்குள்ளேஓடலான
வெருடியைபிடித்துகட்டி வேந்தனேகொணர்ந்தோமெப்பே

வசனம்.

சுவாமிநாங்கள் காலடிகளைப்பற்றிக்கொண்டு காட்டிற்குள்சென்றோமிவளங்குபாலகனைக்கடித்துக்கொண்டிருந்ததைக்கண்டோமெங்களைக்கண்டு ஓடப்போனவளைப்பிடித்துவந்தோம் வேந்தனே.

காசிராஜன் விருத்தம்.

ஆரம்மாநீதானிந்த அலகோலமாகவந்தாய்
ஊரென்னபேர்தானென்ன வுற்றவிக்கொடுமையாதோ
காரணம்நீபோவன்றிக் காவலர்செய்தரூதோ
தீரமாயென்முன்நின்றே திடமுடன்தெரிவிப்பாயே.

வசனம்.

அம்மாநீயார் எந்தவூர் வுனக்குயிந்த பழிவந்தகாரணமேது காவலாளிகளேதாவது சூதுசெய்தார்களாபயமின்றி சொல்லுவாயம்மா

சந்திரமதி விருத்தம்.

ஊரிதுவாகும்வேந்தே உத்தரம்பிறந்தேனென்றன்
போதுசந்திகண்டீர் பேணிநானைபர்வீட்டின்
சேரியிற்றொண்டுவேலை செய்திடுமடிமைகாண்பீர்
வீரியங்குன்றவந்த விதிதனைநோகின்றேனே.

வசனம்.

ஐயா என்பேர் சந்தி யிருப்பது விதேயநாடு பிறந்தது யிதற்கு வடக்கே நான்வேதியர் வீட்டின் முறித்தொழில்செய்யுமடிமை என் விதியின்பயனிதுவாகும் சுவாமி.

சந்திரவதி விருத்தம்.

மன்னவாயுமதுதிவ்ய மகனுமென் கரங்கடன்னில்
வன்னமாயிருக்கக்கண்டீர் வழுதிபவாருங்கேட்டீர்
என்னனுனியம்பவாகு மிப்பழியெனக்குவாய்க்க
இன்னமேவிஜெநருண்டோ வீசனென்றறிகுவீரே.

வசனம்.

அரசனே உமது பாலனென்கையிலிருப்பது பார்த்தீர் காவலாளிகள் சொல்லியதுங்கேட்டீர் இந்தமாது சொல்வதென்னயிருக்கிறது நியாயமறிந்து நீதிசெய்வீர்சுவாமி.

காசிராஜன் விருத்தம்.

மந்திரிமாரேயென்றன் மகன்போனதுயரமின்றி
இந்தமாதுசொல்லு மியற்கையால்வருந்துகின்றேன்
சுந்தரவடியாணைக்கிற் சொற்கொலைசெய்தேளென்ன
ளந்தவோர்குறியுங்காணே னிதைநன்றுயோசிப்பீரே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிகளே என்மகன் மாண்டது வியாதியாகும் இந்தப்பெண் கொலைசெய்தாளென்பதற்கு முகத்தில் யாதொருகுறியுங் காணேனிதை யோசித்து செய்வீர்களப்பா.

முதல் மந்திரி விருத்தம்.

நீதனேசொல்லக்கேளும் நீள்புவிகடலினுழும்
நாதனேகாணக்கூடும் நவிலுவேன்வானந்தன்னைச்
சாதனையாலேவில்லாய்ச் சாங்கமாய்வளைக்கலாகும்
மாதர்கணெஞ்சினெண்ணதறிந்திடலாகாதையா

வசனம்.

மகாராஜனே கடலினுழத்தைக் காணலாகுந்தவிர ஆகாயத்தை வில்லாகவும் வளைக்கலாகும் இந்தமாதர்களினெஞ்சி னுண்மையறிய எவராலுமாகாது வேந்தனே.

காசிராஜன் வசனம்.

அப்பாஉன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துவாய் மந்திரி.

இரண்டாவது மந்திரி விருத்தம்.

வேந்தனேசிங்கந்தன்னி விரைந்துமேவசமதாக்கி
சாந்தனேயாடலாகுஞ் சமுத்திரமணலையெல்லாங்
காந்தனேகணக்காயெண்ணிக் கயிறதாய்த்திரிக்கலாகும்
நீந்தவேமாதர்நெஞ்சி னிசமதைநிகழ்த்தொணாதே.

வசனம்.

ஆண்டவனே அடவியில்வாழுஞ் சிங்கத்தை வசப்படுத்தலாகுந்தவிர சமுத்திரன் மணலையுமெண்ணிக் கயறாகவுந் திரிக்கலாம் பெண்களிலுண்மை சொல்ல லாகாது வேந்தனே.

காசிபன்-வசனம்.

அப்படியா.

காசிபன் விருத்தம்.

பழியதுவாய்த்ததென்றிப் பாலனையேந்திவந்தாய்
வழியதிலிவர்கள்செய்த வஞ்சகமிருக்குமாகில்
இழிவிலைமாதேயென்முன் னியம்பிடப்பயங்கள்வேண்டாம்
கழிதனிலாடுமந்தச் சுந்தரன்காப்பனம்மா.

வசனம்.

கேளாயம்மா அந்தக்காவலர்களேதாகிலும் வழியில்சூதுசெய்திருந்தாலெனக்குத் தெரியப்படச் சொல்லுவாயமாதே.

சந்திரிவதி வருத்தம்.

சாற்றிடவேறுகாணேன் சற்குணவரசேயிங்கு
வேற்றுப்புகலவென்றும் வேண்டிடேன்காவற்காரா
போற்றிடும்வேளைதன்னில் பொருவிலாப்பாலன்றுனும்
ஆற்றவென்கரத்திருக்க வறிந்தனருண்மைதானே.

வசனம்.

ஐயா காவலாளிக ளென்னைககாணும்போது இந்தபாலனென் கையிலிருந்தது வுண்மை அதின்பேரிலுமக்குத்தோணும் வகைசெய் வீர் ராஜனே.

காசிபன் விருத்தம்.

மந்திரிமாரேயெந்தன் மகன்மாண்டான்விதியாலன்றோ
வெந்திளம்மாதுமிந்த வேதனைவிளைத்தாளென்றால்
சுந்தரமொழியாள்யாரோ ஜொலிக்கின்றுள்ஜோதிபோல
எந்தனன்னெல்லைக்காப்பா ளிவடனைவிடுத்திடீரோ.

வசனம்.

அப்பா மந்திரிகளே என்மகன் பிரமன்விதிப்படி மாண்டான் இவள் வதைத்தாளெனச்சொல்ல வென்மனதில்நாட்டவில்லை இவளை இந்த வூருக்கப்புறமிருக்கும் காட்டுக்குத்துறத்திவிடச்செய்வீர்களப்பா

தலைக்காவலன் விருத்தம்.

நாட்டைவிட்டோட்டினாலும் நாற்கடற்கடத்திட்டாலுங்
காட்டிலே துறத்திட்டாலுங்கள்ளியைக்கொணரோமாகில
வாட்டியேரெங்கடன்னை வதைத்திடச்செய் வீரன்றோ
மீட்டுமிங்ஙகரைக்காத்தால் விருப்பிலோமிறையும்வேந்தே.

வசனம்.

சுவாமி நாங்களிந்த திருடியைக்கைப்பிடியாகக்கொண்டுவந்தும் ஓட்டிவிடச்சொன்னீர் நாங்கள் கொண்டுவராவிட்டாலெங்களைத்தெண்டிக்கதடையுண்டோ இனிகாசி நகரைக்காக்க வெங்களுக்குமனமில்லையாண்டவனே.

காசிராஜன் விருத்தம்.

நல்லதுவமைச்சமாரே நாடியேயிவளைக்கூட்டி
வல்விருணீங்கக்கையில் வகையுடன்பந்தமேந்தி
மெல்லியளடியோவன்றி மேவுவேற்றடியோவென்று
சொல்லினீங்கடேர்ந்து சூக்ஷமதுரைசெய்வேனே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிகளே நீங்கள் தீவட்டியேந்தி நமதரண்மனை யருகிலிந்த மாதினடியோ அல்லது வேற்றடியோ பார்த்துச்சொல்லு ங்கள் அதின்பேரில் நியாஞ்சொல்லுகிறேன் மந்திரிகளே.

பொது விருத்தம்.

அண்ணலினுணையாலே வமைச்சனங்களுகாமுன்னங்
கண்ணிலாமுனிவனோடி காரிகையடிபோலின்று
மண்ணின்மீதமைத்துத்தானும் மாயமாய்மறைந்துநின்றான்
எண்ணிடாத்துயரத்தோடு மிறைவியங்குற்றாளன்றே.

வசனம்.

கேளுங்கள்சபையோர்களே இப்தப்பிரகாரம்காசிராஜன் சொன் னவுடன் விஸ்வாமித்திரனோடிவந்து அவ்விடத்தில் சந்திரவதி அடி யைப்போல செய்வித்து மறைந்தான் அப்பால் மந்திரிகள் காலடியை போய் பரிசோதிக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

காசிராஜன் வசனம்.

கேளாயம்மா நீ என் மந்திரிகளுடன்போய் அவிடத்திலிருக்கும டிகளைப் பார்த்துவருவாய் மாதே.

சந்திரவதிசொல் வசனம்.

அப்படியே போய்வருகின்றேனையா.

மந்திரிசொல்-வசனம்.

காவலாளிகளே இவள்கையிலிருக்கிற சவத்தை கீழேவைக்கச் செய்து என்பின் அழைத்துவாருங்கள் அவள் காலடியைப்பார்த்து வருகலாமப்பா.

காவலர் வசனம்.

அப்படியே அழைத்துவருகின்றேஞ் சுவாமி.

காவலர் வசனம்.

அடிகள்ளி செத்தபாலனைக் கீழேவைப்பாயடி.

சந்திரவதி வசனம்.

ஐயா உங்களுத்திரவின்படி வைத்தேனையா.

மந்திரிசொல் வசனம்.

அம்மாஉன்பாதத்தையிந்தக்காலடியின்பேரில் வைப்பாய்தாயே.

காவலர் வசனம்.

ஐயா பார்த்தீரா அடிசரியாகவிருக்கிறது.

மந்திரி வசனம்.

அம்மாஉன்பாதத்தையிந்தக்காலடியின்பேரில் வைப்பாய்தாயே.

காவலாளி வசனம்.

ஐயா பார்த்தீரா அடிசரியாகவிருக்கிறது.

மந்திரி வசனம்.

அம்மா இன்னும் முன்தோன்றுகிற வடிகளின்பேரின் வைப்பாயம்மா.

காவலர் வசனம்.

ஐயா மாருமடிகளே மிவன்காலடிதான் சுவாமி.

மந்திரி வசனம்.

அம்மா காலடிகளெல்லாம் உன்னடிகளாகவே யிருக்கிறதே யெ ன்னவிபரீத முன்னைப்பார்த்தால் பரிதாபமாகின்றதே இதற்கென்ன செய்வோந்தாயே.

சந்திரவதிசொல் விருத்தம்.

அமைச்சரேநீங்களிந்த வரிவைமேற்கருணைகாட்ட
அமைச்சரேதகுமோவேந்த னரைந்தவார்புரிவீரையா
அமைச்சரேயுதிக்கும்போது அன்றயன்விதித்தவாறே
அமைச்சரேநடப்பதன்றி யணுத்துணைபிசகாதையா

வசனம்.

ஐயா மந்திரிமார்களே நீங்களேன் துயரப்படுகிறீர்கள் பிரம னென்றலையில் எழுதியபடியே நடக்குமே யன்றி வேறுநடக்குமோ அமைச்சரே.

மந்திரி வசனம்.

காவலாளிகளே அரசனிடமிவளை யழைத்துக்கொண்டு வாருங் களப்பா.

காவலன் வசனம்.

அப்படியே யழைத்துக்கொண்டு வருகிறோம் சுவாமி.

சந்திரவதி-கண்ணி சௌராஷ்டகம் ஆதி.

இப்போதுனதும்மை மொப்பிக்குளிர்ந்துதோதான்
ஏனிப்பகைதொடுத்தாய் பரசிவமே
ஏந்தலைப்பிரிந்ததன் வாழ்ந்தும்பலனேனென
எனக்கிவ்விதிவிடுத்தாய் பரசிவமே
வேதத்திற்கொல்லாத வெங்கொலைக்காரியென்றே
வேந்தனுரைக்கலாச்சே பரசிவமே

விந்தையிதுவோயாகுந் தந்தைதவத்தாலன்று
விளைந்தபலனும்போச்சே பரசிவமே
நாட்டிலிதுவரையில் நாரிகள்தாறியா
நாணந்துன்பமுங்கொண்டேன் பரசிவமே
நான்பாவியோவலது நீபுரியுஞ்சூதோ
நாட்டிற்பழிபையுண்டேன் பரசிவமே
பிறந்தபோதேயிறந்தால் பெருகியித்துயரென்னை
பேணுமோபேணுதே பரசிவமே
பேதைமேலிப்பகை சாதிப்பதுமுனக்கும்
பெருமையாய்த்தோணுதே பரசிவமே

காசிமந்திரி விருத்தம்.

மன்னவாவென்சொல்வோமிம் மாதுவினடிகளன்றி
இன்னம்வேறடிகள்காணேம் மிஃதிவள்விதியேயாகும்
என்னமோவிவள்மேற்குற்றம் மேற்கிலோமென்றேயின்று
பன்னவோர்வகையுங்காணேம்பார்த்திபாபோற்றிபோற்றி.

வசனம்.

கேளும் மகாராஜனே அவ்விடத்திலிந்த மாதினுடைய அடிகளன்றி வேறொன்றுங்காணே மிவள்மேல் குற்றமில்லையென்று சொல்ல வேறோர் மார்க்கமுங்காணேம் வேந்தே.

காசிராஜன்சொல் விருத்தம்.

என்னதானிதற்குச்செய்வோ மெழிலுறுமந்திரிமாரே
தன்னிகரில்லாமாதின் றலைவிதிதானேவையா
கொன்றைமாமலரணிந்த கோமாளன்செயலோகாணேன்
இன்னகர்தோட்டிதன்னை யிங்ஙனம்வரச்செய்வீரே.

வசனம்.

ஐயா விதுவும் காசிநாதன்செயல்தான் நானென்னசெய்வேன் நமது தோட்டியைவரச்செய்வீர்களப்பா மந்திரிகளே.

மந்திரி வசனம்.

ஆரடாகட்டியனே வீரவாகுவை அழைத்துவருவாயடா.

கட்டியன் வசனம்.

அப்படியேஅழைத்துக்கொண்டுவருகிறேனையா.

கட்டியன் வசனம்.

அடாவீரவாகு உன்னை நமது இராஜாதிராஜன் அழைத்துவரச் சொன்னார் ஓடிவருவாய் வெட்டியானே.

தோட்டி வசனம்.

இதோவந்தேச்சுவாமி ஆண்டே.

தோட்டி விருத்தம்.

மாதேகேள்காசியாளு மன்னவனழைத்தனென்றே
மாதேகேள்கட்டியன்றான் மகிழுடன் கூப்பாடிட்டான்
மாதேநம்மடிமைத்துன்ப மகன்றிடுமின்றுகண்டாய்
மாதேகேள்செல்வேனிந்த மனையினீயிருப்பாய்கண்ணே.

வசனம்.

கேளாய் பெண்ணே சாமலா காசிராஜன் அழைக்கிறானும்போ ய்வருகிறேன் நீயிவ்விடமிருப்பாயடி கண்ணே.

சாமலா வசனம்.

அப்படியே போய்வாரும் சுவாமி.

தோட்டி வசனம்.

சுவாமி என்னை யழைத்தகாரியஞ் சொல்லவேணுஞ் சுவாமி.

காசிராஜன் வசனம்.

வலிமையிலுயர்ந்தவீர வாகுவேசொல்லக்கேளாய்
கொலுமுன்னேநிற்குமந்தக் கோதையின்கையைப்பற்றி
வலுமையாய்ச்சுடலைக்கேகி வஞ்சகம்புரிந்திடாமல்
தலைபதுவிழவேவெட்டித் தான்வந்துதெரிவிப்பாயே.

வசனம்.

அடா வீரவாகுநீயிந்தப் பெண்பிள்ளையைச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோய் தலைபூமியில்விழும்படியாக வெட்டி சங்கதி தெரிவிப்பாயடா தோட்டி.

தோட்டி வசனம்.

சுவாமி நான்வெட்டுவதற்காகத் தங்கள் கையிலிருக்கும் வாளாயுதத்தைக் கொடுப்பீர் ஆண்டே.

ராஜன் வசனம்.

இதோ கொடுத்தேன் வாங்கிப்போடா தோட்டி.

சந்திரவதி-தரு-கண்ணி-கெண்டா-ஆதி.

என்னைச்சொல்லுவேனையா ஏதினிச்செய்குவேன்ஞான்றுன்
எங்கள்விதிதனக்கே ஓசிவமே

மன்னன்சத்தியபாஷனுந்தான் மயானங்காத்திடச்செய்து
மகனையுமடியச்செய்தாய் ஓசிவமே

கன்றிழந்தபசுபோற் கதறிவரும்வழியிற்
கடும்பழிசுமத்தினாய் ஓசிவமே

இன்றுடனேகொண்டதொரு என்னைமுடிந்ததோதா
னினியென்னசெய்யப்போவாய் ஓசிவமே

கட்டியேகயிற்ருலென்னை கடினமொழிகளாடி
கதறவிட்டாய்பறையனை ஓசிவமே
வெட்டியானல்வெட்டிடவே விட்டதுமடியாடனை
விமலாவுன் விளையாட்டோ ஓசிவமே
நன்றுநன்றுசெய்தாயெந்த நாதனிலைபொய்க்காவண்ணம்
நம்மபவனையருளளிப்பாய் ஓசிவமே
என்றுமுன்றனருளளிப்பாய் ஓசிவமே
யீசாமனங்களிப்பாய் ஓசிவமே

தோட்டி விருத்தம்.

நடாநடாநீதான்மெத்த நடத்துமேபடிப்பதேது
சடசடத்திடவேசெர்நீர் சாந்திடமுடிதான்வீழ
திடமுடவெட்டவெந்தன் றிரிபிலாவுரையீதாகும்
தடந்தனிற்காலம்போக்கத் தகாதினிற்றள்ளுவேனே.

வசனம்.

அடிநடடிநட வென்னடிசிணுக்கிருள் எல்லாமிப்போது தெரியுது உன்தலையிரத்தம்வொழுகவெட்டித்தள்ள அரசன்சொன்ன நிற்காதே கழுத்தைப்பிடித்து வெட்டுவேண்டி.

சந்திரமதி விருத்தம்.

என்றனைத்தீண்டவேண்டா மியப்புவேன்வீரவாகு
உன்றனைற்கரத்தாலென்ற னுயிர்விடிறபதவியாகும்
சென்றனன்விதியாவிந்துச் சேரொணுத்துயருந்த
அந்தனல்கொண்டவண்ணம் அழியாதுபுலம்பினேனே.

வசனம்.

என்னைத்தீண்டவேண்டாமையாநானேநடக்கிறேன் உன்னுடையகையிறுலோன்மடிபவென்னதவம்செய்திருந்தேனோவீரவாகுவே.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காசிராஜன் உத்திரவின்படி சந்தி ரவதியை மயானத்திற்கு வீரவாகு அழைத்துக் கொண்டுபோனான் அப்பால் காசிராஜனுடைய புத்திரனை மயானத்திற்குக் கொண்டு போய் அடக்கஞ் செய்யும்படி ஆக்கியாபிக்கும் விதங்காண்பீர்கள் கனவான்களே.

காசிராசன் வசனம்.

கேளுமப்பா மந்திரி பெண்குமாரனை பன்னீரினால் குளிப்பாட்டி திவ்யகந்தபரிமளம்பூசி புட்பமாலைபுனைந்து பீதாம்பரமணிந்து என க்குத் தெரிவிப்பாய் மந்திரி.

மந்திரி வசனம்.

சுவாமி தங்களுத்திரவின்படி செய்வித்தேன் வேந்தே

காசிராஜன் விருத்தம்.

அமைச்சரேகேளீறென்ற னருமையாஞ்சிறுவன்றன்னை
இமைப்புடன்றுளமேள மியம்பிடத்தளமுஞ்சூழ
கமைப்புடமயானமேகி காரகில்காஷ்டஞ்சேர்த்து
அமைத்துமேதகனஞ்செய்தென் னருகினிலுரைசெய்வீரே.

வசனம்.

அப்பாமந்திரி என்மகனை சதுரங்கசேனைகளுஞ்சூழ மேளதாள ங்களொலிக்க மயானங்கொண்டுபோய் அகிற்கட்டைமேற் கிடத்தி தகனஞ்செய்து எனக்கு சங்கதி தெரிவிப்பாயப்பா.

மந்திரி வசனம்.

சுவாமி தங்களுத்திரவின்படி உமதுபாலனை சுடுகாட்டுக்கு எடு த்து செல்லுகின்றோம் வேந்தே.

காசிராஜன் விருத்தம்.

மாதவஞ்செய்துபெற்ற மகனேநீமாண்டிட்டாயே
பாதகனுன்முகத்தைப் பார்ப்பதுமென்றோவப்பா
ஆதரவாவாயென்றே யகத்தினில்மகிழ்ந்ததற்கோ
சோதனைசெய்தான்பிரமன் சுடலைபோய்வாழ்வாய்பாலா.

வசனம்.

அப்பாமகனே யெனக்குதவியால் அரசுக்குரிய காரியங்களியற்றுவாயென்றிருந்தேன் பாவி பிரமன் எழுதியவிதியினால் மாண்டினையே நீசுடலைக்குப்போய் வாழ்ந்திருப்பாய் கண்மணியே.

மந்திரி-தரு-சௌராஷ்டகம்-சாப்புதாளம்.

பல்லவி.

போவோம்வாரீர் சுடலைகாடு போவோம்வாரீர்

அநுபல்லவி.

காவலனீன்றதோர் கண்மணியைச்சுட
ஆவலாய்நாமெல்லா மன்பாகவேகூட (போ)

சரணங்கள்.

இராஜன்மனைவியை விட்டோம் இதோ
நடுவழியைத்தொட்டோம்

வாசவன்காசிபால் வள்ளலீன்றபாலன்
மோசமாய்மாண்டிட்டான் மொழிவதேது இனி (போ)

மதனவல்லிதனக்கேதவத்தின்
மகனுனிக்கெதிக்கே

சுதனரசுக்கே சுந்தரனென்றுமே
சோர்ந்தமளித்ததுனை சோர்வுறலாச்சுதே (போ)

எந்தைபெற்றபாலாபிரமன்
எழுத்திதுவோசிவா

விந்தையாய்சிறுவனை விறைவிற்றகித்துமே
வந்தேஅரசனை வாடாமற்றேற்றிட (போ)

மந்திரி விருத்தம்.

ஆரடாசுடலைகாக்கு மன்புளதோட்டிகேளாய்
சேரடாராஜனின்ற செல்வனைச்சுடவேக்கட்டை
பேரடாசவத்தைவைக்க பிரியமாய்வந்தோம்நாங்கள்
தீரடாநொடிக்குள்ளே நீ தீவரம்போகத்தானே.

வசனம்.

அடாசுடலையிலிருக்குந்தோட்டி நமது ராஜாவின்செல்வமகனை தகனஞ்செய்வதற்காக சந்தனக்கட்டை அகிற்கட்டையினால் சீக்கிரங் காஷ்டம்சித்தஞ்செய்வாயடா.

தோட்டி வசனம்.

ஓ ஆண்டமார்களே காசிராஜன்மகனை தகனஞ்செய்ய யிதோ கட்டைகளடுக்கினேன் சுவாமி.

மந்திரி வசனம்.

அப்பா அண்ணமார்களேநமதுராஜகுமாரனையிந்தகாஷ்டத்தின் மீதில் பழுதிலாமல்வளர்த்துவீர்களப்பா.

சுற்றத்தார்.

அப்படியே காஷ்டத்தின்மீதுவளர்த்தியாச்சுது மந்திரி,

மந்திரி விருத்தம்.

பரபரப்புடனேநிற்கும் பாங்குளகட்டியக்காரா
அரசன்றன்பாலிசென்று அன்புடனடந்ததெல்லாம்

திரமுறவிளம்பிரான்றன் றெறிவித்தவாறுபோலே
விறைவினிற்கொள்ளிதிட்ட வேந்தனைவரச்செய்வாயே.

வசனம்.

அப்பா கட்டியனே நீராஜனிடஞ்சென்று இவ்விடம் யாவற்றும் திட்டமாச்சிதென்று சொல்லி கொள்ளி தீட்டுவதற்காக அரசனை அழைத்துக்கொண்டு வருவாயப்பா.

கட்டியன் வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா சுடலையில் காஷ்டமடுக்கி ஆச்சுது கொள்ளியிடுவதற்காக மந்திரி தங்களை அழைக்கச்சொன்னார் ஆண்டவனே.

காசிராஜன் விருத்தம்.

நாயகன்றனக்கேகொள்ளி நானிடமனமுங்கொள்ளேன்
தாயுடன்பிறந்தவம்மான் றானுமக்கிருப்பதாலே
காயமுழுழ்கிநின்றே கையினிர்கொள்ளிதாங்கி
நேயமாய்வைக்கச்சொல்லி நீரிரைத்திடுவாயப்பா.

வசனம்.

அடா கட்டியனே என்னருமைமகனுக்கு கொள்ளியிட நான்மனந்தாளேன் அவ்விடமிருக்கும் எனது மைத்துனராகியபாலன்தாய் மாமனையிடச்சொல்லுவாயப்பா.


கட்டியன் வசனம்.

மஹா பாக்கியஞ்சுவாமி.

கட்டியன் விருத்தம்.

நீருரைந்தவாறுசென்று கொள்ளிதிட்ட
திருடனைபாளனழைக்கவவர் துயரமீறி
பேருலகைபான்டிடவே பெற்றபாலன்
பிரேதந்தைகட்டையின்மே லிருக்கநானும்

காசிராஜன் மகனை காவலாளிகள் தகனஞ்செய்கிற பாகம்.



காடு. காசிராஜன் மகன். மந்திரி. காவலாளிகள்

தேருவேனுனெள்ளிபதூ திட்டநெஞ்சம்
திகைத்திடுமே எல்லாது வேறுமுண்டோ
கூறுகின்றேன்ஜெகதலரைக் கொள்ளிவைக்க
தோறினதாருரைசெய்தார் கொற்றோர் காண்பீர்.

வசனம்.

கேளுமையாமந்திரி நமதுராஜாவின் மைத்துனர்கையினுல் இவ்விடத்திய கருமங்களை நடப்பிக்கும் படிக்கு வேந்தனுத்திரவு செய்தார் சுவாமி.

மந்திரி வசனம்.

கேளுமையா புரோகிதரே ஜெகதலராஜனை ஸ்நானம் செய்வித்து இவ்விடத்திய கருமங்களை கிரமமாய் நடப்பிப்பீரையரே.

புரோகிதன் வசனம்.

மகாபாக்கியம் அப்படியே செய்விக்கிறேனையா மந்திரி.

புரோகிதன் வசனம்.

ஓ ஜெகதலராஜனை கெங்கையையாட வெழுந்துவாரும் கட்டியனே நீவட்டிவாங்கி செல்லுவாயப்பா.

கட்டியன் வசனம்.

அப்படியே முன்னே நடக்கிறேனிதோ என்பின்பற்றி வாருங்கள் சுவாமிகளே.

அரி-தரு செஞ்சுருட்டி-ரூபகம்.

பல்லவி.

என்னவிதிவந்தது-அப்பாமந்திரி-என்னகெதிவந்தது

அநுபல்லவி.

கன்னகரிமுந்து நாயகமாயதை
நாடிமுறியாகத் தேடிநான்விற்பபின் ஏ.

சரணங்கள்.

அருந்தவந்தானே செய்துபெற்ற
அன்பனும்போனனே
நெருங்கலாகா நீளடவிதனில்
நின்றுதர்ப்பைகொய்ய வின்றுநாகந்தீண்ட-எ.

எந்தவிடந்தேடி என்றன்மாது
எங்கிமனம்வாடி
சுந்தரமகனைச் சுடவந்தவளை
சுடுகாமற்சொல்விறல் அடுக்காமொழிபேச-எ.

கங்குலிற்போராளே காலகண்டன்
கடிந்திடிற்றோராளே
இங்குஇச்சவத்தை யிருந்திபேசினள்
ஏதுஇன்னம்முனி சூதுசெய்வாரோதான்-எ.

பொது விருத்தம்.

இந்தவாறயோத்திமன்னன் இபம்பவுங்காசிராஜன்
மைந்தனைவதைத்தாளென்றே மறைபதுபிசகான்றேவி.
சந்திரவதியைத்தோட்டி சாங்கமாயழைத்துவந்தே
விந்தையாயரிச்சந்திரன்பால் வெட்டிடவளித்திட்டானே.

(வ-ம்.) கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரம் சுடலையில் அரிச்சந்திரன்வருத்தப்பட்டுக் கொண்டிருக்குங்காலை சந்திரவதிகொலைசெய்தாளென்று காசிராஜன் விதித்த ஆக்கினைப்படி வெட்டும்படி வீரவாகு அடிமைத்தோட்டிகையிற்கொடுக்கிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

தோட்டி-விருத்தம்.

காசிபன்மகனைக்கொன்ற கள்ளிபாமிவடான்கண்டாய்
கோசியங்காட்டில்வாழுந் துர்க்கிபாம்பாலன்தன்னை
யோசனையின்றியூட்டி னுதிரத்தைகுடித்திட்டாளா
மாசியும்விலகுமுன்னே மறித்திடவெட்டுவாயே.

(வ-ம்.) அடா அடிமையிவள் கம்போராசன்மகனைகொண்ணுளாம் காட்டிலேவாயும் பிச்சாசாம் இவளைபொபிது வெடிபாமுன்னே வெட்டுவாயடா தோட்டி.

வீரவாகு அரிச்சந்திரனிடத்தில் சந்திரவதியை

வெட்டச்சொல்லுகிற பாகம்.



அரிச்சந்திரன்-வசனம்.

ஆண்டையே தங்களாக்கிளைப்படியிவளை வெட்டுகிறேனையாசுவாமி

அரிச்சந்திரன்-தரு-முகாரி-ஆதி.

பல்லவி.

என்னவிதிபடியிது பெண்ணே
என்றன்கையாலிறக்க லானாய்கண்ணே

அநுபல்லவி.

உன்னதவிடையேறு முத்தமனருள்தானோ
ஓகோவிக்கொடுமை யுலகினிலுண்டோர்தானே (என்)

சரணங்கள்.

மன்னன்மகளாக நீ பிறந்தும்பெண்ணே
மாபாவியெனைத்தொட லானாய்கண்ணே
கன்னமாபுரியோன்பாற் கருதினான்போவென
கசந்தாயித்துயருற லானாயடிமானே (என்)
துரைத்தனமிழந்துடல் சோர்ந்தும்பெண்ணே
தொடர்ந்திக்காசிக்கே வந்தாய்கண்ணே
மறையோனுக்கடிமையாய் மகனைப்பறிகொடுத்தாய்
மாதேவாளினால்வெட்ட வந்ததேகெதிகண்ணே (என்)
பருத்திபடும்பாட்டிற்கு மதியாய்பெண்ணே
பட்டதும்போதாமல் அயனுங்கண்ணே
வருந்திடநீதான்செய்த வாறேதோவறிகிலேன்
வல்விடியுன்றனுக்கே வந்தவாறேதோதேனே (என்)

அரிச்சந்திரன் விருத்தம்.

என்னருமாதேயுன்மே லிடியின்மேலிடிதாக
நன்னகர்காசிவேந்த னவின்றதேன்வெட்டச்சொல்லி
அன்னையாமுமையாள்கூற்றோ வடைந்தையோவையர்பாதம்
வன்னமாயெனக்குத்தோற்ற வகையுடனுரைசெய்வாயே.

(வ-ம்.) அடியென் பிராணநாயகி வேதியரிடம் பணமும் காசுக்காகப் போனையே இதென்ன விதிவந்ததடி எனக்குத் தெரியச் சொல்லுவாய் சந்திரவதி.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-இம்முகாரி தாளம் ஆதி.

ஐயோயிதென்ன காலம் அருங்கிளியேயுனை
அடித்துக்கட்டிவரவும் அயன்விதியோ

சந்திரவதி.

அரசேநீர்மனத்துயர் அடையலாமோ யீசன்
அன்றுயிட்டவாறிதுவே அகலப்போமோ

அரிச்சந்திரன்.

பாலனையிங்கிருத்தியே பாப்பானைத்தேடிப்போன
பாவையேயித்துயர்வர பாவமேதடி

சந்திரவதி.

காசுந்துண்டில்லையெனக் கடிந்துரைக்க சுடு
காடுவரும்போதுபாலன் காலிற்றூக்க

அரிச்சந்திரன்.

இங்கேயிருக்கவுன்மகன் யேதுக்கடிசவத்தை
எடுத்தாய்கையினுலிந்த யேச்சுக்கோடி

சந்திரவதி.

என்மகனென்றழக்கட்டி யென்னைவேந்தே காசி
இறைவன்முன்விடவெட்ட விட்டான்தேர்ந்தே

அரிச்சந்திரன்.

ஆரையிந்தப்பழிசெய்தேன் அரும்பாவி என்
றறையக்லோகத்தோரெனை ஏசலானேன்தாவி

சந்திரவதி.

சத்தியம்நிலைநிறுத்த சாமியேவெட்டி எனை
சாயுச்சியபதவியைச் சாருங்கெட்டி

சந்திரவதி விருத்தம்,

வருத்தமோடையர் தன்னை வணங்கினேன் துண்டுங்காசுந்
தருகிலேனென்றார்பின்னே தடம்பற்றிவருங்காலிந்தக்
கருமியின்பாதத்தந்த காசிபன்மைந்தன்றாக்க
அருமையாயெடுத்தேன்காவ லாளரும்பிடித்தார்நாதா.

(வ-ம்.) சுவாமி நான் வேதியரிடம் போய் பணம் துண்டும் கேட்டேன் தருகே னென்றார் திரும்பி வரும்போது வழியில் காசிராஜன் மகன் என் காலில் தாக்க வெடுத்தேன் காவலாளிகளும் வந்து பிடித்தார் நாதா.

இதுவுமது விருத்தம்.

கள்ளியென்றெனைப்பிடித்துக் கட்டியேயடித்துக்குத்தி
தள்ளியேபோனார்காசித் தலைவனுமடியைக்கண்டே
விள்ளவும்நீதியங்கு வேறொன்றுந்தோன்றிடாமல்
துள்ளியேபிடித்தோர்வேணடத் துணித்திடவிதித்தான்போற்றி

(வ-ம்) சுவாமி என்னைக் கள்ளியென்று பிடித்துக்கட்டி அரசன் முன் கொண்டுபோக இவ்விதிவாய்த்தது காவலர்கள் அடித்த அடிக்கும் குத்திற்கும தப்பித்து உமது திவ்வியகரத்தாலிறந்து சுகம்பெருவேன் என் பிராணநாதா.

சத்தியகீர்த்தி-தரு-பியாக்-ரூபகம்,

பல்லவி.

என்னகொடுமையோ அம்மாவிதி
என்னகொடுமையோ உனக்கிட்டவருமையோ

அநுபல்லவி.

இன்னங்கொஞ்சத்திற்குள் விடிமேவிடியுன்மே
லேககாலத்தில் வேகமாய்வந்தது(என்)

சரணங்கள்.

முன்செய்தபழியோ அப்பாவி
முனிவன்செய் வழியோ
என்செய்வோமினி யெந்தையும் நானுமே
யிருக்கலானோமிங்கு வெறுக்குங் கோட்டானைப்போல் (என்)

உத்தமியைப்போச்சே யென்றனு
றுதித்தசேயும் போச்சே
நத்தியேகாசியாள் நாதனுமென்னைபே
நறுக்கிவிட்டுன்னுயிர் தரிக்கவேசெய்பானோ (என்)

இப்படியாமென்றே அம்மணி
யெனக்கறியா தன்றே
கைப்பிடிகவுசிகன் கவனமனுகாமற்
காத்தேயரசனைத் தேற்றியிருப்பேனையோ (என்)

பாவிசெய்கசூது அம்மணி
பறந்திடுமின்றேது
கோபித்துநீயொன்று கூறில்மரிப்பானே
கொஞ்சம்விடப்போக வஞ்சம்புரிந்திட்டான் (என்)

எல்லாமவன்சூதே அம்மாயினி
யேதும் பலியாதே
கொல்லாமலேகொன்றான் கொடும்பாவிகவுசிகன்
கிருபைசெய்யத்தேவர் வருகுவார் சலியாமல் (என்)

சத்தியந்தலைகாக்கும் அம்மாவுன்
சாந்தமொழி நோக்கும்
நித்யநிராமய நிமலன்வரப்போறார்
நீயுமென்தன்ராஜன் சேயுஞ்சுகம்பெற (என்)

கெட்டகுறியில்லையே யுன்முகத்தில்
கிளரமதி வல்லையே
அஷ்டலட்சுமியு மாடுறார்முடிமேலே
அடியனிருகண்ணும் படியவானந்தத்தில் (என்)

சத்தியகீர்த்தி விருத்தம்.

ஒன்றுக்குமஞ்சவேண்டா மொளிபெருமெந்தாயிங்கே
இன்றுறுங்கவலைநீக்க விறைவியுன்சிரசின் மீதில்
நன்றதையளிக்குந்தேவி நடிக்கிறாளனக்குத்தோன்ற
வென்றும்நாங்காணப்போகா வீசனும்வருவாரம்மா.

(வ-ம்.) என்னைப்பெற்றதாயே நீ யொன்றுக்கும் அஞ்சவேண்டாம் உன் முடியின்பேரில் சாம்பவி நடிக்கிறாள் தேவாதிதேவர்கள் தெரிசனந்தருவார்கள் அம்மணி.

அரிச்சந்திரன்-கண்ணிகள்-சஹானா-ரூபகம்.

விதிபோமுனிசதியோகால கெதியோயிதபரனே
மதிசந்திரவதியைவெட்ட வந்தவினை அரனே.

நதிமேவியசடையாகாசி நாதாவாரும்பரனே
ததிபிதுவேதர்க்காத்திடத் தருணந்தெரியரனே.

சொல்லால்கள்ளமில்லாள் பொய்யையில்லாளிவள்பரனே
கல்லாகிலுங்கேட்டாலிவள் சொல்லுக்குமுமரனே.

பிள்ளைமாண்டுங்கள்ளியென பெண்டீர்தனைபரனே
உள்ளமோங்கிவெட்டலானே னுன்றன்செயலரனே.

சந்திரவதி விருத்தம்.

படிமிசைமுன்னாளாண்ட பண்புளவேந்தரெல்லாம்
முடிபுனைந்தறமியற்றி மொழிபொனுப்பெருமைபூண்டு
மிடியதுதொடரப்போந்து மீண்டுபின்கீர்த்திபெற்றார்
மடிந்திடவந்தேனும்மால் மாய்ந்திடவிதித்தோன்வாழி.

அரிச்சந்திரன் சந்திரவதியை வெட்டுகிறபாகம்.



வசனம்.

என் பிராணநாதா ரவிகுலத்தில பிறந்தமன்னர்கள் வினையால் விளைந்த துன்பங்களையனுபவித்துபலதருமங்களையுஞ்செய்து தங்கள் கீர்த்தியை நிலைநாட்டியல்லோ மாண்டபேரமபதவியடைந்தார்கள் அவ்வாறே ந்ருமதுகிர்த்தியை நிலைநிறுத்தஎன்னைவெட்டுவீர்பிராணநாதா

ஆரிச்சந்திரன்-வசனம.

அப்படியேவெட்டுகிறேனடி என்கண்ணே

பொது-விருத்தம்.

மன்னனுமாதுதன்னை மனக்களிப்புடனேவெட்ட
மன்னனும்வாளையோங்கிமயானத்திநிற்குங்காலை
மன்னவனிலையைகொஞ்சம் மாற்றிடசெயயவெண்ணி
மன்னவன்முன்னேவிஸ்வா மித்திரன்தோன்றினனே.

வசனம்,

கேளுங்கள் சபையோர்களே யிவ்வாறுசந்திரவதியை வெட்ட அரிச்சந்திரன்வாளையோங்குங்காலை அவனிலையை யுணராமல்விஸ்வாமித்திரன் தந்திரமொழியாடுகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

விஸ்வாமித்திரன்-தரு-அடாணா-ஆதி.

பல்லவி

பொறுப்பாய்மன்னா இதோநான்
புகட்டுறேன்தந்திரமாற்றுறேன்பதறநீபோகாதுகாண்மன்னா

அநுபல்லவி.

தருமகுணம்போனற தையலுகதிர்தவிதி
தாக்கியவாரதனை தடுககவில்லையோமதி பொ

சரணங்கள்.

கொல்லுஞ்சந்தோஷமோகங்கொள் துயர்நரகமென்றே
கூறுமறைபின்மொழி கொள்கைவிடுத்தாயின்றே
நான்றேமாதுகழுத்தை நறுக்கத்துணிந்தாயுன்போ
னுட்டிலொருவருமில்லை நயந்துகேளென்றன்சொல்லை. பொ

அத்திசெயவதிலெல்லா மறுப்பதுபெண்ணைப்பெரும
அடாதபாதகமென்றே யறியாமற்போனுயிரு
நத்திவந்தவருக்கேநல்கும் வாரிதுதானோ
நாயமோயிவ்வழியை நாடாதேபெண்பழியை. பொ

தத்தஞ்செய்தபொருளைத் தருகவில்லையென்றே
தானுரைக்கிலுனக்கே தந்திடுஞ்சுகமின்றே
பெற்றமகன்வருவான் பேதைதுன்பமகலும்
பேணுவாயென்றன்மொழி காணுவாய்நல்லவழி, பொ

அரிச்சந்திரன்-தரு-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

போய்போம் இதுவுக்கனமா யெனக்கேபுத்தி
புகட்டுவதிந்த தினமா

அநுபல்லவி

தாம்பழிசுமந்ததுந் தனயனைத்துறந்ததுந்
தானேயறிந்துமிக்கே தணிவாயுரைக்கவந்தீர் போ

சரணங்கள்,

நாடுநகரம்வீடும்நல்லயணிதளமும
நயமுடனீரிக்கத் தநதேன்மனம்
வாடுமபடிக்கேய்ன்று வகுத்தகாவியத்தொட்டு
வளர்காசிமாதுடனே வந்தேன்
பாடுதரகன்செய்யப் பதைத்தென்மனங்கனிந்து
பத்தினிதன்னை நானேபரங்காய்விற்றதறிந்து போ
தரகன்கூலிக்காயென்னைத் தான்பற்றிவருந்திட
தாழ்ந்தகுலத்திற் காளாய்நின்றேன் உம்மால்
கரமதிற்சூரிதாகதி கன்றுகுட்டியறுத்தேன்
கால்வேறுதலைவேருய் அன்றே
பரமனைப்பணிவோரே பதியாய்ச்சுடலைதந்தீர்
பகரொணுகோரங்கண்டு பாசாங்குபேசவந்தீர் போ

கொடுத்ததையிலலையென்று கோரமொழியென்னுவால்
கோணுதுரைக்கமனங்கொள்ளேன் நான்
எடுத்தவிரதமதை யிவ்வுடலழியினும்
இனியொருக்காலும் பொய்யைவிள்ளேன்
தடுத்துத்தடுத்தேயின்னும தான்சோதிக்கவுமானீர்
தரமோவுமககேமேன்மைதருகாதெண்ணுமற்போனீர் போ

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்படியே நல்லதப்பா அரிச்சந்திரா

அரிச்சந்திரன்-தரு கேதார-ஆதிதாளம்.

பல்லவி.

இது தகியே சினைத்துதியே

அநுபல்லவி.

சதியேபோக்க விதியே
காந்தனே மோனப்பாந்தனே
சாந்தனே சேந்தனே

சரணங்கள்.

மாதையே இப்பேதையே
வதையேவெட்டக் கோதையை
வாடினேன் உனைத்தேடினேன்
கூடினேன் இதோபாடினேன்
நாடினேன் ஆடினேன் (இது)

மங்கையே என்னங்கையே
இங்கையே நீங்கிச்சங்கையே
ஏங்கினேன் மயல்நீங்கினேன்
தாங்கினேன்வாள்வாங்கினேன்
ஓங்கினேன் பாங்கியே (இது)

கையனே வளர்சையனே
மெய்யனே மோனமையனே
வேதியை யருட்சோதியை
நீதியை முன் ஆதியை
ஞாதியை ஓதுவாய் (இத)

நாதனே காசிப்பாதனே
நீதனே சதுர்வேதனே
நாடுவாய் பெண்ணே ஆடுவாய்
ஓடுவாய் பதிதேடுவாய்
தேடுவாய் கூடுவாய் (இத)

சத்தியகீர்த்தி சாமாசாப்பு.

மான்மழுவேந்திய நான்மறையேத்திடு
மோனகுருபரனே
மதிதரனே அதிபரனே
மானனே விதிகாணனே யிதுதோணனே தோ தோ

அன்னே தனேயிங்கு மன்னன்கையால்வெட்ட
என்னமதிகொடுத்தாய்
அறிவெடுத்தாய் குறிதொடுத்தாய்
ஐயனே அருள்மெய்யனே மனம்நொய்யனே நொ நொ

தந்தையடிமையாய் தாயுமூறிபட
தனேயனுயிர்பறித்தும்
தனேவெறுத்தும் உனேபொறுத்தும்
தாகினுய் துயராக்கினுய் வினேநோக்கினுய் நோ நோ

உத்தமாவென்றனே பெற்றவள்வெட்டுண்டால்
பித்தனேலோகமுண்டோ
பேருமுண்டோ சீருமுண்டோ
ஓதுவா இங்கு சேடிவா மனமநாடுவா நா நா

அரிச்சந்திரன் வசனம்.

அடிமாதே காசிவிஸ்வேசனுடைய பாதத்தை தியானித்துக்கொண்டுன் முடியை நோய்க்குனிவாயடி என்ரத்தினமே.

சந்திரவதி வசனம்.

அப்படியேகுனிந்தேன் சந்தோஷமாய் வெட்டுவீர் என்னருமை துரையே,

அரிச்சந்திரன் விருத்தம்,

அரகரசிவமேசம்போ யாதியேயுமையாளோடுங்
கரமதிற்சூலமேந்திக் கந்தனையளிந்தநேயா
சிரமதுவிழ்வேயென்றன் செல்வியைவெட்டுகின்றேன்
குரவலாயிவளுக்குன்றன்பொன்னடியளிப்பாய்போற்றி,

வசனம்.

ஓம் அரகரசிவசம்போ சங்கரமகாதேவா சச்சிதானந்தமூர்த்தி என்னருமைப் பெண்ணாளாகிய சந்திரவதியை ஆண்டையினுத்திரவின்படி யிதோவெட்டுகிறேனிவளுக்குன்னடிகாட்டிக காத்தருள்வாய் கைலைநாதா,

பொது விருத்தம்,

மன்னவனுக்கயிறுபற்றி வாளையோக்கி
மாதுதனைமுடிகுனியச்செய்துவெட்ட
தன்னகத்தாற்சதிபுரிந்த விஸ்வாமித்திரனை
தானொரும்பொலாளிக்கிருந்து கண்டுமேப்போ
தின்னமிவனிலையதனை யறிவோமென்று
இறைவனுடையவாளதனை யோலைபோல
அன்னநடையாள்கழுத்திற் சுற்றச்செய்தா
னயோத்திபனுங்கண்டு மனம்வாடுவானே,

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அரசன் ஓங்கி வாளினுல் வெட்ட பக்கத்தில் ஒளிததிருந்த விஸ்வாமித்திரன் மாய்கையால் வாளானது சந்திரவதிகழுத்தில் ஓலைப்போலசுருட்டிக்கொள்ளச் செய்தான் அதைக்கண்ட அரசன்வருத்தப்படுகிறவிதங்காண்பீர்கள்கனவான்களே

அரிச்சந்திரன்-விருத்தம்.

என்னடிமாதேசெய்தாய் யெனக்குமேதோன்றநீதான்
பன்னடிகற்பிலேதும பழுதுண்டோவலதுயாதோ
மின்னடிதேகமின்று மெலிதலோடுளமுஞ்சோர்ந்து
மன்னநான்சத்தியம்பொய்க்க மார்க்கமேவந்ததையோ

வசனம்.

அடிபெண்ணே யிதென்ன நீ ஏதாகிலுங்கற்புமீறி நடந்ததுண்டா என்வெட்டுக்குத் தடைவந் காரணமென்ன என் மனம் பதறுகின்றது சீக்கிரஞ் சொல்லுவாயடிகண்ணே.

சந்திரவதி-விருத்தம்.

அரசனேயெனதுகற்பி லணுவினிலணுவும்பேதம்
சரசனேநடந்ததில்லை சண்டாளமுனியின்சூதோ
புரவலாநிலையிலேதும போந்ததோர்தோஷங்காணேன்
பரன்வசம்நிறுத்தியெண்ணம் பண்புடன்வெட்டுவீரே.

வசனம்.

சுவாமி என்கற்பில் யாதொருகுறையுமில்லை யுமதுநிலையில் ஏது தோஷமோ அல்லது கௌசிகமுனியின் சூதோ நீர் பரத்தின்பேரில் மனம் நிறுத்தி வெட்டுவீர் அரசே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்,

ஏனப்பாவினுயிந்த யிம்சையுந்துனபங்கொண்டாய்
தானதாய்கொடுத்தநாட்டைத் தந்திடென்றுரைப்பாயாகில்
ஊனமொன்றில்லாவிகுகு வுன்மனையாளும்பாலன்
தீனமோடுலகில்வாழத் திருவெலாமீவேன்கண்டாய்

வசனம்,

அப்பா அரிச்சந்திரா! ஏனிந்த துன்பங்கள் படுகின்றாய் எனக்குக் கொடுத்த நாட்டை யில்லையென வாங்கிக்கொள் நானுனக்கு சகலசம்பத்தும் வரச்செய்கின்றேனப்பா ராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஐயனேசத்தியங்கொண்டே யடாதபொய்யதனைச்செப்பி
வையகந்தனிலேவாழ வணங்குவோருமைப்போலொக்குந்
துய்யவென்னிலையைநாட்டத் தோகையையிருதுண்டாகக்
கொய்யுவேன்குறுக்கேபேசிற் குணமுண்டோவுமக்கேபோற்றி

வசனம்.

சுவாமி பொய்பேசி வாழ்வைகோருபவரும்மைப் போலொக்கும் என்சத்தியம் பிசகாமல எனதுகரத்தால் தேவியை வெட்டுவேன் குறுக்கேபேசவுமக்குத் தகாதென்றெணணிப் போவீர் முனியே

சந்திரவதி-விருத்தம்.

மேகத்திறந்தோன்றிமாயு மின்னற்போனிலைமையில்லாத்
தேகத்தைநம்பிச்சத்திய மிழப்பவருமைப்போலாவார்
யோகத்திலுயர்ந்தநாதாவுன்மனங்களிக்கவெந்தன்
சோகத்தைவிடுவேன்றீராப் பழிசுமந்தேகுவீரே

வசனம.

சுவாமி முனியே இந்தவுடல் மின்னலைப்போ லொத்தது வுமது எண்ணங்களிக்க என்றிரேகத்தை யிறையிடுகிறேன் நீரென்பழியைச் சுமந்தலைவீர் தூரப்போம் முனிநாதா.

சத்தியகீர்த்தி-விருத்தம.

மகிபனேகாதகன்சொல் முனைதினினிறுத்தலாகா
அகிலமீதுமதுசத்திய மாணிபாயமறையவேணுந்
திகிலதுபோக்கியுந்தன தேவியைத்திருப்பிவெட்டி
முகிலுடன்முடியும்விழ முதற்பதியடைவீர்போற்றி.

வசனம்,

கேளும் மகாராஜனே யிந்தமோசவெண்ணமுடைய முனியின் வார்த்தைக கிடங்கொடாமல பென்தாயின்முடி தரையில்விழ வெட்டிகீர்த்தியை நிறுத்தி திவ்வியபதவியை யடைவீர் வேந்தனே

சத்தியகீர்த்தி விருத்தம்.

பாதகவிஸ்வாமித்திர கனிவிலாமுனியேகற்றுப்
பாதகவினையிருந்தாற் பண்புடன்புரியலாகும
வேதனைதனைகேயஞ்சோம் வேந்தலின் றுறுதியாலே
மாதவநெறிகுலைந்தாய் மயக்கமேனடைந்திடாயே.

வசனம

ஓவிஸ்வாமித்திரமுனியே யின்னமேதாகிலும் வஞ்சகமிருந்தால் காட்டிவிடும கொஞ்சமும்அஞ்சமாட்டோம் சந்திரவதியம்மன் கற்பினுல் நீ துயரத்துக்குள்ளாவாய் முனியே.

சந்திரவதி-சரு-உசேனி-அட தாளம்-சாப்பு.

என் ஜென்மம் பெண்களின் ஜென்மம
இட்டதேதுன்பம என்றன் விதி—எ

மன்னன்பணியிலொன்று மறுத்ததில்லையேயென்றுந்
துன்பத்திற்கெனைவிட்டதே என்தன்விதி—எ
வெட்டினவுடன்தலை விழுத்தாமல்வாளதைச்
சுற்றவிட்டதேகன்மம் என்தனவிதி—எ

சத்தியம்பிசகிடாச் சார்ந்துநடந்துமெய்யன
கத்திக்குத்தடைசெய்ததே என்தன்விதி—எ
உத்தமகாசிவாழ் உம்பனேயுன்றுதோ
மூற்றுஞ்சோதிக்கவிட்டதே என்தனவிதி—எ
என்னைசோதிக்கப்போமோ வெறியுதேயுடலிதோ
பன்னகாதுணிந்திட்வே என்தன்விதி—எ
ஆச்சியென்விரதம்பொய் யாச்சுதேயடியேனுன்
தாசனுண்ணியமதைவிடவே யிதுதநி—எ

சந்திரவதி-விருத்தம்.

மன்னனேயென துச்த்திய மகிபனேயுன்றுள்போற்றி
என்னருநிலையுமஆகுதி யிணைபடிமனதிலவைத்தேன்
உன்னருள்கடவுள்பாத முறுதிகொண்டோங்கிவாளா
லின்னமோர்தரமகீர்விசி வெறிந்திடன்முடியைத்தானே.

வசனம்.

என்பிராணநாதா வென்னிஷடதெய்வத்தை நினைத்துக்கொ
ண்டேன் நீருமுமது தெய்வத்தைத்துதித்து இன்னமொருதரம்
வெட்டி என்டியைவீழ்த்தி கீர்த்திபெறுவீர் அரசே.

அரிச்சந்திரன் விருத்தம்,

புவனசராசரவுயிர்கட்கெல்லா பதிபதியே
பசுபதியுன் புகழேசத்தியா
தவம்பெறுமாமுனிவர் துதி பிரணவத்தி
னோங்காரப்பொருளேசத்தியம
புவனிதனிற்பிசகில்லா வாண்மைகொண்டே
னரிசமாயிலது மேற்சத்தியம்
புவயறியாரிவள்கற்பும் சத்தியமே
வெட்டுகிறேன் பன்பாய்த்தானே.

வசனம்.

இக்காரேழுபுவனத்திற் கதிபதியாகிய பரமசிவமே தலசிரே ஷடர்கல துதிஓங்காரப்பாதமே எனதுநிலையை சத்தியமாகவி இவளகற்பும சத்தியமாகவி இவ்வெட்டுகெ இரண்டுதுண்டாக விழக்கட்வது.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தேவிநான்வெட்டவாளுன் றிகழ்பெருங்கழுத்திலேயோ
தாளிபூமாலையாகத் தானவிழ்வதெனனேநானேன்
பூவின்மேலரிகள்மேவும புகழ்முதன்மாதேயிந்தப்
பாவனையெதுவோதோற்ற பன்னடிபரிவாற்குனே.

வசனம்.

பெண்ணே சந்திரவதி நான் வெட்டிய வாளானது உன்கழுத்தில் பாரிஜாதமாலையாய் விழுந்தது இதென்னஅதிசயம சொலலுவாயடி பிராணநாயகி.

சந்திரவதி-விருத்தம்,

வேந்தனேவிண்ணில்வாழும் விமலர்கள்விளைத்தமாயங்
காந்தனேவேறுபெண்ணைக் கருதிடப்போகாதெந்தன்
பாந்தனேயவர்மேலாணை பகர்ந்துநானிற்பேன்கோப
சாந்தனேவெட்டியெனனைச் சாற்றுவீர்கீர்த்திபோற்றி.

வசனம்,

என்பிராணநாதா இதுதேவதைகளால் நடந்தபுதுமையாயிருகிறது இதோ நான்அந்த தேவதைகளின்பேரில் ஆணையிட்டு மறிததுநிற்கிறேன் நீர்மனந்தளராமல் பரமசிவத்தைத் தியானஞ்செய்து வெட்டுவீர் அரசே.

அரிச்சந்திரன்-வசனம.

பெண்ணே அப்படியே நான் ஒரு நினைவுடன் வெட்டுகின்றேனடி உத்தமியே.

சந்திரவதி-விருத்தம்.

அட்டதிக்குப்பாலகரிணடிமேலாணை
ஆதிசிவமுமையவளி னடிமேலாணை
சிட்டிசெய்மாறமுகச் செமமலாணை
செழுமையுறுமலக்கிரகர் பாதமாணை

கட்டமதைப்புரிவித்த கவுசிகன்மேலாணை
 ககனமுளதேவாதி தேவராணை
இட்டமுடனேவாளால் வெட்டியிகு
 யெரிகுவிரிரவியபெருமை பெறுகுவிரே.

வசனம,

அட்டதிக்குப்பாலகர்காள், பரமசிவன், பார்வதி, சுப்ரமணியன் நவக்கிரகங்கள். விஸ்வாமித்திரமுனி, முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாறபத்தெணணாயிரம ரிஷிகள முதலானவர்கள்பேரில ஆணையிட்டேன் இனிவெட்டுமே எனபிராணநாதா.

ஆரிச்சந்திரன்-விருத்தம்.

அம்பிகைமணாளனுன டரியராசுரர்களொப்ப
வம்பனுமித்திரன்கூறும வாடிடுதகினியேநாளும்
நயபினேனுனசத்தியம நாயகியகிழ்த்தேனுளளங்
தும்பினேனிலையினுலே தயங்கிகிறேன்குனிகுவாயே,

வசனம.

பெண்ணே உன்சத்தியத்திற்குமெச்சி நம்பினேன் இதோ வெட்டுகின்றேன் குனிவாயடிமாதே,

மயானகாண்டம-முற்றிற்று.



உ

முருகன் துணை.

மீட்சி காண்டம்.

பொது-விருத்தம்.

இவ்விதமிவர்கள்சத்திய மியப்பியேகொலைபீடத்தில்
ஒவ்வவேயிருவரொத்து ஒருமையாயுணர்வுகொண்டு
வெவ்வியேவேந்தனவாளை வீசிடும்வேளைதன்னிற்
கவ்விடப்பரமன்வந்தே கைதனைப்பற்றினனே

வசனம்

கேளுங்கள் சபையோர்களே இவ்விதம் சந்திரமதி சத்தியமிட்டுக்குனிய அரசன் வாளையோங்குந் தருணத்தில் பரமசிவன் பார்வதி சமேதராய்ஓடிவந்து தனது அன்பனுடைய கையைப்பிடிக்கிற விதங் காண்பீர்கள் கனவான்களே.

பரமசிவன்-விருத்தம்.

அரிச்சந்திராவோடிவந்தேன் அரிச்சந்திராபதறவேண்டாம
அரிச்சந்திராநீயேசத்தியன் அரிச்சந்திராநீயேநித்தன்
அரிச்சந்திராநீயேயன்பன் அரிச்சந்திராநீயேயின்பன்
அரிச்சந்திராகையைத்தொட்டேன் அரிச்சந்திராபொறுத்திடாயே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா நீயேசத்தியன் நீயேநித்தியன் நீயே அன்பன் இதோநானுன் கையைப்பிடித்தேன் பதறாதே பதறாதே பக்தனே.

கட்டியக்காரன் வசனம்.

சுவாமிமகாராசன் புகழைக்கொலை செய்தவளை சிரச்சேதஞ் செய்யும்படி வேந்தனுக்கிளையிட்டாரே யானை வீரவாகுகொணர்ந்து தன்னுடைய ஆணின்வசமொப்பிக்க வவன் வாளையோங்கி வெட்டுங்காலை பரமன்வந்து தோட்டியின்கையைப் பிடித்துக்கொண்டாரந்தவதிசயத்தைவந்து காணுபீரையா,

காசிமந்திரி வசனம்.

அப்படியே வருகின்றேப்பா கட்டியனே

அரிச்சந்திரன் தேவாரம்.

விடையாச்சுடலைப்பொடிப்பூசும் விமலாமழுமான்மதிநதிபூசுஞ்
சடைமீதணிந்துபிரமெரித்த சம்போவன்பர்தயாநிதியே
கிடையாதிருமாலயன்றனக்கே கிட்டாவெளியேகிளரொளியே
படையாயுமையாளொளிபங்கா பதியேயிவனுன்னடைக்கலமே.

இதுவுமது.

காப்பதுன்கடமையென்றே கதறினேன்கையிலைவாசா
தீர்ப்பதுசமயமகாலுந் தெரிசிக்கவந்தாய்போற்றி
பார்ப்பதுஎனைநீயல்லால்பரனேவேறொருவருண்டோ
ஏர்ப்பதைக்கனிவிகூர்ந்தே யிவனைரக்ஷிப்பாயே.

அரிச்சந்திரன் தரு கன்னி மோகனம்

இப்படிக் கைபிடித்தால் எப்படியிலே
தப்பிடி லெனக்குவரை கப்புமேதேவே
செப்புவாய் வெட்ட ஒப்புவாய்நாதா
இப்புவியி லுப்புகொளுந் தொப்பைதானுமே
குப்பியின்றி செப்புசிலை யொப்புமோதேவே
துப்பறவு மேல்ப்பானே அப்புமோயெங்குந்
தூயனே அருள் நேயனேவிடு (இ)

சத்தியமே நித்தமென பித்தனேதேவே
சுத்தமுடன் சித்தமதில் வைத்தேனேதேவே
இத்தருணம் கத்தரித்த லுத்ததோலோகம்
ஏசுமே என்னைப் பேசுமேவிடு (இ)

தத்தமிட்ட நத்தமதை சுத்தனேநாதா
பத்திடி லசுத்தமாகு முகதனேதாதா
உத்தமியை பத்தியுடன் கத்தரிக்கவேவரம்
ஈட்டுவாய் அருள் நாட்டுவாய்இனி (இ)

அந்தமுள சுந்தரியின் கந்தத்தையேநாதா
வந்தயினை பெந்திடவே கொந்திடவுமேபாதா
மந்தரத்தோர்விந்தையுடன் என்னைப்பேசமன
மார்க்குமே வினை போச்குமேஇனி (இ)

அரிச்சந்திரன்-கண்ணி-தேசிகதோடி-ரூபகதாளம்.

சம்போசதாசிவா எனைச் சாரவந்தவா
உமைபருணாரபவா வுமை மகிழ்ந்தவா
ஆலமுண்டவா ஞான அருமைபூண்டவா
காலகண்டவா கனத்த தாண்டவா
மூலரூபமே ஜீவ மோனதீபமே
தேர்லபாவமே துதிக்கும் நாவமே
கங்கைநாதனே மோன கிருபைபோதனே
சங்கைவேதனே சர ணம்பாதனே
சூலப்பாணியே சொக்கு சூழ்த்திணுணியே
காலவேணியே கண்டேன் பூணியே
காளைவாகனு உமை கருதுமபோகனு
வேளைமோகனு விஷத்தின் தாகனு
ஞானசூத்திரா நாடும் மோனபாத்திரா
தியானநேத்திரா கிளருஞ் சத்திரா
எங்குந்தாண்டவா திங்க ளிமைபூண்டவா
சங்குகொண்டவா சரள முண்டவா

சந்திரவதிதேவாரம்

ஆகூதிநீகிளத்தி அம்பா ஆனந்தவீரிசூலி
பேச்சினிரூபிமாதா பிங்களிகுமரியன்பர்
வாகூதிகீசயிலேயீசன் வளரிடவாமூமீ
ஞாக்ஷிசீயயுமையேயுனறன் நலலடிநமஸ்துதாயே.

இதுவுமது,

சுந்தரிநீலிகௌரி சொல்லுமுக்குணத்திகாளி
விந்தரிவாலைசோதி வேதகிலிமலிசத்தி
மந்திரியுமைவராகி மாதவிஅம்பாதேவி
அந்தரிலோகமாதா அடியாளையாட்கொள்வாயே.

சத்தியகீர்த்தி-தேவாரம்.

நஞ்சதையுண்டதூய நாடிஞேம்நமசிவாயா
தஞ்சமநீயல்லால்வேறு தயாநிதியறியோயநேய
நெஞ்சதுவாடிவேந்தன் நிதிபதிமாதுபாலன
அஞ்சலாலிழந்தநாளும் அடிமையாயினேனே,

அரிச்சந்திரன்-நாணக்ஷா.

ஆதிமூலப்பொருளோ ஜோதியொளியோனே
ஓதிப்பணிந்தேனைகுருவே பாலன்
ஏதினிதான் மருவே
பாதிமதிதரித்த நீதிவோக்கரனே
ஆதரித்தாலதிருவே இனி
சோதிக்காதேகுருவே மிந்த
மாதினையாள்திருவே ஓம்—ஆதி

அரியயனமரர்கள் பிரியமாயேத்திடும்
கரியுத்தலோகா வெள்ளி
கிரிமித்தவாசா வெள்ளி
திரிபுரந்தனையன்று கரியதாயெரித்திட
தேவியுமையாபாக பாலன்
மரிகவிட்டாய்போகா நிலை
தரிக்கச்செய்வாயோகா ஓம்—ஆதி

சுராரறக்கருமன்று திரிசிகவிடையவந்த
கரளமுண்டநாதா நாங்கள்
சரணமென்றோம் வேதா
தரணியிலுதித்தது பரனேபோதமுடலே
தான்சுமக்காபாத நலல
வரமளிப்பாய்நீதா என்
சிரம்பற்றியதாதா ஓம்—ஆதி

சீமேற்றுமிள்யதாய் பாரினில்வாழ்வது
தீர்க்கவரங்கொடுப்பாய் முனி
ஆக்கமதைகொடுப் பாய்
கார்முகில்சிரமவாளாய் சிரிநான்விசியே
ணடிக்கக்கரமவிடுவாய் பாலம்
தீர்த்திடத்துணைபடுவாய் சத்தியம்
ஏர்த்திடஅருளிடுவாம் ஓம்—ஆதி

பரமசிவன் விருத்தம்.

மைந்தனே அரிச்சந்திரா நீ மனமிளைத்தளரவேண்டாம
நிந்தைகளுனக்கென்றில்லை நீயுமென்னன்பனுக்கும
இந்தவாறுனக்குத்தீமை எயதிடக்கொடுமைசெய்தே
வந்தவனாரோ அந்த வஞ்சனைத்தெரிவிப்பாயே,



வசனம்,

அப்பா அரிச்சந்திரா நீயொன்றுக்கும் மனங்கலங்கவேண்டாம் உனக்கு யாதொரு குறைவுமில்லை நீயுனனென்பனுக்கும் உனக்கிவ்வாறு கொடுமை செய்தவனை தெரியப்படுத்துவாயப்பா அரிச்சந்திரா.

காசிமந்திரி வசனம்.

அப்பா கட்டியனே யிந்தத்தோட்டியாயிருப்பவர் அயோத்தியையாண்ட யேகச்சக்கிரேஸ்வரராகிய அரிச்சந்திரமகாராஜர் நமதரசன் வெட்டும்படி யாக்ஞாபித்தவள் சந்திரமதியம்மையானதால் நீயோடி யிச்சங்கதியை நமதரசனுக்குத் தெரிவித்தழைத்துவா யப்பா கட்டியனே.

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே தெரிவித்தழைத்து வருகிறேனையா.

கட்டியக்காரன்-விருத்தம்

மன்னவரே கள்ளியென்று வெட்டச்சொன்ன
மங்கைதனைத் தோட்டியுமே வாளையேந்தி
அன்னநடையாள் தலையைக்குனியச்செய்து
அரகராசம்புவென்றே வீசும்வேளை
என்னசொல்வேன் கைலையானோடிவந்து
துன்பமென்னவாததரிச் சந்திராவென்றார்
தோன்றலேயறிவிக்கத் தோன்றினேனே.

வசனம்.

மகாராஜஸ்வாமி, தங்கள் பாலகனைக் கொலைசெய்தவளெனக் காவலாளிகள் பிடித்துவந்தமாதை சிரச்சேதஞ்செய்ய வாக்கினையிட்டவாறு வீரவாகு பாவலனைதன்னடிமைவச மொப்புவிக்க மயானசுடலையில வாளையோங்கி வெட்டும்போது நஞ்சுண்டமூர்த்தியோடிவந்து கையைப்பிடித்துக் கொண்டார் வெட்டவோங்கியதோட்டி அரிச்சந்திரமகாராஜரும் தாங்களாக்கினையிட்டமாது சந்திரமதியம்மையானதால மந்திரிதங்களுக்குத் தெரிவிக்கச்சொன்னார் வேந்தே.

காசிராஜன்-வசனம.

ஆ அப்படியா யென்னகெடுதிசெய்தோம மோசம்வந்தது நேரிட்டதே யிதற்கேது செய்வது காசிராஜா.

காசிராஜன்-விருத்தம்.

அன்னமேநாவலர்கள் மொழிந்தவாறு
யருமகனைக்கொலைசெய்த கள்ளியென்றே
வன்னமாய்வாளளித்து வெட்டச்சொன்ன
வஞ்சியுமேவயோகதிபரின் மாதாங்கணனே
இன்னகரின்கடலைதனிற சகரவர்த்தி
இருந்தடிமையாகி வெட்டும்போது
பன்னகபூஷணபூணனோனவர்கரத்தைப்
பற்றினனுந்தெரிசிப்போம் பரிவாய்வாராய்.

வசனம்,

கேளாய்பெண்ணே நமதுசிறுவனைக் கொலைசெய்தகள்ளியெ
னவெட்டச் சொன்னதோர்மாது சந்திரவதியபயனுஞ் சுடலையிலே
சக்ரேஸ்வரராகிய னரிச்சந்திரபூபதி யடிமைகோட்டியாய் வாளை
யோகதி நமதாக்கினைப்படித் தன்மாதைவெட்டும்போது பரமனோ
டிவந்து கரத்தைப்பிடித்தினாரம நாமபோய தெரிசித்து நமதுகுற்
றத்தைப் பொருக்கமன்றுடுவோம் ஒருவாயடியாதே.

மதனவல்லி வசனம்.

அப்படியேவருகிறேன் பிராணநாதா

அரிச்சந்திரன்-தரு-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி,

சொல்லுவேனாதரவந்தவாறு சொல்லுவென்பொற்பாதா

அநுபல்லவி.

அல்லும்பகலுமுன்றனடியிணைத்தொழுதேத்தும்
அடியனெனக்குவந்த அநர்த்தமுற்றதை சொல்

சரணங்கள்

யாகஞ்செய்திடப்பொன்னை யுன்புடனேகேட்க
அளித்தேன்முனிவருக்கே யதைறவென்றன்பாலிருந்தி
வேகமாய்ச்சென்றேவிலையிலங்கை
விரட்டபன்றியுமவர விழுந்தநீச்சமாதரை
மேவகோபிரெனைத் தாவமருதளிக்க
கோலமுடனேவந்து டாயகௌசிகற்கிறவே,
கொணடார்கவர்க்காசை கோமனாபலதுயர்
கொடுக்கப்பரவிதரகன் கொண்டதாரதயைதவிர்த்தேன் சொல்

முறிகொண்டனை ஐயனே முஷ்கரன்பாலனே
முதைப்பகைபற்றி முள்ளடவிக்கேகி
சிறியவனைசபித்துச் சேரனைப்பாம்புதீண்ட
செலயமாமறிநகத்தாயுறந்நிகைக்கனைகண்டெடுத்தே
சிந்திசுடலையும வநரிடபறையனுளாய்
தந்திடதுணைவேகாசு முந்திடனைமறுக்க
சேயையிங்கிருத்தியே செம்மலிபோனபின்
சிகதிக்காவலாகையிற சிவனேயிவளிங்கெதி — சொல்

இன்னகராள்மன்னனின்ற நற்புதல்வனே
இவள்கொலைசெய்ததாயிதைதலனைமுன்பாய்விடுக்க
துன்னவாவேந்தனும துணிக்களின்சிரசை
துரையேயெண்ணுண்டையிக்கோட்டிவசமளித்தார்
தூயனேஎகருமநிறைந்த மாயனேகௌசிகராலே
நேயனே இக்கெதியானேன்சேயனேவெட்டவேதுண்டாய்
தலைக்கவேயிவளாவி தேன்றலேஆடுவாய்
தொலலுலகிலேன்சத்தியந்துலங்கிட அருளுவாய் — சொல்

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே யிந்தப்பிரகாரம் அரிச்சந்திரன் சொல்லைக்கேட்ட கௌசிகன் நின்றநிலையும பிடித்த கொம்புவிட்டமந்திபோற்குன்றி பரமசிவன் முனவருகிறவிதங்காண்பீர் கனவான்களே.

விஸ்வாமித்திரன் தேவாரம்.

விண்ணவர்க்கதியேபோற்றி விததகப்பொருளேபோற்றி
மணணினாகநிறையேபோற்றி மாதவர்கொழுந்தேபோற்றி
அணணலேபரனேபோற்றி ஆதியேபோற்றிமூன்று
கண்ணனேபோற்றியிந்தக் கடையனேயாள்வாயபோற்றி.

பரமசிவன் விருத்தம்.

மிககடோர்தவங்கள்செய்த மித்திரமுனியேகேளாய்
துன்மொழிபேதேவலோகத்தொல்லையையழித்தநீதான்
அகாரமும்புரியவிரத வாண்மைதான்கொண்டதேது
பக்குவஞ்சரியோ பகருவாய்குணத்தைத்தானே.

வசனம்.

கேளாய் தவமுனியே மெனனுமானத்தை பொழிந்தவனுக்கதே இப்படிசத்திய அரிச்சந்திரனைத் துன்பமடுத்த வுனக்குவந்ததற்றகுணத்தை சொல்லுவேன்முனிவே.

விஸ்வாமித்திரன் விருத்தம்,

என்னருக்கேவோனியப்புவேனிந்திர
னினியநற்சபைநாடியே
ஏகினேனசுக்கிரனக்கினியுமரிகால
னெட்டுதிசையோசைநோக்கி
யன்னருந்தேவர்கோனுலகினிற்சத்யனார்
பகருவீவரனையிட்டன்
றதட்டமாய்தன்சிடனயோத்திபனெனவங்கு
பசுபதிவக்தனந்தான்
சொன்னவர்க்குறைப்பீரெனத்தடுத்தவன்பொய்யன்
சொற்சோருஜாரனென்றேன்
சோமனேபந்தயஞ்சாற்றினோமிருவருஞ்
சோதியுணர்வசிஷ்டன்றன்னை
தன்னகமொடுவெகிட சிறையிட்டுமண்ணூற்று
தானுவேயிமயமேகித்
தத்துமநான்பலவாறுந்துன்பங்கள்பலியாக
தறிந்திதோதவிக்கிறேனே.

வசனம்

பரமசிவமே தேவசபையில் வசிஷ்டன் இந்த அரிச்சந்திரனே சத்தியவானென நான்சத்தியனென இவ்வாறநாங்களிருவரும் பந்தயங்களிட்டு நான்சொன்னமொழிமைநிரூபிக்கவேண்டி பலவாறுதுன்பங்களை அவனுக்கிட்டுமே இவனிலேபிசகாததினால் நான் தலைகுனிந்துழலலானேன் ஆண்டவனே.

பரமசிவன் வசனம்.

நீசெய்ததுன்பங்களை விவரமாய்த்தெரிவிப்பாய் முனியே.

விஸ்வாமித்திரன் வசனம்

அப்படியே தெரிவிக்கிறேன் நாதா

விஸ்வாமித்திரன்-ஆசிரியவிருத்தம்,

மலைதக்கியோசித்துமன்னவன்பாற்சென்று
மறியாகமதுசெய்யவே
மட்டிலாப்பொன்பெற்றவன்பாலிருத்தியே
மாதவா விலங்கையேவி

குளையுளபயிரெலாமழித்திடவினுமே
  கொன்றனன்வேட்டையாடி
கோவேநானிருநீச்சமாதரைவிடுத்திரனைக்
  கூகுடவழைக்கவென்றேன்
தலைவனுமவர்வளை தண்டித்துவோட்டவும்
  தயாநிதிநான்கோபனாய்த்
தான்சென்றுமிவனுடையவர்சுடனியாவத்துந்
  தாரைவார்த்திடக்கவர்ந்து
நிலைபிசகானிடமுன்வைத்தபொருடனை
  நேயனேகொடுக்கவென்றே
நிஜமுளோன்காசியிற்றருவேனெனத்தரகனை
  நித்தனேயேவினேனே

வசனம்.

நாதனே நானிமோத்திரிச்சாரலை யடைந்தபின் னிவடம்வந்து யாகஞ் செய்யப்பொன்கேட்டேன் கேட்டவாற்கொடுக்கனை யிவன்பாலிருந்தி மிருகங்களையேவிப் பயிர்களையழிக்கச் செய்தேனன்றியுமிரண்டு நீச்சமாதர்களையனுப்பி யிவளைக்கூடிச் சுகந்தரவழைக்கச்செய்தேன் மறுதலவன் தெண்டிக்கவிவனுடைய நடுங்கரங்களைக்கைகொண்டு பனைதயாக்கி முனைனியனிடமாகத் திருத்திப்போனபொனனைக்கடனுக்கச் சுமத்திகாசிக்கி யிவனுடன் தரகனையனுப்பினேன் தேவே.

இதுவுமது.

ஏவியதரகனாற் பலதுயரருந்தியே
  யிறைவனுமாதுதன்னை
எண்ணுமல்விற்றுமக்கடனியலரகனு
  மெளகூலிதாவென்னவே
மேவினனடிமையாய் விரவாகுவனுக்கு
  மிழிவானதொழில் புரிந்தான்
மெய்ச்சகவிவன்மாதினைக் கொண்டவன்பணித்தொழில்
  மிகவாயிபற்றவைத்தான்
தாவிடவிவன்மகன் காட்டிற்குபாம்பிறைற்
  றுன்மறித்திடவமைத்தேன்
தயாபராசவமதை மிவளேந்திச்சுடலை
  தன்கவுஞ்சுடுகூலிதான்

கூலியேயிவன்கேட்க காலகண்டர்க்குநான்
கொடாவெனப் போயுரைத்தும்
கொற்றவாவிலனுளமலனுக்கவுங்கௌசிகன்
குழந்தைவாரணறகுமவனே.

வசனம்.

சிவமே நரகனிடமசைக்கஞ்சி பெண்டைவிற்றுக் கடனளித்தான் நரகன் கூலிக்காய்த் தான்பறையனுக்காளானான் யிவன்மகனைக்காட்டிற் பாம்புகடிக்கச் செய்தேன் சந்திரமதி சவத்தைச்சுடலைச்சுங்கூலி கேட்கச்செய்தேன் ஐயரைக் கூலிகொடாதிருக்கச்செய்தேன் தேவே

இதுவுமது,

அரைகுவேன் மைந்தனைக்கள்ளராற்கவர்ந்தமே
அவன்கழுத்தினைமுறித்து
ஐயனேயிவள்வருட்டாட்டையிற்கிடத்திட
அணக்கைகாற்பட்டெடுக்க
துரைமுனமிவள்கொணர்றளைவிட்டியாதினை
தோன்றவேசிரசைவெட்ட
துன்பமாயிவன்கைவசமவிட்டமனதினைத்
தோணறியேசோதித்தேனான்
நிரைகுறையாமலே நினைநன்றன்கொண்ட
நிலைதனிலயான்கலங்கி
நெட்டுயிர்விட்டிங்குவாடினேன்காரியம்
நீக்குனனிவனைவிட்டே
கரைதனிலழியாத சத்தியனிவனுகித்
தானுமேவநான்பாவியாய்த்
தாங்கினேன்பாவதமென்றனையாட்கொளுநன்
றுளடிக்கடிமைநானே.

வசனம்.

பரமேசந்திரமதி. வருகின்றவழியிற் காசிராஜன் குழந்தையைக்கொலைசெய்தாளெனச்செய்து இவன்கையால் வெட்டுறவும் விடுத்துமிவனிலை பிசகாதிருக்கக்கண்டு வசைச்சுள்ளானேன் மன்னித்து ஆட்கொள்ளும் பரமபொருளே.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே யிவ்வாறுவிஸ்வாமித்திரன்தான்செய்வித்த துன்பங்களையெல்லாம் பரமசிவனுக்கு தெரிவித்தான் அப்பால தெய்வலோகத்தில நாரதமுனி காசிச்சுடலைக்கு தேவேந்திரனையழைத்து வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.



நாரதர் விருத்தம.

தேவர்கள்வாழ்ந்தமேபாகத் திளர்களேத்தவாத
மூவர்கள்புகழுயாரு மொழிந்திடவிணையாளுங்
காவலாலயோத்திமன்னன் கைதனைப்பரமன்தொட்டார்
தாவுவோம்வருவீர்நாமுந் தநியினிலக்குதானே.

வசனம்,

கேளும் தேவேந்திரமஹாராஜனே அரிச்சந்திரன்காசிந்தோட்டியாய்மயானத்தில கவுசிகன்மோசத்தினல சந்திரமதிமுடிவிழுவாளால் வீசும்போது பரமனவனகையைப்பிடித்துககொணடார்நாமுமபோய் காணலாம வருவீர்வேநதே

தேவேந்திரன்-வசனம்

அப்படியேவருகிறேன் நாரதமகாமுனியே

தேவேந்திரன் விருத்தம்,

மங்கையேயிந்திராணி மானேகேளயோத்திமன்னன்
நங்கையைவாளைவாளேயோங்கி நறுக்கிடுவேளைபித்தன்
சங்கையைவிலககவேண்டிச் சார்ந்துகைபிடித்திட்டாராம்
மங்கைநாம்செலலவேணடு மன்புடன்வருகுவாயே.

வசனம.

கேளாய்பெண்ணே அரிச்சந்திரன்கோட்டியாகித்தன்மனைவியை கவுசிகன் மாய்கையால் காசிபன்கட்டளைப்படி மயானத்தில்வெட்டும் போது பரமன்தோன்றி கைபைப்பிடித்துக்கொண்டிருக்கிறாராம் நாம்போய் காணுவோம் வருவாயடி பெண்ணே

இந்திராணி-வசனம்.

அப்படியேவருகிறேன் சுவாமி

பொது-தரு-செத்து.

தேவர்கோனுஞ்சுடலைநாடிதேவியுடனே
திங்கள்தரித்தோனைக்காணத்திண்புயத்துடனே
அயோத்திமன்னன் நிலைதனையறிந்தானே
ஆவலுடனரசருமனமுககவுமானே
தன்னெதிரில்கவுசிகன் றன்றனமகாணவே
தாயாநிதியப்புமுன்னே தானுந்தோணவே

தேவேந்திரன்-கவி

அண்ணாமலைகைலைவாழும் ஐயனேயுமையாள்பாகா
வண்ணமாம்விடைமீதேறும வாதியேபோற்றிபோற்றி

வசனம்.

போற்றிபோற்றிகைலைவாழ்வேபோற்றி.

பரமசிவன்-கவி,

ஆயிரங்கண்ணாவாழி அயிராவதத்திலேறும்
நோயிலாமனத்தோய்தேவர் நூற்றிடுங்கோனேவாழி.

வசனம்.

வாழிவாழிதேவேந்திரமகாராஜனேவாழி

இந்திராணி-கவி.

ஆகுதிரூபி அம்பா ஆதவிமூக்குணத்தி
காக்ஷியேதருகுமுன்றன் கழலடிபோற்றிபோற்றி.

வசனம்,

போற்றிபோற்றி பரமேஸ்வரியம்பாபோற்றி

பார்வதி-கவி

இந்திரன்மனதில்நாளு மிருந்திடுமருவேதிவ்விய
சுந்தரன்வதனைநீயுஞ் சுகம்பெறவாழிவாழி

வசனம்.

வாழிவாழி இந்திராணியேவாழி

நாரதர்-வசனம்,

போற்றிபோற்றி பரமசிவமே.

நாரதர்-விருத்தம்.

அன்றுமெத்தவாங்காரமாகப்பேசி
ஐயனும்வசிஷ்டனுடனடமேசெய்தாய்
இன்றுதலைகுனிந்துநிற்கவந்ததேது
இகழ்ந்திடவேசகலருனையெடுத்தாய்கோலம்
நன்றிதுகாண்விணுகப்பழிக்காளானாய்
நாதருடன்முனிவர்களும் நகைக்கலானாய்
எண்டிசையுமபுகழ்பெறுமுர்வசிஷ்டரப்பா
இசைக்குமொழிவசைக்குடமபேயெடுத்தாய்நீயே

வசனம்.

ஓய் விஸ்வாமித்திர முனியே நீதேவசபையில் பேசியபெருமை யெங்கேபோய்விட்டது யிப்போது தலைகுனிந்திருக்கவந்தகாரணமேது சொல்லும் ரிஷியே.

விஸ்வாமித்திரன் வசனம்

தேறியாதகாரணமொன்றுண்டோ தெல்லாநதெரிந்தும் என்னை யிப்படிக் கேட்பதுஞ் சரியோ நாரதரே,

தேவேந்திரன்-விருத்தம்,

என்னகாண்விஸ்மித்திரா விரக்கமாய்தலைகுனிந்தாய்
நன்னதரய்ச்சபையிலன்று நவின்றவுன்வாககின்வாறு
மன்னவன்புரியவிங்கு மமைத்தாயோகெலித்திட்டாயோ
இன்னமேன்வெளிவிடாம லிருப்பதுவுரைசெய்வாயே

வசனம்

விஸ்வாமித்திரமுனியே யும்முடைய பந்தய கெலித்தீரா தெரிய
ச்சொல்லும் ராஜரிஷியே.

விஸ்வாமித்திரன் விருத்தம்,

இந்திரனேயிமையவருக்கரசேயென்ன
இயம்புவேனடியனுடவிறுமாப்பெல்லாஞ்
சுந்தரனேயிருண்டவனமடையலாச்சு
சொற்சோறுகனனவிவனேச்சொல்லலாச்சு
தந்தரம்நான்செய்ததெல்லாம்வீணதாச்சு
தாபமுடன்றலைகுனியுந்தகியதாச்சு
வந்தவர்களெனையேசிவரையலாச்சு
வம்பனென்றுந்தும்பனென்றும்வகையாய்த்தானே

வசனம்.

கேளுந் தேவர்கோனே நான்செய்த பிரயத்தினங்க ளெல்லாம்
வீணதாச்சுஉலகாரென்னை வசையாடவுமாச்சென்றறிவீர் வேந்தே.

தேவேந்திரன்-விருத்தம்

நல்லதுமுனியேநீதா னுடியேதேவர்முன்பு
வல்லமைசெய்தாய்தோற்பில் வதிட்டனுநீயேயாகின்
அல்லலையகற்றியன்று யரைந்திட்டபந்தயத்தை
ஒல்லையில்புரிவீரிந்த உலகவரொப்பத்தானே.

வசனம்.

கேளும் விஸ்வாமித்திரமுனியே தோற்றவர்வதிஷ்டர் அல்லதுநீ
ரா நீர்தோற்றிருந்தால் சொன்னபடி பந்தயத்தை நிறைவேற்றும் ரி
ஷியே,

விஸ்வாமித்திரன்-விருத்தம்

ஏதுநான்சொல்வதினியிறைவர்மேலே
யென்மொழியேயழிவாச்சுதோற்றேனுனே
தீதரியபிரம்மரிஷிகெலித்தோனுகும்
தெரிகுவீரன்றுரைத்தவாறுபோலச்

ஞதறியாவரிச்சந்திரன்றனகசேகாவுஞ்
சொன்னபடியென்தவத்தில்பாதியோடு
மாதவரேயுன்னவனுலவடைந்தநாட்டை
மகிழ்வுடனேயானளிப்பேன்மன்னிப்பீரே,

வசனம்

கேளும் தேவராஜேந்நானேதோற்றவன் ஜெலித்தவர் வசிஷ்டரே நானசொன்னபடி அரிச்சந்திரனுக்கு என்தவத்திறபாதியுமவனிடமிருந்து நான்தரரைகொண்ட நாடுநகரமுதலானவைகளையு மிதோ கொடுக்கிறேன் வேந்தே.

தேவேந்திரன் வசனம்.

அப்படியேசிக்கிரந்தாரைவாரும்முனியே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

எனனமொழியிக்குரைத்தீர்முனியேநாதா
எறியுதேஎனனுடல்பற்றிசெவியினுள்ளே
வின்னலுறநாாாசககாச்கிச்சாயத்து
விடடனபோற்ருேனைறுகையே வெதும்பிநெஞ்ச
மின்னிலத்திலிரந்தவருகீந்தசொத்தை
யெவர்கொண்டார்மறுபடியுமெனக்குக்காணேன்
நன்னயமோநாடாண்டவரசனுகி
நானளித்தபொருளடைதனவிலக்கேளே.

வசனம்.

ஒமுனிநாதா நீரிப்போது சொன்னமொழிகேட்டு என்னுட லெல்லாம்பற்றி நீபணலாயெரிகின்றது வந்திரந்தவருகீந்ததை மறுபடியும் பெற்றுகொண்டவர்களுண்டோ கேளு நாதா

இருவுமது.

நகிலக்கேளவ்வாறுபுரிவேனுகி
நரகம்வருமிம்மைதனி நாட்டாரெல்லாஞ்
சவலமிலானெனப் பலவாறேசுவார்கள்
சற்சனர்களிகழ்வார்சண்டாளனென்றே
தவமணியேயெனைப்பலவாற்றன்பமெல்லாந்
தானருந்தவிட்டதன்றிப்பழியைமுன்னும்
பவமபெறுககச் சுமைசுமதநவெண்ணங்கொண்டீர்
பணிதுவேந்தன்றளித்தநகர்பற்றேன்போற்றி.

வசனம்,

சுவாமிநீர்சொன்னவாறு கொடுத்ததை யிறபடியும் வாங்குபவ னுக்குநரகமேகாணிபாவமே யென்னைய் யவிக்கத் துணைபுக வனுபவிக்க ச்செய்ததும போதாமலினி முனக்குமெனக்கு பாவமூட்டை சும த்த வெண்ணங்கொள்வது தருமமாகெடுக்கப்படுமோவாக்கையுடன்நாதா

விஸ்வாமித்திரன்விருத்தம்

மன்னவனேயின்றரைக்கக் கௌவென்றன்
 மகாயோகதவத்திலேயை மறந்துபப்பா
உன்னகரையாண்டுநிக ரற்றவாழ்வி
 லோங்கிடவும்நானன்று கவர்ந்ததன்றே
நன்னவாக ளறிபவன்றன் குருவுநானும
 நாடியதேவர்கோன் முன்பதாகப்
பன்னியவாறுனையசைத்துப்பார்த்துதேனியோ
 பணபுளோனதிசத்தியனயறறுவாயே.

வசனம்.

அப்பா அரிச்சந்திராநானுன்னுடைகரைப் பரித்துகொண்டிருந் ததிலேயபற்றவாழ்விலிருக்குஞ் சுகத்தையனுபவிக்கவும் நானடைந்திரு க்குமழியாவாழ்வை யிழந்திருக்கவுமகலனிதமனைல்ல தேவேந்திரன முன சொல்லியபடியுனை சோதித்துப்பார்த்தேன நீயேசத்தியனாத லால் உன்னுடைய நாட்டைநீயேபெற்றுக்கொள்வாய் வேந்தே.

அரிச்சந்திரன விருத்தம்.

சரியலவேயிவ்வார்த்தைதகாதுதன்னைச்
சலியாமலந்தணருக்கடிமைசெய்தேன்
இரியவேயென்மகனும்பாமபாலமாணடா
 னின்றுநான்புலேயனுக்காளாகிநின்றேன்
கரியானவிடுகாட்டிற் காவலபூண்டேன்
 கனிவிலாத்தாககனிலைனுதலைக்கண்ணுறறேன்
பரியாசஞ்செயவத்திரயே நதிநாட்டைப்
 பற்றிடேனெனைக்கிலுதானடிகாணமீரே.

வசனம்,

சுவாமி நீர்சொல்வதுசரியோ நானென்னுடைவித்துப் பால னைபாமபுக்கிட்டு நான்பறையனுக்காளாகிபு மிகக்கடுங்காட்டைக்காத் துமறுபடிசெங்கோல் பிடிக்கத்தகுமோ வெனக்கிதேகாணி நீரயோச த்தியையாளுவீர் முனிநாதா,

பரமசிவன் விருத்தம்.

ஒருவரைக்கெடுக்கவேமுவளைத் திரிலைக்கேசத்தியக்
தருமத்தைவிடுத்துமிககத் தகாதன்மோ முந்தவளாகுங்
கருமத்தைச்சுமதாயீயும் கவுநிகுபுளியையாசன்
வருமத்திறகிணநதோரதமமை வாசசெயவாய்யிமைகுதானே.

வசனம்.

கேளாய்கவுசிகமுனியே யுனககுடைந்தையா யிருந்தவர்களை யதி சீக்கிரத்தில் வரவழைப்பாய்முனியே,

விஸ்வாமித்திரன்-வசனம்,

அப்படியேவரச்செய்கிறேன்பரமசிவமே.

விஸ்வாமித்திரன் விருத்தம்,

அன்றிந்திரன்சபைதனிலேல்யடியேன்றங்க
　ளருள்விழியேவணக்கிநிற்கமனைக்களிங்தே
நன்றுசெயவெனக்காகவிண்ணை விட்டே
　நாடியுயர்காசிநகரடைந்தீர்யானு
மன்றுசெயும்வகைபுரிந்தமாயாவேமா
　மாதவத்தோர்பணிசுப்பிரமணியேயன்பு
துன்றவருவீரிக்குவருணுசுக்கிரா
　தொழுதிட்டேனக்கினியேதோற்றுவீரே,

வசனம்.

எனக்கு இந்திரன்சபையில்வாக்களித்தபடி என்கோரிக்கைநடா த்தியஎமதர்மனே மாயவனேசுப்பிரமண்ணியனே சுக்கிரனே வருண னே அக்கினியே தவகள் தங்கள்சுயரூபத்துடன இந்தசுடலே வருவீர் கள்சுவாமிகளே.

அக்கினிதேவன்-விருத்தம்,

அன்னமேமாதேகேளா யருந்தவவிஸ்வாமித்திரன்
சொன்னமேசுந்தரமூர்த்தி சொல்லியவாறுநம்மை
சன்னகமொடிக்கியந்த சத்தியனறனக்கேதோற்றே
இன்னிமையழைக்கலானேகுவோம்வருகுவாயே.

வசனம்.

கேளாய்பெண்ணேசுவாமி அரிச்சந்திரனே யசத்தியனுக்க தான் கொண்டவெண்ணம் நிறைவேறுமல்சுடலேயிற் பரமசிவன்முன் கவுசி கன்றலேதுனிந்தவனுய் நம்மையக்குசுயரூபத்துடன்வரக் கோறுகின்று ன்வருவாயடிமாதே,

வசனம்,

அப்படியேவருகின்றேன்பிராணநாதா

அக்கினிதேவன்-தரு-சாவேரி-ஆதிதாளம்,

பல்லவி,

எக்கினேசுரன்　　　　நானே

அநுபல்லவி.

இமையவர்முனிவர்களனைவருமேற்றிடும்

சரணங்கள்.

வேதமுதலறிந்தோர் மற்றும்,
விளங்குநெறிபுரிந்தோர்
போதமிலையுணர்ந்தோர் யோகப்
புனிதநடையிற்சிறந்தோர்
மாதவர்ஸ்ரீதரர்மன்னவர்தைத்தியா
மனங்கனிந்தேதுதிக்க மகிழச்செய்வோனை-எக்

எமதர்மராஜன் விருத்தம்.

கேளடிமாதேநம்மைக் கிட்டிடச்சுடவேதானே
தாளடிதொழுதேயந்தோ தவிக்கிறான்முனிவன்றனும்
நாளடிமுடிந்ததிப்போ நலமபெறவயோததிமன்னன்
தோளாதுபெருநீதி தொல்லுலகாளுவானே.

வசனம்,

பெண்ணேசாமலா அரிச்சந்திரனுக்கு நல்லகாலம் வந்து விட்டது கௌசிகன் தன்கெர்வமொடுங்கிப் பரமன்முன் தலைகுனிந்துநம்மை வரும்படி வேண்டுகிறான் போவோம்வருவாயடி கண்ணே.

சாமலா வசனம்.

மகாசந்தோஷம் அப்படியேவருகிறேன் சுவாமி.

எமதர்மராசன் மோகனம்-ஆதி.

கண்ணிகள்.

வாராரிதோதருமனும் வனிதையுடனே
யாராளுமன்னனின்றுயர் பக்கத்துடனே
கொண்டபறைவேடம் நீக்கிக்கோதைமேல்
அண்டர்கள்பரமன்னடியைத்தாவவே
பத்தினியின்கொள்கையாலே பரமன்பாருமே
நித்தியன்றனைபிடித்த நேர்மைதோருமே

சுப்பிரமணியர் கண்ணி.

வாராரிதோகுகநமசிவாயதேவனும்
சீராயரிச்சந்திரன் றுயர்சிதைக்கபாலனும்
பூலோகமும்புனிதமேவர் புகழும்பாதனும்
சாலோகசாமீபந்தருஞ்சாமிநாதனும்
வேலாயுதமோங்கிடவேவிமலன்காணவும்
பாலவாவெனவுமித்திரன் பணிந்துகாணவும்
நாகமாகத்திண்டியதோர்நயத்தைக்காட்டவே
லோகமதின்மன்னன்புகழோங்காட்டவே,

மகாவிஷ்ணு கண்ணி,

வாரணகிரிசோலைகுடிக்கதிலவாழுமாயனே
நேராயவோர்சொன்னவாமனாத்திக்கநேயனே
தேவர்களுமூவர்களுந்தினந்தினமேத்த
ஆலிலுடனமைப்பாசனத்துடனேபோற்ற
கள்ளனுமிக சிநேகனு கவிமையமாயநவன்
வள்ளலமுன்புதோன்ற அன்பர்வருமைதீர்த்தவன்,

சுக்கிரன் கண்ணி

கையைக்கட்டிப்பிரோதசுக்கரன்கணக்குறைந்துமே
கடுகவாரான்படந்தஜலகண்ணேர்நிறைந்துமே
முனியின்சொன்னமொழியைக்கேட்டுமுனிந்தநாடியே
மூர்த்திமுன்னேதோன்றமனமுருகவாடியே
பதிவிரதைகயைவிற்கச்செய்தபாவமெண்ணியே
பார்வதியின்கோபமாகப்படியாபுண்ணியே
காசிநகர்சுடலையிலினிக்கணத்திற்றேற்றவே
காவ்குவிந்தேபரமனடிகணடுபோற்றவே.

பொது விருத்தம்.

கவுசிகன்றன்முறையிடவுமவரவேசொல்லிக்
காலனுக்தன்மாதுடனேவருகலானுன்
தவிழ்நிர்த்தேயுவுமோடெண்ணினல்லா
டனேனுடுமொடுமாலும்வெளிதானும்
மவுனிகளுகளுன புரியுமகுமரேனும்
மயிற்றெரிவேலோதிமகிழ்ச்சியோடு
நவிலொனுசத்திடனதுநிலையைக்காண
நாடியேசுடலைதனைநண்ணினரே.

பொது-வசனம.

கேளுங்கள் சபையோர்களே விஸ்வாமித்திரன் முறையிடக்கேட்டசுப்பிரமணியனை மாயனை யமதருமன் அக்கினிதேவன சுக்கிரன் முதலானவர்களுஞ் சுடலைவந்து பாலனே வணங்குகிறயிதுன காணயீர்கள் கனவான்களே.

தேவர்கள் கவி,

எங்களைமுன்னுட்காக எவ்வணிபவிஷத்னையுண்ட
மங்களவுமையாளபாகா மலரடிபணிந்தோமபோற்றி

வசனம்.

போற்றிபோற்றி எங்களையாட்கொண்டபரமசிவமே

பரமசிவன் விருத்தம்,

காலனை நருமந்தன்னைக் கண்டவாவாழ்மரியா
சீலனேவாழிஜோதிச் செகம்புகழ்தேயுவாழி
ஞாலத்திற் பெருமைபூண்ட நல்லசுக்கிரனேவாழி
வேலனேயூரவாகா வெந்தையே வாழிவாழி

வசனம்.

வாழிவாழி யென்தன்பர்களே வாழி.

தேவதாஸ்திரி கவி.

அம்மையேயுமையேசர்வ ஆதியேமோனரூபி
நம்மையே யளித்துக்காப்பாய் நாயகிபோற்றி.

வசனம்.

போற்றிபோற்றி யெங்களிறைவியேபோற்றி.

பார்வதி கவி.

சாமலாவாழிவாழி சான்றவர்காதியான
சேமனின்மாதேசுவாலா நீடூழிகாலம்வாழி,

வசனம்.

வாழிவாழி யென்னன்புக்குரிய கண்மணிகளே வாழி.

அரிச்சந்திரன்விருத்தம்.

நாயினுங்கடையனென்னை நாடியேசுவர்க்கம்விட்டு
நோயுறுஞ்சுடலைவந்த நுவலருமமர்கோவே
தாயகம்போன்றமாலே தாறுவேடங்கவேளே
காயமோவனித்தியங்கண்டேன் காலனேதேவேபோற்றி

வசனம்.

சுவாமி சுப்பிரமணியரே மாயநாரிமாதவா குமரோ அக்கினி தேவே இந்திரதேவே சுக்கிரபகவானே சுவர்க்கம்விட்டுநாயினுங் கடையனனென்னை யிக்கோலமாய்ப்பார்க்க சுடுகாடு வரப்போமோ அடியேனைக்காண்பீர் நாதர்களே.

தேவர் விருத்தம்.

திரிசங்குமைந்தாநீயே திகழ்தரும்பெருமைபூண்டாய்
திரிசங்குமைந்தாநீயே தேசத்திற்சத்தியனானாய்
திரிசங்குமைந்தாவுன்றன் தேவியேபத்தினியாளாள்
திரிசங்குமைந்தாவுன்றனி தெளிவுள்ளான் காண்பாய்வாழி

வசனம்.

அப்பா அரிச்சந்திரா நீயே சத்தியன் உன்தேவியே பத்தினி உன்மந்திரியே யுத்தமன் உன்பெருமை மற்றெவருக்கு மில்லை சதா வாழி வாழி அரசே,

சந்திரமதி விருத்தம்.

இந்திரன் மனக்காதற் றேரியம்மா
யிணையிலாக் கருணையுளதா தேசுவாலா
சுந்தரத்தில் மிகுந்தவளே தருமன்மந்தவி
சேரம்பிரான் சண்டாளி பாவிபாவி
வந்தகள் காடுமூந்து மகிமையாகி
யென்றுமான்றனைப் பாம்புக் கிட்டுமையா
வந்துநின்றேன் வெட்டுறவே கள்ளியென்று
வளர்சுடலை யென்பொருட்டு வருவதன்றே.

வசனம்.

அம்மா சுவாலாதேயே காவலர் அம்மணி இந்திராணியே இந்த பாதகியாகிய கள்ளியைக் காளைந்தாங்களிந்த சுடலைவருதலடுக்கு மோ தேவிகளே.

வேலந்திர் விருத்தம்.

அங்கமேமூண்டாய்சத்தியம் ஆணியாயவறைந்தயப்பத்னி
எங்குளமாதர்க்கேநீ யிட்டதேபிச்சையம்மா
சங்கரனருளாற்க சதாதினமாழ்விரொடி
யங்களகரமாய்வாழ்வாய் மதிரவிபுகழத்தாயே

வசனம்.

அம்மாசந்திரமதி நீயேயுத்தமிலோகத்தில் சத்தியமென்பனத நிலைநிறுத்தினாய்நீசதா வாழிவாழி.

பரமசிவன் வசனம்.

கேளுங்தேவர்களே நீங்கள்செய்த சூதுகளையெல்லாம்வெளியி ட்டு அரிச்சந்திரனை முன்போலரசாக்கி செய்யவிணங்கச் செய்வீர்க ள தேவர்களே.

தேவர்கள் வசனம்,

அப்படியே வெளியிடுகிறோம் பரமசிவமே

இந்திரன்-விருத்தம்.

இன்பனே தாரகனாகனைத் தொடர்ந்தங்காரும்
வியம்பியும் படியோரிக பேரமெந்த

அன்பனே தொடுத்துமுன்ற விலையக்கான
அன்றுசெய்தேன் மாதைவிற்கப்புரிந்துமப்பா
தன்பமுறவுனையடிமை செய்துபார்த்தேன்
தோன்றலேபொய்யுரையா துணிவைகொண்ட
தன்மைதனைக்கண்டகன்றேன் சத்தியனென்ற
தானறிவாயிதுவுன்மை தரவரிவேந்தே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா நான்தான் நரகனுய்வந்து உன்னைதுன்ப முற்செய்தவனிது சத்தியமென்றறிவாய் மன்று.

அக்கினி விருத்தம்.

மன்னவனேநீ விலைக்குகமாதுதன்னை
மாறவேவரும்வேளை முனிநான்வேண்ட
நன்னகரைவிடுத்துமங்கே மறையோனுக
நடித்துமேகாலகண்ட னெனப்பேரிட்டு
இன்னகரில்வந்திரங்கி மாதுபாவை
யிருவரையுங்கைக்கொண்டே னெனதுதேவி
பன்னிமொழிவேலையிட்டாள் நீதாசிக்க
பணிமுறிச்சிட்டிதுநானே பாராய்மன்று.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா சந்திரமதியும்பாலனையும் அடிமைகொண் டவனுநுகும் உன்பத்தினிக்கி வேலையிட்டவள் எனதுதேவியாரும் இதோ நீயெழுதிக்கொடுத்த முறிச்சீட்டை பாருமன்று.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயனேயிதுதானென்னை யாட்கொண்டேபிட்டயாரும்
பையவேதங்கவிங்கு பதியெனவுறைந்தவாறும்
மையலுகாலகண்டனெனும்பெயர் கொண்டவாறும்
செய்யவேதியர்கள்காணச் செயிந்துவாறு நைசெய்வீரே.

வசனம்,

சுவாமிஇந்தசீட்டு அடியேனெழுதிக் கொடுத்ததேயாகும் தே வரீருக்கு காலகண்டனெனும் பெயர்வந்ததேனது இங்கேயிருக்கயி பேது இந்நாட்டின்வேதியர் உம்மையறியாமலிருந்தவாறேது அடி யெனுக்குத் தெரியச்சொல்லும் சுவாமி,

அக்கினிதேவன் வசனம்,

இங்கொருவன் காலகண்டனெனும் பெயருடைத்தா யிருந்தான் அவனும் அவன்தேவியாகிய காலகண்டியும் யாத்திரைபோயிருந்தார்கள் அதையுணர்ந்து அவனைப்போல வுருவெடுத்து அவாளின் மனையிலே தங்கியிருந்தோம் அசலர்த்து வேதியர்கள் அவாளென்றே பாவித்திருந்தார்களப்பா.

அரிச்சந்திரன் வசனம்.

மஹாபாக்கியம் அடியேன் இவ்விதம் வினவின தர்க்காக அபசாரம் க்ஷமித்தருளும் நான் புனிதனுனேன் ஆண்டவனே.

எமன்-விருத்தம்.

தாகனுடகூலிதனை கொடுக்கவன்று
தாவியேமந்திரியுனை விலையாய்க்கொள்ள
வரவென்றகூவிநிற்க முனியும்வேண்ட
வளர்சுடலைதோட்டியைப் போலுருவுமாறி
கருவதனிக்கம்பளமுங் கோலுமேந்தி
கருதியேபொருளீந்து களிப்பினேடு
அரசனேயுனைக்கொண்ட சிட்டிதாகு
மறிகுவாயிதுவுன்ற னுடையாமோ.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா மந்திரிஉனை விலைகூறுங்காலையில்நான்சுடுகாடு தோட்டியைப்போல் உருமாறி தரகன் கோரியபொருளைகபடமாய்க்கொடுத்து உன்னைக்கொண்டேன் இதுநீயெழுதிக் கொடுத்த சீட்டாகும் இதோநீயன்று என்னிடத்தில் ஒப்பிவைத்த உடுப்பாகும்பாலகா.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி நீர்தோட்டியாய் வந்திரென்று சொன்னீரே இவ்விடத்தில் தோட்டியேதுவானுன் அடியேனுக்குத் தெரியச் சொல்வீர்நாதா.

எமன் விருத்தம்.

வீரவாகென்றொருவன் தோட்டியாக
வீற்றிருந்தானின்னகரி வேந்தகேளாய்
சுரமனைவியர் சொன்னவென் றேவிகேட்க
சன்னது தரிஞற் றோட்டித்தன்னை
சோரவிட்டேனிமயமலை பெண்டிநேறு
செல்லிவென பேரமைத்தேன் மாதுதாஹும்
பராரியவுனதுங்கை கிறுத்தவந்தோம்
பண்புடையா யிதுமெய்யே புகர்ந்தேன்பாலா,

வசனம்.

அப்பா அரிச்சந்திரா யிந்தக்காசியில்வீரவாகுவென்றொருதோட்டியிருந்தான், கவுசிகமுனியென்னை தோட்டியைப்போலுருமாதிருக்கக்காறினதால் நான்யிங்கிருந்ததோட்டியையும்அவன்மனைவியையும் என்தூதரா லியமலைச் சாரல் சேர்த்து அவனைப்போல் வுருவெடுத்து அவனள்வசித்திருந்த குடிசையிற்சென்று உன்சத்தியநிலை பலருமறிய வெளியிடவந்த கருத்தென்றறிவாய் கண்மணியே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அடிமையாயென்னைக்கொண்டீர் அசமதுகளித்தே நாதா
மிடியதாநீங்கவிங்கு மிசைந்தது பிணியாய்க் கேட்டேன்
படிதனிற்பலருமேச பண்பிலாச் சுடலைதன்னில்
முடிகுளிர்ந்திருக்கச்செய்தீர் முத்தனேபெருமைநாதா.

வசனம்,

கேளுமென்னாண்டவனே என்னை அடிமை கொண்டவரீரென் றறிந்தேன் மெத்தவுமானந்தத்தை யடைந்தேன் ஆனால் என்னைநீ ந்தயிழிவான சுடலைகாக்க அமைத்ததே என்பெருமைக்கு குறையென்று உருகின்றேன் நாதா.

எமன்-விருத்தம்.

சுடலையென்றிங்கு மன்னவோநீதான்
  சொன்னதுன் சித்தறிவல்லோ
இடமிதேயாக மியற்றிடுஞ் சோலை
  யெரிகரும்புக ளெல்லாஞ் சமித்தை
சுடந்தனைக் கொளுந்தும் நெருப்பெலா முத்தி
  சண்டிகைப் பேயெலா முனிவர்
திடமுடன் கூவுதல் வேதமந்திரமாம்.
  திகவுபிணம்பசு வெனத்தெளியே.

வசனம்.

அப்பா அரிச்சந்திரா நீகாத்திருந்தசுடலை யாகசாலையாகும் இவ்விடமுலாவுதல்முனிவர்களாகும் அலைகளொலிக்கும்பேய்மொழிகள் வேதமந்திரமாகும் இந்தக்கட்டை முதலானவைகள்சமித்தைகளாகும் நீநியாயமாயுற்றுநோக்கி யன்னாந்தித்தெளிவாய் வேந்தே,

அரிச்சந்திரன்-வசனம்.

ஆண்டவனே தாங்கள்சொன்ன மாறுகாணக்கண்டு ஆனந்தபரவசமானேன் எனதுபாக்கியமே பாக்கியம்நாதா.

பரமசிவன்-வசனம்.

கேளும்தேவேந்திர மகாராசனே வசிட்டமுனியை வரவழைப்பாயப்பா.

தேவேந்திரன்-வசனம்.

அப்படியே வரவழைக்கிறேன் பரமசிவமே

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவேந்திரன் மொழிப்படி கட்டியழைக்க வசிஷ்டரதிக சந்தோஷமாய் வருகிறவிதங் காண்பீர்கள்.

வசிஷ்டர்-தரு-தேவமனோஹரி-ரூபகம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடியே வசிஷ்டரும் ஆ ஆ வந்தாரோடியே.

அநுபல்லவி.

நானிந்திரன் சபைதனில் நாட்டியபந்தத்தை
தான்கொடுத்தேன் மித்ரன் தலைகுனிந்தானென்றே (ஆ)

சரணங்கள்,

தேவர்கள் முன்னில்சொன்ன சபதப்படி
நிட்டூவெனிதோ வென்ன
மூவர்மகிழ்லோக முற்றுமெனைப்புகழ
முடிந்ததுசிடனாலே மொழிந்தது கவிபனென்றே (ஆ)

கொண்ட கெருவத்தாலே கவுசிகன் தலை
குனிந்தானே மன்மேலே
அண்டருமானிடரு மனைவருமெனைதொழ
ஆனேனென்சிடனாலே அகங்குளிர்ந்தேனென்றே (ஆ)

தானென் றங்காரம்பேசி கவுசிகன்தன்தவம்
தானிழிந்தானே தோசி
மோனமழிந்தமென்ன மூர்க்கம்போகாத பேர்க்கு
மூவுலகத்திற்கீர்த்தி மொழிவதரியதென்றே. (ஆ

வசிட்டர்-விருத்தம்.

நந்திமேல்வருவாய்போற்றி நான்மறைக்கிறைவாபோற்றி
செந்திருவாயாபோற்றி செப்பருமகிமாபோற்றி
சுந்தரவடிவாபோற்றி சூக்குமநிலையாபோற்றி
உன்திருவடிக்கேநாயே னுழியன்போற்றிபோற்றி.

வசனம்,

போற்றிபோற்றி பரமசிவமே நின்னடிக்கே போற்றி

பரமசிவன்-வசனம்.

வாரும்வாரும் வஸிஷ்டமுனியே,வாழிவாழி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

என்குலக் குருவேபோற்றி யென்னையாள் கோவேபோற்றி
அன்பினி லுயர்ந்தாய்போற்றி யாதியையறிந்தாய்போற்றி
மன்புலத் தவத்தாய்போற்றி நற்குணகடலே போற்றி
துன்பமே குடியாய்க்கொண்ட தோஷியான் போற்றிபோற்றி.

வசனம் போற்றிபோற்றி என்குருநாதா.

அரிச்சந்திரன்-தரு-கேதாரகௌளம்-சாப்பு.

பல்லவி.

நீரிருந்து மெனக்கித்துன்பம் நேரிடப்போமோ குருவே.

அநுபல்லவி.

ஆராகிலுமடைந்தோருண்டோ யடியேன்பாவியே குருவே நீ

சரணங்கள்.

மன்னர்மன்னனென்றாளும் மகுடஞ்சூடிமிகுநேயத்து
மாநிலத்திற்சத்தியந்தன்னை மாரிபோலப்பெய்யச்செய்தும்
என்னகொடுமையரசிழந்தே யின்னகர்வரவும்நாதா
ஏந்திழைதா னடிமையாகவு மென்மகன்மாய்ந்திறல் வண்மை
நிலையைவிட்டப் பலவலைகள் நேராய்விளைந்திருவருமா [யாசாகவும்
நேர்மைவிடாதிருக்கவென்னை நீச்சுதைநிற்கச்செய்தார்
மலையைப்போன்றதுயருந்தி மயங்குவேனோமாதுவெட்ட
மன்னன்காசிராஜனுக்கின்னையிட மகிழ்ந்திரவென்னை யிகழ்ந்தேதனை
அமச்சனையா யென்னைப்பற்றி யருந்துயரால் வருந்தலுற்றேன் [விட
ஆஅமாறுசெய்தபாவமோ யாரையப்போமோகன்னியென்று
நிமைக்குள்காவலனிருக்கிகட்டியெனெட்டவுங்கட்டவுந்திட்டமதே
ன்நிறுத்தேயெல்லாம் வெறுத்தே நாதா நீர்சொல்லும் வொட்டி
[டுதேன்பாவியேநான் வேதா நீ

வசிஷ்டர் விருத்தம்.

பெறவரிதாநின்னுடம் பரியபாக்கியம்
பிறந்திடவும்புரிந்தபெரும் பாவியனோ

செயலரியவெட்டிமையைப் பூண்டாய்வேந்தே
செப்பரியவுன்மனைவி யடிமையானாள்
விற்றுடையவுன்மகனும் பாம்பால்மாண்டான்
வெங்கதிரோன் மகனிங்குக்கொடியபாவி
உறலரியமத்துயர முற்றிருந்தோ
டுத்தமரேயும்பர்புக ழுடையபாந்ரே.

வ-ம். அப்பா அரிச்சந்திரா நீ இந்த வேடமெடுக்கவும் சந்திரமதியம்மாள் தொண்டுவேலைசெய்யவும் உன்குலமணியாகிய லோகிதாசன் பாம்புகடித்திறக்கவும் விளைந்தகாரண மெல்லாந்திற்கும் காரணமாகிய பாவிநான்தான் நான் தேவசபைக்கு போனதினால் விளைந்ததுன்பங்களாகுமப்பா ஆனால் உங்களை யடிமை கொண்டவர்கள் எளிதிற்காணுற தேவர்களாகும் துன்பங்கள் நீயனுபவித்ததினால் உன்னையும் என்னையும் தேவர்கள் முதலானவர்கள் புகழத்தக்கதாக பெருமையுண்டாச்சு சீடனே,

பொது-வசனம்.

சேனைங்கள் சபையோர்களே இவ்வாறு சுடலையிற் நடக்கங்காலையில் மதிபத ராசன் காசியில்வந்து அரிச்சந்திரனைத் தேடிக்கொண்டுவருகிற விதங்காண்பீர்கள் கனவான்களே.

மதிதயராசன்-வசனம்.

அப்பா கட்டியனே நான் வந்திருப்பதாக உங்களரசனுக்குத் தெரிவிப்பாயப்பா.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன் வசனம்.

சுவாமி யதிபதமகாராசன்வந்திருக்கிறசங்கதிதெரிவிக்கச்சொன்னார் சுவாமி.

காசிமந்திரி-விருத்தம்.

அன்னம்போல்புத்ரிதன்னை யரனருளாலேமிக்கு
மன்னவனயோத்தியாண்ட மகாராசன்றனக்கேயீந்த
உன்னிகரிந்தவேளை உற்றதோர்சேதிதன்னை
பன்னவேவேண்டுமுன்றன் பாதமேபோற்றிவேந்தே.

வ-ம். சுவாமி சந்திரமதியைப்பெற்று சத்தியபாஷையைமருமகனுக்கொண்ட தேவேபோற்றி இந்தவேளையில் அதிகவருத்தமாய்வந்திருக்கும் காரணம் தெரிவிப்பீர் ஆண்டவனே.

மதிதயராஜன் காசியில்வந்து அரிச்சந்திரனைத்தேடும்போது
காசிமந்திரிகண்டு அழைத்துப்போகிறபாகம்.



மதிதயன் வசனம்.

அப்பாமந்திரி முனிவன்கடனைத்தீர்க்க யென்மருக னிங்குவந்தசங்கதி நீயறிந்திருந்தா லறிவிட்பாயப்பா,

காசிமந்திரி விருத்தம்.

என்னசொல்வேன்-வேந்தனுக்கேயிசன்றானு
மிட்டவிதிகாசிவந்தும் தெரிவிக்காமற்
சொன்னமொழிதவறுதோன்மாதைவிற்றே
சூதானமுனிகடனைத்தீர்த்துமையா
பின்தொடர்ந்ததரகனுக்காய்ப் பறையனாளாய்
பிணங்கள்சுடுகாட்டைடைந்தேயிருங்குங்காலே
மன்னவனெ சதாகரனைக்கள்ளர்தானு
மாயமாய்க்கவர்ந்திட்டார்வகுத்துக்கேளே.

வசனம்.

சுவாமி முனிவன் கடனுக்காக் வுமதுமகனை விற்றுத் தீர்த்தபிண்தரகனுக்காகதான் பறையனுக்கடிமையாகிச் சுடலைகாத்திருக்குங் சமயத்தில் எங்களரசன்மகனைக் கள்ளர்திருடிப்போனார் பின்பு நடந்ததைக்கேளும் மதிதயமகாராஜனே.

இதுவுமது.

கள்ளர்தனைப்பிடித்திடவே சென்றதூதர்
கண்மணியாமுன்மகளைத் திருடியென்றே
தள்ளாடனேகட்டிவரக் காசிவேந்தன்
தலையைவெட்டவருளனிச்சுடலைகாக்கும்
உள்ளமகிழ்ந்தரிச்சந்திரர் வாளையோங்க
உயர்புகழ்சம்புவந்தே கரத்தைபற்றிக்
கொள்ளவுமேடங்கிபுடற் காசியாளுங்
கொற்றவனுமாதுடனேகோவேசென்றார்.

வசனம்.

சுவாமி களளரைப்பிடிக்கப் போனவர் தங்கள்மகனைக்கட்டிக்கொண்டுவா யெங்களசரனுக்கிணையிட மயானங்காக்கு மரிச்சந்திரர் வாளோங்கிவெட்டும்போது பரமன்கையைபிடிக்கக்கேட்டு அரசனுந்தேவியுமங்கேபோயிருக்கிறார் நாதா.

மதிதயன் வசனம்.

ஐயையோ இப்பேர்க்கொத்த தன்பமயோத்தியானுக்கு வந்ததாரானுஞ்சுடலைக்குப்போய் வருகிறேனப்பா மந்திரி.

காசிமந்திரி வசனம்.

அப்படியே போய்வாருஞ்சுவாமி.

பொது-விருத்தம்.

தேவர்களுக்குலகுருவு மயோத்திமன்னன்
தெரிவிவ்வாக்குடுகாட்டி லிருக்குங்காலே

பாவமென்னவந்ததென்றே மதிதயன்றான்
பாரெலாந்தான்கோடிக்காசிசேர்ந்து
ஆவதுதானகன்றிழந்தவாறுபோல
வமைச்சன்சொலச்சுடலைக்கேயலறிக்கொண்டு
தாவமுடன்வந்துசந்திரவதியைவேந்தன்
தன்னையுமேகண்டுமனந்தவித்திட்டானே

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே தேவர்கள் முனிவர்கள் முதலானவர்கள் மயானத்திலிருக்கும்வேளையில் மதிதயராஜனுந்தோன்றி பிரலாபிக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

. மதிதயன்-கண்ணிகள்-எதுகுலகாம்போதி ரூபகம்.

இந்தவிதிகாட்டவே யீசனுனைமகளாய்
எனக்களித்தானோ மகளேமகளே
வந்ததுயரதனை வறிந்தானுங்களைமீட்டு
வாகுடனிருந்தேனோ மகளேமமகளே.

கலியாணி,

என்னவிதியதனை;எழுதிவிட்டான்பாவி
எதுசெய்குவேனையோ அரசே
நல்[illegible]ரிலையுள்ளவற்கே நாடர்துதுயரென்று
நவி[illegible]ம்நூன்முறைபொய்யோ-அரசே

காம்போதி

அன்[illegible]த்தார்தேசத்திற்கும் அதிபதியாயிருந்தீ
ரதின்பலனிதுவாமோ-அரசே
இன்பத்திருந்ததெல்லா மேந்தலைநீர்கொண்ட
இத்துயர்க்கிணையாமோ அரசே

மோகனம்.

தவமுனியேநீருந் தானெனுமாறுவத்தை
தள்ளிவிட்டவராச்சே முனியே
பாவம்பெறநீயின்றி படுத்தாய்செங்கோலையோ
பலனிதுகாணலாச்சே முனியே
குலத்திழிலொருவன்கீர்த்தி கொண்டார்சகலருக்கும்
கொடுக்கும்புகழல்லவோ முனியே
நலமுளதவசிநீநாடி யிவ்வாதுசெய்தாய்
நாட்டோர்வசைசொல்லவோ முனியே

சாவேரி.

வேலையுனைப்பணிந்தேத்திசெய்ததவத்தால்வந்த
சேயனுக்கித்துயரிட்டாய்-சிவமே
நவனிதிமிழந்த நாட்டினிற்கள்ளியென்றே
நாட்டோரிகழவிட்டாய்-சிவமே

பரமசிவன்-வசனம்.

மதிதயேந்திரா நீதானதிகபுண்ணியபுருடன் உன் மகளினாலு ம் மருமகனாலும் உன்குலம்யென்னாலும் அழியாத பெருமையடை ந்ததுநீயிப்படிபேதை போலழப்போகாது வேந்தனே.

சந்திரவதி-விருத்தம்.

தந்தையேயன்னனீசன் றானிட்டவிதியின்வாறே
தந்தையேசுகமுந்துக்கந் தாவிடுஞ்சமமாயன்றோ
தந்தையேவருவதெல்லாந் தானிக்கக்கைலேதன்
தந்தையேயிங்குவந்தார் தயங்காமலிருப்பீரையா.

வசனம்

என்னையருந்தவஞ்செய்து பெற்றதந்தையேசுகத்தையுந் துக்க த்தையுஞ்சமமா யனுபவிக்கவேண்டுமே துயரை நீக்கபரமசிவனி தோவந்திருக்கிறார் தியங்கவேண்டாந்தந்தையே.

அரிச்சந்திரன்-கொச்சகம்.

நான்பாவியென்றெண்ணமை நாயமோயரசேயென்று
தான்கோறிவுமதுபெண்ணைத் தாரைவார்த்தெனக்களித்தீர்
தேன்மொழியாளையன்றே திகழுமம்மிடம் போவென்றேன்
வான்குயில் மறுத்தாள்சர்வ வருத்தமுந்துலைத்தாள் வேந்தே

வசனம்.

நான்பாவியென்று தெரிந்தும் யுமதுபெண்ணைகொடுத்தீர் நா ன்முன்னமே தங்களிடம் போகச்சொன்னேன் தடுத்து யித்துயருற் றாள்வேந்தனே.

மதிதயன்-விருத்தம்.

தன்மனைவாளனேகத் தாய்வீடுபோகும்மாது
நன்மையையறியாஜென்மம் நாய்க்குணமுடையாளாகுந்
துன்மையிலுமைவிடாமற்றேகையுமிருந்ததாலே
இன்மையிற்சுகமுங்கீர்த்தி யெய்தினளாக்கும்நன்றே.

வசனம்.

அப்பா மருகனே கணவனுக்குத் துயர்வந்தகாலையில்பிரிந்து தாய்வீடுபோகுமவள் நாயைப்போலொற்ற ஜென்மம் உன்னுடன் அப்படிபிரியாமலிருந்தபடியால் எனக்கும் உமக்கும்தனக்கும்பெரு மையையுண்டாக்கினாள் அரசே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்.

குருமுனிவசிஷ்டன்சொன்ன
கொள்கைதாரினச்சந்திரன்பால
உருவுண்டோயிலையோவென்றே
யோசித்தேயாண்டுபார்த்தேன்
அருமறைப்புகழுச்செய்கை
யனுமெனுமவன்பாலில்லை

பெருமையுங்கீர்த்தியாலும்
பெற்றனுன்மருகன்காண்பீர்

வசனம்.

கேளும் மதிதயராஜனே! இவ்வாறுசெய்ததாலுமதுமருமக னதிக பெருமையடைந்தானென்றறிவீர் வேந்தே.

மதிதயன்-விருத்தம்.

பதிதனிலுயரயோத்தி பாலிதனேதான்றலைமணந்தும்
விதிமுறைநெறியுணர்ந்த விண்மதிமுகம்படைத்த
அதிகமாங்கற்பைப் பூண்ட அம்மணிநீதானீன்ற
மதியுளபாலனெங்கே மகிழ்ச்சியாயுரை செய்குவாயே

வசனம்.

அம்மாமகளேநீ யருந்தவஞ்செய்துபெற்ற திவ்வியகுணபாலனு கியவெனதுபேரனெங்கே தெரிவிப்பாய் கண்மணியே

சந்திரவதி- விருத்தம்.

தந்தையேயடிமைகொண்ட தயாபரா சிறுவன்றன்னை
நிந்தையோடிழுத்து வந்தே நிகரிலாவடவியேகி
விந்தையாஞ்சமித்தையோடு விறகுங்கொணரவிட்டார்
எந்தையேயரவந்தீண்டி யிறந்தனனிதோகாண்பீரே

வசனம்.

கேளுந்தந்தையே அடிமைகொண்டவ ரென்னைப்படிகாட்டுக் கும்போகபாலனைபாம்பு தீண்டியிறந்தானிதோபாருந்தந்தையே

பொது-விருத்தம்.

மதிதயனுமனங்கலங்கிநின்றுமங்கே
மாதுசந்திரவதி முகத்தையுற்றுப்பார்த்து
அதிகநிலைதனிற்பதிந்த மகளேயம்மா
அன்றுநீயீன்றெடுத்தபாலனெங்கே
விதியென்ன யென்விமலமுனியைநோக்க
வேண்டவன் மனங்கனிந்தே விண்ணோரேற்றும்
கதியனவே சண்முகனும் பாலன்றன்னைத்
தானெழுப்பும்வாதந்தனைத் தானகாண்பீரே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே மதிதயன்கேட்டவுடன் பரமசிவ னேக்கமுனிவன் வேண்ட சிவசுப்ரமண்யர் தேவதாசனையெழுப்பு கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே,

சுப்ரமண்யர்-வசனம்.

முனியேநான்சொல்லியுங் கேளாமல் அரிச்சந்திரன்மனைவியை விற்கவைத்தாயிப்போது தலைகுனிந்துநிற்பதுஞ்சரியோசொல்வாய்

விஸ்வாமித்திரன் விருத்தம்.

கொண்டவாங்கார மென்னைக்குனிந்திடச்செய்ததையா
மண்டலப்புருடர்கிங்கு மன்னித்தென்பிழைகளெல்லாம்




சுப்பிரமண்யர்



மகாவிஷ்ணு



விநாயகர்.



தேவதாசன்

தண்டுளே மாலைமார்பன் றனயனைப்பிழைக்கச்செய்யும்
அண்டாகளேற்றுந்தூயா அடைக்கலங்காப்பீர்கோவே

வசனம்.

சுவாமிநான் கொண்ட ஆங்காரத்தினுலிந்த யிக்கஷியை யடையலானேன் மன்னித்துதேவதாசனை யெழுப்பிதருவீர்நாதா

சுப்ரமணியர்-வசன்ம்.

அப்படியே செய்விக்கிறேன்மௌடீகமுனியே

சுப்ரமணியர்-வசனம்.

அப்பாதேவதாசா நான் புத்திஹுள் பாம்பாயிருந்து தீண்டவிஷமேறிகாட்டில் மாண்டவன் இங்குபிரேதமாயிருக்கக்கண்ட உன் தந்தையர் வருந்துநிற்க தூங்கியெழுந்தவனைப் போலெழுந்து வருவாயப்பா.

தேவதாசன்-விருத்தம்.

பார்த்திரோதோழமாரே பறித்திடுதோர்தெர்ப்பைநானும்
சேர்த்திட்டேனுடுசெல்வோஞ் சிக்கிரம்பொழுதுபோனல்
ஆத்திரங்கொள்வாரையா ரடித்தெனைவருந்தஞ்செய்வார்
காத்துமேயிருப்பாளென்றுய் கடிகியேநடப்போம்வசரீர்

வசனம்.

அப்பா தோழரே நானிதோ தெற்பை யறுத்துக்கொண்டேன்வாருங்கள் சிக்கிரம் வீடு போகாவிட்டால் அய்யர் அடிப்பார் அதிகதொந்திரவுசெய்வார் எனதுதாயுங் காத்திருப்பாள்வாருங்களப்பாநேசர்களே.

தேவதாசன்-வசனம்.

ஆயிதென்ன ஆச்சரியம் நாம்சேர்த்த சமிதைகளெங்கேயம்முடகூடவந்தநேசர்களெங்கே நானறுத்த தெற்பையெங்கேஎன்றுங்காணேமே ஓஒ பரமசிவமே இந்தசுடுகாட்டுக்கு நானெவ்விதம்வந்தேன் ஒன்றுமறியேனே சூரியன ஒளியுங்காணேனே இதுஆரின்றுநேசநீயே துணை காசிநாதா

தேவதாசன்-வசனம்,

எல்லாமந்த திருவுளத்தின்செயலேயாகும் ஒருவேளைநமதுநேசர்கள் இங்குகொண்டுவந்து மாய்கையால்விட்டு மறைந்திருக்கிறர்களோ என்னமோ சுறறிப்பார்ப்போம் பரமன் துணைசெய்வார்

தேவதாசன்-வசனம.

ஓ மனமே என்தயங்குகிறய் அதோ நமதுநேசர்கள் கும்பலாகநின்று ஒருவருக்கொருவர் பேசுவதுபோல்தோற்றுகின்றதுபோய்ப்பார்த்து வருவோம்.

தேவதாசன-வசனம்.

ஆஆ விதியே இதுவென்னகாரணம் கயற்றல் கட்டப்பட்டுயாரோ ஒரு காத்திரேகமுடைய புருடன் ஒருகையால்பற்றிநிற்கும் மாது என்னையின்ற தாயைப்போல் தோற்றுகின்றதே ஓடிப்போய் பார்ப்போம்.

தேவதாசன்-வசனம்.

ஆ என்னைப்பெற்றதாயே இதுயென்னகாரணம்

சந்திரவதி-வசனம்.

அப்பா என்னருமைமகனே அழுகாதே இதோஉன்தந்தையின்பாதத்தைப் பணிவாயடாபாலா.

தேவதாசன்-வசனம்.

ஐயையோ என்னையீன்ற தந்தையே இவ்விதம் கீரானகாரணம்யென்னமோ ஓ பரமசிவமே உனக்கு கண்ணில்லையோ.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பாமகனே தேவதாசா

அரிச்சந்திரன்-தரு-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

வாராயென்கண்மணியேபரமசிவத்தைப்
பாராயென்கண்ணின்மணியே.

அநுபல்லவி.

தோராய்கமதுதுயர் நீருயவிட்டதுயின்று
பாராய்பரத்தையெற்றிக் கூறும்மனமுருகி வாரா

சரணங்கள்

அடிமைத்தொழிலிற்சிக்கியே அடாமகனே
படிமிசைதுன்பத்தார்சொக்கியே என்மகனே
வடிவுங்குறந்தாயோடா யிடியுடனையர்சொன்ன
படிநடந்துமிந்தயிடியுறலாமைப்பாலா

அன்னையைவிடுத்துநீயுமேஅடவிபோக
உன்னைப்பாம்புதீண்டதாயுமே-தேடியெடுத்து
முன்னேநான்தரகுக்காகயின்னர்கர்நெட்டிக்காளாகி
தன்னையேகடவேவந்த கன்னியுமிக்கெதியானாள் வாரா

சுரமதிற்றவங்கள்செய்தேன்டாஉனக்காயன்று
பரமனுமுன்றனைப்பெற்றேன்டமறிந்தவனே
விரதமுடையயென்முன்வரதன்தோன்றியேயிதோ
காத்தைப்பிடித்துன்னுயிர் வரவும்செய்தேன்சிலா

பொதுவிருத்தம்.

தெற்பைகொய்யும்போது கொண்டயென்னனுடத்
திகழ்போகுஞ்சிறுவனுமேயெழுந்துவந்து
சற்பனைசெய்முனிவனுட்டனதுதந்தைச்
சந்திரவதிமெற்றேவர் நிற்கக்கண்டான்
விற்பனரும்வேந்தர்களும் பாலன்வாயால்
வெளியானமொழிகேட்டு முனிவைகொந்தார்
அற்புதனும்பரமசிவத்தைக் கண்டுசில
வாகராசம்புவென்றே பலமயவானே

வ-ம் கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரம் தேவதாசனெழுந்துவந்து சொன்னமொழிகளைக் கேட்டெல்லோரும் துயரடைந்து விஸ்வாமித்திரனை நொந்தனர்கள் பின்புதேவதாசன் பரமசிவத்தைக்கண்டறிக் துயரத்துடன் துதிசெய்கிறவிதங்காண்பீர் கனவான்களே.

தேவதாசன் தேவாரம்.

மான்மழுதரித்தோய்போற்றி மறைகளுந்திரிப்போய்போற்றி
தேன்மொழியுமைபாள்பங்கா தீவினைவிஸ்வாமித்திரர்
தான்செய்தசூதாலையர் தனக்குமேயடிமையானேன்
நானின்றுகண்டேனாக நம்பனேயருள்வாய்போற்றி.

இதுவுமது.

கொண்டேனின்றுயரமெத்த கோவினங்களையேமேய்த்து
பண்டிவாய்ஜலத்திற்கந்த பரமனேதோய்க்கக்கையால்
குன்றுபோற்பெருமீனைக கொடும்பசிவருத்தஐயர்
கண்டுமேசற்றுநெஞ்சங் கரையாமலிருந்தார்போற்றி.

இதுவுமது.

உந்தனையின்றுகண்டேன் உம்பர்கள்தேடுங்கோவே
வந்தவென்றுயரம்போக்கி வாழ்ந்திடவுனதுபாதம்
தந்தடியேனையாளுந் தயாபராகைலவாசா
அந்தணனடிமைநீக்கி யாட்கொள்வாயன்புள்ளோனே

பரமசிவன்-வசனம்.

அப்பா தேவதாசா யின்றுடனுன்னடிமை நீங்கிவிட்டது நீயினிசுகமாய் வாழ்வாய்பாலா பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய்தேவதாசன் தாய்தந்தைகளைப் பார்த்து விசனமுடன் கேட்க அவாள்நடந்ததைசொல்லக்கேட்டு சகலதேவரையுங் குலகுருவையும் விஸ்வாமித்திரரையும்பணிந்தானப்பால் காசிபன விஸ்வாமித்திரரைக் கேட்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே. காசிபன் விருத்தம்.

நல்லதுமுனிவரேகேளும் நாடியேநானுமக்கே
சொல்லொணாப்பழியுமோசஞ் சூட்டியதுண்டோவென்றன்
வல்லமைமகனைத்தூதாய் வதைத்திடலாமோர்சித்தி
அல்லவேயுமக்குமித்த யாவுமடையுந்தரமோசொல்வீர்.

வ-ம். கேளுங்கள் கவுசிகமுனிவ நீரென்பாலனைக் கொல்லச்செய்விக்கவுமக்கு நானென்னபழி செய்தேனிந்த ஆண்மைத்தனஞ்சரியோசொல்லும் முனிவ விஸ்வாமித்திரன்-வசனம்

கேளும் காசிமகாராசனே கோபஞ்செய்யவேண்டாம் உமது பாலனைவைகுந்தவாச செழிப்பித்தருவார் ராசே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

சுவாமி மகாதேவா காசிபன் குழந்தையை எழுப்பித்தரும் பகவானே.

மகாவிஷ்ணு-விருத்தம்.

தன்மதிமுனிவன்பூண்டே தொழுதவன்வாக்கைப்பெற்று
புன்மையைநினைத்துமென்னைப் புகலொண்ணுக்கள்வனைப்போல்
உன்றனைக்கவர்ந்தெடுத்தேன் உயிர்தனைப்போக்கச்செய்தும்
நன்மையைபெருதோரானே நாயகாவெழுந்துவாராய்.

வ-ம். அப்பா சுதாகரனே நீயெழுந்துவருவாய் கண்மணியே

மகாவிஷ்ணு-வசனம்.

அன்றுமது புத்திரனணிந்திருந்த நகைகளை இதோ பெற்றுக் கொள்ளும் காசிராஜனே.

சுதாகரன்-தேவாரம்.

முப்புரிமெரித்தநாதா முனிவர்களேற்றும்பாதா
அப்பவும்நாலுமொன்று யமைந்திடவருளும்நீதா
சுப்புரநிலையேஜோதி சூக்குமாவுமைசமேதா
எப்புவனத்தோரேற்று மெர்தையேபோற்றிபோற்றி

பரமசிவன்-வசனம்.

வாழிவாழியப்பா சுதாகரனே நீசதாவாழி,

விஸ்வாமித்திரன்-வசனம்.

அடியேன் வதிஷ்டருக்கு தோற்றபடியால் என்தவத்தில் பாதி அரிச்சந்திரனுக்குத் தத்தஞ்செய்கிறேன் பரமசிவமே.

பரமசிவன்-வசனம்.

அப்படியேசெய்யும் விஸ்வாமித்திரமுனியே.

விஸ்வாமித்திரன்-வசனம்.

அப்பா அரிச்சந்திரா நான் தேவசபையில் யேசியவாறு செய்யததுணிந்துன்னை வெல்லத்தோற்றதால் தேவர்களறிய விதோவென்தவத்தில் பாதி தாரைவார்க்கின்றேன் தவிரவன்றுகொடுத்தஉனது நாட்டையும் ஒப்புக்கொள்ளும் மன்னவா.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே ஒப்புக்கொள்ளுகின்றேன் முனிநாதா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஐயனேகுருவேயுமாம் லருந்தவந்தனிலேபாதி
ஐயனேமுனிவர்ந்தா ரடியேனுங்கொண்டேன்மேலும்
ஐயனேபதவிபெற்றே னைமையொன்றைப்புனிதனுனேன்
ஐயனேபெருமைகொண்ட னடிகளுக்கடியேன்போற்றி.

என்குலகுருவேயும்மால் மெத்தபெருமையடைந்தேன் விஸ்வாமித்திரர் தன்தவத்திற்பாதிதாரையிட்டார் பெற்றுக்கொண்டேநாதா.

வதிஷ்டர் வசனம்.

மெத்தசந்தோஷமப்பா அரிச்சந்திரனே.

பரமசிவ-கவி.

அரிச்சந்திராவாழிநீதா னமைச்சனுமாதும்பாலன்
அரிச்சந்திராவாழ்கவுன்ற னயோத்திநாடடைந்து செங்கோல்
அரிச்சந்திராதாங்கிநிதி யமைகுநான்கழிந்தபின்பு
அரிச்சந்திராவெனதுபாக மன்புடன்வருவீர்வாழி

வ-ம். அப்பா அரிச்சந்திரா நீயுன்னுடசேர்ந்து அரசுசெய்த பின்புஎன்னிடம்வந்து சேருவாய்வாழிவாழி.

பரமசிவன்-கவி.

தவமுனியேகௌசிகனே வசிஷ்டமூர்த்தி
தன்மைபெருகாசிபனே மதிதயேந்திரா
நவகுணன்றன்னுடன்சென்று முடிகான்சூட்டி
நாடடைவீர்நாய்போவோம் வாழிவாழி


வ-ம். கேளுங்களப்பா வசிஷ்டமுனியே கௌசிகமுனியே நாரதனே காசிராசனே மதிதயனே அரிச்சந்திரனுக்கு முடிசூட்டியபின் னுங்களிருப்பிடம் போவீர்களப்பா.

பொது-விருத்தம்,

வேந்தனுக்கேவிடைகொடுத்துந்தேவரெல்லாம்
    விண்ணடைந்தார்முனிவருடனயோத்திமன்னன்
காந்தமுளமாதுசந்திரவதியும்பாலன்
    களக்கமிலாமந்திரியும்மாமனோடு
சாந்தகுணகாசிபனுமதனவல்லி
    சார்ந்துவாரதமேதியயோத்தியேந்தே
சேர்ந்தவுடன்கொலுவரையைச் சிங்காரித்து
    செயம்பெருகமுடிசூட்டலினிகாண்பீரே.

வ-ம். கேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திரன்சந்திரவதிதேவதாசன் சத்தியகீர்த்தி காசிமன்னன் மதிதயேந்திரன் மதனவல்லிகாசிபன் வசிஷ்டர் முதலானவர்களும்அயோத்தியந்தோனமண்டபம்சிங்காரித்து அரிச்சந்திரமகாராசனுக்கு முடிசூட்டுகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரமகாராசனுக்கு பட்டாபிஷேகம்செய்கிறபாகம்.



ஸ்ரீ

அரிச்சந்திரமகாராசனுக்கு
முடிசூட்டுதல்.

பொது-கரு-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

நவரத்தினமுடிசூடினான் அரிச்சந்திரன்
நவரத்தினமுடிசூடினான்

அநுபல்லவி.

தவசிரேஷ்டவசிஷ்டரும் தன்குலமுனிவனுஞ்
சாற்றுமாசிகள்வேதம் எற்றமறைகள்கூற
சந்திரவதியாளும் மந்திரிகீர்த்தியும்
வந்திதபாலனுமதிர்ந்தாவெனமேளம் (நவர)

சரணங்கள்.

இருபுறஞ்சாமரை வெடிக்கநாட்டியமாட
இசைகூட்டிநாரதர் யெழிலெங்கித்தான்பாட
தருமதேவதையுச்சந் ஆசனத்திலின்றிட
தாதாசுபனைச்சொல்லி தானுகாயத்திலாட
தனகனமதேசரும் மகுடவீரரும்
ககனதேவரும் மிகவேயமர்க்கையும்
தாங்க மன்னர்களாகும்
ஓங்க பகைவர்மயம்
வாங்க தூடர்களிளன்னம்
எங்க கொலுவின்முன்னே
தவழ்ந்துமன்னர்கள் குனிந்துஅடிதொழ
புவிந்தபவமணி களித்துகுடிகளும்
தழைத்துமகிழ்ந்திட மறைந்தாங்கனையன்றும்
விழைந்தனுடன்சுகமாய்க்குறைந்திடச்செய்யவேவொன் ... நவர

அரிச்சந்திரன் போற்றிவிருத்தம்.

சத்தியந்தழைத்துவோங்க சகலர்வெறிசேருங்க
நித்தியம்திகழ்ந்தோங்க நீங்கதமக்கயங்கோங்க
நத்திமுப்பாரிபெய்ய நாட்டிலங்குதகடினங்க
எத்திசையிர்த்திபோங்க இவைபாலனைவல்லோர்தா

சந்திரமதி போற்றிவிருத்தம்.

திங்களைச்சடையிலிட்ட தேவனையகல்லாசுர
மங்களவுமையாளுந்து மருவியடியர்களாசர
புங்கவின்தயவைவெய்து புகழ்ந்தகாப்பாலராசா
சங்கரவேதன்சந்திரன் சகாகலமெங்கச்செய்பே

தேவதாசன் போற்றிவிருத்தம்,

மான்மழுதரித்தேவனை மல்லவன்யாத்தபாதா
தேன்மொழிகளவுமபெவந்திருபெற்தருபரா

நான்முகன்மாயன்தேடி நாடிடாச்சர்வவேதா
தான்மனம்பொங்கியெந்தன் றத்தைசெங்கோலைக்காரே

சத்தியகீர்த்தி-போற்றி விருத்தம்.

வெள்ளியங்கிரியாயென்றன் வேர்தனையாண்டநேயா
வள்ளியாந்தரியாசித்தங் கருதிடுஞ்சகலமாயா
எள்ளினிலெண்ணெய்போல வெங்கனும்நிறைந்ததூயா
வள்ளலின்செங்கோனாளும் வாழ்விப்பாய்கைலைவாழ்வே.

கட்டியன்-பராக்கு.

அத்திமுகனைப்பெற்ற வுத்தமனைதெரிசித்த
யண்ணலே வெகுபராக்கு
ஆதித்தன்மாதற்கு ஜோதியாய்தோன்றி
யரசரே வெகுபராக்கு
நித்தியங்கருமம்விதி பிசகாமலெக்கியம்
நிறைவேற்றுவாய் பராக்கு
நேரநாய்மும்மாரிதேசத்திலேபொழிய
நெறிதரித்தவர் பராக்கு
சத்தியமெனும்பயிர் தழைக்கவே வரசுசெயுஞ்
சாந்தனே வெகுபராக்கு
முக்திபெறத்தேவரைக்கண்டு தெரிசித்தவென்
மூர்த்தியே வெகுபராக்கு
மோனஜலைகெளசிகனவமொடிக்கிய
முதல்வனே வெகுபராக்கு

நாரதர்-விருத்தம்.

அயோத்திபாயன்னைவிட்ட பாக்கினைப்படியேயிங்கு
அயோத்திபாமுடிதான்சூட்டி யானதால்சுகித்திருப்பாய்
அயோத்திபாவின்னைக்கேகியாயிரங்கண்ணனுக்குன்
அயோத்திபாபெருமையெல்லா டறிவிக்கப்போறேன்வாழி.

வ-ம். அப்பா அரிச்சந்திராநான்போயிவ்விடத்தில்காரியங்களையெல்லாம் தேவேந்திரனுக்குத்தெரிவிக்கப்போகிறேன்விடைதா ராஜே

அரிச்சந்திரன் வசனம்.

மகாபாக்கியமடிக்கடி தங்கள் பாததெரிசனங்கொடுத் தடியேனைகாத்தருளவேண்டும் நாரதரே,

விஸ்வாமித்திரன் வசனம்.

அப்பா அரிச்சந்திரா நான்தவசுக்குப்போகிறேன் நீங்கள் சதா வாழிவாழி.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியம் என்தந்தைக்கு அந்தரசொர்க்கமளித்த அண்ணலே அடியேனேதாகிலும் பிழைகள் செய்திருந்தால் மன்னித்தாண்டருள்வீர் முனிநாதா.

வசிஷ்டர் விருத்தம்.

என்மொழிபோகாவண்ண மிம்சைகளனேகத்தோடுந்
துன்பமதடைந்துசத்தியந்துவளாமலிருந்ததூயா
உன்மகன்மாதுமந்திரி யுத்தம்குடிகளோடு
நன்மையாய்யஞ்சுசெய்தாய் நன்பனேபோவேன் வாழி.

வ-ம். அப்பா சிடனே நீயும் மாதும் பாலனும் மந்திரியும் குடிகளும் வாழி வாழி நான் போய்வருகின்றேனப்பா.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாயகமேயென்குலத்திற்பாதியான
தனிக்குருவேமோனமறைதானேபூண்ட
நேயனேயெம்பெருமாநில்லையக்கண்ட
நித்தியனேயுத்தமனேநிகழ்ந்தொறுநா
நாய்தனக்குங்கனளட்பட்டோற்கெளிதாய்வாய்த்த
நற்பொருளேதற்பரமேநாதன்மெச்ச
மாயமறைதொய்தவனேயுன்றன்திவ்ய
மலரடிக்கேதுதிபடிந்தேன் மாசிலானே

வ-ம். அடியேன்பேரிலென்றைக்கும் கிருபையிருக்கவேண்டும் அடிக்கடி பாததெரிசனந்தந்து யாட்கொள்வீர் என்குருவே.

காசிபன் வசனம்,

கேளும் ராஜபரமேஸ்வரா எனக்குப் போகவிடைதருவீர் வேந்தே.

அரிச்சந்திரன்-வசனம்,

கேளுமன்பரே உம்மால் சகலபெருமையுங்கொண்டேன் போய்வருவீர் வாழிவாழி.

மதனவல்லி வசனம்.

அம்மணி சத்தியபாஷன்தேவியேஎனக்குவிடைதருவாய்தாயே

சந்திவதி வசனம்.

அம்மா மதனவல்லி உங்ளைபோனுத்தமி வேறுகாணேன் நீசுகமாய்ப் போய்வருவாய் வாழி வாழி.

பொது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்வாறு எல்லோரும் விடைபெற்றுக்கொண்டு போனபிறகு சிலநாட்கழித்து அரிச்சந்திரமகாராசன் முன்னுக்கு நடக்கவேண்டிய காரியங்களைக்குறித்துமந்திரிகளுடன் ஆலோசிக்கிறவிதம் காண்பீர்கள் கனவான்களே.

அரிச்சந்திரன்விருத்தம்.

அல்லலையகற்றத்தக்கவருமையாய்மதியின்மிக்க
வல்லமையுடையவென்றன் வாகுளமந்திரியார்
நல்லதோராறியும்நீதி நாயமுமறிந்தவெந்தன்
செல்வனுக்கினிநாமிங்கு செய்யும்வாறெதுவேசொல்வீர்

வ-ம். கேளுங்கள் மதிமந்திரிகளே எனது தவப்புத்திர சிகாமணி சகலகாரியங்களில் வல்லவனாயிருப்பதாலினி அவனுக்கு நாம்செய்ய வேண்டியது எதுவோ தெரியச்சொல்லுவீர்கள் மக்களே.

சத்தியகீர்த்தி வசனம்.

சுவாமி தேவதூதர்கள் பக்குவகாலமடைந்திருப்பதால் இந்தப் பூமண்டலத்திற் கதிபதியாக செங்கோலளித்து முடிசூட்டினால் சகலலோகங்களிலும் மேன்மையான புகழ்தருக்கு மரசே

அரிச்சந்திரன் வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி நீசொன்னவாறேசெய்வதுமென் கடமையாகுமானதா லிந்நாத்திறதையி லென்குலகுருவையழைத்துவரும்படி செய்வாய் மந்திரி.

மந்திரி வசனம் அப்படியேபோகவிருக்கிறேன் சுவாமி.

சத்தியகீர்த்திவசனம்.

அப்பாகட்டியனே அதிசீக்கிரத்தில் நடந்து வசிஷ்டமூர்த்தியை வேந்தனே ரோதியதாய்ச் செப்பி அழைத்துவருவாய் வீரனே

கட்டியக்காரன் வசனம்

சுவாமி தங்களைக்கொர்றியழைத்ததாக வெங்களாண்டவனாகிய அரிச்சந்திரமஹாராஜன் தெரிவிக்கச்சொன்னார் குருநாதா

வசிஷ்டர் வசனம் அப்படியே வருகிறேனப்பா.

பொது வசனம்.

சேளுங்கள் சபையோர்களே அரிச்சந்திர மஹாராஜனழைத்து கைக்கெட்டு வசிஷ்டமூர்த்தியரசன் கொலுமுகம் வருகிற விதங் காண்பீர்கள் கனவான்களே.

வசிஷ்டர்-தரு கேதாரகௌளம் ஆதிதாளம்.

பல்லவி.

மன்னர்மன்னன்வரவென் றழைக்கவும்
வசிஷ்டர்வந்தாரவன் றழைக்கவும்,

அநுபல்லவி.

நன்னகரயோத்திபன் நாடியவாறுக்
நலமுடனமுத்தட ராஜனக்கருக் (மன்னர்)

சரணங்கள்.

சிறந்திங்குதன்னவன்
செப்பிடாதமரு
ஒப்பிடாதகுரு (சில்
சினக்கோபத்தைக்கண்டிடயவரூடன்
அனந்தசாபத்தைக் கொய்தவனாகிய (சில)
சிவனிருந்தும் நிலையுமின்றையும்
பலம்வருந்திகின் நெறிமுறையையும்.
பகருமட்டுமோ தங்கநுமேயொட
சிகரமாம் ஞானமகுவாயட. (சில)
சினமுமிலங்க நிலையுந்தாங்க
மனமுமிரங்க தவ்வுமடக்க

சேயகொட்டிக்கவு சிகனகம்போக்கிய
வாய்விட்டபடி வரமதைதேக்ய (சில)
செப்பொணுதவுவ ஒப்பிலாதகவ
தப்பிடாதசிவ னெப்புவாறுதவ
சித்தமுங்களித்தேமனச் சிருடனுடியே
உத்தமனிருக்குங்கொலு உயர்சடைதேடியே (சீல)
சிலமறிந்தகுணவன்-தத்வபுனிதன்
சிறந்தமேன்மை வினிதன்
தேசமெங்கும்புகழ் நீட்டிடும்வார்நீதியும்
நேசனவனேயென் நிஜசிட னென்றோதியும் (மன்னர்)

வதிஷ்டர்-வசனம்.

அப்பாகட்டியனே நான்கொலுவாசல்முன்வந்திருப்பதாக அரிச்சந்திரமகாராஜனுக்குத் தெரிவிப்பாயப்பா.

கட்டியக்காரன் வசனம்.

மகாபாக்கியமப்படியேதெரிவிக்கிறேன் சுவாமி.

கட்டியக்காரன்-வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா வதிட்டபகவான் கொலுவாயலில் வந்திருக்கிறார் வேந்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பா மந்திரிமார்களே நமதுகுருவாகிய வதிஷ்டபகவான் கொலுவாசலில் வந்திருக்கிறாராம் அவரைப்போய் வணங்குவோம் வருவீர்களப்பா.

மந்திரி வசனம்,

அப்படியேபோய் வணங்குவோம் மஹாராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

இவ்வுடலழிந்திலக்க மென்னிடாப்பிறவிபுக்கு
மெய்யுயிர்க்கிறைவன்றன்னை யெங்களால்காணப்போமோ
ஒவ்வினிலுயர்ந்தபாதா வுமதருளின்றிவேறு
கவ்வுதலளித்திருந்தன் கழலடிபோற்றிபோற்றி.

வ-ம் எங்களைப்பெருமைபடுத்திப் பரமனைத் தெரிசிக்கச்செய்து ஆண்டவனே நின்திருவடிக்கேபோற்றி.

வதிஷ்டர்-வசனம்.

வாழிவாழி அப்பா அரிச்சந்திரா அம்மாசந்திரவதி நீங்கள் சதா வாழிவாழி.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி யிந்ததிவ்ய ஆசனத்திலேறி யெழுந்தருளும் குருநாதா

வதிஷ்டர்-வசனம்.

மகாசந்தோஷம் அரிச்சந்திரமஹாராசனே

பொது-வசனம்.

கேளுங்கள்சபையோர்களே இந்தப்பிரகாரம்அரிச்சந்திரமஹாராஜன் கொலுவில்வதிஷ்டபகவானிருக்குங்காலே திரிலோகங்களுஞ் சஞ்சரிக்கா நின்ற் நாரதமுனிவர்வருகிற விதங்காண்பீர்கள்கனவான்களே.

நாரதர்-வசனம் வந்தனம் வந்தனம் வதிஷ்டமூரத்தியே

வதிஷ்டர் வசனம்.

வந்தனம் வாரும்வாரும் நாரதமஹாமுனிவரே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாதனேயன்றுதேவ நாயகன்சபையில்திவ்ய
பாதனேயென்பேர்சொல்லப் பந்தயமிடவேசெய்து
நீதநோநாளுமென்றன் நிலேதனைத்தவருவண்ணம்
போதனேகாத்துக்கீர்த்தி புனைந்தவாபோற்றிபோற்றி

வ-ம் சுவாமி அடியேனுக்கு யதிகபெருமைகிடைக்கும்படிதேவர் சபையில் நடாத்திய மகானுபாவாயுமது திவ்யபாதங்களுக்குஅடியேன்போற்றிபோற்றி

நாரதர்-வசனம்.

வாழிவாழி-அரிச்சந்திரன்வாழி.

அரிச்சந்திரன் வசனம்.

நானடைந்த பெருமையெல்லாந் தங்களால் வந்ததேயாகுமிந்தஅசராதநிலெழுந்தருளி யடியேனைக் காத்தருளவேண்டும் முனிநாதா.

நாரதர்-வசனம்.

மெத்தசந்தோஷம் அரிச்சந்திர மகாராஜனே.

நாரதர்-விருத்தம்.

சராசரமனைதிலெல்லாஞ் சஞ்சரித்திடுவோனுன
கராசனமிடையிற்பூண்ட காளையனருளேக்கண்ட
பராசனம்புரியாயுன்றன் பனிகுருமுனிவர்முன்னே.
சராசனந்தாங்குங்கையா சாற்றுவாய்கருத்தைதானே.

வ-ம் பரசிவத்தினருளேபூண்டு கொலைபுன்புலை தவிர்த்தவன் குருவந்திருப்பதால் வீரவில்லைதாங்குங்கையா வுன்கருத்தைவதிஷ்டருக்குசொல்லுவாய்மெய்யா.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேபிரிவிக்கிறேன் நாரதமுர்த்தியே

அரிச்சந்திரன்-தரு-சுருட்டி-அடதாளம்.

பல்லவி

என்கருத்தைச்சொல்லக்கேளுமே ஒகுருநாதா (என்)

அநுபல்லவி.

அன்பினுயர்ந் தடியேன்செப்பும்
அறிக்கையேற்றி யருள்புரிவீர் (என்)

சரணங்கள்.

ஜென்மங்கொண்டேவேந்தனுகிச்
சீருடனீதி செய்யலாகி (என்)

புன்மையுற்றேனுமக்காக
புகழும்பெறறேனினிவதாக (என்)

அருந்தவத்தைப் புரிந்தேகானும்
அடைந்தவெந்தட் பாலன்றானும் (என்)

வருந்தலுற்றான் செப்பொணாத
வாய்மைகொண்டா ரேயாதிதோ (என்)

பாலனுக்கே பருவகாலம்
பற்றலாச்சே யுற்றநாதா (என்)

சீலனுக்கே நாயேனினிச்
செய்வதேதோ செப்பும்நாதா (என்)

வசிஷ்டர் விருத்தம்.

பூதலத்தில்மானிடர்களின்றதிவ்ய
புதல்வருக்கேபருவமதுபொருத்துமாகிற்
சூதகற்றிசுபமுகூர்த்தஞ்செய்வதுண்டு
சுந்தரனேயேந்தலர்க்குச்சொல்லக்கேளா
யாதரிக்கவுலகதனைச்செங்கோலீத
லடுத்ததாமவனெறியிலதிகனுகிற்
போதமுறுமாதுவர்தேகிடைப்பாளப்பா
பூசுரரின்முறைபையிதேதாபுகட்டினேனே.

வ-ம் அப்பா அரிச்சசந்திரா மானிடரில்கனையன்வயதடைத்தால் விவாகமஹோற்சவஞ் செய்விப்பது முறைமை மன்னரில் புத்திரன் பருவமடைந்தால் நீதிசெங்கோலைக் கொடுத்தல் தகுமைஅதினுலறி விலுங்கற்பிலு முயர்ந்த மாதைமணரும் பொருமை வருத்திடுவா னென்றறியும் வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி தாங்கள்திருவாய மலர்ந்த வண்ணஞ்செய்ய யதிகசந்தோஷங்கொண்டேன் ஆனலதற்குகந்நாளைத் தெரிவித்தால்வேண்டுவதை சேகரிக்கிறேன் குருநாதா.

வதிஷ்டர்-வசனம்.

அப்படியேசொல்லுகிறேனப்பா வேந்தனே

வதிஷ்டர் விருத்தம்.

அப்பனேநாளைநிறைமதிதினத்தி
லண்டர்முனிவோருமன்னரறிவதாகச்
செப்பருநால்வதையுடனே வேந்தர்சூழச்
செய்வித்தேதேடேரிசைநன் முழங்கச்சீடா
ஒப்பவேகேட்டதெல்லாஞ்சேகரிப்பாய்
ஓதுவேனதுமட்டிங்கிருப்பேனுனுந்
துப்புறவைப்பூண்டவனே யதுவேதிவ்ய
சுபகாளாம்முடியதனைச் சூட்டத்தானே.

வ-ம் அப்பா அரிச்சந்திரா நாளை பௌர்ணமையில் தேவதாசனுக்குமுடிசூட்ட திவ்யதினமென்றறிவாய் வேந்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கிய மப்படியேசெய்விக்கிறேன் குருநாதா

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பா சத்தியகீர்த்தி தேவதாசனுக்கு முடிசூட்டி தலையென்மரபோர்க்கெல்லாந் தெறிவித்துநாட்டை அலங்கிருதஞ்செய்துவேண்டியவைகளை யெல்லாஞ் சேகரிப்பாய்மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்படியே செய்கின்ரேன் ஆண்டவனே.

நாரதர் வசனம்.

அப்பா அரிச்சந்திரமகாராஜனே நான்நாளை திவ்யதினமிவ்விடம்வருகிறேன் எனக்குச் சிலவுகொடுப்பாய் வேந்தே

அரிச்சந்திரன்-வசனம்.

மகாபாக்கியம் தாங்கள்வரும்போது அடியேனுக்குஇந்தப்பெருமையை யளிக்கக் காரணமாயிருந்த தேவர்கோனை வெளியேன்மகாவிஜயஞ்செய்து சிறுவனை ஆசிர்வதிக்கும்படி செய்விப்பீர்முனிநாதா.

நாரதர்-வசனம்.

அப்படியே மகாசந்தோஷமப்பா,

பொது-வசனம்,

கேளுங்கள் சபையோர்களே இவ்வாறிருக்க தேவேந்திரமகாராஜன் கொலுமுகம்வந்து தனது மந்திரிக்கு ஆக்கியாபிக்கிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன் வசனம்.

அப்பாமந்திரி நமதுசபையில் தேவர்கள் முனிவர் சித்தர்களுஞ் சூழ்ந்திருப்பதால் காலம்போக்கும்படி அப்சரஸ்திரிகளால் நாட்டியமபுரிவிப்பாயப்பா.

மந்திரிவசனம்.

அப்படியேசெய்விக்கிறேன் வேந்தனே.

மந்திரி வசனம்.

அப்பா கட்டியனே சிக்கிரத்தில் ரம்பையை நாட்டியம்புரிய யழைத்துவருவாயப்பா.

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே யழைத்து வருகிறேன்சுவாமி.

ரம்பை-வருகிற-தரு-நோட்டு-ரூபகம்.

ரம்பைமாது சிரதாய்
ரமிக்கரைராள் நேரதாய்
அரம்பை யொத்த விழியாள்கொங்கை
ஆடபாட நாடவாட (ரம்பை)
நிம்பைமாற்று மேனியாள்
நிகரில்லாத மானியாள்
தும்பையொத்த கந்தங்காட்டி
சொக்க நிக்க மிக்க கக்க (ரம்பை)

ரம்பைவசனம்.

போற்றிபோற்றி அழைத்தகாரியமருள்புரியும் நாதா,

தேவேந்திரன்-வசனம்.

பெண்ணே யின்றுநமது சபையிலுள்ளவர்களின் மனங்களிங் துஉருகும்படிக்கொரு திவ்வியபதம்பாடி நாட்டியபுரிவாய் மாதே

அரம்பை-வசனம்.

அப்படியேபுரிகிறேன் ஆண்டவனே

அரம்பை-பதம்-கமாஸ்-ரூபகம்.

பல்லவி.

இன்னமோடி செய்வதேதுவே-ஒதுரையே
இரங்கிவந்து சுதாமாட (இன்ன)

அநுபல்லவி.

நன்னர்வழைபூண்டவினனே
நாடி பாடி ஆடி தேடி (இன்ன)

சரணங்கள்,

கருப்புவில்லைவளைத்துமாரனும்-ஒதுரையே
கரும்புநாணமைந்துவீரனும்
நெருங்கிவாரானிரும்போநெஞ்சம்
நெட்ட வெட்ட தட்ட கிட்ட. (இன்ன)

கொங்கைவிம்மிகோரமாகுவே-ஒதுரையே
மங்கைமுகம் மாறலாகுதே
எங்கையோடில் விடான்பாவி
எரும் பாரும் வாருங் காரும் (இன்ன)
துலங்குமதனு நூலேனாடியே-ஒதுரையே
குலுங்காமிருவர் கூடியே
இலகுகால மிதுவாகும்
என்ன மன்ன வுன்ன வின்னள் (இன்ன)

அரம்பை-தில்லானா-டக்கு-ஆதிதாளம்.

பல்லவி.

மாதர்நச்சும் மாரர் வாரும்வாரும்
வாரும் பாரும் காரும் சேரும் (மா)

அநுபல்லவி.

கணகுணமணியிடை நடையது துவளுது
காமமீறிமீறி கரையது-புரளுது (மா)

சரணங்கள்.

சீராகுமைவளரு மாராமீறினகு
பேராயரக்கர்பணி சூராயிதுசமயம்
வழிதெரியுடலது சிருகுதுமொழிபது
வாடலாகிநர் மூடியேவழியிது (மா)

தேவேந்திரன்-தசனம்.

அப்பாமந்திரி ரம்பைக்குவேண்டிய ரத்னபரணங்களை கொடுத்தனுப்புவாயப்பா.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமாய் நாட்டியம்புரிந்திருக்கும்சமயத்தில் அரிச்சந்திரமகாராஜனிடம் விடைபெற்று நாரதமுனிவர் அதிசீக்கிரமாய் தேவேந்திரனையழைக்க தேவர்சபைக்கி வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவேந்திரன்-வசனம்.

கேளும் நாரதமுனிவரே நீரின்னேரம் வாராதகாரணமென்னவெங்கேபோயிருந்நீர் ஏதாகிலும் விசேஷமிருந்தாற்தெரியச்சொல்வீர் முனிநாதா.

நாரதர்-வசனம்,

அப்படியே சொல்லுகிறேன் வாழிவாழிதேவர்கோனே

நாரதர்-வசனம்.

கேளும் தேவராஜே சத்தியபாஷ அரிச்சந்திரமகாராஜன் அயோத்தியாபுரியை தனதுபுத்திரனாகிய தேவதாசனுக்குப்பட்டங்கட்டப் போகிறபடியால் தங்களையு மழைத்துவந்து ஆசீர்வதிக்கவேண்டி வந்தேனென்றறிவீர்.

தேவேந்திரன்-வசனம்.

மகாசந்தோஷமப்படியே நாமெல்லோரும் போய்வருவோம் முனிநாதா.

பொது-வசனம்.

கேளுங்கள் சபையோர்களேதேவேந்திரன் வரவெண்ணங்கொண்டதைக்கேட்டநாரதமுனிஅதிகச்சந்தோஷமாயிருக்கஅயோத்தியாபுரியில்நடப்பதைக்கேட்பீர்கள் கனவான்களே,

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்பாகட்டியனேநமதராஜன் தேவதாசனுக்கு பட்டாபிஷேகம்செய்யப்போகிறபடியா லிந்தநாடெல்லாமலங்கரிக்கச் செய்துகுடித்தனக் காரர்களை கொலுமுகம் வரச்செய் விப்பாயப்பா வீரனே

கட்டியன்-வசனம்,

அப்படியே செய்விக்கிறேன் சுவாமி.

சத்தியகீர்த்தி-வசனம்.

சுவாமி யுமதுத்திரவின்படி பட்டணத்தைச் சிங்காரிக்கச்செய்துமகுடாபிஷேகத்திற்கு வேண்டியதையுஞ் சேகரித்தே னிதோகுடிகளெல்லாம் அரண்மனைவாசலில் வந்திருக்கிறார்கள் வேந்தே.

அரிச்சந்திரன் வசனம்.

மகாசந்தோஷமப்பாமந்திரி,

அரிச்சந்திரன்-வசனம்,

சுவாமியென்குருநாதா இனித்தாங்களென் குமாரனுக்குநடத்தவேண்டியகாரியங்களை நடப்பீர்நாதா,

வசிஷ்டர்-வசனம்.

அப்பாசத்தியகீர்த்தி தேவதாசனுக்கு மந்திரிவேண்டுமேயோசித்துவரவழைப்பாயப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்படியே யோசித்தழைப்பிக்கிறேன் மகாராஜனே.

சர்க்குணமந்திரி-வசனம்.

சுவாமி தேவதாசனுக்குகந்த மந்திரி சத்தியகீர்த்தியின் புத்திரனாகிய வுத்தமகுணனை தவிர வேறுயெங்குங் கிட்டானென்றறிவீர்வேந்தே,

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியா மெத்தசந்தோஷமப்பா சத்தியுனது புத்திரனாகிய வுத்தமகுணனை தேவதாசனுக்கு மந்திரியாகநேமிப்பா.

சத்தியகீர்த்தி-வசனம்.

மகாபாக்கிய மப்படியேசெய்கிறேன் சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்,

குருநாதா யென்னுயிர்க்குயிரான சத்தியகிர்த்தியின் புத்திரனு கிய வுத்தமகுணனை தேவதாசனுக்குமந்திரியாகநியமித்தேன்சுவாமி

வதிஷ்டர்-வசனம்.

நல்லதப்பா அரிச்சந்திரா தேவதாசனையும் உத்தமகுணனையும் தீர்த்தங்களாடி வழைத்துவரச செய்விப்பாயப்பா கண்மணியே,

அரிச்சந்திரன்-வசனம்,

அப்படியே செய்விக்கிறேன் குருவே,

அரிச்சந்திரன்-விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி அன்பனேயுரைக்கக்கேளாய்
இப்பவும் நமதுஜய ரியம்பியவாறுபோல
ஒபபிலாமைந்தன்றனனை உயர்ந்திகயாட்டிப்பின்னுங்
கொப்பெனவுடுத்தியிங்கு கூட்டயேவரச்செய்வாயே

வ-ம். கேளாயப்பாசத்தியகிர்த்தியெனது அருமைமகனுகியதேவ தாசனைதிவ்விய தீர்த்தங்களாடச் செய்துயர்ந்தஆபரணுதிகளையணி ந்து இவ்விடம்வரச்செய்விப்பாயப்பா.

சத்தியகிர்த்தி-வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் மகாராஜனே

சத்தியகிர்த்தி-வசனம்.

அப்பாகட்டியனே நமதுராஜாவின மைந்தனுகிய தேவதாசனு க்கு முடிசூட்டப் போகிறபடியால் அம்மணியவர்களுக்குத் தெரிவி த்துதிவ்ய ஸ்தானத்துடன் நல்லவுடுபாவனையணிந்து யழைத்துவ ருவாய்கட்டியனே.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் சுவாமி.

கட்டியக்காரன்-வசனம்.

கேளாய் அம்மணி தங்கள்திவ்யபுத்திரனுகிய தேவதாச மகா ராஜனுக்கு இன்றுமுடிசூட்டப்போகிறபடியால் திவயஸ்தானம்செ ய்வித்து ஆடையாபரணலங்காரத்துடன் வேந்தனழைத்து வரும்ப டி கட்டளை யிட்டார் அம்மணி.

சந்திரவதி-வசனம்.

மகாசந்தோஷமப்படியேசெய்விக்கின்றேனப்பாவிரகட்டியனே

சந்திரவதி-வசனம்.

கேளாயம்மாசவுந்தரவல்லி தேவதாசனை திவ்யஸ்நானஞ் செய் வித்து சிக்கிரமழைத்துவருவாயம்மா.

சவுந்தரவல்லி-வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேன் தாயே.

தேவதாசன்-வசனம்.

என்னையீன்றதாயே என்னைஸ்தானம்செய்துவரும்படி ஆக்ஞாபித்ததை தெரியச்சொல்லவேண்டுமம்மா நின்னடிக்கேபோற்றி.

சந்திரவதி-வசனம்.

அப்பா தேவதாசா உன்னை நானருந்தவஞ்செய்து பெற்றபலனின்றைக்குக் கிடைத்தது உனக்குமுடிசூட்டவேந்தனழைத்தானுலம்வருவாயடா கண்மணியே.

சந்திரவதி-தரு-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

கூடவருவாய்மகனே கொலுமுகத்தை
நாடவருவாய் சுதனே.

அநுபல்லவி.

ஆடமாதர்களுன்முன் பாடவந்தனர்வேதங்
கூடவமைச்சர்முடி சூடவுனக்கேயென்பின் கூட

சரணங்கள்,

வெற்றிக்கொடிபிடிக்க வேந்தருனைப்பணிய
விரிவுளவுலகினில் வேணுநிதியளிக்க
நற்றிமுனிவரெக்கியம் நாட்டின்மிகப்பெருக
நாயகம்போலிருந்து நல்லரசுபுரிய

வசனம்.

பூச்சக்கிரக் குடைபிடிக்க கட்டியன்கூற அந்தணர் வேதமோத மந்திரிகளிருவிலஞ்சூழ மன்னர்களுன்னடிதாழ இந்தஅயோத்தியாபுரிக்கு உன்னையேசக்ரேஸ்வரனாய் முடிசூட்டப்போறாராமென்னுடன்வருவாயடா கண்மணியே.

தேவதாசன்-வசனம்.

அப்படியேயிதோவருகின்றேன் சுவாமி

சந்திரவதி வசனம்.

அப்பா தேவதாசா கவுசிகரால் காசியில் நமக்குநேரிட்ட துன்பங்களையெல்லாம் விலக்க தூபனைவரும்படிசெய்த நமதுகுலகுருவின்பாதத்தைப் பணிவாயடாமகனே நீயென்நாளுஞ்சத்தியம்பிசகாமல் செங்கோல்செலுத்தி சுகமாய்வாழ்ந்திருக்க உனதுதந்தையின் திவ்ய பாதங்களை பணிவாயடா கண்மணியே.

தேவதாசன்-வசனம்.

அப்படியேபணிகிறேன் என்னைப்பெற்ற தாயே.

ஸ்ரீ

தேவதாசனுக்குப் பட்டாபிஷேகம்.

பொதுவிருத்தம்.

தேவனுமுத்தமனுந்திர்த்தமாடி
திருநுதலினீறணிந்துவாடைபூண்டு
மேவனந்தார்கொலுமுகத்தையண்டரேற்று
மிறையவனும்நாரதனும்நாணியோடு
தாவடைந்தார்சத்தியனுமகிழ்ச்சிகொண்டு
தாளடியைப்பணிந்துநிற்கவாழியென்றார்
ஆவலுடன்மேழியணிமுடிதாங்கிய
அணிந்திட்டார்செங்கோலு மளித்திட்டாரே.

வ-ம். கேளுங்கள் சபையோர்களே தேவதாசனும் உத்தமகுணனும் நீராடிவந்தவுடன் தேவேந்திரன் இந்திராணி சமேதனாய்நாரதமுனியுடன் வரக்கண்டு அரிச்சந்திரன்பணிந்தான் பின்புஉத்தமவேளாளன் முடியையெடுத்துக்கொடுக்க தேவதாசனுக்கு சூட்டியவுடன்சத்தியபாஷ அரிச்சந்திரமகாராசன் தனது கரத்திலிருந்தபட்டத்தின் செங்கோலை தேவதாசன்கரத்திற்கொடுக்க தேவேந்திரன் வசிஷ்டர்நாரதர் முதலான முனிவர்களும் ஆசிகூறினார்களென்றறிவீர்கள் கனவான்களே.

பொது-நரு-பந்துவராளி-ஆதிதாளம்.


பல்லவி.

பட்டாபிஷேகங்கொண்டான்
பாலன்தேவதாசன் லோலமாகவிதோ-பட்டா.

அநுபல்லவி.

அட்டதிசைகளெங்கு மதிரவாத்தியமடிக்க
அந்தரதுந்துமி ஆரடிக்கொடிபிடிக்க
பட்டவர்த்தனரெல்லாம பணிந்துக்கைகட்டிப்பார்க்க
பார்த்தெச்சரிக்கைபெனப் பரிவாய்கட்டியந்திர்க்கப் (பட்)

தேவதாசனுக்குப் பட்டாபிஷேகம்செய்கிறபாகம்.



சரணங்கள்.

ஆலவட்டம்பிடிக்க அமராசிகளாட
அந்தணர்முனிவரு மன்பாய்வேதத்தைப்பாட
சூலபாணியைநாடி சூரியனுச்சிநாட
சுபமங்கிலியப்பெண்கள் சோபனச்சேஷைபோட
கோலவிழிமாதர்கள் குவிந்துநாட்டியஞ்செய்ய
கொற்றவனேயெனக் கோறிபாகதைவுய்ய
சீலமுடனேபாலன் சிம்மாசனத்திற்பய்ய
சிந்தைகனிந்துயேறிச் சிராச்சபையார்துய்ய

ஜெயஜெயவெனவே பேரிகைபேச
பயபயமெனவே பகைஞருங்கூச
நயநயமெனவே நாதனும்நேச
குய்யரசெனவே கொலைபுலைநாச
சித்தமகிட்சிவருக்க விளிவரும்
நித்தஞ்செகிக்ஷி யெனப்பலமுனிவரும்
செப்பிமருமலர்கள் ஒப்பியேதூவிட
கப்பியசிலம்பொலி எப்புறந்தாவிட (பட்)

வதிஷ்டர்-வாழி.

சயனித்களித்தபாலா உத்தமதேவதாசா
இத்தலந்தனிலுன் செங்கோல் நித்தமாயோங்வாழி

வசனம்.

வாழிவாழி அப்பா தேவதாசா.

பொது-வசனம்

கேளுங்கள் சபையோர்களே இவ்விதமெல்லோரும்வாழ்த்தி அவரவிருப்பிடஞ் சென்றனர்கள் இப்பால் தேவதாசமகாராசன்கொலுமுகம் வருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே இராஜாதிராஜனுன தேவதாசமகாராசன் கொலுவக்குவருகிறவிதங்காண்பீர்கள் கனவான்களே.

தேவதாசன்-கொலுவுக்குவருகிற
தரு-கல்யாணி-ஆதி,

பல்லவி.

இராஜராஜனான ராஜனயோத்தியாளும்
ராஜாதிராஜன்வந்தான் தேவதாச
ராஜகெம்பீரன்வந்தான் கொலுவிருக்க
ராஜசிங்காரன்வந்தான்

அநுபல்லவி.

தேசதேசம்புகழ திகழ்பேரிகைமுழங்க
திக்கெட்டுகள்மகிழ திரைகள்மன்னர்வழங்க
வாசமணிந்துசெங்கோல் வலக்கரத்திற்பிடித்து
வருந்தாதிருக்கநெஞ்சில் வஞ்செழுத்தைப்படித்து
வாகுடன்மன்னர்கை லாகுகளீந்திட
போகவஜிகரயோகரும்வந்திட (இராஜ)

சரணங்கள்.

ஆலவட்டம்வடிக்க அமரர்மலர்கள்தூவ
அரிவெண்சாமரைவீச அந்தணர்வேதங்கூவ
மேலாமிரத்தினகிரீட மினிவாய்முடிவிளங்க
மேவியதெனரவி மிக்கவரும்நிலாந்து
நிலவமங்கணுங்கூட கிரணவொளிகள்வீச
கீர்த்திப்பிரதாபாவெனக் கிளரெச்சரிக்கைபேச
கோலவிழியாராடக் குறவராசிகள்கூற
கொடிதடியீட்டிடுகதை கொண்டுவீரர்கள்சார

கொம்புகளூத பேரி
பம்பைகளோத தாளுரு
ஜம்பைகள்போட மேளந்
தம்புரும்பாட கைகள்

கூப்பியேமன்னர்கள் நேர்ப்பிடவின்றிட
கோப்பியமாகவே காப்புரமென்றிட
கொற்றவரு மற்றவரு மெற்றவருபேச
மட்டிலாதகீர்த்திபுனை கெட்டியுளதேவதாசா (இராஜ)

தேவதாசன்-விருத்தம்.

அமரர்கள்வாழ்கவன்று ஆலமதுண்டகோவே
சமரசமாகவெங்குஞ் சஞ்சரித்தருளுந்தேவா
குமரிபோடாடியபாதா கொற்றவன்றன்னைகாத்த
விமலனேயெனதுசெங்கோல் விளங்கவேயருள்வாய்போற்றி

உத்தமசுமணன்-விருத்தம்.

ஐயனே அரிச்சந்திரன்றன் அருந்தவத்தாலுதித்த
மெய்யனேயன்றேற்று மிசனைத்தெரிசித்தானே

துய்யனேகாளந்தீண்டித் தோன்றலேயிறந்தமீரார்
கையனுவெழுந்தஷந்தன் கழலடிக்கடியேன்போற்றி,

சற்குணன்-விருத்தம்.

அன்றெனையடிமைகொண்டு மாதரித்திட்டசீமான்
நன்றதையுணர்ந்தவேந்தன் நாயகனளித்தகோவே
வென்றியைக்கொடுத்தவந்த விமலனுமுனதுசெங்கோல்
என்றுவின்மரபுவோங்க யிருந்திடப்பணிந்தேன்போற்றி

தேவதாசன்-வசனம்.

அப்பாமந்திரிகளே யிந்த ஆசனங்களிலிருப்பீர்கள் தோழமாரே

மங்களம்.

தரு-இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்களம் மங்களம் நித்தியசுப மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

திங்களனிந்தோனுக்குஸ்ரீதவிமனேன்மணிக்கும்-மங்களம்

சரணங்கள்.

ஆதிகணபதிக்கும் ஆறுமுகவேலனுக்கும்
அம்பாசரஸவதிக்கும் அரிபரந்தாமனுக்கு
நீதியறிந்தவெந் நிருதியக்கினிவருண
நெடுமாலுந்தியுதித்த நேயனயன்றனக்கும்
ஞானவதிஷ்டருக்கு நற்குணவிந்திரர்க்கும்
நவக்கிரகபதிகட்கும் நாரதமுனிவர்க்கும்
வானமசுரருக்கும் வளர்கவுசிகர்தனக்கும்
வழுத்துநூலறிந்தோர்க்கும் வரியநீதிபருக்கும்-மங்க
சத்யவரிச்சந்த்ரருக்குஞ் சந்திரவதியம்மைக்குஞ்
சற்குணதேவதாசன் சத்தியகீர்த்திதனக்கும்
நித்யானந்தம்பெருகி நீடிக்குங்கீர்த்தியாய்
நிலத்திலதைப்படிக்கும் நேசரனைவருக்கும்-மங்க

வாழி-விருத்தம்

பார்வாழ்கப்படியாளுமரசர்வாழ்க
பண்புடனேவிநோதசபைபலகால்வாழ்க
ஏர்வாழ்கஇச்சரிதைபடிப்போர்வாழ்க
எழுதினோரிதைக்கேட்குமன்பர்வாழ்க
கார்வாழ்கக்கவிவரசனடிகள்வாழ்க
கனம்பெருகிவிதைநடிக்குங்கன்யர்வாழ்க
நீர்வாழ்கநிலத்திலுளமறையோர்வாழ்க
நேமமுளேன்குருபாதம் நிதமும்வாழி

அரிச்சந்திரவிலாசம் முற்றிற்று.

௳

ஸ்ரீசாமுண்டீஸ்வரி துணை.

மைசூர். ஸ்ரீசாமுண்டீஸ்வரிபேரில் கீர்த்தனை.

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஓம்சாம்பவிஸ்ரீசாமுண்டீஸ்வரியிந்த
சாமராஜமஹா சாமிகருள்புரி (ஓம்)

அநுபல்லவி.

பாம்பணிந்த பயிரவிநீலி
பதினெண்பேர்கள் பணியுஞ்சூலி
தேம்புவோருக்கருள்கபாலி
திவ்வியக்குணத் தேசானுகூலி

தேவியேசுந்தரி நிதுபோக்கந்தரி
நாவினிலமந்தரி நாடிடுந்தந்தரி (ஓம்)

சரணங்கள்,

பாதிபிறையணி கோதிலான்பக்கலிற்
பாங்குடனின்ற பரணி
ஜோதிசுயம்பொரு ணீதியாநந்தமே
ஸ்தூலசூக்மக் காரணி

நீதியேரானந்த நிர்மலநிஷ்கள
நிர்ருபமாகிய வாரணி
ஆதிமூலாதா ரஞதியேகுண்டலி
அறுதாரப்பரி பூரணி

ஆங்கருமங்க ளாகச்செயுமாதி
ஐம்பத்தோராக்ஷரத் தாடிடுஞ்சோதி
நீங்காமலெங்கும் நிறைந்திடும்வேதி
ஸ்ரீமன்கிருஷ்ணராஜ னிந்தமணிபூதி

நேசி பராபரி நித்ய குணாகரி
வாசி நிராதரி வருணு மனோகரி (ஓம்)

நேமநிஷ்டைதவ மேவருள்தரு
நித்யகல்யாண சங்கரி
ஓமமுடனைக்கிய தூபமிகக்கொளு
முத்தமிசத்தி ஸ்ரீங்கரி

காமனையன்றுமே கண்ணுறுக்கருகிய
கரியாந்தோரயனும் ஹ்ரீங்கரி
காமமுதலாறுஞ் சாந்துபணிந்திடு
சாஜ்பதரிய ஊங்கரி

சந்தகமுக்தனைச் சார்பவற்காதரி
சராசரமதனிற் சாங்கமாய்பூதரி
நித்தையசற்றி நிதினைசோதரி
நிமலிவியனியே நேர்மனுதிதரி

ரேபியே பிங்களி நற்குண கிங்களி
நாமியே வெங்களி நற்சமர் மங்களி

தேவதேவருடன் மூலருளமகிழ்
திவ்வியகுணாகரி யிதியே

பாவமனுகாமற் றுவிச்சாமராஜ
பஹூதாரைக்காத்திடு நேசியே
கோவினமாவியுங் குணமுலனுடைக்
கோலோக்கச்சிசவி லாகியே
காவலனென்றுங் கருந்தெலாங்கைகூட
கருணையியும்பிர காசியே

காளிமதுபதி கண்மணியேபாராய்
கருதுமுத்துசாமி கனிந்திடத்தாராய்.
குழம்பமகிடனைக் குத்தினையேசிராய்

கோமளிவிரியே கிருபைதரு மாரியே
சாமளி சூரியே சகோருப காரியே

ஸ்ரீசாமுண்டீஸ்வரி பேரில்கீர்த்தனை முற்றிற்று.